ஜீவ நீரோடை

சிறந்தவைகளில் சிறந்தவை

இந்த நாளிலும்

என்னோடிருந்து..

தினசரி தியான நூல்

சாம்சன் பால்

இந்த நாளிலும்

என்னோடிருந்து..

தினசரி தியான நூல்

சாம்சன் பால்

ஜீவ நீரோடை

இந்த நாளிலும் என்னோடிருந்து
ABIDE WITH ME TODAY
ஜீவ நீரோடை தியான நூல் வரிசை - 27
முதல் பதிப்பு : 2024
Cover Design By : Wilson Paul (Wings)

SAMSON PAUL
126, Muthaiya Muthaliar Street,
Pondicherry - 605 003. INDIA
Phone : 0413-2236042
e-mail : jeevaneerodai@gmail.com
Website : www.jeevaneerodai.com
Youtube : "Jeevaneerodai"

Typesetting by : Platinum Graphics, Pondicherry -1. Ph : 2220 378
Printed by : United Bind Graphics, Chennai-99. Ph : 73733 33162

₹ 220/-

LIVING STREAM

Daily Devotional Book

Gift

Presented to _____

By _____

Date _____

Occasion _____



ஆசிரியரிடமிருந்து...

தினமும் வாசிக்கின்றவர்களுக்கு, புதிய புதிய ஆவிக்குரிய சிந்தனைகளைக் கொண்டு செல்லும் ஒரு கடினமான பணி, தினசரி தியான நூல் தயாரிக்கும் பணி. ஒவ்வொரு ஆண்டும் புத்தம் புதிய தினசரி தியான நூல்களைத் தயாரித்துக் கொடுக்க மிகுதியான நேரங்கள் தேவைப்படுகிறது. வேறு பல அலுவல்களைச் சுருக்கிக் கொண்டுதான் இதனைச் செய்ய முடியும். ஆயினும், ஆண்டு முழுவதும் தினசரி தியான நூலை வாசிக்கின்றவர்கள், எவ்வளவாய் அவற்றால் சிறந்த பயனைப் பெறுகின்றார்கள் என்பதைக் காணும் போது, மிகுந்த மகிழ்ச்சி தருகிறது.

இனி எழுத என்ன இருக்கிறது. ஏராளமாக எழுதிவிட்டோமே என்று சில நேரம் எண்ணுவதுண்டு. ஆனாலும், ஒவ்வொரு ஆண்டும் தியானநூல் எழுதச் செல்லும் போது, இன்னும் இன்னும் எவ்வளவோ கர்த்தரிடமிருந்து பெற முடிகிறது என்பதை அறிய முடிகிறது. தேடுகிறவனுக்கு இன்னும் இன்னும் தேவ னிடமிருந்து பெற்றுக்கொள்ள ஏராளம்ஆயத்தமாயுள்ளதைக் காண முடிகிறது. வேறு வேறுபட்ட சூழ்நிலைகளில், அநேகரிடம் எழும்புகின்ற கேள்விகளை, தேவ சமுகத்தில் சிந்தித்து அதற்கேற்ற பதிலை, தேவ ஆவியால் அறிந்து தான் எழுதுகின்றேன். எனவேதான், பலவித வாழ்க்கை நிலமைகளைச் சந்திக்கும் மக்களுக்கு, அவர்களின் மனதில் எழுகின்ற கேள்விகளுக்கு,ஜீவ நீரோடை தியான நூல் வழியாக நல்ல பதில் கிடைக்கிறது.

ஒவ்வொரு நாளும் ஒரே விதமாயிருப்பதில்லை. பலவிதமான வாழ்க்கைச் சூழல்களில் மனதிற்கு அந்தச் சூழ்நிலைக்கு உதவும் வார்த்தை தேவைப் படுகிறது. தேவன் சமயத்திற்கேற்ற வார்த்தைகளைத் தரும் போது, அந்த வார்த்தைகள் ஒரு வெளிச்சமாக அந்த சூழ்நிலையைத் தைரியமாகச் சந்திக்க உதவுகிறது. மனிதனை வார்த்தைகளால் வாழ வைக்கின்றவர் தேவன். அவ ருடைய அந்தச் செயல்பாட்டை நிறைவேற்றுவதில் இந்த தியானநூல் பணியும், ஒரு சிறு கருவி யாகச் செயல்படுவது மனதிற்கு நிறைவு தருகிறது.

இந்தத் தியானநூலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு நாள் சிந்தனையையும் சரியாகப் பயன்படுத்துகின்றவர்கள், இந்த நாளிலும் தேவன் என்னோடிருந்து என்னை நடத்துகின்றார் என்ற நம்பிக்கையைப் பெற முடியும். எந்தக் கடின மான நேரங்களிலும் தேவன் என்னோடுதானிருக்கிறார் என்ற நிச்சயத்தை பெற்றுக்கொண்டால், எல்லா வேளைகளையும் நாம் நிலைகுலையாமல் தைரியமாகச் சந்திக்கலாம். இந்தத் தியானநூல் ஏராளம் உண்மைகளை உங்க ளுக்குக் கற்றுக் கொடுக்கும் என்பது நிச்சயம். தேவ உறவின் நிச்சயத்தோடு தினமும் வாசியுங்கள். கர்த்தர்தாமே இந்த நூல் உங்களுக்கு மிகவும் பயனுள்ள நூலாக இருந்திடக் கிருபை செய்வாராக.

சாம்சன்பால்

ஆசிரியரின்
பிற நூல்கள்

1.	சந்தோஷத்தின் வழிகள்
2.	இறை ஆசியுடன் இனிய குடும்பம்
3.	வெளிச்சத்தில் வெளிப்படும் உண்மைகள்
4.	வழிகாட்டும் சிந்தனைகள்
5.	சிலுவையில் இயேசுவின் இதய ஓசைகள்
6.	நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்
7.	பரிசுத்த வாழ்வின் பாதையில்
8.	நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?
9.	துதி மலர்கள் ஆயிரம்
10.	தேவன் அங்கீகரிக்கும் ஜெபம்
11.	ஆராதனையும் அனுதின வாழ்க்கையும்
12.	விசுவாசத்தின் பிரதிபலிப்புகள்
13.	சிலுவையின் பாதையில் சில மனிதர்கள்
14.	துக்கம் சந்தோஷமாக மாறும்
15.	ஆசீர்வாதங்கள் தடைபடுவது ஏன்?
16.	கிறிஸ்தவம் பேச்சில் அல்ல... செயலில்
17.	வல்லமையாக ஜெபிப்பது எப்படி?
18.	சிந்தையை சீராக்கும் சிந்தனைகள்
19.	யார் என்னை தேற்ற முடியும்?
20.	மனந்திரும்பியது உண்மையா?
21.	சிலுவையில் அறையப்படும் சத்தியங்கள்
22.	உண்மையான ஆராதனை
23.	கலங்காதே மனமே கலங்காதே
24.	சத்திய சிந்தனை முத்துக்கள்
25.	ஆசீர்வாதத்தின் அடித்தளங்கள்
26.	தேவனுடைய மனிதர்கள் எங்கே? எங்கே?
27.	வாலிப வயதுகளில் நீ
28.	துன்பங்கள் ஏன்? ஏன்?
29.	கண்ணீரின் காலங்களில்
30.	விசுவாசமா? வியாபாரமா?
31.	சிந்திக்க தூண்டும் சிந்தனைகள்
32.	ஆராதனை என்றால் என்ன?
33.	காதல் சரியா? தவறா?
34.	சோர்ந்து போகாதே மனமே
35.	தேவ உறவினால் வாழும் வாழ்க்கை
36.	அக்கினி வார்த்தைகள்
37.	மனநிலைகள் மாறணுமே
38.	கிறிஸ்தவன் இங்கே, கிறிஸ்தவம் எங்கே?
39.	சிந்தனைத் தோட்டத்தில் சிறுமலர்கள்
40.	அர்த்தமுள்ள ஆவிக்குரிய வாழ்க்கை
41.	உண்மையைச் சொல்கிறேன் இது கிறிஸ்தவம் அல்ல
42.	எப்படி வாழணும் கிறிஸ்தவ வாழ்க்கை?
43.	வாலிபத்தை பாதுகாப்பது எப்படி?
44.	நீங்களும் உங்கள் பிள்ளைகளும்
45.	வித்தியாசமான விக்கிரகங்கள்
46.	தேவனுக்காக வாழ்வது என்றால்
47.	ஆவிக்குரிய வாழ்க்கை எதற்காக?
48.	இறை உறவினால் வாழும் குடும்பம்
49.	தேவனால் ஆசீர்வதிக்கப்பட வழிகள்
50.	நான் ஏன் வாழ வேண்டும்?
51.	இது சத்தியமா, சிந்தியுங்கள்!
52.	கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் என்ன?
53.	சத்தியத்தின் வெளிச்சத்தில்
54.	திருச்சபை என்பது எதற்காக?
55.	மனம் திரும்புதலும் மறுபடி பிறத்தலும்
56.	பரிசுத்தமாக வாழச் செய்வது எது?
57.	பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எப்போது? எப்படி?
58.	கேட்டாலும் கேளாவிட்டாலும்
59.	வலிமையான நம்பிக்கைகள்
60.	உண்மைக் கிறிஸ்தவ அடையாளங்கள்
IN ENGLISH	
1.	True Worship
2.	Godliness for youth, why?
3.	In the Times of Distress
4.	Powerful Prayer Life, How?
5.	Delightful family with Divine Blessings

நீங்கள் நேசிக்கும் ஒருவருக்கு மிகச்சிறந்த ஒரு பரிசை கொடுங்கள்

கடந்துபோன ஆண்டுகளில் தங்கள் நண்பர்கள் உறவினர்கள் வழியாக ஜீவநீரோடை தினசரி தியானநூலை பரிசாக பெற்று பயனடைந்தோர் அநேகர். அதிக விலை கொடுத்து வாங்கி கொடுக்கும் ஒரு பரிசை விட மிக மிக அதிக பயனுள்ள பரிசு தேவவார்த்தைகளை கொண்டு செல்லுகின்ற ஒரு புத்தகம். இந்த தினசரி தியான நூலை நீங்கள் எவருக்கும் தயங்காமல் கொடுக்கலாம். ஏனென்றால் கர்த்தரை அறிந்தோர் அறியாதோர் யாவருக்கும் மிக நல்ல பிரயோ ஜனங்களை கொடுக்கும் சிந்தனைகள் இந்த தியானநூலில் உண்டு.

நீங்கள் ஊழியராயிருந்தால் உங்களின் வழிநடத்துதலில் உள்ள மக்களுக்கு மிக மிக பயனுள்ளதாயிருக்கும். நீங்கள் ஒரு விசுவாசி என்றால் இன்னொரு சக விசுவாசிக்கு இது சிறந்த பயனை தரும். உங்கள் செலவில் இந்த தியானநூலை யாருக்கு பரிசாக அனுப்ப விரும்புகிறீர்களோ, அவர்களுக்கு உங்கள் பெயரில் அனுப்பி வைக்கப்படும்.

இந்த தியான நூல் ஆங்கிலத்திலும் கிடைக்கும்.

ABIDE WITH ME TODAY

முன்பு போல இரண்டு வேதப்பகுதிகள் தரப்படவில்லை. ஏன்?

ஜீவநீரோடை தினசரி தியான நூலின் நோக்கம், ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய சமுகத்திலிருந்து உங்களுக்காக ஒரு நல்ல சிந்தனையை பெற்றுக் கொடுப்பது மட்டுமே. அந்தந்த நாளுக்கென்றுத் தரப்பட்டுள்ள சிந்தனைக்கு ஏற்றவிதமான ஒரு வேதப் பகுதியும் தரப்படுகிறது. முன்பெல்லாம் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு பகுதியும், புதிய ஏற்பாட்டிலிருந்து ஒரு பகுதியும் கொடுக்கப்பட்டுவந்தன. பலர் அதனை சரியாகப் பயன்படுத்தி வந்தனர் என்பது உண்மை. ஆனால், சிலர் அந்த இரண்டு வேதபகுதிகளையும் படித்துத் தியானத்தையும் படித்து, தங்கள் வேத தியான வேளையை முடித்துக் கொள்கின்றனர். அது சிலருக்குச் சடங்காச்சார செயல் போலவும் மாறிவிடுகிறது.

நீங்கள் தேவ சமுகத்தில் போதுமான அளவு வேதபகுதிகளை வாசித்து கர்த்தரை அறிகின்ற அறிவில் வளர வேண்டும். அனுதினமும் தேவ ஆவியால் நடத்தப்படுகின்ற ஒரு வேத தியான வேளையில் பழகி ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

பல்லாயிரங்கள் மிகுந்த ஆர்வத்தோடு படிக்கும்
தலைசிறந்த ஆவிக்குரிய மாத இதழ்



வருட சந்தா ரூ.150

சத்தியத்தை மிகத் தெளிவாக காட்டி, நடைமுறை வாழ்க்கையில் தேவ உறவுடன் வாழ உதவுகின்ற உன்னத ரகமான மாதஇதழ்

விசேஷமானது ! **வித்தியாசமானது !!**

சிறு வயதின் நாட்களிலேயே சீர்மிகுந்த பாதைகளில் பிள்ளைகளை நடக்கப் பழக்குவிக்கும் தியான நூல்

₹100



₹100

- ❖ சிறந்த போதனைகள்
- ❖ சிறு சிறு எடுத்துக்காட்டுகள்
- ❖ குட்டிக் கதைகள்
- ❖ எளிய நடை

உங்கள் வாலிபப் பிள்ளைகள் சீர்பெற்று சிறந்து விளங்கிட சிறப்பாக வழிநடத்தும் வார்த்தைகள்



₹120



₹120



₹120

வாலிப போராட்டங்களை வல்லமையாய் எதிர்கொண்டு வெற்றிபெற உதவும் நூல்

கிறிஸ்தவம் போதிக்கும் ஏழு விசேஷ விஷயங்கள்

1. மனிதன் பாவத்திற்கு அடிமை

கிறிஸ்தவம் வழிபாடுகள், பூஜைகள், ஆராதனைகள் போன்ற காரியங்களை முன்னிலைபடுத்திப் பேசுகின்ற ஒரு மார்க்கம் அல்ல. ஒரு மனிதன் கடவுளுக்காக என்னென்ன செய்ய வேண்டும் என்ற சட்டத் திட்டங்களைக் கிறிஸ்தவம் மனிதனுக்குக் கொடுக்கவில்லை. முதலாவது, மனிதனுக்குத் தேவன் சொல்லும் செய்தி, உன்னை நீ யார் என்று அறிந்துகொள் என்பதே. கிறிஸ்தவம் முதலாவது மனிதனைப் பார்த்து, நீ பாவியாயிருப்பதைப் பார் என்று சொல்லுகிறது. முதலாவது, மனிதனே நீ எனக்கு ஆராதனை செய், தொழுகை செய், பூஜை செய், நான் சொல்கிறவைகளையெல்லாம் செய், என்பது போன்று எதையும் கடவுள் சொல்லவில்லை.

நீ பாவத்திற்கு அடிமையாயிருப்பதை அறிந்து கொள் என்பதே மனிதனுக்குக் கிறிஸ்தவம் சொல்லும் முதல் விஷயம். பாவத்திற்கு அடிமை என்றால் என்ன அர்த்தம்? எது சரியோ அதனை அவன் செய்ய இயலாதவனாயிருக்கின்றான். எது தவறோ அதனை அவன் செய்யாமலிருக்க இயலாதவனாயிருக்கின்றான். (ரோமர் 7:15) தவறான சிந்தனை, தவறான சுபாவம், தவறான ஆசை, தவறான நோக்கம், தவறான நடத்தை ஆகியவற்றை மனிதன் தவிர்க்க நினைத்தாலும், அவனால் வெற்றி பெற இயலவில்லை. சரியாகச் சிந்திக்கவும், சரியான சுபாவங்களோடு வாழவும், சரியான வழிகளில் நடக்கவும், சரியான நோக்கங்களை நிறைவேற்றவும், சரியான செயல்களைச் செய்யவும் விரும்பினாலும் அவனால் முடியவில்லை.

இதனைத்தான் மனிதன் பாவத்திற்கு அடிமையாயிருக்கின்றான் என்று வேதம் சொல்கிறது. (ரோமர் 6:17) கிறிஸ்தவம் முதலாவது அதனை அறிந்து கொள்ள மனிதனை அழைக்கின்றது. இது எப்படி உண்மை என்று அறிவது?

எந்த ஒரு மனிதனும் இதனைத் தனக்குள் பார்த்து அறிய முடியும். தன்னுடைய மத அடையாளங்களின்படி பாராமல், எந்த மதத்தவனாயினும் தன்னை உற்றுக் கவனித்தால், தான் பாவத்திற்கு அடிமையாருக்கின்ற உண்மையைக் கண்டு கொள்ள முடியும்.

2. மனிதனுக்கு முதல் தேவை இரட்சகரே

ஒரு மனிதனுக்கு கடவுள் செய்ய விரும்பும் முதல் உதவி, அவனைப் பாவத்திற்கு அடிமைப்பட்ட நிலையிலிருந்து விடுதலை செய்வதே. பொதுவாகக் கடவுள் என்றால், மனிதனுக்குச் சரீர சுகம், செல்வம், வசதி, சௌகரியங்கள் போன்றவற்றை வழங்கி ஆசீர்வதிப்பவர் என்பதே எல்லா மதங்களின் பொதுவான நம்பிக்கை. ஆனால், கிறிஸ்தவம் அப்படி அல்ல. மனிதனை ஆசீர்வதிக்க விரும்பும் தேவன், அவனுக்கு முதலாவது கொடுக்க விரும்புவது, பாவ விடுதலை என்ற அனுபவத்தையே. ஏனென்றால், அதுதான் அவனுடைய மிகப்பெரிய தேவை.

கடவுள் உங்களை ஆசீர்வதிக்கிறார் என்பது அல்ல கிறிஸ்தவம் தருகின்ற முதல் தகவல். கடவுள் உங்களைப் பாவத்திலிருந்து விடுதலை செய்கிறார் என்பதே கிறிஸ்தவம் கூறும் முதல் செய்தி. ஏனென்றால், கையும் காலும் கட்டப்பட்டு எதையும் செய்ய இயலாமல் கிடக்கும் மனிதனுக்கு, மிக மிக முதலாவது தேவைப்படுவது அந்த கட்டுகளிலிருந்து விடுதலை அடைவதே. தேவன் மனிதர்களைப் பாவத்திலிருந்து விடுதலை செய்வதற்காக, இயேசு என்ற பெயரில் இரட்சகராக வந்தார் என்பதே கிறிஸ்தவம் கூறுகின்ற முக்கியமான செய்தி. (1தீமோ 1:15)

மனிதனுக்கு முதலாவது தேவை, தான் கேட்ட நன்மைகளையெல்லாம் கொடுக்கின்ற ஒரு கடவுள் அல்ல. அவனுக்குத் தேவை அவனைப் பாவம் என்ற அடிமைக்கட்டிலிருந்து விடுதலை செய்து, சரியாக வாழ்வதற்கு உதவுகின்ற ஒரு இரட்சகரே தேவை. எனவேதான் கிறிஸ்தவம் முதலாவது இரட்சகரைக் குறித்துப் பேசுகின்றது.

3. மனிதன் பரிசுத்தமாக வாழ முடியும்

கிறிஸ்தவம் ஒரு மனிதனுடைய மிகப் பெரிய ஆசீர்வாதமாகவும், மேன்மை நிலையாகவும் காண்பிப்பது, பரிசுத்தமான ஒரு வாழ்க்கையையே. தேவனுடைய பிரதான விருப்பம் மனிதன் பரிசுத்தன் என்ற உயர்ந்த நிலையில் வாழ வேண்டும் என்பதே. (லேவியராகமம் 20:26, 1 கொரிந்தியர் 1:2, 11 கொரிந்தியர் 7:1, 1 தெசலோனிக்கேயர் 4:3)

மனிதன் சிந்தனை, செயல், சுபாவம், நடத்தை, நோக்கம், ஆசை, உறவு ஆகிய எல்லா நிலைகளிலும், பரிசுத்தமாக வாழ இயலும் என்பதே

கிறிஸ்தவம் கொடுக்கும் நம்பிக்கை. இந்தப் பொல்லாத பாவப் பூமியில் இது எப்படி சாத்தியதை ஆகும். சிந்தனை, செயல், நடத்தை, சுபாவம் என எல்லா நிலையிலும், பரிசுத்தமற்று வாழ்கின்ற மனிதர்கள் நடுவில் வாழ்கின்ற நமக்கு, இது எப்படி சாத்தியதை ஆகும்? அதுதான் தேவனுடைய செயல். இது நம்முடைய சொந்தச் செயல்களாலோ, சுய முயற்சிகளாலோ சாத்தியதை ஆவது அல்ல. பாவத்திற்கு இயற்கையிலேயே அடிமையாகிப் போன மனித னுக்கு, இது கூடாத காரியம் என்பது தேவனுக்குத் தெரியும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும் மனிதனுக்குத் தேவன் பரிசுத்தமாக வாழ்வதற்குத் தேவையான பரிசுத்த ஆவியைக் கொடுக்கின்றார். (அப்போஸ்தலர் 2:38, அப்போஸ்தலர் 1:8) அந்தப் பரிசுத்த ஆவியின் ஆற்றல் ஒரு மனிதனுக்குள் செயல்படும் போது, மனிதன் தன்னைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ள இயன்றவனாக மாறுவான். தேவனே அவனுக்குப் பரிசுத்தமாக வாழ்கின்ற ஆற்றலைப் பரிசுத்த ஆவியின் மூலம் கொடுத்து, அவ்விதம் வாழ வைக்கின்றார்.

4. தேவ உறவுடன் வாழ்வதே ஆன்மிகம்

கிறிஸ்தவம் கூறுகின்ற மிக முக்கியமானதோர் உண்மை உண்டு. அது ஆன்மிக வாழ்க்கை என்பது பல பல பக்தியான செல்களைச் செய்வது அல்ல. அது பரிசுத்தமான தேவ உறவுடன் வாழ்வது என்பதே. கடவுள் மனிதனிடம் ஆராதனை, தொழுகை, வழிபாடு, நமஸ்காரம், பலவிதப் பக்தியான செயல்கள் என்பவற்றைச் செய்ய அழைக்கவில்லை. கடவுள் தம்முடைய பரிசுத்தமான நல்ல உறவுடன் வாழ்வதற்கே மனிதனை அழைக்கின்றார்.

தேவ உறவுடன் வாழ்வதே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கின்ற பரிசுத்தமான ஆன்மிக வாழ்க்கை. மனிதன் கடவுளின் உறவை அனுபவித்து வாழ்வதே தேவதிட்டம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் மனிதன், தேவனுடைய பிள்ளை என்ற அந்தஸ்தைப் பெறுவதோடு, தேவனை அப்பா என்று அழைக்கும் உயர்ந்த பாக்கியத்தைப் பெறுகின்றான். (1 யோவான் 3:1, ரோமர் 8:15) ஆம், கிறிஸ்தவம் பல பல பக்தியான செயல்களை செய்கின்ற பக்தர்களாக நம்மை வாழ அழைக்கவில்லை. தேவ உறவுடன் வாழ்வதே கிறிஸ்தவ அழைப்பு.

ஏனென்றால், தேவ உறவைப் பெறாத மனிதனிடம், எவ்வளவுதான் பக்தியும் பரவசமும் இருந்தாலும், அவன் பாவத்தை எதிர்க்கவோ, பரிசுத்தத்தைப் பின்பற்றவோ இயன்றவனாக மாறுவதில்லை. தேவனோடு இணைந்து நல்லுறவுடன் வாழ்கின்ற அனுபவம் மட்டுமே, ஒரு மனிதனுக்குத் தவறுகளைத் தவிர்த்து வாழ்கின்ற ஆற்றலும், பரிசுத்தத்தை விரும்பி அதன்படி வாழ்கின்ற ஒரு வலிமையையும் கொடுக்கும்.

5. பாவ நிவாரண நன்மை

கிறிஸ்தவம் மிக முக்கியமாகத் தருகின்ற செய்தி, மனிதனுடைய பாவங்களுக்காகவும் சாபங்களுக்காகவும் இயேசுகிறிஸ்து தம்மை பழுதற்ற பலியாக ஒப்புக் கொடுத்து, அவற்றிலிருந்து நம்மை மீட்டுவிட்டார் என்பதாகும். (கலாத்தியர் 3:13) தேவன் பாவிகளாகிய மனிதர்களை நியாயந்தீர்த்து தண்டிப்பதற்கு முதற்கவனம் செலுத்தாமல், அவர்களைப் பாவத்திலிருந்து மீட்டு, பரிசுத்தமான தேவ பிள்ளைகளாக மறுபடியும் பிறக்கச் செய்யவே விரும்பினார். எனவே, அவர்களுக்குப் பாவ மன்னிப்பு, பாவ விடுதலை, பரிசுத்த வாழ்க்கை ஆகிய மூன்று நன்மைகளைக் கொடுக்க முன்வந்தார். எனவேதான், நாம் பாவிகளாயிருக்கையில் இயேசு நம்முடைய பாவ நிவாரணத்திற்காக பாவ பலியாகி மரித்ததை, தேவனுடைய அன்பின் மிகப்பெரிய வெளிப்பாடு என்று வேதம் சொல்கின்றது. (ரோமர் 5:8)

தேவன் நம்மை மன்னித்ததும், பாவத்திலிருந்து விடுவித்ததும், பரிசுத்த தகுதியுள்ளவர்களாக நம்மை மாற்றியதும், எளிதாக நடந்து விட்ட விஷயங்களாகயிருக்கவில்லை. அவற்றிற்காக இந்தப் பூமியில் மனிதராக வந்த கிறிஸ்து மிகப்பெரிய கிரயத்தை சிலுவையில் செலுத்தினார். அதுதான் அவருடைய சிலுவை மரணம். அவருடைய சிலுவை மரணத்தின் வாயிலாக பாவத்திலிருந்து மட்டும் அல்ல எல்லா சாபங்களிலிருந்தும் நாம் மீட்கப்படுகின்றோம்.

இனி கடந்த காலப் பாவங்களுக்காக நாம் எந்தத் தண்டனையையோ, தீங்கையோ அனுபவிக்கத் தேவையில்லை. கடந்த காலம் நாம் செய்த தவறுகளின் விளைவான சாபம், இனி நம்மைத் தொடராது. நம்முடைய முற்பிதாக்கள் செய்த தவறுகளின் விளைவன சாபமும் இனி நம்மைத் தொடர முடியாது.

நித்திய வாழ்வின் நம்பிக்கை

கிறிஸ்தவம் பிரதானமாகப் போதிப்பது நித்திய வாழ்வு. தேவன் அளித்திருக்கின்ற மிக முக்கியமான வாக்குறுதி நித்திய வாழ்வைத் தருவேன் என்பதாகும். (1 யோவான் 2:25) இந்த உலகத்தில் மனிதன் வாழும் போது, உலகப்பிரகாரமான கொஞ்ச நாள் வாழ்க்கைக்கான நன்மைகளுக்காகத் தேவனைத் தேடாமல், நித்திய நன்மைக்காகத் தேவனை தேட வேண்டும் என்பதே முக்கியமான கிறிஸ்தவப் போதனை. (யோவான் 6:33, 40) தேவனோடு முடிவில்லாத நிரந்தர வாழ்க்கை வாழ்வதற்கான வாய்ப்பினைத் தருவதற்கே இயேசு பூமியில் வந்தார்.

ஆனால், நாம் மரித்த பின்பு நித்தியமான ஒரு வாழ்க்கை வாழ்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என்பதற்கு அடையாளம் என்ன? எதை வைத்து நாம்

மரித்த பின்பு தேவனுடைய நித்திய இராஜ்யத்திற்குள் செல்வோம் என்று நம்புவது? இது வெறும் விசுவாசம் அல்ல. எல்லாம் ஒரு நம்பிக்கைதானே என்ற விதமானதும் அல்ல. இந்தப் பூமியில் வாழ்கின்றபோது நாம் இயேசு கிறிஸ்துவின் ஐக்கியத்தோடு வாழ முடியும். அதாவது அவர் நம்மோடிருப்பதை நாம் தேவ ஆவியால் அடையாளம் கண்டு உறுதிப்படுத்தி வாழ முடியும். (ரோமர் 8:16, 1 யோவான் 3:24, எபேசியர் 3:17)

இயேசு கிறிஸ்துதான் நித்திய வாழ்வு என்று வேதாகமம் கூறுகின்றது. (1 யோவான் 5:11) அந்த இயேசு நம்மோடிருப்பதை நாம் நமக்குள் அறிய இயலும். அவர் நம்மோடிருப்பது நாம் நித்திய வாழ்வை பெறுவோம் என்பதை உறுதிபடுத்தும் அடையாளமாயிருக்கிறது. (1 யோவான் 5:12) அந்தக் கொஞ்ச கால வாழ்க்கைப் பாதையில், இயேசுவாகிய நித்திய ஜீவன் நம்மோடிருப்பதை நாம் உறுதிபடுத்தி, ஒரு நாள் என்றென்றும் முடிவில்லாத அவருடைய இராஜ் யத்தில் வாழப் போகின்றோம் என்ற நிச்சயத்தைப் பெற முடியும்.

இறுதிவரை நம்முடனிருக்கும் கர்த்தர்

கிறிஸ்தவம் ஏதோ நீ வழிபாடுகளையும், ஆராதனைகளையும், நற்செயல் களையும் செய்து கடவுளுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள் என்று சொல்ல வில்லை. கிறிஸ்தவம் என்றென்றும் நம்மோடிருந்து, இந்த உலக யாத் திரையில் நம்மை வழிநடத்தும் மேய்ப்பராகக் கர்த்தரைக் காண்பிக்கின்றது. அவர் எங்கேயோ நாம் எங்கேயோ என்ற நிலை இல்லை. நாம் எங்கே இருக்கின்றோமோ அங்கே அவர் நம்மோடிருப்பார். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்ளோடிருக்கின்றேன் என்று இயேசு தம்முடைய சீடர் களுக்குச் சொன்னார். (மத்தேயு 28:20)

எல்லா மதங்களும் கோயில் என்ற ஒரு இடத்தைக் காட்டுகின்றன. அந்தக் கோயிலில் கடவுள் வாழ்கின்றார் என்று மதங்கள் போதிக்கின்றன. கோயிலில் கடவுள் தங்கினால் நாம் அவரிடம் போய் ஒரு நன்மைக்காக மன்றாடலாம். ஆனால், கோயிலிலேயே நாம் தங்கிவிட முடியாதே. கோயிலை விட்டு நம் முடைய வாழ்க்கைக் களத்திற்குள் நாம் வரும் போது, அங்கே நாம் சந்திக்கும் எல்லாச் சூழல்களுக்கும் நம்மோடிருந்து நடத்துவது யார்?

ஆனால், கிறிஸ்தவம் நம்மைக் கோயிலுக்குப் போகச் சொல்லவில்லை. நம்மையே கோயிலாக்கி, நம்மோடு தங்க விரும்புகின்ற ஒரு கடவுளைப் பற்றியே சொல்கின்றது. (1 கொரி 3:16,17, 1 கொரிந்தியர் 6:19) ஆம். கர்த்தராகிய இயேசுவை நாம் இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக் கொண்டால், என்றும் அவர் நம்மோடிருப்பார். நம்முடைய அனைத்து வாழ்க்கைச் சூழ்நிலைகளிலும் நம்மோடிருந்து, நல்ல மேய்ப்பனாக நம்மை நடத்துவார்.

SAMSON PAUL'S
PUBLICATIONS IN ENGLISH

TO COME CLOSER TO GOD













கிறிஸ்துவிடமிருந்து பெறுகின்ற ஆறு ஆசீர்வாதங்கள்

மறுபிறப்பின் அனுபவம் பெற வேண்டும்

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பக்தியைப் பெற்றுக்கொண்டு வாழ்வது அல்ல. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது மறுபிறப்பின் அனுபம் பெற்றுக் கொண்டு வாழ்வது ஆகும். இயேசு கிறிஸ்துவைச் சந்தித்த நிக்கொதேமு என்பவன் மிகச்சிறந்த ஒரு பக்திமான். ஆனால், இயேசு அவனிடம் மறுபிறப்பின் அனுபவம் இல்லாவிட்டால், தேவனுடைய இராஜ்யத்திற்குள் செல்ல முடியாது என்றார். (யோவான் 3:5,7) பக்தியாக வாழ்வது என்பது ஆராதனை துதி, ஜெபம், காணிக்கை, ஆலயம், உபவாசம், இறைப்பணி, சுய ஒழுங்குகள் என பக்தி சம்பந்தமான சில செயல்களோடு நம்மை இணைத்துக் கொண்டு வாழ்வது ஆகும். இது கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல.

நாம் பக்தியோடு வாழ்வதற்காக அல்ல. நாம் தேவனுடைய பிள்ளையாக வாழ்வதற்கே அழைக்கப்பட்டுள்ளோம். பாவம் செய்யும் தன்மை கொண்ட யாவரும் பாவிகளே. அந்தப் பாவிகள் என்ற பழைய நிலையிலிருந்து, தேவனுடைய பிள்ளை என்ற புதிய நிலைக்கு வருவதே கிறிஸ்தவ வாழ்க்கை. கர்த்தராகிய இயேசுவை நாம் இரட்சகராகப் பெற்றுக் கொள்ளும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற புதிய நிலமையை அடைகின்றோம். (யோவான் 1:12) இந்த ஆவிக்குரிய நிலமைக்கு வருவதே கிறிஸ்தவ வாழ்க்கையின் துவக்கம். நாம் பக்தர்கள் என்ற நிலமையில் வாழாமல், தேவனுடைய பிள்ளைகள் என்ற நிலமையோடு வாழ்வதற்காகக் கர்த்தர் நம்மை மறுபடியும் பிறப்பித்தார் என்று வேதம் சொல்கிறது. (1 பேதுரு 1:4)

இந்த மறுப்பிறப்பின் அனுபவத்தின் அடிப்படைதான், பிற ஆவிக்குரிய அனுபவங்களுக்கு நம்மை வழிநடத்துகிறது. மறுபிறப்பின் அனுபவத்தை தேவன் நமக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியினால் உறுதிப்படுத்த முடியும். மறுபடியும் பிறந்த அனுபவ, பின்னணி இல்லாமல், ஆவிக்குரிய வாழ்க்கையில் பிரகாசிக்க முடியாது.

பரிசுத்த ஆவியைப் பெறவேண்டும்

கிறிஸ்தவ வாழ்க்கை பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தோடுதான் செயல்பட ஆரம்பிக்கும். கிறிஸ்தவ வாழ்க்கை என்றால், உலக மனிதர்களைப் போல சாதாரணமாக வாழாமல், தேவனுடைய பிள்ளை என்ற நிலையில் உயர்தரமாக வாழ வேண்டும். அவ்விதமான வாழ்க்கையைச் சாத்தியப்படுத்துவது பரிசுத்த ஆவியே. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் இரட்சகராகப் பெற்றுக் கொள்ளும் போது, பரிசுத்த ஆவியை நாம் நமக்குள் பெறுகின்றோம். (அப்போஸ்தலர் 2:38) இந்தப் பரிசுத்த ஆவியின் மூலமாகத்தான், நாம் தேவ னுடைய பிள்ளைக்கேற்ற உயர்தர ஆவிக்குரிய வாழ்க்கையை, அனுபவப் பூர்வமான ஒன்றாகக் காணமுடியும்.

பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு விசேஷ வேண்டுதல்கள், விண்ணப் பங்கள், உபவாசங்கள், காத்திருப்புகள் எதுவும் தேவையில்லை. பரிசுத்த ஆவியைப் பெறுவது விசுவாசத்தினாலே பெறுகின்றோம். (கலாத்தியர் 3:2, எபேசியர் 1:13) நாம் இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும் போது, பரி சுத்த ஆவியை அதற்கு முத்திரையாகப் பெறுகின்றோம். நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டேன் என்ற விசுவாசத்தோடு, நாம் பரிசுத்தமாகச் செயல்பட முன்வர வேண்டும். என்னிடம் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய் கின்றார். என்னால் பரிசுத்தமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையோடு நாம் செயல்பட வேண்டும். அப்போது பரிசுத்த ஆவி நம்மிடம் செயல்படுவதை அறிய முடியும்.

புதிய சிருஷ்டி அனுபவம் பெற வேண்டும்

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பலவிதமான பக்திச் செயல்களோடு ஒருவர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வது அல்ல. ஒருவர் இயேசு கிறிஸ்துவை தனக்குள் விசுவாசித்துப் பெற்றுக் கொள்ளும் போது, அவர் தேவனுடைய பிள்ளை என்ற புதிய அடையாளத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றார். இயேசு கிறிஸ்துவோடு தன்னை இணைத்துக் கொண்ட இவர், இப்பொழுது ஒரு நல்ல பக்தியான மனிதன் என்ற அந்தஸ்தை அல்ல. இவர் புதிய சிருஷ்டி என்ற அந்தஸ்தைப் பெறுகின்றார். அதாவது இவர் தேவ ஆவியினால் உள்ளான மனிதனில் மறுபிறப்பு பெற்ற ஒரு புதிய மனிதன் ஆகிறார். (எபேசியர் 4:22-27)

இவர் இப்போது தான் ஒரு பழைய விதமான சாதாரண மனிதன் அல்ல என்றும், தான் ஆவியினால் புதிதாகப் பிறப்பிக்கப்பட்ட புதிய மனிதன் என்றும் விசுவாசிக்க வேண்டும். அதற்கேற்றபடி அவருடைய சிந்தனைப் பார்வைச் செயல் யாவும் மாற வேண்டும். போர்க்களத்தில் நிற்பவன் தான் ஒரு போராளி என்ற விழிப்புணர்வைக் கொண்டிருந்தால்தான் போரிட்டு வெல்ல முடியும். தன்னை ஒரு நீச்சல் வீரன் என்று ஒருவன் நம்பினால்தான், அவன் திறமை யாக நீச்சலடித்து அக்கரைக்குச் செல்ல முடியும். அதுபோல கர்த்தரை ஏற்றுக் கொண்டவர்கள் தங்களைப் புதிய சிருஷ்டி என்று நம்பி, அதற்கேற்ப தேவனைச் சார்ந்த விசுவாசத்தோடு செயல்பட வேண்டும்.

தேவ ஐக்கிய அனுபவம் பெற வேண்டும்

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பூமியில் நாம் இருக்கின்றோம், பரலோகத்தில் தேவன் இருக்கின்றார் என்ற விதமான நம்பிக்கை அல்ல. பூமியிலிருக்கின்ற நான் கர்த்தரை விசுவாசித்து ஏற்றுக் கொண்டதால், பரலோகத்திலிருக்கும் தேவன் இப்போது என்னோடிருக்கின்றார் என்று விசுவாசித்துச் செயல்படுவதே கிறிஸ்தவ வாழ்க்கை. கர்த்தராகிய இயேசுவை ஒருவர் இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் போது, அவர் தேவனுடைய பிள்ளை என்ற புதிய நிலைமைக்கு வந்துவிட்டார். இப்போது தேவ பிள்ளையாகிய இவர், பிதாவாகிய தேவனுடைய ஐக்கியத்தோடு வாழ முடியும். இவருக்கு இப்போது தேவனோடு உறவாடி வாழவும், ஐக்கியமாயிருந்து வாழவும் கிருபை அருளப்படுகிறது. அவர் அந்த நல்ல உறவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களுக்காகத் தேவன் ஆயத்த மாக வைத்திருக்கின்ற தேவ ஆசீர்வாதங்கள் யாவும், தேவ உறவைத் தேடு வதின் வாயிலாகவே வருகின்றது. கிறிஸ்தவ வாழ்க்கையைத் தேவ பக்தி வாழ்க்கை என்பதைவிட, தேவ ஐக்கியத்தின் வாழ்க்கை என்று அழைப்பதே அதிகப் பொருத்தமானது. ஆம். தேவனோடு பேசிப் பழகி, அவருடைய உறவை ஆவியில் அனுபவிக்கும் போதுதான், ஆவிக்குரிய வல்லமை ஒருவரிடம் வந்து செயல்படமுடியும்.

கிறிஸ்துவின் சமாதானம் பெற வேண்டும்

இரண்டு விதங்களில் ஒருவருடைய மனம் சமாதானத்தை உணர முடியும். ஒன்று, அவருக்கு அமைகின்ற நல்ல சமாதானமான சூழ்நிலைகளின் விளை வாக அவர் அமைதியோடிருப்பது. இரண்டாவது, சூழ்நிலை எதிர்மாறாகயிருந் தாலும் கிறிஸ்து அவரோடிருக்கும் விசுவாசத்தின் விளைவாக, அவருக்குக் கிடைக்கும் விசேஷ அமைதி. தேவ பிரசன்னம் ஒருவருடைய மனதை ஆளுகை செய்வதினால் ஏற்படுகின்ற அமைதி அது. எனவே, சூழ்நிலைகள் எப்படியிருந் தாலும், தேவ பிரசன்னத்தால் அவர் சமாதானத்தை அனுபவிக்க இயன்றவராக மாறுகின்றார்.

இந்த சமாதானம் ஒருவர் மறுபிறப்படைந்து, தேவனுடைய பிள்ளை என்ற நிலமைக்கு வந்ததின் விளைவாகக் கிடைக்கிறது. இதைத்தான் கர்த்தர் தம் முடைய சீடர்களிடம், இது என்னுடைய சமாதானம் என்றார். (யோவான் 14:27) ஏனென்றால், அது ஒருவர் இயேசுவோடுள்ள ஐக்கியத்தின் விளைவாகப் பெறுகின்ற ஒன்று. எனவேதான், பிலிப்பு சபை மக்கள் உபத்திரவமான ஒரு சூழ்நிலையில் இருந்தபோது, அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுக்குப் புத்திக் கெட்டாத ஒரு சமாதானம் கிடைக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்தான். (பிலிப்பியர் 4:7)

தேவ சந்தோஷத்தைப் பெற வேண்டும்

உலகப்பிரகாரமான சமாதானம், தேவ ஐக்கியம் தருகின்ற சமாதானம் என இரண்டு சமாதானம் இருப்பது போல, உலகப்பிரகாரமான சந்தோஷம், தேவ

ஐக்கியம் தருகின்ற சந்தோஷம் என இரண்டு சந்தோஷம் உண்டு. இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்கின்ற மனிதன், புது பிறப்படைந்து, தேவ உறவை அனுபவிக்கும் வாய்ப்புப் பெறுகின்றான். அவன் தேவனோடு மனம் விட்டுப் பேச இயலும். அவன் தேவனிடத்திலிருந்து நல்ல சிந்தனைகளையும், பரிசுத்த தூண்டுதல்களையும், நம்பிக்கை உணர்வுகளையும் பெற முடியும்.

அதனுடைய விளைவாக அவனுக்குள் ஒரு விசேஷ சந்தோஷம் வந்து செயல்படும். சந்தோஷமாயிருக்க வாய்ப்பில்லாத உலகச் சூழ்நிலைகளின் நடுவிலும், தேவ உறவை ஆத்துமாவில் தேடுகின்ற மனிதனுக்கு, உள்ளான மனநிலையில் சந்தோஷமாயிருக்க வாய்ப்புண்டு.

☆ ☆ ☆

SAMSON PAUL'S DAILY DEVOTIONAL BOOKS IN ENGLISH

- ★ WORDS OF STREMGTH FOR LIFE
- ★ DAILY BY YOUR GRACE
- ★ FOR MY LIFE TODAY
- ★ TOWARDS THE GOAL DAILY
- ★ MEET THIS DAY WITH GOD
- ★ IN YOUR WAYS
- ★ THIS DAY TO LIVE
- ★ WORD OF TRUTH FOR TODAY
- ★ DAILY A NEW CHAPTER
- ★ FOR THE HEARTS OF BLOOMING BUDS
- ★ BE RENEWED IN MIND DAILY
- ★ GOD'S WORD'S FOR YOUNG HEARTS
- ★ IN THE HEARTS OF BUDS
- ★ O LORD IN THY PRESENCE
- ★ BLESSED WORD FOR TODAY
- ★ EVERY DAY IN HIS PRESENCE
- ★ WALKING CLOSER WITH GOD
- ★ EVERYDAY WITH THE EVERLASTING GOD
- ★ A JOURNEY WITH GOD
- ★ WALKING WITH GOD
- ★ GOD'S GUIDANCE TODAY
- ★ STREAM OF LIFE

ஓராண்டிற்குள் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்கும் திட்டம்

ஜனவரி

	காலை	மாலை
	மத்தேயு	ஆதி
1	1	1-3
2	2	4-6
3	3	7-9
4	4	10-12
5	5:1-26	13-15
6	5:27-48	16, 17
7	6:1-18	18, 19
8	6:19-34	20-22
9	7	23, 24
10	8:1-17	25, 26
11	8:18-17	27, 28
12	9:1-17	29, 30
13	9:18-38	31, 32
14	10:1-20	33-35
15	10:21-42	36-38
16	11	39, 40
17	12:1-23	41, 42
18	12:24-50	43-45
19	13:1-30	46-48
20	13:31-58	49, 50
		யாத்
21	14:1-21	1, 2, 3
22	14:22-36	4, 5, 6
23	15:1-20	6, 8
24	15:21-39	9-11
25	16	12, 13
26	17	14, 15
27	18:1-20	16-18
28	18:21-35	19, 20
29	19	21, 22
30	20:1-16	23, 24
31	20:17-34	25, 26

பிப்ரவரி

	காலை	மாலை
	மத்தேயு	யாத்
1	21:1-22	27, 28
2	21:23-46	29, 30
3	22:1-22	31-33
4	22:23-46	34, 35
5	23:1-22	36-38
6	23:23-39	39, 40
		லேவி
7	24:1-28	1-3
8	24:29-51	4, 5
9	25:1-30	6, 7
10	25:31-46	8-10
11	26:1-25	11, 12
12	26:26-50	
13	26:51-75	14
14	27:1-26	15, 16
15	27:27-50	17, 18
16	27:51-66	19, 20
17	28	21, 22
	மாற்கு	
18	1:1-22	23, 24
19	1:23-45	25
20	2	26, 27
		எண்
21	3:1-19	1, 2
22	3:20-335	3, 4
23	4:1-20	5, 6
24	4:21-41	7, 8
25	5:1-20	9-11
26	5:21-43	12-14
27	6:1-29	15, 16
28	6:30-56	17-19

மார்ச்

	காலை	மாலை
	மாற்கு	எண்
1	7:14-37	23-25
2	8:1-21	26, 27
3	8:22-38	28-30
4	9:1-29	31-33
5	9:30-50	34-36
		உபா
6	10:1-31	1, 2
7	10:31-52	3, 4
8	11:1-18	5-7
9	11:19-33	8-10
10	12:1-27	11-13
11	12:28-44	14-16
12	13:1-20	17-19
13	13:21-37	20-22
14	14:1-26	23-25
15	14:27-53	26, 27
16	14:54-72	28, 29
17	15:1-25	30, 31
18	15:26-47	32-34
		யோசுவா
19	16	1-3
	லூக்கா	
20	1:1-20	4-6
21	1:21-38	7-9
22	1:39-56	10-12
23	1:57-80	13-15
24	2:1-2	16-18
25	2:25-52	19-21
26	3	22-24
		நியா
27	4:1-30	1-3
28	4:31-44	4-6
29	5:1-16	7, 8
30	5:17-39	9, 10
31	6:1-26	11, 12

ஏப்ரல்

	காலை	மாலை
	லூக்கா	நியா
1	6:27-49	13-15
2	7:1-30	16-18
3	7:31-50	19-21
4	8:1-25	ரூத்
		1 சாமு
5	8:26-56	1-3
6	9:1-17	4-6
7	9:18-36	7-9
8	9:37-62	10-12
9	10:1-24	13, 14
10	10:25-42	15, 16
11	11:1-28	17, 18
12	11:29-54	19-21
13	12:1-31	22-24
14	12:32-59	25, 26
15	13:1-22	27-29
16	13:23-35	30, 31
		2 சாமு
17	14:1-24	1, 2
18	14:25-35	3-5
19	15:1-10	6-8
20	15:11-32	9-11

21	16	12, 13
22	17:1-19	14, 15
23	17:20-37	16-18
24	18:1-23	19, 20
25	18:24-43	21, 22
26	19:1-27	23, 24
		1 இரா
27	19:28-48	1, 2
28	20:1-26	3-5
29	20:27-47	6, 7
30	21:1-19	8, 9

மே

	காலை	மாலை
	லூக்கா	1 இரா
1	21:20-38	10, 11
2	22:1-20	12, 13
3	22:21-46	14, 15
4	22:47-71	16-18
5	23:1-25	19, 20
6	23:26-56	21, 22
		2 இரா
7	24:1-35	1-3
8	24:36-53	4-6
	யோவாபீ	
9	1:1-28	7, 8, 9
10	1:29-51	10-12
11	2	13, 14
12	3:1-18	15, 16
13	3:19-38	17, 18
14	4:1-30	19-21
15	4:31-54	22, 23
16	5:1-24	24, 25
		1 நாளா
17	5:25-47	1-3
18	6:1-21	4-6
19	6:22-44	7-9
20	6:45-71	13-15
21	7:1-27	13-15
22	7:28-53	16-18
23	8:1-27	19-21
24	8:28-59	22-24
25	9:1-23	25-27
26	9:24-41	28, 29
		2 நாளா
27	10:1-23	1-3
28	10:24-42	4-6
29	11:1-29	7-9
30	11:30-57	10-12
31	12:1-26	13, 14

ஜூன்

	காலை	மாலை
	யோவாபீ	2 நாளா
1	12:27-50	15, 16
2	13:1-20	17, 18
3	13:21-38	19, 20
4	14	21, 22
5	15	23, 24
6	16	25-27
7	17	28, 29
8	18:1-18	30, 31
9	18:19-40	32, 33
10	19:1-22	34-36
		எஸ்தர்
11	19:23-42	1, 2
12	20	3-5
13	21	6-8
	அப்	
14	1	9, 10
		நெகே
15	2:1-21	1-3
16	2:22-47	4-6
17	3	7-9
18	4:1-22	10, 11
19	4:23-37	12, 13
		எஸ்தர்
20	5:1-21	1, 2
21	5:22-42	3-5
22	6	6-8
23	7:1-21	9, 10
		யோபு
24	7:22-43	1, 2
25	7:44-60	3, 4
26	8:1-25	5-7
27	8:26-40	8-10
28	9:1-21	11-13
29	9:22-43	14-16
30	10:1-23	17-19

ஜூலை

	காலை	மாலை
	அப்	யோபு
1	10:24-48	20, 21
2	11	22-24
3	12	25-27
4	13:1-25	28, 29
5	13:26-52	30, 31
6	14	32, 33
7	15:1-21	34, 35 8
8	15:22-41	36, 37
9	16:1-21	38-40
10	16:22-40	41, 42
		சங்கீதம்
11	17:1-15	1-3
12	17:16-34	4-6
13	18	7-9
14	19:1-20	10-12
15	19:21-41	13-15
16	20:1-16	16, 17
17	20:17-38	18, 19
18	21:1-17	20-22
19	21:18-40	23-25
20	22	26-28
21	23:1-15	29, 30
22	23:16-35	31, 32
23	24	33, 34
24	25	35, 36
25	26	37-39
26	27:1-26	40-42
27	27:27-44	
43-45		
28	28	46-48
		ரோமர்
29	1	49, 50
30	2	51-53

ஆகஸ்டு

	காலை	மாலை
	ரோமர்	சங்கீதம்
1	4	57-59
2	5	60-62
3	6	63-65
4	7	66-67
5	8:1-21	68, 69
6	8:22-39	70, 71
7	9:1-15	72, 73
8	9:16-33	74-76
9	10	77, 78
10	11:1-18	79, 80
11	11:19-36	81-83
12	12	84-86
13	13	87, 88
14	14	89, 90
15	15:1-13	91-93
16	15:14-33	94-96
17	16	97-99
	1 கொரி	
18	1	100-102
19	2	103, 104
20	3	105, 106
21	4	107-109

22	5	110-112
23	6	113-115
24	7:1-19	116-118
25	7:20-40	119:1-88
26	8	119:89-176
27	9	120-122
28	10:1-18	123-125
29	10:19-33	126-128
30	11:1-16	129-131
31	11:17-34	132-134

செப்டம்பர்

	காலை	மாலை
	1 கொரி	சங்கீதம்
1	12	135, 136
2	13	137-139
3	14:1-20	140-142
4	14:21-40	143-145
5	15:1-28	146, 147
6	15:29-58	148-150
		நீதி
7	16	1, 2
	2 கொரி	
8	1	3-5
9	2	6, 7
10	3	8, 9
11	4	10-12
12	5	13-15
13	6	16-18
14	7	19-21
15	8	22-24
16	9	25, 26
17	10	27-29
18	11:1-15	30, 31
		பிரசங்கி
19	11:16-33	1-3
20	12	4-6
21	13	7-9
	கலாத்தியர்	
22	1	10-12
		உபா
23	2	1-3
24	3	4, 5
2 ய ண 5		4
6-8		
		ஏசாயா
26	5	1, 2
27	6	3, 4
	எபேசியர்	
28	1	5, 6
29	2	7, 8
30	3	9, 10

அக்டோபர்

	காலை	மாலை
	எபேசியர்	ஏசாயா
1	4	11-13
2	5:1-16	14-16
3	5:17-33	17-19
4	6	20-22
பிலிப்பியர்		
5	1	23-25
6	2	26, 27
7	3	28, 29
8	4	30, 31
கொலோ		
9	1	32, 33
10	2	34-36
11	3	37, 38
12	4	39, 40
	1 தெச	
13	1	41, 42
14	2	43, 44
15	3	45, 46
16	4	47-49
17	5	50-52
	2 தெச	
18	1	53-55
19	2	56-58
20	3	59-61
	1 தீமோ	
21	1	62-64
22	2	65, 66
		எரே
23	3	1, 2
24	4	3-5
25	5	6-8
26	6	9-11
	2 தீமோ	
27	1	12-14
28	2	15-17
29	3	18, 19
30	4	20, 21
	தீத்து	
31	1	22, 23

நவம்பர்

	காலை	மாலை
	தீத்து	எரேமியா
1	2	24-26
2	3	27-29
3	பிலேமோன்	30, 31
	எபிரெயர்	
4	1	32, 33
5	2	34-36
6	3	37-39
7	4	40-42
8	5	43-45
9	6	46, 47
10	7	48, 49
11	8	50
12	9	51, 52
		புலம்பல்
13	10:1-18	1, 2
14	10:19-39	3-5
		எசேக்
15	11:1-19	1, 2
16	11:20-40	3, 4
17	12	5-7
18	13	8-10
	யாக்கோபு	
19	1	11-13
20	2	14, 15
21	3	16, 17
22	4	18, 19
23	5	20, 21
	1 பேதுரு	
24	1	22, 23
25	2	24-26
26	3	27-29
27	4	30-32
28	5	33, 34
	2 பேதுரு	
29	1	335, 36
30	2	37-39

டிசம்பர்

	காலை	மாலை
	2 பேதுரு	எசேக்
1	3	40, 41
	1 யோவான்	
2	1	42-44
3	2	45, 46
4	3	47, 48
	தானியேல்	
5	4	1, 2
6	5	3, 4
7	2யோவான்	5-7
8	3யோவான்	8-10
9	யூதா	11, 12
	வெளி	ஓசியா
10	1	1-4
11	2	5-8
12	3	9-11
13	4	12-14
14	5	யோவேல்
		ஆமோஸ்
15	6	1-3
16	7	4-6
17	8	7-9
18	9	ஒபதியா
19	10	யோனா
		மீகா
20	11	1, 2, 3
21	12	4, 5
22	13	6, 7
23	14	நாகூம்
24	15	ஆபகூக்
25	16	செப்பனியா
26	17	ஆகாய்
		சகரியா
27	18	1-4
28	19	5-8
29	20	9-12
30	21	13, 14
31	22	மல்கியா

தலைப்பு அட்டவணை

நாள்	தலைப்பு	பக்கம்
1.	அவர் நடத்துவார்	31
2.	ஆவியில் பலப்பட்டால்..	32
3.	உரம் கசப்பு, கனி இனிப்பு	33
4.	நற்சுபாவச் செடிகள்	34
5.	விசுவாசம் எப்படி?	35
6.	தேவ ஐக்கியத்தோடு	36
7.	பக்திச் சிறையில்	37
8.	பக்தி நிலம் போதாது	38
9.	எதிர்மறை உணர்ச்சிகள்	39
10.	எது அன்பு?	40
11.	கோபம் நல்லதல்ல	41
12.	ஆசீர்வதிக்கப்பட்டவனுக்குக் கஷ்டம்	42
13.	சோர்வு ஏன்?	43
14.	சந்தேக நோய்	44
15.	கீழ்ப்படிதல் என்றால் ...	45
16.	தவறான புரிதல்	46
17.	எது ஜீவன்?	47
18.	வியாதியாளனுக்கு உடற்பயிற்சி	48
19.	ஆசீர்வாதம் யாருக்கு?	49
20.	கர்த்தர் பேசணும்	50
21.	விதிகளை மதித்தல்	51
22.	மறுபடி அந்தச் சட்டை	52
23.	மன்னிக்க இயலுமா?	53
24.	அந்த ஜீவனால் முடியும்	54
25.	எது அதிக மகிமை?	55
26.	கர்த்தர் எப்படிப் பேசுகிறார்?	56
27.	தேவனோடு பேசுவது யார்?	57
28.	எங்கிருந்தாலும் ...	58
29.	கடினம்தான், ஆனால் முடியும்	59
30.	வளருவது எப்படி?	60
31.	கோபம் கரையணும்	61
32.	மனதில் பாவம்	62
33.	ஆசீர்வாதங்கள்இந்த வழியில்	63
34.	கனப்படுத்துவது எப்படி?	64
35.	நமக்குள்தேவனின் கிரியை	65
36.	செல்வ ஆசீர்வாதச் சாட்சி	66
37.	மிருகக் குணம்	67
38.	வீட்டிற்குள்அனுமதியில்லை	68
39.	ஜெபமும், தேவ உறவும்	69
40.	பிள்ளை அல்ல	70
41.	பேசுவது தந்தையா?	71
42.	மன்னிப்பதற்குப் பக்குவம்	72
43.	ஒரு சிறு வலி	73
44.	வலி மருந்து	74
45.	கர்த்தர் நம்மோடிருந்தால்	75
46.	மனதின் வார்த்தை அல்ல	76
47.	நியாயப்பிரமாணப் பழக்கம்	77
48.	இதனை அனுபவித்தாகணும்	78
49.	வார்த்தை ஆசீர்வாதம்	79
50.	பணஆசை, பணத்தேவை	80
51.	கர்த்தருக்குக் காணிக்கை	81
52.	பணமும் தேவ உறவும்	82
53.	ஞாயிறு கர்த்தருக்கே!	83
54.	இயற்கைப் பழக்கம்	84
55.	மனவேதனையின் நடுவிலும்	85
56.	நம்மாலும் முடியும்	86
57.	மாம்சீகம் சகஜமே	87
58.	ஆவிக்குரிய உணர்ச்சி	88
59.	தேவனைத் தேடுங்கள்	89

நாள்	தலைப்பு	பக்கம்
60.	ஆசீர்வாதத் தேடல்	90
61.	பாவ மனிதன் அகலணும்	91
62.	ஜீவனின் அடையாளம்	92
63.	போலி சாட்சி	93
64.	நல்ல சூழ்நிலையா, நல்ல மனமா?	94
65.	ஆசீர்வாத வாழ்க்கை	95
66.	யார் முன்மாதிரி?	96
67.	துக்கமுகம் வேண்டாம்	97
68.	ஆசிர்வாத அடையாளம்	98
69.	வேலைசெய்து சாப்பிடணும்	99
70.	மன்னித்ததை உணரமுடியவில்லை	100
71.	பரலோகம் யாருக்கு?	101
72.	நற்கிரியைகளும் ஆசீர்வாதமும்	102
73.	ஆரோக்கியமும் ஆசீர்வாதமும்	103
74.	தேவ சமுகம் எங்கே?	104
75.	சமாதானத்திற்குத் தொந்தரவு	105
76.	மகிமை செலுத்துதல் அல்ல	106
77.	அறிவும் பெருமையும்	107
78.	உருமாறும் கஷ்டங்கள்	108
79.	உழைக்காமல் வாழாதே	109
80.	இன்றைய தினம் வாழ்வோம்	110
81.	இரண்டு இருதயம்	111
82.	நேசிக்கப் போராட்டம்	112
83.	பாவியும் சுயநீதியாளனும்	113
84.	பாரம்பரியங்கள் பாவமா?	114
85.	பலன் தராத பக்தி	115
86.	குருசு போடுதல்	116
87.	லெந்து காலமும் கறிசோறும்	117
88.	யூதாசின் முத்தம்	118
89.	துக்க வெள்ளி சோகம்	119
90.	விசுவாசம் எதற்காக?	120
91.	அன்பும் எதிர்பார்ப்பும்	121
92.	இது என்ன அலங்காரம்?	122
93.	மாய்மால அன்பு	123
94.	இதுதான் நம்பிக்கை	124
95.	ஒருவனுமில்லையா?	125
96.	சகிப்பது சந்தோஷம் தரும்	126
97.	கர்த்தர் மரிக்கவில்லை	127
98.	எல்லா இலையும் உதிர்ந்தாலும்	128
99.	இந்த வலி விலகும்	129
100.	அழுவதா சிரிப்பதா?	130
101.	பல பிரச்சினைகள்ஒரே கர்த்தர்	131
102.	முதலாவது பாவ விடுதலை	132
103.	அவர்களைப் பின்பற்றாதே	133
104.	கானல் நீர் விசுவாசம்	134
105.	வழிநடத்துதல் எப்படி?	135
106.	அன்பைக் காட்டணும்	136
107.	கர்த்தாவே என்னோடிரும் !	137
108.	நேரடியாக நன்மை	138
109.	நாம் அற்பம் அல்ல	139
110.	இரண்டாம் வருகை	140
111.	விடுமுறைக் கால உத்தமம்	141
112.	ஏன் மன்னிக்கவில்லை?	142
113.	கடன் நெருக்கடி	143
114.	எங்கே எழுதப்பட்டிருக்கிறது?	144
115.	அனுபவிக்கப்படாத பக்தி	145
116.	அவர்களால் முடியாது	146
117.	நிகழ்காலச் சூழல்	147

நாள் தலைப்பு	பக்கம்
118. பரலோகம் ஏன் கடினம்?	148
119. பயன் தெரியாத புத்தகம்	149
120. கனிகொடுத்தலா கீழ்ப்படிதலா?	150
121. ஞானமற்ற செயல்பாடு	151
122. ஆவியின் வாக்குத்தத்தம்	152
123. தகுதியற்ற சாட்சி	153
124. நம்பிக்கையின் அர்த்தம்	154
125. கர்த்தர் என்னோடிருப்பார்	155
126. முதல் ஆசீர்வாதம்	156
127. பக்திமான் பரிசுத்தவான்	157
128. ஐக்கியமும் விசுவாசமும்	158
129. நன்றிக் காணிக்கை	159
130. சத்தியம் ஒரு தடை	160
131. சத்திய ஆவி	161
132. பக்தி என்றால் தேவ உறவு	162
133. தேவையற்ற கஷ்டம்	163
134. கஷ்டங்களுக்குத் தீர்வு	164
135. நான் நல்லவன்	165
136. கிரியை வேண்டாமா?	166
137. சத்தியப் பசி	167
138. வட்டி வாங்குவது பாவமா?	168
139. அவர் நல்லவர், நடத்துவார்	169
140. கிறிஸ்தவ அடையாளங்கள்	170
141. போராட்டம் சகஜமே	171
142. சமாதானமே இலக்கா?	172
143. தீமையின் நடுவில் நன்மை	173
144. பெரிதான கிருபை எது?	174
145. தவறை உணரலாம்	175
146. பரிசுத்தப் பிரசன்னம்	176
147. துக்கத்தை விரும்பாதே	177
148. கர்த்தரை ஏன் புகழணும்?	178
149. சுய வெறுப்பு என்றால்...	179
150. மனிதர்களை எதிர்கொள்ளுதல்	180

நாள் தலைப்பு	பக்கம்
151. ஏன் முடியவில்லை?	181
152. விலக இயலாது	182
153. நன்மை செய்யச் சோர்வு	183
154. அன்பை அனுபவிக்கணும்	184
155. கிருபைக்குச் சான்றுகள்	185
156. ஆசீர்வாதம் என்றால்.....	186
157. பிரியவிடாத அன்பு	187
158. கிரியைகளும் பலன்களும்	188
159. தேவ சித்தம் அறிதல்	189
160. மனம்விட்டுப் பேசுதல்	190
161. கோபமும் நேர நஷ்டமும்	191
162. முதல் கனம்	192
163. திருப்தி எதன்மேல்?	193
164. ஐக்கியம் இல்லை	194
165. வாக்குதத்தமா, விசுவாசமா?	195
166. சுவிசேஷத் தாகம்	196
167. எல்லா இடங்களிலும்	197
168. மனதில் பின்மாற்றம்	198
169. போகவிடாத அனுபவங்கள்	199
170. வாக்குவாதம்	200
171. கிருபை செயல்படவே	201
172. கர்த்தர் நல்லவரா?	202
173. தவறைச் சகிக்கணும்,ஆனால்...	203
174. தினந்தோறும் ஆசீர்வாதம்	204
175. நற்சுபாவமே தேவை	205
176. துறவறமும் ஆடம்பரமும்	206
177.கனியா, கட்டளையா?	207
178. அழைப்பை அறியவில்லை	208
179.துக்கம் நிரந்தரமல்ல	209
180. தனிமைப்படாமல்	210
181. கிரியைகளுக்குப் பலன் உண்டு	211
182. கிரியை செய்யப் பழகணும்	212
183. நமது சுதந்திரம்	213

நாள்	தலைப்பு	பக்கம்
184.	ஏன் வாழணும்?	214
185.	மன அமைதி அப்படி அல்ல	215
186.	தேவ உறவா, தேவ பக்தியா?	216
187.	கர்த்தர் நடத்தாவிட்டால்...	217
188.	தேவப் பிரசன்னம் எப்படி?	218
189.	பல பிரச்சினைகள்	219
190.	இதுவும் இறைப்பணியே	220
191.	அன்பும் அனுபவமும்	221
192.	கர்த்தர் அருகில்	222
193.	மறுபடி விழுந்தால்...	223
194.	வளருவது எப்படி?	224
195.	மனிதனா புனிதனா?	225
196.	புதிய ஆசீர்வாதம்	226
197.	தேவ உறவு இல்லாவிட்டால்...	227
198.	ருசிக்கப்படாத அறிவு	228
199.	அறிவும் உணர்ச்சியும்	229
200.	ஏன் மன்னிக்கணும்	230
201.	மன்னித்து ஏற்றுக்கொள்ளணும்	231
202.	பாவம் இல்லை, ஆனால்..	232
203.	ஆசீர்வாத அடையாளம்	233
204.	அறிவாளிப் போதகர்கள்	234
205.	இருதயத்தில் சுபாவம்	235
206.	ஆசீர்வாத வழி	236
207.	போராளி என்றால்...	237
208.	பிரிவது எளிதா?	238
209.	செலவில்லாத விசுவாசம்	239
210.	அன்பில் வைராக்கியம்	240
211.	நிம்மதிக் கவலை	241
212.	பிரசன்னமா வாக்குதத்தமா?	242
213.	கர்த்தர் நம்மோடு இருக்கிறாரா?	243
214.	சிறுமைப்பட்ட காலங்கள்	244
215.	சத்தியமும் மனித நட்பும்	245
216.	ஜெபத்தின் வல்லமை	246
217.	பாவம் செய்தால்	247
218.	பாவம்தான் துக்கப்படுத்துமா?	248
219.	உள்ளே உண்மை	249
220.	பரிசுத்தம் தராத சந்தோஷம்	250
221.	மன்னிப்பை விரும்பாவிட்டாலும்	251
222.	காணிக்கை கட்டாயம்	252
223.	செயல்பட தடை	253
224.	நம்மிடம் கர்த்தர்	254
225.	பரலோகத் தகுதி	255
226.	கிரியை செய்யணுமா?	256
227.	பரிசுத்தமாக வாழ முடியாது	257
228.	ஆயுள் நீடிப்பு	258
229.	எங்கும் பரிசுத்தம்	259
230.	தனிமை உணர்வு	260
231.	ஆசீர்வாதமா, அர்ப்பணமா?	261
232.	இன்னும் மாறணுமே	262
233.	கிருபை கிடைக்கல, ஏன்?	263
234.	தேவன் வழிநடத்துவாரா?	264
235.	தேவன் அன்பானவரா?	265
236.	பரிசுத்தமாக வாழ்ந்தால்	266
237.	ஜனங்களின் பாராட்டு	267
238.	அவர்கள் வெறுக்கையில்	268
239.	கனிகள் இல்லை, ஏன்?	269
240.	பரிசுத்த வல்லமை	270
241.	வார்த்தை தரும் நம்பிக்கை	271
242.	பின்னணி என்ன?	272
243.	செய்யாத நன்மைகள்	273
244.	பண ஆசை	274
245.	பலவீனமான சான்றுகள்	275
246.	தேவனுடைய திட்டம்	276
247.	விசுவாசம் மனப்பயிற்சியா?	277
248.	எதிர்மறை அணுகுமுறை	278
249.	அன்புதான் தேவை	279

நாள்	தலைப்பு	பக்கம்
250.	கஷ்டங்கள்தேவசித்தமா?	280
251.	கர்த்தர் நமக்குத் தேவை	281
252.	நெருக்கடி வரும் முன்பே	282
253.	உறவா? விசுவாசமா?	283
254.	யாரும் பாராட்டவில்லை	284
255.	ஆசீர்வாதம் இல்லை. ஏன்?	285
256.	ஆசீர்வாதம்தான் ஆவிக்குரிய வாழ்வா?	286
257.	மூளையும் இருதயமும்	287
258.	கவலையை தாக்கணும்	288
259.	ஐக்கியமே அவசியம்	289
260.	செலவில்லாத அன்பு	290
261.	போராடுவது எங்கே?	291
262.	பக்தியே தடை	292
263.	முதல் மன்னிப்பு	293
264.	சந்தேக வியாதி	294
265.	கடைசி இலையும் உதிர்ந்தது	295
266.	பிரச்சினைக்குக் காரணம்	296
267.	தேவனை அறிதல்	297
268.	தனிப்பட்ட உறவுடன் அன்பு	298
269.	அவர்கள் மாறாவிட்டால்	299
270.	ஜெபம் மட்டும் போதுமா?	300
271.	ஊழிய அழைப்பு	301
272.	அனுபவங்கள்	302
273.	நற்குணங்களை விடாமல்	303
274.	காலம் கடக்கும் முன்பு	304
275.	ஆசீர்வாதம் எப்படி?	305
276.	நிறைவு தரும் வெற்றி	306
277.	அற்பமானவை, ஆனால்...	307
278.	நல்லது நடக்கிறது	308
279.	பதட்டமடைந்து	309
280.	தேவ சித்தம் அறிந்திட	310
281.	முதிர்வயதிலும்	311
282.	உண்மையை மறைக்காமல்	312
283.	பாதைகளை மறந்து	313
284.	உண்மை நிலை வெளிப்படும்	314
285.	மனமும் சரீரமும்	315
286.	தாழ்மை	316
287.	பெற்றோரின் கடமை	317
288.	எது ஆசீர்வாதம்?	318
289.	அறிவுத்திறன்	319
290.	கர்த்தரின் வழிகள்	320
291.	கவனத்தை ஈர்க்கட்டும்	321
292.	எச்சரிக்கை அவசியம்	322
293.	கடின வார்த்தைகள்	323
294.	வெளிப்படுத்துங்க	324
295.	கோபம் ஏன்?	325
296.	நான் யார்?	326
297.	சாட்டையும் கோலும்	327
298.	பதவி	328
299.	உலகத்தையே கவனித்தால்.	329
300.	ஆவியைப் பெற்றால்...	330
301.	அற்பம், ஆனால்...,	331
302.	பழைய தேவன், புதிய பாதை	332
303.	பாவத்தை உணராமல்	333
304.	ஏன் தேவ பயமில்லை ?	334
305.	தீமை செய்வதருக்கு	335
306.	ஏன் வெறுக்கின்றார்கள்?	336
307.	எழுப்புதல் எப்போது?	337
308.	சந்தோஷம் தராத ஆன்மீகம்	338

நாள்	தலைப்பு	பக்கம்
309.	யார் பார்க்க வேண்டும்?	339
310.	துதித்தால் மட்டும் போதுமா?	340
311.	தேவ உறவுடன் வாழ்வது எப்படி?	341
312.	தேவனைச் சார்ந்திருப்போம்	342
313.	அன்பிற்குச் சான்று	343
314.	நண்பர்களின் கருத்து	344
315.	முயற்சி	345
316.	நிர்ப்பந்திக்க வேண்டாம்	346
317.	சரியான பாதைதானா?	347
318.	குறை உணர்த்தல்	348
319.	சந்தோஷ அழைப்பு	349
320.	பாடம் கற்பதற்காக	350
321.	தேவன் மேல் அன்பு	351
322.	கொள்கையில் உறுதி	352
323.	தொடரும் குறைகூறல்	353
324.	உண்மையான மாற்றம் ?	354
325.	ஒப்பிட்டுப் பார்த்தல்	355
326.	உண்மையான நோக்கம்	356
327.	விசுவாசத்தின் அர்த்தம்	357
328.	உள்ளான நோய்	358
329.	எங்கும் உண்மை	359
330.	பயணத்தில் துணை	360
331.	உண்மையான கனம்	361
332.	துன்ப வேளையில்	362
333.	அன்பின் ஐக்கியம்	363
334.	இறையியல் அறிவு	364
335.	தேடல் தேவை	365
336.	தேவன் மகிமைப்பட	366
337.	கொஞ்சத்தை	367
338.	சுத்த இதயம் வேண்டும்	368
339.	முகஸ்துதி	369
340.	அரைகுறை மாற்றம்	370
341.	பரிசுத்தவான் யார்?	371
342.	யார் கெட்டவர்கள்?	372
343.	தேவ ஐக்கியம்	373
344.	இந்த இரட்சிப்பு வேண்டாம்	374
345.	அன்புக் கடன்	375
346.	உதவி வரும் நேரம்	376
347.	தேவனுக்காக வாழவேண்டும்	377
348.	ஏன் உபதேசங்கள்?	378
349.	அன்பை விளக்கிய இடங்கள்	379
350.	இதோ உங்களோடிருக்கிறார்	380
351.	மாற்றும் தன்மை	381
352.	அதிகாரம் அவர் கையில்	382
353.	சோதனை வரும்போது	383
354.	அழைப்பும் அவமதிப்பும்	384
355.	மறைந்திருக்கும் சுயம்	385
356.	நினைக்கப்படுதல்	386
357.	காத்துக் கொள்ளுங்கள்	387
358.	ஜெபமும் உதவியும்	388
359.	பரிசுத்தக் கொண்டாட்டம்	389
360.	ஏன் கொண்டாடுகிறோம்?	390
361.	நன்மைக்குத் தீமை	391
362.	சோதனைக் காற்றுகள்	392
363.	சரியான பார்வை	393
364.	வெற்றியும் தோல்வியும்	394
365.	உறவா? நன்மையா?	395
366.	ஆண்டின் கடைசிநாளில்...	396

நினைவில் நின்றவை

இந்த நாளிலும்

என்னோடிருந்து..

இந்த தியான நூலை எப்படி பயன்படுத்தலாம்?

- தினமும் அந்தந்த நாளுக்குரிய தியானப் பகுதியை மட்டுமே படித்து பயனடையுங்கள். ஒரே நேரத்தில் பல பக்கங்களை படிப்பது அவ்வளவு பிரயோஜனமாயிராது.
- இந்த தியான நூலைப் படிக்கும் போதுப் பக்தி கடமையாகப் படிக்காமல் பரிசுத்தத்தில் வளர்வதற்கு ஏதுவாகக் கற்றுக்கொண்டிடப் படியுங்கள்.
- எப்பொழுதாவது நேரம் கிடைக்கும் போதுப் படிக்காமல் இதற்கென்று ஒரு நேரத்தை ஒதுக்கிப் படியுங்கள்.
- நீங்கள் தனியாகவும் இந்த தியானநூலை வாசியுங்கள். உங்கள் குடும்ப ஜெபத்திலும் வாசியுங்கள்.
- நீங்கள் விசேஷமாக அறிந்துகொண்ட உண்மைகளைப் பிறரோடுப் பகிர்ந்துக் கொள்வதை பழக்கமாக்குங்கள்.
- இந்த தியான நூலில் தரப்பட்டுள்ள வேதப் பகுதியை மட்டுமே வாசித்து உங்களின் வேததியான வேளையை முடித்துக் கொள்ளாதிருங்கள். இன்னும் பல்வேறு வேதப் பகுதிகளை வாசிக்கவும் தியானிக்கவும் கவனமாயிருங்கள். அந்தந்த நாளுக்குரிய பக்கத்தில் தரப்பட்டுள்ள வேத பகுதி இன்றைய உங்களின் வேத வாசிப்பிற்கான வேத பகுதி அல்ல. அது இந்த நூலில் தரப் பட்டுள்ள இன்றைய சிந்தனைக்கான வேதபகுதி மட்டுமே.
- நீங்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துகிறவர்களாயிருந்தால் இந்த தியான நூலைப் பற்றியும் படித்த சிந்தனைகளைப் பற்றியும் பிறரோடு தவறாமல் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- இந்த தியானநூலைத் திரும்ப திரும்ப ஒவ்வொரு வருடமும் பயன்படுத் தாமல் இதற்கு அடுத்தபடியாக வெளியிடப்படும் தியானநூலைக் குறித்து விசாரித்து அதனை வாங்கிப் பயன்படுத்துங்கள்.
- நீங்கள் யார் மூலம் இந்த தியான நூலைப் பெற்றிருந்தாலும் அடுத்த முறை அவர்களிடமே எதிர்பாராமல் நீங்களே புதிய தியான நூலை வாங்கி பயன்படுத்த முன்வாருங்கள். இந்த முறை நீங்கள் பரிசாகப் பெற்றிருந்தால் அடுத்த தியான நூலை நீங்கள் யாருக்காவது பரிசாக வாங்கிக் கொடுங்கள்.

ஜனவரி 1

அவர் நடத்துவார்

ஏசாயா 43:1–19

பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன்.
எசாயா 43:5

பழைய ஆண்டு முடிந்து புதிய ஆண்டு துவங்கினதும், வாழ்க்கையின் எதிர்மறையான சூழல்கள் யாவும் தலைகீழாக மாறிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. தேவன் நம்மை ஆசீர்வதிப்பதற்காக பழைய ஆண்டு முடிவதற்கும், புதிய ஆண்டு துவங்குவதற்கும் காத்திருக்கிறார் என்று கூற முடியாது. டிசம்பர் 31-ம் தேதி வரை பார்த்த ஆசீர்வாதமற்ற சூழல்யாவும், ஜனவரி 1-ம் தேதி காணாமல் போய் விடும் என்று எதிர்பார்க்க முடியாது. சில சூழல்கள் மாறாமல் இன்னும் அப்படியே நமக்கு முன்பாக நிற்கக் கூடும். சில விஷயங்கள் நடப்பதற்கான வாய்ப்புகள் முன்பு போலவே இப்பொழுதும் தோன்றாமல் இருக்கக்கூடும்.

நாம் சூழ்நிலை மாற்றங்களின் மேலேயே பார்வையை வைத்துக் கொண் டிருக்க வேண்டாம். நாம் பயப்படத்தக்க சூழல்கள் அகன்று விட்டதா என்பதையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். நாம் கர்த்தர் மேல் பார்வையை வைப்போம். நாம் கர்த்தரோடு நடப்பதற்குக் கவனம்செலுத்துவோம். நாம் கர்த்தருடைய ஆளு கைக்கு உட்ப்பட்டு வாழ்கின்ற அனுபவத்தை விரும்புவோம். கர்த்தர் நம்மை எதிர் மறையான சூழல்களின் நடுவிலும், நேர்மறையான எண்ணங்களோடும் நம் பிக்கையோடும், தரிசனத்தோடும் தொடர்ந்து கொண்டு செல்லச் ஜெபிப்போம்.

அன்று இஸ்ரவேல் ஜனங்களைக் கானானை நோக்கி வழிநடத்தின தேவன், அவர்களுக்காக எதிர்மறைச் சூழ்நிலைகளையெல்லாம் ஒரேயடியாக மாற்றி விட வில்லை. ஆனால், அவைகள் அவர்களை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குத் தடைகளாயிராமல், அவைகளை ஆளுகை செய்து அவர்களைக் கடந்து போகச் செய்தார். சில விஷயங்கள் நீங்காமல் சிலகாலம் தொடரலாம். சில எதிர்பார்ப்புகள் இப்போதே இங்கேயே நிறைவேறாமல் இருக்கலாம். ஆனால், தேவன் நம்மை சமாதானத்தோடும், நம்பிக்கையோடும், முன்னோக்கிக் கொண்டு செல்வார்.

புதிய ஆண்டு துவக்கத்தில் கர்த்தர் இந்த ஆண்டு நமக்கு என்ன நன்மை செய்வார் என்பது தொடர்பான ஒரு வாக்குத்தத்தத்தைத் தேட வேண்டியதில்லை. உண்மையும், அன்பும், கிருபையும் உடைய தேவன், நம்மைப் பிள்ளையைப் போல நடத்தியும், சுமந்தும், தாங்கியும் கொண்டு செல்லும் விதமாக, நம்மை அவரிடம் தந்துவிடவேண்டும். நாம் தனியாக நடந்து செல்கின்றவர்கள் என்று எண்ணாமல், தேவ துணையோடு நடக்கும் கிருபை பெற்றவர்கள் என்ற நம்பிக்கையை உறுதி யாகப் பற்றிக் கொள்ள வேண்டும்.

சிந்தனைக்கு...

கடந்து செல்ல இயலாத ஆறுகள் எதுவும் இல்லை,
நம்மை நடத்திச் செல்லும் தேவனுடைய பாதையில்.

ஜனவரி 2

ஆவியில் பலப்பட்டால்..

சங்கீதம் 42:1–11

என் ஆத்துமாவே, ஏன் கலங்குகிறாய்?
சங்கீதம் 42:5

எதையும் சாதிக்க இயலாத ஒரு பலவீன நிலையிலிருந்து, சாதிக்க இயன்ற ஒரு பலமுள்ள ஒரு நிலமைக்கு நேராக தேவன் நம்மை கொண்டு செல்ல இயலும். ஆனால், வாழ்க்கை தொடர்பான காரியங்களில், முதலாவது நம்மைத் தேவன் பலப்படுத்துவதில்லை. முதலாவது, தேவன் நம்மை ஆவிக்குரிய நிலையிலேயே பலப்படுத்த விரும்புகின்றார். நமக்குள் ஆவிக்குரிய மனிதன் மாம்சீகமனிதன் அல்லது உலக மனிதன் என்ற இண்டு மனிதர்கள் உண்டு. ஆவிக்குரிய மனிதன் என்றால், தேவனுக்குரிய காரியங்களோடு தொடர்புடைய மனிதன். உலக மனிதன் என்றால், நம்முடைய உலக வாழ்க்கை விஷயங்களோடு தொடர்புடைய மனிதன்.

நாம் பெரும்பாலும் நம்முடைய சரீர சுகம், பொருளாதார நிலமை, வேலை, தொழில், உறவு, போன்றவற்றோடு தொடர்புடைய உலக மனிதனில் பலமடைந்து சாதிக்கவே விரும்புவோம். ஆனால், கர்த்தரோ நம்முடைய சுபாவம், வாழ்க்கைமுறை, பரிசுத்தம், தேவ நோக்கம், தேவ உறவு போன்றவற்றோடு தொடர் புடைய ஆவிக்குரிய மனிதனையே, முதலாவது பலப்படுத்த விரும்புவார். எனவே, முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேட கர்த்தர் சொன்னார். (மத்தேயு 6:33)

நாம் தேவ உறவைத் தேடி அனுபவித்து, ஆவிக்குரிய நிலையில் பலப்பட வேண்டும். நாம் தேவனுக்கேற்ற சுபாவங்களில் பலப்பட வேண்டும். நாம் தேவனை அறிகின்ற அறிவு நிலையில் பலப்பட வேண்டும். இவ்விதம் ஆவிக்குரிய மனிதன் என்ற நிலையில் பலப்பட்டுவிட்டால், இந்த ஆவிக்குரிய நிலமை எல்லாச் சூழலிலும் நம்முடைய உலக வாழ்க்கை நிலமையை உறுதியாகத் தாங்கும். உலக மனிதன் என்ற இயற்கையினால் நாம் சில சூழல்களில் கலங்கவோ, தவிக்கவோ, பயப் படவோ, நம்பிக்கையின்றி நிற்கவோ நேரிடலாம். ஆனால், அது போன்ற சூழ் நிலையில் நம்முடைய ஆவிக்குரிய நிலமை நம்மை ஊக்குவிக்கவும், உற்சாகப் படுத்தவும், நம்பிக்கையடையவும் செய்யும்.

தாவீது ஒருபுறம் ஒரு நெருக்கடியான சூழ்நிலையால் மிகுதியாகக் கலங்கு கிறான். ஆனால், அவனுக்குள் இருக்கிற ஆவிக்குரிய மனிதன், என் ஆத்துமாவே, ஏன் கலங்குகிறாய்? கர்த்தரை நோக்கிக் காத்திரு. அவர் சமுகத்திலிருந்து வரும் இரட்சிப்பிற்காக இன்னும் அவரைத் துதி, என்று சொல்லி, உற்சாகப்படுத்தித் தைரியப்படுத்துவதைப் பார்க்கின்றோம். (சங்கீதம் 42:5) ஆம், ஆவிக்குரிய நிலையில் பலப்பட்டால், உலக நிலை பலவீனம் நம்மை நம்பிக்கையிழக்கச் செய்யாது.

சிந்தனைக்கு...

சூழ்நிலைகள் யாரையும் சிலநேரம் பயப்படுத்தும்.
தேவ உறவில் பலமாயிருந்தால் விரைந்து அதை மேற்கொள்வோம்.

ஜனவரி 3

உரம் கசப்பு, கனி இனிப்பு

யோவான் 6:48-69

இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்?
யோவான் 6:60

ஆப்பிள் மரம், பலாமரம், வாழைமரம் போன்றவை நமக்கு நல்ல இனிப்பான பழங்களைத் தருகின்றது. ஆனால், அந்த மரத்திற்கு நாம் என்ன மாதிரியான உரத்தைப் போடுகின்றோம்? இனிப்பான உரத்தை அல்ல. அந்த உரம் கசப்பாகவோ, புளிப்பாகவோ, உவர்ப்பாகவோ அல்லது எந்தச் சுவையும் இல்லாதாகவோ இருக்க முடியும். ஆனால், அந்த உரத்தைப் பெற்றுக் கொண்டு, கனி மரங்கள் இனிப்பானதும் சுவையானதுமான நற்கனிகளைத் தருகின்றது.

நாம் கேட்கும் போதனைகளும், வேத உபதேசங்களும், ஆலோசனைகளும் எல்லா நேரமும் நாம் எதிர்பார்க்கின்ற இனிப்புச் சுவையுடையதாக இருப்பதில்லை. அவை சில நேரம் சுவையற்றதாகவும், கசப்பானதாகவும், விரும்பி ஏற்கும் தன்மையற்றதாகவும் இருக்க முடியும். அதனை அவசியம் என்று உணர்ந்து ஏற்றுக் கொண்டால், ஆசீர்வாத ரீதியான சுவையான நன்மைகளைக் காண முடியும்.

மோசே மூலமாக இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய பிரமாணங்கள் ஐஸ்கிரீம் போன்றவை அல்ல. ஆயினும், அவற்றை உரிய விதமாகக் கடைப்பிடிக்கும்போது, இனிப்பான பல ஆசீர்வாத விளைவுகள் ஏற்படும் என்பதை, உபாகமம் 28-ம் அத்தியாயத்தின் முதல் பகுதியில் பார்க்கின்றோம். ஆனால், கர்த்தர் கொடுத்த பிரமாணங்களாகிய உரத்தைக் கொண்டு, தேவனுக்கேற்ற கனிமரங்களாக அவர்கள் மாறவில்லை. எனவே, இனிப்பான ஆசீர்வாதங்களைப் பெற இயலாமல் போனது.

யோவான் 6-ம் அத்தியாயத்தில் இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்ட மக்கள், இது கடின உபதேசம் என்று கூறி திரும்பிச் சென்றதைப் பார்க்கின்றோம். (யோவான் 6:60) அவருடைய உபதேசங்கள் அவர்களுக்குக் கேட்பதற்கு இனிமையாக இருக்கவில்லை. இன்று அநேகர், தாங்கள் கேட்கும் போதனைகள் ஐஸ்கிரீம் போல இனிமையாய் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். எனவே, பல போதகர்களும் செயற்கையாக அதற்குச் சுவையூட்டி, அவர்கள் விரும்புகின்ற விதமாகக் கொடுக்கின்றனர். ஆனால், அவை கேட்கும் நேரத்திற்கு மட்டுமே இனிமையாயிருக்கும். அவை சத்திய உரமாக இல்லாத காரணத்தால், கேட்கிறவர்கள் மரங்களைப் போல செழிப்பாக வளர்ந்து, இனிமையான ஆசீர்வாத விளைவுகளைக் காணமுடியவில்லை.

சிந்தனைக்கு...

கேட்கின்ற சத்தியம் சில வேளை கசப்பாயிருக்கும், ஆயினும், அதனுடைய விளைவோ எப்பொழுதுமே இனிப்பாயிருக்கும்.

ஜனவரி 4

நற்சுபாவச் செடிகள்

யோவான் 15:1–16

என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள்.
யோவான் 15:4

ஆவிக்குரிய கனிகள் அல்லது சுபாவங்கள் என்பதை இரண்டு விதங்களில் உருவாக்கலாம். ஒன்று. நாம் நல்ல போதனைகளையும் உபதேசங்களையும் கேட்டு, அதனுடைய அடிப்படையில் நாமே நற்குணச் செடிகளை நட்டு வளர்த்தல். இரண்டு. நாம் தேவ உறவிலும் தேவ ஐக்கியத்திலும் வளர்ந்து, அதனுடைய விளைவாகக் கர்த்தர் நமக்குள் நற்குணச் செடிகளை நடுதல், அதாவது நாம் கேட்ட நல்ல போதனைகளின் விளைவாக, நாம் நல்ல சுபாவங்களோடு வாழ் வதற்கு முற்படுதல் முதலாவது வகையைச் சேர்ந்தது.

ஆனால், இது நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றி வாழ்வதற்கு ஒப்பானது. இவ்விதம் நாம் சில சூழ்நிலைகளில் நற்சுபாவக் கனிகளோடு வாழ இயலும். ஆயினும், கடுமையான சோதனைச் சூழல்களில் சாத்தான் இந்த நற்சுபாவச் செடிகளை எளிதாகப் பிடுங்கிவிடுவான். ஏனென்றால், இவை நாம் நம்முடைய சுய மாம்சீக பலத்தால் நட்டு வளர்த்தவை. அவை பிடுங்கக் கூடாத அளவிற்கு ஆழமான வேர்களைக் கொண்டதல்ல. ஆனால், தேவ உறவின் விளைவாக தேவ ஆவியினால் நமக்குள் நடப்படும் நற்சுபாவச் செடிகளை, எந்தச் சோதனையான சூழலிலும் சாத்தான் பிடுங்க முடியாது. ஏனென்றால், அவை ஆவியினால் நடப் பட்டவை. அவை பிடுங்க இயலாத அளவிற்கு வலிமையானவை.

புதிய ஏற்பாடு, நாம் தேவ ஐக்கியத்துடன் வாழ்கின்ற ஒரு வாழ்க்கை முறையையே, ஆவிக்குரிய அனுபவமாகப் போதிக்கின்றது. கர்த்தரோடு நாம் பேசிப் பழகி, ஆழமான ஐக்கிய அனுபவம் பெற வேண்டும். அந்த ஐக்கியத்தின் விளைவு தான் நற்குணங்கள் என்னும் ஆவியின் கனிகள். (யோவான் 15:8) அநேகர் போதனைகளைக் கேட்டு நேரடியாகக் கீழ்ப்படியும் செயலுக்கு வருகின்றார்கள். தாழ்மை, பொறுமை, சாந்தம், அன்பு, நன்மை செய்தல் போன்ற சுபாவங்களைச் செயல்படுத்த முற்படுகின்றனர்.

ஆனால், அவைகளில் நிலைத்திருக்க முடியவில்லை. ஏனென்றால், அவர்களுக்குத் தேவ ஐக்கியம் தேடி அனுபவிக்கும் ஆவிக்குரிய அனுபவம் இல்லை. நாம் ஒரு நபருடன் பேசிப் பழகி, பகிர்ந்து, உரையாடி வாழ்வது போல கர்த்தரோடு வாழவேண்டும். அதற்காகத்தான் பரிசுத்த ஆவி தரப்பட்டுள்ளது. இதைத்தான் இயேசு யோவான் 15-ம் அதிகாரத்தில் என்னில் நிலைத்திருந்தால் மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள் என்றார். தேவ உறவில் வாழப் பழகிவிட்டால் நற்சுபாவச் செடிகளைச் சாத்தான் பிடுங்கிப் போட இயலாது.

சிந்தனைக்கு...

கர்த்தருடைய ஐக்கியத்தை அனுபவிக்கப் பழகிவிட்டால்
அவருடைய வார்த்தையின்படி வாழ்தல் பழக்கமாகிவிடும்.

ஜனவரி 5

விசுவாசம் எப்படி?

எபிரெயர் 11:1–12

தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்.
எபிரெயர் 11:9

வேதாகமத்தில் விசுவாசத்தால் பெரிய சாதனைகள் புரிந்த பலருடைய வரலாறுகள் உள்ளது. விசுவாசம் தொடர்பான ஏராளம் போதனைகள் வேதாகமத்தில் உள்ளன. சம காலத்தில் பல தேவ ஊழியர்களின் விசுவாசப் போதனைகள் நமக்கு விசுவாசத் தூண்டுதல்களைத் தருகின்றன. ஆயினும், நாம் தேவன் மேல் விசுவாசம் வைத்து பெரிய காரியங்களைக் காண இவை போதுமானவை அல்ல. எவ்வளவு தான் விசுவாசம் தொடர்பான சாட்சிகளைக் கேட்டாலும், நாம் அவற்றால் விசுவாச வீரர்களாகி விட முடியாது..

வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள பல தேவ மனிதர்கள், விசுவாசத்தினால் பெரிய காரியங்களைக் கண்டார்கள் என்றால், அதற்குப் பின்னால் உள்ள உண்மை என்ன? அவர்கள் வேறு சிலரால் விசுவாசத் தூண்டுதல்கள் பெற்றார்கள் என்பது அல்ல. அவர்கள் தேவனிடமிருந்து விசுவாசத் தூண்டுதல் பெற்றார்கள். ஆபிரகாம் தான் போகுமிடம் அறியாமல், விசுவாசத்தால் புறப்பட்டுச் சென்றான். அந்த விசுவாசம் தேவனோடுள்ள நேரடியான தொடர்பினால் வந்தது.

ஆபிரகாம், மோசே, நோவா, ஈசாக்கு, யோசுவா, கிதியோன் என எவரும் முதலாவது நேரடியாகத் தேவனிடமிருந்து வார்த்தை பெற்றவர்கள். தேவனால் அவர்கள் வழிநடத்தப்பட்டவர்கள். தேவனால் நேரடியாக ஊக்குவிக்கப்பட்டவர்கள். தேவனோடு தங்களுக்கு ஏற்பட்ட தனிப்பட்ட உறவின் பின்னணியில்தான், அவர்கள் தேவன் சொன்னதை நம்பிச் செயல்பட்டார்கள்.

அவ்விதமே நாம் யாரோ சொன்னதைக் கேட்டு தேவனை விசுவாசிப்பதல்ல. தேவனே நமக்கு விசுவாசத்தூண்டுதல் தந்து வழிநடத்தணும். நமக்குத் தேவனோடு நேரடியான ஒரு ஐக்கியம் வேண்டும். நாம் தேவனோடு நேரடியான தொடர்பில் வந்த பின்புதான், நம்பிக்கையோடு செயல்பட முடியும். விசுவாசத்தை நமக்குள் தேவன் துவக்கி வைக்க வேண்டும். (எபிரெயர் 12:1) அநேகர் விசுவாசப் போதனைகள் கேட்டதின் விளைவாக, கர்த்தர் மேல் அதிக நம்பிக்கை வைக்கின்றனர். ஆயினும், அவர்களுக்குத் தேவனோடு எந்த நேரடியான ஆவிக்குரிய ஐக்கியமும் இல்லை. யாரோ சொல்லி நாம் ஒருவர் மேல் நம்பிக்கை வைப்பது வேறு. நாமே ஒருவரோடு பழகி வாழ்ந்து அவர்மேல் நம்பிக்கை வைப்பது வேறு. நாம் கர்த்தரை நமக்குள் பெற்று, அதன் தொடர்ச்சியாகப் பெரிய காரியங்களை விசுவாசிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

ஆயிரம் போதகர்கள் நம்பிக்கை தந்தால் கூட, ஆண்டவர்
நமக்குள் நம்பிக்கை தராதவரை, நிமிர்ந்து நிற்க இயலாது.

ஜனவரி 6

தேவ ஐக்கியத்தோடு

யாத்திராகமம் 34:1–10

காலமே என் சமுகத்தில் வந்து நில்.
யாத்திராகமம் 34:2

தினமும் ஜெபியுங்கள் என்றால் அதனைப் பின்பற்ற இயலும். தினமும் வேதம் வாசியுங்கள் என்றால் அதனைப் பின்பற்ற இயலும். தினமும் தேவனை ஆராதியுங்கள் என்றால் அதனை நாம் செய்ய இயலும். தேவனுக்குத் தாராள மாகக் காணிக்கை கொடுங்கள் என்றால், நாம் அதைச் செய்ய இயலும். ஆனால், ஆவிக்குரிய வாழ்க்கையின் மிக முக்கியமான அனுபவம் என்பது தேவ ஐக்கியத்தில் வாழ்வதே. தேவ ஐக்கியத்தில் நீங்கள் வாழுங்கள் என்றால், அநேகருக்கு அது விளங்காத ஒன்றாகவும், பின்பற்ற இயலாத ஒன்றாகவுமே உள்ளது.

முதலாவது, புதிய ஏற்பாடு நாம் தேவனோடு ஐக்கியம் வைத்து வாழ்கின்ற ஒரு வாழ்க்கையைத்தான் முதலிடத்தில் வைத்துள்ளது. தேவ ஐக்கியத்துடன் நாம் வாழ அழைக்கப்பட்டுள்ளதால், அதனை நாம் விசுவாசிக்க வேண்டும். முதலாவது, கர்த்தர் நமக்கு உறவும் ஐக்கியமும் தருவதற்கு விரும்புகின்றார் என்பதை நம்பிச் செயல்பட வேண்டும். இரண்டாவது, அந்த உறவை நாம் முதலாவது ஏற்படுத்த வேண்டும். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற உறவைப் பெறுவதற்காக, இயேசுவை இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக் கொள்ள வேண்டும். (யோவான் 1:12)

அடுத்தபடியாக, அனுதின வாழ்வில் அந்த உறவின் அனுபவத்தை எதிர் பார்த்துத் தேட வேண்டும். நாம் ஜெபம் செய்கிறோம், வேதம் வாசிக்கின்றோம் என்று பக்தியாய்ச் செயல்படுவது மட்டும் போதாது. தேவனோடு மனம் விட்டுப் பேச வேண்டும். தேவ அன்பையும் உறவையும் ஆத்துமாவில் எதிர்பார்த்துத் தேட வேண்டும். கர்த்தர் தம்மை நமக்குள் வெளிப்படுத்துவதற்கேற்ற காரியங்களை நாம் செய்ய வேண்டும். ஜெபித்தாலும், வேதம் வாசித்தாலும், ஆராதித்தாலும், வேறு பணி செய்தாலும் கர்த்தரைக் குறித்த சிந்தனைகள் நமக்கு வேண்டும்.

இறுதியாக நாம் தேவனோடு ஐக்கியமாக வாழ்கின்ற விசுவாசத்தோடு, அதனுடைய பிரதிபலிப்புகளைப் பிறர் காணச் செய்ய வேண்டும். நம்மை ஆண்டவர் கூட இருந்து நடத்துகின்றார் என்ற உண்மையை, நாம் வாழ்கின்ற விதத்தால் பிறர் காணச் செய்ய வேண்டும். அதன் பெயர்தான் கனிகொடுத்தல். ஆபிரகாமோடு தேவனிருந்தார். யோசேப்போடு தேவனிருந்தார். அவர்கள் அதற்குரிய விளைவு களைப் பிறர் நடுவில் பிரதிபலித்துக் காண்பித்தார்கள்

சிந்தனைக்கு...

பக்தர்களாய் அறியப்பட, ஆராதனையும் ஜெபமும் போதும்,
தேவ பிள்ளைகளாய் அறியப்பட, தேவ உறவு தேடல் வேண்டும்.

ஜனவரி 7

பக்திச் சிறையில்

யோவான் 3:1–16

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால்....
யோவான் 3:3

சிலரிடம் பக்தியை வெளிப்படுத்தும் பல செயல்கள் உள்ளன. ஆனால், அவற்றை அவர்கள் சந்தோஷ மனநிலையோடு செய்யாமல், ஏதோ ஒரு கட்டாயத் தினால் தூண்டப்பட்டே செய்கின்றார்கள். ஏனென்றால், அவர்களிடம் ஆவிக்குரிய ரீதியான விசேஷ ஆசீர்வாதங்கள் இல்லை. கர்த்தரிடத்திலிருந்து அவர்கள் எந்த நன்மையையும் விசேஷமாய்ப் பெற்ற அனுபவம் இல்லை. ஆனாலும், தாங்கள் செய்து வருகின்ற பக்திக் கிரியைகளை நிறுத்துவதில்லை. அது பக்தி வைராக்கி யத்தால் அல்ல.

அது ஒரு விதமான பயம். நன்மை எதுவும் கிடைக்கவில்லை என்ற வருத் தத்தில் ஜெபிக்காமலும், சபைக்குப் போகாமலும், காணிக்கை கொடுக்காமலும் நிறுத்திவிட்டால், கர்த்தர் தண்டித்து விடுவாரோ என்ற பயம். ஆனால், தேவன் அப்படிச் செயல்படுவது இல்லை. நாம் ஆராதிக்கவில்லையே, நாம் காணிக்கை தரவில்லையே, நாம் ஜெபிக்கவில்லையே என்றெல்லாம் தேவன் கோபித்துக் கொள் வதில்லை. ஏனென்றால், நாம் இன்னும் இரட்சிப்பைத் தேடாவிட்டால்தான் தேவன் கோபமாயிருப்பார். (எபிரெயர் 2:4) இரட்சிப்பின் அனுபவம் பெறாதவர்களின் ஜெபத்தையோ, ஆராதனையையோ, காணிக்கையையோ தேவன் விரும்பமாட்டார்.

பிரச்சினை என்னவென்றால், ஒருவர் முதலாவது இரட்சிப்பின் அனுபவத்தைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெற வேண்டும். அதுதான்பிரதான வாசல். அந்த வாசல் வழியாகப் பிரவேசிக்காதவர்களின் பக்திச் செயல் களை கர்த்தர் அங்கீகரிப்பதில்லை. அவர்கள் தங்கள் பக்திச் செயல்களால் தேவ நன்மைகளைப் பெற இயலாது. ஆனால், அநேகர் எந்த நன்மையையும் பெறா விட்டாலும், தாங்கள் செய்து வருகிற பக்திச் செயல்களைத் தொடர்ந்து செய்யத் தான் செய்வார்கள். இதனை ஒரு பக்தி அடிமைத்தனம் என்று கூறலாம். எந்த நன்மையையும் பெறாவிட்டாலும், அவர்கள் பக்திச் செயல்களைச் செய்தே ஆக வேண்டிய ஒரு மனக்கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டு விடுகிறார்கள்.

எனவேதான், ஒரு புறம் சிலர் சலிப்பாகப் பேசிக்கொண்டே, மறுபுறம் ஜெபங்களிலும், வழிபாட்டுச் செயல்களிலும் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருப் பார்கள். ஏனென்றால், அவர்கள் பலன் ஏதும் தராத ஒரு பக்தி அடிமைத்தனத் திற்குள் சிக்கிக் கொண்டார்கள். ஆம், ஆவிக்குரிய வாழ்க்கையை மறுபடியும் பிறக்கும் அனுபவத்திலிருந்து கவனமாகத் துவங்காவிட்டால், பக்தி வாழ்க்கை ஒரு விடுதலையின் அனுபவமாகயிராமல், சிறை அனுபவமாகிவிடும்.

சிந்தனைக்கு...

பக்தி என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால்,
உள்ளேயும் இருக்க முடியாத, வெளியேயும் வரமுடியாத சிக்கல் வந்துவிடும்.

ஜனவரி 8

பக்தி நிலம் போதாது

மத்தேயு 18:1–17

நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால்.
மத்தேயு 18:3

சிலருடைய இருதயம் பக்தியானது. ஆனால், அது பரிசுத்தமானது அல்ல. சிலர் தாங்கள் நல்ல பக்தியோடு இருக்கின்றோமா என்பதைக் குறித்து அதிக கவனமாயிருப்பார்கள். ஆனால், பரிசுத்தமாகயிருக்கின்றோமா என்று சிந்திப் பதில்லை. ஜெபம், வேதவாசிப்பு, ஆராதனை, காணிக்கை, என பக்தி விஷயங்கள் மேல், அவர்கள் அதிக ஆர்வமாயிருக்கின்றார்கள். ஆனால் அன்பு, தாழ்மை, உண்மை, பொறுமை, சாந்தம், ஆடம்பர எதிர்ப்பு, பண ஆசை சாராமை போன்ற பரிசுத்தத்தோடு தொடர்புடைய விஷயங்களில் தாங்கள் சரியாயிருக்கின்றோமா என்று சிந்திப்பதில்லை.

பக்தியாக வாழ்கின்ற அவர்கள் ஏன் பரிசுத்தமாக வாழவில்லை? பாவிகூட பக்தியாய் வாழ வாஞ்சையாயிருக்க முடியும். ஆனால், கர்த்தராகிய இயேசுவினால் வருகின்ற இரட்சிப்பைப் பெற்று இருதயம் பரிசுத்தமாக்கபட்டால்தான், பரிசுத்த வாஞ்சை ஏற்படும். சிலர் பக்தியின் விளைவாக நிறைய நல்ல பிரசங்கங்களையும் போதனைகளையும் கேட்பார்கள். ஆனாலும், அவர்கள் கேட்ட சத்தியத்தின்படி நல்ல பரிசுத்த சுபாவங்களோடு வாழ்வதில்லை. ஏனென்றால், அவ்விதம் வாழ்வதற்கு அவர்களால் இயலவில்லை.

ஒரு நிலத்தில் ஒருவர் விதைப்பது மிக மிக நல்ல விதைகளாயிருக்கலாம். ஆனாலும், அந்த நிலம் பண்படாத ஒரு நிலமாயிருந்தால், அந்த விதைகள் முளைக்காது. அது போலவே, பக்தியான நிலத்தில் ஜெபம், ஆராதனை, காணிக்கை, உபவாசம் போன்ற பக்திச் செயல்கள் முளைக்குமேயன்றி, உயர்ந்த பண்புகளோ, சிறந்த சிந்தையோ முளைக்காது. எனவேதான் கர்த்தர் முதலாவது நம்மை இரட்சிக்கப்பட அழைக்கின்றார். பாவி என்ற நிலையிலிருந்து நாம் பக்தியாக வாழ்வதற்கு முன்வருவது அல்ல. பாவியாயிருந்த நாம் முதலாவது பாவத்திலிருந்து விடுதலையாகி, பரிசுத்தமாக வாழ்வதற்கான வலிமை பெற்றிட முன்வரவேண்டும்.

இருதயத்தில் தேவ ஆவி வந்து உண்மையான மனமாற்றம் பெற்றால்தான், பரிசுத்தம் தொடர்பான வார்த்தைகளாகிய விதைகள் முளைக்க வாய்ப்பு ஏற்படும். நாம் துவக்கத்திலிருந்தே பக்தியான செயல்களால் நம்மைப் பக்திமானாகப் பார்க்கப் பழகிவிட்டால், பின்னர் இரட்சிப்பின் அனுபவத்தைப் புரிந்து கொள்வதும், அதனைத் தேடுவதும் கடினமாகிவிடும். எனவே, சிலர் போதனைகளைக் கேட்கக் கேட்க, இன்னும் இன்னும் நிறைய பக்திச் செயல்களைச் செய்கின்றார்களேயன்றி, பரிசுத்த மான ஒரு வாழ்க்கையைக் காணாமல் போகிறார்கள்.

சிந்தனைக்கு...

சுய முயற்சிச் செயல்களால் பக்திச் சாயம் பூசுகிறவர்களுக்கு,
தேவ ஆவியின் கிரியையால் தேவ சாயல் ஏற்படுவது கடினம்.

ஜனவரி 9

எதிர்மறை உணர்ச்சிகள்

யாக்கோபு 3:1–18

உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தை.
யாக்கோபு 3:14

ஒரு காலத்தில் கலகலப்பான முகத்தோற்றமுடையவர்களாயிருந்த சிலர், காலப்போக்கில் கடுகடுப்பான முகத்தோற்றமுடையவர்களாக மாறிவிடுகின்றனர். ஒரு காலத்தில் மலர்ந்த முகத்தோடு காணப்பட்ட சிலர் ,காலப்போக்கில் சலிப்பைக் காட்டும் முகத்தோற்றத்தோடும், துக்கத்தைக் காட்டும் முகத்தோற்றத்தோடும், கோப முகத் தோற்றத்துடனும் காணப்படுவதைப் பார்த்திருக்கின்றேன். வயதுகள் போவது மட்டுமே காரணம் அல்ல. அவர்களின் மனநிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் அவ்விதம் நேரிடுகிறது. அவர்களுக்கு காசு பணம் வசதிகள் எதுவும் குறையவில்லை. சந்தோஷ மனநிலை மட்டுமே குறைந்து போகிறது.

அதற்குக் காரணம் என்ன? அவர்களுக்கு எல்லாம் இருந்தும், மனநிலையில் சில அழுத்தங்கள் ஏற்படுவதால் அவ்விதம் மாறிவிடுகின்றனர். ஒருவர் எவ்வளவுதான் மிக மிகச் சத்து நிறைந்த உணவை சாப்பிட்டாலும், சரீரத்தில் ஏதாவது நோய் இருந் தால், அந்த நல்ல உணவினால் வரும் ஆரோக்கியத்தை, அவரிடம் பார்க்க முடியாது. அனுபவிக்க எல்லாம் தாராளமாயிருந்தாலும், மனதை ஏதாவது எதிர் மறை உணர்ச்சிகள் அழுத்த ஆரம்பித்தால், சந்தோஷ மனநிலையும் சமாதான மன நிலையும் போய்விடும்.

ஆம், வசதியான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டால் மட்டும் போதாது. மனதை நன்றாக வைத்துக் கொள்ள இயன்ற நல்ல நேர்மறையான உணர்ச்சிகள் வேண்டும். கோபம், பகைமை, வெறுப்பு, வைராக்கியம், ஏமாற்றம், தோல்வி போன்ற விஷயங்களின் விளைவாக நமக்குள் எதிர்மறையான உணர்ச்சிகள் வந்து அழுத்தும் போது, மனமகிழ்ச்சி இடம் பெயர்ந்து, தேடினாலும் கண்டடைய இயலாத ஒன்றாகிவிடும். பல நேரங்களில் ஒருவருக்குள் துக்கமும், அதிருப்தியும், சலிப்பும் ஏற்படுவது அவருடைய சூழ்நிலைகளின் விளைவு அல்ல. அது அவர் தன்னுடைய மனதை உரிய விதமாகச் சரியாக வைக்க முடியாததின் விளைவு.

கோப உணர்வையும், வருத்த உணர்வையும், வைராக்கிய உணர்வையும் வெளியேற்றுவதற்குத் தேவையான, நேர்மறையான நல்ல உணர்ச்சிகள் உள்ளே வராததால் அப்படி நிகழ்கிறது. கர்த்தருக்குள் வாழ்ந்து, கர்த்தருடைய நல்ல ஐக்கி யத்தைத் தேடி வாழ்கின்ற மனிதன், தனக்குள் தரம்வாய்ந்த நல்லுணர்ச்சிகளைப் பெறுவான். கர்த்தரோடு மனம் விட்டுப் பேசிப் பழகி வாழ்கின்ற மனிதன், தன் மனதை எல்லாச் சூழ்நிலைகளிலும் எதிர் மனநிலைகளிலிருந்து காத்துக் கொள்கின்றான்.

சிந்தனைக்கு...

தெய்வீகமான நல்ல விஷயங்கள் மனதிற்குள் வந்தால்தான்,
மனுஷீகமான கெட்ட விஷயங்கள் வெளியே போகும்.

ஜனவரி 10

எது அன்பு?

கலாத்தியர் 2:11–21

சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது.
கலாத்தியர் 2:14

நாம் பிறரிடத்தில் அன்பாயிருக்க வேண்டும். இதுதான் தேவனுடைய விருப்பம். எப்படி நாம் பிறரிடம் அன்பாயிருப்பது? நாம் அவர்களை வருத்தப் படுத்தக்கூடாது. நாம் அவர்களைக் கோப்படுத்தக்கூடாது. நாம் அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாமல் ஏமாற்றம் அடையச் செய்யக்கூடாது. ஆனால், இவ்விதம் நடந்து கொண்டு நாம் அவர்கள் மேல் அன்பாயிருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துவது எளிதான காரியமா? ஒருவேளை நாம் முயற்சி செய்து அப்படி நடந்து கொண்டால், அது தேவனுக்குப் பிரியமாயிருக்குமா?

ஏனென்றால், சிலருடைய தவறான கருத்துக்களோடு நாம் ஒத்துப்போகா விட்டால் அவர்கள் கோபப்படுவார்கள்.சிலருடைய சரியற்ற ஆசைகளுக்கு நாம் எதிர்த்துப் போனால் அவர்கள் வருத்தப்படுத்துவார்கள். சிலருடைய மிஞ்சிப்போன எதிர் பார்ப்புகளை நாம் நிறைவேற்ற முடியாமல் போனால், அவர்கள் நம்மேல் அதிருப்தி அடைவார்கள். இந்தச் சூழ்நிலையில் நாம் அவர்கள் மேல் எவ்வளவுதான் அன்பாயிருந்தாலும், அவர்கள் நாம் அவர்களை நேசிப்பதாக உணரமாட்டார்கள்.

அப்படியானால் பிறரை நேசிக்க நாம் எந்த வழிமுறையைக் கையாள வேண்டும்? நாம் பிறர் பிரியப்படும் விதமாக நடந்து கொள்ளுதல் அல்ல, அவர்களை நேசித்தல். தேவன் பிறர் விஷயத்தில் நாம் எப்படி நடந்து கொண்டால் பிரியப்படுவாரோ, அப்படி நடந்து கொள்வதுதான் பிறரை நேசித்தல். பேதுருமேல் பவுல் அப்போஸ்தலனுக்கு ஆவிக்குரிய ரீதியான அன்பு உண்டு. அதே வேளையில், பேதுருவின் குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை பவுலின் பார்வையில் சரி யற்றதாகத் தோன்றியது. அங்கே பேதுருவை வருத்தப்படுத்தக்கூடாது என்றோ, கோபப்படுத்தக்கூடாது என்றோ பவுல் சிந்தித்திருந்தால், அந்த நடவடிக்கையைக் கண்டு கொள்ளாமல் போயிருக்க வேண்டும். ஆனால், பவுல் அப்படிச் செய்யாமல் ஆவிக்கேற்றபடி சிந்தித்து, பேதுருவின் அணுகுமுறையைக் கண்டித்தான்.

ஆம், பிறரை நேசித்தல் என்பது பிறர் மனம் வருந்தாதபடி நாம் நடந்து கொள்ள க்கவனமாயிருப்பது அல்ல. சத்தியத்தின்படி எது சரியோ அதற்கேற்றபடி நடந்து கொள்வதே பிறரை நேசிப்பது ஆகும். அதனைப் பிறர் விரும்பாமல் போகலாம். ஆனாலும், தேவனுடைய பார்வையில் எது சரியோ அதையே நாம் செய்து அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆம், பிறரை நேசிப்பது என்பது பிறர் விஷயத்தில் தேவன் விரும்புகிறபடி சரியாக நடந்து கொள்வதே.

சிந்தனைக்கு...

பிறருக்குப் பிரியமானதைச் செய்வது அல்ல.
பிறருக்குப் பிரயோஜனமானதைச் செய்வதே அன்பு.

ஜனவரி 11

கோபம் நல்லதல்ல

சங்கீதம் 37:1:15

பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே.
சங்கீதம் 37:1

நகரப்பகுதியில் குறுக்குச் சாலைகளிலிருந்து பிரதான சாலைக்கு வாகனத்தில் வருகின்றவர்கள், நின்று நிதானித்துப் பார்த்துதான், பிரதான சாலைக்குள் நுழைய வேண்டும். ஆனால் சிலர் எந்த முன்னறிவிப்பு சமிக்ஞையும் தராமல், வேகமாக பிரதான சாலைக்குள் வந்துவிடுவார்கள். இதனால் போக்கு வரத்து விதியின்படி சரியாகப் பிரதான சாலையில் செல்கிறவர்கள் பாதிக்கப்பட நேரிடுவதுண்டு. இங்கே நான் சரியாகத்தான் போகிறேன் என்று குறுக்குச் சாலைகளை கவனிக்காமல் போனால், நமக்குத் தீங்கு ஏற்படும். நாம் தவறாகப் போய் விபத்து நிகழ்ந்தாலும், பிறர் தவறாக வந்து விபத்து நிகழ்ந்தாலும் நமக்குத் தீங்கு உண்டு.

அது போலவே கோபமும். நம்முடைய மனம் சரியாயிராவிட்டாலும் கோபம் நமக்குள் ஏற்படும். சில நேரம் பிறருடைய மனம் சரியில்லாத காரணத்தாலும் நம்மைத் தேவையின்றிக் கோபப்படுத்துவார்கள். கோபம் ஏற்பட நாம் காரண மாயிருந்தாலும் பிரச்சினைதான். பிறர் சரியில்லாததால் நமக்குள் கோபம் ஏற்பட்டாலும் பிரச்சினைதான். எனவே, தேவையில்லாமல் எளிதாகப் பிறரைக் கோபமடையச் செய்யும் மனநிலை நமக்கு நல்லதல்ல. அது போல அநீதியாய் பிறர் நம்மைக் கோபப்படுத்தினாலும், அது நமக்கு நல்லதல்ல.

நாம் பிறருடைய வாகனத்தில் தவறாகப் போய் மோதினாலும் நமக்கு காயம் ஏற்படும். பிறர் தவறாக நம்முடைய வாகனத்தில் மோதினாலும் காயம் ஏற்படும். எனவே ,காயம் அடைவதற்கான வழி எதுவானாலும் அதைத் தவிர்க்க நாம் பிரயாசப்பட வேண்டும். அதுபோல கோபம் எந்தக் காரணத்தினால் நமக்குள் வந்தாலும் அதனை நாம் எதிர்க்க வேண்டும். ஏனென்றால், நியாயமான கோபமோ, நியாயமற்ற கோபமோ எதுவானாலும், அது நம்முடைய மனதில் தங்காதபடி நாம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தாவீதுக்கு சவுலின்மேல் கோபமாயிருக்க ஏராளம் நல்ல நியாயங்கள் உண்டு. ஆனால், அவன் சவுலின் மேல் கோபமாயிருக்கவில்லை. யோசேப்பிற்கு தன் னுடைய அன்பற்ற சகோதரர்கள் மேல் கோபமாயிருக்க ஏராளம் நியாயங்கள் உண்டு. ஆனால், யோசேப்பு அவ்விதம் இருக்கவில்லை. ஏனென்றால், கோபத்தின் பின்னால் நியாயப்படுத்த ஏராளம் காரணம் இருந்தாலும், அதனால் நமக்கு எந்த நன்மையும் இல்லை. ஆனால்,அதனால் ஏராளம் தீமைகள் உண்டு. எனவே, தேவ அன்பைத் தேடி கோபத்தை வெளியேற்றத் தீவிரப்பட வேண்டும்.

சிந்தனைக்கு...

பொறுத்துப் போகிறவன் கோழை அல்ல,
பொங்கி எழுகிறவன் வீரன் அல்ல.

ஜனவரி 12

ஆசீர்வதிக்கப்பட்டவனுக்குக் கஷ்டம்

சங்கீதம் 34:1–22

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்.
சங்கீதம் 34:19

கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கின்றார் என்றால் நமக்குச் சமாதானம், சந்தோஷம், நம்பிக்கை, வல்லமை ஆகிய வாழ்விற்குத் தேவையான நன்மைகளை, அருளுகின்றார் என்று அர்த்தம். ஆனால், கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கின்றார் என நம்புகின்ற வேளையில் நமக்கு எதிரிடையான பாதகமான காரியங்கள் நடக்கிறது. அப்போது நாம் தேவன் நம்மை ஆசீர்வதிக்கவில்லையோ என எண்ண ஆரம்பிக்கின்றோம். ஏனென்றால், நமக்கு நன்மையாக எல்லாம் நடக்காவிட்டால், அங்கே தேவ ஆசீர்வாதம் இல்லை என்று எண்ணுகின்றோம்.

ஆனால், தேவன் நமக்குச் சாதகமான காரியங்களைச் செய்கின்ற வேளையில், நமக்குப் பாதகமான காரியங்களும் நடக்க வாய்ப்புண்டு. தேவன் நமக்கு நன்மைகளை அருளிக் கொண்டிருப்பது உண்மை. ஆனால், அதே நேரத்தில் சரீரம் நமக்கு வியாதியைத் தரமுடியும். மனிதர்கள் நமக்கு மனவேதனையைத் தரமுடியும். பிசாசு நம்மைச் சோதிக்க முடியும். நம்முடைய சுயம் நமக்குத் தேவையற்ற பிரச்சினைகளை விளைவாகத் தர முடியும். இதுபோன்ற நேரத்தில் நமக்கு எதிர்மறையாக நேரிட்ட யாவற்றையும், தேவன் நமக்குச் சாதகமாக இல்லாததின் அடையாளமாக எடுத்துக் கொள்கின்றோம்.

ஆனால், இது ஒரு தவறான நிதானிப்பு. யோசேப்பிற்கு, தேவன் சாதகமாயிருந்த அதே காலகட்டத்தில், சகோதரர்களால் அவனுக்கு வேதனை வந்தது. தாவீதுக்கு தேவன் ஆதரவாயிருந்த அதே காலகட்டத்தில், சவுலினால் அவனுக்கு மனநோவுகள் வந்தது. பவுலுக்கு தேவன் சாதகமாயிருந்த அதே காலகட்டத்தில், பலவிதமான பிரச்சினைகள் அவனுக்கு வந்தது. ஆனால், அவர்கள் தங்களோடு தேவன் இருக்கின்றார் என்ற விசுவாசம் சார்ந்த செயல்பாட்டினால், யாவற்றையும் எதிர்கொண்டு ஜெயித்தார்கள்.

ஆம், மனிதர்களாலோ, சரீரத்தின் நிலைமைகளாலோ, சாத்தானின் சோதனைகளாலோ, சுயத்தின் மதியீனத்தாலோ நமக்கு கஷ்டங்கள் வரலாம். அவற்றைப் பார்த்து கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கவில்லை என்று எண்ணிக் கொள்ளக் கூடாது. கஷ்டங்கள் ஒருபுறம் நேரிட்டாலும், கர்த்தர் நமக்குப் பலநன்மைகளை அளித்து ஆசீர்வதித்துக் கொண்டுதானிருக்கின்றார். இந்த உலகத்தில் நாம் ஆசீர்வதிக்கப்பட்ட நிலமையில் வாழ்ந்தாலும், வேறு பல விஷயங் களால் சில கஷ்டங்கள் நேரிடலாம். அவற்றைத் தேவ கிருபையைச் சார்ந்து நாம் எதிர்கொள்ள வேண்டும்.

சிந்தனைக்கு...

நமக்கு எதிராக என்ன நடக்கிறது என்பதை அல்ல.
தேவன் நமக்கு ஆதரவாக என்ன செய்கிறார் என்று பார்க்கணும்.

ஜனவரி 13

சோர்வு ஏன்?

அப்போஸ்தலர் 20:18-28

அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்.
அப்போஸ்தலர் 20:24

எல்லாம் நமக்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டும் என்று விசுவாசத்தோடு வாழ்கின்றோம். அந்தச்சூழ்நிலையில் மனம் நோகும்படியான காரியங்கள் நிகழ்ந்தால் சோர்ந்து போகின்றோம். நமக்கு ஏற்பட்ட எல்லாக் கஷ்டங்களுக்கும் கர்த்தரைப் பொறுப்பாளராக்குகின்றோம். வாழ்க்கையில் காண நேரிட்ட கஷ்டங் களினால் கர்த்தர் விஷயத்தில் சோர்வும் சலிப்பும் வந்து விடுகின்றது. தேவ பக்தியாக வாழ்ந்தும் எதிர்பார்த்த நல்ல விளைவுகள் இல்லையே என்று சோர்வுக்குள்ளா கிறோம். இவ்விதமான சோர்வின் விளைவுகள் என்ன?

மனவாஞ்சையோடு கர்த்தருடைய சமுகத்தை தேட முடியாமல் போகிறது. கர்த்தர் நமக்கு நன்மையானதைத் தருவார் என்ற விசுவாசம் தொலைந்து போகிறது. தேவ பக்தி சார்ந்து வாழ்ந்தும் நன்மை இல்லையே என்ற வருத்தத்தால், தேவ வழியில் தீர்வுகளைத் தேடாமல், உலக வழியில் தீர்வு தேடச் செல்கின்றோம். இங்குதான் தேவ கிருபையைப் போக்கடிக்கும் செயல் நடைபெறுகிறது.

முதலாவது, நாம் எதிர்பார்த்த விதமாக நமக்கு நன்மைகள் கிடைக்காவிட்டால், தேவ பக்தியின்மேல் ஏன் சலிப்பு வருகின்றது? நமக்கு எதிரிடையாக ஏதாவது நடக்கும் போது, கர்த்தர் நமக்கு ஏன் இப்படி அனுமதித்தார் என்று கூறி ஏன் சோர்ந்து போகின்றோம்? நம்முடைய தேவ பக்தி அனுபவம் தேவனுக்காக வாழ்வது என்ற தேவ நோக்கத்தை மையங்கொண்டிருக்கவில்லை. நாம் நம்முடைய வாழ்க்கையின் தேவைகளுக்காகத் தேவனைத் தேடுகின்றோம். தேவனுடைய நோக்கத்தை இலக் காகக் கொண்டு நாம் ஆவிக்குரிய வாழ்க்கையை வாழவில்லை.

அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியப்பாதையில் ஒருபுறம் தேவன் தன் னோடிருப்பதாக நம்பினாலும், மறுபுறம் பலவிதமான கஷ்டங்களைச் சந்தித்தான். ஆயினும், மனம் சோர்ந்து போய் தேவனை விட்டு விலகவோ, ஊழியத்தை விட்டுப் போகவோ இல்லை. ஏனென்றால், பவுல் அப்போஸ்தலனுடைய தேவ பக்தி என்பது தனக்காக கர்த்தர் செயல்பட வேண்டும் என்ற சிந்தை உடையதல்ல. தேவனுக்காக தான் வாழவேண்டும் என்ற சிந்தையே பவுலின் தேவ பக்தியின் பின்னால் இருந்தது. எனவே, எல்லாச் சூழலிலும் தேவ கிருபையின் ஆதரவுகளைப் பயன்படுத்தி, எல்லாப் போராட்டங்களையும் வெற்றியாகக் கடந்து சென்றான்.

சிந்தனைக்கு...

தேவ அன்பை ருசித்தவனுக்கு தேவன் எதைத் தராமல் போனாலும்,
அவனுக்குத் தேவனிடம் சலிக்கக் காரணம் இராது.

ஜனவரி 14

சந்தேக நோய்

1 சாமுவேல் 18:6–21

சவுல் தாவீதை காய்மகாரமாய் ப் பார்த்தான்.

1 சாமுவேல் 18:9

மளிகை கடை நடத்தும் ஒருவரிடம் மிகத் திறமையான ஒருவன் வேலை செய்கிறான். அவனுடைய அதி திறமையான செயல்பாடு, அந்த மளிகை கடையின் வளர்ச்சிக்கு முக்கியக் காரணங்களுள் ஒன்று. ஆனால், அந்த வேலையாளை உரிய முறையில் கண்காணிக்க வேண்டும். இல்லையேல் அவன் பணத்தை திருடி விட வாய்ப்புண்டு, என்றொரு தவறான செய்தியை ஒருவர் அந்தக் கடைகாரரிடம் சொன்னார். அன்றிலிருந்து அந்த முதலாளி அவனை மிக மிக விழிப்புடன் ரகசியமாகக் கவனித்துக் கொண்டிருப்பார். ஆனால், பல வருடங்களாகிவிட்டன. அவன் பணம் திருடுவதை அவர் பார்க்கவும் இல்லை. அவனைக் கண்காணிப்பதை அவர் நிறுத்தவும் இல்லை.

சந்தேகம் என்பது சிலர் விஷயத்தில் ஒரு நீங்காத வியாதி. அது ஒரு முறை அவர்களுக்குள் வந்துவிட்டால், பின்னர் அது அவர்களிடம் நிரந்தரம் ஆகிவிடுகிறது. சில கணவர்கள், மனைவிகளை திருமணம் ஆன காலத்திலிருந்தே சந்தேகிக்க ஆரம்பித்து, முதிர்வயதை மனைவி எட்டினாலும் சந்தேகத்தை விடுவதில்லை. அவ்விதமே சில மனைவிகள், கணவரை இளம் வயதிலிருந்து சந்தேகிக்க ஆரம்பித்து, அவர் கோலூன்றி நடக்கின்ற காலத்திலும் விடாமல் சந்தேகிப்பார்கள்.

சிலருக்கு சந்தேக வியாதி என்பது சர்க்கரை நோய் போலவும், இரத்த அழுத்த நோய் போலவும் ஆயுள் முழுவதும் தொடரும். ஒரு நாளும் அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கை வைத்து அந்த சந்தோஷத்தை அனுபவிப்பதில்லை. சந்தேகம் வருவது இயற்கையானது. ஆனால் அது விடாமல் தொடருவது துக்கத்திற்குரியது. ஒருவர் மேல் நமக்குச் சந்தேகம் வந்தால் அது உண்மையா பொய்யா என்பதை நாம் அறிந்துகொள்ள தேவ உதவியை நாட வேண்டும். சவுலுக்குத் தாவீது மேல் ஏற்பட்ட சந்தேகம் கடைசி வரை போகவில்லை. பரிசேயர்களுக்கு இயேசுவின் மேல் ஏற்பட்ட சந்தேகம் கடைசி வரை போகவில்லை.

யார் மேல் நமக்குச் சந்தேகமோ, அதைக் குறித்து மனந்திறந்து கர்த்தரிடம் பேச வேண்டும். நாம் சந்தேகப்பட்டுக் கொண்டு அப்படியே சும்மா இராமல், அது சரியா என்பதை ஆழமாகப் பரிசோதனை செய்ய வேண்டும். திரும்பத் திரும்ப நாம் சோதித்தும் சந்தேகித்தபடி எதுவும் இல்லையென்றால், அந்தச் சந்தேக மன நிலையை மாற்ற தேவ கிருபையை நாட வேண்டும். நெருங்கின உறவுகளின் நடுவில் ஒருவரை இன்னொருவர் சந்தேகப்படுவதினால் இரண்டு பேருக்கும் பெரிய மனவலிகள் ஏற்படும்.

சிந்தனைக்கு...

சந்தேகப்படும் விதமாக நடந்து கொள்வது தவறு.
எதுவும் நடக்காமலே சந்தேகத்தை விடாதிருப்பது பெருந்தவறு.

ஜனவரி 15

கீழ்ப்படிதல் என்றால் ...

எபேசியர் 4:1–5

மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும்...
எபேசியர் 4:2

சிலர் ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும்போது நல்ல கிறிஸ்தவர்களே. அவர்கள் தாங்கள் கேட்கும் நல்ல போதனைகளுக்குக் கீழ்படிவார்கள். ஆனால், ஒரு பக்கத்தை மட்டுமே. அதாவது எதையெல்லாம் செய்யக்கூடாது என்று போதிக்கப் படுகிறதோ அதையெல்லாம் செய்யமாட்டார்கள். ஆனாலும், அவர்களிடம் எந்த விசேஷமான பிரகாசமும் இல்லை. இவர்கள் கோபப்படாதே, வெறுக்காதே, ஆசை கொள்ளாதே, தப்பான பழக்கவழக்கத்தைப் பின்பற்றாதே, தவறானவைகளைச் செய்யாதே என்றெல்லாம் போதித்தால் அப்படியே பின்பற்றுவார்கள்.

ஆனால் அன்பு காண்பி, பொறுமையாயிரு, தாழ்மையாக நடந்துகொள், தவறு செய்தவர்களை மன்னித்து விடு, பிறருக்கு நன்மை செய் என்பது போன்ற நேர்மறையான போதனைகளைப் பின்பற்றமாட்டார்கள். ஏனென்றால், அவை கடினமானவை என்பது மட்டுமல்ல. அவற்றின் மேல் அவர்களுக்கு ஒரு பெரிய தரிசனம் இல்லை. செய்யாதே செய்யாதே என்ற விதமாகச் சொல்லப்படும் விஷயங்களை, அவர்கள் பாவமாகப் பார்த்து விலக முடியும். ஆனால், எவை பரிசுத்தமானவையோ அவற்றைச் செய்ய பெரிய உந்துவிசை ஏற்படுவதில்லை.

தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது, எவைகளைச் செய்யாதே என்று சொல்லப்படுகிறதோ, அவற்றைச் செய்யாதிருப்பது மட்டுமல்ல. எவற்றைச் செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறதோ அவற்றைச் செய்யவும் வேண்டும். பலர் தங்களிடம் முன்பு காணப்பட்ட தகாத விஷயங்களை விட்டு விலகியதைக் குறித்தே அதிகமாகச் சாட்சி சொல்வார்கள். மதுபானம், சிகரெட், சினிமா, தப்பான உறவுகள், மோசமான பழக்க வழக்கங்கள் என பாவத்தோற்றமுடைய செயல்களை விட்டு விலகியதையே வாழ்க்கை மாற்றத்தின் சான்றுகளாகக் கூறுவார்கள். அதே வேளையில், பரிசுத்தமான புதிய அனுபவங்களைத் தேடி அடைவதில்லை.

நாம் யாரையும் வெறுக்காமலிருப்பது மட்டும் போதாது. நாம் பிறருக்கு நம் முடைய அன்பைக் காண்பிக்க வேண்டும். நாம் பெருமையாக நடந்து கொள்ளா மலிருப்பது மட்டும் போதாது. பிறர் நம்மைத் தாழ்த்தும் போது ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் பிறருக்கு நன்மைகள் செய்ய வேண்டும். நாம் தவறான சுபாவங் களை விட்டு விலகுவது மட்டும் போதாது. மிக நல்ல சுபாவங்களை நம்மிடம் கொண்டிருக்கப் பிரயாசப்பட வேண்டும்.

சிந்தனைக்கு...

தவறுகளைச் செய்யாவிட்டால் கெட்ட பெயர் வராது,
ஆனாலும், நல்லவைகளைச் செய்யாவிட்டால் நற்பெயர் வராது.

ஜனவரி 16

தவறான புரிதல்

யோவான் 7:1–24

அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று சொல்லிக் கொண்டார்கள்.
யோவான் 7:12

ஒரு குறிப்பிட்ட சபையின் பாஸ்டர், சிறந்த சுபாவ நிலை வாழ்க்கையைக் குறித்து அதிகமாகப் பேசுவார். ஆனால், அந்த சபையில் உள்ள சிலருக்கு இவர் மேல் ஒரு தவறான புரிந்து கொள்ளுதல் இருந்தது. அதாவது அவர் மிக மிகச் சிறந்த வாழ்க்கை குறித்துப் பேசுவார். ஆனால், அந்த அளவிற்கு அவர் சிறந்த விஷயங்களோடு வாழ்வதில்லை என்ற கருத்து அவர்களிடம் இருந்தது. அவர் உண்மை, உத்தமம், பரிசுத்தம், தாழ்மை என்பது போன்ற விஷயங்களை அவர் பிரசங்கிக்கும் போது அவர்கள் இவரை ஒரு விதமாகப் பார்ப்பார்கள். அதாவது அவர் வெறும் பிரசங்கத்திற்காக மட்டுமே அவ்விதம் மாய்மாலமாகப் பேசுகிறார் என்பதே அந்தப் பார்வையின் அர்த்தம்.

நாளடைவில் அவரால் அது போன்ற சிறந்த சுபாவங்களைக் குறித்து அவர்கள் நடுவில் பேச இயலவில்லை. ஏனென்றால், தான் நடிப்பதுபோல அவர்கள் நினைப்பதை அவருடைய மனதில் அவர் சிந்திக்கும்போது, அவரால் நன்றாகப் பேச முடிவதில்லை. ஆம், ஒருவர் மேல் நமக்குத் தவறான புரிந்துகொள்ளுதல் ஏற்படும்போது, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவர் முழுபலத்தோடு செயல்படுவது பாதிக்கப்படுகிறது. இன்னொன்று, ஒருவரைத் தவறாகப் புரிந்து கொண்டோ மென்றால், அவரால் வருகின்ற நற்பலன்களை நாம் பயன்படுத்த இயலாமல் இழக்கின்றோம்.

தாவீதைக் குறித்த ஒரு தவறான புரிந்து கொள்ளுதல் சவுலுக்கு இருந்தது. தனக்கு ஆதரவான ஒரு மனநிலையோடிருந்த தாவீதை, சவுல் எதிராளியைப் போல கற்பனை செய்தான். தனக்குத் தாவீது பாதகமாக வருவான் என்றதோர் தவறான எதிர்மறைச் சிந்தனை அவனுக்கிருந்தது. அதனுடைய விளைவாக சவுலுக்காக மிக நன்றாகச் செயல்படும் வாய்ப்பை தாவீதால் பயன்படுத்த முடியவில்லை. தாவீதால் தனக்கு நன்மை கிடைக்கும் வாய்ப்பை சவுலும் இழந்து போனான்.

தவறாக இன்னொருவரைப் புரிந்து கொள்வது ஏதாவது ஒரு சூழ்நிலையில் யாருக்கும் நடந்துவிடும். ஆனால், நம்முடைய புரிந்து கொள்ளுதல் சரிதானா என்பதை நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். நாம் தேவ ஆவியால் வழிநடத்தப் பட்டால் யாரையும் தொடர்ந்து தவறாகப் புரிந்து கொள்ள மாட்டோம். ஏனென்றால், தேவ ஆவியினால் வழிநடத்தப்படுகிறவர்கள் சுயத்திற்கேற்றபடி சிந்திக்காமல், தேவ ஆவிக்கேற்றபடி சிந்திக்க இயன்றவர்கள். எனவே, அவர்கள் இல்லாத ஒன்றை இருக்கிறதைப் போலப் பார்க்க இயலாது.

சிந்தனைக்கு...

நல்லவனைக் கெட்டவனாய்ப் பார்த்தால் அவனுக்கு நஷ்டமில்லை,
ஆனால், அவனால் நன்மைபெறுவதில் நீ நஷ்டப்படுவாய்.

ஜனவரி 17

எது ஜீவன்?

1 யோவான் 5:10–21

குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்.
1 யோவான் 5:12

ஜெபம் என்பது ஜீவனைப் பலப்படுத்த உதவும். ஆனால், அதுவே ஜீவன் அல்ல. ஜெபம், ஆராதனை, காணிக்கை, பக்திச் செயல், ஊழியம் என எதுவும் நம்மை வாழ வைக்காது. இயேசு கிறிஸ்துவே மெய்யான ஜீவன். அவர் மட்டுமே நம்மை வாழ வைக்க முடியும். ஜெபம் உடையவன் ஜீவன் உடையவன் என்று கூற இயலாது. ஆராதனை உடையவன் ஜீவன் உடையவன் என்று கூற இயலாது. பக்தியுடன் வாழ்கிறவன் ஜீவன் உடையவன் என்று கூற இயலாது. இயேசுவை உடையவன் மட்டுமே ஜீவனை உடையவன். இந்த ஜீவன் மட்டுமே, இந்த உலகிலும் மறு உலகிலும் நம்மை வாழ வைக்கும்.

அப்படியானால் நம்முடன் இயேசு இருப்பதை உறுதிப்படுத்தினால் மட்டுமே, நம்மிடம் ஜீவன் இருக்கிறதும் உறுதிப்படும். அநேகரிடம் பலவருட ஜெப அனுபவம் உள்ளது. அநேகரிடம் பல வருட ஆராதனை அனுபவம் உள்ளது. அநேகரிடம் பல வருட பக்தி ஒழுங்கு வாழ்க்கை அனுபவம் உள்ளது. அநேகரிடம் பல வருட ஊழிய அனுபவம் உள்ளது. ஆனாலும், அவர்களிடம் இயேசு இல்லை. ஏனென்றால், அவர்களிடம் ஜீவன் செயல்படவில்லை. அவர்கள் தங்களிடம் பலவிதமான ஆவிக்குரிய நல்ல கிரியைகள் இருப்பதைக் காண்கின்றனர். ஆனால், தங்களிடம் இயேசு என்ற ஜீவன் இருப்பதை அறியவில்லை.

நாம் ஜெபம் செய்கிறோம். ஆனால், நாம் தேவ உறவுடன் வாழ்கின்ற அனுபவம் உள்ளதா? நாம் தேவனுக்கு வழிபாடும் ஆராதனையும் செய்கின்றோம். ஆனால், தேவனுடைய வழிகளில் நடந்து தேவனைக் கனப்படுத்தும் அனுபவம் உள்ளதா? நாம் பல நல்ல பக்தியான செயல்களைச் செய்கின்றோம். ஆனால், உயர்ந்த ஆவிக்குரிய பண்புகள் என்னும் கனிகொடுக்கும் அனுபவம் உள்ளதா? நாம் கர்த்தருடைய ஊழியம் என்ற பெயரில் நிறைய ஊழியச் செயல்களில் ஈடுபடுகின்றோம். ஆனால், கர்த்தரைப் பிரதிபலிக்கும் முன்மாதிரியான சாட்சி வாழ்க்கை அனுபவம் உள்ளதா?

நம்மோடு இயேசு என்ற ஆவிக்குரிய ஜீவன் இருந்தால்தான், இந்த அனுபவங்கள் நம்மிடம் ஏற்படும். எனவே, நம்மிடம் ஜெப அனுபவம் இருந்தாலும், ஆராதனை அனுபவம் இருந்தாலும், ஊழிய அனுபவம் இருந்தாலும், கிறிஸ்துவாகிய ஜீவன் நம்மோடிருக்கின்ற நிச்சயமே மிகவும் தேவை. மறுமை வாழ்விற்குள் செல்ல நம்முடைய பலவருட ஜெப அனுபவமோ, ஆராதனை அனுபவமோ, ஊழிய அனுபவமோ, காணிக்கை அனுபவமோ நமக்குத் தகுதியாயிராது. இயேசுவை உடையவன் ஜீவனை உடையவன். அந்த ஜீவன்தான் மறுமைக்குள் செல்லும் தகுதி.

சிந்தனைக்கு...

ஜெபமே ஜீவன் அல்ல. கிறிஸ்துவை உடையவன்
அவருடைய ஜீவனைத் தனக்குள் கொண்டுவரும் வழியே ஜெபம்.

ஜனவரி 18

வியாதியாளனுக்கு உடற்பயிற்சி

அப்போஸ்தலர் 26:15-32

தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும்.
அப்போஸ்தலர் 26:20

ஒரு சராசரி சரீர நிலையில் இருக்கும் ஒருவர் உடற்பயிற்சி செய்தால், நல்ல சரீர பெலனும் ஆரோக்கியமும் கிடைக்கும். அவர் நல்ல பழங்களையும் நல்ல சத்துணவு ப்பொருட்களையும் சாப்பிட்டால், நல்ல தெம்பும் திடனும் சரீரத்திற்குக் கிடைக்கும். ஆனால், நோயினால் பாதிக்கப்பட்டு சரீர நலன் இல்லாமல் இருக்கிற ஒருவருக்கு இவையெல்லாம் பலன் தராது. முதலாவது, அவர் வியாதி நீங்கி சராசரி உடல்நலன் பெற்றிடத் தேவையான காரியங்களைச் செய்ய வேண்டும். அதுபோலவே, ஜெபம் என்றாலும், வேத வாசிப்பு என்றாலும், உபவாசம் என்றாலும், போதனைகள் என்றாலும் எல்லாம் நல்ல பயனைத் தராது.

சிலர் ஜெப வீரர்கள்தான். சிலர் ஆராதனை வீரர்கள்தான். சிலர் நல்ல வேத வாசிப்பு ஆர்வலர்கள்தான். சிலர் நல்ல போதனை கேட்கும் ஆர்வம் உடையவர் கள்தான். சிலர் நல்ல வேத மாணாக்கர்கள்தான். ஆனால், இவர்களிடம் இவைகளால் பெரிய நல்விளைவுகள் இல்லை. இவர்களிடம் விசேஷமான வாழ்க்கையோ, சிறந்த பண்புகளோ குறிப்பிடத்தக்க விதமாக இல்லை. இவர்களை நல்ல பக்தியாளர் களாகப் பார்க்கலாமேயன்றி பரிசுத்தவான்களாகப் பார்க்க இயலாது.

ஏனென்றால், அவர்களிடம் ஆவிக்குரிய ஆரோக்கியம் இல்லை. அவர்கள் இன்னும் இரட்சகராகிய இயேசுவைப் பெற்றுக்கொண்டு ஆவிக்குரிய மனிதர்களாக மாறவில்லை. பாவ நோயினால் இயற்கையாகப் பாதிக்கப்பட்ட அந்தப் பழைய பாவ மனிதர்களாகவே அவர்கள் இருக்கின்றனர். எனவேதான், ஆவிக்குரிய மனிதனுக்கேற்ற பரிசுத்த ஆரோக்கிய நிலை அவர்களிடம் இல்லை. அவர்களிடம் நிறையப் பக்தி செயல்களைப் பார்க்க முடியுமேயன்றி, தேவனுடைய பிள்ளைகளுக் குரிய பரிசுத்த சுபாவங் களைப் பார்க்க முடியாது.

ஜெபம், வேத வாசிப்பு, வேதாகமப் படிப்பு, போதனை கேட்டல் என எந்த ஒன்றும் கர்த்தரை இரட்சகராகப் பெற்று பாவ வியாதியிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒருவருக்கு தான் உண்மையான பலன் அளிக்கும். அநேகர், ஜெபிக்கின்ற எவரும் ஜெயம் பெறுவார் என நினைக்கின்றனர். அது அப்படியல்ல, தேவனுடைய பிள்ளையாக மறுபிறப்பின் அனுபவம் பெற்றவர் ஜெபித்தால்தான், நல்ல பலன் கிடைக்கும். சிலர், யார் வேத உண்மைகளைக் கற்றறிந்தாலும், அவர்கள் சிறந்தவர் களாகிவிடுவார் என நினைக்கின்றனர்.ஆனால், அப்படி அல்ல. தேவ ஆவியால் நடத்தப்படுகிறவர்களுக்கே அதனால் பலன் ஏற்படும்.

சிந்தனைக்கு...

இரட்சிக்கப்படாதவனை ஜெபமோ, ஆராதனையோ,
உபவாசமோ, சுய வெறுப்போ பலப்படுத்தாது.

ஜனவரி 19

ஆசீர்வாதம் யாருக்கு?

கலாத்தியர் 4:1–15

இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்.
கலாத்தியர் 4:7

நாம் ஜெபம் செய்கிறோம். நாம் தேவனை ஆராதிக்கின்றோம். நாம் தேவனுக்காகக் காணிக்கை கொடுக்கின்றோம். நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்கின்றோம். நாம் நீதியும் நேர்மையுமாக பல காரியங்கள் செய்கின்றோம். நாம் தேவனுக்குப் பயந்து வாழ்கின்றோம். இப்படியெல்லாம் வாழ்கின்ற நம்முடைய நல்ல விஷயங்களைப் பார்த்துக் கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கமாட்டாரா? நற்கிரியைகளை விரும்பும் தேவன், இவ்விதம் நற்கிரியைகளைச் செய்கின்ற நம்மை விசேஷமாக ஆசீர்வதிக்கமாட்டாரா?

இவ்விதமான செயல்பாடுகள் உடையவர்களை நான் ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் புதிய ஏற்பாட்டில் நமக்கு எந்த வாக்குறுதியும் தரவில்லை. ஏனென்றால், புதிய ஏற்பாட்டில் தேவன் நம்மை ஆசீர்வதிக்கும் அடிப்படையே வேறு. நம்முடைய செயல்களெல்லாம் பாராட்டிற்குரியவையாயினும், தேவனிடமிருந்து பலன் பெறுவதற்கான தகுதியுடையவைகள் அல்ல. ஏனென்றால், யாரெல்லாம் நல்ல நல்ல செயல்களைச் செய்வார்களோ அவர்களை நான் ஆசீர்வதிப்பேன் என்று நமக்கு உத்தரவாதம் தரவில்லை.

இது நமக்கு சற்று அதிர்ச்சியான ஒன்றாக இருக்கக்கூடும். ஆனால், தேவன் நம்முடைய வழியில் வந்து அல்ல. அவருடைய வழியில் நம்மை அழைத்துதான் ஆசீர்வதிக்கின்றார். அவருடைய வழி என்ன? தேவன் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் நம்மை, தம்முடைய பிள்ளைகளாக்கி, அந்தப் பிள்ளை என்ற நிலைமையின் அடிப்படையிலேயே ஆசீர்வதிக்க விரும்புகின்றார். ஏனென்றால், தேவ ஆசீர்வாதங்களும் நன்மைகளும் நற்கிரியையாளர்கள் என்ற கூட்டத்தினருக்கு அல்ல. தேவனுடைய பிள்ளைகள் என்ற கூட்டத்தினருக்காகவே, அவர் ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் வழங்குகின்றார். நாம் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே என்பதே ஆசீர்வாதம் தொடர்பாக வேதாகமம் கூறும் செய்தி. (ரோமர் 8:17)

ஆம், நல்ல பல செயல்களைக் காண்பித்து தேவ ஆசீர்வாதங்களுக்கு உரிமை கோர முடியாது. முதலாவது, நாம் தேவனுடைய பிள்ளைகள் ஆவது தொடர்பான தேவ நியமத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். (யோவான் 1:12) நாம் தேவ உறவுடன் வாழ்கின்ற ஒரு அனுபவத்திற்குள் வர வேண்டும். அங்கேதான் தேவ நன்மைகளும் ஆசீர்வாதங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. தேவ உறவுடன் வாழ்ந்து நற் செயல்கள் செய்ய வேண்டும். அதுவே தேவ வழி.

சிந்தனைக்கு...

ஆசீர்வாதங்கள் என்பது நற்கிரியைகளின் விளைவு அல்ல,
நல்ல தேவ உறவுடன் வாழ்வதின் விளைவே அது.

ஜனவரி 20

கர்த்தர் பேசணும்

ஆதியாகமம் 15:1–21

கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்கு..... உண்டாகி..
ஆதியாகமம் 15:1

ஆறுதலான பிரசங்கம் கேட்கும் போது, மனதுக்குச் சற்று ஆறுதல் கிடைக்கின்றது. நம்பிக்கையூட்டும் வார்த்தைகள் அடங்கின ஆன்மிகச் சொற் பொழிவுகளைக் கேட்கும் போது, அது மனதிற்குள் கொஞ்சம் நம்பிக்கையைக் கொண்டு வருகின்றது. முன்னேறத்தூண்டும் வார்த்தைகளைப் போதகர்கள் பேசும் போது, மனதில் சற்று எழுச்சியான உணர்வுகள் ஏற்படுகின்றன. ஆனாலும், ஆறுதலான பிரசங்கங்களும், நம்பிக்கையூட்டும் தேவ செய்திகளும், நமக்குத் தேவையான அளவு ஆறுதலையோ நம்பிக்கையையோ தந்துவிடாது.

ஆறுதல் என்பதும், விசுவாசம் என்பதும், வல்லமை என்பதும், முன்னேற்ற சிந்தை என்பதும் நமக்குள் கர்த்தர் தர வேண்டும். கர்த்தர் நமக்குள் நம்மை ஆறுதல்படுத்த வேண்டும். கர்த்தர் நமக்குள் பேசி நம்மை ஊக்குவிக்க வேண்டும். இந்த விதமான நேரடியான கிரியைகள்தான் நம்மிடம் வலிமையான ஆறுதலையும், நம்பிக்கையையும், எழுச்சியையும் ஏற்படுத்தும்.

ஒரு தேவ மனிதனின் தேவ வார்த்தைகள் நமக்குள் நல்ல விளைவுகளை ஏற்படுத்த முடியும். ஆயினும், தேவன் நமக்குள் செயல்பட்டால்தான் வல்லமையான ஆக்கப்பூர்வமான விளைவுகள் ஏற்படும். ஆபிரகாமிற்குத் தேவன் நேரடியாகக் கொடுத்த நம்பிக்கை, எல்லாச் சோதனையான சூழல்களையும் சந்திக்க அவனுக்குத் தைரியம் கொடுத்தது. மோசேக்கு தேவன் நேரடியாகக் கொடுத்த நம்பிக்கைதான், பல சவால்களை வல்லமையாக எதிர்கொள்ள அவனுக்கு உதவியது. கிதியோனுக்கு நேரடியாக வார்த்தைகள் மூலமாகக் கொடுத்த நம்பிக்கைதான் மீதியானியர் களை எதிர்த்துப் போரிடுவதற்கு தைரியமாக அவனைப் போக வைத்தது.

தேவ ஊழியர்கள் வாயிலாக நாம் எவ்வளவு வல்லமையான வார்த்தை களைக் கேட்டாலும், அவை நீண்டகாலம் நமக்குள் தங்கி வேலை செய்யாது. எவ்வளவுதான் கேட்கும் போது ஆறுதலை உணர்ந்தாலும், தேவ ஊழியர்கள் பேசும் ஆறுதல் வார்த்தைகள், நீண்ட நேரம் நம்மை தேற்றிக் கொண்டிராது. அநேகர் தேவ ஊழியர்கள் வழியாக, அதிகமாக வல்லமையான வார்த்தைகளைக் கேட்கின்றனர். கேட்கும் நேரத்தில் தாங்கள் அதிகமாகத் தேற்றப்பட்டதையும், தைரியப் படுத்தப்பட்டதையும் உணர்கின்றனர். ஆனாலும், தங்களுக்குள் தேவ உறவின் அனுபவத்தை தனிப்பட்ட முறையில் பெறாததால், அவை அவர்களுக்கு தற்காலிக ஆறுதலையே தருகின்றது.

சிந்தனைக்கு...

நம்பிக்கை பிரசங்கங்கள் கேட்க நலமானவை,
கர்த்தர் நமக்குள் இருப்பதால் வரும் நம்பிக்கையே வாழ்விற்கு நலமானது.

ஜனவரி 21

விதிகளை மதித்தல்

சங்கீதம் 139:1–24

உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்?
சங்கீதம் 139:7

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு பிரான்சு, சுவிட்சர்லாந்து எல்லைப் பகுதியில் உள்ள க்ரூலி என்ற இடத்தில், ஒரு பைபிள் கேம்பில் பேச அழைக்கப் பட்டிருந்தேன். அது ஒரு வாகன நடமாட்டம் அதிகம் இல்லாத ஒரு கிராமப்பகுதி. ஒருநாள் பகலில் நடைபயிற்சிக்காக வெளியே சென்ற போது, ஒரு கார் ஒரு போக்குவரத்து சிக்னலில் நின்று கொண்டிருந்தது. சிக்னலில் சிவப்பு விளக்கு எரிந்தது. ஆனாலும், கண்ணுக்கெட்டுகின்ற தூரம் வரையிலும், எங்கும் வேறு ஒரு வாகனம் தெரியவில்லை. ஆனாலும், அந்தக் காரை ஓட்டி வந்தவர், பச்சை விளக்கு எரிய ஆரம்பிக்கும் வரை, புறப்படாமல் காத்திருந்தார்.

ஏனென்றால், அந்த மனிதனுக்குப் போக்குவரத்து விதிமுறையைக் கடைப் பிடித்தல் என்பது இயற்கையாகவே அவருடைய வாழ்க்கைமுறையில் கலந் திருந்தது. அநேகர் மீறுவதற்கு வாய்ப்பே இல்லையென்றால்தான் விதிகளைக் கடைப்பிடிப்பார்கள். யாராவது தங்களைக் கவனிக்கவில்லையென்றால், விதி முறைகளை எளிதாக மீறுவார்கள். ஏனென்றால், அவர்கள் விதிமுறைகள் என்பதை தங்களுக்கு நல்லது என்ற அடிப்படையில் பின்பற்றுவதில்லை.

சட்ட திட்டங்களைக் கடைப்பிடிப்பது என்பது நம்முடைய வாழ்க்கை முறையின் ஒரு இயல்பான செயலாக இருக்க வேண்டும். தவறுகளைத் தவிர்ப்பதும், சரி யானதை விரும்பிச் செய்வதும் பிறர் பார்வைக்காக அல்ல. நம்முடைய மன சாட்சியின் பார்வைக்கு நாம் சரியானதைச் செய்யும் உணர்வு வேண்டும். சிலர், பிறரால் பாராட்டப்படுவதற்கான வாய்ப்பில்லாத சூழ்நிலையில், நல்லதைச் செய்வ தில்லை. சிலர், யாராவது பார்த்துவிடுவார்கள் என்று பயப்படத் தேவை இல்லாத சூழல்களில், தவறுகளைத் தவிர்ப்பதில்லை.

ஏனென்றால், சரியானதைச் செய்வதும், தவறானதைத் தவிர்ப்பதும், அவர்களின் வாழ்க்கை முறையின் இயல்பான பழக்கம் அல்ல. யாரும் பார்க்க முடியாத ஒரு இடத்திலும், யோசேப்பு ஒரு தவறைச் செய்யாமல் தவிர்க்கப் போராடினான். ஏனென்றால், அவன் தேவ உறவுடன் வாழ்ந்து, தான் தேவனால் கவனிக்கப்படுகின்ற ஒரு நபர் என்ற நல்ல உணர்வைப் பெற்றிருந்தான். யாரும் பார்க்காத இடத்தில் ஒரு சரியான செயலைச் செய்ய நாம் உறுதியாயிருந்தால், தேவன் நம்மைப் பாராட்டுவார். யாரும் பார்க்காத ஒரு இடத்தில் ஒரு தவறை நாம் செய்தால், தேவன் நம்மைக் கண்டிப்பார். இந்த உணர்வு நமக்கு வேண்டும்.

சிந்தனைக்கு...

நம்மிடம் இயல்பாக இல்லாத நற்குணங்களைப் பிறருக்காக
முயற்சித்துக் காட்டுவது ஒரு ஆன்மிக நடித்துக் காட்டலே.

ஜனவரி 22

மறுபடி அந்தச் சட்டை

ரோமர் 15:1–21

ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்.
ரோமர் 15:7

ஒருவரிடம் பல தவறுகள் இருந்தது. அதில் ஒரு தவறு பாலியல் பாவம். சுபாவ ரீதியான பல தவறுகளைப் பொறுத்துக்கொண்ட அவருடைய மனைவியால், அந்த மனிதனின் பாலியல் தவறைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, அவள் அவனை விட்டுப் பிரிந்து சென்றாள். அந்த மனைவியை விட்டுப் பிரிய விரும்பாத அந்த மனிதன், ஒரு கால கட்டத்தில் தன் தவறை உணர்ந்து திருந்தினான். அவன் பாலியல் தவறை விட்டது மட்டுமல்ல, சுபாவரீதியான பல தவறுகளை விட்டும் தன்னைத் திருத்திக் கொண்டான். ஆயினும், அந்த மனைவி அவனுடைய பாலியல் தவறை மறக்க இயலாமல் அவனோடு சேர்ந்து வாழ மறுத்துவிட்டாள்.

சில தவறுகளைச் சகிப்பது கடினமே. சிலருடைய சில குற்றங்களை மறப்பதும் மன்னிப்பதும் மிக மிகக் கடினமே. ஆயினும், எந்தத் தவறு ஒரு மனிதனை வேண்டாம் என்று கூற நம்மைத் தூண்டியதோ, அந்தத் தவறை விட்டு அந்த மனிதன் விலகும் போது, நாமும் மன நிலையில் மாற வேண்டும். அதுதான் தேவனுக்குப் பிரியமான காரியமாயிருக்கும்.

ஒரு உடை அழுக்காயிருக்கிறது. நாம் அதை அணிய விரும்பாமல் அதை விலக்குவது இயல்பான காரியமே. அந்தச் சட்டையில் படிந்துள்ள அழுக்குகளோடு நாம் அதை அணிய இயலாது. அதே வேளையில்,அதே சட்டையை இரண்டு நாட்களுக்குப் பின்பு விரும்பி அணிகின்றோம். ஏனென்றால், அந்தச் சட்டை துவைக்கப்பட்டு, அழுக்குநீங்கி, சுத்தமாகிவிட்டது. இரண்டு நாட்களுக்கு முன்பு அது அழுக்கான சட்டையாயிருந்ததை ஞாபகத்தில் வைத்து, இப்போது அதை நாம் விலக்கமாட்டோம். கெட்ட குமாரன் அழுக்கான வாழ்க்கையை விட்டுத் தன்னைப் பிரித்துக் கொண்டு திரும்பி வந்த போது, தகப்பன் கடந்த காலத் தவறைச் சுட்டிக்காட்டி, அவனை வேண்டாம் என்று துரத்திவிடவில்லை.

கணவன் தவறியிருக்கலாம். மனைவி தவறியிருக்கலாம். நாம் நம்பின ஒருவர் நம்பிக்கை துரோகம் செய்து தவறியிருக்கலாம். அந்தத் தவறுகளை இன்னும் உணரா நிலையில், அவர்களை மறுபடி ஏற்றுக் கொள்வது சரியானதல்ல. ஆனால், தவறுகளை உணர்ந்ததோடு அந்தத் தவறுகளை விட்டு விலகி வாழ்கின்ற நிலையில், அவர்களைக் குறித்த நம்முடைய நிலைப்பாட்டை நாமும் மாற்றுவது தான் ஆவிக்கேற்றது. பல பாவங்களில் மூழ்கியிருந்த நாம் மனந்திரும்ப முன் வந்தபோது, தேவன் நம்மைப் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டாரே.

சிந்தனைக்கு...

பாவிகளான நம்மை இயேசு ஏற்றுக் கொண்ட உண்மை,
நாம் இன்னொரு பாவியை ஏற்றுக்கொள்ளும்போது நிரூபணம் ஆகும்.

ஜனவரி 23

மன்னிக்க இயலுமா?

1 பேதுரு 3:8-22

தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும்...
1 பேதுரு 3:9

இன்னொருவரின் வார்த்தையாலோ, செயலாலோ, பாவத்தாலோ, நடத்தையாலோ ஒருவர் கடுமையாக மனதில் காயப்படுகின்றார். ஆனால், உடனேயே அவரிடம் இதை நீங்கள் மறந்து விடுங்கள் அல்லது இதை நீங்கள் மன்னித்து விடுங்கள் அல்லது இதையெல்லாம் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளாதிருங்கள் என்று நாம் ஆவிக்குரிய ஆலோசனை கொடுக்கலாம். ஆனால், உடனேயே அந்த நபரால் அதை மறந்து விட முடியுமா? உடனேயே அவரால் அதனை மன்னித்து விட முடியுமா? உடனேயே அதனை ஒரு சாதாரண விஷயம் என்று எடுத்துக் கொள்ள முடியுமா?

அது மிக மிகக் கடினம். ஒரு வேளை அந்த மனிதர் நாம் சொன்னபடியே அப்படியே அவர் மன்னித்து மறப்பதாக கூறினால், அது ஒரு மாய்மாலமாகவும் இருக்க முடியும். ஏனென்றால், ஒரு சராசரி மனிதனால் உடனடியாகச் செய்ய முடியாத ஒரு விஷயத்தைத் தன்னைப் பக்தியற்றவனாக யாரும் பார்க்கக் கூடாது என்பதற்காக, அவர் செய்வது போல காட்டக் கூடும். உண்மையில் சில விஷயங்களை உடனடியாக மறப்பதும் மன்னிப்பதும் நடந்து விடாது. பளார் என்று ஒருவனை பலர் நடுவில் கன்னத்தில் அடித்துவிட்டு, உடனேயே அவன் அதை மன்னித்து மறக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டால், உடனேயே அப்படிச் செய்ய முடியாது.

ஆம், நாம் ஆவிக்குரிய மனிதர்கள் மட்டுமல்ல. நாம் சராசரி மனித இயற்கையில் வாழ்கிறவர்களும்கூட, நாம் ஆவிக்குரிய மனிதர்கள் என்றாலும் அடித்தால் வலிக்கத்தான் செய்யும். அந்த வலியை உடனே மறந்துவிடு என்றால் அது சாத்தியமல்ல. ஆனால், தேவனுடைய பிள்ளைகள் அதற்குப் பதிலுக்குப் பதில் செய்யக்கூடாது. ஏனென்றால், பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. அதை நாம் சகிக்கவும், தாங்கவும், வேண்டும். அதற்குத் தேவன் நமக்குக் கிருபை தருகிறார்.

ஆனால், அவற்றை மன்னிக்கவும் மறக்கவும் கொஞ்ச கால அவகாசம் வேண்டும். அதற்காக நாம் ஜெபிக்க வேண்டும். மன்னிக்கவும் மறக்கவும் தேவன் ஆற்றல் தருவார் என்று விசுவாசிக்க வேண்டும். அப்போது கர்த்தர் நமக்குள் மன்னிக்கும் ஆற்றலையும், மறக்கும் ஆற்றலையும் தம்முடைய அன்பின் மூலம் ஏற்படுத்துவார். அதற்கு, சில காலம் தேவைப்படும். ஆனால், தேவன் அதைத்தான் விரும்புகிறார் என்ற அறிவோடு அவ்விதமான ஒரு மனநிலையைப் பெற்றிட, விசுவாசத்தோடு செயல்படவேண்டும்.

சிந்தனைக்கு...

கர்த்தரின் அன்பை நாம் அனுபவிக்காமல், சத்துருவை
நாம் நேசித்தால், அதனுடைய ஆயுள் மிகக் குறைவு.

ஜனவரி 24

அந்த ஜீவனால் முடியும்

யோவான் 10:9–19

நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும்....
யோவான் 10:10

உண்மையாகக் கிறிஸ்துவை உடையவர் ஜீவனை உடையவர். அந்த ஜீவன் பலவீனமானதல்ல. அது பரிபூரணமான பலம் வாய்ந்தது. எதற்காக இந்த ஜீவன்? இந்த பூமியில் தேவனுக்குப் பிரியமானதைச் செய்யவும், தேவனுக்குப் பிரிய மற்றதைச் செய்யாதிருக்கவும் இந்த ஜீவன் நமக்குப் பெலன் தருகிறது. நாம் சில விஷயங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். சில விஷயங்களைச் சகித்துக் கொள்ள வேண்டும். சிலரை மன்னிக்க வேண்டும். சிலரை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால், இயேசுவாகிய ஜீவன் தங்களோடிருப்பதாக விசுவாசிக்கும் சிலர், அந்த ஜீவனுக்குரிய ஆற்றலை வெளிப்படுத்துவதில்லை. என்னால் சகிக்க இயலாது, என்னால் பொறுக்க இயலாது, என்னால் நேசிக்க இயலாது, என்னால் என்னை தாழ்த்திக் கொள்ள இயலாது என்று கூறுவது போலவே பலருடைய நிலைமைகள் உள்ளது. அப்படியானால், இவர்கள் என்ன சொல்லுவதாக அர்த்தம்? என்னில் இருக்கிற கிறிஸ்துவாகிய ஜீவனின் ஆற்றல் பொறுக்கவும், தாங்கவும், மன்னிக்கவும், நேசிக்கவும் போதுமானதாக இல்லை என்று கூறுவதாகவே அர்த்தம்.

ஆனால், அப்படியிருக்க முடியாது. கிறிஸ்துவாகிய ஜீவன் பரிபூரணமானது. அந்த ஜீவனின் ஆற்றல் கர்த்தர் விரும்புகின்றபடி, வாழ்வதற்குத் தேவையான ஆற்றலைத் தருவதற்குப் போதுமானது. அப்படியானால், நம்மால் ஏன் கர்த்தர் விரும்புகின்ற விதமாக உயர்ந்த பண்புகளோடு வாழ இயலவில்லை. ஒன்று, அவிசுவாசம். நாம் நமக்குள்ளிருக்கும் கிறிஸ்துவினால் தாங்கவும், பொறுக்கவும், மன்னிக்கவும், மறக்கவும் முடியும் என்று உண்மையாக விசுவாசித்துச் செயல்பட வில்லை. (பிலிப்பியர் 4:13) இரண்டு, நாம் கிறிஸ்துவுக்கேற்றபடி செயல்படத் தூண்டும் ஆவியின் ஓசைக்குச் செவிகொடாமல், சுயத்தின் ஓசைக்குச் செவி கொடுக்கும் சோதனையில் சிக்கிக் கொள்கின்றோம்.

இன்று அநேகர் தங்களிடம் கிறிஸ்துவாகிய ஜீவன் இல்லை என்பதை அறியவில்லை. அவர்கள் தங்களின் பக்தி வலிமையையே கிறிஸ்துவாகிய ஜீவன் என்று தவறாகப் புரிந்து கொள்கின்றனர். தங்களிடமிருப்பது வெறும் கிறிஸ்தவ பக்திதானேயன்றி, கிறிஸ்துவின் ஜீவன் அல்ல என்பதை அவர்கள் அறியவில்லை. எனவே, தேவன் விரும்புகின்றபடி அவர்கள் வாழ விரும்பினாலும், அதனை, தங்களின் சுயபக்தி ஆற்றலைக் கொண்டு செய்வதால், அவர்களால் முடியவில்லை.

சிந்தனைக்கு...

ஒரு விஷயம் நம்மால் முடியாதது என்பது தவறல்ல.
ஆனால், நம்முடனிருக்கும் கர்த்தரால் அது கூடும் என்று விசுவாசியாததே தவறு.

ஜனவரி 25

எது அதிக மகிமை?

மத்தேயு 5:1–18

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு....
மத்தேயு 5:16

தேவனை அதிகமாக மகிமைப்படுத்துகின்றோம் என்றால் என்ன அர்த்தம்? அதிகமாகத் தேவனைக் குறித்துப் புகழவும், அவருடைய மேன்மையைச் சொல்லிப் பாடவும், அதிக ஈடுபாடுகளோடு ஆராதனை செய்யவும் நம்மை ஈடு படுத்துகின்றோம் என்று அர்த்தமா? இல்லை. இவை யாவும் அவசியம். ஆயினும், இவை யாவும் தேவனுக்கு அதிகமான மகிமையைக் கொண்டு செல்லாது. தேவனை உண்மையாக மகிமைப்படுத்துதல் என்பது, அவருடைய மகிமையை வெளிப் படுத்துதல் அல்லது பிரதிபலித்தல் என்று கூறலாம். அதாவது நம்மிடம் தேவ மகிமையும் தெய்வீகமும் அதிகமாகப் பிறர் அறியும்படி வெளிப்படுத்தப்படுகிறது.

பாடல்களும், துதிகளும், போற்றிப் புகழ்தல்களும் எவ்வளவாய் நாம் தேவனை மகிமைப்படுத்த விரும்புகின்றோம் என்பதை அறியச் செய்யும். ஆனால், நம்முடைய நல்ல சுபாவங்களும், நல்ல செயல்களும், நல்ல வழிகளும், நல்ல சிந்தையும், நல்ல வார்த்தைகளும், எவ்வளவாய் கர்த்தர் நம்மிடம் செயல்படுகிறார் என்பதை பிறர் அறியச் செய்யும். அதுதான் தேவ மகிமை வெளிப்படும் செயல். அது தான் தேவனுடைய அற்புதமான செயல்பாடுகளுக்குச் சாட்சி கொடுக்கும் செயல். எனவேதான், மனிதர்கள் நம்முடைய நற்கிரியைகள் என்னும் வெளிச்சத்தைப் பிறர் காண வேண்டும் என்று இயேசு சொன்னார். (மத்தேயு 5:16)

சிலர் நல்ல ஆராதனையாளர்கள். சிலர் நல்ல துதியாளர்கள். சிலர் நல்ல பரவசமாகப் பாடிப் போற்றுகிறவர்கள். சிலர் மிக மிக விசேஷமாகக் கர்த்தரின் மேன்மைகளையும் மகத்துவங்களையும் சொல்லிப் போற்றுகின்றவர்கள். ஆனால், இவை யாவும் ஒருவரின் தனிப்பட்ட பக்தி ஆர்வச் செயல்களாகவே இருக்கும். இவற்றைப் பார்த்து பெரிதாக யாரும் இப்படி ஒரு தேவனா என்று பிரமிக்கமாட்டார்கள்.

ஆனால், நம்மிடம் ஒரு வித்தியாசமானதும், விசேஷமானதுமான வாழ்க்கை முறையை ஜனங்கள் காண நேர்ந்தால், அதுதான் தேவனுடைய பார்வையில் மிகப்பெரிய கனமாகவும் புகழ்ச்சியாகவும் இருக்கும். ஆராதிப்பதும் புகழ்வதும் எல்லோருக்கும் கூடுகின்ற விஷயமே. வாழ்க்கை மூலம் தேவன் எவ்வளவு பெரியவர் என்று காண்பிப்பது எல்லோராலும் செய்ய முடியாத. கர்த்தராகிய இயேசுவுடன் இணைந்திருந்து, அவருடைய ஐக்கியத்தோடும், தேவ ஆவியின் ஆளுகையோடும் இருப்பவர்களுக்கே அது சாத்தியமாகும்.

சிந்தனைக்கு...

கர்த்தரைப் பிறருக்கு நீ காட்ட முடியாது. ஆனால்,
அவர் உனக்குள் என்ன செய்கிறார் என்பதைக் காட்டலாம்

ஜனவரி 26

கர்த்தர் எப்படிப் பேசுகிறார்?

எபிரெயர் 4:1–16

இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பிர்களாகில்
எபிரெயர் 4:7

கர்த்தர் இரண்டு விதங்களில் நம்முடன் பேசுகின்றார் என்று சொல்லலாம். ஒன்று, நமக்குள் கர்த்தர் நம்முடன் பேசுவது. இரண்டு, பொதுவாகத் தேவன் தம்முடைய ஊழியர்கள் வழியாகப் பேசுவது. கர்த்தர் நமக்குள் பேசுவதுதான் நமக்கும் கர்த்தருக்கும் இடையில் ஒரு தொடர்பு இருக்கிறது என்பதை உறுதிப் படுத்தும். கர்த்தர் நமக்குள் பேசுவதுதான் நாம் கர்த்தருடைய உறவுக்குள் வந்திருக் கின்றோம் என்பதை உறுதிப்படுத்துகின்றது. கர்த்தர் நமக்குள்ளிருந்து நம்முடன் பேசிப் பழகி நம்மை வழிநடத்துவதின் விளைவாகத்தான், நாம் கர்த்தருக்கேற்ற விதமாக வாழ்வதற்கு இயன்றவர்களாக மாறுகின்றோம்.

சிலர் பல வருடங்களாகக் கர்த்தர் பேசுவதைப் கேட்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். சிலர் பல்லாண்டுகளாக கர்த்தர் பேசுவதின் வாயிலாக, ஏராளம் நல்ல ஆவிக்குரிய சத்தியத்தையும் அறிவுரைகளையும் பெற்றுக் கொள்கின்றனர். ஆயினும், அவற்றைக் கேட்டு அவர்கள் கர்த்தருக்கேற்ற வாழ்க்கை வாழ்வதைப் பார்க்க முடியாது. அவர்கள் கேட்ட சத்தியங்களின் அளவிற்கு, ஆவிக்குரிய நற்குணக் கனிகளை விளைவாகக் கொடுக்க முடியவில்லை. காரணம் என்ன? அவர்கள் கேட்டதெல்லாம் சத்தியம்தான். ஆனாலும், அவை பொதுவாகத் தேவன் பேசினவை.

நல்ல சத்தியத்தை பக்தியுடன் ஒருவர் கேட்க முடியும். அதை மிக நல்ல சத்தியமாக அங்கீகரித்து மேன்மையாக எண்ண முடியும். ஆனால்,அவற்றின்படி வாழ்கின்ற ஆவிக்குரிய ஜீவன் பெற்ற இருதயம் அவர்களுக்கு இல்லை. அவர்கள் அவற்றில் சிலவற்றை பழைய ஏற்பாட்டுக் கால யூதர்களைப் போலக் கேட்டு, நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுவது போலப் பின்பற்றுவார்கள். ஆனால், கடின மானவற்றை விட்டு விடுவார்கள். ஏனென்றால், புதிய உடன்படிக்கைக்குரிய சத்தி யத்தைக் கேட்டுப் பின்பற்றும் ஆவிக்குரிய இருதயம் அவர்களுக்கு இல்லை.

ஒரு மனிதன் இரட்சிப்பின் அனுபவம் பெற்று, இயேசு கிறிஸ்துவினால் புதிய சிருஷ்டி அனுபவம் பெற வேண்டும். அப்போது கர்த்தர் தன் ஆத்துமாவில் நிறைய சத்திய வார்த்தைகளை வைத்துப் போதிப்பதை அறிய முடியும். அதுதான் கர்த்தர் பேசுதல். இந்த அனுபவம் உடையவர்களோடு தேவன் நேரடியாகவும் பேசுவார். அவர்களோடு தேவ ஊழியர்கள் மூலமாகவும் பேசுவார். அவர்களால் கர்த்தர் பேசுவதைக் கேட்டு அதற்கேற்றபடி பலனளிக்க முடியும்.

சிந்தனைக்கு...

போதகர்கள் உன்னிடம் பேசினால் அறிவு வரும்,
கர்த்தர் உன்னிடம் பேசினால் வாழ்க்கை மாற்றம் வரும்.

ஜனவரி 27

தேவனோடு பேசுவது யார்?

சங்கீதம் 62:1–12

அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றி விடுங்கள்.
சங்கீதம் 62:8

கர்த்தரை நோக்கிச் ஜெபிக்கும் விசுவாசிகள் அநேகர் உண்டு. ஆனால், கர்த்தரோடு பேசுகின்ற மக்கள் எத்தனைபேர் என்பதே முக்கியம். கர்த்தரிடம் ஜெபிப்பது என்பது வேறு. கர்த்தரிடம் பேசுவது என்பது வேறு. ஜெபிப்பது என்பது நம்முடைய தேவைகளுக்காக தேவனிடம் மன்றாடும் ஒரு பக்திச் செயல். தேவனிடம் பேசுவது என்பது கர்த்தரோடு நமக்குள்ள உறவையும் ஐக்கியத்தையும் அனுபவிக்கும் ஒரு செயல். ஜெபிப்பது என்பது பக்திக்காக பழகிக் கொண்ட ஒரு செயல். இதனை யாரும் பழகிக்கொள்ள முடியும். பேசுவது என்பது தேவ உறவுக்குள் வந்தவர்களுக்கு மட்டுமே இயன்ற ஒரு விஷயம்.

தாவீதின் சங்கீதங்கள் யாவும் தேவனை நோக்கிப் பேசின விஷயங்களே. அவற்றிற்குள் ஏராளம் மன்றாட்டுகளும் விண்ணப்பங்களும் உண்டு. ஆனால், எல்லாம் விண்ணப்பங்கள் அல்ல. பெரும்பகுதி தாவீது தேவனோடு பகிர்ந்து கொண்ட சமாச்சாரங்களே. அவை தேவனோடு, தன்னுடைய வாழ்க்கை நிலைமைகளைக் குறித்தும், மனநிலமையைக் குறித்தும் பகிர்ந்து கொண்டு பேசினவையே. ஒருவர் தொடர்ந்து ஜெபிக்க முடியும். ஆனால் எல்லாராலும் தொடர்ந்து தேவனோடு பேச முடியுமா?

தொடர்ந்து நாம் பேசவேண்டுமானால், கர்த்தர் நாம் பேசுவதை கேட்கிறார் என்பதை நாம் நமக்குள் அறிய வேண்டும். கர்த்தர் ஏதாவது ஒரு விதத்தில் நாம் பேசுவதை அவர் கேட்கிறார் என்பதற்கு அடையாளம் வேண்டும். நாம் பேசுவதைக் கேட்டு, திருப்பி நம்மிடம் எதையும் ஒருவர் பேசாவிட்டால், நாம் அவருடன் தொடர்ந்து பேசுவதற்குத் தூண்டுதல் வராது. எந்தத் தூண்டுதலும் இல்லாமல் நாம் ஜெபம் என்னும் செயலைத் தொடர முடியும். ஆனால், கர்த்தர் நம்மோடு இடைபட்டால் மட்டுமே அவருடன் நாம் பேச இயலும்.

கர்த்தர் நாம் பேசுவதை எப்போது கேட்பார்? நாம் தேவனுடைய பிள்ளை களாக, மறுபிறப்பின் அனுபவம் பெற்றிருந்தால்தான், தேவ ஆவியின் உதவியுடன் அவருடன் பேச முடியும். அப்போது அவர் அதைக் கேட்பார். (ரோமர் 8:15) நாம் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து செயல்பட்டால்தான், தொடர்ந்து கர்த்தர் நாம் பேசுவதைக் கேட்பார். அப்போது அவர் நாம் பேசுவதை அவர் கேட்கிறார் என்பதை, அவர் அருளும் சமாதானத்தாலும், சந்தோஷத்தாலும், நம்பிக்கையாலும் அறிய முடியும்.

சிந்தனைக்கு...

யார் வேண்டுமானாலும் ஜெபித்துப் பழகலாம்.
தேவனால் பிறந்தவர்கள் மட்டும் தேவனோடு பேசிப் பழக முடியும்.

ஜனவரி 28

எங்கிருந்தாலும் ...

2 கொரிந்தியர் 5:11–21

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால்...
2 கொரிந்தியர் 5:17

குறிப்பிட்ட ஒருவர் ஜெபக்கூட்டச் சூழ்நிலைகளிலும், தேவ ஆராதனைச் சூழ்நிலைகளிலும், மிகவும் நன்றாக உணர்வார். கர்த்தர் தன்னை ஊக்குவிப்பதையும், கர்த்தர் தன்னை மகிழ்விப்பதையும் அதிகமாக உணருவார். அது போன்ற நேரங்களில், தேவனைக் குறித்த அவருடைய எண்ணமும் சிந்தனையும் உயர்ந்த நிலையில் இருக்கும். சுருக்கமாகக் கூறினால் பக்தியான சூழ்நிலைகளில் கர்த்தர் தன்னோடிருப்பதாக உணருவார். ஆனால், வீட்டிற்கு வந்ததும் எல்லாம் தலைகீழாக மாறிவிடும். அங்கே சாத்தான் தன்னை மிகுதியாகச் சோதிப்பது போலவும், கர்த்தர் தனக்குத் தூரமாயிருப்பது போலவும் உணருவார்.

ஆனால், உண்மை என்ன? கர்த்தர் தன்னோடு இருப்பதாக அவர் எண்ணுவதும் சத்தியத்தின் அடிப்படையில் அல்ல. சாத்தான் தன்னைச் சோதிப்பதாக எண்ணுவதும் சத்தியத்தின் அடிப்படையில் அல்ல. அவர் கர்த்தரை தனக்குள் அறியவில்லை. ஒரு சராசரி மனிதன் கோடை காலத்தில் வெம்மையை உணருவான். குளிர் காலத்தில் குளிரை உணருவான். அவனுடைய நிலமையை சூழ்நிலையே நிர்ணயிக்கிறது. அது போல, நாம் கர்த்தரை நமக்குள் இரட்சகராகப் பெறாமல் பக்தியை மட்டும் பெற்றிருந்தால் சூழ்நிலைதான் நம்முடைய நிலமையைத் தீர்மானிக்கும்.

பக்தி சம்பந்தமான சூழல்களில் நாம் நல்ல மனநிலையோடு இருக்க முடியும். ஆனால், அந்த மனநிலையைப் பிற சூழ்நிலைகளுக்கு நாம் சொல்லும் போது தக்க வைக்க முடியாது. நாம் பக்தியான சூழ்நிலைகளில் போய் எப்போதும் தங்கியிருக்க முடியாது. நாம் நமக்குள் தேவனுக்கேற்ற பக்தியான சூழல்களை உருவாக்க வேண்டும். நாம் நமக்குள் கர்த்தரைப் பெறுகின்ற ஆவிக்குரிய முதல்படி அனுபவத்திற்குள் வரவேண்டும். (யோவான் 1:12) அப்போது பரிசுத்த ஆவியினால் நாம் ஆவிக்குரிய மனநிலையைப் பெற முடியும்.

அந்த மனநிலை நமக்கிருந்தால், எதிர்மறையான சூழ்நிலையிலும் சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும், நம்பிக்கையோடும், தைரியத்தோடும் நாம் வாழ முடியும். நாம் தேவாலயங்களில் போய் தங்கியிருப்பது அல்ல, புதிய ஏற்பாட்டு ஆன்மிகம். நாம் தேவன் தங்குகின்ற ஆலயங்களாக மாறி, எங்கிருந்தாலும் தேவ பிரசன்னத்தால் நம்மை ஊக்குவிக்கவும் உற்சாகப்படுத்தவும் நாம் அறிய வேண்டும். அதுவே புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய அனுபவம். ஆம், நமக்காக அருளப்பட்ட கர்த்தராகிய இயேசுவை இரட்சகராக நமக்குள் அழைப்போம்.

சிந்தனைக்கு...

சபை ஆராதனை வேளைகளில் மட்டும் கர்த்தரை உணருகின்றவர்கள் போலி ஆன்மிகத்தில் விழுந்தவர்களே.

ஜனவரி 29

கடினம்தான், ஆனால் முடியும்

நெகேமியா 4:1–18

ஆனாலும், நாங்கள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணி ....
நெகேமியா 4:9

பரிசுத்த ஆவியின் வல்லமை ஒருவரிடம் இருந்தால், அவர் படுத்துக் கொண்டே எந்த ஒரு சவாலையும் சந்தித்து ஜெயிப்பார் என்று கூற முடியாது. எல்லாம் தேவ ஆவியினால் ஆகும் என்பது, நாம் எல்லாவற்றையும் எந்த விதமான சிரமும் இல்லாமல் எளிதாக முடித்துவிட முடியும் என்று அர்த்தம் அல்ல. இடிந்து கிடந்த எருசலேமின் மதில்சுவர்களைக் கட்டுவதற்காக நெகேமியா சென்றான். அது தேவ பலத்தையும் தேவ கிருபையையும் சார்ந்த ஒரு முயற்சிதான். தேவனுடைய கரம் அவனுக்கு ஆதரவாக இருந்தாலும் கடினமான சவால்களைச் சந்தித்து, பல சிரமங்களோடுதான் எல்லாவற்றையும் முடிக்க முடிந்தது.

அதுபோலவே, நாம் தேவனுக்கேற்ற ஒரு பரிசுத்தமான வாழ்க்கையை வாழ வரும்போது, நிறைய காரியங்கள் எளிதாயிராது. அவை கடினமாகத்தான் இருக்கும். பாவ சோதனைகளை எதிர்த்து ஜெயிப்பது கடினமே. தவறான பழக்கங்களுக்குப் பதிலாக, நல்ல பழக்கங்களுடன் வாழ்வது கடினமே. பொறுமை, தாழ்மை, உண்மை, சகிப்புதன்மை, சாந்தம் போன்ற குணாதிசயங்களோடு வாழ்வது கடினமே. மனதைக் காயப்படுத்தினவர்களையும், அநீதியாய் செயல்பட்டவர்களையும் வெறுக் காமல் ஏற்றுக் கொள்வது கடினமே.

ஆனால், இவை எதுவும் முடியாதவைகள் அல்ல. இதெல்லாம் சாத்திய மற்றவை என்று கூறத்தக்கவைகள் அல்ல. இவற்றை நிறைவேற்ற கடின முயற் சியும், சிரமங்கள் ஏற்பும் சில நேரங்களில் தேவைப்படும். ஆனால், கிறிஸ்துவை தங்களின் இரட்சகராகப் பெற்றுக் கொண்டவர்கள், தேவ ஆவியின் பலத்தைப் பயன் படுத்தி அவற்றைச் சாதிக்க முடியும். அவை கடினமானவையென்றாலும், அவற்றை வெற்றியாகச் செய்து நிறைவேற்ற தேவ ஆவி நமக்கு உதவும்.

நெகேமியா பல விதமான எதிர்ப்புகளையும் சந்தித்துக் கொண்டே, இடிந்து கிடந்த மதில் சுவர்களையும் பிற பகுதிகளையும் கட்டி முடித்தான். அது ஒரு சிரமமான செயல்பாடுதான். ஆனால், முடியாத ஒன்றாக இருக்கவில்லை. அநேகர் தேவ ஆவியால் எல்லாம் கூடும் என்றால், எந்த வருத்தமும் எந்தக் கஷ்டமும் இல்லாமல் எளிதாக எல்லாம் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். தவறான சுபாவங்களை விட்டு விலகுவதும், நல்ல சுபாவங்களோடும் வாழ்வதும் கடினம்தான். பாவத்தை எதிர்ப்பதும் பரிசுத்தத்தில் நிலைப்பதும் கடினம்தான். ஆனால், தேவ ஆவியினால் எல்லாம் வெற்றியாகக் கூடும்.

சிந்தனைக்கு...

தவறானவைகள் எளிதாக நடந்துவிடும்,
அதிகச் சிரமங்களோடுதான் நல்லவை நடக்கும்.

ஜனவரி 30

வளருவது எப்படி?

கொலோசெயர் 1:10–22

தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து...
கொலோசெயர் 1:10

ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சி என்றதும், அநேகர் அதனை ஒரு கடினமான சலிப்பிற்குரிய வேலையாகப் பார்க்கின்றனர். வளர்ச்சி, என்றவுடன் நற்சுபாவ வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, வேதாகம விஷயங்களை அறிகிற வளர்ச்சி, கட்டுப்பாடுகளில் வளருதல், ஆசைகளை வெறுப்பதில் வளருதல் போன்றவற்றையே நினைக்கின்றனர். இந்த விஷயங்களிலெல்லாம் வளர்ச்சி தேவை என்பதும், அந்த வளர்ச்சியைத் தேட வேண்டும் என்பதும் உண்மைதான். ஆயினும், இவற்றில் வளருவதையே நோக்கமாகக் கொண்டால் சலிப்பு வர வாய்ப்பு உண்டு.

முதலாவது தேவ உறவில் வளர வேண்டும். தேவனை அறிகிற அறிவில் வளர வேண்டும். தேவனோடு பேசிப்பழகி வாழும் அனுபவங்களில் வளர வேண்டும். தேவனுடைய அன்பை அனுபவிக்கும் செயல்களில் வளர வேண்டும். தேவன் அருளும் சமாதானம், சந்தோஷம், நம்பிக்கை ஆகியவற்றை அனுபவிப்பதில் வளர வேண்டும். தேவனைச் சார்ந்து விசுவாசித்து வாழும் அனுபவங்களில் வளர வேண்டும். இவ்வித வளர்ச்சிகள் வாரம் ஒரு நாள் சபைக்குப் போனால் வந்து விடாது. தினமும் கொஞ்சம் நேரம் ஜெபித்தால் வந்துவிடாது.

தேவ உறவில் வளருவதற்கு முதலாவது ஆர்வமும், இரண்டாவது, நேரங்களைச் செலவிடும் தாராளமும் வேண்டும். அவசர அவசரமாகப் பக்திக் கடமையாகச் ஜெபம், வேதவாசிப்பு, ஞாயிறு ஆராதனை என்று சில செயல்களில் ஈடுபட்டால் போதாது. தேவனோடு நட்பு வளர்க்க நேரம் வேண்டும். தேவனோடு மனப்பகிர்வு செய்ய நேரம் வேண்டும். தேவனோடு வாழ்க்கை நிகழ்வுகள் யாவற்றையும் சொல்லி அறிவிக்க நேரம் வேண்டும். தேவனை அறிகிற அறிவிலும், அவருடைய சித்தத்தை அறிகிற அறிவிலும் வளரவும் நேரம் வேண்டும்.

காணிக்கையைவிட, ஊழியசெயல்களைவிட, தேவ சமுகத்தில் மனதை தங்க வைத்து ஆவிக்குரிய நிலமையில் இருதயத்தை வளமாக்கிட அதிக நேரத்தைக் கொடுக்க வேண்டும். தேவ சமுக அனுபவங்களில் வளர்ச்சி நிலை காணாமல், நம்மை நாமே சுபாவங்களிலும் செயல்களிலும் வளர வைப்பது வலிமையாயிராது. கர்த்தரோடு பேசிப் பழகிப் பகிர்ந்து, செவி கொடுத்து வாழ்ந்தால், தேவ அன்பையும் சமாதானத்தையும் அதிகமாக அனுபவிப்போம். கர்த்தரை அறிகிற அறிவிலும் அவருடைய அன்பை ருசிப்பதிலும் வளரும்போது, சுபாவங்கள் ஒழுக்கங்கள் பழக்கங்கள் தானாக உருவாகும்.

சிந்தனைக்கு...

குறைவான நேரம் மட்டுமே தேவ சமுகத்திற்கு என்றால்,
நிறைவான ஆசீர்வாதம் என்பது பகல் கனவே

ஜனவரி 31

கோபம் கரையணும்

யோனா 4:1–11

அவன் கடுங்கோபங்கொண்டு.
யோனா 4:1

சிலர் கோபமடைவது பாவம் என்று அறிந்திருப்பதால், தங்களுக்குள் ஏற்படும் கோபத்தை வெளிப்பட விடாமல், தங்களுக்குள் அடக்கிக் கொள்கின்றனர். சிலர் கோபத்தோடிருப்பதைப் பாவம் என்று அறிந்திருப்பதால், மனதை விட்டு கோபத்தை விரட்டுவதற்கு மனதிற்குள் முயற்சி செய்கின்றனர். சிலர் தங்களுக்குள் எழும்பும் கோப உணர்வுகளால் ஏற்படும் எரிச்சலை உணராதிருப்பதற்காகப் பிரசங்கம் கேட்டல், பாடல்கள் கேட்டல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்.

ஆனால், இவை எதுவும் நல்ல விளைவைத் தராது. கோபத்தை அடக்குவதும் தவறானது. கோபத்தை மறைப்பதும் தவறானது. கோபத்தை மறக்கும்படியான செயல்களில் ஈடுபடுவதும் தவறானது. கோபத்தை மனதிலிருந்து விரட்டுவதற்கு வழி தேட வேண்டும். கோபத்தைக் கரைத்து கரைத்துதான் வெளியே அனுப்ப முடியும். கோபத்தைக் கரைப்பது எப்படி? ஆண்டவரே கோபத்தை அகற்றும் என்று ஜெபித்தாலும் உடனே போய்விடாது.

முதலாவது, உங்களின் கோபத்திற்கான பின்னணிகளைக் கர்த்தருடைய சமுகத்தில் யோசித்து கர்த்தரிடம் சொல்ல வேண்டும். யாரால் எப்படி நீங்கள் கோபமடைய நேரிட்டதோ, அதனை அப்படியே கர்த்தரிடம் சொல்ல வேண்டும். யாருடைய எந்த செயலால் அல்லது எந்த வார்த்தையால் உங்களுக்கு ஆத்திரமும் அவசரமும் ஏற்படுகிறதோ, அதனைக் கர்த்தரிடம் சொல்ல வேண்டும். ஏன் இப்படி யெல்லாம் விலாவாரியாக விளக்கினால்தான் கர்த்தர் கோபத்திலிருந்து விடுதலை தருவாரா என்று நாம் கேட்க நேரிடுவது நியாயமானது. கர்த்தரிடம் எல்லா வற்றையும் நாம் உணருகின்றபடியே பகிர்ந்து கொள்ளும் போது, நம்முடைய மனம் பாரத்திலிருந்து விடுதலை அடையும். கோபப்படுத்தும் விஷயங்களினால் வரும் அழுத்தம் குறைய ஆரம்பிக்கும்.

இதுபோன்ற விஷயங்களால் மனதில் ஒரு விதமான அமைதியும், கோபத் தோடிருப்பது நல்லதல்ல என்கிற உணர்வும் நமக்கு ஏற்படும். பல விஷயங்களை மனதிலே அடக்கி வைக்கும் போது, அவை அங்கேயே ஒரு நோயாக மாறுகிறது. அவைகளைச் சொல்லச் சொல்ல கோபங்களின் கடுமைத்தன்மை கரைய ஆரம் பிக்கும். சிலவேளை நம்முடைய கோபமும் எரிச்சலும் அர்த்தமற்றது என்றோ அல்லது அது நமக்கு நல்லதல்ல என்றோ நமக்கே விளங்க ஆரம்பிக்கும். எல்லா வற்றிற்கும் மேலாக, தேவ சமுகத்தின் ஆளுகை கோபத் தீயை அணைத்துவிடும்.

சிந்தனைக்கு...

அவசரப்பட்ட கோபம் வாழ்க்கையை அழிக்கும்.
அடக்கப்பட்ட கோபம் அமைதியை அழிக்கும்.

பிப்ரவரி 1

மனதில் பாவம்

ஆதியாகமம் 6:1–22

அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம்...
ஆதியாகமம் 6:5

சிலருடைய பாவங்களை நாம் செயல்களின் வடிவத்தில் பார்க்க இயலாது. அவர்களை இந்த தவறைச் செய்தீர்கள். அந்த தவறைச் செய்தீர்கள் என்ற விதமாக யாரும் குற்றம் கூற இயலாது. ஆனால், இவர்களின் மனநிலை தேவனுடைய விருப்பத்திற்கு எதிரானதாக இருக்கும். சிலர் மேல் அவர்கள் கோப மனநிலையோடு இருப்பார்கள். சிலர் மேல் அவர்கள் விரோத மனப்பான்மையோடு இருப்பார்கள். சிலரைக் குறித்து அவர்கள் அற்பமான ஒரு சித்திரத்தை மனதில் வைத்திருப்பார்கள். அந்த மனநிலைக்கேற்றபடி அவர்கள் அவர்களிடம் நடந்து கொள்வார்கள்.

எனவே, அன்பு காட்டாமல் பின்வாங்கி, கோபத்தையும் வெறுப்பையும் பிரதிபலிப்பார்கள். தேவையான சில நன்மையைச் செய்யாமல், இரக்கமற்ற மனநிலையை வெளிப்படுத்துவார்கள். பாராட்ட வேண்டிய சூழ்நிலையில் அதனைக் கண்டுகொள்ளாமல் போவார்கள். அவர்களோடு பேசப் பழக ஒரு சூழ்நிலை வரும் போது, ஓசையின்றி அதைத் தவிர்த்து தங்களைத் தூரமாக்கிக் கொள்வார்கள். நியாயமற்ற குற்றச்சாட்டுகள் அவர்கள்மேல் வைக்கப்பட்டால், அது சரிதான் என்பது போல மௌனம் சாதிப்பார்கள்.

இவை மற்றவர்களுக்கு எதிராகத் தெரியும்படி செய்யும் பாவங்கள் அல்ல. இவை மனதின் பாவங்கள். இவை மனதில் மறைந்து நின்று செயல்படுகின்றவை. இவர்கள் யாருக்கு நான் என்ன தீங்கு செய்தேன் என்று கேட்டால், நாம் எதையும் சொல்ல முடியாது. ஆனால், மற்றவர்களுக்கு நல்லதைச் செய்யாமல் தங்களைப் பின்னால் இழுத்துக் கொண்ட பாவங்கள். இவை அக்கிரமச் செயல்கள் அல்ல. ஆனால், அக்கிரம சிந்தை. ஒரு காலகட்டத்தில் குறிப்பிட்ட ஒருவரை நான் பார்க்கும் இடம் எல்லாம் நலம் விசாரிப்பேன். ஆனால், அவரோ லேசாகப் புன்னகைப் பாரேயன்றி, ஒரு வார்த்தைகூட பதிலுக்கு நலம் விசாரிக்க மாட்டார்.

ஏனென்றால், அவருடைய உபதேசத்தில் எனக்கு ஒத்த கருத்து இல்லாத தால், என்னை அவருக்குப் பிடிக்காது. இது செயலளவில் தெரியாத பாவம். ஆனால், மனதில் உணரப்படும் பாவம். ஆனால், தவறான செயல்கள்தான் மனிதனுக்குத் தெரியும். ஆனால், தவறான சிந்தை தேவனுக்குத் தெரியும். மனிதர்களால் குற்றம் கூற இயலாதவர்களும், தேவனுக்கு முன்பாக குற்றம் சுமந்தவர்களாக இருக்க முடியும். ஏனென்றால், தேவன் அவர்களின் சிந்தையில் உள்ள பாவ நிலைமையைப் பார்க்க இயன்றவர்.

சிந்தனைக்கு...

தூரத்திலிருக்கிற விரோதிகளைவிட, அடுத்திருக்கிற உறவுகளால்தான் அநேகர் அதிகமாகக் கஷ்டப்படுகின்றனர்.

பிப்ரவரி 2

ஆசீர்வாதங்கள் இந்த வழியில்

யோவான் 3:1–16

அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.
யோவான் 3:16

ஜெபம், ஆராதனை, காணிக்கை, ஊழியம், பக்தி ஒழுங்குகள் போன்ற வற்றின் வாயிலாகத்தான் பலர் தேவனுடைய ஆசீர்வாதங்களைத் தேடுகின்றனர். இவை எதுவும் தவறல்ல. ஆனால், இவை ஆசீர்வாதம் பெறுவதற்காகச் செய்ய வேண்டிய செயல்கள் அல்ல. அநேகர் இது போன்ற பக்தியான செயல்களைச் செய்வதின் விளைவே, தேவனுடைய நன்மைகள் என எண்ணுகின்றனர். இவ் விதமான ஒரு புரிந்து கொள்ளுதல், தேவன் நாம் ஆசீர்வாதம் அடைவதற்கு ஏதுவாகச் செய்துள்ள ஏற்பாட்டை, மறைமுகமாக மறுதலிக்கின்றன.

தேவ நோக்கம் நிறைவேறுவதற்கும், நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் ஏது வாகத் தேவன் செய்துள்ள ஏற்பாட்டைப் பற்றிக் கூறுவதே புதிய எற்பாடு. புதிய ஏற்பாடு நமக்குச் சொல்லும் பிரதான செய்தி என்ன? நாம் ஜெபம், ஆராதனை, காணிக்கை, ஊழியம், பக்திச் செயல்கள் போன்றவற்றைச் செய்தால், ஆசீர்வாதங் களைப் பலனாகப் பெறுவோம் என்பதை அல்ல. தேவன் அருளிய தேவ குமாரனை நாம் பெற வேண்டும். அவருக்குள் இரட்சிப்பு இருக்கின்றது. அந்த இரட்சிப்பினை நாம் பெற வேண்டும்.

அந்த இரட்சிப்பு நமக்குத் தேவனுடைய பிள்ளை என்ற ஆவிக்குரிய உயர்ந்த அந்தஸ்தினைப் பெற்றுத்தரும். அவ்விதம் தேவனுடைய பிள்ளை என்ற ஆவிக் குரிய நிலைமையைச் சார்ந்து செயல்படுகின்ற அனுபவம்தான், ஆசீர்வாதங்களை அனுபவிக்க வைக்கும். தேவன் நாம் ஜெபிக்கிறதைப் பார்த்து அல்ல. தேவன் நாம் ஆராதிக்கிறதைப் பார்த்து அல்ல. தேவன் நாம் காணிக்கை கொடுக்கிறதைப் பார்த்து அல்ல. தேவன் நாம் ஊழியம் செய்கிறதைப் பார்த்து அல்ல. தேவன் நாம் பக்தி ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுவதை பார்த்து அல்ல.

தேவன் நாம் அவருடைய பிள்ளையாக இருக்கிறதைப் பார்த்துதான் நம்மை ஆசீர்வதிப்பார். ஏனென்றால், பிள்ளைகள்தான் தேவனுடைய ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்க நியமிக்கப்பட்ட சுதந்திரவாளிகள். பிள்ளைகள் என்றால் தேவ உறவில் வாழ்வதே அவர்களின் முக்கிய விருப்பமாயிருக்கும். பிள்ளைகள் என்றால் தேவனுக்கேற்ற பரிசுத்த சுபாவங்களோடு வாழ்வதே குறிக்கோளாக இருக்கும். அந்த பிள்ளைகளின் இவ்வித நோக்கத்தின் பின்னணியில் ஜெபம், ஆராதனை, காணிக்கை ஊழியம், பக்திச் செயல் எல்லாம் இன்னும் இன்னும் நம்மை ஆசீர் வாதங்களை அனுபவிக்க வைக்கும்.

சிந்தனைக்கு...

நல்ல செயல்கள் பக்தியைக் காண்பிக்கும்.
நல்ல சுபாவங்கள்தான் தேவ உறவைக் காண்பிக்கும்.

பிப்ரவரி 3

கனப்படுத்துவது எப்படி?

ஏசாயா 29:13

தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்.

ஏசாயா 29:13

என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் துவக்க காலத்தில், கணிசமான நேரங்கள் தேவனைத் துதிப்பதற்கும், போற்றுவதற்கும், புகழுவதற்கும், பாடுவதற்கும் செலவிட்டேன். இவ்விதம் செய்வது நலமானதுதான் என்று இன்னும் நம்பு கின்றேன். ஆனால், அவற்றின் நோக்கம் என்ன என்பது முக்கியம். தேவனைக் கனப்படுத்துவது அல்லது அவரை நாம் மிக மிக உயர்வாக நினைக்கிறதைக் காண் பிப்பது என்று சொல்லலாம். தேவன்மேல் நாம் வைத்திருக்கின்ற உயர்ந்த மரியாதையையும் பக்தியையும், துதிப்பதின் மூலமாகவும், ஸ்தோத்தரிப்பதின் மூலமாகவும் வெளிப் படுத்துவது நமக்குச் சந்தோஷமான விஷயமே.

ஆனால், நாம் தேவனை மிக மிக உயர்வாக எண்ணித் துதித்தாலும், தேவன் அதனை நாம் அவரை மிக உயர்வான இடத்தில் வைத்திருப்பதாக எடுத்துக் கொள்வாரா என்பது முக்கியமானதோர் கேள்வி. ஏனென்றால், இன்னொருவரைக் கனப்படுத்திப் பேசுவதும், புகழ்வதும், மெச்சுவதும் கடினமான காரியங்கள் அல்ல. ஆனால், அந்த நபரை நாம் கனப்படுத்துவதின் மிக முக்கிய அடையாளம் என்ன? அவருடைய கருத்துக்களையும், கொள்கைகளையும், ஆலோசனைகளையும் ஏற்றுக் கொண்டு, செயல்படுத்துவதுதான் உண்மையான கனம்.

முன்பெல்லாம் என்னுடைய புத்தகங்களைப் படித்து பாராட்டினவர்களைப் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால், இப்பொழுது அப்படி அல்ல. அவர்கள் அந்தப் புத்தகத்தில் படித்த விஷயங்களால், உண்மையான நல்ல விளைவுகளை ஏற்படுத்தினால்தான் சந்தோஷப்பட முடிகிறது. ஏனென்றால், நல்ல கருத்துக்களை எல்லோரும் பாராட்ட முடியும். ஆனால், அவற்றின்படி வாழ்வதுதான் உண்மை யில் அந்தக் கருத்துக்களைக் கனப்படுத்தும் அடையாளம். அதுபோலவே நாம் ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் என்று சொல்லிக்கொண்டேயிருப்பதால், தேவன் கனப் பட்டதாக உணர முடியாது. அந்த மாபெரும் தேவன் சொன்னபடி நாம் வாழ்வதற்கு, எந்த அளவிற்கு ஆர்வமாயிருந்து செயல்படுகிறோம் என்பதே முக்கியம்.

நாம் இரட்சகரே இரட்சகரே என்று துதித்துவிட்டு இரட்சிப்பின் அனுபவம் இல்லாமலிருந்தால், அது தேவனுக்குக் கொடுக்கும் கனம் அல்ல. கனவீனம். நாம் பரிசுத்தரே பரிசுத்தரே என்று பாடிவிட்டு, பரிசுத்தமடையாமல் வாழ்ந்தால், அது தேவனை மகிழ்விக்காது. ஆனால் துக்கப்படுத்தும். ஆனால், தேவனை விசனப்படுத்தும்.

சிந்தனைக்கு...

வாயினால் கர்த்தரைப் புகழ்ந்து கனப்படுத்து,
வாழும் விதத்தால் அந்தக் கனத்தை உறுதிப்படுத்து.

பிப்ரவரி 4

நமக்குள் தேவனின் கிரியை

எபேசியர் 3:9–21

நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே...
எபேசியர் 3:20

சிலர் பக்தி என்றவுடன் வரிந்து கட்டிக் கொண்டு, எந்தெந்த விதத்திலெல்லாம் கர்த்தருக்காகச் சில நல்ல செயல்களைச் செய்யலாம் என்று செயல்படுகின்றனர். கர்த்தருக்காக கர்த்தருக்காக என்று சொல்லி பல சிரமமான காரியங்களைச் செய்கின்றனர். நிறைய உழைப்பைக் கர்த்தருக்காகச் செலவிடுகின்றனர். நிறையப் பணத்தைக் கர்த்தருக்காகச் செலவிடுகின்றனர். ஆனால், முதலாவது கர்த்தர் நமக்குள் நிறையக் காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை உணருவதில்லை. கர்த்தருக்காகச் செயல்படுதல் என்பது, நமக்குள் அவர் செய்கின்ற பல ஆவிக்குரிய செயல்களின் பிரதிவிளைவுகளாகவே இருக்க வேண்டும்.

முதலாவது, கர்த்தர் தேவ ஆவியின் மூலமாக நமக்குள் செயல்பட்டு, நம்மைச் சமாதான மனிதர்களாகவும், சந்தோஷ மனிதர்களாகவும், பரிசுத்த மனிதர்களாகவும் செயல்பட வைக்க வேண்டும். நமக்குள் நல்ல சுபாவங்களைக் கர்த்தர் உருவாக்க வேண்டும். நமக்குள் அன்பையும், தாழ்மையையும், உண்மையையும், மாய்மாலமற்ற மனநிலையையும் உருவாக்க வேண்டும். மொத்தத்தில் கர்த்தர் நம்மை முதலாவது, ஆவிக்கேற்றபடியான கனிகளைக் கொடுக்க வைக்க வேண்டும்.

அப்போதுதான் தேவன் எதிர்பார்க்கின்ற விதமாக, அவருக்காக நாம் செயல்பட முடியும். தேவனுடைய விருப்பங்களை அறிவதற்கேற்ற இருதயம் நமக்குள் உருவாகாவிட்டால், நாம் நம்முடைய மனதின்படி செய்கின்றவைகள் பிரமாதமாயிருந்தாலும், அவை தேவனுக்குப் பிரியமாயிராது. ஏனென்றால், எவ்வளவு கொடுக்கின்றோம் அல்லது எவ்வளவு கடினமாய் உழைக்கின்றோம் என்பது முக்கியமல்ல. முதலாவது கர்த்தரைப் பிரதிபலிக்கும்படியான சாட்சிகளாக பிறர் நடுவில் வாழ்கின்றோமா என்பதே முக்கியம். நாம் கர்த்தருக்காகச் செய்கின்ற அனைத்துக் காரியங்களிலும், அவருக்கு நாம் சாட்சிகளாக வாழ்வதே மிகவும் முக்கியமானது.

நீங்கள் மிகுந்த கனிகள் கொடுப்பதால் பிதாவாகிய தேவன் மகிமைப்படுவார் என்று இயேசு சொன்னார். (யோவான் 15:8) முதலாவது, கர்த்தர் நமக்குள் கிரியை செய்வதற்கேதுவாக கர்த்தரை நமக்குள் ஏற்றுக் கொண்டு, இரட்சிப்பின் அனுபவம் பெற வேண்டும். இரண்டாவதாக, தேவ ஆவியின் செயல்கள் நமக்குள் நடப்பதற்கு ஏதுவாக, அனுதினமும் கர்த்தருடைய ஐக்கியத்துடன் வாழ வேண்டும். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டல், விசுவாசித்தல், தியானித்தல் என்பவற்றோடு, அவரோடு பேசிப்பழகி வாழ்கின்ற அனுபவங்களுக்குள் செல்லவேண்டும்.

சிந்தனைக்கு...

தேவனுக்காக நீ எவ்வளவு செய்கிறாய் என்பதையல்ல,
தேவன் உனக்குள் என்ன செய்கிறார் என்பதை பிறர் பார்க்கணும்.

பிப்ரவரி 5

செல்வ ஆசீர்வாதச் சாட்சி

லூக்கா 19:1–10

இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது.
லூக்கா 19:9

ஒருவர் சாதாரண நிலையிலிருந்து மிகப்பெரிய வியாபாரப் பிரமுகர் என்ற நிலமைக்கு வந்தார். இவர் தனக்குக் கிடைத்துள்ள மிக நல்ல பொருளாதார ரீதியான உயர்வுக்குக் கர்த்தர்தான் காரணம் என நம்புகின்றார். அந்த நம்பிக்கை சார்ந்து தேவ ஊழியங்களுக்கும், சபைகளுக்கும், மிஷனரி ஸ்தாபனங்களுக்கும் நிறைய ஆதரவு கொடுக்கின்றார். சபைகளும், ஊழிய அமைப்புகளும் அவரை விசேஷ விருந்தினராகத் தங்கள் நிகழ்ச்சிகளுக்கு அழைப்பார்கள். அங்கே அவர் தன்னைத் தேவன் பொருளாதார ரீதியில் மிகமிக ஆசீர்வாதமாக வைத்திருப்பதைச் சாட்சியாகக் கூறுவார்.

ஆனால், அவரை ஒருவர், இவருடைய சாட்சி பொய்யானது என்று கூறுகிறார். இவர் அறியாமையினால் பக்தி உற்சாகத்தில் அப்படிச் சாட்சி கூறுகிறதாக கூறுகின்றார். ஏனென்றால், அவர் காணிக்கை கொடுப்பதிலும், சாட்சி சொல்வதிலும் காண்பிக்கும் பக்தி ஆர்வத்தை கர்த்தருக்கேற்ற ஒரு சாட்சி வாழ்க்கை வாழ்ந்திடக் காண்பிப்பதில்லை. காணிக்கை கொடுக்கின்ற பக்திக்கு அப்பால், அவரிடம் விசேஷமான எந்தப் பரிசுத்த விஷயங்களும் இல்லை. சாட்சி சொல்லுகிற ஒரு அனுபவத்திற்கு அப்பால், அவருக்கும் தேவனுக்கும் இடையே, ஒரு ஆழமான தேவ ஐக்கியத் தொடர்பின் அனுபவம் இல்லை.

அவர் சொல்லுவது சரிதான். ஒரு மனிதன் தேவனால் ஆசீர்வதிக்கப்படும் போது, அவன் காணும் முதல் ஆசீர்வாதம், இரட்சிப்பின் அனுபவமே. அந்த இரட்சிப்பு அவனுக்கும் தேவனுக்கும் இடையில் ஒரு பெரிய நட்பையும், ஐக்கியத் தையும் ஏற்படுத்தும். அதன் விளைவாக அவன் பரிசுத்தமுடைய ஒரு வாழ்க்கை அனு பவம் உடையவனாக மாறுவான். இந்த ஆசீர்வாதம்தான் அவன் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டதின் முக்கிய அடையாளம். இவ்விதமான ஆசீர்வாதத்தை முதலாவது ஒரு மனிதனுக்குக் கொடாமல், செல்வ ஆசீர்வாதத்தைக் கர்த்தர் கொடுக்கின்றார் என்பது உண்மையாயிராது.

ஒரு மனிதனைப் பாவி என்ற நிலையிலிருந்து மாற்றி தேவனுடைய பிள்ளை என்ற உயர் நிலைக்குக் கொண்டுவருவதே, தேவனுடைய முக்கியமான ஆசீர்வாதத் திட்டம். அவ்விதம் அவன் ஆசீர்வதிக்கப்படும் போது, அவன் செல்வ வளங்களை அல்ல, நல்ல ஒரு முன்மாதிரி வாழ்க்கையைத்தான் ஆசீர்வாதச் சான்றாகக் காட்டுவான்.

சிந்தனைக்கு...

செல்வங்களோடு வாழ்ந்திடப் பல வழிகள் உண்டு.
நல்ல சாட்சியோடு வாழ்ந்திட இயேசு ஒருவரே வழி.

பிப்ரவரி 6

மிருகக் குணம்

கலாத்தியர் 5:13–26

நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால்....
கலாத்தியர் 5:15

சில கணவர்களிடத்தில் ஏதாவது ஒரு மிருகக் குணம் இருக்கும். ஆனாலும், சில மனைவிகள் அந்த மிருகச் சுபாவத்தை ஏற்றுக் கொண்டு வாழப்பழகிக் கொள்கின்றனர். சில மனைவிகளிடத்தில் ஏதாவது ஒரு மிருகக் குணம் இருக்கும். ஆனால், சில கணவர்கள் அந்த மிருகக் குணத்தைத் தாங்கிக் கொண்டு வாழப் பழகிக் கொள்கின்றனர். ஏனென்றால், மனிதன் நாய், பூனை, ஆடு, மாடு, குதிரை, யானை போன்ற மிருகங்களோடெல்லாம் வாழ்வதற்குப் பழகிக் கொள்கிறானே. எனவே, கணவனோ மனைவியோ யாராவது ஒருவர் மிருகக் குணத்தோடிருந் தாலும், அந்தக் குடும்பம் அதிக சலசலப்பில்லாமல் எப்படியோ கடந்து செல்லுகிறது.

ஆனால், சில குடும்பங்களில் எப்பொழுதும் சலசலப்புதான். எப்பொழுதும் போராட்டம்தான். எப்பொழுதும் அங்கே ஏதாவது ஒரு விதத்தில் வாக்குவாதமும், சண்டையும், கூக்குரலும் வந்து கொண்டேயிருக்கும். காரணம் என்ன? அங்கே கணவனும் மனைவியும் வேறு வேறு விதமான மிருகக் குணமுடையவர்கள். எனவே, ஒரு மிருகம் இன்னொரு மிருகத்தோடு சண்டை போடுவது போல, அங்கே காரியங்கள் நிகழ்கின்றன.

ஆனால், சில கணவன் மனைவிகளில் யாரோ ஒருவர் மிருகக் குண முடையவர் அல்ல. அவர்கள் பிசாசின் குணமுடையவர்கள். ஏனென்றால், மிருகக் குணமுடையவர்களிடம் பெரும்பாலும் ஓரிரு மிருகக் குணங்கள்தான் இருக்கும். ஆனால் பிசாசிடமோ ஆயிரக்கணக்கான சுபாவங்கள் இருக்கும். மிருகத்திற்குக் குணம் பலவிதமாக இராது. எனவே, பழகிக் கொள்ள முடியும். சாத்தானுக்கோ நேரத்திற்கு நேரம் விதவிதமான சுபாவம் இருக்கும். எனவே, பழகிக் கொள்ள முடியாது. ஒரு தவறான சுபாவத்தைச் சகித்துப் பொறுத்துப் பழகினால், திடீரென்று வேறொரு தவறான சுபாவம் வந்து நிற்கும்.

என்ன ஆச்சு இன்று? ஒரே மிருகக் கதையும், பிசாசு கதையும் ஓடிக்கொண் டிருக்கிறது என்று நீங்கள் யோசிக்கலாம். நம்முடைய சுபாவ நிலைமைகளை நாம் அறிந்து வைக்க வேண்டும். சில நேரங்களில் நம்மிடமுள்ள ஒரு சுபாவம் சரியற்ற சுபாவமாயிருக்கும். ஆனால், அதனுடன் மற்றவர் பழகிப் போயிருக்கலாம். ஆனால், அதற்காக நம் சுபாவம் பிரச்சினையில்லை என்று எண்ணி விடக்கூடாது. மற்றவர் பொறுத்துப் போவதால் நம்மை நற்குணசாலி என எண்ணிவிடக்கூடாது. தேவ சமுகத்தில் நம்முடைய சுபாவங்களை ஆராய்ந்து சீர்செய்ய முன்வருவோம்.

சிந்தனைக்கு...

மற்றவர் மிருகமாயிருப்பது மட்டும் பிரச்சினையல்ல,
நாம் மனிதராக வாழ மறுப்பதும் பிரச்சினையே.

பிப்ரவரி 7

வீட்டிற்குள் அனுமதியில்லை

வெளிப்படுத்தின விசேஷம் 3:13–22

என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால்.
வெளிப்படுத்தின 3:20

ஒருவர், தன்னுடைய நண்பர்கள் யார் வீட்டிற்கு வந்தாலும், வீட்டிற்கு வெளியே உள்ள ஒரு வசதியான வராந்தாவில் உட்கார வைத்துப் பேசி அனுப்பி விடுவார். வருகிறவர்களுக்கு காபி, ஸ்நாக்ஸ், குளிர்பானம் என எல்லாம் கொடுத்து மிக நன்றாக உபசரிப்பார். ஆனால், எவ்வளவு அன்பிற்குரிய நண்பர்களாயினும் வீட்டிற்குள் வரவழைத்து உபசரிக்கமாட்டார். இவ்விதமாகவே பலருடைய கிறிஸ்தவ வாழ்க்கையும். சிலர் இயேசு கிறிஸ்து சம்பந்தப்பட்ட தங்களுடைய எல்லாப் பக்தி ஈடுபாடுகளையும், சபை எல்லைக்குள் நிறுத்திவிடுவார்கள்.

சிலருக்கு ஜெபக் கூட்டங்கள், ஆராதனைக் கூட்டங்கள், ஊழியங்கள் என நிறைய ஈடுபாடுகள் இருந்தாலும், அவை எதுவும் தங்களின் தனிப்பட்ட வாழ்க்கை முறையோடு சம்பந்தப்படாமல் பார்த்துக் கொள்வார்கள். அதாவது இயேசு கிறிஸ்து சம்பந்தமாக அவர்களுக்கு நிறையப் பக்தி ஈடுபாடுகள் உண்டு. ஆனால், அவர்கள் அவரை தங்களின் இருதய வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை. எனவேதான், பக்தி இருந்தாலும், அவர்களிடம் பரிசுத்தம் இல்லை. ஜெபங்கள் இருந்தாலும், தேவ உறவு இல்லை.

ஒரு பக்தியான கிறிஸ்தவர் தன்னுடைய வீட்டு காம்பவுண்டு சுவரில், பக்தி யின் விளைவாக பெரிய கொட்டை எழுத்துக்களில் சுவிசேஷ வேத வசனத்தை எழுதிப் போட்டிருந்தாராம். இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்பதே அந்த வசனம். ஒருநாள் அவருக்கு மிகவும் நெருக்கமான ஒருவர் அவரிடம், நீங்களும் இயேசுவை விசுவாசியுங்கள், வசனம் எழுதிப் போட்ட உங்களையும் இயேசு இரட்சிப்பார் என்று வேடிக்கையாகச் சொன் னாராம். ஏனென்றால் வசனம் எழுதிப் போட்டவர் இயேசுவை தனக்குள் ஏற்றுக் கொள்ளவேண்டிய தேவையை, அந்த நாள் வரை உணர்ந்து செயல்படவில்லை.

அநேகர் சபைகூடுதல், ஜெபம், ஆராதனை, காணிக்கை, ஊழியம் என பல காரியங்கள் செய்கின்றனர். ஆயினும், இயேசுவைத் தங்களுக்குள்ளே பெற்று, அவரால் ஆளுகை செய்யப்படும் ஒரு வாழ்க்கைதான், கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அவர்களுக்குத் தெரியாது. வெளியே கிறிஸ்தவ பக்தி இருக்கிறது. உள்ளே கிறிஸ்து அருளும் சமாதானம் இல்லை. வெளியே நிறைய பக்தி சார்ந்த செயல் பாடுகள் இருந்தும், இருதயத்திற்கு உள்ளே பரிசுத்தமான சுபாவங்கள் இல்லை. ஆம், இயேசு நமக்குள்ளே இருக்கிறார் என்ற அனுபவம் தேவை.

சிந்தனைக்கு...

நீங்கள் கர்த்தருக்காக என்ன செய்கிறீர்கள் என்பதை அல்ல,
கர்த்தர் உங்களுக்குள் என்ன செய்கிறார் என்பதைக் கவனியுங்கள்.

பிப்ரவரி 8

ஜெபமும், தேவ உறவும்

சங்கீதம் 55:1–17

தேவனே என் ஜெபத்தைக் கேட்டருளும்.
சங்கீதம் 55:1

ஜெபம் என்பது தேவ உறவுடன் வாழ்வதற்கான மிக முக்கியமானதோர் அடையாளம். ஜெபம் எதுவும் இல்லாமலே ஒருவர் தேவ உறவுடன் வாழ்வதாகக் கூறினால், அவருடைய பக்தி அனுபவம் இருப்பது இருதயத்தில் அல்ல. அது மூளையில் இருக்கிறது. அதே வேளையில், ஜெபம் செய்கிற நற்பழக்கம் இருப்பதால், அங்கே தேவ உறவு இருக்கிறது என்றும் கூறிவிட முடியாது. ஏனென்றால், அநேகருக்குச் ஜெபம் என்பது தேவ உறவின் பிரதிபலிப்பாயிராமல், அவர்களின் பொதுவான பக்தியின் பிரதிபலிப்பாக மட்டுமே உள்ளது.

சிலரை ஜெப பக்தி ரோபட்டுகள் என்று கூறலாம். அதாவது அவர்கள் ஜெபிக்கப் பழகிக் கொண்ட பக்தி இயந்திரங்கள், இவர்கள் வீடுகளிலும் ஜெபிப்பார்கள், சபைகளிலும் இவர்கள் ஜெபிப்பார்கள். இவர்கள் மேடைகளிலும், ஜெபக்கூடுகை களிலும் பிரமாதமாக ஜெபிப்பார்கள். ஆயினும், அவர்கள் தேவ உறவில் இல்லை என்பதே உண்மை. ஏனென்றால், அவர்களிடம் தேவ உறவிற்குச் சான்று பகரும் ஆவிக்குரிய சுபாவம் இல்லை. அவர்களிடம் தேவ உறவின் விளைவான சமா தானமும் சந்தோஷமும் இல்லை.

ஜெப அனுபவம் இல்லாதவர்கள் தங்களைத் தேவ உறவு இல்லாத கடமைப் பக்திவான்கள் என்பதை அறிவிக்கின்றனர். ஜெபமிருந்தும் ஆவிக்குரிய நற் குணங்கள் இல்லாதவர்கள், தங்களை ஜெப இயந்திரங்கள் என்பதை அறிவிக் கின்றனர். நாம் தேவ உறவு உள்ளவர்கள் என்பதை ஜெபங்கள்மேல் நாம் வைத் திருக்கின்ற நம்பிக்கை மட்டுமே உறுதிப்படுத்தாது. அநேகர் தங்களின் ஜெபிக்கும் அனு பவத்தையே தேவ உறவின் அடையாளமாகப் பார்த்துத் தங்களின் சுபாவங் களும், வாழ்க்கை முறையும் அதற்கு எதிராகச் சாட்சி கொடுப்பதை அறியாம லிருக்கின்றனர்.

தேவ உறவினை உடையவர்கள், வெறுமனே விண்ணப்பங்கள் செய்கிற ஒரு அனுபவத்தையே ஜெபம் என்று எண்ணமாட்டார்கள். அவர்கள் ஜெபங்களில் தேவனோடு தங்களின் வாழ்க்கையின் எல்லாக் காரியங்களையும் பேசுகின்றனர். வெறும் மன்றாட்டு நேரங்கள் அல்ல ஜெப நேரங்கள். அங்கே கர்த்தரும் நமக்குள் பல காரியங்களைப் பேச வேண்டும். நாமும் நம்மைக் குறித்தும், நம்முடைய வாழ்வில் பல பகுதிகளைக் குறித்தும் தேவனோடு விசாலமாகப் பகிர்ந்து கொள்வோம்.

சிந்தனைக்கு...

பக்தர்களின் பக்தியைப் பிரதிபலிப்பது அல்ல,
தேவப் பிள்ளைகளின் தேவ உறவைப் பிரதிபலிப்பதே.

பிப்ரவரி 9

பிள்ளை அல்ல

11 தீமோத்தேயு 4:1–10

கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு.
11 தீமோத்தேயு 4:2

சில நல்ல தேவ செய்திகளில் ஒருவருக்குப் பிரயோஜனமான நல்ல பல தேவ வார்த்தைகள் இருக்கும். ஆனால், சிலர் அந்த செய்தியில் வருகின்ற கண்டிப்பு வார்த்தைகளையும், கண்டன வார்த்தைகளையும் மட்டுமே கேட்டு எரிச்சலடைவார்கள். ஏன் திரும்பத் திரும்ப கண்டன வார்த்தையும், கண்டிப்பு வார்த்தையும் வருகிறது என்று சலிப்படைவார்கள். அவர்களால் அதே தேவ செய்தியில் வருகின்ற நம்பிக்கை தருகின்ற நல்ல விஷயங்களை எடுத்துக் கொள்ள முடிவதில்லை.

காரணம் என்ன? அவர்கள் தேவ வார்த்தைகளைப் பிள்ளைகள் என்ற நிலையிலிருந்து கேட்கவில்லை. அவர்கள் தேவனுக்கு அன்னியர்களாக உள்ளனர். அவர்கள் எவ்வளவுதான் கண்டன வார்த்தைகளைக் கேட்டாலும், தங்களைத் திருத்திக் கொள்வதில்லை. ஏனென்றால், அவர்கள் தங்களைத் தேவ வார்த்தை கேட்டு திருத்திக் கொள்ள இயன்ற தேவனுடைய பிள்ளைகள் அல்ல.

இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் ஏராளம் நல்ல விஷயங்கள் இருந்தது. ஆயினும், அக்காலப் பரிசேயர்கள் அவருடைய கண்டன வார்த்தைகளைக் கேட்டுத்தான் அதிகமாக இடறுதலடைந்தார்கள். ஏனென்றால், அவர்களுக்குள் பொல்லாங் கனாகிய பிசாசின் ஆவி இருந்தது. உண்மையான தேவனுடைய பிள்ளைகள், தங்களைக் கண்டிக்கும் வார்த்தைகளைக் கேட்கும் போது, எரிச்சலடைய மாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் தங்களைக் கண்டிக்கும் வார்த்தைகளைக் கேட்டு, தங்களைத் திருத்தும் ஆவியைப் பெற்றிருக்கிறார்கள்.

ஏற்கெனவே, பலமுறை கண்டிக்கும் வார்த்தை கேட்டும் தங்களைத் திருத்திக் கொள்ளாதவர்கள், அடுத்தமுறை இன்னுமொரு கண்டன வார்த்தையைக் கேட்டதும், அதிகமாக எரிச்சலடைவார்கள். ஏனென்றால், அவர்கள் தங்களைத் திருத்தம் செய்து, மனசமாதானம் பெறும் பழக்கம் அவர்களிடம் இல்லை. ஏனென்றால், அவர்கள் பிள்ளைகள் அல்ல. அந்நியர்கள். ஒருமுறை ஒரு தேவ செய்தியாளர் தேவ அன்பைக் குறித்து அதிகமாகப் பேசிக்கொண்டிருந்தார். ஒரே ஒரு இடத்தில் மட்டும் சினிமா பார்க்கும் பழக்கத்தைக் கண்டித்தார். அதைக் கேட்ட ஒருவர், எந்தப் பிரசங்கம் பண்ணினாலும், இப்படிக் கண்டனம் பண்ணுவதே உங்களின் பழக்கம் என்று அவரைக் கடிந்து கொண்டார். ஏனென்றால், அவர் பேசிய பிற நல்ல அன்பின் வார்த்தைகளை அனுபவிக்க இயலாத ஒரு அந்நியர் இவர், அவர் தேவனுடைய பிள்ளை அல்ல.

சிந்தனைக்கு...

கர்த்தரின் அன்பை அனுபவித்திராத மனம்,
கர்த்தரின் கண்டிப்பு வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ளாது.

பிப்ரவரி 10

பேசுவது தந்தையா?

கொலோசெயர் 1:19–29

எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடு....
கொலோசெயர் 1:28

சிலர் எலியா எரேமியா போல, எப்போதும் கண்டிக்கும் பிரசங்கம் மட்டும் செய்வார்கள். சிலர் மோசேயைப் போல அதைச் செய், இதைச் செய் என்று கட்டளைகளைக் கொடுக்கும் பிரசங்கமே செய்வார்கள். சிலர் எப்பொழுதும் எரேமியா காலத்தில் வாழ்ந்த அனனியா என்ற பொய்த் தீர்க்கதரிசியைப் போல, எப்பொழுதும் நம்பிக்கையூட்டும் வார்த்தைகளையே பேசுவார்கள். சிலர் எப்பொழுதும் பணம், பொருள், ஆஸ்தி, அந்தஸ்துடன் வாழ்வதே ஆசீர்வாத வாழ்வு என்று பேசுவார்கள்.

ஒரு போதகரின் கீழ் விசுவாசிகள் இருக்கும் போது, அவர் பேசுவதைத் தான் சத்தியம் என்று நம்ப நேரிடும். நாம் அப்பாவி விசுவாசிகளாயிருந்தாலும், அப்பாவின் பிள்ளைகளாயிருக்கணும். அப்போது தேவ ஆவி நமக்குள் இருக்கும். அந்த ஆவியால் நம்மோடு பேசுகிறவர், நம்முடைய தேவனாகிய அப்பாவா அல்லது வேறு யாருமா என்பது தெரியும்.

இந்தப் புதிய ஏற்பாட்டுக் காலத்தில், எலியாவைப் போல மட்டுமே பேசினால் அது தவறு. மோசேயைப் போல எப்பொழுதும் அதைச் செய் இதைச் செய் என்று மட்டுமே பேசினால் அது தவறு. எப்பொழுதும் நம்பிக்கையூட்டும் வார்த்தை மட்டும் பேசினால் அது தவறு. உலகத்திற்குரியவைகளையே முதன்மைப்படுத்திப் பேசினால் தவறு. பொருளாதார ஆசீர்வாதங்களையே கிறிஸ்துவின் ஆசீர்வாதம் என்று பேசினால் அது தவறு. இயேசு எப்படிப் பேசினார்? இயேசுவின் அப்போஸ்தலர்கள் எப்படிப் பேசினார்கள்? இவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும். ஒரு பிள்ளைக்குத் தேவையான எல்லாவற்றையும், தந்தையைப் போல பேசுகிறவர்தான் உண்மையான போதகர்.

அப்பா பேசினால் அதில் கண்டிப்பு, அன்பு, நம்பிக்கை, ஆலோசனை, அக்கறை, அறிவு புகட்டல், ஊக்குவிப்பு, கட்டளை எல்லாம் இருக்க வேண்டும். ஏதாவது ஒரு குணாதிசயத்தை மட்டுமே முன்னிலைப்படுத்திப் பேசினால், அது தேவ பிதாவின் வார்த்தை அல்ல. நாம் பிள்ளையாயிருந்தால் இதை அறிய முடியும். வெறும் கண்டிப்பை மட்டும் பேசும் போதகர் தந்தை அல்ல. கட்டளையை மட்டும் பேசும் போதகர் தந்தை அல்ல. அன்பை மட்டும் பேசும் போதகர் தந்தை அல்ல. எச்சரிப்பை மட்டும் பேசும் போதகர் தந்தை அல்ல. ஒரு பிள்ளையின் அனைத்து விஷயங்கள் தொடர்பாகவும், அக்கறையோடு பேசுகிறவரே தந்தைப் போதகர்.

சிந்தனைக்கு...

அன்புடன் பேசிப் பேசி கண்டிக்க மறக்காதே,
கண்டிப்புடன் பேசிப் பேசி அன்பைக் காட்ட மறுக்காதே.

பிப்ரவரி 11

மன்னிப்பதற்குப் பக்குவம்

மத்தேயு 18:21–35

மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால்.

மத்தேயு 18:35

ஒரு போதகர், நமக்கு எதிராக யாராவது அநீதியோ தவறோ செய்திருந்தால், அவர்களை நாம் மன்னிக்க வேண்டும் என்று போதனை செய்தார். பிறரை மன்னிக்க வேண்டிய அவசியத்தை மிகச் சிறப்பாகப் பிரசங்கம் பண்ணினார். பிரசங்கம் பண்ணி முடிந்ததும், பிறரால் பாதிக்கப்பட்டு மன வருத்தத்தோடு இருக்கிறவர்களை எழும்ப ச்சொன்னார். அநேகர் எழும்பினார்கள். யார் யார் பிறரை மன்னிக்கப் போகிறீர்கள் என்று கேட்டார். ஒருவரைத் தவிர எல்லோரும் கைகளைத் தூக்கினார்கள். ஏன், நீங்கள் பிறரை மன்னிக்க மாட்டீர்களா என்று கைகளை தூக்காத நபரிடம் கேட்டார் போதகர். அதற்கு அவர், மன்னிப்பேன் ஐயா. மனம் ஆயத்தமான பின்பு மன்னிப்பேன் என்றார்.

ஆம், எல்லோரும் போதகருடைய பிரசங்கத்தைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்டு, பக்தியினால் உடனடியாகப் பிறரை மன்னிக்க முன்வந்தனர். ஆனால் அந்த ஒருவருக்கு அது உடனடியாக இயலவில்லை. மன்னிப்பு என்பதும், அன்பு என்பதும், உணர்ச்சிவசப்பட்ட மனநிலையின் விளைவாக இருக்கக்கூடாது. அது கர்த்தரால் பக்குவப்படுத்தப்பட்ட மனதின் விளைவாக இருக்க வேண்டும். மன்னிக்கும் விருப்பம் மட்டும் அல்ல, மன்னிக்க இயன்ற மனமும் தேவை. சிலர் பிறரை மன்னித்து விடுவார்கள். ஆனால், அவர்கள் செய்ததை அவர்களால் மறக்க முடியாது.

நம்முடைய மாம்சீக மனதினால் மன்னிப்பது அல்ல. கர்த்தரால் பக்குபவப் படுத்தப்பட்ட மனதிலிருந்து மன்னிக்க வேண்டும். மனம் இன்னும் பிறரைக் குறித்த கோபத்தோடும், வருத்தத்தோடும், வெறுப்போடும் இருக்கும் போது, பக்திக்காகப் பிறரை மன்னித்தால், அது உண்மையான மன்னிப்பாயிராது. சில விஷயங்கள் மனதை ஆழமாகக் காயப்படுத்திவிட்டால், அதனை ஆற்றிக் கொள்ளக் கர்த்த ருடைய கிருபையை அதிகமாக நாட வேண்டும்.

உள்ளத்தில் அக்கினி அணையாமல் எரியும் போது, வெளிப்பிரகாரமாக வார்த்தைகளால் மன்னிப்பது பயனற்றது. பிறரை மன்னிக்க வேண்டிய தேவையை உணர்ந்து, அதற்குத் தேவையான மன்னிக்கும் ஆற்றலுக்காகக் கர்த்தரிடம் ஜெபிக்க வேண்டும். தேவ அன்பை நமக்குள் அதிகமாக நாம் அனுபவிப்பதற்குத் தேவன் உதவ வேண்டும். நம்மை ஆண்டவர் மன்னித்தது போல, நாமும் பிறரை மன்னிப்பதற்குத் தேவையான ஆவிக்கேற்ற வலிமையை ஆண்டவர் தருவார்.

சிந்தனைக்கு...

கடவுளின் மன்னிப்பை அனுபவித்த இருதயம்தான்,
பிறருடைய தவறுகளை மன்னிக்கும் தகுதிப் பெற்றது.

பிப்ரவரி 12

ஒரு சிறு வலி

11 கொரிந்தியர் 12:1–10

என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது.
11 கொரிந்தியர் 12:7

சில நேரங்களில் நமக்குச் சாதகமானதென்றும், நன்மையானதென்றும் நிறைய விஷயங்கள் வாழ்க்கையில் இருக்கும். ஆனால், அதன் மத்தியில் சில சில விஷயங்கள் எதிர்மறையாகவும் பாதகமாகவும் இருக்கும். கணக்குப் போட்டுப் பார்த்தால், ஆதரவானதும் ஆசீர்வாதமானதுமான காரியங்கள் ஒரு பெரிய லிஸ்ட் வரும். எதிரான விஷயங்களை லிஸ்ட் போட்டுப் பார்த்தால் ரொம்ப ரொம்பக் கொஞ்சம்தான் வரும். ஆனால், நாமோ அனைத்துமே நமக்கு எதிராக வந்து விட்டதுபோல உணர்ந்து, பாரப்படவும் பதட்டமடையவும் செய்வோம். நன்மையான பெரிய லிஸ்ட்டை மனம் பார்க்கவே பார்க்காது. ஏன்?

உடல் முழுப்பகுதியும் நல்ல ஆரோக்கியமாகவும் நல்ல வலிமையாகவும் இருக்கிறது. ஆனால், காலில் ஒரு குட்டி விரலில் மட்டும் ஒரு சிறிய புண். இப்போ அந்த இடத்தை மட்டும் மறந்துவிட்டு, மற்ற வலிமையான பகுதிகளை எண்ணிச் சந்தோஷப்பட முடியுமா? முடியாது. ஒரு சிறியபுண் முழு உடல் வலிமையினை உணர விடாமல் செய்துவிடும். வாழ்க்கையும் அப்படியே. எத்தனைதான் சந்தோஷ விஷயங்கள் சூழ்ந்திருந்தாலும், ஒரு சிறு எதிர்மறையான விஷயம் எல்லாச் சந்தோஷத்தையும் அரெஸ்ட் பண்ணிவிடும்.

பதினொரு சீஷர்கள் இயேசுவை நேசித்து உடனிருந்தபோதிலும், ஒரே ஒரு யூதாசின் துரோகம் இயேசுவை ரொம்ப வருத்தப்படுத்தியது. பதினொரு குமாரர்கள் உடனிருந்தாலும், காணாமல் போன ஒரு யோசேப்பினிமித்தம் யாக்கோபு மிகவும் துயரப்பட்டான். சில நேரங்களில் கர்த்தரால் எத்தனையோ நன்மைகள் பெற்றிருந்தாலும், பெற முடியாமல் போன ஒரு நன்மையை நினைத்து, அதிகமாகத் துக்கப்பட நேரிடும். ஆம், சாதகமான விஷயங்கள் மலைபோல் இருந்தாலும், பாதகமான ஒரு விஷயம் நமக்கு மிகுந்த வேதனையைத் தரமுடியும்.

ஆனால், எல்லாமே நமக்கு எதிராக இருந்தாலும், தேவ கிருபை என்ற ஒன்றே ஒன்று நம்மை அற்புதமாகத் தாங்கும். பவுலின் ஊழியத்தில் சாதனைகள் ஏராளம் உண்டு. ஆனால், ஏதோ ஒரு முள் பவுலுக்கு அதிக வலியைக் கொடுக் கின்ற ஒன்றாயிருந்தது. ஆனால், தேவன் அளித்த கிருபை அதனை எதிர்கொள்ளப் போதுமானதாயிருந்தது. எனவே, பவுல் அப்போஸ்தலனால் பலவீனங்களின் நடுவிலும், அதிக பலமுடைய ஒரு மனிதனாக நிற்க முடிந்தது. ஆம், சின்னதோ பெரியதோ எல்லாம் வலிதான். கர்த்தரால் ஆற்ற முடியாத காயம் இல்லை.

சிந்தனைக்கு...

வலியைத் தருகின்ற மனிதர்களை நினைத்தால், வலி தீராது.
வலியைப் போக்கும் கர்த்தரை நினைத்தால், வலி தொடராது.

பிப்ரவரி 13

வலி மருந்து

எரேமியா 8:7-22

ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்?
எரேமியா 8:22

பல ஆண்டுகளுக்கு முன்பு, கடுமையான காய்ச்சலுடன் மிகுந்த உடல் வலியும் ஏற்பட்டு, பல நாட்கள் கஷ்டப்பட நேர்ந்தது. ஒருநாள் நண்பர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட மாத்திரையை வாங்கி உபயோகிக்கச் சொன்னார். நான் அதை திரும்பத் திரும்ப வாங்கி உபயோகித்தேன். ஏனென்றால், அதைச் சாப்பிட்டதும் பல மணி நேரங்கள் எனக்கு எந்த வியாதியும் வலியும் இல்லாதது போல உணருவேன். இதை அறிய நேரிட்ட இன்னொரு நண்பர், இந்த மாத்திரையைத் தொடர்ந்து உபயோகித்தால், உடலின் வேறு பாகங்களை அது நாசம் செய்துவிடும் என்று எச்சரித்தார்.

சில மருந்துகள் உடலில் ஏற்படும் வலி வேதனைகளுக்குக் காரணமான வியாதிகளைக் கண்டறிந்து, அதனை அகற்றும். சில மருந்துகள் உடலில் ஏற்படும் வலிகளை மட்டுமே அகற்றி ,வியாதியை அப்படியே விட்டுவிடும். கர்த்தருடைய வார்த்தைகள் வெறும் வெளிப்புற வலியை நீக்கும் மருந்து அல்ல. அது வலிக்குக் காரணமான பிரச்சினைக்கு நிவாரணம் ஏற்படுத்தும் மருந்து. அநேகர் தங்கள் வாழ்க்கையில் காண நேரிடுகின்ற வேதனைகள், தேவனுடைய வல்லமையினால் நீங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். ஆனால், அதற்கான காரணங் களைக் கண்டறிய விரும்புவதில்லை.

ஆறுதலான பிரசங்கங்கள், வல்லமையான பிரசங்கங்கள், வாக்குத்தத்த பிரசங்கங்கள் என சிலர் பிரசங்கிக்கின்றனர். அநேகர் அதுபோன்ற பிரசங்கங்களை வாஞ்சையோடு நாடுகின்றனர். அவைகளால் அவர்கள் ஆறுதலையும், நம்பிக்கை யையும், உற்சாகத்தையும், வல்லமையையும் உணருகின்றனர். ஆனால், அவை வலி நீக்கும் மருந்துகளாக இருக்கின்றன. அவை வலிகளுக்கான காரணங்களைக் காண்பிக்கவுமில்லை. அந்தக் காரணங்களைக் கண்டு குணமாக்கவுமில்லை. எனவே, நான் வலி மாத்திரையைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தினது போல, அவர்களும் அது போன்ற போதனைகளை திரும்பத்திரும்பக் கேட்கின்றனர்.

இது போன்ற தற்காலிக வலிநீக்கி பிரசங்கங்களைக் கேட்கின்றவர்கள், வேறு பல வியாதிகளை வரவழைத்துக் கொள்கின்றனர். பாவத்தைக் கண்டறியாததால் அதுவே தொடருகிறது. தவறான குணங்களைக் கண்டறியாததால் அதுவே வாழ்க்கை முறையாகிறது. இதனுடைய விளைவாகத் தேவன் அருளும், நித்திய வாழ்வையும் இழக்க நேரிடுகின்றது.

சிந்தனைக்கு...

வலிகளை உருவாக்குகின்ற தவறுகளை உணராதவரை ,
வலிகளை மறக்கச் செய்யும் மருந்துகள் தற்காலிகமானதே.

பிப்ரவரி 14

கர்த்தர் நம்மோடிருந்தால்

சங்கீதம் 23:1–6

நான் மரண பள்ளத்தாக்கிலே நடந்தாலும்.
சங்கீதம் 23:4

எதுவுமே நமக்கு எதிராக நடக்காத ஒரு வாழ்க்கைச் சூழ்நிலைதான், தேவன் நம்மோடிருப்பதற்கான அடையாளமா? நம்மை வருத்தப்படுத்துகின்ற எந்த ஒன்றும் நமக்கு வராமல் தடுத்து, நம்மை பிரச்சினையின்றி வாழ வைப்பதுதான் தேவன் நம்மோடிருப்பதின் அடையாளமா? இவ்விதமான அடையாளங்களைத் தேவன் நம்மோடிருப்பதற்கான சான்றுகளாக இருக்க நாம் விரும்புவோம். ஆனாலும், அப்படி நிகழும் என எதிர்பார்க்க இயலாது. நமக்கு என்ன நிகழ்ந்தாலும் தேவன் நம்மே ாடிருப்பார். நாம் எந்தப் பாதை வழியாக நடக்க நேரிட்டாலும், கர்த்தர் அங்கேயும் நான் உன்னோடிருக்கின்றேன் என்பார்.

எல்லாம் எனக்கு நலமாகவும், நான் விரும்பின விதமாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க இயலாது. ஆனால், எந்த ஒரு நிலமையிலும், கர்த்தாவே நீர் என்னோடிருப்பீர், என்ற நம்முடைய நம்பிக்கை ஏமாற்றமடையாது. நாம் கர்த்தருடைய பிள்ளைகளானால், நாம் எங்கேயிருக்கின்றோமோ, அங்கே கர்த்தரும் இருப்பார். அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையில், நிறைய விஷயங்கள் எதிர்மறையாகவே நிகழ்ந்தன. ஆனால், கர்த்தர் ஒவ்வொரு நெருக்கடியான சூழல்களிலும், நான் உன்னோடிருக்கின்றேன், என்ற நம்பிக்கையைக் கொடுக்கத் தவறவில்லை.

இந்தப் பூமி சொர்க்கம் அல்ல. இயேசு நம்மோடிருந்தாலும் நம் வாழ்க்கைச் சூழ்நிலை நமக்குப் பரலோகம் அல்ல. நாம் கிறிஸ்துவின் பிரசன்னத்தில் வாழ்ந்தாலும், இந்த உலக வாழ்க்கை நமக்கு ஒரு ஏதேன் தோட்டமல்ல. இது சொர்க்கத்திற்குப் போகும் ஒரு வழிதானேயன்றிச் சொர்க்கம் அல்ல. எனவே, இந்தப் பூமிக்குரிய இயற்கையின்படி, நிறையக் காரியங்கள் நம்முடைய அபிலாஷைகளுக்கு எதிராக நிகழும். ஆனால், நாம் தனிமையாக விடப்பட்டவர்கள் அல்ல. கானானைத் தருவேன் என்றவர், அந்தச் சிரமமானப் பாதையில் கூடவே நடந்தார்.

சில நேரங்களில், ஏன் இப்படி நடந்தது என்று கேள்விக்குள் நாம் மூழ்கிப் போய், வெளியே வர இயலாமல் சிக்கிக் கொள்கின்றோம். இந்தச் சூழலில் நமக்கு ஆதரவாகத் தேவன் செயல்பட விரும்புகிறார். இந்தக் கடினச் சூழலைக் கடந்து செல்வதற்கான உதவியை, அவர் செய்ய விரும்புகிறார். இந்த எதிர்மறைச் சூழலினால் நாம் மனதளவில் முடங்கிப் போகாதபடி, தொடர்ந்து நம்மை முன்னோக்கிப் போக வைக்கத் தேவன் விரும்புகின்றார். எனவே, எந்த எதிர்மறைச் சூழலிலும், கர்த்தரின் கிருபையை நாம் சார்ந்து கொள்ள வேண்டும்.

சிந்தனைக்கு...

ஏன் இந்தத் துன்பம் என்ற கேள்வி, அதனைக் கடந்து செல்ல,
கர்த்தர் காட்டும் வழியைக் காணவிடாமல் செய்கிறது.

பிப்ரவரி 15

மனதின் வார்த்தை அல்ல

நீதிமொழிகள் 15:1–8

மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்.
நீதிமொழிகள் 15:1

சிலரைக் கோபம் ஆட்கொள்ளும் போது மற்றவர்களைக் குறித்து சில வார்த்தைகளை கடுமையாகப் பேசிவிடுகின்றனர். அந்த வார்த்தைகளைக் கேட்க நேர்ந்தவர்கள், நம்மைக் குறித்து இவர் இந்த அளவிற்கு மோசமாக எண்ணுகின்றாரே என்றுதான் சிந்திப்பார்கள். ஆனால், சில வேளைகளில் மற்றவர்கள் பேசினது கோபத்தின் விளைவான வார்த்தைகள்தானேயன்றி, அவை அவர்களின் மனதின் வார்த்தைகள் அல்ல. அவர்கள் உண்மையில் அது போன்ற எண்ணங்களை மனதில் கொண்டிருக்கவில்லை.

ஏதோ ஒரு வருத்தம் அல்லது கோபம் மனிதனை உணர்ச்சிவசப்படுத்தி, அவன் தன்னுடைய மனதில் நினையாத வார்த்தைகளைப் பேச வைத்துவிடுகிறது. சில நேரம் சில பெற்றோர் ஏதோ ஒரு கோபத்தில் பிள்ளைகளைப் பார்த்து, நீ செத்துத் தொலை என்பார்கள். ஆனால், பிள்ளைக்கு ஒரு சிறு கஷ்டம் என்றால் தாங்கமாட்டார்கள். சில கணவர்கள் மனைவிகளைக் கோபத்தில், என் கண்முன் நிற்காதே, ஒழிந்து போ என்பார்கள். ஆனால், ஒரு நாள் மனைவி இல்லாத வீட்டில் இருக்க இயலாமல் பாடாய்ப்படுவார்கள். ஆம். அவையெல்லாம் கோபத்தின் வார்த்தைகள். அவை மனதில் உணர்ந்த வார்த்தைகள் அல்ல.

சிலர் மனதில் இல்லாத அன்பை உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவார்கள். சிலர் மனதில் சிந்திக்காத பாராட்டைப் பிறருக்குக் கொடுப்பார்கள். அதுபோல, மனதில் இல்லாத வெறுப்பையும், கசப்பையும், தவறான கருத்தையும் கோப உணர்ச்சியால் பேசுவார்கள். எனவே, ஒருவர் கோபத்திலோ அல்லது உற்சாகத்திலோ என்ன பேசுகிறார் என்ற அடிப்படையில் புரிந்து கொள்ளாமல், அவர்கள் உண்மையில் எப்படி என்பதை அறியும் நல்ல மனப்பக்குவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கோப வார்த்தைகளின் அடிப்படையில் யாரையும் நாம், இவர்கள் இப்படிப் பட்ட மனநிலையில் இருக்கின்றார்கள் என்று நிதானித்துவிடக்கூடாது. அது போலவே, கோபத்தின்மேல் நாம் உரியவிதமான ஆளுகை செலுத்தாவிட்டால், நம்மைக் குறித்து மற்றவர்களின் மனதில் பதியும் எதிர்மறையான சித்திரங்களை அகற்றுவது கடினம். தற்காலிகச் சூழலில் ஏற்படும் கோபதாபங்கள், நாம் மற்ற வர்களை எப்படி நினைக்கவில்லையோ அப்படி நினைப்பது போல, பிறர் எண்ணு வதற்கு இடம் தரக்கூடாது. தேவனுடைய கிருபையையும் ஐக்கியத்தையும் சார்ந்து, வார்த்தை வரம்புமீறல்களை மேற்கொள்ளும் ஆற்றலைப் பெற வேண்டும்.

சிந்தனைக்கு...

கோபத்தை அடக்காமல் அப்படியே கொட்டுவது தீங்கானது,
அதனை வெளியே தெரியாமல் மறைப்பது, அதைவிடத் தீங்கானது.

பிப்ரவரி 16

நியாயப்பிரமாணப் பழக்கம்

1 கொரிந்தியர் 2:9–16

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்.
1 கொரிந்தியர் 2:15

புதிய ஏற்பாட்டுக் காலம் துவங்கி 2000 ஆண்டுகள் கடந்துவிட்டது. நியாயப் பிரமாண யுகம் முடிவடைந்து 2000 ஆண்டுகள் கடந்துவிட்டது. சட்டதிட்டத்தின்படி வாழ்கின்ற பழைய ஏற்பாட்டு முறை முடிவுற்று ஆவியின்படி வாழ்கின்ற புதிய ஏற்பாட்டு முறை ஆரம்பித்து 2000 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், இன்றும் பெரும்பாலான கிறிஸ்தவ விசுவாசிகளின் ஆன்மிக ரத்த ஓட்டத்தில் கலந்திருப்பது, நியாயப் பிரமாண முறைதான். அவர்கள் சட்டதிட்ட அடிப்படையில் செயல்படும் பழக்கத்தில் தொடருகின்றார்கள். அவர்கள் ஆவியின்படி நடக்கின்ற பழக்கத்திற்கு வரவில்லை.

சட்டதிட்டமுறை என்றால் என்ன? ஆவியின்படி நடக்கின்ற முறை என்றால் என்ன? சட்ட திட்டம் என்றால் ஒரு வேலைக்காரன், முதலாளி இப்படிச் செய், அப்படிச் செய் என்று சொன்னவைகளை அப்படியே கேட்டுச் செய்கிறான். இதுதான் நியாயப்பிரமாணம். ஆனால், ஒரு தகப்பனோடு வாழும் மகன், தகப்பனைப் புரிந்து கொண்டு, தகப்பனுக்கேற்ற மனநிலையில் செயல்படுகிறான். தகப்பனோடுள்ள ஐக்கியம்தான் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதை அறிய வைக்கின்றது. இதுதான் ஆவியின்படி நடத்தல்.

தேவ ஆவி எதற்குத் தரப்படுகிறது? தேவ ஆவியின் மூலம் தேவனுடைய விருப்பங்களைச் சிந்தித்து, உணர்ந்து, நிதானித்துப் பின்பற்றவே. இப்படிச் செய் அப்படிச் செய் என்று சொன்னால் மட்டுமே செயல்படும் நிலையிலிருந்தால் ஆவியின் படி நடக்கும் அனுபவத்திற்கு நாம் வரவில்லை என்பதே பொருள். சில நல்ல சுபாவம், நல்ல சிந்தை, நல்ல செயல், நல்ல பழக்கம், நல்ல மனநிலை ஆகியவற்றைப் பற்றிப் பேசினால், சிலர் அப்படி எங்கே எழுதியிருக்கிறது என்று கேட்பார்கள். இதுதான் நியாயப்பிரமாணச் சிந்தை. அவை ஆவியினால் தேவ சிந்தையை அறிந்து செயல்படும் முறை. அநேகருக்கு அது பழக்கமேயில்லை.

சில விஷயங்கள் தவறானவை. சில செயல்கள் தவறானவை. சில விருப்பங்கள் தவறானவை. ஆனால், எங்கே எழுதியிருக்கிறது என்று கேட்டால், பைபிளில் காட்ட முடியாது. ஏனென்றால், அவை ஆவியினால் நிதானித்து அறிய வேண்டியவை. அவை ஒருபோதும் எழுதப்பட்ட சத்திய வார்த்தைகளுக்கு முரண்பட்டதாக இராது. தேவனோடு ஐக்கியம் கொண்டு வாழ்கின்ற அடிப்படை ஆவிக்குரிய பழக்கம் வராதவரை, நியாயப்பிரமாணப் பழக்கம் போகவே போகாது

சிந்தனைக்கு...

எல்லாத் தவறுகளையும் வேதாகமம் சொல்லவில்லை,
எந்தத் தவறையும் தேவ ஆவி சொல்லாமலிருப்பதில்லை.

பிப்ரவரி 17

இதனை அனுபவித்தாகணும்

யோபு 2:1–13

அவன் துக்கம் மகா கொடிய துக்கம்.
யோபு 2:13

பல ஆண்டுகளுக்கு முன்பு விபத்தில் படுகாயமடைந்த ஒருவரை ஆஸ்பத்தியில் பார்த்தேன். சிகிச்சைகளின் நடுவில் அவர் மிகவும் வேதனையை அனுபவித்தார். இந்த வேதனையைக் குறைக்கவோ அல்லது அதை உணரா திருக்கவோ, ஏதாவது மருந்து கொடுங்கள் என்று உறவினர்கள் டாக்டர்களிடம் கெஞ்சினர். அதற்கு டாக்டர்கள் இந்த வேதனையை அனுபவிச்சுதான் முடிக்கணும். வேற வழியில்லை. ஆனால், இரண்டு நாளில் வேதனை தானாகக் குறைந்து விடும் என்றனர். ஆம், வாழ்க்கையில் சில விஷயங்களால் வருகின்ற வேதனையையும் துக்கத்தையும், மறக்கவோ உணராமலிருக்கவோ வழியுண்டு. சில வேதனைகளை அனுபவிச்சுதான் தீர்க்க முடியும்.

சில நஷ்டங்களும், கஷ்டங்களும், தோல்விகளும், இழப்புகளும் ஏற்படும் போது, எத்தனை பேர் ஆறுதல் சொன்னாலும், அவை வேலை செய்யாது. எத்தனை ஆறுதல் வார்த்தை கேட்டாலும் வேதனை விலகாது. எத்தனை வேதாகம விஷயங்களைச் சொல்லித் திடப்படுத்தினாலும், மனம் அவற்றை ஏற்றுக் கொண்டு வேதனையை மறக்காது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சில மனவேதனை களை அனுபவிச்சுதான் கடந்து செல்ல முடியும். சில நேரங்களில் ஆரம்பித்து விட்ட அழுகையை, யாருடைய ஆறுதல் வார்த்தைகளும் நிறுத்தாது.

சமீபத்தில் தன் ஒரே மகனை தீடீர் என்று விபத்தில் இழந்த ஒரு தாய், தன்னை ஆறுதல்படுத்த வந்த ஒருவரிடம், ஐயா எனக்கு நீங்க என்னய்யா ஆறுதல் சொல்ல முடியும்? என்று அழுது கொண்டே கேட்டது இன்னும் என் காதுகளில் தொனிக்கிறதை உணர்கின்றேன். ஆம், மனதை நோகடித்த சில விஷயங்களைச் சில காலம் மறக்க இயலாமல் மனம் கஷ்டப்பட்டுத்தான் ஆகணும். ஆயினும், கர்த்தரை விசுவாசிப்பவர்களுக்கு வேதனையை ஏற்கவும் தாங்கவும் ஒரு தெய்வீக பலம் உண்டு. அவர்கள் வேதனையை உணர்ந்தாலும், ஒரு நம்பிக்கை அவர்களை அதனைத் தாங்கிக் கொள்ளும்படி பலப்படுத்தும்.

யோபு தன்னுடைய வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களினால் ஆறுதலடைய இயலாதவனாய் அழவும் புலம்பவும் செய்தான். ஆயினும், அதன் நடுவில் ஓர் நம்பிக்கையின் ஆற்றல் அவனிடம் செயல்பட்டது. வேதனையின் நடுவிலும், ஏதோ ஒரு இனம் புரியாத நம்பிக்கையின் உணர்வுகள், அவனைத் தாங்கிக் கொண்டேயிருந்தது.

சிந்தனைக்கு...

தேவ பக்தி எல்லாத் துன்பங்களையும் தவிர்த்து விடாது.
ஆனால். எதையும் சகித்திடும் ஆற்றலைத் தரும்.

பிப்ரவரி 18

வார்த்தை ஆசீர்வாதம்

உபாகமம் 6:1–19

இஸ்ரவேலே நீ நன்றாயிருப்பதற்கும்...
உபாகமம் 6:3

போதகர் ஒருவர் பிரசங்கித்து முடித்ததும் ஒரு சகோதரி அவரிடம் சென்றாராம். உங்கள் பிரசங்கம் எனக்கு ஏமாற்றம் தருகிறது என்றார்களாம். எப்படி என்று கேட்ட போது, நீங்கள் ஆசீர்வாதமான வார்த்தைகளைப் பேசிக் கேட்க விரும்பினேன். ஆனால், நீங்கள் அது தொடர்பாக எதையும் பிரசங்கிக்கவில்லை என்றாராம். அந்த சகோதரி எதிர்பார்த்து வந்தது ஆறுதலானதும், ஆசீர்வாத வாக்குத்தத்தமானதுமான ஒரு வார்த்தை. அது அவருக்குக் கிடைக்கவில்லை.

நான் உனக்கு இப்படிச் செய்வேன், அப்படிச் செய்வேன் என்று ஆசீர்வாதத் தொனியில் கர்த்தர் பேசினால் மட்டுமே, ஆசீர்வாத வார்த்தை என பலர் எண்ணு கின்றனர். வார்த்தைகள் வழியாகக் கர்த்தர் நம்மை எப்படி ஆசீர்வதிக்கின்றார்? நம்மை அவர் வார்த்தைகள் வாயிலாகத் திருத்துகின்றார். நம்மை அவர் வார்த் தைகள் வாயிலாகச் சீர்செய்கின்றார். நம்மை அவர் வார்த்தைகள் வாயிலாக உணர்த்தி உருவாக்குகின்றார். வார்த்தைகள் மூலமாக இவ்விதக் கிரியைகளைக் கர்த்தர் செய்யும்போது, அதுவே நம்மைக் கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்கு நேராகக் கொண்டு செல்கின்றது.

வார்த்தைகள் நம்மைக் கண்டிக்கின்றதா? அதுவும் ஒரு ஆசீர்வாதத்திற்குத் தேவையான செயலே. வார்த்தைகள் நம்மை உணர்த்துகின்றதா? அது நாம் ஆசீர் வதிக்கப்பட அவசியமானதே. வார்த்தைகள் நம்மைச் செயல்படத் தூண்டுகிறதா? அதுவும் ஆசீர்வாதத்திற்குத் தேவையான ஒன்றே. இவ்விதமான வார்த்தைகளுக்கு நாம் செவிசாய்த்து அதற்கேற்ப செயல்படச் செல்லும்போதுதான், ஆசீர்வாதங் களுக்கு வழி ஏற்படுகிறது. நம்முடைய காதுகளில் தொனிக்கும், இதமான நம்பிக்கையான வாக்குத்தத்தங்கள் மட்டுமே ஆசீர்வாத வார்த்தைகள் அல்ல. நமக்குள் நாம் உணரவும் மாறவும், சரிசெய்யவும், செயல்படவும் தூண்டுகின்ற எல்லா வார்த்தைகளும் ஆசீர்வாதங்களோடு சம்பந்தபட்டவையே.

தேவ வார்த்தைகளின் பிரதான நோக்கமே, நம்மை நமக்குள் சீர்செய்து செவ்வையாக்குவதுதான். ஏதோ நம்பிக்கையூட்டும் தொனியுடைய வார்த்தையைக் கேட்பது மட்டுமே, ஆசீர்வாத வார்த்தை ஆகிவிடாது. தேவ வார்த்தைகள் முதலாவது நமக்குள், கர்த்தருக்கான வழியை உருவாக்க வேண்டும். தேவன் நமக்குள் தங்கி, நம்மை நலமான பாதையில் நடத்துவதற்கான ஒரு சூழலைப் பெற்றால்தான் ஆசீர்வாதங்கள் நமக்குச் சொந்தமாகும்.

சிந்தனைக்கு...

கர்த்தரின் வார்த்தைகள் சிலநேரம் இனிக்காது.
ஆனால், எந்தக் கசப்பையும் நீக்குகின்ற ஆற்றல் அதற்கு உண்டு.

பிப்ரவரி 19

பணஆசை பணத்தேவை

2 தெசலோனிக்கேயர் 3:1–18

இரவும் பகலும் பிரயாசத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம்.
2 தெசலோனிக்கேயர் 3:8

பணம் என்பது இயற்கையாக எல்லாருக்குள்ளும் ஒரு ஆசையை ஏற்படுத்தும் என்பது உண்மை. ஆனால், பணம் என்பது ஆசையின் விளைவாகத் தேடப்படுகின்ற ஒன்றாகயிராமல், தேவையின் அடிப்படையில் தேடப்படுகின்ற ஒன்றாகயிருக்க வேண்டும். பண ஆசை ஏன் எல்லாத் தீமைக்கும் வேர் என்று வேதம் சொல்லுகின்றது? பணம் என்பது ஆசையின் அழுத்தத்தால் தேடப்படும் போது, அது தீமையாக மாறுவதற்கு வழி ஏற்படுகின்றது.

ஆசையில்லாமல் எதையும் தேடுகின்ற தூண்டுதல் ஏற்படாது. ஆனால், ஒரு வலிமையான தேவையின் பின்னணியை அது கொண்டிருக்க வேண்டும். தேவனைச் சார்ந்து வாழ்கின்றவர்கள், மூன்று முக்கியமான நியாயமான தேவைகளை, தங்களின் பணத்தேடலுக்குப் பின்னணியாகக் கொண்டிருக்க வேண்டும். ஒன்று, நம்முடைய தேவைகளை உரிய முறையில் சந்திக்க வேண்டியதற்காக பணத்தைத் தேடிச் சம்பாதிக்க வேண்டும். இரண்டு, மற்றவர்களுக்கு நாம் பயனுள்ளவர்களாக இருப்பதற்காக பணத்தைத் தேடிச் சம்பாதிக்க வேண்டும். மூன்றுத் தேவனுடைய பணிகளுக்கு நாம் நல்லதோர் பங்களிப்பைக் கொடுப்பதற்காக பணத்தைத் தேடிச் சம்பாதிக்க வேண்டும்.

நம்முடைய தனிப்பட்ட தேவைகளையும், நம்முடைய குடும்பத் தேவைகளையும், நம்மைச் சார்ந்திருக்கின்ற உறவுகளின் தேவைகளையும் சந்திக்க நாம் ஆக்கப்பூர்வ வழிகளில் சம்பாதிக்க வேண்டும். நம்முடைய தேவைகளுக்காக நாமே நன்கு முயற்சி செய்து சம்பாதிக்க வாய்ப்பு இருக்கும் போது, சோம்பேறித்தன சுபாவத்தால் பிறரைச் சார்ந்திருக்கக்கூடாது. நாம் பிறருக்குப் பாரமாகவோ அல்லது நம்முடைய தேவைகளைச் சந்திக்க இயலாதவர்களாகவோ இருக்க கூடாது. வேலை செய்ய மனதில்லாதவன், சாப்பிடவும் கூடாது என்று வேதம்கூறுகின்றது.

அவ்விதமாக நமக்காக மட்டுமே சம்பாதிப்பது அல்ல. தேவனுடைய பிள்ளைகள் பிறருக்கு ஏதாவது ஒரு விதத்தில் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். எனவே, ஏன் நான் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற கேள்விக்கு, நான் பிறருக்குக் கர்த் தருடைய பிள்ளை என்ற முறையில் உதவ வேண்டும் என்பதையும், ஒரு பதிலாகக் கொண்டிருக்க வேண்டும். அவ்விதமே, தேவனுடைய ஊழியங்களைத் தாங்க வேண்டியத் தவிர்க்கக் கூடாத கடமையையும் முக்கியக் காரணமாகக் கொண்டிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

பண ஆசைக்கு அடிமையாகாதே.
ஆனால், பணத்தின் தேவையை அறியாமல் போகாதே.

பிப்ரவரி 20

கர்த்தருக்குக் காணிக்கை

11 கொரிந்தியர் 9:1–12

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.
11 கொரிந்தியர் 9:7

காணிக்கை என்பது ஒருவரைக் கனம் பண்ணுவதற்காக நாம் எதை யாவது கொடுப்பது என்று சொல்லலாம். நாம் பெற்றுக் கொண்ட நல்ல சேவைக்காக எதையாவது பதிலுக்குச் செய்வதையும் காணிக்கை என்று கூறலாம். இந்த அர்த் தத்தில்தான் இன்று பல கிறிஸ்தவர்கள் கர்த்தருக்குக் காணிக்கை தருகிறார்கள். ஆனால், புதிய ஏற்பாட்டில் நாம் கர்த்தருக்காகக் கொடுப்பது அவரைக் கனப்படுத்து வதற்காகச் செய்கின்ற ஒன்று என்ற அர்த்தத்தில் அல்ல. புதிய உடன்படிக்கையின் காலத்தில் வாழ்கின்ற நாம், கர்த்தருக்காகக் கொடுப்பது அவர் நமக்குச் செய்த ஒரு நன்மைக்குப் பதிலாக நாம் ஏதோ ஒன்றைச் செய்வது அல்ல.

புதிய ஏற்பாட்டில், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற உறவின் அடிப் படையில் வாழவே அழைக்கப்பட்டிருக்கின்றோம். சாதாரணமாக ஒரு மகன் தன் னுடைய குடும்பத்திற்கு நிறையச் செய்கிறான். அது பெற்றோரைக் கனப் படுத்தவா? ஆம். என்றும் சொல்லலாம். பெற்றோரிடமிருந்து பெற்ற ஒரு நன்மைக்குப் பதிலாக எதையாவது செய்ய வேண்டும் என்பதற்காகவா? ஆம், என்றும் அதற்கு பதில் சொல்லலாம். உண்மையான அதனுடைய காரணம் என்ன? அது அவனுடைய கடமை. அது அவனுடைய குடும்ப பந்தத்தின் பிரதிபலிப்பு.

அதுபோலவே, நாம் தேவனுடைய பிள்ளைகளென்றால், நாம் தேவனுடைய குடும்பத்தில் இருக்கின்றோம். இங்கே யாரையோ கனப்படுத்துவது அல்ல முக்கிய மான சிந்தை. இது நம்முடைய குடும்பம். இதற்கு நம்முடைய பங்களிப்பு என்பது நம்முடைய கடமை. இது நம்முடைய பொறுப்பு. இது நம்முடைய குடும்ப பந்தத்தின் இயற்கையான பிரதிபலிப்பு. இங்கு அளவுகள் அல்ல அடிப்படை. அன்பும், உறவும், பொறுப்பும், கடமையும், ஆர்வமுமே அடிப்படை. இது வரி செலுத்துவது போல் அல்ல. இது சேவைக் கட்டணம் செலுத்துவது போல் அல்ல.

அநேகர் ஏதோ கொஞ்சம் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும் என்ற உணர் விலேயே கொடுக்கின்றனர். தங்கள் குடும்பத்திற்காகவும் தங்களுக்காகவும், கணக்கு எதுவும் பாராமல் தாராளமாய்ச் செலவழிப்பார்கள். காணிக்கை என்ற ஒரு விஷயத்திலோ அளந்து அளந்து பார்த்துப் பார்த்து, எதையோ இழப்பது போன்ற உணர்வோடு செய்வார்கள். தேவனால் மறுபடியும் பிறந்த பிள்ளைகள் என்ற நிலமைக்கு வந்தவர்கள் மட்டும் காணிக்கை கொடுத்தால் போதும். ஆனால், அதில் தாராளத்தன்மையும், பொறுப்பும், கடமையும், அன்பும் இருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

ஆசீர்வாதத்தை எதிர்பார்த்துக் கொடுப்பது கட்டணம்.
கர்த்தர் ஆசீர்வதித்திருப்பதை உணர்ந்து கொடுப்பது காணிக்கை.

பிப்ரவரி 21

பணமும் தேவ உறவும்

1 தீமோத்தேயு 6:1–12

பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது.
1 தீமோத்தேயு 6:10

பணம் நாம் சமாதானமாக வாழ்வதற்கு பல விதங்களில் உதவி புரியும் என்பது உண்மை. பணமில்லாமையால்தான் அநேகர் சமாதானமிழந்து வாழ்கின்றார்கள் என்பதும் உண்மை. ஆனால், பணம் நம்முடைய சமாதானத்திற்கு எந்த உத்தரவாதமும் தர இயலாது. கட்டுக் கட்டாகப் பணம் வைத்திருந்தாலும் சமாதானத்தை இழக்கிற வேளைகள் வரும். பணம் நாம் சந்தோஷமாக வாழ் வதற்குப் பல விதங்களில் உதவி புரியும் என்பதும் உண்மை. பணமில்லாமையால் தான் அநேகர் சந்தோஷத்தை இழக்கிறார்கள் என்பதும் உண்மை. ஆயினும், கோடி கோடியாய் வைத்திருந்தாலும் சந்தோஷமற்று வாழ்கின்ற அநேகர் உண்டு.

கர்த்தர்தான் நமக்குச் சமாதான உத்தரவாதத்தைத் தர முடியும். கர்த்தர்தான் நமக்குச் சந்தோஷ உத்தரவாதத்தைத் தர முடியும். கர்த்தர்தான் நமக்கு நம்பிக்கை உத்தரவாதம் தர முடியும். எனவே, பணத்தைத் தேடுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தாமல், தேவ உறவைத் தேடுவதற்குப் போதிய கவனம் செலுத்தவேண்டும். தேவ உறவை மையமாக வைத்து வாழ்கின்றவன், பணமிருந்தாலும் சரி, இல்லா மலிருந்தாலும் சரி, அவனால் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ முடியும்.

மிகுதியாகப் பணம் வைத்திருந்த சாலொமோன் ,சந்தோஷ நிறைவற்றவ னாகவே வாழ்ந்தான். பணம் மிகுதியாக வைத்திராத பவுல் அப்போஸ்தலன், சந்தோஷக் குறைவற்றவனாக வாழ்ந்தான். அநேகர் பணம் சம்பாதிக்க முழு நேரத்தையும் செலவிட்டு, தேவ உறவைத் தேடி அனுபவிப்பதற்குக் கரிசனையற்று இருப்பார்கள். தேவ உறவைத் தேடாதவரின் பணத்தேடல், பண ஆசையின் விளை வானது. அது தேவனுக்கு எதிரான ஒன்று. பணம் தனக்குத் தேவைப்படுவதைவிட, தேவ உறவை அனுபவிப்பது என்பது அதிகமாகத் தேவைப்படுகிறது என்று உணர்ந்த மனிதன், சரியாகச் செல்வான். அவன் எவ்வளவு பணத்தேடல் முயற்சி யிலிருந்தாலும், அது நல்லதாகவே இருக்கும்.

ஏனென்றால், அவன் பணம் சம்பாதிக்க மட்டும் அல்ல. தேவ உறவை அனுதின வாழ்வில் தேடி அனுபவிக்கப் போதுமான நேரத்தைச் செலவிடுகிறான். அவன் பணம் சம்பாதிக்க சாதகச் சூழ்நிலையையும் திறமையையும் மட்டும் அல்ல. அவன் நேர்மையையும் நியாயத்தையும், கர்த்தருக்கு உகந்த வழிகளையும் கவன மாகப் பின்பற்றுவான். அவன் எவ்வளவு சம்பாதிக்கின்றோம் என்பதை மட்டும் அல்ல, எந்த வழியில் சம்பாதிக்கின்றோம் என்றும் நேர்த்தியாய்ச் சிந்திப்பான்.

சிந்தனைக்கு...

பணத்திற்குச் சந்தோஷம் தரும் சக்தி உண்டு.
ஆனாலும், சந்தோஷத்திற்கு உத்தரவாதம் தருகின்ற சக்தி அதற்கு இல்லை.

பிப்ரவரி 22

ஞாயிறு கர்த்தருக்கே!

எபேசியர் 6:10–24

அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.
எபேசியர் 6:10

ஒருவர் எக்காரணத்தைக் கொண்டும் ஞாயிறு அன்று கடைதிறக்கமாட்டார். எவ்வளவோ சம்பாதிக்க வாய்ப்பிருந்தாலும், ஞாயிறு அன்று கர்த்தருக்காகக் கடை திறக்கக்கூடாது என்று உறுதியாயிருப்பார். அதே வேளையில் பிற, ஆறு தினங் களும் காலை துவங்கி நடுஇரவு வரை, வியாபார அலுவல்களிலேயே இருப்பார். ஞாயிறு அன்று கோயிலுக்குத் தவறாமல் சென்று தான் தேவனுக்காகப் பக்தி வைராக்கியமாய் இருப்பதாக நினைப்பார். ஆனால், பிற தினங்களில் ஜெபம் வேதவாசிப்பு, தேவ சமுகம் தேடல் யாவும் ஒன்றிரண்டு நிமிடங்களில் முடிந்துவிடும்.

ஒரு நாளை நாம் கர்த்தருக்காக என்று வேலையின்றி ஒதுக்குவது அல்ல. ஒவ்வொரு நாளும் நாம் எந்த அளவிற்குக் கர்த்தருக்கு ஏற்ற காரியங்களில் கவனமாயிருக்கின்றோம் என்பதைப் பார்க்க வேண்டும். வாரத்தில் ஒரு நாளை கர்த்தருக்கென்று பிற அலுவல்கள் இன்றி இருப்பது ஒரு மதபக்திச் செயல். அது மனதிற்குப் பிரயோஜனமான செயல் அல்ல. ஒரு நாளைக் கர்த்தருக்கென்று ஒதுக்குவது அல்ல. ஒவ்வொரு நாளும் நாம் கர்த்தரோடிருப்பதை உறுதிப்படுத்த, அந்தந்த நாளில் எவ்வளவு நேரத்தை ஒதுக்குகின்றோம் என்பது முக்கியம்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தைப் போல ஒரு நாள் ஓய்ந்திருப்பதால், அது கர்த்தருக்குக் கனமாக மாறிவிடாது. நமக்கு எவ்வளவு அலுவல்களும் பொறுப்பு களும் இருந்தாலும், தேவ பலத்தையும் தேவ ஐக்கியத்தையும் நமக்குள் பெற்று, வலிமையாய்த் திகழ தினமும் போதுமான நேரங்களைச் செலவழிக்க வேண்டும். கர்த்தருக்கு நேரம் ஒதுக்குவது அல்ல. கர்த்தரால் நாம் கர்த்தருடைய ஆவியால் பலப்பட்டு, தேவ கிருபையோடு ஒவ்வொரு சூழ்நிலையையும் சந்திக்க வேண்டும். நம்மில் அநேகர் நேரங்களை ஒரு பக்திக்காக ஒதுக்குகின்றோமேயன்றி, அதனுடைய பயன்பாடு என்னவென்று யோசிப்பதில்லை. வாரத்திற்கு ஒருநாள் என்பது பக்தி. தினமும் தேவனுக்காகக் கணிசமான நேரம் என்பது ஆவிக்குரிய புத்தியின் அனுபவம்.

நாம் எதைச் செய்தாலும் அதனுடைய தேவை என்ன என்றும், அதனால் ஆவிக்குரிய ரீதியாக நமக்குள் என்ன விளைவு ஏற்படுகிறது என்றும் பார்க்க வேண்டும். நேரம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் தினமும் சாப்பிடுகின்றோம். அதுபோல, நம்முடைய அலுவல்களின் சூழ்நிலை எப்படியிருந்தாலும், ஆவிக் குரிய பலத்தோடு வாழ்ந்திடத் தினமும் தேவ சமுகத்தில் போதுமான நேரங்களைச் செலவழித்து, நமக்குள் தேவ பலத்தைப் பெற வேண்டும்.

சிந்தனைக்கு...

கர்த்தருக்கு நம்முடைய நேரங்கள் தேவையில்லை ,
ஆனால், கர்த்தரால் நாம் பலமடைய நமக்கு நேரங்கள் தேவை.

பிப்ரவரி 23

இயற்கைப் பழக்கம்

நீதிமொழிகள் 12:1–17

மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும்.
நீதிமொழிகள்12:15

சிலர் தங்களை மிக மிக நவநாகரீகமாக ஒப்பனை செய்து கொள்வார்கள். ஆனால், தங்கள் வீட்டைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைக்கமாட்டார்கள். சிலர் மிக மிக ஸ்டைல் உடைகளை அணிந்து கொண்டுதான் வெளியே செல்வார்கள். ஆனால், வீட்டில் அவர்கள் அணியும் உடைகள் எவ்வளவு அழுக்கேறினாலும் கவலைப்படமாட்டார்கள். சிலர் நேர ஒழுங்குகளை மிக மிகச் சரியாக பின்பற்று வார்கள். ஆனால், வீட்டில் தாங்கள் உபயோகிக்கும் எந்தப் பொருளையும், ஒழுங் காகவும் கிரமமாகவும் வைக்கின்ற பழக்கமே கிடையாது.

சிலர் நவநாகரீக உலகத்திற்கேற்ப, தங்களின் தோற்றங்களை எளிதாக மாற்றிக் கொள்வார்கள். ஆனாலும், அவர்களின் சில இயற்கைப் பழக்க வழக்கங்கள் மாறவே மாறாது. சில உணவுப் பழக்கங்கள், சுவைகள், மனநிலைகள் இயற்கை யாக கூடப் பிறந்து வந்தவை. அவை எளிதாகப் பிரிந்து போகிறவை அல்ல. சிலருக்கு சில நல்ல பழக்கங்கள் இயற்கையாகவே பிறப்பிலிருந்து வந்தவை. சிலருக்கு சில மோசமான பழக்கங்கள் இயற்கையாகவே பிறப்பிலிருந்து கூட வருகின்றவை.

குறிப்பிட்ட ஒருவருடைய மனைவி, தன்னுடைய கணவரின் மேஜையில் சிதறிக்கிடக்கும் பொருட்களை ஒழுங்குபடுத்தி வைத்தால், அவர் பாராட்டமாட்டாராம். ஆனால், திட்டுவாராம். இன்னொருவரோ ஒரு சிறு பொருளைச் சற்று யாராவது நகர்த்தியிருந்தால், ஊரையே கூட்டும் விதமாகக் கத்துவாராம். ஆம், சில நல்ல விஷயங்களும் இயற்கையாகக் கூட வந்தவை. சில மோசமான விஷயங்களும் இயற்கையாக கூட வந்தவை.

பாவத்தையும் பாவப் பழக்கங்களையும் விட்டுவிட்ட சிலர்கூட தங்களுடன் இயற்கையாகப் பிறப்பிலிருந்து கூட வந்த சில பழக்கங்களை விட்டு விலக முடிவ தில்லை. அவை இயற்கையாகவே அவர்களோடு கலந்திருக்கின்றது. ஆயினும், இது போன்ற தவறானதும் மோசமானதுமான பழக்கங்களை உடையவர்கள், இதனைச் சரி அல்ல என்று உணர்ந்து, அவற்றை அகற்றத் தேவ கிருபையைத் தேட வேண்டும். நமக்கு மிகத் தவறாகத் தோன்றாதவைகளையும், சரியற்றது என்று உணர முடியாதவைகளையும் ஆவிக்குரிய வெளிச்சத்தில் கண்டுணர வேண்டும். அவை கடினமாயிருந்தாலும் அவற்றை விட்டு விலகத் தேவனுடைய வல்லமையை விசுவாசித்துப் பெறவேண்டும்.

சிந்தனைக்கு...

அப்படியே பழகிப்போய்விட்டது என்று கூறாதே.
ஏன் அப்படித் தவறாகப் பழகினாய் என்று சிந்தி.

பிப்ரவரி 24

மனவேதனையின் நடுவிலும்

சங்கீதம் 94:1–23

கர்த்தர் எனக்குத் துணையாயிராவிட்டால்.
சங்கீதம் 94:17

சில நேரங்களில் நான் சந்திக்க நேரிட்ட சில சூழ்நிலைகள், எனக்கு மிகுந்த மனவேதனையைத் தந்திருக்கின்றது. ஆண்டவரை முற்றிலும் சார்ந்து வாழ்வதையே நோக்கமாகக் கொண்டுள்ள நான், சில நேரங்களில் காண நேரிட்ட மனச்சோர்வுக்கான சூழ்நிலைகள் எனக்குள் ஏன் இப்படி? ஏன் இப்படி? என்ற கேள்விகளை எழுப்பும். சில கேள்விகளுக்கு அன்றும் எனக்கு விடை தெரிய வில்லை. இன்றும் எனக்கு விடை தெரியவில்லை. ஆயினும், இதுபோன்ற சூழ் நிலைகளுக்கு நடுவிலும், சில நேரங்களில் எனக்கு வாய்விட்டு அழ வேண்டும் என்பது போலத் தோன்றும். அது எனக்கு ஏன் இப்படி நேரிடுகின்றது என்று நினைத்ததால் அல்ல.

இதுபோன்ற மனவருத்த சூழல்களின் நடுவிலும், என்னை என் கர்த்தர் நடத்திக்கொண்டும், தாங்கிக் கொண்டும், தைரியப்படுத்திக் கொண்டும் இருந்தார். கேள்விகளுக்குப் பதில் தராத ஒரு கர்த்தர், என் எல்லா வருத்தத்தையும் எளிதாக்கும் படியாக என்னுடன் இருப்பதை வெளிப்படுத்தும் போது அழுதுவிட வேண்டும் என்பது போலத் தோன்றும். ஆம், சில நேரங்களில் மனக்கஷ்டங்கள் கண்களில் கண்ணீரை வரவழைக்கவில்லை. அதுபோன்ற சூழல்களிலும் கர்த்தர் அன்பையும், கரிசனையையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாரே, என்பதுதான் கண்ணீரை வரவழைக்கின்றது.

தாவீதின் வாழ்க்கையில் திரும்பத் திரும்ப மனவேதனை தரும் சூழ்நிலைகள் வந்துகொண்டுதானிருந்தன. அவை ஒருபுறம் அவனை அசைத்துக் கொண்டிருந் தாலும், கர்த்தர் அவற்றின் நடுவிலும் தன்னைத் தாங்குவதை அவனால் உறுதிப் படுத்த முடிந்தது. எனவேதான், மரணஇருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும், நான் பொல்லாப்பிற்குப் பயப்படேன் என்று தாவீதால் கூற முடிந்தது. (சங்கீதம் 23:4) ஆம், இந்தப் பூமியில் சில நேரங்களில் நாம் சந்திக்க நேரிடும் வேதனைமிகு சூழ்நிலைகள், தேவன் திட்டமிட்டு நாம் காணச் செய்தவை அல்ல. அவை இந்தப் பாடுகளுக்கான வாய்ப்புள்ள பூமியின் சூழ்நிலைகள் தந்தவை.

அங்கே நாம் ஏன் தேவனே இப்படி? ஏன் தேவனே இப்படி? எனப் புலம்பு வதற்கு தூண்டப்படலாம். ஆனால், அது போன்ற சூழ்நிலைகளைத் தேவன் வராமல் தடுக்காவிட்டாலும், அவற்றைக் கடந்து செல்லுவதற்கான கிருபையைத் தம்முடைய பிரசன்னத்தின் மூலம் அருளுகின்றார். அந்த எதிர்மறைச் சூழ்நிலை களின் நடுவிலும் தம்முடைய ஐக்கியத்தை அருளி, நமக்கு நம்பிக்கை தருகின்றார்.

சிந்தனைக்கு...

கடினமான காலங்களைக் கடக்கும் போதுதான்,
கர்த்தருடைய கிருபையின் ஆற்றல்கள் அதிகமாக உணரப்படுகின்றது

பிப்ரவரி 25

நம்மாலும் முடியும்

சங்கீதம் 18:1–38

உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்.
சங்கீதம் 18:29

நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது, என்னுடன் பயின்ற மாணவர்கள், என்னைக் கடலில் விளையாடப் போகலாம் என்று சொல்லி அழைத்துப் போவார்கள். நான் கடலின் அலைகளைக் கண்டு பயந்து தூரமாய் நிற்பேன், ஆனால், சில நண்பர்கள் சிலமுறை என்னைக் கட்டாயப்படுத்தி பெரிய அலைகளுக்குள் இழுத்துப் போயிருக்கிறார்கள். ஆனால், நான் பயந்தது போல எதுவும் நடக்க வில்லை. அந்த அலைகள் என்னைப் புரட்டி எடுக்காமல், பிரச்சினையில்லாமல் என்னைக் கரையில் கொண்டு தள்ளியிருக்கின்றன. அது ரொம்ப ஜாலியாக இருந்தது. பின்னர் நானும் பயப்படாமல் அவர்களோடு போய், பெரிய அலைகள் எழும்பும் போது விளையாடுவேன்.

வாழ்க்கையில் கஷ்டங்கள் வந்தால், நம்மால் எதிர்கொள்ள இயலாது என்ற எண்ணம்தான், நமக்கு அதிகப் பயத்தை தருகின்றது. சில பிரச்சினைகள் வந்தால், அவற்றைச் சந்திக்க முடியாது என்ற எண்ணம்தான், நமக்குள் அதிகமான பதட்டத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால், உண்மை அது அல்ல. அவை வந்தால் நம்மால் எதிர்கொள்ள முடியும். அதுபோன்ற எதிர் அலைகளை நாம் தைரியமாய் மேற்கொள்ள, அந்தச் சூழ்நிலைகள் வரும்போது நமக்குத் தேவ கிருபை கிடைக்கும்.

வாழ்க்கையில் எதிர்பாராத சில கஷ்டங்கள் வரும்போதுதான், நம்மாலும் தேவ கிருபைச் சார்ந்து செயல்பட்டு, அவற்றைக் கடக்க முடியும் என்ற நம்பிக்கை வருகிறது. யுத்தத்தை நேரடியாகச் சந்திக்காமல் பயிற்சிபெறும் வீரர்கள், கொஞ்சம் பதட்டத்தில்தான் இருப்பார்கள். ஆனால், சில போர்க்கள அனுபவங்களைப் பெற ஆரம்பித்த பின்பு, பயமும் பதட்டமும் போய்விடுகிறது. அதன்பின்பு, வந்தால் சந்திப்போம் என்ற தைரியம் வந்துவிடும். அவ்விதமே தேவனும், சில சோதனை களை நாம் காண நேரிடும் போது, அவற்றைக் தடுக்காமல் அனுமதிக்கின்றார்.

அங்கே, நம்முடைய எந்த ஒரு சோதனையின் நடுவிலும், தேவனுடைய அனுக்கிரகம் ஏதாவது ஒரு விதத்தில் வந்து உதவும், என்ற நம்பிக்கை உறுதிப் படுகின்றது. கரடியையும் சிங்கத்தையும் சந்திக்க நேர்ந்த தாவீது, அவற்றை எதிர்த்து வெற்றி பெற தேவன் கிருபை கொடுத்ததைக் காண முடிந்தது. எனவே, கோலியாத் என்ற பெரிய சவால் வந்த போதும், சவுலைப் போல தாவீது பயப்படவில்லை. அவன் பயப்படாமல் கர்த்தரைச் சார்ந்த விசுவாசத்தால், தன்னால் கோலியாத்தை எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு புறப்பட்டுச் சென்றான்.

சிந்தனைக்கு...

துன்பங்கள் கொண்டுவரும் கஷ்டத்தை விட,
துன்பங்களைக் குறித்த கற்பனைதான் அதிகக் கஷ்டங்களைக் கொண்டுவரும்.

பிப்ரவரி 26

மனம்சீகம் சகஜமே

சங்கீதம் 42:1–11

என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்?
சங்கீதம் 42:5

கர்த்தரை நாம் ஏற்றுக் கொள்ளும் போது, நாம் ஆவிக்குரிய மறுபிறப்புப் பெறுகின்றோம். ஆவிக்குரிய மனிதனாக மாறுகின்றோம். ஆயினும், மாம்சத்தில் வாழ்கின்றபோது மாம்சீகமான பலவீனங்களும், பார்வைகளும் தொடரவே செய்யும். ஆனால், ஆவிக்குரிய மனிதனாக நின்று நாம் மாம்சீக உணர்வுகளை மேற் கொள்ள வேண்டும். நாம் எதிர்மறையான சூழ்நிலையைக் காண நேரிடும் போது, நமக்குள்ளிருக்கும் மாம்சீக மனிதன் கலங்கவும் திகைக்கவும் செய்வது இயற்கை யானது. ஆனால், அதுதான் நம்முடைய நிலமை அல்ல.

நாம் ஆவிக்குரிய மனிதனாக மறுபடியும் பிறந்துள்ளோம். அந்த விசுவாசத் தோடு மாம்சீக மனிதனின் உணர்வுகளை ஆவிக்குரிய மனிதனைக் கொண்டு மேற்கொள்ள வேண்டும். தாவீது மிகவும் சோர்வுக்குரிய போராட்டமான சூழ்நிலை களைச் சந்தித்த போது, ஒரு புறம் மாம்சீக மனிதன் என்ற முறையில் எல்லோரைப் போல கலங்கவும் திகைக்கவும் செய்தான். ஆனாலும், அந்த நிலமையைத் தன்னுடைய உண்மை நிலமையாக அவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

தான் ஒரு தேவ பக்தியுள்ளவன் என்பதையும், தனக்குத் தேவன் துணை யாயிருப்பார் என்பதையும், அவன் சிந்திக்கத் துவங்கினான். எனவே, ஆவிக்குரிய மனிதன் என்ற முறையில் மாம்சீக ஆத்துமாவைப் பார்த்து அவன் பேசினான். என் ஆத்துமாவே, ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? என்று கேட்டான். (சங்கீதம் 42:5) மாம்சத்திற்கும் ஆவிக்கும் இடையே எப்போதும் போராட்டம் நடைபெறவே செய்யும். ஆனால், மாம்சம் என்ன சொல்கிறதோ, அது வல்ல நம்முடைய உண்மையான மனதின் குரல். நாம் ஆவிக்குரியவர்கள் என்ற அடிப்படையில், ஆவிக்குரிய விசுவாசத்தோடு நாம் என்ன சொல்லு கின்றோமோ, அதுதான் உண்மையான மனதின் குரல்.

எவ்வளவுதான் ஆவிக்குரிய நிலையில் நாம் வளர்ந்தாலும் சரி. எவ்வளவு தான் விசுவாசத்தில் வளர்ந்தாலும் சரி. சூழ்நிலைகளின் அழுத்தங்களால் ஏற்படும் அதிர்வுகள் நம்மைப் பாதிக்காமலிராது. கலக்கம், பயம், சோர்வு ,வருத்தம் போன்ற சாதாரண மனுஷீக உணர்வுகள், நமக்கும் ஏற்படவே செய்யும். ஆனால், நாம் உஷாராகிக் கொள்ள வேண்டும். நாம் மாம்சீக உணர்வுகளைச் சார்ந்தவர்கள் அல்ல. ஆவிக்குரிய உணர்வு சார்ந்தவர்கள். அந்த ஆவிக்குரிய நிலமையைக் கொண்டு, மாம்சீக நிலமையை மேற்கொண்டு வெற்றியாக நிற்கப் பழகவேண்டும்.

சிந்தனைக்கு...

பயமும் கவலையும் துரத்தினால் ஓடாது.
விசுவாசத்தைக் கொண்டு அவற்றைத் துரத்து.

பிப்ரவரி 27

ஆவிக்குரிய உணர்ச்சி

2 தீமோத்தேயு 3:1–17

ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற.
2 தீமோத்தேயு 3:7

ஒரு போதகர் இறையியல் கற்று, வேதாகம சம்பந்தமான மிகுதியான அறிவு வளம் பெற்றவர். தேவனைக் குறித்தும், தேவ போதனைகளைக் குறித்தும், மிகச்சிறந்த இறையியல் அறிவோடு அவர் சொற்பொழிவாற்றுவார். அவருடைய வேதாகம அறிவு, அநேகரை ஆச்சரியப் படுத்தும். தேவனுக்கு எவை பிரியம், எவை பிரியம் அல்ல என்பதை எவரும் எளிதாக புரியும்படி பேசுவார். ஆனால், இது ஒரு புறம் இருக்க, மறுபுறத்தில் அவரிடம் தேவனுக்குப் பிரியமற்ற பல விஷயங்கள், சுபாவங்களின் வடிவத்திலும், செயல்களின் வடிவத்திலும் அவரிடமுண்டு. ஆனால், அவற்றை அவர் உணர்ந்து அவற்றை விட்டு விலகவில்லை.

காரணம் என்ன? அவரிடம் ஆவிக்குரிய அறிவு இருந்தது. ஆனால், அதனை உணரும் ஆவிக்குரிய உணர்ச்சி இல்லை. எனவே, அவர் தன்னிடமிருந்த தேவனுக்குப் பிரியமற்ற விஷயங்களை அறிய இயன்றாலும், அவை அவரை உறுத்தவில்லை. சிலரால் தங்களின் சரீரமும், உடைகளும் மிக மிக அழுக்காக யிருப்பதை அறிய இயலும். ஆனாலும், அவை அவர்களை உறுத்துகின்ற நிலை இல்லை. ஏனென்றால் ,அழுக்கை அருவருப்பாக உணருகின்ற மனநிலை இல்லை.

சிலர் தங்களின் வீட்டை மிக மிக மோசமாக சுத்தம், ஒழுங்கு இல்லாமல் வைத்திருப்பார்கள். ஆனால், வருகிறவர்களிடமெல்லாம், எங்கள் வீடு சுத்த மாயில்லை, ஒழுங்காயில்லை என்று சிரித்துக் கொண்டே புலம்புவார்கள். ஆனால், ஒருபோதும் வீட்டை சுத்தமாக வைக்கப் பிரயாசப்படமாட்டார்கள். ஏனென்றால், சுத்த மற்ற வீட்டு ச்சூழ்நிலையை அசௌகரியமாக உணருகின்ற உணர்ச்சி அவர்களுக் கில்லை. அது போலவே, நாம் எவ்வளவுதான் தேவனுடைய நீதி, பரிசுத்தம், உண்மை ஆகியவற்றை அறிந்திருந்தாலும், தேவஆவி நமக்குள் இல்லா விட்டால், அவற்றைச் சார்ந்து செயல்படத் தூண்டும் உணர்ச்சி இராது.

சிலர் வேதாகமத்தைத் திரும்பத் திரும்ப வாசித்து அறியாத விஷயம் எதுவும் இருப்பதில்லை. ஆனால், வேதத்திற்கேற்ற ஒரு வாழ்க்கை முறையை அவர்களிடம் பார்க்க முடிவதில்லை. சிலர் சபை ஆராதனை வேளையில் பரவசத்தாலும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தாலும், முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டவர்கள் போலக் காணப்படுவார்கள். ஆனால், வாழ்க்கையிலோ நற்சுபாவங்கள் இராது. காரணம் என்ன? பரவசம் உண்டு, ஆனால், பரிசுத்த ஆவி இல்லை. எனவே ,பரிசுத்தமாக வாழத்தூண்டுகின்ற ஆவிக்குரிய உணர்ச்சி இல்லை.

சிந்தனைக்கு...

மின்சாரமில்லாமல் விளக்கு எரியாது,
பரிசுத்த ஆவி இல்லாமல் ஆன்மிக அறிவு பிரகாசிக்காது.

பிப்ரவரி 28

தேவனைத் தேடுங்கள்

ஆமோஸ் 5:1–14

கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்.
ஆமோஸ் 5:6

ஒருவர் கர்த்தர் தன்னோடு இருப்பதாகக் கூறுவார். ஆனால், ஏதாவது ஒரு சூழ்நிலை எதிர்விதமாக அமைந்தால், பலவாரங்கள் சபைக்குப் போகமாட்டார். அவசரமான வேலைகள் இருந்தால், பலநாள் ஜெபிக்காமல் தவிர்ப்பார். யாராவது உறவினர்கள் வீட்டிற்கு வந்துவிட்டால், வேதாகமத்தை வாசிப்பதையும், ஜெபங்களில் ஈடுபடுவதையும் நிறத்திவிடுவார். ஆம், இவருடைய இறை உறவு இவருடைய தலையில் இருக்கிறது. ஆனால், அது இருதயத்தில் இல்லை.

அநேகர் கர்த்தர் தங்களோடிருப்பதாகக் கூறுவதெல்லாம், ஒரு மத நம்பிக்கையின் பிரதிபலிப்புதானேயன்றி, உண்மையான அனுபவம் அல்ல. சிலர் கொஞ்சம் பக்தி ஒழுங்குகளோடு வாழ்வதைத் தேவன் அவர்களோடிருப்பதின் விளைவு என்று எண்ணி விடுகின்றனர். சிலர் என்றாவது ஒரு நாள் அவர்களுக்கு ஆதரவாக ஒரு நல்ல காரியம் நடந்ததை, தேவன் அவர்களோடிருப்பதின் அடையாளமாக எண்ணுகின்றனர். ஆனால், இவை எதுவும் தேவன் ஒருவரோடிருப்பதின் அடையாளங்கள் ஆகிவிடாது.

ஒருவரிடம் தேவ உறவின் அனுபவம் இருப்பதின் முக்கியமான அடையாளம், அவருக்கு தேவனைத் தேடுவதற்கு ஏற்படுகின்ற ஆவல்தான். தாவீதுக்குப் பழைய ஏற்பாட்டின் காலங்களிலேயே, கர்த்தரைத் தாகத்தோடு தேடுகின்ற ஒரு அனுபவம் இருந்தது. அவன் மான்கள் நீரோடையைத் தாகத்தின் விளைவாகத் தேடுவது போல தேவனை வாஞ்சை யோடே தேடுகின்ற ஒரு மனிதனாயிருந்தான். (சங்கீதம் 42:1) நாம் போதனைகளைக் கேட்டுக் கேட்டுத் தேவனைத் தேடுகின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது அல்ல. நமக்குள் ஒரு ஆவிக்குரிய இயற்கை சார்ந்த ஒரு தாகம் வேண்டும்.

முதலாவது, நாம் இரட்சிப்பின் அனுபவத்தின் மூலம், தேவ ஆவியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். விசுவாசத்தினால், கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்று எண்ணி, அவரைத் தேட வேண்டும். கர்த்தர் நம்மோடிருப்பது என்பது ஒரு வெறும் நம்பிக்கை அல்ல. அது ஒரு அனுபவம். நாம் தேடத் தேட அதனை உண்மை என்று அறியமுடியும். நமக்கு மிகவும் முக்கியமான உறவை, எப்படித் தினமும் நாம் தேடக் கவனமாயிருப்போமோ, அப்படியே கர்த்தருடைய உறவையும் தேட வேண்டும். கர்த்தர் நம்மோடிருக்கின்ற நிச்சயத்தை ஆத்துமாவில் உணர்ந்து விட்டால், பின்னர் தேவனைத் தேடுதல் என்பது இயல்பாக மாறிவிடும்.

சிந்தனைக்கு...

பக்திமான் கடவுளைக் கோயிலில் தேடுகிறான்.
பரிசுத்தவான் கடவுளைத் தனக்குள் தேடுகிறான்.

பிப்ரவரி 29

ஆசீர்வாதத் தேடல்

யோவான் 6:48–71

இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்.
யோவான் 6:60

பிரபலமான ஆசீர்வாதச் ஜெபக் கூடுகைகளுக்கு ஜனங்கள் திரளாக வருகின்றனர். சிலர் சில ஜெபக் கூடுகைகளுக்குப் பலவருடங்களாகத் தவறாமல் வருகின்றனர். எதற்காக வருகின்றீர்கள் என்று பலரைக் கேட்டுப்பார்த்தால், ஏதாவது தேவ ஆசீர்வாதம் கிடைக்காதா என்பதே நோக்கமாயிருப்பது தெரியும். பெரும்பாலும் இன்று அநேகர் சபைகளுக்காயினும், ஜெபக் கூடுகைகளுக்காயினும் செல்வது, ஆசீர்வாதங்களைத் தேடியே. கடவுளிடமிருந்து ஏதாவது நன்மை கிடைக்காதா என்பதே அவர்களின் ஆதங்கம்.

கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலம் உண்டாயின என்று வேதம் சொல்கிறது. (யோவான் 1:17) ஆனால், ஜனங்கள் கிருபையினால் வந்த இரட்சிப்பையோ சத்தியத்தையோ தேடிப் பெரும்பாலும் ஜெப ஸ்தலங்களுக்கு செல்லவில்லை. கிருபைதான் தேவனுடைய பிள்ளையாக நம்மை மாற்றுகிறது. ஆனால், பிள்ளைகள் என்ற தெய்வீக அந்தஸ்தைப் பெற்று, தேவ நன்மைகளை உரிமையோடு தேடும் நிலைக்கு அநேகர் வரவேயில்லை. சத்தியம்தான் நம்மை விடுதலையாக்கும். (யோவான் 8:32) ஆனால், சத்தியத்தைத் தேடி ஜனங்கள் வரவில்லை.

அன்று, இயேசு அப்பம் பங்கிட்டுத் தருவார் என்ற நம்பிக்கையில், இயேசுவை நோக்கி ஆயிரக்கணகானவர்கள் வந்தனர். ஆனால், அவர் சத்தியத்தைப் பேச ஆரம்பித்தபோது, இது கடின உபதேசம் என்று கூறித் திரும்பிச் சென்றுவிட்டனர். ஏனென்றால், அவர்கள் சத்தியத்தினால் விடுதலையாகும் ஒரு ஆசீர்வாதம், தங்களுக்கு மிகவும் அவசியம் என்று நினைக்கவில்லை. வாழ்க்கைப் பிரச்சினைகளினால் வருத்தப்படும் மக்கள், சத்தியத்தைத் தேடுவதை மிக முக்கியமாக எண்ணாமல், சரீரத் தேவைகளைத்தான் பிரதான தேவையாக நினைப்பார்கள் என்பது உண்மைதான். ஆனால், அநேகர் எத்தனை ஆண்டுகள் ஆனாலும், ஆன்மிகம் என்றால், சரீரரீதியான ஆசீர்வாதத் தேடலையே வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இன்றும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஆசீர்வாதத் தேடலையே, கிறிஸ்தவத் தொடர் அனுபவமாகக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் சத்தியம் என்பதைத் தேடுகின்ற உணர்வற்றவர்களாக உள்ளனர். ஏனென்றால், அவர்கள் பல ஆண்டு, கிறிஸ்தவர்களாயிருந்தும், இன்னும் கிறிஸ்துவுக்கு வெளியிலேயே இருக்கின்றார்களேயன்றி, கிறிஸ்துவுக்குள் வரவில்லை. கிறிஸ்துவுக்குள் வந்திருந்தால், இரட்சிப்பு வந்திருக்கும், சத்திய ஆவி வந்திருக்கும். சத்திய ஆவி வந்திருந்தால், சத்தியத்தைத் தேடுதல் என்பது அவர்களுக்கு இயல்பான காரியமாயிருக்கும்.

சிந்தனைக்கு...

தேவனுக்குரியவைகளைத் தேடிச் செல்லும் மனிதன்தான்,
தனக்குரியதையும் பெற்றுத் திரும்புகிறான்.

மார்ச் 1

பாவ மனிதன் அகலணும்

1 கொரிந்தியர் 1:1–18

பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற....
1 கொரிந்தியர் 1:2

சிலருக்கு எவ்வளவுதான் பரிசுத்தம் தொடர்பாகப் பேசினாலும், அவர்களுக்குள் பரிசுத்த வாஞ்சை ஏற்படுவதில்லை. சிலர் பரிசுத்தம் தொடர்பான பிரசங்கங்களைக் கேட்டாலும், பரிசுத்தமற்ற வாழ்க்கைமுறையே அவர்களின் அடையாளமாயிருக்கிறது. சிலரால் பரிசுத்தமாக வாழ்வதில் ஒருபோதும் வெற்றி பெற முடியவில்லை. இதற்கு முக்கியமான காரணம், பரிசுத்த உணர்ச்சி நிலை இல்லாமையே. சிலர் அழுக்கு உடைகளோடு எளிதாக அழுக்கடையும் தன்மையுள்ள சில வேலைகளில் இருப்பார்கள். அப்போது எத்தனை அழுக்குகள் படிந்தாலும் அதைக் குறித்த அருவருப்பு உணர்வு அவர்களுக்கு ஏற்படாது.

அதே வேளையில், அவர்கள் நன்றாக உடலைச் சுத்தம் செய்து சுத்தமான உடைகளை அணிந்துவிட்டால், நல்ல சுத்த உணர்வுடையவர்களாயிருப்பார்கள். அது போல பாவிகளாயிருந்த நாம் அந்த பாவ மனிதன் என்ற அழுக்குடையை அகற்ற வேண்டும். தேவனுக்கேற்ற புதிய மனிதன் என்ற புதிய உடையை அணிய வேண்டும். இரட்சிப்பு என்பது நமக்குள்ளே கர்த்தராலே பரிசுத்தமாக்கப்பட்ட உணர்வைத் தரவேண்டும்.

நாம் பழையவர்கள் அல்ல, புதியவர்கள் என்ற விழிப்புணர்வு நமக்கு வந்துவிட்டால், நாம் நம்மைச் சுத்தமாக வைத்துக்கொள்ள அதிகக் கவனம் செலுத்துவோம். பரிசுத்த ஆவி ஒருவருக்குள் வந்துவிட்டால் பரிசுத்த உணர்வும் வரும். அந்தப் பரிசுத்த உணர்வு வந்துவிட்டால், பாவ அழுக்கு நம்மில் சேராதிருக்கவும், சுத்த நிலமை பாதிக்காமலிருக்கவும் அதிகக் கவனம் செலுத்துவோம். அநேகர் பாவ நிலமையை விட்டு நீங்காமல், பக்தி என்ற உடையை அணிந்து கொள்கின்றார்கள். எனவே, பக்தியும் இருக்கிறது, பரிசுத்தமற்ற நிலமையும் தொடர்கின்றது. அவர்கள் தங்களின் பக்தி நிலமையைப் பார்த்து திருப்தியடைகின்றனர். ஆனால், பாவ அழுக்குகள் சேர்ந்தாலும், அதனால் எந்தப் பிரச்சினையையும் உணர்வதில்லை.

பழைய பாவ மனிதன் என்ற அழுக்கு உடை அகலாவிட்டால், பரிசுத்தமாக வாழவேண்டும் என்ற நல்ல உணர்வு, ஒருபோதும் நமக்குள் ஏற்படாது. இன்னும் இன்னும் ஜெபம், ஆராதனை, காணிக்கை என்று ஆழமாகப் போவோமேயன்றி, பரிசுத்த தரிசனத்தோடு, மாசற்ற ஒரு வாழ்க்கை முறை நோக்கிச் செல்லமாட்டோம். நாம் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டோம். முதலாவது, பாவ மனிதன் நீங்கும்படியான மறுபிறப்பின் அனுபவம் நமக்குள் நிகழ வேண்டும்.

சிந்தனைக்கு...

பக்தி நம் தவறுகளை உணரவிடாமல் தடுக்கும்,
அதுவே தேவ ஆசீர்வாத வாசலை நமக்கு அடைக்கும்.

மார்ச் 2

ஜீவனின் அடையாளம்

1 யோவான் 5:1–13

தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.
1 யோவான் 5:12

இயேசுவே நித்திய ஜீவன். அவரை உடையவன் ஜீவனை உடையவன். ஜீவனை உடையவன் என்றால், தேவனுடைய பிள்ளை என்ற ஆவிக்குரிய நிலைமையில் வாழ்வதற்கான வல்லமை உடையவன். அந்த ஜீவனைக் குறித்த நிச்சயம் உடையவன், நித்திய தேவ இராஜ்யத்தில் நிச்சயமாகச் செல்வேன் என்ற நம்பிக்கை உடையவன். எனவே, தேவ குமாரனாகிய இயேசு என்னோடிருக்கின்றார் என்ற நிச்சயம் சார்ந்த வாழ்வு நமக்குத் தேவை. ஆவிக்குரிய ஜீவன் செயல் படுகின்ற அடையாளங்கள் இருந்தால், தேவ குமாரனாகிய இயேசு நம்மோடிருப்பது உறுதிப்பட்டு விடுகிறது.

நான் இயேசுவைக் கனவிலோ, தரிசனத்திலோ, இதுவரை கண்டதில்லை. ஆனால், அவர் என்னோடிருப்பது எனக்குள் உறுதிப்பட்ட ஒரு அனுபவம். எப்படி அவர் என்னோடு இருப்பதாக நான் சொல்கிறேன்? அவருடைய ஜீவன் எனக்குள் கிரியை செய்கிறது. அவருடைய ஜீவனை நான் எனக்குள் அடையாளம் காண் கின்றேன். எனவே, அந்த ஜீவனுக்குப் பின்னால் இயேசு நிச்சயமாக இருப்பார் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால், ஆவிக்குரிய ஜீவன் அவருக்குள்தான் இருக்கிறது. அவர் என்னோடிருந்தால்தான் அவருடைய ஜீவன் என்னோடிருக்கும்.

அவருடைய ஜீவன் ஒருவருக்குள் இருப்பதின் அடையாளம் என்ன? அந்த ஜீவனால் அவர் கிறிஸ்துவுக்கு உகந்த சுபாவங்களை வெளிப்படுத்துவார். ஏனென்றால், ஆவிக்குரிய ஜீவனின் பிரதான கிரியை, சுபாவ மண்டலத்தில்தான் நடைபெறுகின்றது. எனவேதான் இயேசு கிறிஸ்து, என்னில் நிலலைத்திருக்கிறவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்றார். (யோவான் 15:5) தேவ குமாரனுடைய ஜீவன் நமக்கிருந்தால், அந்த ஜீவனால் நமக்குப் பரிசுத்தமும், சமாதானமும், சந்தோஷமும், நம்பிக்கையும் உண்டு.

சிலர் கர்த்தர் தங்களோடிருப்பது பலவித அடையாளங்களால் வெளிப்படுத்தப் படுகிறது என்பார்கள். சொப்பனத்தில் கர்த்தர் வருகிறார் என்பார்கள். தரிசனத்தில் கர்த்தர் தம்மைக் காண்பிக்கிறார் என்பார்கள். அற்புதம் நடக்கிறது என்பார்கள். ஆவியில் உணருகிறேன் என்பார்கள். ஆனால், அவர்களின் சுபாவங்களில் விசேஷம் எதுவும் தெரிவதில்லை. அவர்களுக்கு பரிசுத்த தாகம் இருப்பதில்லை. அவர்களால் உலகத்தையோ, பாவசாயலான ஆசைகளையோ மேற்கொள்ள முடிவதில்லை. ஏனென்றால், அவர்களுக்குள் ஜீவன் இல்லை.

சிந்தனைக்கு...

தரிசனங்களும் சொப்பனங்களும் பரவசம் தரும்.
கிறிஸ்துவின் ஜீவன்தான் நமக்குப் பரிசுத்தம் தரும்.

மார்ச் 3

போலி சாட்சி

மத்தேயு 4:1–11

இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்.
மத்தேயு 4:9

நான் சிலரைப் பார்த்திருகின்றேன். நிறைய சம்பாதிக்கின்றார்கள். அவர்கள் நல்ல சௌகரியமாக வாழ்கின்றார்கள். அவர்கள் தங்களின் எல்லா உயர்வுகளும், வசதிகளும், அந்தஸ்துக்களும் கர்த்தரால் வந்தவை என்று சாட்சி கூறுகின்றார்கள். அவர்கள் ஆடம்பரமாக வாழ்கின்றார்கள். ஆனால், அது தவறு அல்ல என் கிறார்கள். அவர்கள் அதிநவீன ஒழுக்க தோற்றமற்ற உடைகளை அணிகின் றார்கள். ஆனால், அது தவறு அல்ல என்கிறார்கள்.

சராசரி உலக மனிதன் வாழ்கின்ற விதமான எல்லா உலகப்பிரகார விஷயங் களோடும் இவர்களும் கலக்கின்றார்கள். ஆனால், இதில் தவறு என்ன என்று கேட்கின்றார்கள். அவர்கள் சபை செயல்பாடுகளையும் சினிமா ரகமாக இருக்கவே ஆசைப்படுகிறார்கள். ஆனால், இதெல்லாம் இக்காலச் சூழலுக்குத் தேவை என்கிறார்கள். இவர்கள் தங்களைப் பரிசுத்தவான்கள் என்று சொல்லுவதற்கு ஒரே ஒரு அடையாளத்தை வைத்திருக்கின்றார்கள். அது என்ன? இயேசுவைக் கடவுள் என்று விசுவாசித்து, இயேசுவுக்கே ஆராதனை செய்கிறார்கள்.

இவர்களுக்கு எதுவும் தவறில்லை. இவர்களுக்கு எதுவும் பரிசுத்தமற்றது அல்ல. அப்படியானால், இயேசு இவர்களிடம் இருப்பதால் என்னதான் நடந் திருக்கிறது என்று கேட்டால், நாங்கள் விரும்பின செல்வங்கள் யாவும் பெற்று, நன்றாக இருக்கிறோம் என்கிறார்கள். இவர்களைச் சுற்றி ஒரு மதியீனக் கூட்டம் இருக்கிறது. வசதிமிக்க இவர்கள் சபைகளில் வந்து, இயேசுவை மெச்சிப் பேசவோ பாடவோ செய்தால், உடனேயே அவர்கள் அதை இயேசுவுக்குக் கிடைத்த மகிமை யாக எண்ணுகிறார்கள். எவ்வளவு வசதியோடு வாழ்ந்தும் இயேசுவை மறவாமல், அவருக்குச் சாட்சி சொல்கிறார்களே என்று, இந்த மதியீனக் கூட்டம் அர்த்த மில்லாமல் மகிழ்கிறது.

ஆனால், இவர்கள் இயேசுவுக்குச் சாட்சியாக சுபாவங்களையோ, வாழ்க்கை முறைகளையோ, உடைநடைகளையோ, எதையும் காட்ட முடிவதில்லை. ஒரே ஒரு சாட்சிதான் உண்டு. அது இயேசு எங்களை ஆசீர்வதித்து உயர்த்தியிருக் கின்றார் என்பதே. ஆனால், இது முட்டாள்தனமான சாட்சி. இவர்களை வேதாகமம் கூறுகின்ற இயேசு ஆசீர்வதித்து உயர்த்தவில்லை. பணத்தையும் வசதியையுமே ஆசீர்வாதமாக எண்ணும் இவர்களை உயர்த்தியது. சாத்தானே, ஏனென்றால், இயேசுவைப் பிரதிபலிக்கும் பரிசுத்த சாட்சி இவர்களிடம் எதுவும் இல்லை.

சிந்தனைக்கு...

உலக நாகரீகங்களுக்கு ஒத்து ஓடுகிறவன்,
இதுவரை உன்னத வாழ்வுக்கான தகுதியைப் பெறவில்லை.

மார்ச் 4

நல்ல சூழ்நிலையா, நல்ல மனமா?

சங்கீதம் 4:1–8

நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப் பண்ணுகிறீர்.
சங்கீதம் 4:8

ஒருவருடைய வாழ்க்கையில் நிறைய விஷயங்கள் சாதகமாயிருக்கலாம். அதனால், அவர் அவருடன் கர்த்தர் இருக்கின்றார் என்று கூறிவிட முடியாது. ஒருவருடைய வாழ்க்கையில் நிறைய விஷயங்கள் அவருக்குப் பாதகமாக இருக்கலாம். அதனால் அவரோடு கர்த்தர் இல்லை என்று கூறி விட முடியாது. சாலொமோன் ராஜாவுக்கு பல விஷயங்கள் சாதகமாயிருந்தது. ஆனால், சாலொமோனுடன் கர்த்தர் இருந்தார் என்று கூறிட சான்றுகள் இல்லை. யோசேப்பிற்கு நிறைய விஷயங்கள் எதிராக இருந்தது. ஆனால், யோசேப்போடு கர்த்தர் இருந்தார் என்றுதான் வேதாகமம் கூறுகின்றது. (ஆதியாகமம் 39:2).

ஒருவரோடு கர்த்தர் இருப்பதையும் இல்லாததையும், அவருக்கு அமைகின்ற சாதகமான அல்லது பாதகமான சூழ்நிலைகளை வைத்துத் தீர்மானிக்க முடியாது. அந்த மனிதன் மனம் சார்ந்த வாழ்க்கை எப்படியிருக்கிறது என்பதே முக்கியம். தாவீது பலவிதமான எதிர் சூழ்நிலைகளில் வாழ நேரிட்டது. ஆனாலும், கர்த்தர் தன்னோடிருக்கின்றார் என்று அவனால் கூற முடிந்தது. ஏனென்றால், மனதிற்குள் தேவன் அளித்த விசுவாசமும், அமைதியும், சந்தோஷமும் அவனுக்கிருந்தது.

நான் கர்த்தரை ஏற்றுக் கொண்டு வாழத் துவங்கின காலகட்டத்தில், என்னைப் போல கர்த்தரை விசுவாசித்த சிலருக்கு, மிக நல்ல வசதியான வாழ்க்கை இருந்தது. அவர்களை கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களைப் போல பிறர் பார்த்தனர். என் னையோ பரிதாபமாகப் பார்த்தார்கள். ஏனென்றால், நானோ வாழ்வை தக்க வைக்கவே மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. ஆனால், அவர்களிடம் கர்த்தர் இருந்ததற்கான சான்றுகளை நான் பார்க்கவில்லை. சௌகரியமானவாழ்க்கை மட்டுமே இருந்தது. ஆனால், என்னிடம் எதுவுமில்லாத போது, இயேசு என்னோ டிருப்பதற்கு என்னிடம் ஏராளம் ஆவிக்குரிய சான்றுகள் இருந்தது.

சவுலிடம் தேவன் கொடுத்த ராஜபதவி என்ற ஆசீர்வாதம் இருந்தது. ஆனால், கர்த்தர் அவனோடு இருக்கவில்லை. ஆனால், அந்தக் காலகட்டத்தில் தாவீதிடம் எதுவும் இருக்கவில்லை. ஆனால், தாவீதோடு கர்த்தர் இருந்தார். எனவே, அவனால் துன்பங்களுக்கு நடுவிலும் சமாதானமாகப்படுத்து உறங்க முடிந்தது. ஆம், நமக்கு என்ன விதமான சூழ்நிலை அமைந்திருக்கிறது என்பது அல்ல. நமக்குள் கர்த்தரை அடையாளங்கண்டு தைரியத்தோடும், சமாதானத்தோடும் வாழ்கின்ற இருதயம் இருக்கிறதா என்பதே முக்கியமானது.

சிந்தனைக்கு...

உனக்குள் தேவன் ஆதரவாயிருப்பதை அறிந்தால் ,
வெளியே எல்லாம் பாதகமாயிருந்தாலும் பயப்படாதே.

மார்ச் 5

ஆசீர்வாத வாழ்க்கை

பிலிப்பியர் 4:1–13

எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க....
பிலிப்பியர் 4:11

நான் கர்த்தருடைய ஊழியத்திற்காக உருவாக்கப்பட்ட துவக்க காலத்தில், பல ஆண்டுகள் ஒரு வனாந்திர வாழ்க்கையைத்தான் வாழ நேர்ந்தது. சுவையான உணவுகள், சௌகரியமான தங்குமிடம், தரமான உடைகள், ஆறுதலான ஐக்கியங்கள் போன்றவை எனக்கு மிகவும் துரமாகவேயிருந்தன. சிலர் என்னுடைய சாதாரணச் சூழல்களினிமித்தம், என்னைத் தங்களை விட்டுச் சற்றுத் தூரமாக வைத்தே பார்த்தனர். ஆயினும், ஒரு காலகட்டத்தில் என்னுடைய சூழல்களில் மாற்றம் ஏற்பட்ட போது, அதிசுவையாக உண்ணவும், நவநாகரீகமாக உடுக்கவும் அதிசௌகரிய தங்குமிடத்தை ஏற்படுத்தவும் நான் அதிக ஆர்வம் காட்டவில்லை..

ஏனென்றால், அவைதான் தேவ ஆசீர்வாதம் என்றும், அவைதான் தேவன் தருகின்ற உயர்வுகள் என்றும் நான் எண்ணவில்லை. ஒன்றுமில்லாத காலங்களில் கர்த்தரால் தாங்கப்பட்டு வாழ்ந்த அந்த ஐக்கிய அனுபவங்களையே, நான் இன்றும் மிகப்பெரிய ஆசீர்வாதங்களாக எண்ணுகின்றேன். எந்த மேன்மைகளும் இல்லாத நாட்களில், என்னை மிகுதியாகத் தலைநிமிர்ந்து நடக்க வைத்த தேவ வார்த்தை அனுபவங்களையே, நான் இன்னும் உயர்வாக எண்ணுகின்றேன்.

நான் கர்த்தருக்காகச் சன்னியாச வாழ்க்கையும் வாழவில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதம் என்று எண்ணி அதிசௌகரிய வாழ்க்கையையும் வாழவில்லை. அது ஏதோ பக்தி வைராக்கியம் என்றோ, அதிக அர்ப்பணிப்பு அனுபவம் என்றோ நான் எண்ணவில்லை. கர்த்தர் வாழ்வின் சூழ்நிலைகளை சௌகரியமாக்கினாலும் ஆசீர்வாதம் என்பதும், மேன்மை என்பதும், உயர்வு என்பதும் அவருடன் நம்முடைய ஆத்துமா வாழ்கின்றது என்ற அனுபவத்திலேயே உள்ளது. கர்த்தருடைய சத்திய வார்த்தைகளும் ,அவர் தருகின்ற அனுதினச் சிந்தனைகளும், அவர் கற்றுத் தரும் புதிய புதிய பாடங்களும்தான் வாழ்க்கையை மிகவும் ஆசீர்வாதமாக உணர வைக்கின்றது.

உண்கின்ற உணவிலும், உடுக்கின்ற உடையிலும், அனுபவிக்கின்ற சௌகரியங்களிலும், நாம் ஆசீர்வாதத்தை உணர்ந்தால், திருப்தியடையாமை பிரச்சினைகளும் வரும். நன்றாக உண்பதோ உடுப்பதோ, வசதியாகத் தங்குவதோ தவறாகிவிடாது. ஆனால், ஆசீர்வாத அனுபவம் என்பது அவை அல்ல. கர்த்தரோடு வாழ்ந்து கர்த்தருடைய வழியிலே நடந்து, கர்த்தருடைய சமுகத்தால் மகிழ்ந்து வாழ்வதே ஆசீர்வாதமாக வாழ்வதின் முக்கிய அடையாளம்.

சிந்தனைக்கு...

சாலோமோனைப் போல சகல செல்வங்களும் இருந்தாலும் ,
தாவீதைப் போல தேவனைத் தேடும் இருதயம் இல்லாவிட்டால், பயனில்லை.

மார்ச் 6

யார் முன்மாதிரி?

1 இராஜாக்கள் 12:1–17

நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்?
1 இராஜாக்கள் 12:9

பிறர் நமக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும் என்பதைவிட, நாமும் பிறருக்கு வழிகாட்டிகளாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை தேவை. சில நேரங்களில் நம்முடன் இருப்பவர்களுக்கும் அல்லது நம்முடைய நட்பு வட்டாரத்தில் இருப்பவர்களுக்கும், நாம் மாதிரிகளாக விளங்க முந்திக்கொள்ள வேண்டும். இல்லையென்றால், அவர்கள் நமக்குத் தவறான மாதிரிகளாக மாறிவிட வாய்ப்புண்டு.

மிகப்பெரிய ஞானியின் மகனாகப் பிறந்தவன் ரெகொபெயாம். சாலொமோனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த இவன், ஞானமான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலைகள் வந்தது. அந்தத் தருணத்தில் ஞானியின் மகனுக்குரிய ஞானத்தை வெளிப்படுத்தி, பிறருக்கு முன்மாதிரியாக வேண்டிய கடமை அவனுக்கு இருந்தது. ஜனங்கள் அவனுக்கு முன் வைத்த கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்க, அவன் தன்னுடைய நல்ல அறிவைப் பயன்படுத்தவில்லை. தன்னுடைய தகப்பனோடு நீண்டகாலம் பழகிய அனுபவசாலிகளின் அறிவையும் அவன் பயன்படுத்தவில்லை. ஞானியின் மகன் சாதாரணமானவர்களின் பிள்ளைகளிடம் போய் ஆலோசனை கேட்டான்.

அவர்கள் அவனுக்கு முட்டாள்தனமான ஒரு ஆலோசனையைத் தந்தார்கள். அதனுடைய விளைவாக அந்த சாம்ராஜ்யமே உடைந்தது. நன்கு ஆலோசனை செய்யும் வாய்ப்பை பயன்படுத்தாமல், நட்புகளுக்கு முதல் முக்கியத்துவம் கொடுத்ததால், அவர்கள் அவனுக்குத் தவறான வழிகாட்டிகளானார்கள். நாம் அறிவுத்திறனிலோ, புத்திசாலித்தனத்திலோ பிறருக்கு முன்மாதிரியாக இயலாமல் போகலாம். ஆனால், பண்புத்திறன் என்பதும், புத்திமதித் திறன் என்பதும் மிகவும் மேன்மையானவைகள். கர்த்தருடைய பிள்ளைகள் அவற்றில் படித்தவர்களைவிட, திறமையாளர்களைவிட முன்னணியில் நிற்க முடியும்.

ஏனென்றால், கர்த்தரே நம்முடைய ஞானம். (1 கொரிந்தியர் 1:31) கர்த்தருடைய ஐக்கியத்தில் வாழ்கின்றவர்களுக்கு நற்குண ஆற்றலும், நற்புத்தி ஆற்றலும் உண்டு. அவற்றை நாம் செயல்படுத்தும் போது மற்றவர்களின் தவறான சுபாவங்களோ, வழிகளோ நம்மைப் பாதிக்காது. இன்று அநேகர் கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதைவிட, சில போதகர்ளிடமே அதிக ஐக்கியமாயிருக்கின்றார்கள். எனவே, அநேகர் தவறான போதகர்களின் ஞானமற்ற வழிகளில் போய், பலவித மதியீனமான காரியங்களைக் காண்கின்றார்கள்.

சிந்தனைக்கு...

வாழ்க்கையை வளமாக்க அறிவு உதவும்,
வாழ்க்கையை வலிமையாக்கத் தேவ ஞானம் உதவும்.

மார்ச் 7

துக்கமுகம் வேண்டாம்

சங்கீதம் 85:1–13

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி...
சங்கீதம் 85:6

கர்த்தர் ஒருவரோடு இல்லாவிட்டால் அவரிடம் சத்தியம் இராது. சத்தியம் இல்லாத ஒருவரோடு கர்த்தர் இருக்க முடியாது. சத்தியம் உடைய எவரும் சந்தோஷமானவர்கள். அது பணம், பொருள், ஆஸ்தியினால் வருகின்ற சந்தோஷம் அல்ல. அது கர்த்தரால் வருகின்ற சந்தோஷம். சத்தியம் நம்மைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வல்லமையானது. வேதாகமத்தில் சத்தியத்தோடு வாழ்ந்த எல்லோரும் சந்தோஷமான சூழ்நிலைகளில் வாழ்வதற்கான வாய்ப்புகள் பெற்ற வர்கள் அல்ல. ஆனால், அவர்கள் கர்த்தர் தங்களோடிருப்பதால் சந்தோஷமாக வாழ இயன்றவர்களாயிருந்தனர்.

சிலர் ரொம்பச் சந்தோஷமாயிருப்பது போலத் தங்களைக் காண்பித்து, அதனை ஒரு பக்தியின் அடையாளம் என நினைப்பார்கள். ஆனால், அவர்கள் அவ்விதம் நடித்துக் காட்டுவது போல உள்ளது. நாம் சந்தோஷமில்லாதிருந்தும் சந்தோஷமாக இருப்பது போல, சிரமப்பட்டுக் காண்பிப்பது பக்தி அல்ல. அது ஒரு வித்தியாசமான மாய்மாலம். அப்படியானால், சத்தியத்தை அறிந்த நாம் நமக்கு வருத்தமான சூழ்நிலைகள் இருக்கிறது என்பதற்காகச் சோர்ந்த முகத்துடனும், சஞ்சலத் தோற்றத்துடனும் தோன்ற வேணுமா?

இல்லை. ஜனங்களுக்கு முன்பாகப் போய் பக்திக்காக, இல்லாத சந் தோஷத்தை இருப்பது போலக் காண்பிக்க கூடாது. அது போல, பக்தியோடு தொடர்புடைய நாம், ஜனங்களுக்கு முன்பாகத் துக்கமுகத்தோடும் சோர்ந்த முகத் தோடும் இருக்கக்கூடாது. நாம் துக்கங்களையும், சோர்வுகளையும், வருத்தமான மனநிலைகளையும் கர்த்தருடைய சமுகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். கர்த்தரிடம் நம்முடைய மனவியாகுலங்களைச் சொல்ல வேண்டும். தேவனோடு நம்முடைய வேதனையான மனநிலைகளைப் பகிர்ந்து கொண்டு, அவருடைய கிருபையைத் தேட வேண்டும். அப்போது நம்முடைய துக்கம் சந்தோஷமாக மாறும்.

கர்த்தருடைய சத்தியத்தோடு வாழ்ந்து, கர்த்தரிடத்தில் நம்முடைய மனச் சஞ்சலங்களைப் பகிர்ந்து கொள்வதால், நம்முடைய மனதைத் தேவ சமுகம் சந்தோஷப்படுத்தும். இவ்விதமான சந்தோஷத்தை அனுபவித்தவன் தாவீது. துக் கங்கள் யாவற்றையும் தேவனோடு பகிர்ந்து கொள்ளும் பழக்கமுடைய அவனை, கர்த்தர் சந்தோஷப்படுத்த வல்லவராயிருந்தார். அது திரளான செல்வங்கள் இருக்கும் போது வருகின்ற சந்தோஷத்தைவிட அதிகமாயிருந்தது.

சிந்தனைக்கு...

சத்தியம் தரும் சந்தோஷம் தற்காலிகமல்ல,
செல்வங்கள் தரும் சந்தோஷம் நிரந்தரமல்ல.

மார்ச் 8

ஆசிர்வாத அடையாளம்

ஆதியாகமம் 39:1–23

கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்.
ஆதியாகமம் 39:5

ஒருவர் தன்னை கர்த்தர் மிகுதியாக ஆசீர்வதித்ததின் பிரதிபலிப்பாக, மிகவும் ஆடம்பரமாக வாழ்கின்றார். நல்ல வீடு, நல்ல வாகனம், நல்ல உடைகள், நல்ல ஆபரணங்கள் என பார்ப்பவர்களின கண்கள் உறுத்தும் அளவிற்குப் பகட்டாகக் காணப்படுகின்றார். ஆனால், இவரைப் பார்ப்பவர்கள் இவரை உலகப் பிரகாரமான ஒரு ஆடம்பர மனிதர் என்று சொல்வார்களேயன்றி, இவரை கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று கூறமாட்டார்கள். வேறு ஒருவர் காவி உடை அணிந்து, தாடி வளர்த்து, நிறையப் பக்தித் தோற்றங்களோடு காணப்படுகிறார்.

இவரை ஜனங்கள் ஆன்மீகவாதி என்றும், பக்தன் என்றும் பார்ப்பார் களேயன்றி இவரை ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று பார்க்கமாட்டார்கள். தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட நிலமைக்கு படோடாபமும் அடையாளம் அல்ல, ஆன்மிகத் தோற்றமும் அடையாளம் அல்ல. பெரும்பாலும் படோடாபமாக வாழ்கின்றவர் களை ஜனங்கள் ஆன்மிகவாதி என்று நம்பமாட்டார்கள். அவ்விதம், ஆன்மிகத் தோற்றத்தோடு இருப்பவர்களை உண்மையானவர்கள் என்று நம்பமாட்டார்கள்.

ஒரு மனிதன் ஜனங்களின் நடுவில் விசேஷமாக வாழவேண்டும். அவனிடம் ஜனங்கள் ஒரு வேறுபாட்டைக் காணவேண்டும். அவனிடம் சத்தியத்தைச் ஜனங்கள் காணவேண்டும். அவனிடம் ஜனங்கள் சந்தோஷத்தைக் காண வேண்டும். அவ னிடம் ஜனங்கள் பண்புகள் மிகுந்த வாழ்க்கையைக் காணவேண்டும். அவனை அவர்கள் பிறருக்குப் பயன்படுகிறவனாகக் காண வேண்டும். இவைகளே ஒரு மனிதன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டதற்கான வலிமையான அடையாளங்கள். ஒருவேளை, இவ்வித மேன்மையான அடையாளங்களை, உலகத்தார் அநேகர் ஆசீர்வாத அடையாளங்களாகப் பார்க்காவிட்டாலும், இவைகளே தேவனுடைய பார்வையில் ஆசிர்வாத அடையாளங்கள்.

யோசேப்பு மத அடையாளங்களைத் தரித்துக் கொண்டு, தன்னுடைய ஆன்மீக நம்பிக்கையைக் காட்டவில்லை. தானியேல் படோடாபமாக வாழ்ந்து தன்னை தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவனாகக் காண்பிக்கவில்லை. அவர்களிடம் சத்தியத்தின் பக்கம் நிற்கின்ற ஒரு கொள்கை இருந்தது. அவர்களிடம் எல்லோ ரிடமும் பார்க்க இயலாத நல்ல பண்புகள் இருந்தன. அவர்களிடம் சாதகமற்ற சூழல்களிலும் நம்பிக்கையிழக்காத ஒரு வாழ்க்கை முறை இருந்தது.

சிந்தனைக்கு...

பக்திமான் என்று காண்பிக்க பலவழிகள் உண்டு.
பரிசுத்தவான் என்று காண்பிக்க தேவ உறவு மட்டுமே வழி.

மார்ச் 9

வேலைசெய்து சாப்பிடணும்

2 தெசலோனிக்கேயர் 3:1–18

தங்கள் சொந்தச் சாப்பாட்டை ச் சாப்பிட வேண்டுமென்று...
2 தெசலோனிக்கேயர் 3:12

சிலர் தாங்கள் படித்த படிப்பின் அளவிற்குப் பொருத்தமான வேலை கிடைக்காவிட்டால், வேலை எதுவும் செய்யாமலே இருந்துவிடுகின்றனர். சிலர் முன்பு தாங்கள் வெளிநாட்டில் சம்பாதித்த அளவிற்கு சம்பளம் கிடைக்காவிட்டால், சொந்த நாட்டில் வேலையில்லாமலே வாழ்ந்து விடுகின்றனர். சிலர் தாய்தகப்பன் சம்பாதித்த சொத்து இருப்பதால், புதிதாக எந்த வேலையும் செய்யாமல், சும்மா இருந்துவிடுகின்றனர். சிலர் மனைவி நல்ல வேலையில் நிறையச் சம்பாதிப்பதால் கௌரவப் பிரச்சினையால் சாதாரண வேலை செய்து சம்பாதிக்க விரும்புவதில்லை.

வேலை செய்ய இயலாதபடி சரீரத்தில் கடுமையாக வியாதியிருப்பதால், ஒருவர் வேலைக்குப் போகாமல் இருக்கலாம். வேறு சில முக்கியமான குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதால், வேலை செய்ய வாய்ப்பில் லாமல் போகலாம். ஆனால், சரீர ஆரோக்கியமுடைய எவரும் வேலையில்லாமல் சும்மாதான் வீட்டில் இருக்கிறேன் என்று சொல்லக் கூடாது. எதிர்பார்த்த வேலையோ தொழிலோ அமையாவிட்டால்கூட, ஏதாவது ஒரு வேலையை அல்லது தொழிலை செய்து சம்பாதிக்க வேண்டும்.

ஒரு ஆடவன், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் சார்ந்திருக்கும் பெற்றோ ருக்கும் உரிய ஆதரவை அளிக்க இயன்றவனாயிருக்க வேண்டும். தன்னுடைய சாப்பாட்டிற்கே சம்பாதிக்க மனமில்லாதவன், ஒரு பெண்ணுக்குக் கணவனாகி குடும்பப் பொறுப்புக்குள் செல்வது நலமல்ல. அதற்காகக் குடும்பமே வேண்டாம் என்று தனித்து வாழ்வது நல்லதல்ல. ஒரு பெண்ணைத் திருமணம் செய்து குடும்பம் நடத்தும் திறனைப் பெறத்தக்க, ஏதாவது வேலை செய்ய வேண்டும்.

உடல் பலம் இருந்தும் எந்த வேலையும் செய்யாமல் சும்மாயிருந்து கொண்டு, மற்றவர்களின் ஆதரவில் வாழ்வது நல்லதல்ல. எல்லா ஜீவராசிகளும் தங்கள் தங்கள் தேவையைத் தாங்களே தேடித்தான் பெற்றுக் கொள்கின்றன. எல்லாப் படைப்புகளைவிட விசேஷ படைப்புகளாகிய நாம், வேலை செய்யாமலே நம்முடைய தேவைகளைப் பெற விரும்பக்கூடாது. ஒருவரிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமல், சொந்தக் கைகளைக் கொண்டு வேலை செய்துதான், அப்போஸ் தலனாகிய பவுல் தன்னுடைய தேவைகளைச் சந்தித்தான். வேலை செய்ய மன தில்லாதிருந்தால், சாப்பிடவும் கூடாது என்ற வார்த்தைகளை, வேதாகமத்தில் வாசிக்கின்றோம். (2 தெச 3:10)

சிந்தனைக்கு...

உடலுக்குப் போதுமான வேலையைத் தரக் கவனமாயிரு,
இல்லையென்றால், உடல் உனக்குப் பாதகமான வியாதிகளைத் தரும்

மார்ச் 10

மன்னித்ததை உணரமுடியவில்லை

1 யோவான் 1:1–10

பாவங்களை நாம் அறிக்கையிட்டால்..... நமக்கு மன்னித்து....
1 யோவான் 1:9

போதகர் ஒருவர் கர்த்தர் அருளும் மன்னிப்பைக் குறித்து மிகவும் பிரமாதமாகப் பிரசங்கித்தார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர், தான் செய்த ஒரு பாவத்தை கர்த்தர் மன்னித்தால் நலமாயிருக்குமே என்று எண்ணினார். போதகர் ஆலோசனை கொடுத்தபடியே, தன்னுடைய பாவத்திற்காக அவர் கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்டார். ஆனாலும், அவர் தன்னைக் கர்த்தர் அந்தப் பாவத் திற்காக மன்னித்து விட்டார் என்ற நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளவேயில்லை. ஏனென்றால், இவர் யார் தவறு செய்தாலும் மன்னிக்கமாட்டார்.

நம்முடைய மனம் அன்பற்றிருந்தால், பிறர் நம்மை நேசிப்பதை நம்மால் உணர முடியாது. நம்முடைய மனம் பிறரை மன்னியாதிருந்தால், பிறர் நம்மை மன்னித்தாலும் அதை நம்பி மகிழ முடியாது. நாம் பிறரை உண்மையாக மதிக்கா விட்டால், பிறர் நம்மை மதித்தாலும் நாம் அதை நம்ப இயலாது. ஏனென்றால், பெரும்பாலும் நம்முடைய மனம் எப்படியிருக்கிறதோ, அப்படித்தான் நம்மால் பிறருடைய மனதின் நிலமையையும் புரிந்து கொள்ள இயலும்.

அவ்விதமே ஒருவர் ஒரு தவறு செய்து விட்டு, இயேசுவிடம் மன்னிப்புக் கேட்டால், அவர் மன்னித்தாலும் இவரால் அதை உணர இயலாமல் போகும். ஏனென்றால், இவருக்குள் மன்னிக்கும் பண்போ, மறக்கும் பண்போ இல்லை. ஏன் அப்படியென்றால், அதற்கு ஒரு காரணம் உண்டு. அதாவது கர்த்தர் நாம் செய்த ஒரு தவறுக்காக நம்மை மன்னித்தாலும், அதனை உண்மை என விசுவாசிக்கும் ஒரு இருதயம் நமக்கு வேண்டும். நாம் இன்னும் கர்த்தர் அருளும் புதிய இரு தயத்தைப் பெறாதிருந்தால், நம்மிடம் பழைய இயற்கை இருதயமே இருக்கும். அந்த இருதயத்தில் உண்மையான மன்னிப்பின் பண்போ, அன்பின் பண்போ இருப்ப தில்லை. எனவே, கர்த்தர் மன்னித்தாலும், அந்தப் பழைய இருதயத்தால் அதனை உணரமுடியாது.

பாவ இருதயம் நீங்கிப் பரிசுத்த இருதயம் வந்த அனுபவம் நமக்கு வேண்டும். அந்த இருதயம் புதிய சிருஷ்டியின் இருதயம். பெற்ற இருதயத்தில் மன்னிக்கும் ஆவி உண்டு. அந்த இருதயத்தில் அன்பின் ஆவி உண்டு. இப்போது நாம் ஒரு தவறு செய்து கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்டால், அவர் அதை மன்னித்து விட்டார் என்ற நிச்சயமும் நம்பிக்கையும் கிடைக்கும். ஆம், முதலாவது இயேசு கிறிஸ்து அருளும் புதிய அன்பின் இருதயத்தைப் பெற வேண்டும்.

சிந்தனைக்கு...

பிறர் உன்னை மன்னிக்காவிட்டால் கவலைப்படாதே .
நீ பிறரை மன்னிக்க இயலாவிட்டால் கவலையற்றிராதே.

மார்ச் 11

பரலோகம் யாருக்கு?

யோவான் 8:1–12

நீ போ,.....இனிப் பாவஞ் செய்யாதே.
யோவான் 8:11

கையும் களவுமாக விபச்சாரப் பாவத்தில் பிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை. அன்றைய பரிசேயர்கள் இயேசுவிடம் அழைத்து வந்தனர். இப்போது இந்தப் பெண் யார்? சந்தேகமேயில்லை. அவள் ஒரு மோசமான பாவி. அவளுடைய பாவத்தைக் கண்டுபிடித்து அழைத்து வந்தவர்கள் யார்? அக்காலத்தில் ஜனங்களால் நீதிமான்கள் அல்லது பக்திமான்கள் என்று அறியப்பட்டவர்கள். பாவத்தில் வாழ்ந்த பெண் ஒருபுறம், பக்திக் காரியங்களோடு அதிக ஈடுபாடுகளை உடைய பரிசேயர்கள் மறுபுறம்.

இப்பொழுது ஒரு கற்பனை, நியாயத்தீர்ப்பில் அவளுக்குப் பரலோகம் கிடைக்குமா? அல்லது நரகம் கிடைக்குமா? பக்திமான்களாகிய பரிசேயர்களுக்குப் பரலோகம் கிடைக்குமா அல்லது நரகம் கிடைக்குமா? அவள் மகாபாவிதான். ஆனால், இயேசுவினால் இனிப் பாவம் செய்யாதே, என்ற ஆலோசனையைப் பெற்ற அவள், மனந்திரும்பி நல்ல விதமாய் வாழ்ந்து மரித்திருப்பாள் என்று நம்பலாம். ஆனால், அந்தப் பக்திமான்கள் தங்களை நீதிமான்கள் என்று நம்பி தங்களை ஒருபோதும் பாவிகளாகப் பார்த்திருக்க வாய்ப்பில்லை. அப்படியானால், நியாயத்தீர்ப்பு நாளில் அவர்கள் பரலோக பாக்யம் பெற முடியாது.

இங்கே நாம் காணும் உண்மை என்ன? பாவியாக வாழ்ந்தாலும் அவள் பரலோகம் போக வாய்ப்புப் பெறுவாள். பக்தியாக வாழ்வதாக எண்ணி அவர் களுக்கோ, அந்தப் பாக்கியம் இல்லை. சிலர் துவக்கத்திலிருந்து முடிவு வரை பக்தி மான்களாக வாழ்கின்றார்கள். பல நீதியான காரியங்களைச் செய்வதால் அவர்கள் ஒருபோதும் தேவ நீதிக்கு வந்தெட்டாத பாவிகள் என்று எண்ண முடியவில்லை. கெட்ட குமாரன் உவமையில் ஒருவன் நீதிமான், இன்னொருவன் பயங்கரமான பாவி. ஆனால், நாள் ஒன்று வந்தபோது, நீதிமான் தகப்பனுக்குத் தூரமாகிப் போனான். பாவியோ தகப்பனுக்கு மிகவும் நெருக்கமாக வந்தான். ஏனென்றால், இளைய மகன் தன்னைப் பாவி என்று உணர்ந்து, தகப்பனிடம் வர முடிந்தது. ஆனால், தன்னை நீதிமானாக எண்ணினவனால், தூரமாகத்தான் போக முடிந்தது.

பாவத்தில் வாழும் பாவியும் ஒன்றுதான். சுய நீதியில் வாழும் பக்தி மானும் ஒன்றுதான். தேவனுடைய பார்வையில் இருவரும் பாவிகள்தான். ஆனால், பாவிக்கு எந்த நேரத்திலும் பாவத்தை உணர்ந்து பரிசுத்தமாகும் வாய்ப்பு உண்டு. சுயநீதிக்காரனுக்கோ அந்த வாய்ப்பு மிக மிகத் தூரமாகவேஇருக்கும். ஆம், பாவியாக வாழ்வதைவிட பக்திமானாக வாழ்வது மிக மேன்மையானது அல்ல.

சிந்தனைக்கு...

நீ ஒரு பாவியைப் போல வாழவில்லை.
ஆனால், நீ ஒரு பரிசுத்தவானாக வாழ்கிறாயா என்பதே கேள்வி.

மார்ச் 12

நற்கிரியைகளும் ஆசீர்வாதமும்

ரோமர் 8:1–17

நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே.....
ரோமர் 8:17

பக்தியான குடும்பத்தில் பிறந்த ஒருவர், எந்தக் காரியத்தைச் செய்தாலும் ஜெபத்தோடுதான் செய்வார். தினமும் வேதம் வாசித்து, ஜெபம் செய்த பிறகுதான், தன்னுடைய வியாபாரத்தை துவங்குவார். மாதந்தோறும் சபைக்கும், ஊழியர்களுக்கும், மிஷனரி ஸ்தாபனங்களுக்கும் தசமபாகம் கணக்குப் பண்ணி காணிக்கை கொடுப்பார். ஆனாலும், இவ்விதமான பக்தியின் பின்னணியில் அவர் வியாபாரம் செய்த போதிலும், விசேஷமான எந்த ஆசீர்வாதத்தையும் காணாமல் போனதால், அதைக்குறித்து மிகவும் சலிப்புடன் பேசுவார்.

உண்மை என்னவென்றால் சில நல்ல பக்தியான செயல்களைச் செய்வதை அவர் ஆசீர்வாத வழியாக எண்ணினார். தேவன் நாம் செய்யும் நல்ல செயல்களைப் பார்த்து, அதற்கேற்ற ஆசீர்வாதம் தருவார் என்று நாம் நம்புகின்றோம். ஆனால், நாம் தேவ உறவில் வாழ்வதில்தான் ஆசீர்வாதங்கள் வருகின்றது. ஜெபத்தையும், உபவாசத்தையும், காணிக்கையை, நற்செயலைப் பார்த்து கர்த்தர் ஆசீர்வதிப்பார் என்று எண்ணுவது தவறு.

கர்த்தர் நாம் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறோமா என்றும், தேவனுடைய பிள்ளையாக வாழ்கின்றோமா என்பதையுமே பார்க்கின்றார். ஆசீர்வாதம் என்பது நாம் எதை எதைச் செய்வோமோ, அதற்குக் கிடைக்கும் பலன் அல்ல. தேவன் நமக்காக எதைச் செய்திருக்கின்றாரோ, அதை நாம் பயன்படுத்துவதின் விளைவாகவே ஆசீர்வாதம் வருகின்றது. அது என்ன? நாம் தேவனுடைய பிள்ளையாக வாழ்வதற்கான தெய்வீக வாய்ப்பை, கர்த்தர் ஆயத்தமாக்கி வைத்திருக்கின்றார். அதை நாம் பயன்படுத்தணும், இரட்சிக்கப்படுதலும், தேவனுடைய பிள்ளையாய் மறுபிறப்படைதலும் அவசியம். அந்த அனுபவத்திற்குள் வந்து, தேவ ஐக்கியத்திற்கு ஏதுவானவைகளைச் செய்வதே ஆசீர்வாத வழி.

கிரியைகளுக்கு ஆசீர்வாதம் தேவன் கொடுப்பது பழையகாலம். கிருபையைச் சார்ந்து நன்மைபெற அழைப்பது புதிய ஏற்பாடு. எனவே, என்னென்ன நல்ல விஷயங்கள் செய்து, தேவ, நன்மைகள் அடையலாம் என்று சிந்திக்கக்கூடாது. தேவனுடைய பிள்ளைகளுக்குரிய சுபாவங்களோடும், நன் நடத்தைகளோடும், ஒழுங்குகளோடும், தேவ உறவோடும் வாழ்வதையே பிரதான இலக்காகக் கொள்ள வேண்டும். அந்த அனுபவங்களில் வளருவதற்காகவே ஜெபம், வேதவாசிப்பு போன்ற விஷயங்களைப் பயன்படுத்தணும்.

சிந்தனைக்கு...

தேவ ஆசீர்வாதங்கள் என்பது, நற்செயல் செய்பவர்களுக்கு அல்ல.
தேவ உறவுடன் வாழ்கிறவர்களுக்கே.

மார்ச் 13

ஆரோக்கியமும் ஆசீர்வாதமும்

அப்போஸ்தலர் 26:2-32

தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும்.
அப்போஸ்தலர் 26:20

நாம் தேவ ஆசீர்வாதம் இல்லாமல் இருப்பதின் ஒரு முக்கியமான அடையாளம், நம்மிடம் தொடருகின்ற பல வியாதிகள். ஆரோக்கியமின்மை என்பது ஆசீர்வாதமின்மையின் ஒரு சான்றாக இருக்க முடியும். அதற்காக, நோயுற்ற வர்கள் எல்லாம் ஆசீர்வாதமற்றவர்கள் என்று அர்த்தம் அல்ல. ஆசீர்வதிக்கப் பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்கும் வியாதிகள் வர வாய்ப்புண்டு. ஆயினும், சிலரைப் பலவிதமான நோய்கள் எளிதாகப் பிடித்துக் கொள்வதற்குக் காரணம், தேவ ஆசீர்வாதமின்மையே.

அதாவது, நிறைய நோய்கள் மனதின் நிலமையின் விளைவாகவே வருகின்றது. மனதில் சமாதானம், சந்தோஷம் நம்பிக்கை போன்றவை இல்லா ததின் விளைவாக உடலில் வியாதிகள் வர முடியும். ஒருவர் சரியான உணவுப் பழக்க வழக்கங்களை கொண்டிராவிட்டாலும், உடலில் வியாதிவரும். சரியான உடல் பேணல் இல்லாததாலும் வியாதிகள் உடலில் தோன்றும். சரி, உடல் ஆரோக்கிய குறைவுகள் தேவ ஆசீர்வாதமின்மையின் விளைவு என்று எப்படிச் சொல்ல முடியும்?

அதாவது ஒரு மனிதன் இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்திருந்தால், அப்போது அவனிடம் சமாதானமும் சந்தோஷமும் வரும். அதனுடைய விளைவாகத் தேவையற்ற கோபம், பதட்டம், கவலை, குழப்பம், பயம் போன்றவை அவனை ஆளுகை செய்யாது. அவ்விதமே, அவன் தேவ ஆளுகையில் இருந்தால், உணவுப் பழக்கம், நித்திரை பழக்கம், பொழுதுபோக்குப் பழக்கம் போன்றவற்றில் ஒழுங்குமுறை தவறாதிருப்பான். எனவே, அவனுக்கு ஆரோக்கியம் பெருகும். இங்கே நக்கு அறியவரும் உண்மை என்ன? தேவ ஆளுகை இல்லாமையால்தான் மன ஒழுங்குகளும், சரீர ஒழுங்குகளும் இல்லை. அதனுடைய விளைவாகவே சரீரம் எளிதாக வியாதிகளை விலைக்கு வாங்கி விடு கிறது. ஆகையால், தேவ ஆசீர்வாதமின்மையின் அடையாளங்களுள் ஒன்றாக ஆரோக்கியமின்மையும் விளங்குகிறது.

அநேகர் நேரடியாகக் கர்த்தர் நம்முடைய சரீரத்தில் வேலை செய்து அல்லது அற்புதம் செய்து, சரீரத்தை ஆரோக்கியமாக்க வேண்டும் என்று எண்ணு கின்றோம். ஆனால், பல வியாதிகளின் இயற்கையான பிறப்பிடம் மனமே. எனவே, மனதில் கர்த்தர் செயல்படாமல், அதனை ஆரோக்கியமாக்க முடியாது. மனதில் தேவன் வேலை செய்வது என்பது, நாம் ஜெபிப்பதைக் கேட்டு அல்ல. நாம் முழுமை யாகக் கர்த்தருக்கு அர்ப்பணித்தால்தான், அதனை அவர் செய்ய முடியும்.

சிந்தனைக்கு...

மனதை எப்படியோ வைத்துவிட்டு, உடலை
எவ்வளவுதான் பராமரித்தாலும், ஆரோக்கியம் வராது.

மார்ச் 14

தேவ சமுகம் எங்கே?

1 கொரிந்தியர் 6:9–20

சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும்.
1 கொரிந்தியர் 6:19

ஒருவர் பெரும்பாலான நேரங்களைக் கிறிஸ்தவ ஆராதனைச் சூழ்நிலைகளிலும், கிறிஸ்தவப் போதனைச் சூழலிலுமே செலவு செய்வார். அவர் பல ஆண்டுகள் இவ்விதம் வாழ்கின்றார். ஆனால், அவரிடம் ஒரு சத்திய அறிவோ அல்லது தேவனை அறிகிற அறிவோ கிடையாது. அவர் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவர் அல்ல. ஆனாலும், அவருக்குள் எந்தவிதமான ஆவிக்குரிய புரிதலும் இல்லை. ஏனென்றால், போதனை கேட்பதையோ, போதனைகள் வாயிலாகப் பரிசுத்தமாக வாழ்வதையோ நோக்கமாக கொண்டு, அவர் சபைகளுக்கும் கூட்டங்களுக்கும் செல்லுவதில்லை.

அவருடைய ஒரே நோக்கம், ஆன்மிகச் சூழல்களிலே தங்கியிருப்பதின் வாயிலாகச் சற்றுக் கஷ்டங்களை மறந்து இருப்பதே. பாடல்களைக் கேட்டுக் கொண்டும், ஆராதனைகளில் கலந்து கொண்டும், போதனை கேட்டுக் கொண்டும் அவர் பெறுவது என்ன? சற்றுநேரம் பலவிதப் பாரங்களை மறந்திருப்பதே. ஆனால், இது கிறிஸ்தவம் அல்ல. இது பிறமத மக்களிடம் காணப்படுகின்ற ஒரு பழக்கம். எங்காவது ஆன்மிகச் சூழல்களில் மனதைக் கொண்டு வைத்தால், சற்று நேரம் மனதைக் கொஞ்சம் உற்சாகப்படுத்திக் கொள்ளலாமே என்ற ஒரு சிந்தனையே அதன் காரணம்.

நாம் பல ஆண்டுகள் ஆன்மிகச் சூழல்களில் போய் வாழ்ந்தாலும், அதனால் நம்முடைய மனம் உண்மையான தேவ ஆதரவைப் பெறாது. நமக்குள் கர்த்தர் வர வேண்டும். நமக்குள் தேவ சமுகம் வரவேண்டும். நமக்குள் தேவ சமுகத்தின் விளைவான சமாதானமும், சந்தோஷமும் வரவேண்டும். அநேகர் சபைகளோடும், ஊழியங்களோடும், கிறிஸ்தவ நிகழ்ச்சிகளோடும் தங்களை இணைத்துக்கொள்கின்றார்களேயன்றி, கிறிஸ்துவோடு இணைந்து கொள்ளத் தெரியாமலிருக் கின்றார்கள்.

அநேகர் தங்கள் இல்லங்களை நரகமாகவும், தாங்கள் செல்லும் சபைகளை மோட்சமாகவும் உணருகின்றார்கள். இல்லங்களை நரகமாக உணர்ந்தாலும், நாம் இங்குதான் தங்கியாக வேண்டும். எனவே, நரகம் போன்ற சூழலிலும் மோட்சத்தை உணர ஏதாவது செய்தாக வேண்டும். கர்த்தர் இருக்கிறார் என்று நம்பப்படும் இடங்களில் போய் அமைதி தேடுவது அல்ல. நமக்குள் கர்த்தரைத் தேடிப் பெற்றுக் கொண்டு, இருக்கின்ற எதிர்மறைச் சூழல்களின் நடுவிலும் அமைதியுடன் வாழப் பழக வேண்டும்.

சிந்தனைக்கு...

ஆயிரம் புனிதர்களோடு வாழ்ந்தாலும்,
ஆண்டவரோடு வாழ்ந்தால் மட்டுமே அமைதி வரும்.

மார்ச் 15

சமாதானத்திற்குத் தொந்தரவு

மாற்கு 14:26–42

என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது.
மாற்கு 14:34

ஒருவர் சமாதானப் பிரியர். அவர் சமாதானத்தை இழந்துவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாயிருப்பார். அதனுடைய விளைவாக, அவர் பிரச்சினைக் குரிய எந்த அலுவல்களுக்குள்ளும் போகமாட்டார். சற்றுச் சிரமமான ஒரு அலுவல் என்றால் பின்வாங்கிவிடுவார். சமுதாய உறவுகளோடும் அதிகமாகச் சம்பந்த படமாட்டார். எப்பொழுதுமே அவர் பிரச்சினையில்லாமல், அமைதியாயிருக்க அதிகக் கவனம் செலுத்தினார். அதனுடைய விளைவாக அவரிடம் பெரிய செயல் பாடுகளோ, சோதனைகளோ எதுவுமில்லை.

வாழ்க்கையில் சமாதானமாயிருப்பது என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆனால், சமாதானமாயிருப்பதே முதல் இலக்காக மாறி விடுவதில் பிரச்சினை உண்டு. சில பிரச்சினையான சூழல்களுக்குள் செல்லாமல், நாம் எதையும் சாதிக்க முடியாது. சில செயல்பாடுகளுக்குள் செல்லும்போது, மனதின் அமைதிக்கு, சில அதிர்வுகளும், சலசலப்பும் ஏற்படுவது இயற்கையே.

எப்பொழுதும் நாம் அமைதியான தியான மண்டபச் சூழ்நிலையில் வாழ முடியாது. ஒரு வேலை, ஒரு தொழில், ஒரு ஊழியம், ஒரு பிரச்சினை என்று செல்லும் போது, அமைதியைச் சற்றுப் பாதிக்கும் நிலமைகளைச் சந்தித்துத் தான் ஆகவேண்டும். கொஞ்சம் குழப்பம், கொஞ்சம் பதட்டம், கொஞ்சம் அசௌ கரியம் என அமைதிக்குச் சில தாக்குதல்கள் ஏற்படும். அவற்றையும் நாம் ஏற்க வேண்டும். அவை நிரந்தரமல்ல. கிறிஸ்துவுக்குள் நாம் பெற்ற சமாதானம் எங்கும் போகாது, அதை நாம் உரிமை பாராட்டி எதிர்பார்க்கும் போது, அதை நமக்குள் காண்போம். சூரியன் பிரகாசமாக இருந்தாலும், சில மேகமூட்டம் அதைச் சற்று நேரம் மறைப்பது போல, சில நேரம் சற்று அமைதியிழப்புகளைக் காண நேரிடும்.

அது மறுபடியும் வரும். அந்தப் பாதிப்புகளைச் சந்திக்கவே கூடாதென்றால், நாம் எங்காவது போய் தனிமைக் குகையில்தான் தங்க வேண்டும். எனவே, சற்று நேர அமைதிக் குறைவுகளுக்குப் பயந்துபோய், அவசியமான நல்ல செயல்பாடு களுக்குள் செல்லாமல் பயந்துபோய் ஒளிந்திருக்கக் கூடாது. யுத்தவீரன் தியான மண்டபத்தில் போய் உட்கார முடியாது. அவன் சிக்கல் மிகுந்த போர்களத்திற்குள் வரவேண்டும். சிலுவைப் பாடுகளுக்கு நேராக இயேசு சென்றபோது, அவருக் குள்ளும் பெரிய கலக்கம் வந்தது. ஆயினும், அவற்றை ஏற்றுக்கொண்டு, மனுக் குலத்திற்காக மாபெரும் செயலைச் செய்துமுடித்தார்.

சிந்தனைக்கு...

தேவனுடைய பிள்ளைகளுக்கு அமைதிக்குறைவுகள் வரலாம்,
அமைதி இழப்புகள்தான் வரக்கூடாது.

மார்ச் 16

மகிமை செலுத்துதல் அல்ல

மத்தேயு 5:1–16

உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது.
மத்தேயு 5:16

தேவனுக்கு மகிமை செலுத்துவது என்பது வேறு. தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துவது என்பது வேறு. நாம் பாடி தேவனுக்கு மகிமை செலுத்தலாம். நாம் துதித்தோ, புகழ்ந்தோ, போற்றியோ தேவனுக்கு மகிமை செலுத்தலாம். இவை யாவும் தொழுகை அல்லது வழிபாடு அல்லது ஆராதனை என்பவற்றோடு தொடர் புடையவை. இதனை நல்லவர்களாலும் செய்ய முடியும். நல்லவர்கள் அல்லா தவர்களாலும் செய்ய முடியும். இவ்விதம் மகிமை செலுத்துகிறவர்களின் பக்தி, உண்மையானதாகவும் இருக்க முடியும், போலியாகவும் இருக்க முடியும்.

ஆனால், தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துவது என்பது வேறு. இது தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தும் கருவியாக நாம் விளங்குவது. இதனை எல்லோரும் செய்ய முடியாது. உண்மையான தேவ உறவில் வாழ்கின்றவர்களால் மட்டுமே, தேவனுடைய மகிமையைப் பிறர் நடுவில் வெளிப்படுத்த முடியும். மத்தேயு 5:16–ல் இதனைப் பார்க்கின்றோம். மனிதர்கள் நடுவில் நம்முடைய வெளிச்சம் பிரகாசிக்க வேண்டும் என்றும், அதனைப் பார்த்துச் ஜனங்கள் தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும் என்றும் இயேசு கூறினார்.

ஆம், தேவனுடைய பிள்ளைகள் தேவனை அறிந்தவர்கள். அவர்கள் வழியாகத்தான் தேவன் தம்முடைய மகிமையையும், மகத்துவத்தையும், மேன்மை யையும் வெளிப்படுத்த முடியும். எனவே, மகிமை செலுத்துகிறவர்களைவிட, மகிமையை வெளிப்படுத்துகின்றவர்களே தேவனுக்குத் தேவை. தேவனுடைய மகிமை என்பது ஒரு மனிதனிடம் தேவன் செயல்பட்டு, அதனுடைய விளைவாக ஏற்படுகின்றவையே. தேவன் ஒரு மனிதனிடம் செயல்படும்போது, அவன் உயர்ந்த சுபாவங்களை உடையவனாகவும், சிறந்த மனநிலைகள் உடையவனாகவும் மேன்மையான செயல்களை உடையவனாகவும் இருப்பான்.

அப்பொழுது அந்த மனிதனுடைய வாழ்க்கை பிறர் நடுவில் வெளிச்சமாக யிருக்கும். தேவனிடம் காணப்படும் சிறந்த விஷயங்கள், அவனுடைய வாழ்க்கை யிலும் பிரதிபலிக்கும். ஆனால், இதனை நாம் பயிற்றுவிக்கப்பட்டோ, முயற்சிகள் செய்தோ செய்ய முடியாது. இவை கர்த்தருடைய உறவின் அனுபவத்தில் நாம் ஆழமாகச் செல்வதினாலேயே முடியும். ஆண்டவராகிய இயேசு சீடர்களிடம், என்னிடம் நிலைத்திருங்கள் என்றார். அப்போது அவர்கள் கனி கொடுப்பார்கள். அதுதான் தேவனை மகிமைப்படுத்தும் என்றார்.

சிந்தனைக்கு...

பாவிகளும் தேவனைப் புகழ்ந்து மகிழ முடியும்.
பரிசுத்தவான்கள்தான் தேவனால் புகழ்ச்சி பெற முடியும்.

மார்ச் 17

அறிவும் பெருமையும்

கொலோசெயர் 3:7–25

ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக்கொண்டு.
கொலோசெயர் 3:16

கிறிஸ்தவர் ஒருவர் தான் எதையும் சரியாகவும், நேர்மையாகவும், ஒழுங்காகவும் செய்கிறார் என்ற நம்பிக்கை உடையவர். அவர் தான் எதையுமே சரியாக யோசித்து முடிவெடுக்கிறவர் என்று நம்புகின்றவர். உண்மையில் அவர் அப்படித் தான். ஆனால், அவரிடம் உள்ள ஒரு பிரச்சினை மிகுந்த வருத்தத்திற்குரியது. அவர் சற்று வளைந்து நெளிந்து போகமாட்டார். யாரோடும் அவர் இசைந்து போகமாட்டார். அவர் யார் ஒரு ஆலோசனை சொன்னாலும், அதனை அசட்டை செய்துவிடுவார். ஏனென்றால், தான் எதையும் சரியாகச் செய்கிறவர் என்ற நம்பிக்கை அவரிடம் அதிகமாக இருப்பதால்.

தேவனுடைய மனிதனாகிய ஆபிரகாம் எதிலும் நீதியாய்ச் செயல்படுகிறவன். அதே வேளையில், லோத்துவோடு பிரச்சினை ஏற்பட்ட போது, ஆபிரகாம் தன்னைத் தாழ்த்திக்கொண்டான். லோத்து வலதுபுறம் போனால், தான் இடதுபுறமாகப் போக ஆயத்தமாயிருந்தான். தானே ஒரு முடிவெடுத்து அந்த முடிவை லோத்துவின் தலையில் திணிக்கவில்லை. சில நேரங்களில் சிலர் மிக மிகச் சரியாக யோசிப்பதும், செயல்படுவதும் உண்மைதான். அதே வேளையில், எங்களுக்கு யாரும் போதிக்கவோ, ஆலாசனை சொல்லவோ அவசியமில்லை என்று எண்ணுகின்றவர்கள்.

சில மனைவிகள் தங்கள் கணவன்மார்கள், தங்களிடம் எந்த ஆலோசனையும் கேட்பதில்லை என்பார்கள். சில கணவன்மார்கள் தங்கள் மனைவிகள் எல்லாவற்றையும் தங்களைக் கேட்காமலே செய்வதாகச் சொல்வார்கள். ஏன் அப்படியென்றால், கணவர்கள் தாங்கள் எதையும் சரியாகச் செய்வதால் மனைவிகளின் ஆலோசனை தேவைப்படாது என்பார்கள். அவ்விதமே, மனைவிகள் தங்கள் கணவன்மார்களுக்கு, எதையும் உருப்படியாகச் செய்யத் தெரியாது என்பார்கள்.

அறிவும், புத்தியும், நீதியும், ஒழுங்கும் சிலரைப் பெருமைக்குள் தள்ளி தாழ்மையற்றவர்களாக மாற்றிவிடுகிறது. அவர்கள் யாரோடும் இசைந்து போகாமல், தங்களுக்கு இசைந்து வருகிறவர்களை மட்டுமே ஏற்றுக்கொள்வார்கள். பிரசங்கியார் ஒருவர் பல இடங்களுக்குப் பிரசங்கம் பண்ண போவார். ஆனால், யார் ஒருவருடைய பிரசங்கத்தையும் அவர் கேட்கமாட்டார். ஏனென்றால், தனக்குத் தெரியாத எதுவும் மற்றவர்களிடம் இருக்கவாய்ப்பில்லை என்பதே அவரின் எண்ணம். அறிவு பெருகப் பெருகத் தாழ்மை நமக்கு மிக அதிகமாக வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவ மனிதன் தாழ்மை விஷயத்தில் வளைந்து போவான்.
உண்மை விஷயத்திலோ வளையாமல் நிமிர்ந்து நிற்பான்.

மார்ச் 18

உருமாறும் கஷ்டங்கள்

யோபு 14:1–22

ஆத்துமா அவனுக்குள்ளிருக்கு மட்டும் அதற்குத் துக்கமுண்டு.
யோபு 14:22

ஒரு பெண் திருமணமானதிலிருந்து நீண்ட காலம், தன்னுடைய கணவனுடைய நற்சுபாவங்களற்ற வாழ்க்கை முறையால், மிகுதியாகக் கஷ்டப்பட நேர்ந்தது. ஆனால், காலப்போக்கில் அவன் மனமாற்றம் அடைந்து நற்சுபாவமுடையவனாக மாறிவிட்டான். மனைவிக்கு ரொம்ப மகிழ்ச்சி. ஆனால், விரைவில் அவன் சுகவீனமடைந்து நீண்டகாலம் வியாதிப்படுக்கையில் இருந்தான். இது அந்த பெண்ணிற்கு மிகுந்த கஷ்டமாயிருந்தது. ஆம், கஷ்டங்கள் வந்து கொண்டிருந்த வழி மாறினதேயன்றி, கஷ்டங்கள் மாறவில்லை.

வாழ்க்கையில் பெரும்பாலும் எல்லோரிடமும் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று சொல்லலாம். ஒவ்வொரு காலகட்டத்திலும் வருத்தப்படவும், மனம் வருந்தவும் ஏதாவது வாழ்க்கைப் பாதையில் வந்து கொண்டுதானிருக்கிறது. ஒரு வியாதி குணமாகி இன்னொரு வியாதி உடலில் வருவது போல, மனித வாழ்க்கையில் பெரும்பாலும் ஒரு பிரச்சினை மறைந்தால், வேறொரு பிரச்சனை வேறொரு வழியில் வருகின்றது. ஒருவர் முன்பு எனக்கு பணக்கஷ்டம் இருந்தது. அதை எல்லாரிடமும் பகிர முடிந்தது. இப்போது பணக்கஷ்டம் இல்லை. ஆனால் மனக்கஷ்டம் இருக்கிறது. ஆனால், யாரிடமும் பகிர முடியவில்லை என்றாராம்.

சிலருக்குத் திருமணம் அமையாமல் நீண்டகாலம் கவலையோடு இருப்பார்கள். ஆனால், திருமணமாகிவிட்டாலோ நிரந்தரக் கவலையில் இருப்பார்கள். ஆம், இந்த பூமியின் நிலைமை இதுதான். மனவருத்தங்களைத் தருகின்ற சூழ்நிலைகள்தான் மாறும். ஆனால் மனவருத்தங்கள் ஏதோ ஒருவழியில் மாறாத நிஜங்களாகி விடுகின்றன. நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டு, கர்த்தருக்குப் பிரியமாக வாழ்கின்ற வாழ்க்கை முறைக்கு வந்தாலும், இந்த நிலைமை தொடர வாய்ப்பு உண்டு.

ஆம், இந்த சஞ்சலத்திற்கு வாய்ப்பு மிக்க பூமியில், மன வேதனைக்குரிய நிகழ்வுகள் ஒரு காலகட்டத்தோடு முற்றிலும் முற்றுப்பெற்றுவிடுவதில்லை. ஆனால், கர்த்தர் நமக்குப் போதுமானவர். அவருடைய கிருபை நமக்குப் போதுமானது. பிரச்சனைகளும் சோதனைகளும் வேறு வேறு வடிவங்களில் வந்தாலும், கர்த்தருடைய சமுகமும் சமாதானமும் நமக்குச் சந்தோஷத்தைத் தரவல்லது. கஷ்ட சூழல்கள் வேறு வேறு வடிவங்களில் வந்தாலும், தேவ கிருபை மாறாமல் நம்மை எல்லாச் சூழல்களிலும் தாங்கும்.

சிந்தனைக்கு...

மீண்டும் வந்துவிட்ட கஷ்டத்தையே பாராதே,
மீண்டு வருவதற்கு தேவன் அளிக்கும் கிருபையைப் பார்.

மார்ச் 19

உழைக்காமல் வாழாதே

பிரசங்கி 9:1–18

செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ.....
பிரசங்கி 9:10

என்னுடைய தந்தைக்கு நாட்டு வைத்தியம் நன்றாகத் தெரியும். ஆனால், அதை அவர் போதிய வேகத்துடன் செய்யவில்லை. அவருக்கு நிறைய அறிவும், தத்துவம் பேசும் ஆற்றலும் இருந்தது. ஆனால், அந்த அறிவையும் தத்துவம் பேசும் திறனையும், பொழுது போக்குவதற்காக மட்டுமே உபயோகித்தார். நான் ஆறாம் வகுப்புப் படிக்கும் போதே அவர் மரித்துவிட்டார். என் சிறுவயதுகளில் என் தந்தையைப் பார்க்கும் போதெல்லாம், பெரும்பாலும் எங்கள் இல்லத்திற்கு எதிரே உள்ள மருந்துகடை திண்ணையில் உட்கார்ந்து, நிறைய உலகக் கதைகள் பேசிக் கொண்டேயிருப்பார். தன்னுடைய நாட்டு வைத்தியத் திறமையைச் சரியாகப் பயன் படுத்தவில்லை. எனவே, எங்களின் குடும்பம் வறுமையின் பிடியிலேயே எப்பொழுதும் இருந்தது.

நாம் உரிய முறையில் உழைக்காமலும், சம்பாதிக்காமலும் வாழ்வதும் பாவமான வாழ்க்கையே. உழைக்கவும் சம்பாதிக்கவும் உடல் திறன் இருந்தும், சும்மாயிருப்பதும் பாவமே. யாரோ நம்மை ஆதரிக்க இருக்கிறார்கள் என்பதற்காக, நாம் சோம்பேறித்தனத்தையே வாழ்க்கை முறை யாக்கிக் கொள்வதும் பாவமே. சில குடும்பங்களில் பிள்ளைகள் அடிக்கடி நோயுற்றுப் போவதும், பிள்ளைகள் பெலவீனங்களோடு வளர்வதும், தந்தை உரிய விதத்தில் உழைத்துப் பிள்ளை களை ஆரோக்கியமாக வளர்க்காமல் போவதாலேயாகும்.

பிள்ளைகள் நல்ல கல்வி கற்க வாய்ப்பில்லாமல் போவதற்கும், அவர்கள் வறுமையைச் சுதந்தரிப்பதற்கும் காரணமாக, உழைக்க ஆசையில்லாத தந்தைகள் இருப்பதுண்டு. சிலர் வெளிநாட்டில் சிலகாலம் வேலை செய்து திரும்பிவந்தால், அதற்குப் பிறகு ஒரு போதும் வேலை செய்வதில்லை. சிலர் தாங்கள் எதிர்பார்த்த சம்பளம் கிடைக்காவிட்டால் ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருப்பார்கள்.

சிலர் மனைவியின் வருமானமே போதும் என்று எண்ணி, வீட்டிலேயே ஆயுள் முழுதும் சும்மா இருந்து விடுவார்கள். சிலருக்கு ஏதாவது ஒரு வருமான வழி இருந்தால், உடலை உழைப்பிற்கு உட்படுத்தாமல், அந்தக் கொஞ்ச வருவாயை வைத்தே வாழ்க்கையை சிரமத்தோடு ஓட்டுவார்கள். சிலர் வேலை செய்யாமல் வாழ் வதையே விசுவாச வாழ்க்கை என்று எண்ணுவார்கள். தாய் தந்தையர் சேர்த்து வைத்து விட்டுச் சென்றிருந்தாலும், நாம் உடலையும் மனதையும் பயன்படுத்தி, உழைத்து வாழ முன்வரவேண்டும்.

சிந்தனைக்கு...

உழைக்காமலே உண்டு வாழ்கிறவன்,
பயனற்ற ஒரு வாழ்விற்கு மாதிரியாகிறான்.

மார்ச் 20

இன்றைய தினம் வாழ்வோம்

மத்தேயு 6:25-34

நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்.
மத்தேயு 6:33

சிலர் இப்பொழுது மிக நல்ல நிலமையில்தான் இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் தங்களிடம் வருகின்றவர்களிடம், தங்களின் கடந்தகாலக் கஷ்டங்களைக் குறித்துச் சொல்லவே, அதிக ஆர்வம் கொள்கின்றனர். சிலர் இப்போது எந்தப் பிரச்சனையுமின்றி நன்றாகத்தானிருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் யாரிடம் பேசினாலும் எதிர்காலத்தைக் குறித்த பயத்தையும், கவலையையுமே பகிர்ந்து கொள்கின்றனர். இதனால் என்ன நடக்கிறது? அவர்களுக்கு அமைந்த நல்ல இன்றைய தினத்தைப் பயன்படுத்தாமலும், அனுபவிக்காமலும் போகின்றார்கள்.

கடந்த காலங்கள் ஞாபகத்தில் இருக்க வேண்டும். ஆனால், அவையே எப்பொழுதும் பேசும் பொருளாக இருக்கக்கூடாது. நம்முடைய எதிர்காலங்களைக் குறித்த எச்சரிக்கை உணர்வு வேண்டும். ஆனால், நிச்சயமற்ற எதிர்காலத்தைக் குறித்தே பேசிக்கொண்டிருக்க கூடாது. ஒருவர் புதிதாக வீடு கட்டிக் குடியேறின நண்பரைப் பார்க்கச் சென்றார். உடனேயே அவர் கடந்த காலத்தில் தாங்கள் வாடகை வீடுகளில் கஷ்டப்பட்ட வரலாறுகளையே விலாவாரியாக விளக்கினாராம். அந்த நண்பர் சலிப்படைந்து, நான் வரலாறு கற்க வரவில்லை. புதிதாகக் கட்டின வீட்டைப் பார்க்க வந்தேன் என்றாராம்.

நேற்றைய தினம் போய்விட்டது. இனி அந்தக் கதைகளையே சொல்லிச் சொல்லி உணர்ச்சிவசப்படத் தேவையில்லை. நாளைய தினத்தை நாம் பார்ப்பது நிச்சயம் அல்ல. எனவே, நாளைக்கு என்ன செய்வோம் என்று கவலைப்படு வதற்குத் தேவையில்லை. இன்று கர்த்தர் காணச் செய்த நன்மைகளை அனு பவிப்போம். அதற்காகக் கர்த்தருக்கு நன்றி சொல்வோம். தேவன் நமக்களித்த நல்ல நன்மைகளில் கொஞ்சத்தைப் பிறருக்கும் பயன்படுத்துவோம். இன்றைய தினத்தைத்தான் இன்று வாழ வேண்டும். நாளைய தினம் வரும் போது, அதனைச் சந்திக்கத் தேவ உறவை இன்றே உறுதிப்படுத்தி வாழ்வோம்.

நேற்றையச் சூழல்களைக் கடந்துவரச்செய்த தேவன், நாளை நம்முடைய சூழல்களின் நடுவிலும் நமக்குப் போதுமானவராயிருப்பார். கர்த்தருடைய ஐக்கியத்தில் இன்று வாழ்கின்றோமா இல்லையா, என்பதைக் குறித்துதான் நாம் கவலைப்படவேண்டும். இன்று இருக்கும் மனிதன் நாளையும் நம்முடனே இருப்பான் என்று கூற இயலாமலிருக்கலாம். ஆனால், கர்த்தர் நம்மோடு என் றென்றும் இருப்பார். அந்த நம்பிக்கையோடு இன்றைய நாளை அனுபவிப்போம்.

சிந்தனைக்கு...

கடந்த கால விஷயங்களையே பார்த்துக் கொண்டிருப்பவன்,
நிகழ்கால நன்மைகளை அனுபவிக்கமாட்டான்.

மார்ச் 21

இரண்டு இருதயம்

2 சாமுவேல் 12:1–14

நாத்தான் தாவீதை நோக்கி, நீயே அந்த மனுஷன் ....
2 சாமுவேல் 12:7

ஒருவர் தான் விரும்பும் ஒரு பாஸ்டரைப் பற்றி பேசும் போது, அவருடைய தவறுகள் எதுவும் தவறுகளே அல்ல, என்று காண்பிப்பதில் மிகவும் ஆர்வமாயிருப்பார். அதே நேரத்தில், அவர் விரும்பாத பாஸ்டரின் நல்ல விஷயங்களைப் பற்றிய பேச்சு வந்தால், அவை எதுவும் மெச்சுவதற்குரியவை அல்ல என்ற சாதிப்பதிலேயே குறியாயிருப்பார். அவருக்கு இரட்டை இருதயம் இருக்கிறது என்று சொல்லலாம். ஒரு இருதயம், அவர் விரும்பும் நபர்களை நியாயப்படுத்திக் காட்டுகிறது. இன்னொரு இருதயம். அவர் விரும்பாத நபர்களைக் குற்றவாளிகளாக்கிக் காட்டுவதிலேயே குறியாக இருக்கின்றது.

நமக்கு ஒரே ஒரு இருதயம்தான் இருக்கணும். அது சத்திய இருதயமாக இருக்கணும். நமக்கு ஒரே ஒரு அளவு கோல்தான் இருக்கணும். நமக்கு வேண்டியவர்களையும், வேண்டாதவர்களையும் அந்த ஒரே அளவுகோலினால்தான் அளக்க வேண்டும். எல்லோரையும் நாம் ஒரே விதமாக நடத்த இயலாமல் போகலாம். எல்லோரோடும் நாம் ஒரு விதமான ஐக்கியத்தோடு இருக்க இயலாமல் போகலாம். ஆனால், எல்லோரையும் ஒரே சத்தியக் கண்கள் வழியாகத்தான் பார்க்க வேண்டும்.

நமக்கு வேண்டிய நபரிடம் இருக்கும் எந்த விஷயம் பாராட்டுக்குரியதாக உள்ளதோ, அது வேண்டாதவரிடம் இருந்தாலும் பாராட்டிற்குரியதே. நமக்கு வேண்டாத நபரிடம் காண நேரிட்ட ஒரு தவறை, வேண்டியவரிடம் காண நேரிட்டாலும் தவறு என எண்ண வேண்டும். சிலர் தங்கள் மகன் தவறு செய்தாலும், அதற்கு இன்னொருவர் மகனைத்தான் காரணம் என்பார்கள். இன்னொரு மகனின் தவறுக்குத் தங்கள் மகன் காரணம் என்று சொல்லப்பட்டால், தாங்கிக் கொள்ளமாட்டார்கள்.

ஒருவர் இரண்டு விதமான பார்வை உடையவராயிருப்பதின் முக்கியக் காரணம், அவருக்குள் சத்திய ஆவி இல்லாமல் இருப்பதே. சத்திய ஆவியாகிய தேவ ஆவி இருந்தால், அங்கே சத்தியம் சார்ந்த பார்வையே இருக்கும். அங்கே ஒரே விதமாய் இரண்டு விஷயங்கள் இருக்கும்போது, ஒன்றைச் சரி என்றும், இன்னொன்றைத் தவறு என்றும் சொல்ல வாய்ப்பில்லை. பலருடைய தவறுகளையும் குறைவுகளையும் சுட்டிக்காட்டி உணர்த்தும் வேலையைச் செய்த நாத்தான் தீர்க்கன், தாவீதிடம் இருந்த தவறைக் கர்த்தர் காண்பித்த போது, கர்த்தர் சொன்ன படியே அவனை நேரடியாகப் போய் உணர்த்தினான்.

சிந்தனைக்கு...

நல்லவரிடம் ஒரு தவறைக் கண்டதும் விலகிவிடாதே,
கெட்டவரிடம் ஒரு நல்லதைக் கண்டதும் சேர்ந்துவிடாதே.

மார்ச் 22

நேசிக்கப் போராட்டம்

1 பேதுரு 4:8–19

ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்.
1 பேதுரு 4:8

ஒரு மனிதன் தன்னுடைய மனைவிக்குத் துரோகம் செய்து, வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தான். ஒரு நாள் அதை அறிந்த மனைவி அதிகமாக அதிர்ச்சியடைந்தாள். அவனை அவள் கணவனாகத் தொடர்ந்து ஏற்றுக் கொள்வதற்கு மிகவும் சிரமப்பட்டாள். அந்தக் கணவன் பின்னர் தன் தவறை உணர்ந்து மனமாற்றம் பெற்றான். ஆயினும், அந்த மனைவியால் அவன் செய்ததை எளிதாக மறக்க இயலவில்லை. ஒரு நாள் அவன் அவளிடம் நீ என்னை நேசிக்கிறாயா, வெறுக்கிறாயா என்று கேட்டான். அதற்கு அவள், ஒரு போதும் உங்களை நான் வெறுக்கவில்லை. ஆனால், உங்களை நேசிக்க, இன்னும் இன்னும் போராடுகிறேன் என்றாள்.

அவள் சொன்னது அவளது உண்மையான மனதின் வார்த்தை. அவள் அவனை வெறுக்கவில்லை. ஆனால், எளிதாக அவனை நேசிக்க இயலவில்லை. ஆயினும், அவனை அவள் நேசிப்பதற்காக அதிகமாக போராடுகிறாள். ஏனென்றால், மற்றவர்கள் ஏதாவது ஒரு விதத்தில் நம்முடைய மனதைக் காயப் படுத்தும்போது, அவர்களை வெறுக்கா விட்டாலும், நேசிப்பது மிகவும் கடினமாயிருக்கும்.

ஆயினும், அவர்களை வெறுத்துவிடக்கூடாது என்ற நற்சிந்தனையினால், தொடர்ந்து அவர்களை நேசிக்க முயற்சிக்கிறோமே அதுதான் போராடுதல். அங்கே நேசிக்க இயலாதபடி வருகின்ற எதிர் உணர்வுகளுக்கு எதிராகப் போராடியாக வேண்டும். ஒருவனைக் காதலித்து திருமணம் செய்த ஒரு பெண், பின்னாளில் சில காரணங்களால் அவன்மேல் அதிருப்பதியடைய நேரிட்டது. அதைக் குறித்து அவள் சொல்லும் போது, முன்பு அவரை நேசிப்பது என்பது எனக்கு மிக மிக விருப்பமான இனிப்பைச் சாப்பிடுவது போல இருந்தது. இப்பொழுது ஒரு மருந்தைச் சாப்பிடுவது போல் உள்ளது என்றாள்.

உறவுகளின் நடுவில் மனவிசனங்களைக் காண நேரிடும் போது, வெறுப்பது என்பது ஒரு நொடியில் பூரணமடையமுடியும். ஆனால் நேசிப்பது என்பது மிக மிகச் சிரமப்பட்டுதான் வெற்றியடைய முடியும். நாம் வெறுக்க விரும்பாமல் நேசிக்கவே விரும்புகின்றோம். ஆனால், சுய பலத்தால் எதிர்மறைச் சூழல்களில் நேசிப்பது என்பது மிகவும் கடினம். கர்த்தரோடுள்ள ஐக்கியத்தின் விளைவாக, நமக்குள் அனுபவிக்கும் அன்பைக் கொண்டு, பிறரை நேசிப்பதற்கான போராட் டத்தில் விரைந்து வெற்றி பெற முடியும்.

சிந்தனைக்கு...

அன்பு காட்டாதவர்கள் எல்லாம் வெறுக்கிறவர்கள், அல்ல.
வெறுப்புக் காட்டாதவர்கள் எல்லாம் அன்பானவர்கள் அல்ல.

மார்ச் 23

பாவியும் சுயநீதியாளனும்

கலாத்தியர் 3:6–19

விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே.
கலாத்தியர் 3:7

பாவி என்பவனுக்கும், சுயநீதியாளன் என்பவனுக்கும் என்ன வித்தியாசம்? பாவி என்பவன் தன்னுடைய பாவம் செய்யும் இயற்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் தவறானவைகளைச் செய்கின்றான். அதனுடைய விளைவாக பல கஷ்டங்களை அவன் காணநேரிடுகிறது. சுய நீதியாளன் என்பவன் ஒரு பக்திமான், அவனிடம் தேவ பயம் இருக்கும். அவன் தன்னுடைய பாவ, இயற்கையை இயன்ற அளவு சுயதீர்மானத்தால் கட்டுப்படுத்தி, தவறுகளைச் செய்யாமல் தவிர்க்கின்றான். அதனுடைய விளைவாக பாவியைப் போல, தவறுகளுக்காகக் கஷ்டப்படும் நிலமை சுயநீதியாளனுக்கு இல்லை..

ஆயினும், சுய நீதியாளனுக்கு தேவனிடத்திலிருந்து எந்த நன்மையும் இல்லை. ஏனென்றால், சுயநீதியாளன் ஒரு நல்ல வாழ்க்கை வாழ்கின்ற பொறுப்பை, தானே எடுத்துக் கொண்டு செயல்படுகிறான். அவன் அதில் முழுமை அடைவதில்லை. எனவே, பாவிக்கும் தேவனிடத்திலிருந்து நன்மையில்லை. சுய நீதியாளனுக்கும் நன்மை இல்லை. பரிசுத்தமாக வாழ்வது என்பது, ஒரு மனிதன் தன்னால் அது கூடாது என்று உணர்ந்து, கர்த்தரை விசுவாசித்து, அவரைச் சார்ந்து கொள்வது ஆகும்.

அவ்விதம் விசுவாசித்துச் சார்ந்து கொள்ளாதவன் மூன்று நன்மைகளை இழக்கிறான். ஒன்று, தேவனுடைய பிள்ளை என்ற அந்தஸ்தைப் பெறாமல் இழக்கின்றான். இரண்டு, பரிசுத்தவானாக வாழ்வதற்குத் தேவையான தேவ ஆற்றலைப் பெறாமல் இழக்கின்றான். மூன்று, தேவ உறவைப் பெறாமல் போவதால், இறுதியில் நித்திய வாழ்வை இழக்கிறான். இந்த மூன்று நஷ்டங்களும் ஒரு பாவிக்கு ஏற்படுவது போல, சுயநீதியாளனுக்கும் ஏற்படுகிறது. எனவே, இரட்சிப்பின் அனுபவம் என்பதை, ஒருவர் மிகக் கவனமாகச் சத்திய வெளிச்சத்தில் சிந்தித்து, அதனை அடைய முன்வரவேண்டும்.

தன்னுடைய சுய தீர்மானத்தால், தேவன் விரும்புகின்ற பரிசுத்த வாழ்வை வாழ முடியாது என்பதை உணருகிறவன், கிருபையைப் பெற்றுக் கொள்கிறான். அதனுடைய விளைவாக, அவன் சுய ஆற்றலைக் கொண்டு பரிசுத்தமாக வாழ்வதற்கு முயற்சிக்காமல், கர்த்தருடைய உறவைச் சார்ந்து கொள்கின்றான். பக்திச் செயல்களைச் செய்வதை ஆவிக்குரிய வாழ்வு என்று எண்ணாமல், அவன் தேவ ஐக்கியத்தோடு வாழ்கின்ற ஒரு அவனுபவத்தைத் தேடுகிறான். அந்த உறவின் பலனே, அவனைப் பரிசுத்தமாக வாழ வைக்கிறது.

சிந்தனைக்கு...

தேவ உறவுடன் ஆரம்பிக்காத கிறிஸ்தவ அனுபவம்,
மனித உறவுகள் நடுவில் முன்மாதிரியாயிராது.

மார்ச் 24

பாரம்பரியங்கள் பாவமா?

மத்தேயு 15:1–20

உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனைகளை....
மத்தேயு 15:3

லெந்துகால ஆசரிப்புகள் விமர்சிக்கப்படுகின்றன. குருத்தோலை ஞாயிறு பவனி விமர்சிக்கப்படுகின்றது. துக்க வெள்ளி மும்மணி ஆராதனை விமர்சிக்கப் படுகிறது. லெந்து காலங்களில் உடை உணவு சம்பந்தமாக பலர் பின்பற்றும் சுய வெறுப்பு, பக்தி நடவடிக்கைகள் விமர்சிக்கப்படுகின்றன. இவைகள் எந்த அடிப் படையில் விமர்சிக்கப்படுகின்றன. இவை யாவும் வேதாகமம் கூறி நாம் பின்பற் றாமல், பாரம்பரியங்களாக வந்து நிலைபெற்றதால் பின்பற்றுகின்றோம். இது போன்ற பாரம்பரிய பக்தி ஆசரிப்புகளைப் பின்பற்றுவது குற்றமா? இவை எல்லா வற்றையும் நிறுத்திவிட வேண்டுமா?.

சில விஷயங்கள் பாரம்பரியத்தின் விளைவானவைகள் என்பதற்காக, அவற்றைத் தள்ளிவிட வேண்டியதில்லை. பக்திவிருத்திக்கு உதவுகின்ற விதமாக பாரம்பரியப் பக்திச் செயல்கள் இருந்தால், அவற்றைப் பின்பற்றுவது தவறு அல்ல. லெந்து கால பாரம்பரியப் பக்தி செயல்களைத் தொடர்ந்து பின்பற்றலாம். இவைகளை விலக்கி விடுவதால் மட்டும் எல்லோரும் பரிசுத்தமடைந்திடுவதில்லை. ஆனால் என்ன பிரச்சனை?

பாரம்பரியங்களை முன்னிலைப்படுத்தி, வேதாகம சத்திய வழிகாட்டுதல் களை பின்னுக்குத் தள்ளிவிட்டோம். இந்த பாரம்பரியப் பக்திச் செயல்களோடு நமக்கு ஏற்பட்ட பந்தத்தினால், சத்தியம் அவமதிக்கப்பட்டுவிட்டது. உங்கள் பாரம் பரியத்தினால் தேவனுடைய கற்பனைகளை அவமாக்குகிறீர்கள் என்று அன்று கர்த்தர் சொன்னது நிறைவேறி விட்டது. (மத்தேயு 15:6) பாரம்பரிய ஆசரிப்பு களோடு நம்மை இணைத்துக் கொண்டு, நம்மைக் கர்த்தருக்குரிய காரியங்களை நிறைவேற்றி விட்டவர்கள் போல உணருகின்றோம். ஆனால், பரிசுத்தமான, கர்த்த ருடைய காரியங்கள் நம்மிடம் நிறைவேறாததை, உணராமல் போகிறோம்.

லெந்து கால கூட்டங்கள், சுயவெறுப்புச் செயல்கள், ஜெபதபங்கள், உபவாசங்கள், குருத்தோலை ஞாயிறு, துக்க வெள்ளி, வியாகுல வியாழன் இப்படி ஏராளமான பாரம்பரியப் பக்திக் காரியங்களில் மூழ்கிப் போகிறோம். ஆனால், வேதாகமம் கூறுகின்ற மனந்திரும்புதல், இரட்சிப்பு, மறுபிறப்பு, பரிசுத்த ஆவியின் நடத்துதல், பரிசுத்தமாகுதல், சாட்சி வாழ்க்கை என்பவற்றை பலரும் நினையாமல் போகின்றனர். ஆம், பாரம்பரியங்கள் எல்லாம் தவறல்ல. ஆனால், வேதம் கூறும் அனுபவங்களை விட்டு விட்டு, அவற்றைப் பின்பற்றுவதே தவறு.

சிந்தனைக்கு...

பாரம்பரியப் பக்தி முறைகள் எல்லாம் பாவமல்ல.
ஆனால், வேதம் சொன்ன முறைகளை அவை பின்னுக்குத் தள்ளியதே பாவம்.

மார்ச் 25

பலன் தராத பக்தி

ஆமோஸ் 5:21–27

உங்கள் ஆசரிப்புகளில் எனக்குப் பிரியமில்லை.
ஆமோஸ் 5:21

லெந்து காலங்களில் கிறிஸ்தவர்கள் திருமணம் போன்ற வைபங்கள் நடத்துவதில்லை. அதனை ஒரு பக்தியாக அவர்கள் எண்ணுகின்றனர். லெந்து காலங்களில் சிலர் முகச்சவரம் செய்வதில்லை. அது அவர்களுக்குப் பக்தியான ஒரு விஷயமாகத் தோன்றுகிறது. லெந்து காலத்தில் அநேகர் கறி மீன் போன்ற மாம்ச உணவுகளைச் சாப்பிடுவதில்லை. அதனை அவர்கள் ஒரு வலிமையான பக்திச் செயலாக எண்ணுகின்றனர். லெந்து காலங்களில் சிலர் மிக மிகச் சன்யாசி ரகமான உடைகளை அணிந்து, பக்தித் திருப்தி அடைகின்றனர்.

இவை எதுவும் தவறல்ல. இது அவரவருடைய தனிப்பட்ட உணர்வுகள் சார்ந்த விஷயம். ஆனால், தேவனுடைய பார்வையில் இவை எதுவும் பக்தியாகக் கணக் கிடப்படுவதுமில்லை. அதற்காக எந்த விசேஷப் பலன்களும் அருளப்படு வதில்லை. ஏனென்றால், இவை யாவும் ஒவ்வொரு காலகட்டங்களில் தங்களிடம் நல்ல பக்தி உணர்வை உணருவதற்கு, மக்கள் தாங்களாக ஏற்படுத்திக் கொண்ட பாரம்பரிய விஷயங்களே. காலப்போக்கில் இவை பின் சந்ததிக்கு அடிமை விலங்குகள் போல் ஆகிவிட்டன. இவைகளால் இவர்களுக்கு விசேஷ நன்மை எதுவும் இல்லை. ஆனால், அவர்களால் அவற்றைத் தவிர்க்கவும் முடிவதில்லை.

லெந்து காலம் என்று கூறப்படும் நாட்களில், நாம் பக்தி என்ற பெயரில் செய்கின்ற காரியங்கள் அல்ல தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் பக்தி. இயேசு கிறிஸ்து பாடுபட்ட விதங்களை நினைவுகூர்ந்து, நம்மை நாமே சில காலம் சுய வெறுப்பு விஷயங்களோடும், சபை நடத்தும் கூட்டங்களோடும் இணைத்துக் கொள்வது அல்ல. சிலுவையில் இயேசு அறையப்பட்டதின் விளைவாக உருவாக்கப்பட்ட இரட்சிப்பு, மறுபிறப்பு, பரிசுத்தமாகுதல், தேவனுடைய பிள்ளையாக வாழ்தல், தேவ உறவு, சாட்சி வாழ்க்கை போன்ற பரிசுத்த விஷயங்களை நாம் அனுபவிக்கணும்.

நாம் மனந்திரும்பிப் பரிசுத்தமான தேவ உறவில் இணைந்து, தேவனுக் கேற்ற கனிகொடுத்து வாழ்வதே தேவன் நியமித்த பக்தி. இந்தப் பக்தி ஆண்டு முழுவதும் நம்மோடு வரவேண்டும். இந்தத் தேவ எதிர்பார்ப்பின்படியான பக்தி அனுபவத்தைத் தேடாமல், பாரம்பரியங்கள் தந்த தற்காலிகப் பக்தி அனுபவத்தைப் பற்றிக் கொண்டிருப்பது, தேவனுக்குப் பிரியமானதல்ல. நாம் பக்தியைக் காண் பிக்க அல்ல. தேவனுடைய பிள்ளைகளாய் மாறி, பரிசுத்தத்தைக் காண்பிக்கவே அழைக்கப்பட்டோம்.

சிந்தனைக்கு...

லெந்து காலத்தில் பக்தியாய் செயல்வடுவது தவறல்ல.
அந்த பக்தி லெந்துகாலத்தோடு முடிந்து போவதே தவறு.

மார்ச் 26

குருசு போடுதல்

1 கொரிந்தியர் 2:1–16

சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி.
1 கொரிந்தியர் 2:2

நான் சில இல்லங்களுக்குச் செல்லுகின்ற போது, தங்கள் பிள்ளைகளின் நெற்றியில் குருசு போடச் சில பெற்றோர்கள் கேட்பார்கள். நான் அந்தப் பிள்ளை களுக்காக எவ்வளவு பாரத்தோடு ஜெபித்தாலும், குருசு போடாவிட்டால் அவர்கள் அதிருப்தியோடு என்னைப் பார்ப்பார்கள். ஏனென்றால், ஜெபத்தைவிட, அவர்கள் குருசு அடையாளத்தை நெற்றியில் போடுவதையே, ஆசீர்வாதம் என்று நம்புகின்றார்கள். ஆனால், இது ஒரு மூடநம்பிக்கைச் செயல் என்பது அவர்களுக்கு தெரியாது. கிறிஸ்தவர்கள் சிலுவை அடையாளத்தால் அறியப்படுவது உண்மை. ஆனாலும், சிலுவை என்பது ஆசீர்வாதத்தின் அடையாளமல்ல..

நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்காக, இயேசு ஏற்றுக் கொண்ட ஒரு சாபத்தினைத் தான் சிலுவை குறிக்கிறது. சாபமாகிய சிலுவையை இயேசு ஏற்றுக் கொண்டு, நமக்கு தேவனுடைய பிள்ளைகளுக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தந்தார். சிலுவை நமக்காக இயேசு எவ்வளவு பெரிய சாபத்தைச் சுமந்து, நம்மை விடுவித்தார் என்பதை நினைத்துப் பார்க்கத் தூண்டும் அடையாளமே. (கலா 3:13) அந்தச் சிலுவை அடையாளத்தை நம்மோடு இணைத்துக் கொண்டால், ஆசீர்வாதம் என எண்ணுவது சரியல்ல. சிலுவையை நெற்றியில் வரைந்தால், அது ஆசீர்வாதமாக மாறும் என்பது சத்திய அடிப்படையற்ற ஒரு மூடநம்பிக்கையே.

பல கிறிஸ்தவர்கள் தாங்கள் உபயோகிக்கும் பொருட்களிலும், ஆபரணங்களிலும், தங்கும் வீடுகளிலும், பயணம் செய்யும் வாகனங்களிலும் சிலுவை அடையாளத்தை வைத்திருப்பார்கள். ஏனென்றால், அந்த அடையாளத்தால் தீமை தடுக்கப்படும் என்றும், நன்மை வரவழைக்கப்படும் என்றும் நம்புகின்றனர். ஆனால், சிலுவை சுமந்து தங்களுக்காக இயேசு உருவாக்கிய இரட்சிப்பைத் தேடுவதுமில்லை, நாடுவதுமில்லை.

சாப மரமாகிய சிலுவையை புனிதமாக எண்ணி ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் சாபத்தைச் சுமந்து தீர்த்த இயேசுவுக்கு வெகுதூரமாயிருக்கின்றனர். சிலுவை அடையாளம் நாம் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரு தக வலைப் பலருக்குத் தெரிவிக்குமேயன்றி, வேறெந்த நன்மையையும் கொண்டு வராது. அப்போஸ்தலனாகிய பவுல் சிலுவையை அல்ல. சிலுவையில் அறையப் பட்ட இயேசுவையே பிரசங்கித்தான். அவரால்தான் ஆசீர்வாதம். அவர் இருக்கு மிடத்தில் தான் ஆசீர்வாதம். சிலுவை இருக்குமிடங்களிலெல்லாம் இயேசு இருப்பார் என்று நாம் நினைப்பது தவறு.

சிந்தனைக்கு...

சிலுவை அடையாளங்களால் ஆசீர்வாதம் வராது,
சிலுவையில் சுயம் அறையப்பட்டால் ஆசீர்வாதம் தடைபடாது.

மார்ச் 27

லெந்து காலமும் கறிசோறும்

ஏசாயா 58:1–11

மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும்.
ஏசாயா 58:5

லெந்து கால கன்வென்ஷனுக்குப் பேச வந்த பிரசங்கியார், கறிசோறு சாப்பிடுகிறதைக் காண நேர்ந்த ஒருவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. நாங்களெல்லாம் கறி மீன் எதுவும் சாப்பிடாமல் லெந்துகாலம் ஆசரிக்கிறோம். எங்களுக்குத் தேவ செய்தி சொல்ல வந்த போதகர், ஒரு முன்மாதிரியில்லாமல், இப்படி தபசு காலத்தில் கறி சோறு சாப்பிடுகிறாரே என்று அந்த நபர் புலம்பினார். ஆம், நம்மில் அநேகர் வேதம் சொல்லாத பக்தி முறைகளைப் பின்பற்றுவதை, மிகப் பெரிய அர்ப்பணிப்பாக எண்ணுகின்றோம்.

எது பக்தி விருத்தியை உருவாக்குமோ, எது தேவனை மகிமைப்படுத்துமோ, எது மற்றவர்களுக்கு முன்பாக நல்ல சாட்சியாகக் காணப்பட உதவுமோ, அவற்றையெல்லாம் ஏராளமான கிறிஸ்தவர்கள் பெரிதாக நினைப்பதில்லை. உண்மையான பக்தி விருத்திக்கு உதவாத பாரம்பரிய ரீதியான காரியங்கள் விஷயத்தில், அதிகமான பக்தி வைராக்கியம் காட்டப்படுகிறது. லெந்து காலத்தில் கறிமீன் சாப் பிடாத விரதக் கடைப்பிடிப்பு, எந்த தேவ ஆசீர்வாதத்திற்கும் நம்மை தகுதிப் படுத்தாது. லெந்து காலத்தில் நாம் எளிமையாக உடுத்தாலும், சுப விசேஷங்கள் நடத்தாமல் போனாலும் அவை எந்தப் பரிசுத்த விளைவையும் ஏற்படுத்தாது.

அவை பின்பற்றப்படுவது தவறல்ல. ஆனால், அவற்றால் எந்த விசேஷ நன்மையும் வராது. அது பின்பற்றுகின்றவரின் சுய திருப்திக்கு மட்டும்தான் உதவும். பலன் எதுவும் தராத பாரம்பரியக் கடைப்பிடிப்புகளைப் பின்னுக்குத் தள்ளி விட்டு, நிச்சயமான பலன் ஏற்படுத்தும் மனந்திரும்புதல், இரட்சிப்பு, பரிசுத்த வாழ்க்கை, தேவ உறவு தேடுதல், சாட்சி வாழ்க்கை, வார்த்தை, விசுவாசம் போன்றவற்றை முதலிடத்தில் வைக்க வேண்டும்.

மனந்திரும்புதல், இரட்சிக்கப்படுதல், மறுபடியும் பிறத்தல், கர்த்தருக்கேற்ற வழிகளில் நடத்தல் போன்ற உண்மையான ஆசீர்வாதச் செயல்பாடுகளுக்குள் நாம் வரவேண்டும். கர்த்தர் வேதாகமம் மூலம் காண்பித்த ஆரோக்கியமான பரிசுத்த வழிகளில் செல்லாமல், பாரம்பரிய நம்பிக்கைகளுக்கும், மனிதர்கள் உருவாக்கிய மாயையான பக்தி வழிகளுக்கும் செல்லுதல் நல்லதல்ல. லெந்து காலம் ஆசரிப்பது பாவமா? லெந்து காலத்தில் சுய வெறுப்பு வாழ்க்கை வாழ்வது தவறா? என்ற கேள்விகள் அல்ல. கர்த்தர் நமக்குக் காண்பித்த அடிப்படை வழிகளைக் கண்டு கொள்ளாதது பாவமில்லையா? என்ற கேள்வியே முக்கியமானது.

சிந்தனைக்கு...

நம்மை நாமே சிரமப்படுத்துவது நமக்குத் திருப்தி தரும்.
நம்மைத் தேவன் ஆளுவதற்கு விட்டுக் கொடுப்பதே தேவனைப் பிரியப்படுத்தும்.

மார்ச் 28

யூதாசின் முத்தம்

மத்தேயு 26:45-50

ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான்.
மத்தேயு 26:49

யூதாஸ் பலர் நடுவில் இயேசுவை முத்தமிட்டான். அந்த நாட்களில் பலர் நடுவில் ஒருவரை முத்தமிடுவது என்பது, அந்த நபர்மேல் ஒருவருக்கு எவ்வளவு பெரிய அன்பு இருக்கிறது என்பதை அறிக்கையிடும் ஒரு செயலாகும். எனவே, யூதாஸ் நான் எவ்வளவு பெரிய அன்பை இயேசுவின் மேல் வைத்திருக்கிறேன் என்று பலர் நடுவில் அறிக்கையிட்டான். ஆனால், அந்தச் செயல் யூதாசைப் பொறுத்தவரை ஒரு மாய்மாலச் செயல். ஏனென்றால், அவன் இயேசுவை முத்த மிட்டது அன்பினால் அல்ல. அவனுடைய நோக்கம் வேறு. அவரைக் காட்டிக் கொடுத்து பணம் சம்பாதிப்பதே அவனுடைய நோக்கம்.

எனவே, ஜனங்களின் பார்வைக்கு அவன் கொடுத்தது போலியானதோர் தோற்றம். சில நேரங்களில் சில போதகர்கள் இயேசுவின்மேல் தங்களுக்கிருக்கும் அன்பையும், பற்றையும், பாசத்தையும் பற்றிக் கூறும் போது புல்லரிக்கும். எவ்வள வாய் இயேசுவை இவர்கள் நேசிக்கிறார்கள், எவ்வளவாய் இயேசுவை இவர்கள் மிக முக்கிய இடத்தில் வைத்திருக்கின்றார்கள் என்று ஜனங்களைச் சித்தரிக்க வைக்கும். எவ்வளவாய் இயேசுவின் பிரசன்னத்திற்குள் மூழ்கிப் போய், இவர்கள் ஆனந்தப் பரவசமடைகின்றார்கள் என்று எண்ணத் தோன்றும்.

ஆனால், அவர்களின் வாழ்க்கையில் ஆடம்பரமும், பண ஆசையும், படோடாபமும் முதலிடத்தில் இருக்கும். பல விதங்களில் அவர்களின் வாழ்க்கை முறைகள் இயேசுவை அவமதிக்கும். அப்படியானால், இவர்களின் பரவசத் தோற் றங்கள் எப்படி? இயேசுவை அனுபவிப்பதாகக் கூறுவது எப்படி? இயேசுவுக்காகக் காண்பிக்கும் பக்தி வைராக்கியம் எப்படி? அவை அவர்கள் கொடுக்க விரும்பும் பொய்த் தோற்றங்கள். ஜனங்களுக்கு மாயத்தோற்றம் கொடுத்து, தங்களின் சுய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

இயேசுவுக்காக மிகப்பெரிய அர்ப்பணிப்போடு வாழ்கின்றவன் என்று, ஜனங்களை நினைக்க வைத்த யூதாசைப் போல, இவர்கள் தங்களின் ஆசை களை நிறைவேற்றவே ஓடுகின்றனர். ஒருவர் இயேசுவின்மேல் வைத்திருக்கும் அன்பை, அவர் பரவசமாகப் பாடுவதை வைத்துக் கணக்கிட முடியாது. ஒருவர் கர்த்தரை ரொம்பவும் அனுபவிக்கிறார் என்பதை, அவருடைய வாழ்க்கை எந்த அளவிற்கு கிறிஸ்துவுக்கேற்ற பரிசுத்தத்தைப் பிரதிபலிக்கிறது என்பதை வைத்துத் தான் அதை அறிய முடியும்.

சிந்தனைக்கு...

யூதாஸ் முத்தமிட்டது ஒரு மாய்மால நாடகம்.
இன்றைய பல கிறிஸ்தவர்களின் ஆராதனைகளும் அப்படியே.

மார்ச் 29

துக்க வெள்ளி சோகம்

லூக்கா 23:26-43

நீங்கள் எனக்காக அழாமல்.....

லூக்கா 23:28

ஒருவர் வியாதிப்பட்டு நீண்டகாலம் மருத்துவமனையில் சிகிட்சை பெற்று வந்தார். அவரை மிக நெருக்கமான உறவினர் ஒருவர் ஒரு நாள் கூட போய் பார்க்கவில்லை. ஒருநாள் அவர் மரித்துப் போன பிறகு, அந்த உறவினர் வந்து மிகவும் சோகத்தோடு, மரித்தவரின் பக்கத்தில் வந்து நின்று கொண்டிருந்தார். ஆனால், மரித்தவரின் மனைவியும் பிள்ளைகளும் அந்த உறவினரின் சோகத்தைப் பார்த்து அதிகமாக எரிச்சலடைந்தனர்.

இன்று ஏராளமான கிறிஸ்தவர்களும் இந்த உறவினரைப் போன்றவர்களே. அவர்கள் பெரும்பாலும் சபைகளுக்கு வருவதில்லை. அவர்களுக்குச் சபை கூடுதல், போதனை, ஆராதனை எதுவும் முக்கியம் அல்ல. ஆனால், துக்க வெள்ளி என்னப்படும் நாளில், மிகவும் சோகமான முகத்தோற்றத்துடன் தவறாமல் வந்து கலந்து கொள்வார்கள். இவர்களுக்காகத்தான் பெரும்பாலான சபைகளில் துக்க வெள்ளியன்று, விசேஷப் பந்தல், போடப்படுகிறது. வருடத்திற்கு ஒருமுறை இயேசு கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூர இவர்கள் வருகின்றனர்.

அநேகர் இயேசு என்ன போதித்தார் என்று கேட்பதில்லை. இயேசு சிலுவையில் ஜீவனைக் கொடுத்து உருவாக்கிய இரட்சிப்பைக் குறித்துக் கவலைப்படுவதில்லை. பாவிகளை இரட்சிக்க வந்த இயேசுவின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, அவருடைய மரணத்தின் வழியாக வந்த இரட்சிப்பைப் பெறுவதில்லை. அநேகர் 2024 ஆண்டுகளுக்கு முன்பாக பாவிகள் இயேசுவைக் கொலை செய்து விட்டார்களே என்று வருந்துகின்றனர். அவருடைய பாடுகளை நினைத்து சோகப் பாட்டுகளைப் பாடுகின்றனர். ஆயினும், சிலுவையில் அறைந்த பாவிகளுக்கும் சிலுவை மரணத்தைப்பயன்படுத்தாத பாவிகளாகிய தங்களுக்கும் வித்தியாசம் இல்லை என்ப தைப் புரிந்து கொள்வதில்லை.

இனி, நாம் இயேசுவின் பாடுகளுக்காக அழவோ, சோகமடையவோ, பரிதாபப்படவோ, கஸ்தியடையவோ தேவையில்லை. அவருடைய பாடுகளுக்காகச் சோகமடைகின்ற பக்தி, இயேசுவுக்கு எரிச்சலையே கொடுக்கும். அவர் எதற்காக மரித்தாரோ அதனைப் புரிந்து கொண்டு, இரட்சிப்பின் அனுபவத்தோடும், பரிசுத்த அனுபவத்தோடும் வாழவேண்டும். நம்முடைய பாவங்களை நினைத்து அழாமல், இயேசுவின் பாடுகளை நினைத்துப் பாடுவதும், சோக முகத்தோடு 7 வார்த்தை பிரசங்கம் கேட்பதும் தேவனுக்குப் பிரியமாயிராது.

சிந்தனைக்கு...

ஆண்டிற்கொருமுறை இயேசுவுக்காக அழுவது பக்தியல்ல
அனுதினமும் அவரால் வந்த இரட்சிப்புடன் வாழ்வதே பக்தி.

மார்ச் 30

விசுவாசம் எதற்காக?

கொலோசெயர் 3:1–17

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.
கொலோசெயர் 3:2

பக்தியுள்ள ஒருவர் நல்ல விசுவாசத்தோடுதான் பேசுவார். அவருடைய மனைவி குடும்பச் சூழல்களால் சில நேரம் சோர்ந்து விடுவார். ஆனால், இவரோ விசுவாச வார்த்தைகள் கூறி உற்சாகப்படுத்த விரும்புவார். பணத்தைப் பற்றி கவலைப்படாதே, கர்த்தர் பார்த்துக் கொள்வார். பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படாதே, கர்த்தர் பார்த்துக் கொள்வார். உடம்பு பிரச்சினைகளைப் பற்றிக் கவலைப்படாதே, கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று விசுவாச வார்த்தை பேசுவார். ஆனாலும், அவருடைய விசுவாசத்திற்கேற்றபடி அங்கே அவர் நன்மை ஒன்றையும் காணவில்லை.

ஏனென்றால், இவருடைய விசுவாசம் என்பது, தனக்கு எல்லாம் நல்லபடியே நடக்கும் என்பதாக இருக்கிறது. தனக்குப் பிரச்சினை வராமல் கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் ,என்பதே அவருடைய விசுவாசத்தின் தன்மையாக உள்ளது. ஆனால், இந்த விசுவாசம் நிறைவேறுவதற்கு ஏதுவாக, அவர் தேவனுடைய திட்டத்தின்படி விசுவாசிக்க வேண்டிய இன்னொரு பக்கம் உள்ளது என்பதைச் சிந்திக்கவில்லை. ஆம், அநேகர் விசுவாசம் என்பதைத் தங்கள் வாழ்க்கைக்குக் கர்த்தர் சகாயம் செய்வார் என்ற ஒரு விஷயத்தையே மையமாகக் கொண்டுள்ளனர்.

ஆவிக்குரிய வாழ்க்கை அல்லது பக்தி வாழ்க்கை என்பது ,கர்த்தர் நம் வாழ்க்கைக்காக எல்லாம் செய்வார் என்று விசுவாசித்து வாழ்வது அல்ல. நம் வாழ்க்கையின்மேல் தேவன் ஒரு திட்டத்தை வைத்துள்ளார். நாம் தேவனுடைய பிள்ளைகளாக, இந்தப் பூமியில் பரிசுத்த தேவனுக்குச் சாட்சிகளாக வாழ வேண்டும். தேவனுடைய பரிசுத்தத்தை நம்முடைய வாழ்க்கை மூலம் வெளிப் படுத்த வேண்டும். கர்த்தர் என்னைப் பரிசுத்த சாட்சியாக வாழவைப்பார். கர்த்தர் என்னைத் தம்முடைய ஐக்கியத்தால் ஆதரிப்பார். கர்த்தர் என்னைத் தம்முடைய ஆவியினால் நடத்துவார் என்பது போன்ற விசுவாசம் வேண்டும்.

தேவனுடைய திட்டத்தின்படியான காரியங்களில் நாம் விசுவாசத்தைப் பயன் படுத்த வேண்டும். அப்போது அதனுடைய விளைவாக, நம்முடைய வாழ்வின் காரி யங்களுக்குத் தேவன் ஆதரவாயிருந்து நம்மை நடத்துவார். தேவன் இருப்பதே, நம்முடைய வாழ்க்கையை நல்ல ஆசீர்வாதமாக வைத்துக் கொள்ளத்தான் என்று எண்ணக்கூடாது. முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேடு, அப்பொழுது இவைகளெல்லாம் கூடக் கொடுக்கப்படும் என்ற தேவ வழியைப் பின்பற்ற வேண்டும்.

சிந்தனைக்கு...

நல்லதே நடக்கும் என்பது அல்ல விசுவாசம்,
எது நடந்தாலும் எதிர்கொள்ள முடியும் என்பதே விசுவாசம்.

மார்ச் 31

அன்பும் எதிர்பார்ப்பும்

லூக்கா 24:13-35

விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே....
லூக்கா 24:25

ஒருவருடைய பிள்ளைகள் அவருடைய வயதான நாட்களில், அவருக்குப் போட்டியிட்டுக் கொண்டு பலவிதமான அன்பின் செயல்களை மிகுந்த பாசத்தோடு செய்தனர். ஆனால், அந்த மனிதர் அவர்களின் பாசமிகுந்த செயல்களால் பெரிய மகிழ்ச்சி எதுவும் அடையவில்லை. ஏனென்றால், அவர்கள் ஒருவருக்கொருவர் நல்ல ஐக்கியத்தோடு இல்லை. அவர்களிடம் தேவ பக்தி சார்ந்த வாழ்க்கை முறை எதுவும் இல்லை. தகப்பனாரின் எதிர்பார்ப்பு பிள்ளைகள் நல்ல தேவ பக்தி அனுபவங்களோடு, ஒருவரோடொருவர் நல்ல ஐக்கியமாயிருக்க வேண்டும் என்பதாக இருந்தது.

சில நேரங்களில் கர்த்தருக்காக நாம் காண்பிக்கும் நல்ல பக்தி, அன்பு சார்ந்தவை. அவை நாம் எவ்வளவாய் கர்த்தரை விசேஷமாகக் கனப்படுத்துகிறோம் என்பதைப் பிரதிபலிப்பவை. ஆனால், அவை கர்த்தரின் எதிர்பார்ப்பு சார்ந்தவை அல்ல. அன்பு சார்ந்த அல்லது பக்தி சார்ந்த செயல்கள் நல்லதே. ஆனால், தேவனுடைய எதிர்பார்ப்பு சார்ந்த ஒரு பக்திச் செயல்பாடே மிகவும் முக்கியமானது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிரோடெழுந்த நாளில், தம்முடைய சீடர்கள் விசுவாசத்தோடு செயல்பட வேண்டும் என்று எதிர்பார்த்தார். அவர்கள் தம்மைக் கலிலேயாவுக்கு வந்து உயிரோடெழுந்தவராகப் பார்க்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆனால், அவர்களோ அன்பும், பாசமும், அக்கறையும் உடையவர்களாய், இயேசு மரித்த கல்லறைத் தோட்டச் சூழ்நிலைகளை நோக்கியே சென்றார்கள். தாம் திரும்பத் திரும்ப அறிவுறுத்தின வார்த்தைகளின்படி அவர்கள் கலிலேயாவுக்குச் சென்று அவரை உயிரோடிருக்கின்றவராகப் பார்க்கவில்லை. அவர்கள் அன்புடன் செயல்பட்டார்கள். ஆனால், தேவ எதிர்பார்ப்பின்படி விசுவாசத்தோடு செயல் படவில்லை.

நம்மில் பலருடைய பக்தியும் அன்பும், அர்ப்பணிப்பும் உடையதே. ஆனால், கர்த்தரின் எதிர்பார்ப்பின் அடிப்படையில் இல்லை. நிறையப் பக்தி விஷயங்களைச் சிலரிடம் பார்க்க முடிகிறது. ஆனால், அவர்களிடம் கர்த்தருக்கேற்ற சுபாவங்களைப் பார்க்க முடியவில்லை. நிறைய விஷயங்களில் சுய வெறுப்பும், கட்டுபாடுகளும், பக்தி நடவடிக்கைகளும் உள்ளன. ஆனால், தாழ்மை, பொறுமைச் சாந்தம் உலகத்தாரைப் போல வாழாமை போன்ற விஷயங்கள் இல்லை. இயேசு வோடு நல்ல ஐக்கியம் வைத்து, விசுவாசத்தின் பலத்தால் மேன்மையான வாழ்வை வாழ வேண்டும் என்பதே, தேவ எதிர்பார்ப்பு.

சிந்தனைக்கு...

நாம் எவ்வளவு பக்தியாயிருக்கிறோம் என்பது அல்ல,
நாம் எவ்வளவு பண்புகளோடிருக்கிறோம் என்பதே முக்கியம்.

ஏப்ரல் 1

இது என்ன அலங்காரம்?

சங்கீதம் 96:1–13

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.
சங்கீதம் 96:9

திருச்சபைச் சூழ்நிலைகளில் ஜனங்கள் பரிசுத்தமான விஷயங்களால் தொடப்படவும் தூண்டப்படவும் வேண்டும். சபை என்பது ஒரு குடும்பம். அங்கே அன்பு, ஐக்கியம், பகிர்தல் போன்றவை காணப்பட வேண்டும். அன்பிற்கும் நற்கிரியைக்கும் கூடிவருகின்றவர்கள் தூண்டப்பட வேண்டும் என்று எபிரெயர் 10:24-ல் வாசிக்கின்றோம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், திருச்சபைச் சூழல்களுக்குள் செல்கின்ற நாம், நம்மிடமுள்ள எதனால் மற்றவர்கள் தூண்டப் படவேண்டும் என்ற ஆவிக்குரிய நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

பரிசுத்த அலங்காரத்தோடு கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள் என்று வேதாகமம் கூறுகின்றது. ஆனால், இன்றைய சபைகளில் எவை அலங்காரமாக உள்ளது? பெரும்பாலும் உடையலங்காரமே சபை அலங்காரமாக உள்ளது. அநேகர் ஆபரண அலங்காரங்களையே சபைக்குத் தேவையான அலங்கார மாகக் கொண்டு வருகின்றனர்.

அன்பின் அலங்காரத்தையும், தாழ்மையின் அலங்காரத்தையும், பொறுமை யின் அலங்காரத்தையும், நற்சுபாவ அலங்காரத்தையும் இன்றைய சபைகளில் காண்பது மிகவும் கடினமான விஷயம். சபைகள் என்று சொல்கின்ற போது, ஒரு கோயில் சூழலை மட்டும் கற்பனை செய்யக்கூடாது. கிறிஸ்தவ மக்களாகக் கூடி வரும் சூழல்கள் எல்லாமே, சபைச் சூழல்கள்தான். உடையலங்காரங்களால் அநேகர் தாங்கள் எந்த அளவிற்கு உலகப்பிரகாரமான தரமற்ற கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்று காண்பிக்கின்றார்கள். ஆபரண அலங்காரங் களால் எந்த அளவிற்கு தங்களைப் பெருமைபடுத்துவதிலேயே குறியாயிருக் கிறார்கள் என்பது தெரிய வருகிறது.

ஒரு கம்மல் வாங்கி அணிந்திட இயலாத ஏழைகளும் சபைக்கு வருகிறார்கள். ஆபரணம் அணிவதற்கு இனி உடலில் இடம் இல்லை, என்ற அளவில் நகை யலங்காரம் செய்கிறவர்களும் சபைக்கு வருகிறார்கள். உடல் மறைக்க உரிய உடைகளை வாங்கி அணிய வசதியற்றவர்களும் சபைக்கு வருகிறார்கள். உடலைக் காட்டுவதற்கென்றே வடிவமைக்கப்பட்ட அரைகுறை உடைகளை அணிந்து நாகரீக சாட்சிகளாக வாழ்கிறவர்களும் சபைக்கு வருகிறார்கள். ஆனால், சபை கூடுகை என்பது பரிசுத்தக் கூடுகை. அங்கே நம்மிடம் பரிசுத்த அலங்காரம் உள்ளதா என்பதையே தேவன் பார்க்கிறார்.

சிந்தனைக்கு...

பாவிகளும் சபைகளுக்கு வரலாம். ஆனால், சபை என்பது
பரிசுத்தவான்களுக்கு மட்டுமே தகுதியானது.

ஏப்ரல் 2

மாய்மால அன்பு

சங்கீதம் 55:12-23

அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிருதுவானவை.
சங்கீதம் 55:21

ஒருவரை அன்பற்றவர் என்ற அடையாளத்தோடு பார்ப்பது வருத்தமான விஷயம்தான். ஆனால், நம்மை நேசிப்பது போலக் காண்பித்து விட்டு, செயல்களால் நம்மை வெறுத்தால் அது துக்கமான விஷயம். செய்த தவறுக்காக நாம் மன்னிப்புக் கேட்டும், நம்மை மன்னிக்காத ஒருவரைப் பற்றி எண்ணும் போது வருத்தமாக உள்ளது. ஆனால், நாம் செய்த தவறுகளை ஒரு பிரச்சினையாகவே எண்ணாதவர் போல ஒருவர் காண்பிக்கிறார். ஆனால், மனதில் இன்னும் அந்த கசப்பை வைத்து வாழ்வதை நாம் காணும் போது, ரொம்பத் துக்கப்பட நேரிடுகிறது.

ஆபத்திற்கு ஒரு உதவி செய்ய வராத நண்பரையோ, உறவினரையோ நினைக்கும் போது வருத்தம் வருகிறது. ஆனால், உதவி கேட்காதபோதே உயிரையே தருவது போல பேசுகிறார். ஆனால், அவசியமான ஒரு வேளையில் வாய் திறந்து கேட்டும் ஒரு உதவி செய்யாதவரை நினைத்தால் துக்கம் வருகின்றது. நல்ல வர்களாகவே நாம் வாழவேண்டும் என்பது தேவ சித்தம். ஆனால், நம்மை நல்லவர்களாகக் காண்பிப்பதில் மட்டும் குறியாயிருந்துவிட்டு, அப்படி எதுவும் நடத்தையில் இல்லாவிட்டால், அது மாய்மாலம். அதைக் கர்த்தர் விரும்பமாட்டார்.

சிலர் பிறரை நேசிப்பதில்லை. சிலர் பிறரை மன்னிப்பதில்லை. சிலர் பிறருக்கு உதவுவதில்லை. ஏனென்றால், அப்படிப்பட்ட ஒரு இருதயமே அவர்களுக்கு இல்லை. இப்படிப்பட்ட மனதினரை எண்ணும் போது, கொஞ்சம் மனக்கஷ்டம் வருகிறது. ஆனால், இப்படிப்பட்ட ஒரு இருதயத்தோடிருந்தாலும், அப்படியில்லாமல் நல்ல மனதினரைப் போல நடித்துக் காட்டுவது, அதிக மனக்கஷ்டத்தைத் தரும். ஏனென்றால், அவர்கள் நல்ல எதிர்பார்ப்பினை ஏற்படுத்தி விட்டு, ஏமாற்றி விடுவது போல் உள்ளது.

இன்றைய சபைகளிலே அன்புடன் பேசுகிறவர்கள் அநேகர் உண்டு. அக்கறையோடு விசாரிப்பவர்கள் உண்டு. மிகுந்த நட்புறவு காட்டுகின்ற அநேகர் உண்டு. ஆனால், அநேகர் அன்பற்ற இருதயத்தோடு இருக்கையில், ஒரு பக்திச் சூழலுக்காக இல்லாததை இருப்பது போலக் காண்பிக்கின்றனர். அன்பை வெளிப்படுத்தாமை ஒரு பாவம். இல்லாத அன்பை இருப்பதுபோலக் காண்பிப்பது பெரும்பாவம். மன்னியாமல் வாழ்வது ஒரு பாவம். வாயினால் மன்னித்துவிட்டு, இருதயத்தில் கசப்பைக் கட்டிக்காப்பது பெரும்பாவம். மாய்மாலமற்றவர்களாக வாழ கர்த்தர் நம்மை அழைக்கின்றார்.

சிந்தனைக்கு...

ஜனங்களுக்கு உன்னை நல்லவனாகக் காண்பி,
ஆனால், ஜனங்கள் உன்னிடம் நல்லதைப் பார்க்கணும்.

ஏப்ரல் 3

இதுதான் நம்பிக்கை

தானியேல் 3:6–18

எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்.
தானியேல் 3:17

கர்த்தர்மேல் வைக்கின்ற நம்பிக்கை என்பதின் அர்த்தம் என்ன? எந்த ஒரு விஷயத்திலும் கர்த்தர் நமக்கு எதிர்பார்த்த நன்மையைத் தருவார் என்று நம்புவதா? நம்மால் முடியாதவைகளைக் கர்த்தர் நமக்கு நிச்சயமாக வாய்க்கப் பண்ணுவார் என்று நம்புவதா ? நமக்காக யாவையும் கர்த்தரே செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையோடு பதட்டமில்லாமல் இருப்பதா? இவை யாவும் சரிதான். ஆனால், இதற்கு இன்னொரு பக்கம் உண்டு. கர்த்தர்மேல் நம்பிக்கை வைத் திருப்பது உண்மையாயின், நாம் நம்பினது நடப்பதற்காகக் கர்த்தருடைய வழி களையும் பரிபூரணமாக நம்ப வேண்டும்.

நாம் கர்த்தரை நம்பி வாழ்கிறோம் என்று கூறும் போது, ஜனங்கள் அந்த நம்பிக்கையை மட்டும் பார்க்கக் கூடாது. அந்த நம்பிக்கையினால் நாம் கர்த்த ருடைய வார்த்தைகளையும், வழிகளையும் முற்றிலும் சார்ந்து வாழ்கின்றோம். கர்த்தருடைய வழிகளில் நடப்பதில் உறுதியாயிருப்பதுதான் நமது நம்பிக்கையின் அடையாளம். கர்த்தருடைய வார்த்தைகளை விட்டு விலகாமல் வாழ்வதுதான், நாம் கர்த்தரை நம்பி வாழ்வதின் முக்கிய அடையாளம்.

அனனியா, அசரியா, மீஷாவேல் ஆகியோர் கர்த்தர் மேல் பெரிய நம்பிக் கையை வைத்திருந்தனர். அவர்கள் நேபுகாத்நேச்சார் நட்டுவைத்த சிலையை வணங்கக் கூடாது என்பதில் உறுதியாயிருந்து, அந்த நம்பிக்கையை வெளிப்படுத் தினார்கள். கர்த்தர் தங்களை விடுப்பார் என்ற விசுவாசத்தில் மட்டும் அவர்கள் நம்பிக் கையைப் பிரதிபலிக்கவில்லை. கர்த்தர் தங்களை விடுவிக்காமல் போனாலும், அந்தச் சிலையை வணங்கப்போவதில்லை என்ற நிலைப்பாட்டினாலும் அவர்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள்.

ஜனங்கள் நம்முடைய நம்பிக்கையான ஒரு மனநிலையை மட்டும் பார்ப்பது அல்ல. நாம் கர்த்தருடைய வழிகள் மேலும், வார்த்தைகள் மேலும், போதனைகள் மேலும், எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்து வாழ்கின்றோம் என்பதையும் பார்க்க வேண்டும். நமக்கு நல்லது நடந்தாலும் சரி, நடக்காவிட்டாலும் சரி, கர்த்தர் விதித்த நியமங்கள் நமக்கு நன்மையானவை என்று நாம் நம்புவதையும் ஜனங்கள் பார்க்க வேண்டும். கர்த்தருக்கேற்ற ஒரு வாழ்க்கை முறையில் நாம் மிகுந்த நம்பிக்கையுடையவர்கள் என்பதைப் பிறர் பார்க்கணும்.

சிந்தனைக்கு...

கர்த்தருடைய வழிகளை நம்பி நடக்காதவர்கள்,
கர்த்தரை எவ்வளவு நம்பினாலும், ஏமாற்றமே பலன்.

ஏப்ரல் 4

ஒருவனுமில்லையா?

ஆதியாகமம் 6:1–12

நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே...
ஆதியாகமம் 6:9

ஒருவர் யாரைச் சந்தித்தாலும் இன்று உண்மையான கிறிஸ்தவர் ஒருவர் கூட இல்லை என்பாராம். உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்கிற ஒரே ஒரு கிறிஸ்தவனை நீங்கள் காட்ட முடியுமா என்று சாவல் விட்டுக் கேட்பாராம். ஒரு முறை அவருடைய நண்பர் ஒருவரிடம் அதே கருத்தை அவர் சொன்னாராம். அதனைக் கேட்ட நண்பர், நீ சொல்வது உண்மைதான். ஆனால், ஒரே ஒரு கிறிஸ்தவன்கூட இல்லாததின் உண்மையான காரணம் நீதான் என்றாராம். அதற்கு அந்த நபர், நான் எப்படிக் காரணமாக முடியும் என்று திருப்பிக் கேட்டார்.

அதற்கு அந்த நண்பர், நீ ஒருவனாவது உண்மையான கிறிஸ்தவனாக இருந்திருந்தால், ஒருவர்கூட உண்மையான கிறிஸ்தவன் இல்லை என்ற நிலைமை வந்திருக்காதே என்றாராம். அநேகர் இன்றைய கிறிஸ்தவ உலகம் பற்றிப் பேசும் போது, தங்களைப் பற்றி யோசிப்பதில்லை. அவர்கள் பார்க்க நேரிடுகின்ற பிறரிடம் உண்மைக் கிறிஸ்தவம் இல்லை என்று கண்டு சோர்ந்து போவார்கள். ஆனால், தாங்கள் ஒரு உண்மையான வாழ்க்கை வாழ்வதைப் பிறர் பார்க்க முடிகிறதா என்று யோசிப்பதில்லை.

வேதத்தின்படி யார் வாழ்கின்றார்கள் என்று மட்டும் பார்க்கக் கூடாது. வேதத் தின்படி வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மை போல, யாரும் இல்லையா என்றும் பார்க்க வேண்டும். நாம் வாழ்கின்ற வாழ்க்கை எல்லோரைப் போல அல்லாமல், வித்தியாசமாக இருக்க வேண்டும். அப்போது உண்மையான கிறிஸ்தவன் ஒருவன் இருக்கிறான் என்பது உண்மையாகிவிடும். நோவாவின் காலத்தில் எல்லோரும் தவறாகவே போனார்கள். ஆயினும், தேவன் தேடினபோது, அங்கே ஒரு நோவா இருந்தான். எனவே, ஒருவர்கூட இல்லை என்ற நிலை ஏற்படவில்லை.

உங்கள் கிறிஸ்தவம் போதிக்கிறது எல்லாம் உண்மை என்று காட்ட, உங்களால் ஒருவனையாவது காட்ட முடியுமா என்று யாராவது கேட்டால், நாம் திரு திரு என்று முழிக்கக்கூடாது. இதோ நான் இருக்கிறேன் என்று நம்மைக் காட்ட வேண்டும். அப்படியானால் நாம் அதற்கேற்ற நல்ல மாதிரியாக இருக்க வேண்டும். சிலர் ஒரு ஊழியனும் உண்மை இல்லை என்பார்கள். ஆனால், ஊழியன் உண்மை இல்லை என்று கூறும் அவர்கள், ஒரு விசுவாசி என்ற முறையில் உண்மையானவர்களாயிருப்பதில்லை. நாம் மற்றவர்கள் சரியா என்று பார்க்கும் முன்பு, நாம் சரியா என்று பார்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

உண்மையுடன் வாழ்கிற ஒருவனை நீ காணாவிட்டால்,
உன்னை உண்மையுள்ளவனாக உலகம் காணச் செய்.

ஏப்ரல் 5

சகிப்பது சந்தோஷம் தரும்

ரோமர் 12:9–21

ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்.
ரோமர் 12:17

சகிக்கணும், பொறுக்கணும், விட்டுக் கொடுக்கணும். இவை கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகவும் முக்கியமான விஷயங்கள். ஆனால், இவை எளிதான வைகள் அல்ல. மிகவும் கடினமானவை. சிலர் பேசினவைகளையும், செய்தவை களையும்,நடந்து கொண்ட விதங்களையும் பார்த்து எதிர்வினை யாற்றாமல், சகித்துக் கொள்வது என்பது மிகவும் கடினமான விஷயங்கள். அது மட்டுமல்ல கர்த்தருடைய பிள்ளைகள் இதுபோன்ற சிரமமான சுபாவங்களை, ஒரு விதமான வருத்தத்தோடு அல்ல, சந்தோஷமாக வெளிப்படுத்த வேண்டும். அதுதான் தேவனுக்குப் பிரியம்.

வேறு வழியில்லை என்பதற்காக அல்ல. கர்த்தருக்காகப் பொறுத்து சகித்து தாங்கிக்கொண்டுதான் போக வேண்டும் என்ற கட்டாயத்திற்காக அல்ல. சில விஷ யங்களைச் சகித்துப் போவதால், ஒரு பெரிய சந்தோஷம் உண்டு. முக்கிய மாக மூன்று விதமான ஆவிக்குரிய சந்தோஷங்களை நாம் பெற முடியும். முதலாவதாக, நாம் எதிர்த்து நிற்காமலும், பழிக்குப் பழியாகச் செய்யாமலும் சகித்துப் போகும் போது தேவன் அதை மிகவும் மகிழ்வோடு பாராட்டுவார்.

இரண்டாவது, சகித்துப் போவதும் பொறுத்துப் போவதும், ஒரு மிகப்பெரிய ஆற்றலின் பிரதிபலிப்பாகும். எதையும் சகிக்க இயலாமல் பதிலுக்குப் பதிலாகச் செயல்படுவது, தேவனுடைய பார்வையில் ஒரு பலவீனம். சில எதிர்மறை விஷயங் களைத் தாங்கிக் கொள்ள இயலாத நிலை, ஒருவருடைய மன பலவீனத்தையே காட்டும். அப்படியிருக்க, நாம் சகித்தும், பொறுத்தும் வாழும் போது, நம்மிடம் ஒரு பெரிய ஆற்றல் இருப்பதை அது வெளிப்படுத்துகிறது. யோசேப்பினால் சகோதரர் களின் வெறுப்புச் செயலைச் சகிக்க முடிந்தது. தாவீதால் சவுலின் அநீதியான செயல்களைப் பொறுத்துக் கொள்ள முடிந்தது. மோசேயால் எபிரெய ஜனங்களின் கோபமூட்டும் செயல்களைத் தாங்கிக் கொள்ள முடிந்தது.

மூன்றாவதாக, பதிலுக்குப் பதில் செயல்படுவது என்பது, ஒரு கடுகு போன்ற விஷயத்தை, மலை போன்ற விஷயமாகப் பெரிதாக்கும் செயலாகும். சிறிய ஒரு கசப்பும் வெறுப்பும் மிகப் பெரியதாக மாறி, பெரிய தீங்குகளுக்கு வழிவகுக்கும். எனவே, சகிக்கிற மனிதன் ஒரு பிரச்சினையைப் பெரிதாக விடாமல், அதனை மட்டுப்படுத்துகிறான். எனவே, சகிப்புதன்மை அதனை உடையவருக்கு ஒரு பெரிய சந்தோஷத்தைத் தரும்.

சிந்தனைக்கு...

சகிப்பவன் பிரச்சினைக்கு வாசலை அடைக்கிறான்,
சகிக்க விரும்பாதவன் பிரச்சினைக்குத் தடையில்லாமல் வாசலைத் திறக்கிறான்.

ஏப்ரல் 6

கர்த்தர் மரிக்கவில்லை

யோபு 19:14–29

என் மீட்பர் உயிரோடிருக்கிறார்.

யோபு 19:25

ஒரு பெண் தன் கணவனை இழந்து மிகவும் துக்கமாயிருந்த வேளையில், பலர் சென்று பலவிதங்களில் ஆறுதல் கூறினார்கள். ஆனால், அந்தப் பெண்ணிற்கு அது எதுவும் உதவி செய்யவில்லை. என் கணவன் என்னை விட்டு மறைந்துவிட்ட பிறகு, இனி நான் யாருக்காக வாழவேண்டும் என்று புலம்புவாள். அவ்விதமே, ஒரு பாஸ்டர் போய் வேத வசனங்களைக் காண்பித்து, ஆறுதல் சொன்னார். அந்தப் பெண்ணோ, நான் வாழ்ந்து என்ன பயன்? எதைப் பார்த்து நான் சந்தோஷப்பட முடியும் என்று புலம்பினாள்.

அதற்கு அந்தப் பாஸ்டர், கணவனுக்காக வாழ்வது மட்டுமே வாழ்வாகிவிடாது. இந்த ஜீவன் இருக்கும் வரை கர்த்தருக்காக வாழ வேண்டும். இனி உனக்கு யாருமில்லை என்று எண்ணாதே. உன் கணவன்தான் மரித்துப் போனான். உன் கடவுள் மரிக்கவில்லை அவர் வாழ்கிறார். அவருக்காக நீ வாழ்ந்தால், அவர் உன்னை நிச்சயம் வாழ வைப்பார் என்றார். ஆம், வாழ்க்கையில் உடனிருந்த ஒருவர் மறைந்து விடும் போது, இனி நான் யாருக்காக வாழவேண்டும் என்ற உணர்வுகள் வருவது இயற்கையானது.

யோபுவின் வாழ்க்கையில் அவனுடைய பிள்ளைகள் யாவரும் மரித்தனர். ஆஸ்தி, அந்தஸ்து எல்லாம் அழிந்தது. அவனுடைய மனைவியோ இனி யாருக்காக வாழப் போகிறாய் என்று கூறுவது போல, நீயும் மரித்துவிடு என்றாள். ஆனால், அவனோ அனைத்தையும் இழந்தாலும், தேவ நம்பிக்கையை இழக்கவில்லை. என் மீட்பர் உயிரோடிருக்கின்றார். நான் அவரைக் காண்பேன் என்றான். ஆம், அனைத்தும் மரித்துவிட்டது போன்ற சூழ்நிலையிலும், அவன் தேவன் உயிரோடிருக்கின்றாரே என்ற உணர்வோடு, அவரிடமே புலம்பிப் புலம்பித் தன்னை தேற்றிக்கொண்டான்.

நீண்ட காலமாக மோசேயுடன் நிழல்போல நீங்காமல் வந்து கொண்டிருந்த யோசுவாவுக்கு, மோசேயின் மரணம் பெரிய இழப்பு. ஆனால், தேவன் அவனுக்குத் தம்மை வெளிப்படுத்தி, நான் உன்னோடிருப்பேன், உன்னோடு வருவேன் என்றார். ஆம், மோசேதான் மரித்து போனான். மோசேயின் தேவன் உயிரோடிருந்தார். உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனுக்கு ஆதரவாயிருக்கப் போவதை அவனுக்கு அறிவித்தார். ஆம், மனிதர்களின் பிரிவு தவிர்க்க இயலாதது. ஆனால், கர்த்தர் உயிரோடிக்கின்றார். நாம் உயிர் வாழும் காலமெல்லாம் நம்முடனிருந்து நம்மை நடத்துவார்.

சிந்தனைக்கு...

தேவனுக்காக வாழ்கிறவன்தான் பிறருக்காகவும் வாழ்ந்து ,
தன் வாழ்வையும் ஆதாயமாக்குகிறான்.

ஏப்ரல் 7

எல்லா இலையும் உதிர்ந்தாலும்

1 சாமுவேல் 30:18–31

எல்லாவற்றையும் தாவீது திருப்பிக் கொண்டான்.
1 சாமுவேல் 30:19

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில், எங்கு நோக்கினாலும் ஏராளம் மரங்களைப் பார்க்கலாம். ஒரு குறிப்பிட்ட பருவ காலத்தில், எல்லா மரங்களின் இலைகளும் பொன்னிறமாகக் காணப்படும். அதைத் தொடர்ந்து அவை யாவும் உதிர்ந்து போய், வெறும் மரங்களாக நிற்கும். ஒரு இலைகூட இல்லாத மரங்களாகக் கொஞ்ச காலம் தோன்றினாலும், வெகுவிரைவில் அவை யாவும் மறுபடியும் துளிர்த்து, முன்பு போல எங்கு நோக்கினாலும் பசுமையான இலைகளோடு அழகாகக் காட்சிதர ஆரம்பிக்கும்.

வாழ்க்கையில் சில நேரம் இப்படியும் நிகழ்ந்து விடுவதுண்டு. வாழ்க்கை என்னும் மரம் எல்லா நம்பிக்கையையும் இழந்து வெறுமரமாகிவிடும். அங்கே பார்த்து மகிழ எதுவும் இராது. மேன்மையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்த பல விஷயங்கள் நீங்கிப் போய், வாழ்க்கை என்பது எதைப் பார்த்தும் உற்சாகமடைய ஒன்றுமில்லாமல் போகும். இந்த நிலமை சிலரை விரக்தியடையச் செய்துவிடும். சிலரை இனி வாழ்வதே அர்த்தமற்றது என்று எண்ண வைத்துவிடும்.

ஆனால், சில விஷயங்கள் இழக்கப்பட நேர்ந்தாலும், இனி எதுவும் நம்மிடம் வராது என்று எண்ணிவிடக்கூடாது. யோபு எல்லாவற்றையும் இழந்தான். மிக மிகச் செழிப்பாக வாழ்ந்தவன், ஒருநாள் ஒரு இலைகூட இல்லாத மரம் போல, வெறுமையாகிப் போனான். இனி அவனுடைய வாழ்க்கையில் நன்மையானது ஏதாவது வரும் என்று எண்ணிப் பார்க்க எதுவும் இருக்கவில்லை. ஆனாலும், சில காலம்தான் அந்த நிலைமை தொடர்ந்தது. யோபு புத்தகத்தின் கடைசி அத்தியாயம் ஆச்சரியமான செய்தியைக் கூறுகின்றது. இனி இந்த மரத்தில் ஒரு இலையையும் பார்க்க வாய்ப்பில்லை என்ற நிலையில், மறுபடியும் யோபுவின் வாழ்க்கை மரம், எல்லா ஆசீர்வாதங்களோடு பூத்துக்குலுங்க ஆரம்பித்தது.

ஒரு கால கட்டத்தில் தாவீது அனைத்தையும் இழந்து நின்றான். இனி இழப்பதற்கு எதுவும் இல்லை என்ற நிலைமைக்குள் வந்தான். ஒருவர்கூட அவனுடன் நிற்பதற்கு இல்லை. ஆனாலும், அவன் கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். எல்லாவற்றையும் இழந்தாலும், கர்த்தர்மேல் அவன் வைத்த நம்பிக்கை இழக்கப்படாததாக இருந்தது. அதுவே அவனுடைய வாழ்க்கை மரத்தில், மறுபடியும் ஆசீர்வாத இலைகளைத் துளிர்க்க வைத்தது. அதன் பின்னர் தான் அதுவரை அவன் அடையாத பெரிய பெரிய நன்மைகளைக் கண்டடைந்தான்.

சிந்தனைக்கு...

இழந்தவை சில இனித் திரும்ப வராது.
ஆனால், அதைவிடச் சிறந்தவை சில, புதிதாய் வரும்.

ஏப்ரல் 8

இந்த வலி விலகும்

சங்கீதம் 69:1–18

உமது நிமித்தம் நிந்தையைச் சகித்தேன்.
சங்கீதம் 69:7

சில நேரம் நான் நடைப்பயிற்சி செல்லும் போது, சில நிமிடங்களுக்குள் காலில் ஏதாவது ஒரு பகுதியில் ஒரு விதமான வலி தோன்றும். அந்த வலியைப் பார்க்கும் போது, இனி பத்து அடிகூட தொடர்ந்து நடக்க இயலாது என்று எண்ண வைக்கும். ஆனாலும், வலியைத் தாங்கிக் கொண்டு, தொடர்ந்து நடக்கும் போது வலி போய்விடும். எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நடக்க இயலும். ஆம், சரீரத்தில் சில வலிகள் வரும் போது, உயிரே போய் விடுவது போல்தான் உணருவோம். ஆனால், அவை தற்காலிகமானவை. விரைவில் அவை மறைந்து போகும்.

வாழ்க்கையில் எதிர்பாராத நேரங்களில், யாரோ சிலர் நம்மை வலிக்க வைத்து விடுகின்றனர். ஏதோ ஒன்று வந்து, பெரிய வலியாய் வலிக்கும். சில சூழ்நிலைகள், சில பிரச்சினைகள், சில கவலைகள், சில மனிதர்களின் செயல்கள் என ஏதாவது ஒன்று வந்து, மனதை ரொம்பவே வலிக்க வைத்துவிடும். அந்த வலி ரொம்பவே நம்மைப் பாதிப்பது போலத் தோன்றும். ஆனால், உண்மையில் அவை கொஞ்ச நேரம் வலிகொடுத்து விட்டு, விரைவில் மறைந்து போகிறவைகளே. ஆனால் சில நேரங்களில் நாம் அவசரப்பட்டு வலியைச் சார்ந்து செயல்பட்டுவிடுகிறோம்.

சிலர் மனதை ஏதாவது ஒன்று காயப்படுத்திவிட்டால், அதைத் தாங்க முடியாமல், ஏதாவது ஒன்றைத் தவறாகச் செய்து விடுகின்றனர். பிறரை வலிக்க வைக்க வேண்டும். என்ற உணர்வோடு அவசரப்பட்டு ஆகாத வார்த்தைகளைப் பேசவும், ஆகாத செயல்களைப் பதிலாகச் செய்தும் விடுகின்றனர். சிலர் இந்த வலி நிரந்தரம் என நினைத்து, உறவுகளைச் சேதப்படுத்தி விடுகின்றனர். சிலர் நம்பிக்கையிழந்து, தவறான வழிகளைத் தெரிந்து கொள்கின்றனர். அதனால், தங்களின் வாழ்க்கைப் பயணத்தில் பின் தங்கி விடுகின்றனர். காலம் செல்லும் போது அந்த வலியைச் சற்று சகித்திருந்தால், இந்த விதமான ஒரு தவறான முடிவை எடுக்க நேர்ந்திருக்காதே என்று புலம்புவார்கள்.

ஆம், சில வலிகளும், சோர்வுகளும், மன விசனங்களும், நெருடல்களும் நீண்டகாலம் பாதிக்கும் என்றுதான் எண்ணத்தூண்டும். ஆனால், அவை அற்ப நேரம் வலித்து மறைந்து போகக்கூடும். எனவே, வலி சகிக்கும் ஒரு மனநிலை வேண்டும். இது போன்ற வலிகள் கொஞ்சநேரம் வலித்து விட்டு, விலகிப் போகும் என்ற நம்பிக்கை தேவை. அதுவரைக்கும் அவற்றைச் சகிக்கவும், தாங்கவும் தேவனிடத்திலிருந்து கிருபை கேட்க வேண்டும்.

சிந்தனைக்கு...

கொஞ்ச நேரத்தில் நீங்கி விடும் வலிகளை,
மனிதன் அவசரப்பட்டு நீங்காத வலிகளாக்கி விடுகிறான்.

ஏப்ரல் 9
அழுவதா சிரிப்பதா?

ஆபகூக் 3:1–19

நான் கர்த்தருக்குள் மகிழச்சியாயிருப்பேன்.
ஆபகூக் 3:18

வாழ்க்கையில் சில நேரம் சிரிக்க நினைத்தாலும், சிரிக்க இயலாமல் போகும். ஏனென்றால், நம்முடைய மனசாட்சி உனக்குச் சிரிக்கும்படி என்ன இருக்கிறது என்று கேட்டு விடும். ஏனென்றால், அங்கே துக்கத்திற்குரிய பல விஷயங்கள் இருக்கும். சில நேரம் சூழ்நிலையின் விளைவாக, அழ விரும்பினாலும் அழ இயலாது. ஏனென்றால், கர்த்தருடைய பிள்ளைகள் இப்படி அழலாமா என்று பிறர் கேட்பார்களே என்ற சிந்தனை வந்துவிடும்.

நம்முடைய உள்ளம் அழுகின்ற நிலையில் இருக்கும் போது, நாம் ஒரு பக்தித் தோற்றத்திற்காக சந்தோஷமாயிருப்பதை போல நம்மைக் காண்பிப்பது, ஒரு மாய்மால அனுபவமாகிவிடும். ஒரு மத பக்திக்காக சந்தோஷமானவர்கள் போல வேடமிடுவது போல் ஆகிவிடும். அதே வேளையில், கர்த்தருடைய பிள்ளைகள் என்று சொல்லிக் கொண்டு, பிறர் நடுவில் நாம் எப்பொழுதும் சோக முகத்தோடும், துக்க முகத்தோடும் தோன்றினால் அது சாட்சியாயிராது.

கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். (பிலிப்பியர் 4:4) அப்படியானால் என்ன செய்வது? நாம் தேவனுடைய சமுகத்தில் நம்முடைய துக்க மனநிலையைக் காண்பித்து, மனதைச் சந்தோஷமாக்கும் தேவ கிரியையைத் தேட வேண்டும். தாவீதைப் போல நம்முடைய இருதயத்தை தேவ சமுகத்தில் ஊற்றிப் பழக வேண்டும். (சங்கீதம் 62:8) நம்முடைய கவலைகளையும், சோகங்களையும், சோர்வுகளையும் கர்த்தருடைய பாதத்தில் நாம் கொட்ட வேண்டும். அப்போது புத்திக் கெட்டாத சந்தோஷமும், சமாதானமும் நமக்குள் வரும். அதனைக் கொண்டு சந்தோஷ முகத்தோடு பிறர் முன் தோன்ற வேண்டும்.

வாழ்க்கையில் நம்முடைய நிலமைகளைப் பார்த்து நாம் சந்தோஷப்பட வாய்ப்பின்றிப் போகலாம். ஆனால், கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்ற விசுவாசம், நாம் சந்தோஷமாயிருப்பதற்குப் போதுமான வலிமையான காரணமாயிருக்கின்றது. ஒரு கால கட்டத்தில் ஒரு புறம் என்னுடைய நிலமை, சிரிப்பதற்கும் சந்தோஷப்படுவதற்கும், எந்த ஒரு வாய்ப்பற்றதாயிருந்தது. ஆயினும், நான் சந்தோஷமாகப் பாடுவேன், சந்தோஷமாகப் பேசுவேன். நீ சந்தோஷமாயிருப்பதற்கு உன்னிடம் என்ன இருக்கிறது என்று என் மனசாட்சி கேட்கும். ஆனால், கர்த்தர் என்னோடிருக்கின்றாரே, கர்த்தர் என்னைச் சந்தோஷமாக்கிட வல்லவராயிருக்கின்றாரே என்று நான் பதில் சொல்வேன்.

சிந்தனைக்கு...

உன்னைப் பிறர் அழவைத்தால், உனக்கு அது தீமையல்ல,
நீ பிறரை அழவைத்தால், உனக்கு அது நன்மை அல்ல.

ஏப்ரல் 10

பல பிரச்சினைகள் ஒரே கர்த்தர்

சங்கீதம் 40:1–17

எண்ணிக்கைக்கு அடங்காத தீமைகள் என்னைச் சூழ்ந்து கொண்டது.
சங்கீதம் 40:12

சிலம்பம் விளையாடுவதில் அதிகத் தேர்ச்சி பெற்றிருந்தார் ஒருவர். அவர் சிலம்பம் விளையாடும்போது, சுற்றி நின்ற சிலர், கற்களை அவரை நோக்கி எறிவார்கள். ஆனால், எந்தக் கல்லும் அவர் உடலில் படாமல், அவர் தன் உடலை சுற்றிச் சுழற்றிக் கொண்டிருக்கும் நீண்ட கோல் தடுத்துவிடும். அவர் அந்தக் கோலைச் சுழற்றுகின்ற வேகத்தில் எந்தக் கல் அவரைத் தாக்க வந்தாலும், அந்தக் கோலைத் தாண்டி உடலைத் தாக்க இயலாது. விசுவாசமும் அப்படியே. கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்ற விசுவாசம், நமக்கெதிராக வரும் பல சோதனைக் கற்களைத் தடுத்து விடும்.

கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்ற நம்பிக்கை, நமக்கெதிராக வரும் ஒன்று அல்லது இரண்டு பிரச்சினைகளை அல்ல. எத்தனை பிரச்சினை வந்தாலும், அவற்றை எதிர்கொள்ள அந்த ஒரே விசுவாசம் போதும். சில நேரம் வாழ்க்கையைக் கொஞ்சம் ஆழமாக யோசிக்க ஆரம்பித்து விட்டால், அங்கே நமக்கெதிராக ஒன்று இரண்டு அல்ல. பல பல விஷயங்கள் நமக்கெதிராக இருப்பது போலத் தோன்றும். இத்தனை பிரச்சினைகள் நமக்குப் பாதகமாயிருக்கிறதே என்று நாம் யோசிப்போம்.

ஆனால், பிரச்சினைகளின் எண்ணிக்கை ஒரு பெரிய பிரச்சினை அல்ல. ஏனென்றால், நமக்கு ஒரே ஒரு பிரச்சினை கர்த்தர் உதவுவதும் ஒன்றுதான். பல பிரச்சினைகளுக்கு உதவுவதும் ஒன்றுதான். ஒரு பிரச்சினையைச் சந்திக்க கிருபை தரும் தேவன், பல பிரச்சினைகளுக்கும் கிருபை தருவார். அவர் நம்மோடிருந்தால் நம்முடைய ஒரு பிரச்சினைக்கும் அவரிடம் தீர்வு உண்டு. பல பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு.

தாவீதின் வாழ்க்கையில் ஓரிரு பிரச்சினைகள் அல்ல. ஏராளம் பிரச்சினைகள் இருந்தது. அவை எல்லாவற்றினின்றும் கர்த்தர் அவனை விடுவிக்கப் போதுமான வராயிருந்தார். எண்ணிக்கைக்கு அடங்காத தீமைகள் என்னைச் சூழ்ந்து கொண்டது என்று தாவீது கலங்கினான். ஆனால், அந்த ஒரே கர்த்தர் அவனுடைய பல கஷ்டங்களுக்கும் தீர்வு கொடுக்க வல்லவராயிருந்தார். மோசே இத்தனை ஜனங்களுக்கு எப்படி இறைச்சி கொடுக்கக் கூடும் என்று ஆச்சரியமாகத் தேவனிடம் கேட்டான். ஆனால், தேவனோ என் கரம் குறுகியிருக்கிறதோ என்று மோசேயிடம் கேட்டார். ஏனென்றால், தேவனுக்குக் கொஞ்சம் பிரச்சினையும் ஒன்றுதான், அதிகமான பிரச்சினையும் ஒன்றுதான். ஆம், நம்முடைய வாழ்க்கையில் பல பிரச்சினைகள் இருந்தாலும் இந்த ஒரே கர்த்தர் நமக்குத் தீர்வு தர வல்லவரே.

சிந்தனைக்கு...

எதிராக எத்தனை பெரிய பிரச்சினைகள் என்பதை அல்ல,
ஆதரவாக எவ்வளவு வல்லமையான கர்த்தர் என்பதைப் பார்.

ஏப்ரல் 11

முதலாவது பாவ விடுதலை

ரோமர் 6:11–23

பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு...
ரோமர் 6:18

மனிதன் இயற்கையில் பாவத்திற்கு அடிமையாயிருக்கின்றான். (யோவான் 8:34) அப்படிப்பட்ட மனிதன் தவறான சுபாவங்களையும். தவறான ஆசைகளையும். தவறான பழக்க வழக்கங்களையும் மேற்கொள்ள இயலாதவனாயிருப்பான். இப்படிப்பட்ட மனிதனுக்கு முதலாவது பாவ விடுதலை வேண்டும். முதலாவது. தன்னை அடிமைப்படுத்தி வைத்திருக்கின்ற பாவத்திலிருந்து விடுதலையாகி வந்தால்தான் தேவ நன்மைகளால் ஆசீர்வதிக்கப்பட முடியும். ஆனால், அநேகர் ஒரு நல்ல தேவ பக்தியான வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்பி வரும் போது, இந்த உண்மையைக் கண்டு கொள்ளாமல் போகின்றனர்.

அவர்கள் இனி நாம் ஆழமான ஆவிக்குரிய அனுபவம் உடையவர்களாக வாழ வேண்டும் என்று விரும்பி ஆரம்பிக்கின்றனர். ஆனால், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைகின்ற அனுபவத்தைத் தேடுவதில்லை. ஜெபம் செய்தல், வேதம் வாசித்தல், தேவ வார்த்தை கேட்டல், ஆராதனை செய்தல், உபவாசித்தல், ஊழியம் செய்தல் போன்ற பக்தியான விஷயங்களுக்குள் சென்று விடுகின்றனர். அவர்கள் பக்தியில் வளர்ந்தாலும் பாவ அடிமைத்தனம் தொடருகிறது.

இவர்கள் ஒரு புறம் நல்ல பக்தி ஆர்வத்தோடு பல செயல்களைச் செய்வது உண்மைதான். ஆனால், இவர்கள் உண்மையான பாவ விடுதலையின் அனுபவத்தையும் காணாமல் போனதால், பக்தியோடு பாவ அடிமைத்தன விஷயங்களும் கலந்தே வெளிப்படுகின்றன. இது ஒரு பக்தி அடிமைத்தனம் மட்டுமின்றி, இது ஒரு மாய்மால அனுபவமாகவும் மாறுகிறது. ஏனென்றால், இவர்கள் இன்னும் சுபாவரீதியான விடுதலை பெறாததால், இவர்களின் பக்தியைப் பார்ப்பவர்கள், இவர்களின் சிறப்பற்ற சுபாவங்களையும், பரிசுத்த ரகமற்ற செயல்களையும் கண்டு, இவர்களை மாய்மாலர்கள் என்று அடையாளம் காட்டுகின்றனர்.

அநேகர் பக்தியாக வாழ்வதுதான் பாவ விடுதலையின் அனுபவம் என்று எண்ணுகின்றனர். ஜெபம், ஆராதனை, ஊழியம் போன்றவற்றில், நல்ல ஈடுபாடுகளைக் காண்பிப்பதுதான் இரட்சிப்பின் அனுபவம் என எண்ணுகின்றனர். நாம் முதலாவது பாவத்திலிருந்து விடுதலையாவதைக் குறிவைத்து, இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் பக்தியாக வாழ்வதைக் கிறிஸ்தவ வாழ்வு என்று எண்ணாமல், பாவத்தைச் ஜெயித்து வாழ்வதையும், உயர்ந்த சுபாவங்களோடு வாழ்வதையுமே கிறிஸ்தவ வாழ்க்கை என எண்ணவேண்டும்.

சிந்தனைக்கு...

நீங்கள் பக்தியாய் வாழ்வதைப் பலர் பார்க்கின்றனர்,
நீங்கள் பரிசுத்தமாக வாழ்வதை யார் பார்க்கிறார்கள்?

ஏப்ரல் 12

அவர்களைப் பின்பற்றாதே

மத்தேயு 23:1–22

அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் ...
மத்தேயு 23:3

நல்ல சிந்தனைகளும் ஆலோசனைகளும் நல்லவர்களிடம் மட்டும் அல்ல. தவறானவர்களிடமும் அவை இருக்க முடியும். இன்று சமுதாயத்தில் மிகவும் தவறான வாழ்க்கைமுறை உடையவர்களாயிருந்து கொண்டே, பலர் மிக நல்ல சிந்தனையாளர்களாகவும், நல்ல சில ஆலோசனைகளைக் கொடுக்க இயன்றவர்களாகவும் உள்ளனர். இவர்கள் நல்லவர்களல்ல என்பதற்காக, இவர்கள் கொடுக்கின்ற எந்த நல்ல விஷயங்களையும் பெற்றுப் பயனடையக் கூடாது என்று எண்ணக்கூடாது.

அறிவாளிகளின் அறிவைப் பயன்படுத்த வேண்டும். திறமையாளர்களின் திறமையைப் பயன்படுத்த வேண்டும். மருத்துவர்களின் மருத்துவச் சேவையைப் பயன்படுத்த வேண்டும். அதே வேளையில், நல்ல விஷயங்களைப் பயன் படுத்த வேண்டுமேயன்றி, அவர்களை யார் என்று பகுத்தறியாமல் பின்பற்றக் கூடாது. யாரிடம் நல்ல வாழ்க்கை முறை இருக்கிறதோ, அவர்களோடுதான் நாம் ஆழமாக ஐக்கியப்படவேண்டும். யாரிடம் நல்ல சுபாவங்கள் இருக்கிறதோ, அவர்களைத் தான் நாம் பின்பற்ற வேண்டும். யாரிடம் உயர்ந்த இலட்சியம் இருக்கிறதோ, அவர் களோடு தான் நாம் நல்ல நட்புறவு வைக்க வேண்டும்.

சிலரிடம் நல்ல ஆன்மிகச் சிந்தனைகள் உண்டு. சிலரிடம் நல்ல இறையியல் அறிவு உண்டு. சிலரிடம் நல்ல போதனை உண்டு. சிலரிடம் நல்ல பக்தி ரீதியான செயல்கள் உண்டு. அவற்றை நாம் அவர்களுக்குத் தூரமாயிருந்து கொண்டே பயன்படுத்த வேண்டும். தூரமாயிருத்தல் என்பது அவர்களுக்கு அருகில் வரக் கூடாது என்பது அல்ல. அவர்களோடு நெருங்கின ஐக்கியம் கூடாது என்று அர்த்தம். அவர்களுக்கு நாம் தொண்டர்களாகவோ, விசிறிகளாகவோ, மாறக் கூடாது. மோசேயின் வேத நியமங்களைச் ஜனங்களுக்குப் போதித்த பரிசேயர் களையும், வேதபாரகர்களையும் புறக்கணிக்க இயேசு சொல்லவில்லை.

அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். அவர்கள் செய்கையின்படி செய்யா திருங்கள் என்றார். (மத்தேயு 23:3) யார் பின்பற்றத்தக்கவர்கள்? அறிவாளிகள் அல்ல. ஞானிகள் அல்ல. இறையியல் அறிவர்கள் அல்ல. நல்ல பேச்சாற்றல் உள்ள போதகர்கள் அல்ல. யாரிடம் நல்ல ஒரு ஆவிக்குரிய வாழ்க்கை முறை உண்டோ, அவர்களே பின்பற்றத்தக்கவர்கள். யார் தேவனுக்குப் பிரியமாக வாழ்வதை முத லிடத்திலே வைத்திருக்கின்றார்களோ, அவர்களே பின்பற்றத்தக்கவர்கள்.

சிந்தனைக்கு...

சத்தியம் பேசுகிறவனைக் கவனிக்கத் தயாராயிரு
சத்தியத்தின்படி வாழ்கிறவனைப் பின்பற்றத் தயங்காதிரு.

ஏப்ரல் 13

கானல் நீர் விசுவாசம்

எபிரெயர் 11:1–10

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்.
எபிரெயர் 11:1

கானல் நீர் என்பது பாலைவன மணல் பரப்பில் நீரோடை ஓடுவது போன்ற தோர் பொய்த் தோற்றமாகும். அது தூரத்தில் நீரோடை ஓடுவது போலத் தோன்றும். ஆனால், எவ்வளவு நெருங்கி வந்தாலும், அங்கே நீருற்று இராது. அது தூர மாகவே தோன்றும். அநேகர் தங்கள் வாழ்வில் கர்த்தர் பெரிய காரியம் செய்யப்போகிறார் என்று தூரத்திலேயே பார்த்துப் பார்த்து போய்க்கொண்டிருக் கின்றனர். ஆனால், அவர்கள் தாங்கள் விசுவாசித்த ஆசீர்வாதப் பகுதியை எவ்வளவோ தூரம் கடந்து வந்தும் காணவில்லை.

ஏனென்றால், அவர்களின் விசுவாசம் தேவ உறவு சார்ந்தது அல்ல. அவர்களின் விசுவாசம் தேவ நோக்கம் சார்ந்தது அல்ல. அவர்களின் விசுவாசம் தேவனோடு பழகித் தேவ ஆவியினால் ஏவப்பட்டு உருவானதல்ல. அவர்கள், தாங்கள் தேவனை நம்பி எதிர்பார்த்தால், அது அப்படியே நடக்கும் என்ற சொந்த விசுவாசத்தை வைத்துக் கொண்டிருக்கின்றனர். தேவ உறவைப் பின்னணியாகக் கொள்ளாததாலும், தேவ வழிநடத்துதல் சார்ந்து விசுவாசிக்காததாலும், அவர்களின் விசுவாசம் ஆசீர்வாதத்தைத் தரவில்லை.

சிலர் கர்த்தருடைய வேளை இன்னமும் வரவில்லை என்ற சிந்தனையோடு, இன்னும் இன்னும் காத்திருக்கின்றனர். ஆனால், எந்த ஆசீர்வாத அறிகுறியும் இல்லை. சில ஆசீர்வாத விஷயங்களுக்காக நாம் நீண்ட காலம் காத்திருக்க நேரிடும். ஆனாலும், அது தொடர்பான அறிகுறிகள் வாழ்க்கையில் தெரிய வேண்டும். ஆபிரகாமுக்குப் புத்திர சந்தானம் அருள நீண்டகாலம் ஆனது. ஆனாலும், ஆபிரகாமின் காத்திருப்பு தேவ திட்டம் சார்ந்தது என்பதை உறுதிப்படுத்த தேவன் அவ்வப்போது ஆபிரகாமிடம் வந்து, அவனுடைய விசுவாசத்தை ஊக்குவித்துக் கொண்டே வந்தார்.

சிலரிடம் விசுவாசம் மட்டுமே உள்ளது. ஆனால், அவர்களிடம் தேவனுக்கு உகந்த ஒரு வாழ்க்கை இல்லை. அவர்கள் தற்போது தங்களைத் தேவன் நடத்திக் கொண்டு வருகிறார் என்பதை உறுதிப்படுத்தும்படி எதையும் காணவில்லை. அவர்கள் தாங்களே தங்களுக்குள் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டு, எந்தவிதமான தேவ தூண்டுதலும் இல்லாமல் காத்திருக்கின்றனர். சிலர் இப்படித் தான் காத்திருந்து காத்திருந்து திருமண வாழ்வைக் காணாமலும், எந்த ஒரு ஆசீர்வாதத்தையும் காணாமலும், எந்த ஒரு ஊழியத்தைக் காணாமலும் ஆயுளின் நாட்களை முடித்துவிடுகின்றனர்.

சிந்தனைக்கு...

விசுவாசம் என்பது, கர்த்தர் சொன்னதை நம்புவதல்ல.
கர்த்தர் சொன்னதை, ஏற்றுச் செயல்படுவதே விசுவாசம்.

ஏப்ரல் 14

வழிநடத்துதல் எப்படி?

சங்கீதம் 143:1–12

எம்மைச் செம்மையான வழியிலே நடத்துவாராக...
சங்கீதம் 143:10

தேவனால் வழிநடத்தப்படுதல் என்றால் என்ன? நம்முடைய குடும்பக் காரியங்களிலும், நம்முடைய தொழில் காரியங்களிலும், எதை எதை எப்படிச் செய்ய வேண்டும் அல்லது செய்யக்கூடாது என்று தேவன் சொல்லுவதா? இல்லை. முதலாவது தேவ நடத்துதல் என்பது, தேவன் தம்முடைய நோக்கம் சார்ந்த பாதையில் நம்மை வரவழைத்து, தொடர்ந்து நடத்திச் செல்லுதல் ஆகும். தேவ னுடைய திட்டத்தின் பாதையில் முதலாவது வரவேண்டும். அந்தத் திட்டம் நிறை வேறுதலை நோக்கி நாம் செல்லும் போது, அங்கு எழுகின்ற பல சூழ்நிலைகளில் தேவன் நம்மை வழிநடத்துவார்.

தேவனுடைய நோக்கத்தின் பாதையில், நம்முடைய குடும்ப வியாபாரம், தொழில், சமுதாய உறவுகள் போன்ற விஷயங்கள் வரும். அப்போது சூழ்நிலைக் கேற்றபடி தேவன் வழிநடத்துவார். அநேகர் வாழ்க்கையோடும், தொழிலோடும், திருமணம் போன்ற காரியங்களோடும் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மட்டுமே, தேவ வழிநடத்துதலைத் தேடுகின்றனர். தேவன் தம்முடைய திட்டத்தின் நிறை வேறுதலை நோக்கிச் செல்லுகின்ற ஆவிக்குரிய மக்களுக்கு மட்டுமே வழி நடத்துதல் கொடுப்பார்.

தேவ வழிநடத்துதல் என்பது ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாகத் திடீரென்று கிடைக்கும் தரிசனம், சொப்பனம் அல்லது வேதவசன வெளிப்பாடு என்றே பலர் நினைக்கின்றனர். தேவன் தம்முடைய ஆவியை நமக்குக் கொடுத்து, அந்த ஆவி யின் மூலமாகவே நம்மை வழிநடத்துகிறார். (ரோமர் 8:14) ஆவி நம்மை வழி நடத்துவதை எப்படி அறிந்து கொள்வது? நாம் தேவனுடைய திட்டத்தின் பாதையில் தொடர்ந்து சென்று கொண்டிருக்கும் போது, சில பிரச்சினைகள் நாம் சந்திக்க நேரிடும். சில கேள்விகளுக்குப் பதில் தேட வேண்டி வரும்.

அந்தப் பாதையில் சில குழப்பங்களைக் காண நேரிடலாம். சில வருத் தங்களைக் காண நேரிடலாம். சில சோதனைகளைக் காண நேரிடலாம். அது போன்ற வேளைகளில் ஒரு சொப்பனமோ, தீர்க்கதரிசனமோ கட்டாயம் அல்ல. தேவன் நமக்குத் தந்த ஆவியினால் நமக்குள்ளே சில நல்ல யோசனைகள் தோன்றும். சில நல்ல தூண்டுதல்கள் ஏற்படும். சில நல்ல புரிதல்கள் கிடைக்கும். சில சூழல்களில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று, நமக்குள் நல்ல சிந் தனைகள் தோன்றும். இவ்விதமாகத் தேவ வழிநடத்துதல்களைப் பெற முடியும்.

சிந்தனைக்கு...

தேவ ஆவியின்படி நடக்கத் தவறுகிறவர்களை
கள்ளத்தீர்க்கதரிசிகள் வழிதவறச் செய்கின்றனர்.

ஏப்ரல் 15

அன்பைக் காட்டணும்

1 தெசலோனிக்கேயர் 5:11–29

மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி....
1 தெசலோனிக்கேயர் 5:15

ஒருவருடைய பக்கத்துவீட்டார் அன்பற்றவர்கள். அவர்கள் அன்பாக பேசமாட்டார்கள். அன்பாக எதையும் செய்யமாட்டார்கள். ஆனால், இந்த மனிதரோ அவர்களிடம் இயன்றவரை அன்பாக நடந்து கொள்வார். அந்த வீட்டாருக்கு பல உதவிகளைச் செய்வார். அவர்களின் நலனை அடிக்கடி விசாரித்துத் தெரிந்து கொள்வார். அவர்கள் வியாதிப்பட்டால் ஓடிப்போய் விசாரிப்பார். ஆனால், அந்த வீட்டாரோ ஒரு நாள்கூட இவரின் நலனை விசாரிக்கமாட்டார்கள். மறந்தும் இவருக்கு ஒரு நல்லதைச் செய்யமாட்டார்கள்.

இதை நீண்டகாலம் கவனித்துக் கொண்டிருந்த இவருடைய மனைவி, இவரிடம் மருந்துக்குக் கூட அன்பு காட்டாத அவர்களிடம், நீங்கள் ஏன் வலியப் போய் அன்பு காட்டுகிறீர்கள் என்று கேட்பார். அதற்கு அவர் அந்த வீட்டார் தினமும் அவர்களிடம் அன்பு கிடையாது என்று உறுதிப்படுத்துகிறார்கள். நான் என்னிடம் அது இருக்கிறது என்று உறுதிப்படுத்துகிறேன் என்பார். சிலர் அன்பற்றவர்கள். சிலர் தாழ்மையற்றவர்கள். சிலர் உண்மை அற்றவர்கள். சிலர் நல்லெண்ணம் இல்லாதவர்கள். எனவே, அவர்களிடம் இல்லாததை இல்லை என்று நாம் திரும்பத் திரும்பக் காண நேரிடும்.

ஆனால், அவை நம்மிடம் இருந்தால், அதனைத் தினமும் நாம் காண்பிக்க வேண்டும். சவுலிடம் தேவ பயம் இல்லை. அவனிடம் நன்றியுணர்வு இல்லை. அவனிடம் நீதி இல்லை. அவற்றைத் தாவீது திரும்பத் திரும்ப சவுலிடம் காண நேரிட்டது. அதே வேளையில் தன்னிடம் இல்லாத உயர்ந்தபண்புகள் தாவீதிடம் இருப்பதை சவுல் திரும்பத் திரும்பக் காண நேரிட்டது. ஆம், நல்ல பண்புகள் இல்லா தவர்கள் அந்த இல்லாமையைத் திரும்பத் திரும்ப அறிவிப்பார்கள். ஆனாலும், அந்த நற்பண்புகளை தேவ கிருபையால் நாம் பெற்றிருப்பதால், அவற்றைத் திரும்பத் திரும்பக் காண்பிப்பதுதான் தேவனுடைய பார்வையில் நலமாயிருக்கும்.

நீ வெறுத்தால் நானும் வெறுப்பேன். நீ மதிக்காவிட்டால் நானும் மதிக்க மாட்டேன். நீ நல்லவன் இல்லையென்றால், நானும் நல்லவன் அல்ல என்பது போல நாம் நடந்து கொண்டால், அது நம்மிடம் தேவ அன்பு இல்லாமையின் அடையாளம். அக்காலப் பரிசேயர்கள் கடைசிவரை வெறுப்பையும், கசப்பையும் தான் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆயினும், இயேசு கடைசிவரை அன் பையும், மன்னிப்பையும் மட்டுமே வெளிப்படுத்தினார்.

சிந்தனைக்கு...

பிறர் நேசிக்காததை சொல்லிச் சொல்லிக் காட்டாதே.
நீ பிறரை நேசிப்பதைச் சொல்லாமலே காட்டு.

ஏப்ரல் 16

கர்த்தாவே என்னோடிரும் !

ஏசாயா 43:1–11

தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்.
ஏசாயா 43:2

சில நேரங்களில் தேவனுடைய சித்தம் எவ்விதமாக இருக்கப் போகிறது என்பது நமக்குத் தெரிவதில்லை. நாம் எதிர்பார்க்கும் நன்மை வருமா அல்லது வேறு ஏதாவது சாதகமற்ற காரியத்தைச் சந்திக்க வேண்டி வருமா என்று தெளிவாகத் தெரியாது. எனவே, தேவனிடம் எதைக் கேட்பது என்பதுகூட நமக்குத் தெரியாமல் போகும். ஒருவர் நான் இப்பொழுதெல்லாம் நிறைய விண்ணப்பங்களைக் கர்த்தரிடம் வைப்பதில்லை. ஒரே ஒரு விண்ணப்பம்தான் செய்கிறேன். அது என்னவென்றால், கர்த்தாவே என்னோடிரும் என்பதே என்றாராம்.

ஆம், வாழ்க்கைப் பாதையில் நாம் விரும்பியபடியே எல்லாம் நடக்கும் என்று கூற இயலாது. நாம் விரும்பாதது எதுவும் வராதென்றும் கூற இயலாது. அப்படியானால், இப்படி நடக்குமா, அப்படி நடக்குமா என்ற பதட்டமும், பயமும் வந்துவிடுமே. இல்லை, என்ன வந்தாலும் நம்மை நேசிக்கும் கர்த்தர் நம்மோடிருப்பார். எந்த மாதிரிச் சூழ்நிலைகள் வந்தாலும் அவற்றின் நடுவில், நீர் என்னோடிரும், என்ற விண்ணப்பத்தை வைக்கும் போதே, அதுவே அந்த சூழ்நிலைக்குப் பொருத்தமானதை நமக்குத் தரும்.

மரண இருளின் நடுவில் நடந்தாலும், தேவரீர் என்னோடிருக்கிறீர் என்றான் தாவீது. இயேசு கிறிஸ்து தம்மை விட்டு எல்லாச் சீடர்களும் ஓடிப்போனாலும், பிதா வானவர் தம்மோடிருப்பார் என்ற உறுதியான நம்பிக்கையை உடையவராகயிருந்தார். சில நேரங்களில் தேவன் தம்முடைய தாசர்களின் குழப்பமான வேளைகளிலும், எதிர்மறையான சூழ்நிலைகளிலும், இதை நான் செய்வேன், அதை நான் செய்வேன் என்று சொன்னதில்லை. ஆனால், பயப்படாதே நான் உன்னோடிருக்கிறேன் என்பார். ஆம், அவர் நம்மோடிருப்பதுதான் அனைத்து நிச்சயமற்ற சூழ்நிலைகளின் நடுவிலும், நமக்குத் தேவையான ஆசீர்வாதம்.

அப்போஸ்தலனாகிய பவுல் பிரயாணம் செய்த கப்பல், மிக மிகப் பயங்கரமான சூழல்களால் பாதிக்கப்பட்டபோது, கர்த்தர் பவுலுக்குக் கொடுத்த வார்த்தை, நான் உன்னோடிருக்கிறேன், என்பதுதான். நம்மை நேசிக்கும் கர்த்தர், நம்மோடு எல்லாச் சூழல்களிலும் நம்மோடிருப்பதை, நம்முடைய ஆத்துமாவில் வெளிப்படுத்தினால் போதும். ஆறுகளைக் கடக்கும் போதும், அக்கினியைக் கடக்கும் போதும், என்ன நடக்கும் நடக்காது என்று கூற இயலாது. ஆனால், கர்த்தர் நம்மோடிருந்தால் நம்பிக்கையோடு நாம் பயணத்தைத் தொடருவோம்.

சிந்தனைக்கு...

தேவன் உனக்கு என்ன செய்தார் என்பதைப் பிறகு பார்
அவர் உன்னோடிருக்கிறாரா என்பதை முதலில் பார்.

ஏப்ரல் 17

நேரடியாக நன்மை

யோவான் 16:15–33

நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில்....
யோவான் 16:23

ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகள், அப்பாவோடு மிக நல்ல அன்புடனும் ஐக்கியத்துடனும் வாழ்கின்றார்கள். ஆனால், சின்னத் தேவை, பெரிய தேவை எதுவானாலும், அம்மாவிடம்தான் கேட்டுப் பெறுவார்கள். ஏனென்றால், அவர்களின் அப்பா சம்பளத்தை வாங்கி வந்தால், அம்மாவிடம் கொடுத்து விடுவார். அம்மாதான் குடும்பத்திற்குத் தேவையான எல்லா விஷயங்களையும் நிர்வாகம் பண்ணுவார். அதனால் பிள்ளைகள் அப்பாவோடு நெருக்கமாயிருந்தாலும், அம்மாவிடமே காசு பணம் கேட்பார்கள்.

ஆனால், நம்முடைய அப்பாவாகிய தேவன், தம்முடைய பிள்ளைகளுக்கு நேரடியாகவே நன்மைகளைத் தருவார். ஏனென்றால், அவர் வேறு யார் வழியாகத் தான் நன்மைகளைத் தருவேன் என்று நியமம் எதுவும் வைக்கவில்லை. சிலர் ஜெபம், வேத வாசிப்பு, ஆராதனை என எல்லாப் பக்தி விஷயத்திலும் நல்ல ஈடுபாடுகளோடு இருப்பார்கள். கர்த்தர் தங்களோடு இருப்பதாகச் சொல்வார்கள்.

ஆனால், என்ன பரிதாபம் என்றால், இந்த அளவிற்கு அன்பிலும் ஐக்கியத்திலும் உள்ள தகப்பனிடமிருந்து எதையாவது பெற விரும்பினால், அவர்கள் அவருடைய ஊழியர்களிடத்தில்தான் செல்வார்கள். ஏதாவது அற்புதம், ஆசீர்வாதம் தேவையென்றால், அவர்கள் நடத்தும் ஜெபக் கூட்டங்களுக்குத்தான் செல்வார்கள். இவர்களுக்கு ஏதாவது நல்லது நடந்தால், கர்த்தரிடம் நான் ஜெபித்தேன், எனக்குக் கர்த்தரிடமிருந்து நன்மை கிடைத்தது என்று சொல்ல மாட்டார்கள். அவர்கள் சொல்வதெல்லாம், அந்தச் ஜெபக் கூட்டத்திற்கு போனதால் நன்மை கிடைத்தது. அந்த ஊழியரிடம் ஜெபித்துக் கொண்டதால் நன்மை கிடைத்தது என்றுதான் சொல்வார்கள். ஏனென்றால், நேரடியாகத் தேவனிடமிருந்து நன்மை பெறும் அளவிற்குத் தேவனோடு நெருங்கிய உறவில் இல்லை.

அநேகர் தேவனோடு நல்லுறவுடன் வாழ்வதாக நம்பியும், ஆசீர்வாதங்களைச் ஜெபக் கூட்டங்கள் வாயிலாகத்தான் பெறுவேன் என்று அடம்பிடிப்பது போல் தெரிகிறது. ஜெபக் கூட்டம் நடத்தும் ஊழியர் வழியாகவும், ஜெபக் கூட்டப் பங்கேற்பின் மூலமாகவும்தான், தேவன் நன்மைகளைத் தர முடியும் என்று பலர் தேவனைச் ஜெபக் கூட்டக் கடவுளாக்கிவிட்டனர். நம்முடைய தனிப்பட்ட ஜெபங்கள் அற்புதத்தையோ, குணமாக்குதலையோ, விசேஷ நன்மைகளையோ கொண்டு வராது என்று வேதம் எங்கும் சொல்லவில்லை.

சிந்தனைக்கு...

ஜெபிக்கின்ற ஊழியரின் வல்லமையை அல்ல,
ஜெபத்தைக் கேட்கும் தேவனுடைய வல்லமையை நம்புங்கள்.

ஏப்ரல் 18

நாம் அற்பம் அல்ல

1 யோவான் 3:1–10

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே....
1 யோவான் 3:1

ஒரு குறிப்பிட்ட சபையில் உள்ள ஏழை விசுவாசி மிகவும் குட்டையாக இருப்பார். மிகச் சாதாரணமான தோற்றமுடையவர். மிக மிகச் சாதாரணமாக உடை அணிவார். பெரிய படிப்பு அந்தஸ்து எதுவும் தெரியாது. ஆனால், அந்த திருச் சபையில் அத்தனை பேருடனும் தொடர்புடையவர் அவர்தான். அங்கு வருகின்ற எவரும் அவரைக் கண்டு கொள்ளாமல் போவதில்லை. சபை நிகழ்ச்சிகள் எதிலும் அவர் புறக்கணிக்கப்படுவதில்லை. காரணம் என்ன தெரியுமா? அவர் ஒரு ஏழை. என்னை யார் மதிப்பார் என்று கூறி எல்லாரைவிட்டு விலகிப்போகவில்லை.

தாழ்வு மனப்பான்மையால் அவர் தன்னை தனிமைப்படுத்தாதபடி எல்லாரிடமும் வலிய வலியப் போய் பேசிப் பழகினதால், அவர் ஒரு தவிர்க்க முடியாத வி.ஐ.பி நபர் ஆகிவிட்டார். சிலர் எவராலும் மதிக்கப்படாமல் போவதற்கும் எல்லோராலும் அற்பமாய் எண்ணப்படுவதற்கும் காரணம், அவர்களின் ஏழ்மை நிலை அல்ல. அவர்கள் தங்களை நான் ஏழை, நான் சாதாரணமானவன், உங்களோடு பேசிப் பழகிவாழ எனக்குத் தகுதியில்லை, நான் புறக்கணிக்கத் தக்கவன் என்று விளம்பரம் பண்ணுவது போல நடந்துகொள்வதுதான்.

சாதாரணமாகத் தோற்ற ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, கல்வி ரீதியாகவோ ஒருவர் ஒரு தாழ்நிலையில் இருந்தால், மற்றவர்கள் அவரைச் சாதா ரணமாக எண்ணுவது இயற்கையான ஒரு விஷயம். அதே வேளையில், அவர்கள் நம்மை அப்படி எண்ணித் தவிர்க்கும்படி, நாம் அவர்களை ஊக்குவிக்கக் கூடாது. நான் சாதாரணம் அல்ல. நான் அற்பம் அல்ல. நான் தகுதியற்றவன் அல்ல. உங்க ளோடு பேசவும் பழகவும் நான் அருகதையற்றவன் அல்ல என்று அவர்களிடம் சொல்லாமல் சொல்ல வேண்டும். அவர்கள் நம்மைத் தாழ்வாகக் கணக்கிட்டால், அதை நாமும் ஒத்துக் கொண்டு, நம்மைத் தனிமைப்படுத்தக்கூடாது.

எத்தனை படிப்பு இருந்தாலும், எத்தனை அறிவு இருந்தாலும், எத்தனை வசதி இருந்தாலும், கர்த்தரை உடைய ஒரு மனிதனைவிட எவரும் பெரியவர்கள் அல்ல. உலகம் அந்த அந்தஸ்தை அவ்விதமாகப் புரிந்து கொள்ளாது. அதே வேளையில், கர்த்தருடைய பிள்ளைகள் தங்களை அவர்களுக்கேற்ப சிந்திக்கக் கூடாது. இரட்சிக்கப்பட்டவர்கள் தேவனுடைய பிள்ளைகள். நாம் மதிக்கத்தக்கவர் களும், மேன்மையாக எண்ணத்தக்கவர்களுமே, அதனை முதலாவது நாம் உணர்ந்து தாழ்மையோடு தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்.

சிந்தனைக்கு...

உன்னை உயர்ந்தவன் என்று பெருமைபாராட்டாதே,
ஆயினும், உன்னைத் தாழ்ந்தவனாக எண்ணித் தலை குனியாதே.

ஏப்ரல் 19

இரண்டாம் வருகை

லூக்கா 12:31–44

எஜமான் வரும்போது விழித்திருக்கிறவர்களாக....
லூக்கா 12:37

ஒருவர் இப்போது நாம் தேவனுடைய பிள்ளைகள். இனி நாம் எப்படியிருப்போம் என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பார். பரலோகம் எப்படியிருக்கும், பாதாளம் எப்படியிருக்கும், நரகம் எப்படியிருக்கும் என்று ஏராளம் சிந்தித்துக் கொண்டிருப்பார். ரகசிய வருகை எப்பொழுது நடக்கும், இரண்டாம் வருகைக்கு முன்பு என்னென்ன நடக்கும், என்பது போன்ற விஷயங்களைப் பல புத்தகங்களைப் படித்துத் தெரிந்து கொண்டேயிருப்பார்.

ஆனால், அவரிடம் கிறிஸ்தவக் குணங்களைப் பார்க்க முடியாது. அவரிடம் எந்த விசேஷ ஆசீர்வாதத்தையும் பார்க்க முடியாது. ஏனென்றால், அவர் எதிர் காலத்தில் நாம் எப்படியிருப்போம் என்ற சிந்தனையில் மூழ்கிப் போய், நிகழ் காலத்தில் எப்படியிருக்கிறோம் என்பதை உணராமல் போய் விட்டார். பூமியில் நாம் முதலாவது தேவனுடன் வாழ்கின்றோமா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். நாம் தேவனுடைய பிள்ளைகளானால் தேவ உறவை பூமியில் அனுபவிக்க வேண்டும். நாம் இந்த பூமியில், கர்த்தரோடு எப்படி வாழ்வது என்பது தொடர்பாக போதிய அளவு சிந்தியாமல், பரலோகத்தையே சிந்தித்துக் கொண்டிருப்பது அர்த்தமற்றது.

அநேகர் வருகையின் அடையாளங்களைக் குறித்த விஷயங்களையே, கதை கதையாய்க் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால், தங்களின் வாழ்க்கையில் இரட்சிக்கப்பட்டதின் அடையாளங்களும், பரிசுத்தமாக்கப்பட்டதின் அடையாளங்களும் இருக்கிறதா என்று பார்ப்பதில்லை. அநேகர் ரகசிய வருகை எப்போது நடக்கும் என்று, ஏராளம் தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், தாங்கள் இப்போது இயேசுவால் எடுத்துக் கொள்ளப்படுவதற்கான பரிசுத்த ஆயத்தத்தோடு இருக்கிறோமா என்று பார்ப்பதில்லை.

எதிர்காலத்தைக் குறித்த சிந்தனையும் விழிப்புணர்வும் தேவைதான். ஆனால், முதலாவது நமக்காகக் கொடுக்கப்பட்ட தேவ குமாரனோடு, நாம் எந்த அளவிற்கு உறவோடும், ஐக்கியத்தோடும் இருக்கிறோம் என்பது முக்கியம். கர்த்தர் ரகசியமாக வந்தால் என்ன, பரஸ்யமாக வந்தால் என்ன? இன்று நம்மோடிருக்கிறவராக அவரை நாம் நம் வாழ்வில் காணாவிட்டால், நாம் எப்படி அவரால் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட முடியும்? நாம் வானத்தையே அண்ணாந்து பார்த்து கொண்டிருப்பதல்ல. வானத்துக்கு கீழ் இப்போது எப்படியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

கர்த்தரோடிருக்கும் அடையாளம் இல்லாதவன்,
வருகையின் அடையாளங்களைக் கவனிப்பது, ஒரு பொழுதுபோக்கு.

ஏப்ரல் 20

விடுமுறைக் கால உத்தமம்

யோவேல் 2:12–21

உங்கள் வஸ்திரங்களையல்ல, இருதயங்களைக் கிழித்து

யோவேல் 2:13

கிறிஸ்தவ வியாபாரப் பிரமுகர் ஒருவர், வியாபாரத்தில் எல்லோரையும் விட அதிகமாகச் சம்பாதிக்க விரும்புவார். நிறையப் பொருட்களை பில் இல்லாமல் தான் வாங்கி விற்பனை செய்வார். வேலைக்காரர்களுக்குப் போதிய சம்பளம் கொடுக்க மாட்டார். மற்றபடி கிறிஸ்தவரல்லாத ஒரு நபர் எப்படி வாழ்வாரோ அப்படித்தான் இவரும் வாழ்வார். ஆனால், லெந்து காலம் வந்துவிட்டால், இவர் ஒரு சபரிமலைப் பக்தர் போல மாறி, காவி உடைதான் அணிவார். முகச்சவரம் செய்யமாட்டார். கறி மீன் சாப்பிடமாட்டார். வெள்ளிதோறும் விரதம்இருப்பார். சுய வெறுப்புச் செயல்கள் நிறையச் செய்வார். கோயிலுக்குத் தவறாமல் போவார்.

அநேகர் இயேசுவை 40 நாள் விடுமுறைக்காக பூமிக்கு வருகிறவர் போல, சிந்திக்கிறார்கள். ஏனென்றால், அந்தக் காலகட்டத்தில் அவர்கள் நிறையப் பக்திக் காரியங்களைச் செய்துவிட்டு, மற்ற காலங்களில் வழக்கம்போல வாழ்கின்றார்கள். சில பிள்ளைகளின் அப்பாக்கள் வெளியூரிலோ வெளிநாட்டிலோ வேலை செய்வார்கள். இங்கிருக்கும் பிள்ளைகள், அப்பா இல்லாத நாட்களில், மனம் போல வாழ்ந்து ஊர் சுற்றி வருவார்கள். ஆனால், அப்பா விடுமுறைக்காக வருகின்ற நாட்களில் உத்தம புத்திர வாழ்க்கையை வாழ்வார்கள். அப்பா திரும்பிப் போனதும் மறுபடியும் உத்தம புத்திர வாழ்க்கையை விட்டு, ஊர் சுற்றுகிற வாழ்க்கைக்குப் போய் விடுவார்கள்.

ஆனால், கர்த்தர் அப்படியல்ல. அவர் எப்போதும் இங்கேயே இருக்கிறார். அவர் வருடத்தில் சுமார் நாற்பது நாட்கள் பூமிக்கு வந்துப் பக்தர்களின் விசேஷப் பக்தியைப் பார்த்து விட்டுப் போவதில்லை. நாம் பாவிகளாக வாழ்ந்தால் தேவன் நமக்காகப் பரிதாபப்படுவார். நாம் கொஞ்ச நாட்கள் ஒரு விதமாகவும், பிற நாட்கள் வேறு விதமாகவும் இருந்தால், கோபப்படுவார்.

லெந்து காலம் எனப்படும் விசேஷ ஆசரிப்புக் காலத்தில், நாம் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைக் காண விரும்பி, நல்ல பக்தியோடு செயல்பட ஆரம்பிக்கலாம். ஆனால், அந்தப் பக்தி ஈஸ்டர் ஞாயிறோடு முடிவுக்கு வரக்கூடாது. அது தொடர வேண்டும். எந்த ஒரு பக்தியாயினும் ஜெபம், தபம், கோயில், ஆராதனை, காணிக்கை, உபவாசம் என்று துவங்கக்கூடாது. இரட்சிப்பின் அனுபவத்திலிருந்து தொடங்க வேண்டும். கர்த்தருக்கு நம்மை அர்ப்பணித்து, இனி என்றும் கர்த்தருக் காகப் பரிசுத்தமாக வாழ வேண்டும் என்ற தரிசனத்தோடு தொடர வேண்டும்.

சிந்தனைக்கு...

வருடத்தில் சில நாட்கள் மட்டும் சாப்பிட்டு வாழ முடியாது.
லெந்து காலத்தில் மட்டும் பக்தி காட்டி ஆசீர்வாதம் பெற முடியாது.

ஏப்ரல் 21
ஏன் மன்னிக்கவில்லை?

மத்தேயு 18:21–35

மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால்...
மத்தேயு 18:35

மன்னிக்க முடியவில்லை என்பதுதான் பல கிறிஸ்தவர்களின் முக்கிய மானதோர் பிரச்சினை. அண்ணன் தன்னுடைய தம்பி விஷயத்தில் நீண்ட காலமாக ஒரு கோபத்தில் இருந்தார். ஒருநாள் அந்த தம்பியின் மகனுடைய திரு மணத்திற்காக அண்ணனை அழைக்க வந்தார் தம்பி. நடந்ததையெல்லாம் மறந்துவிட அண்ணனிடம் வேண்டிக் கொண்டார். அண்ணனும் தம்பியின் மக னுடைய திருமண வைபவத்தில் கலந்து கொண்டார். ஆனாலும், சாப்பிடாமல் திரும்பி விட்டார். காரணம் என்னவென்றால், என்னதான் பழையதை இனி நினைக்க கூடாதுண்ணு சில விஷயங்களை மேற்பூச்சாகச் செய்தாலும், பழையதை மன்னிக்க முடியாமல் மனசில் இருந்து அழுத்துகிறது.

கிறிஸ்தவர்களாயிருந்தும் ஏன் பிறரை மன்னிக்க முடியவில்லை. முதல் காரணம், அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல. கிறிஸ்தவர்கள் மன்னிப் பார்கள். ஆனால், கிறிஸ்துவின் ஆவி இல்லாத கிறிஸ்தவர்களாக இவர்கள் இருப் பதால், அவர்களிடம் மன்னிப்பின் ஆவிஇல்லை. பக்திக்காக சிலர் மேலோட்டமாக மன்னித்துவிட்டது போல நடந்து கொள்வார்கள். ஆனாலும், பரிசுத்த ஆவி இல்லாததால், அந்த பக்தி மன்னிப்பு அதிக நேரம் நீடிக்கவில்லை.

சில கிறிஸ்தவர்கள் கர்த்தர் தங்களை மன்னித்து ஏற்றுக் கொண்டார் என்று சொல்வார்கள். ஆனால், அது அவர்களுக்கு வேதம் போதித்த உண்மைதானே யன்றி, அதனை அவர்கள் அனுபவித்ததில்லை. சில மருந்துகளை நாம் சாப்பிடு வோம். ஆனால், அது என்ன என்ன நன்மையைத் தங்களுக்கு ஏற்படுத்தி யிருக்கிறது என்பதை உணர்ந்து அறிய முடிவதில்லை. ஆனால், சரீர வேதனை மிகுந்த ஒரு மனிதன், ஒரு வலி கொல்லும் (PainKiller) மருந்தைச் சாப்பிட்டால் கொஞ்சநேரத்தில் அந்த வலி குறைவதை உணர முடியும்.

அநேகர் கர்த்தர் மன்னித்தார் என்பதின் விளைவுகளைத் தங்களிடம் காண்பதில்லை. அதனை ஒரு போதனையாக மட்டுமே அறிந்து நம்பியிருப்பார்கள். ஏனென்றால், அவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை மிக மோசமாக உணர்ந்த தில்லை. எனவே, மன்னிக்கப்படும் போது அதனை அவர்கள் உணர்வதில்லை. அநேகர் தாங்கள் பெற்ற மன்னிப்பின் அனுபவத்தை உணர்வதற்குப் பதிலாக, வேறு பல ஆசீர்வாதங்களை எதிர்பார்த்துப் போவதால், மன்னிப்பின் மகிமையை அவர்கள் ருசிப்பதில்லை.

சிந்தனைக்கு...

பிறரை மன்னிக்கத் தேவை மனப்பக்குவம் அல்ல,
தேவனால் மன்னிக்கப்பட்ட மனநிச்சயமே தேவை.

ஏப்ரல் 22

கடன் நெருக்கடி

2 இராஜாக்கள் 4:1–7

வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது.

2 இராஜாக்கள் 4:2

திருப்பிக் கொடுப்பதற்கு இருக்கும் வாய்ப்பு மற்றும் ஆற்றல்களின் அளவைக் கடந்து கடன் வாங்கக் கூடாது. பெரும்பாலும் தற்போதைய நெருக்கடியைக் கடக்க வேறு வழி தெரியாததால், திருப்பிக் கொடுக்க வலிமை இல்லாவிட்டாலும், கடன் வாங்க நேரிடுகிறது. ஆனால், இது ஒரு நெருக்கடியைச் சந்திப்பதற்காக, அதைவிடப் பெரிய நெருக்கடிக்குள் போய் விழுவதாகும். தேவனுடைய பிள்ளைகள் பணம் கடனாகக் கேட்கும் முன்பு, அதைத் திருப்பிச் செலுத்த அதிக நம்பகமான பின்னணியைக் கொண்டிருக்க வேண்டும். எப்படியாவது எதையாவது சொல்லிக் கடன் கேட்கும் பழக்கம், ஒரு மோசடிச் செயலாகும்.

ஏதோ ஒரு சூழ்நிலையில் கடனாளியாக நேரிட்டிருக்கலாம். ஆனால், இன்னும் இன்னும் கடனாளியாகிக் கொண்டே இருக்கக்கூடாது. பொய்யான விஷயங்களைச் சொல்லித் தற்போதைய நெருக்கடியைச் சமாளிப்பதற்குப் பதிலாக, இயலாமையை அறிக்கையிட்டு விட வேண்டும். தற்போதைய நெருக்கடியைச் சமாளித்து சமாளித்து, எதிர்காலத்திற்கு ஒரு பெரிய நெருக்கடியை உருவாக்கிக் கொள்ளக்கூடாது. இன்று சில கடனாளிகளிடம் திருப்பிச் செலுத்த இயலாத நிலமையைச் சொல்லி, அதனால் ஏற்படும் சில கஷ்டங்களைச் சந்திக்கத் தயாராக வேண்டும். இல்லையேல், பிற்காலத்தில் பெரிய பெரிய கடன்களுக்கு மத்தியில், இயலாமையை அறிக்கையிட்டுப் பெரிய நெருக்கடியைக் காண நேரிடும்.

சிலர் வாங்கின கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலமை ஏற்படும் போது, தங்களிடமிருக்கிற சொத்துக்களையோ நகைகளையோ இழக்க விரும்புவதில்லை. ஆம், கடனாளியாக நேரிடுவது யாருக்கும் நடந்துவிடும். ஆனால், கர்த்தரை விசுவாசித்து வாழ்கின்ற தேவனுடைய பிள்ளைகள், மீண்டும் மீண்டும் கடன் வாங்கிச் சமாளிக்கத் தூண்டும் சோதனைகளை, மேற்கொள்ள வேண்டும்.

எந்த ஒரு பிரச்சினைக்கும் கர்த்தர் மேல் விசுவாசம் வைத்து வாழ்கின்றவர்களுக்கு ஒரு தீர்வு உண்டு. ஒரே நாளில் அற்புதம் நிகழ்ந்து அனைத்து கடன்களும் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், கர்த்தர் அற்புதகரமாக ஆறுகளைக் கடப்பது போன்ற, இந்த கடன் நெருக்கடிகளைச் சந்தித்துக் கடந்து செல்ல உதவி செய்வார். கடனுக்கு அஞ்சி தவறான முடிவுகளுக்கு நேராகச் செல்லாமல், உண்மை நிலமையைச் சொல்லிக் கர்த்தரைச் சார்ந்து நிற்க வேண்டும். சிங்கம் போல சில பிரச்சினைப் பாய்ந்து வரும். ஆனால், இறுதியில் கர்த்தர் காத்துக் கொள்வதைக் காண முடியும்.

சிந்தனைக்கு...

தனித்து நின்றால், தென்றல்கூட நம்மை விழவைக்கும்,
தேவனோடு நின்றால், புயல் காற்றுகூட விழவைக்காது.

ஏப்ரல் 23

எங்கே எழுதப்பட்டிருக்கிறது?

1 யோவான் 2:20–29

அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்கு போதிக்கிறது.
1 யோவான் 2:27

சிலர் நாம் எப்படி எப்படி வாழவேண்டும் என்று சொன்னால், அப்படித் தான் வாழவேண்டும் என்று எங்கே எழுதியிருக்கிறது என்று கேட்பார்கள். சிலர் நாம் இப்படி இப்படி வாழக்கூடாது என்று சொன்னால், அப்படி வாழக்கூடாது என்று எங்கே வேதத்தில் எழுதியிருக்கிறது என்று கேட்பார்கள். அவர்களிடம் இதோ பாருங்கள் எழுதியிருக்கிறது என்று காண்பிக்க இயலாது. ஏனென்றால், அவர்கள் சொன்ன விதமாக அங்கே எதுவும் எழுதப்படவில்லை.

இவர்கள் வேதாகமத்தில் எழுதப்படாத எதையும் நாம் பின்பற்றத் தேவை யில்லை என்று எண்ணுகின்றனர். அதுபோல, இப்படி இப்படிச் செய்யக்கூடாது என்று எழுதப்படாதிருந்தால், அதையெல்லாம் செய்யலாம் என்று எண்ணு கின்றனர். மொத்தத்தில் எந்த ஒரு ஆவிக்குரிய விஷயமும் பைபிளில் எழுதப் பட்டிருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர்.

புதிய ஏற்பாட்டுக் காலம் எழுதப்பட்ட எழுத்து வடிவிலான பிரமாணத்தின் காலம் அல்ல. இது ஆவியின் பிரமாணம் செயல்படும் காலம். தேவனுடைய ஆவிதான் இறுதியானதும் முழுமையானதுமான பிரமாணம். நாம் எப்படி வாழ வேண்டும் என்பது தொடர்பான எல்லா விஷயங்களும் வேதாகமத்தில் இல்லை. நாம் எப்படி வாழக்கூடாது என்பது தொடர்பான எல்லா விஷயங்களும் வேதா கமத்தில் இல்லை. அப்படியானால், மனித வாழ்க்கை தொடர்பான எல்லாவற்றை யும் வேதாகமம் சொல்லாமல் அரைகுறையாக இருக்கிறதா? இல்லை. அனைத்தும் எழுத்து வடிவத்தில் இல்லை.

இனி உலகம் முடிவுறும் காலம் வரை, தேவனுக்குப் பிரியமாக எப்படி வாழ வேண்டும் என்பது தொடர்பான அனைத்து தெளிவையும் நமக்குத் தருவது எது? அதுதான் பரிசுத்த ஆவி. அதுதான் ஆவியின் பிரமாணம். அந்த ஆவியின்படி நடக்கத்தான் நாம் அழைக்கப்படுகின்றோம். வேதாகமத்தின்படி நடவுங்கள் என்று அல்ல. தேவ ஆவியின்படி நடவுங்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆம், நாம் தேவ ஆவியைப் பெற்று, அந்த ஆவியின்படி சிந்தித்து, அந்த ஆவி போதிக்கும் அடிப்படையில் வாழவேண்டும். எனவே, வேதாகமத்தின்படி ஒரு விஷயம் சரியா, தவறா என்று மட்டும் அல்ல. தேவ ஆவியின்படி சரியா, தவறா என்றும் பார்க்க வேண்டும். ஆவியின்படி நடத்தப்பட்டு கற்றுக்கொள்வது, ஒரு போதும் எழுதப்பட்ட வேத ஆகமங்களுக்கு முரண்பட்டதாக இராது.

சிந்தனைக்கு...

எல்லாவற்றையும் எழுதித் தர முடியாது,
என்பதால்தான் ஆவியின் பிரமாணம் வந்தது.

ஏப்ரல் 24

அனுபவிக்கப்படாத பக்தி

ஏசாயா 29:1–13

தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்.
ஏசாயா 29:13

பல ஆண்டுகளுக்கு முன்பு, சபை ஒன்று நடத்திய ஜெபக்கூட்டத்தின் முடிவில், எல்லாருக்கும் சாப்பாடு வழங்கினார்கள். அந்த சாப்பாடு உப்பு சரியில்லாமல் மிக மிக சுவையற்ற சாப்பாடு. ஆனால், என்னுடன் ஒன்றாகச் சாப்பிட்ட நண்பர் ஒருவர் சாப்பாடு வழங்கிய குழுவினரிடம் அந்த சாப்பாட்டை பிரமாதமாக மெச்சிப் பேசினார். ஆனால், அந்தச் சாப்பாட்டை அவர் உண்மையில் சாப்பிட்டு ருசித்ததால் அப்படிப் பேசவில்லை. அந்தச் சூழ்நிலைக்குச் சாப்பாடு பிரமாதம் என்று பாராட்டுவதுதான் நல்ல பண்பு என்று அவர் எண்ணினார்.

கிறிஸ்தவ வாழ்க்கையும் பலருக்கு இப்படியே. அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை சுவையானதாகவோ, ஆசீர்வாதமானதாகவோ உணரவேயில்லை. ஏதோ ஒரு மதக்கடமையாக வாழ்கின்றனர். ஆனால், அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை மிக மிகப் பிரமாதமான ஒன்று போலப் பேசுவார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையில் பெரிய சந்தோஷத்தையும், சமாதானத்தையும் நன்மையையும் கண்டடைந்தது போல, சாட்சி சொல்லுவார்கள். அவர்கள் உண்மையில் கிறிஸ்தவ வாழ்க்கையில் எந்த நிறைவையும் காணவில்லை. அவ்விதம் அடையாளத்தை அடைந்தது போலக் காண்பிப்பதை பக்தியான ஒன்று என எண்ணுகின்றனர்.

அநேகர் தங்களின் கிறிஸ்தவப் பக்தி அனுபவத்தில் கிறிஸ்துவைக் காணவில்லை. தாங்கள் ருசிக்காதவைகளை குறித்து உயர்வாகப் பேசுவது, ஒரு நல்ல பக்தியாக அவர்களுக்குத் தெரிகிறது. இது ஒரு போலியான தன்னைத்தானே ஏமாற்றும் செயல். அவர்கள் இரட்சகரைப் புகழ்கிறார்கள். ஆனால், அவர்களிடம் இரட்சிப்பு இல்லை. அவர்கள் இயேசுவின் பாடுமரண விஷயங்களை பரவசத்தோடு பாடவும் பேசவும் செய்கிறார்கள். ஆனால், அவர்களிடம் இயேசுவின் பாடுமரணத்தால் உருவான, எந்த ஆசீர்வாதமும் இல்லை.

ஆம், நாம் அனுபவிக்காததை அனுபவிப்பது போலக் காண்பிப்பது, ஒரு போலியான பக்தி. அதனைக் கர்த்தர் விரும்பமாட்டார். ஏராளம் கிறிஸ்தவப் பாடல்களும், ஆராதனைகளும், சாட்சிகளும் கிறிஸ்தவத்தை ரொம்ப ரொம்ப அனுபவித்தவர்களிடமிருந்து வருவது போலத் தோன்றுகின்றன. ஆனால், அவை அவர்கள் கிறிஸ்தவத்தை உண்மையாக அனுபவித்ததினால் அல்ல. பார்க்கிறவர்களுக்கு அப்படி ஒரு போலிக் காட்சி கொடுப்பதை, அவர்கள் பக்தி என எண்ணுகின்றனர். ஆனால் அது தேவன் விரும்பாத ஒரு மாய்மாலம்.

சிந்தனைக்கு...

நல்லதை நல்லது என்று பாராட்டு.
ஆனால், அது நல்லது என்பதை அனுபவித்துப் பாராட்டு.

ஏப்ரல் 25

அவர்களால் முடியாது

மாற்கு 10:17–31

மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்.
மாற்கு 10:22

சகேயுவைச் சந்தித்தபோது இயேசு அவனிடம் ஏழைகளுக்கு எதையும் கொடுக்கச் சொல்லவில்லை. ஆனால், அவன் இயேசு தன்னுடைய இல்லத்திற்கு வந்து தன்னுடன் பேசின சந்தோஷத்தால், சொத்துக்களில் பாதியை ஏழைகளுக்குத் கொடுக்க முன்வந்தான். அதே வேளையில், இயேசுவைச் சந்தித்த ஐசுவரியவானாகிய வாலிபன் ஒருவனிடம், உன் சொத்துக்களை விற்று ஏழைகளுக்குக்கொடு என்றார். ஆனால், அவனோ துக்கத்தோடு அப்படிச் செய் யாமல் திரும்பிப் போனான்.

இது நமக்குச் சொல்லுகின்ற உண்மை என்ன? ஒரு மனிதன் இயேசுவினால் ஒரு ஆத்ம சந்தோஷத்தை அனுபவித்தால், அவனுக்கு இப்படிச் செய் என்ற கட்டளை இல்லாமலே, மனதார முன்வந்து நிறையச் செய்வான். பல நல்ல விஷயங்களைச் செய்திட இயேசுவைக் குறித்த சந்தோஷம் அவனை ஏவும். அந்த சந்தோஷத்தை அனுபவிக்காத மனிதனிடம், என்னதான் கட்டளைகளையும் கற்பனைகளையும் கொடுத்தாலும், அவனால் அவை முடியாது. எனவே, முதலாவது இயேசுவின் ஐக்கியத்தினால் நம்முடைய மனம் சந்தோஷமடைய வேண்டும்.

சிலருக்கு அன்பை அதிகமாகப் போதிக்கத் தேவையில்லை. ஆனால், அவர்கள் பிறரை உண்மையாக நேசிப்பார்கள். சிலருக்கு தாழ்மையைக் குறித்துப் போதிக்கத் தேவையில்லை. அவர்களால் தாழ்மையாக நடந்து கொள்ள இயலும். சிலருக்கு நன்மை செய்யப் பெரிய போதனை செய்யத் தேவையில்லை. ஆனால், அவர்களாக முன்வந்து நன்மை செய்வார்கள். ஏனென்றால், அவர்களிடம் கர்த்தரால் பெற்ற அப்படிப்பட்ட இருதயம் இருக்கிறது. எனவே, அவர்களால் உபதேச வற்புறுத்தல் இல்லாமலே, சிறப்பாகச் செயல்பட முடியும்.

சிலருக்கு எவ்வளவு போதித்தாலும், எவ்வளவு உணர்த்தினாலும் பயனில்லை. அவர்களுக்குள் கர்த்தருக்கேற்றபடி சிந்திக்கவும், செயல்படவும் தக்கதான ஒரு இருதயம் இல்லை. அவர்களால் போதனைகளையும், அறிவுரைகளையும், தேவ விருப்பங்களையும் கற்றுக் கொள்ள முடியும். ஆனால், அவர்களால் அவற்றின் படி வாழ இயலாது. அவர்கள் தங்களால் போதனைக்கேற்றபடி வாழ இயலவில்லையே, எனத் துக்கப்படுவார்கள். ஆனாலும், அவர்கள் ஒரு போதும் கர்த்தர் விரும்புகிறபடி வாழ்வதில்லை. ஏனென்றால், அவர்களுக்குள் கர்த்தர் இல்லை. கர்த்தர் இல்லாத குறையை உணர்ந்து தேட வேண்டும். அப்போது அவர்களாலும் முடியும்.

சிந்தனைக்கு...

கவிழ்த்து வைத்த பானையில் தண்ணீர் தங்காது.
மறுபடியும் பிறக்காத மனித இருதயத்தில் சத்தியம் தங்காது.

ஏப்ரல் 26

நிகழ்காலச் சூழல்

ரோமர் 8:18–39

சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று....
ரோமர் 8:28

இன்று நம்மில் சிலர் காண்கின்ற வருத்தமான சூழலுக்குச் சில மனிதர்கள் காரணமாயிருந்திருக்கக்கூடும். அல்லது நம்முடைய ஞானமற்ற செயல்களும், மதியீனமும் காரணமாயிருந்திடக் கூடும். அல்லது, இந்தப் பூமியின் இயற்கைச் சூழ்நிலை விளைவுகளும் காரணமாயிருக்கலாம். இவை தேவனால் தீர்மானிக்கப் பட்டவை அல்ல. ஆனால், இவை தேவனால் அனுமதிக்கப்பட்டவை எனக் கூறலாம். அநேகர் தற்போது தாங்கள் காண நேரிடும் எதிர்மறையான சூழ்நிலை களைத் தேவ சித்தம் அப்படி என்றும், தேவன் நியமித்தது அதுதான் என்றும் கூறுவார்கள். ஆனால், அவை அப்படி இருப்பதில்லை.

யோசேப்பின் வாழ்க்கையில் அவனுடைய அன்பற்ற சகோதரர்களால் பல கஷ்டங்கள் வந்தன. ஆனால், அவை தேவன் நியமித்தது அல்ல. தாவீதுக்குச் சவுலால் பல கஷ்டங்கள் வந்தன. அவை தேவனால் நியமிக்கப்பட்டவை அல்ல. இவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் மனிதர்களால் வந்தவை. ஆனால், அவர்கள் தேவ திட்டத்திற்குள் தங்களை உட்படுத்தியிருந்தவர்கள். எனவே, அந்தத் தேவ திட்டத்திற்கு அவை தடையாயிராதபடி, தேவன் அந்த சூழ்நிலைகளை தம்முடைய ஆளுகைக்குள் வைத்திருந்தார். அந்தச் சூழ்நிலைகள் மனிதர்களால் வந்தவை யாயினும், அவை தீமைக்கேதுவாக முடிவுறாமல், நன்மைக்கேதுவாக முடியும்படி அவற்றைக் கையாண்டார்.

தேவன் அவர்களின் எதிர்காலத்தை தம்முடைய நோக்கத்திற்கேற்றபடி திட்டம் பண்ணியிருந்தார். அந்தத் திட்டம் நிறைவேறுதலுக்கு, அவர்களின் முந்தைய சூழல்கள் தடையாயிராதபடி, அவர்களைத் தேவன் வழி நடத்தினார். மனிதர்களாலோ, மதியீனங்களாலோ அல்லது உலக இயற்கையினாலோ ஏற்பட்ட எதிர் விதமான சூழ்நிலைகளைக் கடந்து செல்ல, அவர்களுக்கு உதவினார்.

ஆம், ஒருவேளை இன்றைய உங்களின் சூழ்நிலைகள், ஏதாவது காரணத் தால் ஏற்பட்டு, உங்களுக்கு வருத்தத்தையும், போராட்டங்களையும், சோர்வையும் ஏற்படுத்தியிருக்கலாம். இங்கே ஏன் ஆண்டவரே, இப்படியெல்லாம் வரவிட்டீர் என்று அங்கலாய்ப்பது அல்ல. அவருடைய நித்தியத் திட்டத்திற்குள் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய நோக்கத்தின்படியான வாழ்க்கைக்கு ஒப்புக்கொடுங்கள். அப்போது, நாளைய தினம் உங்களுக்குத் தேவனால் தீர் மானிக்கப்பட்டு, ஆசீர்வாதமாகவேயிருக்கும். இன்றையச் சூழலில் உங்களை அவர் கடந்து செல்ல வைப்பார்.

சிந்தனைக்கு...

ஏன் இந்தச் சூழ்நிலை என்று கேட்காதே,
இந்தச் சூழ்நிலையை எப்படிச் சந்திப்பது என்று கேள்.

ஏப்ரல் 27

பரலோகம் ஏன் கடினம்?

மாற்கு 10:17–31

ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும்.
மாற்கு 10:25

சில கிறிஸ்தவர்கள் நல்ல வசதி நிலையை உடையவர்களாக இருக்கின்றனர். அந்த வசதிநிலையை அவர்கள், தங்களுடைய தேவ பக்தியின் விளைவான ஆசீர்வாதமாகவே எண்ணுவார்கள். இவர்களிடம் கர்த்தர் இல்லை என்ற உண்மையை, இவர்களால் ஏற்றுக்கொள்ள இயலாது. கர்த்தர் இல்லாமலா தாங்கள் இந்த நல்ல நிலமைக்கு வந்தோம் என்று சிந்திப்பார்கள். கொஞ்சம் பக்தியும், நல்ல வசதியும் உடைய இவர்களுக்கு, பரிசுத்தத்தில் வளரவேண்டும் என்று போதித்தால், அதனை அவர்கள் பின்பற்ற இயலாது. கர்த்தர் தங்களை நல்ல ஆசீர்வாதமான நிலையில்தானே வைத்திருக்கிறார், என்று யோசிப்பார்கள்.

எனவேதான், ஐசுவரியவான் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பது கடினமானது என்று இயேசு கூறினார். அவன் தன்னுடைய சௌகரியமான வசதி நிலையையே ஆசீர்வாதம் என எண்ணுவதால், கர்த்தர் அவனோடு இல்லை என்ற உண்மையை அவனால் உணர இயலாது. ஆனால், பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கத் தேவையான தகுதி என்ன? அவனோடு நித்திய ஜீவனாகிய கர்த்தர் இருக்க வேண்டும். (1யோவான் 5:12) ஆம், நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக நம்புவது என்பது வேறு, நாம் கர்த்தரோடு இருப்பது என்பது வேறு.

செல்வமும், வசதியும், அந்தஸ்தும், அறிவு ஞானம் திறமை ஆகியவற்றாலும் வர இயலும். ஒருசில சாதகமான சூழ்நிலைகள் எதேச்சையாக அமைவதாலும், ஒருவர் நல்ல சௌகரியமான நிலைமைக்கு வர முடியும். ஆனால், அவை நம்மோடு கர்த்தர் இருக்கிறார், அதனால்தான் இப்படி நன்மைகள் வந்தது என்று நம்ப வைக்கும். இப்படிப்பட்டவர்களிடம், நீங்கள் பரிசுத்தமாக வாழ்ந்தால்தான் கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களிடம் வரும் என்றும் போதிக்க இயலாது.

ஏனென்றால், அவர்கள் ஏற்கெனவே பல நல்ல வசதிநிலைகளைப் பெற்று அதனையே ஆசீர்வாதம் என எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், உலகப் பிரகார நல்ல வசதியான நிலைமை, ஒருவரோடு கர்த்தர் இருப்பதற்கான உறுதியான அடையாளம் அல்ல. அவரிடம் உயர்ந்த தெய்வீகக் குணாதிசயங்களும் நல்ல திருப்தியும், தேவ உறவைத் தேடும் மனநிலைமையும்தான் கர்த்தர் இருப்பதற்கான அடையாளமாயிருக்க முடியும். கர்த்தர் ஒருவரோடு இல்லாத நிலைமையை நம்புவதற்கு, அவருடைய ஐஸ்வரியம் நிறைந்த நிலைமை தடையாயிருப்பதால், நித்திய வாழ்விற்குள் பிரவேசிக்க அதுவே தடையாக மாறிவிடும்.

சிந்தனைக்கு...

எவ்வளவு பணம் கர்த்தரால் வந்தது என்பதை அல்ல,
எவ்வளவு பண்புகள் அவரால் வந்தது என்பதைப் பார்.

ஏப்ரல் 28

பயன் தெரியாத புத்தகம்

ஓசியா 8:1–14

என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு....
ஓசியா 8:12

கிறிஸ்தவர் ஒருவருக்கு நண்பர் ஒருவர், மிகச்சிறந்த ஒரு ஆவிக்குரிய புத்தகத்தைப் பரிசாகக் கொடுத்தார். அந்தக் கிறிஸ்தவ நபரோ, அது சிறந்த ஒரு புஸ்தகம் என்று தெரிந்திருந்தும், ஒருபோதும் அதனைப் படித்துப் பார்க்க ஆர்வம் காட்டவில்லை. நீண்டகாலமாக அந்தப் புத்தகம் தன்னுடைய வீட்டில் தேவையில்லாமல் கிடப்பதைக் கண்ட அவர். ஒருநாள் அதனை தன்னுடைய நண்பர் ஒருவருக்குக் கொடுத்தார். அந்தப் புத்தகத்தைப் படித்த அவர், இப்படியொரு நல்ல ஆவிக்குரிய புத்தகத்தை தனக்கு தந்ததற்காக அவருக்கு மிகுதியாக நன்றி கூறினார்.

சிலர் பிறருக்குச் சுவிசேஷம் சொல்வார்கள். அந்த சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் மிகப்பெரிய ஆசீர்வாதத்தைக் கண்டடைவார்கள். ஆனால், சுவிசேஷம் அறிவித்தவர்களோ எந்த விசேஷமான ஆசீர்வாதமும் பெறாமல், பெயர் கிறிஸ்தவர்களாகவே இருப்பார்கள். சிலர் பிறருக்கு நல்ல போதனைகளைக் கொடுப்பார்கள். அதைக் கேட்டவர்கள் அதனால் பயனடைவார்கள். ஆனால், அதைப் போதித்தவர்களோ வெறும் போதனைக்காக அதனைப் போதித்தார்களேயன்றி, அதனை அவர்கள் பின்பற்றவில்லை.

பரிசுத்த வேதாகமத்தைப் பரிசாகப் பெற்றுக் கொண்ட ஒருவர், நீண்ட காலமாக அதனைத் திறந்துகூடப் பார்க்கவில்லை. ஏனென்றால், அந்த வேதாகமத்தைப் பரிசாகக் கொடுத்த கிறிஸ்தவரிடம், அவர்கள் எந்த ஒரு விசேஷப் பண்பையும் ஒருபோதும் பார்த்ததில்லை. ஆனால், ஒருநாள் அதனைப் படித்துப் பார்த்தார். அந்த பிறமத நண்பர். படித்துப் பார்த்த அவர் இவ்வளவு சிறந்த போதனைகள் அடங்கிய இந்தப் பைபிளைப் படிக்கும் கிறிஸ்தவர்கள், ஏன் இப்படிச் சாதாரணமாயிருக்கிறார்கள் என்று கேட்டாராம். ஆம், இன்று வேதாகமத்தை கிறிஸ்தவரல்லாதவர்கள் விசேஷமாக எண்ணாமல் போனமைக்கு கிறிஸ்தவர்கள் தான் முக்கிய காரணம்.

பல கிறிஸ்தவர்கள் வேதாகமத்தைப் பக்திக்காகப் படித்த போதிலும், அது காண்பிக்கின்ற இரட்சிப்பைப் பெறுவதில்லை. பல போதகர்கள் எப்பொழுதும் தங்களோடு பைபிளை வைத்திருந்தாலும், அந்த பைபிள் கூறும் சத்தியங்களின் படி வாழ்வதில்லை. எனவே, யாரால் சத்தியம் பலர் நடுவில் விசேஷமாகத் தெரிய வேண்டுமோ, அவர்களாலேயே அதனுடைய மதிப்பு பலர் நடுவில் அறியப் படாமல் போகிறது.

சிந்தனைக்கு...

வேதாகமம் கிறிஸ்தவ மதப் புத்தகம் அல்ல,
எல்லா மனிதர்களின் மனதுக்கான புத்தகம்.

ஏப்ரல் 29

கனிகொடுத்தலா கீழ்ப்படிபதலா?

யோவான் 15:1–1

நீங்கள் மிகுந்த கனிகொடுப்பதினால்...

யோவான் 15:8

கனி கொடுத்தல் என்பதும், கீழ்ப்படிதல் என்பதும் ஒரே விதமான அர்த்தம் கொண்டவை அல்ல. கீழ்ப்படிதல்தான் கனிகொடுத்தல் என்று அர்த்தம் கொள்ள இயலாது. ஒரு மரம் கனி கொடுக்கிறது என்றால், நம்முடைய விருப்பத்தையும் எதிர்பார்ப்பையும் புரிந்து கொண்டு, அப்படியே செயல்படுகிறது என்று அர்த்தமல்ல. ஒரு மா மரமோ அல்லது பலா மரமோ கனிகொடுக்கின்றது என்றால், என்ன அர்த்தம்? நம்முடைய விருப்பத்திற்கு அல்லது கட்டளைக்கு அது கீழ்ப்படிகின்றது என்று அர்த்தம் அல்ல. அந்த மரம் தன்னுடைய இயல்பு மற்றும் தன்மையின் விளைவாகத் தானாகப் பலன் தருகிறது என்று அர்த்தம்.

தாழ்மை, உண்மை, பொறுமை, நேர்மை, அன்பு, சாந்தம் போன்றவை தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் நல்ல குணங்கள். வெறுப்பு, கசப்பு, பொறாமை, பெருமை, பணஆசை, பொருளாசை போன்றவை தேவன் நம்மிடம் பார்க்க விரும்பாத தவறான குணங்கள். நாம் ஆவிக்குரிய மக்கள் என்றால், நல்ல குணங் களைக் காண்பிப்போம். நாம் ஆவிக்குரிய மக்கள் என்றால், தவறான குணங் களைக் காண்பிக்கமாட்டோம். ஏன் அப்படி? கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிவது, நம்முடைய கடமை என்பதாலா? கர்த்தர் விரும்புகிறதை நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், செய்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தினாலா?

இல்லை. அவை நம்முடைய ஆவிக்குரிய இயல்பு. தேவ ஐக்கியம், தேவ வார்த்தை, தேவ போதனை போன்றவற்றை, தேவ ஆவியின் மூலம் தனக்குள் பெறுகின்ற மனிதன், நற்குணங்களை இயல்பாகக் காண்பிப்பான். ஏனென்றால், அதுதான் அவனுடைய ஆவிக்குரிய இயற்கை. நல்ல மரம் நல்ல கனிகளைக் கொடுக்கிறது. அது யாரோ கட்டாயப்படுத்தியதால் அல்ல.

பல கிறிஸ்தவப் பக்தியாளர்கள் கீழப்படிகின்றவர்கள். ஆனால், அவர்கள் கனிகொடுக்கின்றவர்கள் அல்ல. ஏனென்றால், அவர்களின் நல்ல குணங்களும், செயல்களும், அவர்களின் ஆவிக்குரிய தேவ உறவின் விளைவானவை அல்ல. அவை அவர்களின் பக்தி வைராக்கியத்தாலும், தேவனுக்குக் கீழ்படிந்தாக வேண்டுமே என்ற தேவ பயத்தினாலும் ஏற்பட்டவை. அங்கே அவை மனப்பூர்வமாக அல்ல. மனதைப் பக்திக்காக வருத்திச் செயல்பட வைத்ததின் விளைவானவை. நாம் உண்மையான ஆவிக்குரிய மறுபிறப்பைப் பெற்றிருந்தால், நம்மால் இயல்பாக நற்குணங்களை வெளிப்படுத்த முடியும்.

சிந்தனைக்கு...

சில பண்புகளை வெளிப்படுத்துவது கடினமே,
ஆயினும், மனம் அவற்றை விரும்பினால் எளிதாகிவிடும்.

ஏப்ரல் 30

ஞானமற்ற செயல்பாடு

எபேசியர் 5:1–21

ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல்.
எபேசியர் 5:17

சிலர் தேவ பக்தி உள்ளவர்கள். எனவே, அவர்கள் தேவனுக்குப் பிரியமான நிறையக் காரியங்களை விருப்பத்தோடு செய்வார்கள். ஆனால், அவர்கள் தேவனை அறிந்து, அந்த அறிவின் அடிப் படையில் சரியான வழிகளைத் தெரிந்து கொண்டு வாழமாட்டார்கள். அதனுடைய விளைவாக, அவர்கள் ஒருபுறம் தேவ னுக்காக பல பல நல்ல விஷயங்களைச் செய்தாலும், மறுபுறம் அதற்குரிய நல்ல பலன்களைப் பெறமாட்டார்கள்.

ஒருவர் மனசாட்சிக்கு விரோதமாக எதையும் செய்யமாட்டார். பாவமாகத் தோன்றுகிற குணத்தைத் தவிர்த்து விடுவார். பாவத்தோற்றம் உடைய செயல்களைச் செய்யாமல் தவிர்த்துவிடுவார். கர்த்தருக்காக நிறையக் காணிக்கை கொடுப்பார். நிறைய நல்ல விஷயங்களைக் கர்த்தருக்காகச் செய்வார். ஆனால், நிறையப் பணம் சம்பாதிக்கும் ஆர்வத்தில், தன்னுடைய திறமை அனுபவம் எதையும் கணக் கிடாமல், புதிய புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவார். ஒருபுறம் அவருக்கு நல்ல ஒரு வியாபாரம் வலிமையாய் இருந்தபோதிலும், கவனத்தைப் பல வழிகளில் சிதற விட்டு, இறுதியில் தன்னுடைய நல்ல ஒரு தொழிலையும் பலவீனப்படுத்திவிட்டார்.

தேவனுக்குப் பயந்து வாழ்ந்தும், தேவனுக்காக ஆர்வத்தோடு பல காரி யங்களை செய்தும், அதற்குரிய பலன் இல்லாமற்போயிட்டே என்பது, அவரது குடும்பத்தாரின் வருத்தம். காரணம் என்ன? தேவ பயமும், பக்தியும், ஆவிக்குரிய வாஞ்சையும் இருந்த போதிலும், ஆவிக்குரிய ஞானம் இல்லை. பணம், பொருள், அந்தஸ்து தொடர்பான ஆசைகளால் தூண்டப்பட்டு, போதிய ஞானமற்ற செயல் களில் ஈடுபடுவதே, பிரச்சினைகளுக்குக் காரணம் என்பதை அறியவில்லை.

நாம் தப்புச் செய்யாதவர்களாய் இருக்கலாம். நாம் அக்கிரமம் செய்யாதவர் களாய் இருக்கலாம். ஆனால், அவை மட்டுமே நமக்குத் தேவ நன்மைகளைக் கொண்டு வந்துவிடாது. நாம் போதிய தேவ ஞானத்தோடு, தேவனுக்கேற்ற ஆலோ சனை எது என்று அறியக் கவனமற்றுப் போனால், நாமே நம்முடைய ஆசீர்வாத மின்மைக்குக் காரணம் ஆவோம். தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமான வனாயிருந்தாலும், தாவீது ஜனங்களைத் தொகையிட முடிவு செய்தது தீவினை யாக மாறியது. தேவனுக்குப்பிரியமானது இன்னதென்று சோதித்தறிந்து, நாம் செயல்பட வேண்டியது அவசியம்.

சிந்தனைக்கு...

உணர்ச்சி வசப்பட்ட பக்தனாயிராதே,
உணர்வுமிக்க பரிசுத்தனாயிரு.

மே 1

ஆவியின் வாக்குத்தத்தம்

எபேசியர் 1:13–23

பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்.
எபேசியர் 1:13

பரிசுத்த ஆவி உங்கள் மேல் வருகின்ற போது, நீங்கள் பெலனடைவீர்கள் என்பது, கர்த்தர் சீடர்களுக்குக் கொடுத்த வாக்குதத்தம். (அப்போஸ்தலர் 1:8) நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதாக நம்பலாம். ஆனால், பரிசுத்த ஆவி வந்தால், நம்மிடம் என்ன நடக்கும் என்று கர்த்தரால் வாக்குத்தத்தம் பண்ணப் பட்டதோ, அது நிகழ்ந்ததா என்பதை நாம் பார்க்க வேண்டும். பரிசுத்த ஆவி நமக்குள் வந்தால் பலம் வரும். பலம் வந்தால் அந்த பலத்தைக் கொண்டு வலிமை யான காரியங்களை நாம் செய்வோம்.

அநேகர் பரிசுத்த ஆவியினால் பாடுவதாகவும், ஆடுவதாகவும், ஆராதிப்ப தாகவும், கூறுவார்கள். ஆனால், பரிசுத்த ஆவியினால் அவர்கள் வலிமையாக வாழ்வதைக் காண முடியாது. ஆனால், பரிசுத்த ஆவி என்பது உணர்ச்சி ரீதியாக வல்லமையாயிருப்பது அல்ல. வாழ்க்கை ரீதியாக வல்லமையாயிருக்க வேண்டும். வாழ்க்கை ரீதியாக வல்லமையாயிருப்பது என்றால் என்ன? நாம் பாவம் செய் யாமல் வாழ்வதற்கு இயன்றவர்களாயிருப்பதே அது. நாம் உலகத்தின் போக்கில் வாழாமல், எதிர்த்து நின்று வாழ இயன்றவர்களாயிருப்பதே அது.

நாம் இந்தப் பூமியில் காண நேரிடும் கஷ்டங்களையும் துன்பங்களையும் சகிக்கவும், சந்திக்கவும் இயன்றவர்களாயிருப்பதே அது. நாம் அனுதின வாழ்வில் பிசாசு கொண்டு வருகின்ற எந்தச் சோதனைகளையும், அடையாளம் கண்டு, எதிர்த்து நிற்க இயன்றவர்களாயிருப்பதே அது. பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ள தாக நம்புகின்ற எவரும், இவ்விதமான விஷயங்களில், தங்களிடம் உள்ள வல்ல மையை அல்லது பலத்தை வெளிப்படுத்த வேண்டும். பரிசுத்த ஆவி தொடர்பான வாக்குத்தத்தம் தங்களிடம் இவ்விதமாக நிறைவேறுகிறதா என்று உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

பரிசுத்த ஆவி தொடர்பாக கர்த்தர் அளித்த வாக்குத்தத்தம் நிறைவேறு வதைக் நாம் காண இயலாவிட்டால், இன்னும் நாம் பரிசுத்த ஆவியைப் பெற வில்லை என்பதே பொருள் ஆகும். பரிசுத்த ஆவியைப் பெறாவிட்டால், பரிசுத்த ஆவி பெறுவதற்குத் தேவையான இரட்சிப்பின் அனுபவத்தை நாம் பெறவில்லை என்பதே பொருள் ஆகும். ஆம், கர்த்தர் உண்மையுள்ளவர், இரட்சிப்பை ஒருவர் பெற்றிருந்தால், அவரிடம் ஆவியானவர் வந்திருப்பார். ஆவியானவர் அவரிடம் வந்திருந்தால் ஆவிக்குரிய வல்லமையும் வந்திருக்கும்.

சிந்தனைக்கு...

பரிசுத்தமாக வாழ்ந்து காட்டாதவர்கள், ஆவியில் நிரம்பினால்
அவர்களை நிரப்பிய ஆவி வஞ்சிக்கும் ஆவியே.

மே 2

தகுதியற்ற சாட்சி

தீத்து 1:1–16

கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்.
தீத்து 1:16

தான் மிகச் சிறந்த டாக்டரிடம் சிகிட்சை பெற்றுக் கொண்டதாக கூறுகின்ற ஒருவர், மிகவும் பலவீனமாகக் கட்டில் கிடையாகக் கிடந்தால், அந்த டாக்டரிடம் போக நாம் துணிய மாட்டோம். தனக்குக் கல்வி கற்றுத்தரும் ஆசிரியர் மிக மிகச் சிறப்பாகக் கற்பிப்பவர் என்று ஒருவர் கூறுகிறார். ஆனால், தொடர்ந்து இவர் பரிட் சையில் தோல்வியடைகின்றார். இப்படிப்பட்ட ஒரு ஆசிரியரிடம் எதையாவது கற்றுக்கொள்ள யாரும் போகமாட்டார்கள்.

ஒருவேளை, அந்த டாக்டர் மிகத்திறமையானவராக இருக்கலாம். ஆனால், அவருக்குச் சாட்சி கொடுப்பதற்கு நாம் பார்த்த நோயாளி நபர் தகுதியானவரல்ல. ஒரு வேளை அந்த ஆசிரியர் மிகச் சிறந்த ஆசிரியராக இருக்கலாம். ஆனால், அவருக்குச் சாட்சி கொடுப்பதற்கு நாம் பார்த்த இந்த மாணவன் தகுதியானவன் அல்ல. கர்த்தரைப் பாவத்திலிருந்து விடுவிக்கின்றவராக பலர் புகழ்ந்து பேசு கின்றனர். ஆனால், இவர்களிடம் பாவ விடுதலை இல்லை. இவர்கள் கர்த்தரை அன் பானவர் என்று மெச்சுகின்றனர். ஆனால், இவர்களிடம் அன்பு எதுவும் இல்லை.

கிறிஸ்தவர் ஒருவர் தன்னுடைய நண்பர் ஒருவரிடம், இயேசுவைக் குறித்தும், அவர் அருளும் பரிசுத்த வாழ்க்கையைக் குறித்தும் அடிக்கடி பேசுவாராம். ஆனால், அந்த நண்பர் இயேசுவை ஏற்றுக் கொள்ள முன்வரவேயில்லையாம். இதைக் குறித்து இந்தப் பிறமத நண்பர் இன்னொருவரிடம், வேடிக்கையாக ஒரு விஷயத்தைச் சொன்னாராம். அது என்ன தெரியுமா? அந்தக் கிறிஸ்தவ நண்பர் இவரிடம் கிறிஸ்துவைக் குறித்து அதிகமாகப் பேசுவதற்கு முன்பு, இவர் கிறிஸ்தவப் போதனைகளை ரொம்ப நம்புவாராம். ஆனால், அந்தக் கிறிஸ்தவ நபர் இவரிடம் கிறிஸ்துவைக் குறித்து அதிகமாக பேசின பின்பு, அந்த நம்பிக்கை போய்விட்டதாம்.

ஏன் தெரியுமா? அந்த நபர், கிறிஸ்துவினால் ஒருவருக்கு என்னென்ன நல்ல விஷயம் நடக்கும், என்று சொன்னாரோ, அவை எதையும் அந்தக் கிறிஸ் தவரிடம் அவரால் பார்க்க இயலவில்லை. ஆம், நாம் நம்மை கிறிஸ்தவர்கள் என்றும், கிறிஸ்துவிடம் தொடர்புடையவர்கள் என்றும் நம்பினால், கிறிஸ்துவினால் ஏற்பட்ட நல்லவைகளைப் பிறருக்குக் காட்ட வேண்டும். அவை நம்மிடம் இல்லா விட்டால், நாம் இயேசுவைப் பலர் நம்பாமல் போவதற்குக் காரணமாகிவிடுவோம். நம்முடைய சாட்சியின்மை இயேசுவைக் குறித்த தவறான எண்ணத்தை உருவாக்கும்.

சிந்தனைக்கு...

இயேசு தருவார் என்று பிறருக்குச் சொல்லும் முன்பு,
அவைகளை நீ பெற்றிருக்கிறாயா என்று பார்.

மே 3

நம்பிக்கையின் அர்த்தம்

சங்கீதம் 34:1–22

அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
சங்கீதம் 34:8

கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கின்ற ஒரு வாழ்க்கை என்பது, நாம் விரும்பியபடி எல்லாம் நல்லபடியாகவே நடக்கும் என்று அர்த்தப்படும் ஒரு வாழ்க்கை அல்ல. கர்த்தர் நமக்கு ஆதரவாயிருப்பார் என்று நாம் நம்பி வாழ்வது, நமக்கு எல்லாமே நல்லபடியாகவே நடக்கும் என்று அர்த்தம் அல்ல. கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து வாழ்கின்ற மனிதனுக்கு, அதனால் பல விஷேசமான நன்மைகள் உண்டு என்பது உண்மை. அவனுக்குப் பல பிரச்சினைகள் எல்லோருக்கும் நிகழ்வது போல நிகழாது என்பதும் உண்மை. ஆயினும், அவன் கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் முழுமையாக விதிவிலக்கானவன் அல்ல.

அப்படியானால் கர்த்தரை நம்பி சந்தோஷத்தோடு வாழ்வது என்றால் என்ன? கர்த்தரை நம்பி வாழ்கின்றவன், தன் வாழ்வில் காண நேரிடும் எதுவும், கர்த்தரின் அனுமதியின்றி வராது என்பதை அறிவான். கர்த்தர் அனுமதிக்கும் சில விஷயங்கள், தனக்குச் சில கஷ்டங்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தினாலும், அவற்றை எதிர்கொள்ள கர்த்தர் கிருபைத் தருவார் என்ற நம்பிக்கை அவனிடம் இருக்கும். தன் வாழ்வில் என்ன நடந்தாலும் அவற்றை நம்பிக்கையோடு கடந்து செல்ல, கர்த்தர் உதவுவார் என்ற விசுவாசம் அவனிடம் இருக்கும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கர்த்தர் மேல் அபரிமிதமான நம்பிக்கை உடையவன். ஆனாலும், தனக்கு இனி எதிர்மறையாக எதுவும் நிகழ வாய்ப்பில்லை என்று அவன் எண்ணவில்லை. ஆனால், என்ன நேர்ந்தாலும் கர்த்தர் தன்னைச் சமாதானத்தோடும், நம்பிக்கையோடும், கடந்து போக வைப்பார் என்ற மனநிச்சயம் உடையவனாயிருந்தான். (2 தீமோ 4:18) எனவேதான் நெருக்கப்பட்டாலும் ஒடுங்குவதில்லை என்றும், கலக்கம் வந்தாலும் மனம் முறிவடைவதில்லை என்றும், அவன் எழுதினான். (2 கொரிந்தியர் 4:8)

வாழ்க்கையில் பல துன்பங்கள் நம்மை அதிகமாகப் பயப்படுத்துவதும், கலங்கடிப்பதும் ஏன்? நாம் தனிமையாக அவற்றின் முன்னே நிற்க நேரிடுவதால் தான். அவற்றைச் சந்திக்கும் ஆற்றல் நமக்கு இல்லை என்ற எண்ணந்தான் அதற்குக் காரணம். கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்ற விசுவாசம், நமக்குள் தெளிவையும் மன உறுதியையும் ஏற்படுத்தும். எனவே, இப்படி வந்துவிடக்கூடாதே, அப்படி வந்து விடக்கூடாதே என்று பதட்டப்பட்டுக் கொண்டிருக்காமல், கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

துன்பங்கள் தேவனால் வராமல் போவதும் உண்மையே,
துன்பங்கள் வந்தாலும் கடந்து போகத் தேவன் உதவுவதும் உண்மையே.

நாள் 4

கர்த்தர் என்னோடிருப்பார்

11 தீமோத்தேயு 4:10–22

கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று....

11 தீமோத்தேயு 4:17

ஒருவர் கான்சர் நோயினால் பாதிக்கப்பட்டு, இனி அவருக்கு மருத்துவத்தால் பயன் ஏற்படாது என்ற ஒரு நிலைமைக்குத் தள்ளப்பட்டார். முற்றிலும் நம்பிக்கைக்கு வாய்ப்பின்றி, மரணத்திற்கு மிக நெருக்கமாகிவிட்ட அவருக்காக ஜெபிக்க பல போதகர்கள் வந்தனர். எல்லோரும் அவருக்காக ஜெபித்துவிட்டு, அற்புதத்தை எதிர் பார்க்க ஆலோசனை கூறிச் சென்றனர். ஆனால், ஒரே ஒரு போதகர் மட்டும் கர்த்தர் உங்களோடிருப்பார். அவரை மட்டுமே எதிர்பாருங்கள் என்று கூறிசென்றார். அவ ருக்கு எந்த அற்புதமும் நடக்கவில்லை. ஆனால், கடைசி வரை கர்த்தர் என்னோ டிருக்கிறார் என்று விசுவாசத்தோடு சொல்லிக் கொண்டே மரித்தார்.

ஆம், வாழ்க்கையின் சில நேரங்களில், நாம் விசுவாசித்தபடி ஒரு காரியத்தை நமக்குக் கர்த்தர் செய்வாரா, என்பதை நாம் அறிய முடியாது. ஆனால், கர்த்தரை நம்முடன் இருக்கிறவராக விசுவாசித்துத் தேடும் அந்த விசுவாசம், ஒரு போதும் பொய்த்துப் போவதில்லை. சில நேரங்களில், நமக்குக் கர்த்தர் எதை, எப்படிச் செய்யப் போகிறார் என்பதைத் திட்டமாக அறிய முடியாது. ஆனால், அவரை நம் மோடிருக்கும்படி அழைத்து, எதிர்பார்த்து விசுவாசிக்கும் போது, கர்த்தர் நம்மோ டிருந்து அந்தச் சூழ்நிலைக்குப் போதுமானவராயிருப்பார்.

வாழ்க்கையில் எது எப்படி என்று நிதானித்து அறிய இயலாத சூழ்நிலையில், நமக்கு ஆறுதலும் நம்பிக்கையும் அருள்வது, கர்த்தருடைய பிரசன்னம் மட்டுமே. அந்தப் பிரசன்னத்தோடிருந்தால், என்ன நடந்தாலும், அந்த நேரம் கர்த்தர், இதோ, நான் உன்னுடன் இருக்கிறேன் என்று சொல்லி நம்மை தைரியப்படுத்துவார். எனவேதான் தாவீது, நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல் லாப்பிற்குப் பயப்படேன் என்றான்.

அற்புதம் நடக்கும் என்ற நம்முடைய விசுவாசம், நிறைவேறுமா அல்லது நிறைவேறாதா என்று முன்கூட்டி அறிய முடியாது. ஆனால், கர்த்தர் நம்மோ டிருப்பார் என்ற விசுவாசம் நிச்சயமானது. ஏனென்றால், வாழ்விலும் தாழ்விலும் கர்த்தர் நம்மோடிருந்து, நம்மை அந்தச் சூழ்நிலையில் நடத்திச் செல்லவே விரும்புகின்றார். நாம் கர்த்தருக்குப் பிள்ளைகளாகி, நம்முடைய கடினமான நேரங் களில் நம்மோடிருக்கும்படியாக அவரை விசேஷித்து அழைக்கும் போது, அவர் நம்மோடிருப் பதை நம்முடைய ஆத்துமா அறியச் செய்வார். அந்த நேரத்தில், அவருடைய சித்தப்படி எது நலமானதோ, அதைச் செய்வார்

சிந்தனைக்கு...

ஆறுகளை நெருங்கும் போதுதான்,
கர்த்தர் ஆயத்தம் பண்ணியுள்ள பாலங்கள் கண்களுக்குத் தெரியும்.

மே 5

முதல் ஆசீர்வாதம்

யோவான் 3:5–19

கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு.
யோவான் 3:16

நாம் எந்த நன்மையைக் கர்த்தரிடம் பிரதானமாகக் கேட்கின்றோம் என்பது வேறு. கர்த்தர் எந்ந நன்மையை நமக்குப் பிரதானமாகத் தர விரும்பு கின்றார் என்பது வேறு. பெரும்பாலும் நாம் கர்த்தரால் நமக்குச் செய்ய முடிந் தவைகள், என்ற அடிப்படையிலேயே நன்மைகளைக் கேட்கின்றோம். நமக்குத் தேவையான ஒரு உதவியைச் செய்யும் ஆற்றல் தேவனுக்கு உண்டு. எனவே, பெரும்பாலும் நாம் அவருடைய வல்லமையைச் சார்ந்தே நன்மைகளை தேடுகின்றோம். ஆனால், எது நமக்கு மிகவும் தேவை என்ற அடிப்படையிலேயே தேவன் செயல்படுகிறார்.

தேவன் தம்முடைய குமாரனை அனுப்பி, நமக்குத் தருவதற்கு வந்த முக்கி யமான ஆசீர்வாதம் என்ன? அதைத்தான் யோவான் 3:16 கூறுகின்றது. நாம் அழிந்து போகாமல், நித்திய வாழ்வில் பங்கேற்பதற்குத் தேவையான ஜீவனை இந்தப் பூமியில் வாழும்போதே பெற வேண்டும். நாம் முதலாவது நித்திய பிர வேசத்திற்குத் தேவையான நித்திய ஜீவன் என்ற பிரதான ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும். இந்த நித்திய ஜீவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு உதவுவதற்காகவே, வேறு பல சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களை அருளுகின்றார்.

நித்திய ஜீவ ஆசீர்வாதம் என்பது ஜெபித்து அல்லது உபவாசித்துப் பெற வேண்டியது அல்ல. அது விசுவாசித்துப் பெற வேண்டியது. ஆனால், அநேகர் இந்த முதலாவது ஆசீர்வாதத்தின்மேல் முதற் கவனம் வைப்பதில்லை. அவர்கள் தேவ ஊழியர்கள் வழியாகவும், ஜெபக் கூட்டங்கள் வாயிலாகவும், சரீரப்பிரகார நன்மை களையே பிரதானமாக எண்ணித் தேடுகின்றார்கள். அவர்கள் விசுவாசத்தைப் பயன்படுத்தினாலும், சரீரப்பிரகாரமான நன்மைகளுக்காகவே அதைப் பயன் படுத்துகின்றார்கள். அநேகர் பலவித உதவிகளைக் கர்த்தரிடமிருந்து பெற விரும்பினாலும், நித்திய ஜீவ ஆசீர்வாதத்தைத் தேடுவதில்லை.

அநேகர் எவ்வளவு ஜெபித்தாலும், உபவாசித்தாலும், ஜெபக் கூட்டங்கள் சென்றாலும், நன்மைகளைக் காண்பதில்லை. அதற்கு முக்கியமானதோர் காரணம், தேவன் மனிதனுக்கு முதலாவது தேவைப்படும் நன்மை என்று சொல்லித் தரவிரும்பும் நன்மையின்மேல் ஆர்வமின்றி இருப்பதே. முதலாவது, நித்தியத்தில் பங்குபெறத் தேவையான, ஜீவனுள்ள ஆசீர்வாதமாகிய இயேசுவை, நமக்குள்ளே பெற வேண்டும். அந்த ஆசீர்வாதம் பெற்றவர்களை, இந்தப் பூமியில் ஆதரிப் பதற்காகவே, பிற ஆசீர்வாதங்களைத் தேவன் தருகிறார்.

சிந்தனைக்கு...

கர்த்தரோடிருந்தால் தீமையும் நன்மையாகும்.
கர்த்தர் இல்லாவிட்டால் நன்மையும் தீமையாகும்.

மே 6

பக்திமான் பரிசுத்தவான்

எபிரெயர் 10:22–39

துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட....
எபிரெயர் 10:22

பெரும்பாலும் சபைகளில் பக்திமான்கள் அதிகம். ஆனால், பரிசுத்தவான்கள் மிகவும் குறைவு. பக்திமான்கள் என்றால், தங்களால் இயன்ற அளவு பக்திக்குரிய செயல்களைச் செய்து, திருப்தி அடைகின்றவர்கள். பரிசுத்தவான்கள் என்றால் தேவனால் மறுபடியும் பிறந்து, தேவனுடைய பிள்ளைகள் என்ற நிலமையை அடைந்தவர்கள். இவர்கள் தேவ ஆவியின் பலத்தால் செயல்படுகின்றவர்கள். பக்திமான்களோ சுய வலிமை சார்ந்து பக்தியோடு செயல்படுகின்றவர்கள்.

சத்திய வார்த்தைகளைக் கேட்கும் போது, பக்திமான்கள் சில நேரம் குற்ற உணர்வு அடைவார்கள். ஏனென்றால்,கர்த்தருக்கேற்றபடி வாழாத தங்களின் நிலமையை, வார்த்தைகளைக் கேட்கும் போது அவர்கள் அறிந்து, குற்ற உணர்வு பெறுகின்றார்கள். ஆனால், இந்தக் குற்ற உணர்வினால் சமாதானக் குறைவும், பயமும், அதிருப்தியும் ஏற்படுமேயன்றி, வேறு நன்மைகள் ஏற்படாது. ஆனால் பரிசுத்தவான்களாகிய தேவனுடைய பிள்ளைகளோ அப்படி அல்ல. அவர்கள் தங்களிடம் உள்ள குறைகளையும், தவறுகளையும் வார்த்தைகள் மூலம் அறியும் போது, மனம் வருந்துவார்கள். அந்த மனவருத்தம் தங்களைச் சரிசெய்யும்படி அவர்களை வழிநடத்தும். ஏனென்றால், அவர்களிடம் தேவ ஆவி உள்ளது.

அவர்கள் தேவ வார்ததைகளைக் கேட்கும் போது, உணர்வடைந்து மனந்திரும்புகின்றனர். மற்றவர்களோ, குற்ற உணர்வினால் பாதிக்கப்பட்டு, அமைதியற்ற மனநிலையையும், நம்பிக்கையற்ற மனநிலையையும் பெறுகின்றனர். இவர்கள் அதன் விளைவாக விரக்தியையும், சோர்வையும், சலிப்பையும் பெறுகிறார்களேயன்றி, ஆவிக்குரிய சந்தோஷத்தை அனுபவிப்பதில்லை. ஏனென்றால், அவர்களால் தவறுகளை உணர முடிந்த போதிலும், அவற்றைத் திருத்திக் கொள்ளும் ஆற்றல் அவர்களிடமில்லை. எனவே, அவர்கள் சபைகளுக்கு வந்தாலும், அவர்களிடம் ஆவிக்குரிய உண்மையான உற்சாகம் இருப்பதில்லை.

சிலர் சபைகளுக்கு வந்தாலும் சந்தோஷமாக வீடு திரும்புவதில்லை. அதிலும் சத்தியம் பேசுகிற சபைகளுக்கு வருகின்றவர்கள், பெரும்பாலும் ஒருவிதமான குற்ற மனசாட்சியின் உறுத்துதலால் பாதிக்கப்பட்டு, திரும்புவார்கள். ஆயினும், அவர்களால் மனந்திரும்ப முடிவதில்லை. ஏனென்றால், அவர்களுக்குள் மனந்திரும்புதலை, சாத்தியமாக்கும் பரிசுத்த ஆவியின் செயல்பாடு இல்லை. எனவே, எந்த ஒருவரும் பக்தியாக வாழ்வதில் முதற்கவனம் செலுத்தாமல், முதலாவது பரிசுத்தமாகுதலை அடைய முதற்கவனம் செலுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

தவறுகளை உணர்வதற்கு எல்லோராலும் கூடும்.
தவறுகளைச் சரிசெய்யத் தேவ ஆவி பெற்றவர்களுக்கே கூடும்.

நாள் 7

ஐக்கியமும் விசுவாசமும்

2 தீமோத்தேயு 1:1–14

நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்.
2 தீமோத்தேயு 1:12

சிலரிடம் வலிமையான கடவுள் நம்பிக்கை உள்ளது. ஆனால், அது பயன்தரும் விசுவாசம் அல்ல. ஏனென்றால், அவர்கள் தனிப்பட்ட முறையில் தாங்களை அறிந்தும் பழகியுமிராத தேவன்மேல் நம்பிக்கை வைக்கின்றனர். கர்த்தர் நல்லவர் என்ற அவர்களின் நம்பிக்கை சரிதான். கர்த்தர் வல்லவர் என்ற அவர்களின் நம்பிக்கை சரிதான். கர்த்தர் அற்புதம் செய்கின்றவர் என்ற அவர் களின் நம்பிக்கை சரிதான். ஆயினும், அவர்கள் அந்த நம்பிக்கைக்கு உரிய வரைத் தனிப்பட்ட முறையில் அறியவில்லை.

விசுவாசம் என்பது பொதுவாக நாம் அறிந்திருக்கின்ற தேவன்மேல் நம்பிக்கை வைத்து, அவர் வல்லமையான காரியம் செய்வார் என்று நம்புவது அல்ல. விசுவாசம் என்பது, நாம் கர்த்தரை இரட்சகராகப் பெற்றுக் கொண்டு, அவரின்மேல் தனிப்பட்ட முறையில் நம்பிக்கை வைப்பது ஆகும். நாம் கர்த்தரைத் தனிப்பட்ட முறையில் இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் போது, அவர் நமக்குள் நம்பிக்கையை உருவாக்கி வளர்ப்பார். அதன் பெயர்தான் விசு வாசத்தைத் துவக்குதல். (எபிரெயர் 12:1)

நாம் நேரடியாக அறியாத ஒருவரை நாம் நம்பலாம். ஆனால், அந்த நம்பிக்கையை அவர் அங்கீகரித்து நன்மை செய்யாமல் போக முடியும். ஆனால், நாம் நேரடியாக அறிந்திருக்கிற ஒருவரை நம்புகின்றோமென்றால், அந்த நம்பிக்கை விசேஷமானது. ஏனென்றால், அவர்மேல் அவ்வளவு நம்பிக்கையை ஏற்படுத்தியதே, அந்த நபரோடு ஏற்பட்ட நேரடியான தொடர்புதான். அப்போ ஸ்தலனாகிய பவுல், நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன் என்றான். (11 தீமோ 1:12) எனவே, நான் வெட்கப்பட்டுப் போவதில்லை என்றும் கூற முடிந்தது.

ஒருவரோடு நமக்கு ஏற்படும் ஐக்கியமும் தொடர்பும், அவர்மேல் நமக்கொரு நம்பிக்கையை விளைவாக ஏற்படுத்தும். அது நாமாக முயன்று உருவாக்கியதல்ல. கோலியாத்தை எதிர்ப்பதற்குத் தாவீதுக்கு எப்படித் துணிவு வந்தது? பொதுவான கடவுள் நம்பிக்கை அல்ல. தேவனோடு அவனுக்கிருந்த நேரடியான தொடர்பும், ஐக்கியமும்தான் அந்த நம்பிக்கையைக் கொடுத்தது. அதுதான் விசுவாசம். தேவ பக்தியுடைய சவுலுக்கு அப்படி ஒரு விசுவாசம் ஏன் ஏற்படவில்லை? சவுலுக்குத் தேவன் தனிப்பட்ட உறவுடன் இருப்பவர் அல்ல. அவர் பொதுவான கடவுள். எனவே, அவனால் கர்த்தர் உதவுவார் என்ற நம்பிக்கையோடு செயல்பட இயலவில்லை.

சிந்தனைக்கு...

வேதாகமம் சொல்கிறது என்பதற்காக நம்புவது மத பக்தி.
கர்த்தர் நமக்குள் வந்து தருகிற நம்பிக்கையே இறைபக்தி.

மே 8

நன்றிக் காணிக்கை

மல்கியா 1:6–14

உங்கள் கைகளிலுள்ள காணிக்கை எனக்கு உகந்ததல்ல.
மல்கியா 1:10

மளிகைக் கடை வைத்து நிறையச் சம்பாதிக்கும் ஒருவர், வாரம் தவறாமல் நன்றிக் காணிக்கை செலுத்துவார். எனவே, அவர் நன்றி மறவாத நல்ல பக்தராக அந்தச் சபையில் அறியப்பட்டுள்ளார். சபையின் போதகர், பலவேறு சந்தர்ப்பங்களில் கர்த்தர் செய்த நன்மையை மறவாமல், நன்றிக் காணிக்கை செலுத்தும் அவரைப் பலருக்கு முன்மாதிரியாகக் காட்டுவார். ஆனால் காணிக்கை கொடுக்கும் ஒரு பக்தியைத் தவிர, அவரிடம் கிறிஸ்துவுக்கேற்ற நல்லதோர் வாழ்க்கை முறையைப் பார்க்க முடியாது.

அநேகர் தேவனை ஒரு வியாபாரியைப் போலச் சிந்திக்கும் நிலமை உள்ளது. அவர் பணம் சம்பாதிக்க வாய்ப்புத் தந்ததாக இவர்கள் நம்பினால், அவருக்கு இவர்களும் பணத்தை நன்றிக் காணிக்கையாகத் தருகின்றனர். தேவன் இவர்களின் வியாபாரத்தை விருத்தியடையச் செய்ததாக நம்பினால், இவர்களும் அவருக்குப் பணத்தை நன்றியின் அடையாளமாகச் செலுத்துகின்றனர். ஆனால், இவர்களின் நன்றிக் காணிக்கைப் பணத்திற்காகத்தான். கர்த்தர் இவர்களுக்கு நன்மை செய்தாரா? இவர்கள் பணம் தருவார்கள் என்பதற்காக கர்த்தர் அவர்களுக்கு அற்புதம் செய்தாரா? பணத்தை அல்லது பொருளைத் தாங்கள் பெற்ற நன்மைகளுக்குப் பதிலாகச் செலுத்துவதுதான் காணிக்கையா?

தேவன் நமக்கு நன்மை செய்ததாக நம்பினால், அவருக்கு நாம் நன்றி செலுத்தும் விதம், அவருடைய பரிசுத்த மேன்மைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். தேவனுடைய நோக்கத்தைச் சார்ந்து நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். நம்மிடம் அவர் எதிர்பார்ப்பது பணமாக இருக்க முடியாது. தேவன் விரும்புகின்ற விதமான ஒரு சாட்சி வாழ்க்கை தான், உண்மையான நம்முடைய நன்றியின் அடையாளம். நாம் கர்த்தருடைய பரிசுத்த மகிமையைப் பிறர் நடுவில் பிரதிபலித்து வாழ்வதுதான், தேவன் விரும்புகின்ற நன்றிக் காணிக்கை.

நாம் கர்த்தர் விரும்புகின்ற விதமாக வாழாதபோது, பணத்தைக் காணிக்கையாகக் கொடுப்பது, அவருடைய மகிமை நிலையைக் கொச்சைப்படுத்தும் செயலாகும். கர்த்தர் நம்முடைய கையின் பிரயாசங்களை ஆசீர்வதித்ததாக நாம் நம்பினால், நாம் கர்த்தர் விரும்பும் விதமாக வாழ்ந்து கனி கொடுக்க முன்வர வேண்டும். ஏனென்றால், கனி கொடுப்பதுதான் தேவனை நாம் மகிமைப்படுத்துவதின் உண்மையான அடையாளம்.

சிந்தனைக்கு...

காணிக்கை கொடுத்து ஆசீர்வாதம் தேடுவது வியாபாரம்.
கர்த்தர் ஆசீர்வதித்ததால் காணிக்கை தருவது விசுவாசம்.

மே 9

சத்தியம் ஒரு தடை

3 யோவான் : 1–14

நீ சத்தியத்தில் நடந்து கொள்ளுகிறாய் என்று...
3 யோவான் : 3

ஒரு காலகட்டத்தில் நான் தனித்து விடப்பட்ட சூழ்நிலையில், எனக்குக் கர்த்தர் மூன்று ஆசிர்வாதங்களை அருளினதை உணர்ந்தேன். ஒன்று, சமாதானம், இரண்டு, நம்பிக்கை. மூன்று, சத்தியம். சமாதான வாய்ப்பற்ற சூழல்களில் வாழ்ந்த எனக்கு, கர்த்தரால் சமாதானம் கிடைப்பதை உணர்ந்தேன். நம்பிக்கைக்கு ஏதுவாக எதுவுமில்லாத சூழ்நிலைகளில், எனக்குள் கர்த்தர் அருளிய நம்பிக்கை இருப்பதை உணர்ந்தேன். எல்லாவற்றிற்கும் மேலாக, நான் சத்தியத்தை அறிகின்ற அறிவை அனுதினமும் கர்த்தரால் பெற்றதை உணர்ந்தேன்.

ஆனால், சில காலம் சென்ற பிறகு, நான் எதிர்பார்த்த ஆசைகளை நிறைவேற்ற, இவைகள்தான் எனக்குத் தடைகளாக மாறின. நான் அநேகரோடு இணைந்து நிற்க இயலாதபடி இவைகளே தடைகளாயின. நான் அந்நாட்களில் பலர் போதித்த போதனைகளை, நானும் போதித்துப் பிரபலம் அடையவிடாதபடி இவைகளே தடைகளாக மாறின. நான் என்ன சொல்ல வருகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா? நான் அநேகரோடு சமாதானமாக இணைந்து நிற்க இயலவில்லை. ஏனென்றால், அவர்கள் கர்த்தருக்கேற்ற வழிகளில் இல்லை. அவர்களோடு இணைந்து நிற்கப் போனால், தேவன் எனக்குள் தந்த சமாதானம் விலகுவது போல் உணர்ந்தேன். எனவே, அந்தச் சமாதானத்தை இழக்கவிரும்பாததால், மனிதர்கள் எல்லாரோடும் இசைந்து சமாதானமாகப் போக முடியவில்லை.

சில விஷயங்களில் வேகமாக முன்னேற வேண்டுமானால், கர்த்தருடைய வழிகளை விட்டு விலகி, உலக வழிகளில் நம்பிக்கை வைக்க வேண்டிய தேவை இருந்தது. அந்த வழிகளை நம்பி உயர விரும்பினால், கர்த்தர் என்னோடிருக்கின்ற நம்பிக்கையை இழக்க வேண்டியதாயிருந்தது. தேவன் என்னோடிருக்கும் நம்பிக்கையை இழக்க விரும்பாததால், உலக வழிகள்மேல் நம்பிக்கை வையாமல் பின்வாங்கினேன்.

வெகு ஜனங்களை ஈர்க்கவும், அநேகருடைய ஆதரவையும் பெற, அவர்கள் விரும்புகிற விதமாகப் போதிக்க வேண்டிய ஒரு தேவை இருந்தது. ஆனால், அவ்விதம் நான் போதிக்க விரும்பினால், எனக்குள் கர்த்தர் போதித்திருந்த சத்தியம் அதற்கு எதிராக இருந்தது. கர்த்தர் போதித்த சத்தியம் தருகின்ற மனநிறைவை நான் இழக்க விரும்பாததால், ஜனங்களை எளிதாக ஈர்க்கும் சத்தியமற்ற போதனைகளை நான் பின்பற்ற முடியவில்லை.

சிந்தனைக்கு...

சத்தியம் உன்னை விட்டுப் பலரை விலகிப் போக வைக்கும்.
ஆனால், உன்னையோ கர்த்தரை விட்டு விலக விடாமல் வைக்கும்.

மே 10

சத்திய ஆவி

யோவான் 16:7–23

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது...
யோவான் 16:13

சிலருக்கு ஜெபங்கள் செய்கின்ற ஆர்வமும், ஜெபக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் ஆர்வமும் உண்டு. ஆனால், சத்திய ஆர்வம் அவர்களிடம் இல்லை. சிலரிடம் ஆராதனை செய்யும் ஆர்வமும், ஆராதனைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் ஆர்வமும், உண்டு. ஆனால், அவர்களுக்கு சத்தியத்தின்படி வாழவேண்டும் என்ற ஆர்வம் இல்லை. சிலரிடம் மிகுதியான ஊழிய ஆர்வம் உண்டு. ஆனால், அவர்களிடம் சத்தியம் சார்ந்த செயல்பாட்டு ஆர்வம் இல்லை. ஏனென்றால், அவர்களிடம் இருப்பது பக்தி ஆவிதானேயன்றிச் சத்திய ஆவி இல்லை.

ஒருவரிடம் வலிமையான பக்தி நாட்டமும், பலவிதமான பக்தியான செயல் ஆர்வமும் இருக்க முடியும். ஆனாலும், அவரிடம் சத்திய ஆவி இல்லாவிட்டால், சத்தியம் தொடர்பான வாஞ்சையோ, சத்தியத்தைப் பிரதிபலிக்கும் வாழ்க்கை ஆர்வமோ இராது. சிலருக்குச் சத்தியத்தை அறிவதற்கு ஏதுவான தேவ வார்த்தை களைக் கேட்கும் ஆர்வம் கிடையாது. சிலருக்கு சத்தியம் சார்ந்த வார்த்தைகளைக் கேட்டாலும், அந்த சத்தியத்தின்படி வாழவேண்டும் என்ற தரிசனம் அவர்களுக்கு கிடையாது.

இதற்கு ஒரே காரணம் அவர்களுக்குள் சத்திய ஆவியாகிய தேவ ஆவி இல்லை. சத்திய ஆவி இருந்தால்தான் சத்தியத்தைக் கேட்கும் விருப்பமும், சத்தி யத்தின்படி வாழ்கின்ற ஆசையும், சத்தியத்தின்படி வாழ்கின்ற வலிமையும் இருக்கும். சிலர் ஒரு பக்திக்காகத்தான் சத்தியத்தைக் கேட்கின்றனர். மற்றபடி, அவர்களுக்குள் இயற்கையான சத்தியத் தாகம் இல்லை. சிலர் பக்திக்காகத்தான், சத்தியத்தின்படி கொஞ்சம் கொஞ்சம் நல்லவர்களாக வாழ்கின்றனர். மற்றபடி அவர் களுக்குள் இயற்கையான தேவ ஆவியின் பலம் இல்லை.

ஆம், இன்று கிறிஸ்தவர்களிடம் பல கிறிஸ்தவப் பக்தி விஷயங்கள் உண்டு. ஆயினும், அவர்களுக்குள் ஒரே ஒரு குறைவு உண்டு. அது சத்திய ஆவி இல்லாத குறைவு. இந்தக் குறைவு சரிசெய்யப்படாதவரை, வேறு எவ்வளவு பக்தியான செயல் பாடுகள் இருந்தாலும், அவை தேவனை மகிமைப்படுத்தாது. அவற்றால் நமக்குள் உண்மையான ஆவிக்குரிய நிறைவும் ஏற்படாது. சத்திய ஆவி எப்படி நம்மிடம் வரும்? சத்திய பரனாகிய இயேசு, நமக்குள் உண்மையாக அழைக்கப்படும் போது, அவரோடு சத்திய ஆவியும் நமக்குள் வரும் என்று விசுவாசிக்கவேண்டும்.

சிந்தனைக்கு...

பக்தி உடையவன் பல வழிபாடுகள் செய்வான்.
சத்தியம் உடையவன் தேவ வழிகளில் நடப்பான்.

மே 11

பக்தி என்றால் தேவ உறவு

கலாத்தியர் 4:1–14

இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்.
கலாத்தியர் 4:7

குறிப்பிட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த கணவன் மனைவி இருவரும், மிக மிகச் சரியாகக் கடமை ஆற்றுகின்றவர்கள். சிறந்த குடும்பக் கடமைக்காக பாராட்டி ஏதாவது பரிசளிப்பதாக இருந்தால், இந்த இரண்டு பேருக்கும் கொடுக்கலாம். ஏனென்றால், கணவனுக்குச் செய்ய வேண்டிய அத்தனை வேலைகளையும், ஒரு குறைவுமின்றிச் செய்வாள் மனைவி. மனைவிக்குச் செய்ய வேண்டிய அத்தனை கடமை சார்ந்த வேலைகளையும், மிக அருமையாகக் குறைவின்றிச் செய்வான் கணவன். ஆனால், இருவருக்கும் இடையில் அன்பு சார்ந்த ஐக்கியம் கிடையாது. ஒருவருக்கொருவர் அன்பு சார்ந்த பேச்சுவார்த்தை இல்லை.

இவ்விதமாகவே சில கிறிஸ்தவர்கள் வேதாகமத்தைப் படித்துப் படித்துக் கட்டளைகளையும் நியமங்களையும் மிகத் தீவிரமாகப் பின்பற்றுவார்கள். மிக மிகச் சிரமப்பட்டு பல நீதியானதும், நியாயமானதுமான காரியங்களைச் செய்வார்கள். ஆயினும், அவர்களுக்குத் தேவனோடு உறவாடி வாழும் ஆவிக்குரிய வாழ்க்கை முறை தெரியாது. அவர்கள் ஜெபம் செய்தாலும் அது தேவனிடம் பக்தன் பேசுவது போல, கடமை சார்ந்து இருக்கும். ஆனால், தகப்பனிடம் பிள்ளை பேசுவது போல, உறவு சார்ந்து இராது.

இவர்களை உத்தமமான வேலைக்காரர்கள் என்று சொல்லலாம். ஆனால், உண்மையான தேவனுடைய பிள்ளைகள் என்று கூற இயலாது. ஏனென்றால், இவர்களின் பார்வையும் கவனமும், தேவனுடைய நீதி, நியாயம், பரிசுத்தம், உண்மை, நியாயத்தீர்ப்பு போன்றவற்றின் மேல் இருக்குமேயன்றி, தேவ அன்பின் மேலும், தேவ ஐக்கியத்தின் மேலும் இராது. இவர்களிடம் தேவ பயமும், பரிசுத்த வைராக்கியமும் இருக்கும். ஆனால், இவர்களால் தேவ அன்பையும், தேவன் அருளும் மன்னிப்பையும், தேவ கிருபையையும் அதிகமாக உணர முடியாது. இவர்கள் இறுக்கமான ஒரு மனநிலையில்தான் பெரும்பாலும் காணப்படுவார்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் மிக முக்கியமான அம்சமே, தேவ உறவை ஆவியில் அனுபவித்து வாழ்வதாகும். அதற்கு மிக முக்கியத் தேவை, தேவனை ஒரு அன்புமிக்க தகப்பனாகப் பார்க்கும் பார்வையாகும். தேவன் ஒரு குறிப்பிட்ட விதமான ஒழுங்கு முறைமிக்க வாழ்க்கையையே, கிறிஸ்தவப் பக்தியாகக் காட்டவில்லை. நாம் தேவ ஐக்கியத்துடன் வாழ்வதே கிறிஸ்தவப் பக்திமுறை. அந்த தேவ உறவின் விளைவாகத்தான் பரிசுத்த வாழ்க்கை முறை இருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

கர்த்தருக்குத் தேவை கீழ்ப்படிவுள்ள வேலைக்காரர்கள் அல்ல.
அவருக்குத் தேவை ஐக்கியம் தரும் பிள்ளைகளே.

மே 12

தேவையற்ற கஷ்டம்

மத்தேயு 25:15-30

இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப் போடுங்கள்.
மத்தேயு 25:30

தாலந்துகளின் உவமையில் ஒரு தாலந்தை மட்டுமே பெற்றுக் கொண்ட ஒருவனைப் பார்க்கின்றோம். அவன் தாலந்தைப் பெற்றுக் கொண்டு, அதனைப் பயன்படுத்தாமல் பத்திரமாக வைத்துக் கொண்டான். அதனுடைய விளைவாக அவனுக்குப் புறம்பான இருளில் தள்ளப்படும் தண்டனை கிடைத்தது. இவன் தாலந்தைப் பெற்றவர்களின் கூட்டத்தில் ஒருவனாயிருந்தான். ஆனால், அதனால் பயன்பெற்றவர்களின் கூட்டத்தில் இருக்கவில்லை. இவன் தண்டனை பெறு வதற்குச் செய்த ஒரே தவறு, அந்த ஒரு தாலந்தைப் பயன்படுத்தாததே.

தான் பயன்படுத்தப்போகாத ஒன்றை, அவன் வாங்காமலிருந்திருக்கலாம். ஒரு தாலந்தை வாங்கி, அதனை உரிய விதமாகப் பயன்படுத்தப்போகும் நோக்கமோ தரிசனமோ இல்லாத அவன், எதற்காக அதனை வாங்க வேண்டும்? எதற்கும் பயன்படுத்தாமல் ஒரு தாலந்தை சும்மா வைத்துக் கொண் டிருப்பதைவிட அதை வாங்காமல் போயிருக்கலாம். இங்கே நாம் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு உண்மை உண்டு. இரட்சிப்பு என்பதும் இப்படித்தான். கிறிஸ்தவமும் இப்படித்தான்.

அநேகர் கிறிஸ்தவர்களாகத் தங்களை அடையாளங்காட்டுகின்றனர். அநேகர் தங்களை இரட்சிக்கப்பட்டவர்களாக அடையாளம் காட்டுகின்றனர். ஆனால், இவர்கள் இரட்சிப்பைப் பயன்படுத்துவதில்லை. இவர்கள் கிறிஸ்தவத்தைப் பயன்படுத்துவதில்லை. இவர்கள் கிறிஸ்துவைப் பயன்படுத்துவதில்லை. இவர்கள் ஒரு தாலந்து போன்ற இரட்சிப்பைப் பயன்படுத்தியிருந்தால், அவர்கள் தேவ உறவில் வாழ்ந்திருக்க முடியும். அவர்கள் தேவனால் நடத்தப்பட்டிருக்க முடியும். அவர்கள் தேவ சாயலாய் மாறியிருக்க முடியும். அவர்கள் நித்திய நம்பிக்கையை உறுதிப்படுத்தியிருக்க முடியும். ஆனால், அவர்கள் இவ்விதம் பயன்படுத்தாமல், அந்த மனிதனைப் போல, இவர்களும் தண்டனைக்கு உரியவர்களாக மாறுகின்றனர்.

கிறிஸ்தவர்களாக இல்லாமலிருப்பதைவிட, கிறிஸ்தவர்களாக இருப்பது கொஞ்சம் பிரச்சினைக்குரியதுதான். கிறிஸ்துவை அறியாதவர்களிடம் போய், கர்த்தர் கிறிஸ்துவுக்கேற்ற வாழ்க்கை முறையை எதிர்பார்ப்பதில்லை. ஆனால், கிறிஸ்தவர் களிடம் நிச்சயம் எதிர்பார்ப்பார். எனவே, கிறிஸ்துவுக்கேற்றபடி வாழ் வதற்கு கிறிஸ்தவத்தைப் பயன்படுத்தாமலிருந்தால், அது வீணான வேதனைக்குத் தான் வழிவகுக்கும்.

சிந்தனைக்கு...

பாவிகள் தங்களைப் பாவிகள் என்று அறிவது கடினமானதல்ல.
மாய்மாலர்கள் தங்களை மாய்மாலர்கள் என்று அறிவது எளிதானதல்ல.

நாள் 13

கஷ்டங்களுக்குத் தீர்வு

எபேசியர் 1:1–4

அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே.
எபேசியர் 1:3

நண்பர் ஒருவர் தன்னுடைய வாழ்வில் சில கஷ்டங்களைச் சந்தித்தார். தன்னுடைய கஷ்டங்கள் நீங்குவதற்காகவும், தனக்கு ஆசீர்வாதமான ஒரு சூழ் நிலை ஏற்படுவதற்காகவும், கிறிஸ்தவ நம்பிக்கை சார்ந்து பல காரியங்கள் செய்தார். நிறைய ஜெபக் கூட்டங்களுக்குப் போனார். பல தேவ ஊழியர்களிடம் போய் ஜெபித்துக் கொண்டார். பல நாட்கள் உபவாசம் இருந்தார். சில பொருத் தனைகள் செய்தார். அற்புதம் நிகழுவதற்குத் தேவையான விசுவாசத்தை வளர்க்கப் பிரயாசப்பட்டார். ஆனாலும், நல்லது நடக்கவில்லை. எனவே, அவருக்கு கிறிஸ்தவ நம்பிக்கையே போய் விட்டது.

ஆனால், உண்மை என்ன? பல கிறிஸ்தவர்கள் நம்புகிறதையே இவரும் நம்பி, பல கிறிஸ்தவர்கள் செய்கிறதையே இவரும் செய்தார். ஆனால், இவர் செய்ய வேண்டியது இவைகள் அல்ல. இவர் ஆசீர்வதிக்கப்படுவதற்கு வரவேண்டிய ஒரு இடம் இருந்தது. அங்கு மட்டும் அவர் வரவில்லை. அது எந்த இடம்? அது தான் இயேசு கிறிஸ்து. இயேசு என்னும் இரட்சகரிடம் வருவதற்குப் பதிலாக, பக்தி சம்பந்தப்பட்ட பல விஷயங்களோடு அவர் தன்னைத் தொடர்புபடுத்தினார்.

ஆசீர்வாதம் இருக்கும் இடம் இயேசுவே. விடுதலை ஏற்படும் இடம் இயேசுவே. நன்மைகள் நடக்கும் இடம் இயேசுவே. இது என்ன அர்த்தம். ஒருவர் இயேசு கிறிஸ்துவினால் நன்மையடைய விரும்பினால், இயேசு கிறிஸ்துவின் உறவுக்குள் அவர் வர வேண்டும். தன்னை இயேசுவோடு இணைக்க வேண்டும். இயேசுவோடு ஒருவர் தன்னை இணைக்கவேண்டுமானால், அவர் முதலாவது கஷ்டங்கள் நீங்குவதற்காக அல்ல. அவர் பாவ விடுதலைக்காக அவரிடம் வர வேண்டும். பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட இயேசுவிடம் வர வேண்டும். ஏனென்றால், பாவிகளை இரட்சிக்கவே இயேசு இந்தப் பூமிக்கு வந்தார்.

இரட்சிப்பிற்காக மனந்திரும்பி இயேசுவிடம் வரும்போது, அவருடைய ஐக்கி யத்தில் பங்கு பெறுகிறோம். அந்த ஐக்கியம் தான் வாழ்க்கையின் எல்லாப் பிரச்சினை களுக்கும் தீர்வாகவும், நன்மைகளுக்குக் காரணமாகவும் அமைகின்றது. நன்மை களுக்காகவோ, ஆசீர்வாதங்களுக்காகவோ, அற்புதங்களுக்காகவோ நாம் இயேசு வின் ஐக்கியத்தைப் பெற முடியாது. இயேசுவின் இரட்சிக்கும் கிரியையைத் தேடி வருகிறவர்களே, அவருடைய ஐக்கியத்தைப் பெறுகின்றனர். அந்த ஐக்கியத்தைப் பெறுகின்றவர்கள், பிற நன்மைகளையும் பெறுவதற்கு வாய்ப்புப் பெறுவார்கள்.

சிந்தனைக்கு...

விசுவாசம் என்பது வெறும் நம்பிக்கை அல்ல.
நம்பியதை விரும்பி ஏற்பதே விசுவாசம்.

மே 14

நான் நல்லவன்

பிலிப்பியர் 2:1–16

ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக....
பிலிப்பியர் 2:3

நாம் நல்லவர்களாக இருப்பது உண்மை என்றால், நல்லவர்கள் என்று நம்மை நம்புவது தவறு அல்ல. மற்றவர்கள் நம்மை நல்லவர்களாகப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுவது தவறு அல்ல. ஆனால், அந்த எண்ணம், நான் நல்லவன், மற்றவர்கள் எல்லாம் மோசம் என சிந்திக்க இடம் தரக்கூடாது. மற்ற வர்கள் நம்மைவிட மோசமாக இருப்பது உண்மையாயிருக்கலாம். அதற்காக நாம் நம்மை நல்லவர்கள் என்று சிந்தித்து, நம்மை உயர்த்திக் கொள்ளக் கூடாது. நாம் நல்லவர்களாயிருப்பதே நம்மை அகம்பாவிகளாக மாற்றி விடக்கூடாது.

நாம் ஆரோக்கியமாயிருந்தால் அது நமக்கு நல்லது. ஆனால், பெலவீனர் களுக்கு முன்பாக அதனை வைத்து பெருமைபாராட்டிக் கொண்டிருக்க விரும்பக் கூடாது. நான் சிலரைப் பார்த்திருக்கிறேன். அவர்களிடம் பிறரிடம் இல்லாத ஏராளம் நல்ல விஷயங்கள் உள்ளன. ஆயினும், அவர்களை அதற்காகச் சந்தோஷத்துடன் பார்க்க முடியவில்லை. ஏனென்றால், அவர்கள் தங்களைப் போல இல்லாத வர்களை, மிகத் தாழ்வாகப் பேசவும், நடத்தவும் செய்கின்றனர். அவர்களை மிக மிக மோசமாகப் பிறர் பார்க்கும்படி அவர்களைப் பிறருக்குத் தாழ்வாகக் காட்டுகின்றனர்.

நாம் பரிசுத்தவான்களாயிருந்தால், நம்மை மாயமான ஒரு தாழ்மைக்காகப் பாவி என்று சொல்லத் தேவையில்லை. ஆனால், நான் மட்டும் பரிசுத்தன், பிறர் யாவரும் பாவிகள் என எண்ணக்கூடாது. மற்றவர்களின் தாழ்நிலையைச் சுட்டிக் காட்டி, நம்மை உயர்நிலையில் இருப்பதாகக் காட்ட விரும்பக்கூடாது. அப்படி யென்றால், நல்லவர்கள் அல்லாதவர்களை நல்லவர்கள் என்று கூறிக் கனப் படுத்த வேண்டும் என்று அர்த்தம் அல்ல. நாம் பிறரைவிட நம்மை உயர்த்திக் காட்ட விரும்புகின்ற சிந்தையை மேற்கொண்டால் போதும்.

நாம் நல்லவர்களாயிருந்தால், அது தேவ கிருபையால்தான் என்ற எண்ண வேண்டும். இந்தக் கிருபையை அநேகர் பயன்படுத்தி, நல்லவர்களாகவில்லையே என்று நாம் பரிதாபப்பட வேண்டுமேயன்றி, பெருமை கொள்ளக் கூடாது. தேவ கிருபையைப் பெறாதிருந்தால், நாமும் மற்றவர்களைவிட மோசமாயிருந் திருப்போம் என்று எண்ண வேண்டும். நாலுபேர் நடுவில் நாம் நல்லவர்களா யிருக்கவே கர்த்தர் கிருபை செய்திருக்கிறார், என்று எண்ணிக் கர்த்தருக்கு முன்பாக நம்மை தாழ்த்த வேண்டும். நாம் எவ்வளவு நல்லவர்களாயினும், தாழ்மைதான் முக்கிய அடையாளமாகத் தெரியணும்.

சிந்தனைக்கு...

நீ நல்லவனாயிருப்பதை உயர்வாகச் சிந்தி.
ஆனால், உன்னுடன் ஒப்பிட்டுப் பிறரைத் தாழ்வாகச் சிந்தியாதே.

மே 15

கிரியை வேண்டாமா?

1 கொரிந்தியர் 1:18–31

அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும்.
1 கொரிந்தியர் 1:31

நாம் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்பட்டவர்களாகக் காணப் படுவதற்குக் காரணம், நம்முடைய சொந்தக் கிரியைகள் அல்ல. நாம் நம்முடைய சுய கிரியைகளின் அடிப்படையில், தேவனால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க நீதி மான்களாக மாற இயலாது. நாம் நீதிமான்களாகத் தேவனுடைய பார்வையில் காணப்படுவதற்காக, நமக்குத் தரப்பட்டவரே இயேசு. அவர்தான் நம்முடைய நீதி. நீதியாகிய அவர் நம்மோடிருப்பதால்தான், நாம் நீதிமான்களாக அங்கீகரிக்கப் படுகிறோம்.

அதே வேளையில், சிலர் இதனைத் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். நம்முடைய நல்ல கிரியைகள் அல்லது செயல்கள், நமக்கு நீதிமான்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றுத் தர இயலாததால், நமக்குக் கிரியைகளே தேவையில்லை என்று எண்ணுகின்றனர். இயேசுவின் நீதியைத்தான் நம்முடைய நீதியாகத் தேவன் பார்ப்பார் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

அது உண்மைதான். அதே வேளையில், ஒரு விஷயத்தை நாம் மறக்கக் கூடாது. இயேசுதான் நம்முடைய நீதி. ஆனால் அந்த நீதி நம்முடைய வாழ்க் கையில் தெரியவேண்டும். அதாவது இயேசுவாகிய பரிசுத்தமும், நீதியும் நம்மிடம் பிரதிபலிக்க வேண்டும். நம்முடைய நீதியாகிய பரிசுத்த அந்தஸ்தை, தேவன் நம்மிடம் அல்ல, இயேசுவிடம்தான் பார்ப்பார் என்பது உண்மை. ஆனால், அந்த நீதி நம்முடைய வாழ்க்கையின் அடையாளமாகக் காணப்பட வேண்டும். உதாரணமாக, நம்மை நீதிமான்கள் என்று ஜனங்கள் பார்க்க முடியும். அவர்கள் இயேசுவைப் பார்க்க முடியாது. நம்மைத்தான் பார்க்க முடியும். அப்படியானால், இயேசுவின் பரிசுத்தமும், நீதியும் நம்மிடம் தெரிந்தால்தான், அவர்கள் நம்மை யார் எனப் புரிந்து கொள்ள முடியும்.

அப்படியானால், நம்முடைய சுபாவம், செயல், நடத்தை, வார்த்தை, ஒழுங்கு ஆகியவை வாயிலாகத்தான் இயேசுவாகிய நீதி பிறருக்குத் தெரியும். எனவே, நாம் கர்த்தருடன் ஆழமான உறவுடனும், ஐக்கியத்துடனும் வாழ்வதின் மூலம், நம்மிடம் ஆவியின் கிரியைகள் நிகழும். அவை நம்முடைய செயல்களிலும், சுபாவங்களிலும், பழக்கங்களிலும், ஒழுங்குகளிலும், வார்த்தைகளிலும் வெளிப் படும். அது நாம் கர்த்தரால் நீதிமான்களாக்கப்பட்டதோடு, நீதிமான்களாக வாழ வைக்கவும் செய்கிறது என்பதை உறுதிப்படுத்தும்.

சிந்தனைக்கு...

தீயவர்களாலும் நல்ல செயல்கள் செய்ய முடியும்,
ஆனால், நல்லவர்களால் தீய செயல்கள் செய்ய முடியாது.

மே 16

சத்தியப் பசி

1பேதுரு 2:1–25

திருவசனமாகிய ..... ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.
1பேதுரு 2:3

ஒருவர் காலை உணவு சாப்பிட்டுக் கொஞ்ச நேரம் கடந்த போது, தன்னுடைய நண்பரிடம் இரண்டு வடைகளைக் கொடுத்து, இதைச் சாப்பிட்டு எப்படியிருக்கிறது என்று சொல்லச் சொன்னாராம். அவர் அதைச் சாப்பிட்டு விட்டு, ரொம்ப நல்லாயில்லை. சுமாராக இருக்கிறது என்றாராம். வேறு இரண்டு மணி நேரம் கழித்து அதே நபரிடம் இரண்டு வடைகளைக் கொடுத்து இதைச் சாப்பிட்டு எப்படியிருக்கிறது என்று சொல்லச் சொன்னாராம். அதை அவர் சாப்பிட்டுவிட்டு, இது அதை விட நல்லாயிருக்கிறது என்றாராம். இன்னும் இரண்டு மணி நேரம் கழித்து, அதே விதமாக இரண்டு வடைகளைக் கொடுத்து, இது எப்படியிருக்கிறது என்று கேட்டாராம். அவர் அதைச் சாப்பிட்டு விட்டு, இது ரொம்ப நல்லாயிருக்குதே. இது எங்கு வாங்கினீர்கள் என்று கேட்டாராம்.

உண்மையில் அந்த வடை யாவுமே, ஒரு கடையில், ஒரே நேரத்தில் வாங்கினவைதான். ஆனால், இவருக்குப் பசி ஏற ஏற, வடையின் ருசியை அதிகமாக உணர முடிந்தது. இதுபோல்தான் சத்தியமும். சிலரால் அதனை ரொம்ப விசேஷமாக உணர முடியாது. சிலரால் அதனை ஆர்வமாகத் தேட இயலாது. காரணம் என்ன வென்றால், சத்தியத்தை விரும்பவும் தேடவும், வெறும் ஆன்மிக நாட்டம் போதாது. ஆவிக்குரிய பசி வேண்டும். ஆவிக்குரிய பசி உடையவர்கள்தான் சத்திய வார்த்தைகளை மிக விசேஷமாக எண்ணி ஆர்வத்தோடுத் தேடுவார்கள்.

கடமைக்காக வேளாவேளை சாப்பிடுவது என்பது வேறு. பசியினால் தூண்டப்பட்டுச் சாப்பிடுவது என்பது வேறு. பக்தி நாட்டம் உள்ளவர்கள், சத்திய வார்த்தைகளைக் கேட்பதை, ஒரு கடமையாக எண்ணிக் கேட்பார்கள். பரிசுத்த நாட்டம் உள்ளவர்கள்தான், அதனை மிக மிக வாஞ்சையோடு தேடுவார்கள். பக்தி நாட்டம் என்பது வேறு. பரிசுத்த நாட்டம் என்பது வேறு. பக்தி நாட்டம் என்பது ஆன்மிக விருப்பமுடைய எல்லோருக்கும் வரும். பரிசுத்த நாட்டம் என்பது மறுபடியும் பிறந்த அனுபவம் உடையவர்களுக்கே வரும்.

வெறும் பக்தி விருப்பம் போதாது. வாழ்க்கையில் ஒரு மாற்றம் தேடி, இரட்சிப்பின் அனுபவம் பெற வேண்டும். அப்பொழுது பரிசுத்த ஆவியைப் பெறுவோம். (அப் 2:38) அந்தப் பரிசுத்த ஆவியின் கிரியையினால் நமக்குள், தேவ உறவின் தாகமும் தேவனுக்குப் பிரியமாக வாழவேண்டும் என்ற தாகமும் உருவாகும். அந்த தாகத்தின் விளைவுதான், சத்திய வார்த்தையின் மேல் வாஞ்சை.

சிந்தனைக்கு...

நீ கேட்கும் போதனைகள் உன்னை மாற்றாவிட்டால்,
இன்னும் உன் இருதயம் இயேசுவால் மாற்றப்படவில்லை.

மே 17

வட்டி வாங்குவது பாவமா?

2 கொரிந்தியர் 8:1–15

உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக.
2 கொரிந்தியர் 8:15

ஒரு சபையில் இரண்டு பணக்காரர்கள் இருந்தனர். ஒருவர் தனக்குத் தெரிந்தவர்களுக்குக் கடன் கொடுத்து, கொஞ்சம் வட்டி வாங்கிக் கொள்வார். அதைக் கவனித்த இன்னொரு பணக்காரர், மற்றவரைக் குறித்துக் கடுமையாக விமர்சனம் செய்வார். கிறிஸ்தவராயிருந்தும் இப்படி வட்டிக்குக் கடன் கொடுத்து, சம்பாதிப்பது, கிறிஸ்தவருக்கு அழகா என்று கேட்பார். ஆனால், இவர் யாருக்கும் ஒரு ஐம்பது ரூபாய் கொடுத்து உதவும் பழக்கமுடையவர் அல்ல.

அநியாயமாக வட்டி வாங்கிச் சம்பாதிப்பது தவறானதே. அதே வேளையில், எவ்வளவோ இருந்தும் இல்லாதவர்களுக்கு எதையும் செய்யாதவர்கள், வட்டி வாங்கிச் சம்பாதிப்பவர்களைவிட மோசமானவர்கள். நிறைய வைத்திருந்தும் எதையும் செய்யாத பாவிகளாயிருப்பதைவிட, வட்டி வாங்குகின்றவர்கள் அதிகப் பாவிகள் அல்ல. ஒருவர் தன்னுடைய பணக்கார உறவினர்களை வாய்க்கு வந்தபடி திட்டுவார். ஆனால், அவருக்கு வட்டிக்குக் கொடுக்கின்றவர்களைப் பாராட்டுவார். ஏனென்றால், அவருடைய அவசரத் தேவைகளுக்கு உறவினர்கள் யாரும் உதவாத நிலையில், அந்த வட்டிக்காரர்கள் தான் அவருக்குப் பயன்படுகிறார்கள்.

சிலர் 1000 ரூபாய் வியாபாரத்தில் முதலீடு செய்தால் 500 ரூபாய், 700 ரூபாய் லாபம் சம்பாதிப்பார்கள். ஆனால், யாராவது ஒருவர் ஆயிரத்தைக் கடனாகக் கொடுத்துவிட்டு, அதற்கு 50 ரூபாய் வட்டி வாங்கினால் அதைப் பாவம் என்பார்கள். 1000 ரூபாய்ப் பொருளை 1500 ரூபாய், 1700 ரூபாய் என்று விற்றால், அதனை நியாயமான வியாபாரம் என்று எண்ணுவார்கள். அதிகமாக இலாபம் ஈட்டுவதில் குறியாயிருக்கும் ஒரு வியாபாரியைவிட, நியாயமான வட்டிக்குக் கடன் தரும் ஒருவர், மோசமானவரல்ல.

சிலருக்கு சிலரைப் போல பொருட்களை வாங்கி விற்று, வியாபாரம் செய்யத் தெரியாது. எனவே, பொருள் வியாபாரம் செய்யாமல், தங்களின் வாழ்வின் தேவைகளுக்காகப் பணத்தைக் கொடுத்து நியாயமான வட்டியை வாங்கிப் பிழைப்பார்கள். அதனைத் தவறு என்று கூற இயலாது. ஏனென்றால், அவர்களுக்கு வியாபாரம் செய்யத் தெரியாது. பணத்தைச் சிலர் வங்கியில் வைத்து வட்டி வாங்குவார்கள். அதனை அவர்கள் சரியான நடவடிக்கைதான் என்று எண்ணுவார்கள். ஆனால், யாரோ சிலர் பிறருக்கு ஒரு சிறு வட்டிக்காகப் பணம் கொடுத்தால், அவரைப் பாவி என்று பட்டம் சூட்டுவார்கள். அது சரியல்ல.

சிந்தனைக்கு...

கடன் அன்பை முறிக்காது. பணம் தொடர்பான மனநிலைதான் அன்பை முறிக்கிறது.

மே 18

அவர் நல்லவர், நடத்துவார்

யோசுவா 1:1–11

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை.
யோசுவா 1:5

எனக்கு எல்லாமே நல்லதாகவே நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கையே. ஆனால், நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றிருந்தாலும், இந்தப் பூமியில் எல்லாமே நமக்கு நல்லதாகவே நடக்கும் என்று கூற முடியாது. ஆனால், நமக்கு என்ன நடந்தாலும், தேவன் நம்முடன் இருந்து, நமக்கு நல்லவராகவே இருப்பதை அறியச் செய்வார். சமீபத்தில், கடுமையான வியாதிச் சூழ்நிலையில் வருந்தி, பல சிகிட்சைகளைக் காண நேர்ந்த ஒருவரைச் சந்தித்தேன். வியாதியின் விளைவாக அவர் பல வாரங்கள் மிகுந்த கஷ்டங்களைச் சந்தித்தார்.

ஆனால், அவர் கஷ்டங்களைக் குறித்துக் கூறியதைவிட, அவற்றின் நடுவில் கர்த்தர் அவருக்குப் பல விதங்களில் ஆதரவாயிருந்து உதவினதையே, அதிக மாகச் சொன்னார். ஆம், நல்லதல்லாத சூழ்நிலைகளுக்கு நாம் விதிவிலக்காக இருக்க இயலாமல் போகலாம். ஆனால், அவற்றின் நடுவிலும் கர்த்தர் நமக்கு நல்லவராயிருந்து செயல்படும் வாய்ப்புகளைக் காணாமல் போவதில்லை.

கர்த்தரைச் சார்ந்து வாழும் மக்களுக்கு, கர்த்தர் ஏராளம் நல்ல விஷயங் களைக் காணும் வாய்ப்பைக் கொடுப்பது உண்மை. ஆயினும், இனி எதுவும் எதிராக நிகழாது என்று கூறிவிட இயலாது. ஆயினும், அங்கே அவர் நம்முடன் இருப் பதைக் காண முடியும். அவற்றின் நடுவிலும் நம்முடைய மனம் உற்சாகமடையும் படியான நல்ல பல காரியங்களைக் காணச் செய்வதைப் பார்க்க முடியும். யோசேப்புடன் தேவன் இருந்த போதிலும், சில விஷயங்கள் அவனுக்கு எதிராகவே நிகழ்ந்தது. ஆயினும், தேவன் அந்தச் சூழ்நிலைகளிலும் அவனுக்கு ஆதரவா யிருந்து, அவனை நம்பிக்கையோடு செயல்பட வைத்தார்.

எனவே, தேவன் ஆபிரகாம், மோசே, தாவீது போன்றோரை வழிநடத்திய போது, இனி எதுவும் எதிராக வராது என்று கூறவில்லை. அதற்குப் பதிலாக நான் உன்னோடிருப்பேன் என்று மட்டும் கூறினார். கர்த்தர் அவர்களோடிருப்பதற்கான வாக்குத்தத்தத்தை அவர்கள் பெற்றுக்கொண்டதால், அனைத்துச் சவாலான சூழ்நிலைகளையும் அவர்களால் சந்திக்க முடிந்தது. ஆம், இந்தப் பூமி முற்றிலும் சுமுகமானதோர் ஒரு வாழ்க்கைச் சூழ்நிலையைத் தர இயலாதது. ஆனால், கர்த்தர் நமக்கு நல்லவராயிருந்து, எல்லா மேடுபள்ளங்களிலும் நாம் நம்பிக்கை இழக் காமல் முன்னோக்கிச் செல்ல, நமக்கு உதவுவது நிச்சயம்.

சிந்தனைக்கு...

எல்லாமே நன்றாக நடக்கும் என்பதல்ல நம்பிக்கை.
எது நடந்தாலும் கர்த்தர் உதவுவார் என்பதே நம்பிக்கை.

மே 19

கிறிஸ்தவ அடையாளங்கள்

1 யோவான் 2:1–17

அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன்.
1 யோவான் 2:6

ஒருவர் தன்னை கிறிஸ்தவர் என்று கூறிக்கொள்வதற்கு எந்தக் கடினமும் இல்லை. ஆனால். தன்னை ஒரு கிறிஸ்தவர் என்று உறுதிப்படுத்துவது கடினமான ஒன்று. கிறிஸ்துவோடு அவருக்கு உண்மையானதோர் உறவும். ஐக்கியமும் இல்லாவிட்டால். கிறிஸ்தவ அடையாளங்களை அவரிடம் பிறர் பார்க்க இயலாது. அவை என்ன அடையாளங்கள்? கிறிஸ்துவோடு உறவு உடைய ஒருவராக ஒருவர் தன்னைச் சொல்லிக் கொண்டால். கிறிஸ்து நடந்தபடியே தானும் நடக்க வேண்டும் என்று வேதம் சொல்கிறது. (1யோவான் 2:6)

ஒருவன் கிறிஸ்துவோடிருந்தால். அவனிடம் நற்குணங்களாகிய கனிகள் இருக்கும். இது போன்ற ஆவிக்குரிய அடையாளங்கள் இருந்தால்தான், ஒருவர் தன்னை கிறிஸ்தவர் என்று உறுதிப்படுத்த முடியும். ஆனால், கிறிஸ்தவர் என்று கூறிக்கொள்கின்ற பலரிடம், இதுபோன்ற அடையாளங்கள் இல்லையே. அவர்களிடம் என்ன சொல்வது? கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்கின்ற நீங்கள், நற்குணங்களைக் காண்பியுங்கள் என்று வற்புறுத்துவதா? அப்படி வற்புறுத்தி விடுவதால், அவர்கள் தங்களை நற்குணங்கள் உடையவர்களாக மாற்றிக் கொள்ள முடியுமா?

இங்கே தவறு, அவர்கள் தங்களிடம் கிறிஸ்தவர்களிடம் அவசியம் காணப்பட வேண்டிய கிறிஸ்தவ அடையாளங்களாகிய நற்குணங்கள் இல்லாமல் இருப்பதல்ல. அவர்கள் ஆவிக்குரிய கனிகளாகிய நற்பண்புகளை அடையாளங்களைக் கொண்டிராமலே, தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்வதுதான் பெரிய தவறு. ஏனென்றால், கிறிஸ்தவர்கள் என்று பலர் நடுவில் தங்களை அறிவித்து விட்டு, கிறிஸ்தவப் பண்பு அடையாளங்கள் இல்லாத தங்களின் பாவ நிலையைக் குறித்து, அவர்கள் கவலைப்படவில்லை.

கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் தகுதி தங்களுக்கு இல்லை என்பதை அவர்கள் உணர வேண்டும். கிறிஸ்துவோடு தங்களுக்கு எந்தவிதமான பிணைப்பும் இல்லாததே, தங்களால் கிறிஸ்தவ அடையாளங்களைக் காண்பிக்க முடியாமையின் காரணம், என்பதை அவர்கள் அறிய வேண்டும். கிறிஸ்துவைத் தங்களிடம் பெறாவிட்டால், கிறிஸ்தவ அடையாளங்களாகிய உயர் பண்புகளைத் தங்களிடம் காண முடியாது, என்பதை அவர்கள் உணர வேண்டும். எனவே, அவர்கள் மனந்திரும்பி தங்களுக்குள் இயேசுவைப் பெற வேண்டும்.

சிந்தனைக்கு...

பக்தியைக் காண்பிக்க பலவழிகள் உண்டு.
பரிசுத்தத்தைக் காண்பிக்க இயேசுவின் ஐக்கியமே வழி.

மே 20

போராட்டம் சகஜமே

பிலிப்பியர் 4:1–13

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே...
பிலிப்பியர் 4:13

போராட்டங்கள் வாழ்க்கையில் திரும்பத் திரும்ப வருகின்ற போது, சலிப்பும் சோர்வும் ஏன் வாழ்க்கை இப்படி என்ற கேள்வியும் எழும். ஆனால், நாம் இந்தப் பூமியில் கர்த்தருடைய பலத்தைப் பெற்றுக் கொண்ட போராளிகள்தானே. போராளிக்குப் போராட்டங்கள் வருவது இயற்கையானதே. இராணுவவீரன் பணியிலிருக்கும் காலமெல்லாம் எத்தனை போராட்டம் வந்தாலும், அதனைக் குறித்த கேள்வியின்றிப் போராட்டக்களத்தில் போய் நிற்பான்.

நாம் போராளியாயிருந்தால், போராட்டங்கள் திரும்பத் திரும்ப வருவது அசாதாரணமான தல்ல. தாவீது திரும்பத் திரும்பப் போராட்டங்களைச் சந்திக்க நேர்ந்தது. ஆயினும், திரும்பச் ஜெயிக்கும் அனுபவங்களும் ஏற்பட்டது. ஒரு தகப்பன் தன் மகனிடம் இரண்டு மூன்று வேலைகளைக் கொடுத்ததும், என்ன இது ! திரும்பத் திரும்ப எனக்கு வேலை தருகிறீர்கள் என்று அவன் கேள்வி கேட்க வாய்ப்புண்டு. ஆனால், ஒரு முதலாளி வேலைக்காரனுக்கு எத்தனை வேலைகள் கொடுத்தாலும், சலிக்காமல் செய்வான். ஏனென்றால், அதுதான் அவனுடைய வேலை.

இந்த உலகத்தில் நமக்குப் போராட்டங்கள் உண்டு என்றார் இயேசு. நாம் பரிசுத்த ஆவியைப் பெறுகின்ற போது, பலமுள்ளவர்களாக மாறுகின்றோம். எதற்காகப் பலமுள்ளவர்களாகின்றோம்? இந்தப் பூமியில் நமக்குப் போராட்டங்கள் வரும். அவற்றை எதிர்கொள்ளுவதற்காகவே அந்தப்பெலன். போராட்டங்கள் போன்ற வாழ்க்கைப் பிரச்சினைகள் வரும்போது, ஏன் இப்படித் திரும்பத் திரும்ப வருகின்றது என்ற கேள்வியை அல்ல. தேவனே இன்னொரு போராட்டம் வந்திருக்கிறது. இதையும் உம்முடைய கிருபையின் ஆற்றலைக் கொண்டு, எதிர்கொள்ள உதவும் என்றே கேட்க வேண்டும்.

பலரிடம் போராடும் ஆற்றல் இல்லை. அவர்களின் சொந்த பலத்தால், திரும்பத் திரும்பப் போராட இயலாமல் சோர்ந்து போய் விடுகின்றனர். ஈசாக்கிற்கு திரும்பத் திரும்பப் போராட்டம் வந்தது. போராடினாலும் இறுதியில் வெற்றி வந்தது. ரெகோபோத் என்னும் நீரூற்றைக் கண்டான். ஏன் இந்தப் போராட்டம் என்ற கேள்வி நம்முடைய வலிமையை இழக்கச் செய்துவிடும். என்னைப் பெலப்படுத்தும் இயேசு கிறிஸ்து வினாலே எல்லாம் செய்ய எனக்குப் பெலனுண்டு என்று, போராட்டத்தைச் சந்தித்தால் நிச்சயம் வெற்றி உண்டு.

சிந்தனைக்கு...

போராட்டங்கள் போலிக் கிறிஸ்தவனின் பலவீனத்தையும் ,
உண்மைக் கிறிஸ்தவனின் பலத்தையும் வெளிப்படுத்தும்.

மே 21

சமாதானமே இலக்கா?

யோவான் 14:18–31

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன்.
யோவான் 14:27

கம்பெனி ஒன்றில் வேலைபார்த்துக் கொண்டிருந்த ஒருவர், அங்கே பலவிதமான பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது என்ற காரணத்திற்காக, வேலையை ராஜினாமா செய்தார். அதன்பிறகு பல வேலை வாய்ப்புகள் வந்தும், அவர் எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. நிம்மதியா எந்தப் பிரச்சினையும் இல்லாம இருக்கணும் என்பதற்காக, எந்த ஒரு அலுவலுக்குள்ளும் அவர் போகவில்லை. அதன் பிறகு யார் அவரை விசாரித்தாலும், இப்பத்தான் நிம்மதியாய் இருக்கிறேன் என்பார். ஆனால், அவருடைய மனைவியோ அவருக்கு நிம்மதி மட்டும்தான் வேணும். ஆனால், குடும்பத்திற்கு போதுமான தேவைகளைச் சந்திக்க வழி தெரியவில்லையே என்பார்.

வாழ்க்கையில் நிம்மதியாக வாழ்வது என்பது, முக்கியமான ஒரு எதிர்பார்ப்பாகவே இருக்க வேண்டும். அதே வேளையில், அதுவே வாழ்க்கையின் பிரதான இலக்காக இருப்பது நல்லது அல்ல. எந்த ஒரு செயல்பாட்டிற்குச் சென்றாலும், அங்கே நிம்மதிக்குக் கொஞ்சம் சவால்கள் ஏற்படும். சில நேரங்களில் சில நல்ல விஷயங்களைச் சாதிப்பதற்கும், நாம் சற்று நிம்மதி குறைந்த நேரங்களைக் காண நேரிடும். மனதுக்கு அழுத்தம் ஏற்படுத்தும் எந்த ஒரு சூழ்நிலைக்குள்ளும் போய்விடாமல், இலகுவாக இருக்க விரும்பினால், எதையும் நாம் சாதிக்க முடியாது.

நாம் நிம்மதி ஒன்றையே குறிவைத்துச் செயல்பட்டால், யாரோடும் நாம் இணைந்து எதையும் செய்ய முடியாது. நாம் அமைதியுடன் வாழ்வதையே முதல் நோக்கமாக வைத்துச் செயல்பட்டால், நாம் நம்மை எந்தப் பயனுள்ள காரியங்களுக்குள்ளும் ஈடுபடுத்த முடியாது. அற்காக நாம் நிம்மதியை இழந்து, விரும்பினவைகளைச் சாதிக்க வேண்டும் என்று அர்த்தம் அல்ல. நாம் எந்த ஒரு பயன்தரும் செயல்பாட்டிற்குச் சென்றாலும் அமைதிக்கு சில சில தொந்தரவுகளும், இடையூறுகளும் ஏற்படும்.

இவை சகஜமானவை. இவற்றை நாம் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தின் வாயிலாகச் சந்திக்கப் பழக வேண்டும். தேவ சமாதானத்தை தேவ ஐக்கியத்தின் மூலமாக நாம் தேடி அனுபவிக்கும் போது, அது இருதயத்தை ஆளுகை செய்து, சமாதானக் குறைவுப் பிரச்சினைகளைச் சரிசெய்யும். சமாதானத்துக்குத் தொந்தரவு இல்லாமல், நாம் ஒரு தியான மண்டபத்தில் தங்கியிருப்பது போல வாழ விரும்பினால், அது நம்மை எந்தப் பயன்பாடும் இல்லாதவர்களாகச் செய்து விடும்.

சிந்தனைக்கு...

நிம்மதியிழந்து செயல்படாதே.
செயல்களற்ற நிம்மதியை விரும்பாதே.

மே 22

தீமையின் நடுவில் நன்மை

2 கொரிந்தியர் 1:1–12

எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு.
2 கொரிந்தியர் 1:4

நம்முடைய வாழ்க்கையில் நாம் காண நேரிடும் சில எதிர்மறையான விஷயங்கள், நன்மைக்கேதுவாக மாறக்கூடும். சில விஷயங்கள் இன்று விரும்ப இயலாத வருத்தமான விஷயமாயிருந்தாலும், நாளைக்கு மகிழ்ச்சிக்குரிய விஷயங்களாக அவை மாற வாய்ப்புண்டு. ஆனால், சில விஷயங்களை இன்றும் என்றும் நாம் நன்மைகளாகவோ, நன்மைக்கேதுவானவைகளாகவோ பார்க்க இயலாது. சில தோல்விகளையும் சில இழப்புகளையும் என்றைக்குமே நல்லவை களாகப் பார்க்க இயலாது. உதாரணமாக, கணவனை அல்லது மனைவியை இழந்த ஒருவரின் இழப்பை, என்றுமே நல்லதாகப் பார்க்க இயலாது.

சில தீமைகள் என்றுமே தீமைகள்தான். ஆனால், தீமையின் நடுவிலும் தேவன் நமக்கு நன்மையானதொன்றைச் செய்ய முடியும். கணவனை இழந்த ஒரு மனைவியிடம் போய், கர்த்தர் இதை உனக்கு நன்மையாக மாறப்பண்ணுவார் என்று கூற இயலாது. விபத்தில் உடல் ஊனம் அடைந்த ஒருவரிடம் போய், இது உனக்கு ஒரு நன்மையாக மாறும் என்று கூற இயலாது. ஆனால், தேவன் தம்மை விசுவாசித்து வாழ்கின்ற பிள்ளைகளுக்கு, அதன் நடுவிலும் செயல்பட்டு, ஒரு நன்மையானதைக் காணச் செய்ய முடியும்.

நடந்துவிட்ட இழப்பு அல்லது தோல்வி அல்லது பாதிப்பு நம்மை மிகுதியாக வருத்தி, மீள இயலாமல் போய்விட அனுமதிக்கமாட்டார். எதிர்மறையாக நிகழ்ந்த வைகளின் வேதனைப்படுத்தும் வல்லமையை, அவர் எடுத்துப் போடுவார். எதிர் மறை நிகழ்வுகள் ஏற்படுத்திய வெற்றிடத்தை, அவர் தம்முடைய செயலினால் மாற்றுவார். இழந்தது இழந்ததாக இருக்கலாம். நடந்தது நடந்ததாக இருக்கலாம். ஆனால், இதன் நடுவிலும் நம்மைச் சந்தோஷப்படுத்தி நடத்துவதற்கு, அவர் ஏதாவது செய்வார்.

எல்லோருக்கும் யோபுவுக்குச் செய்தது போல், தேவன் செய்வார் என்று சொல்ல இயலாது. ஆனால், அவரை உத்தம இருதயத்தோடு பற்றிக் கொண் டிருக்கும் ஒவ்வொருவருக்கும், ஆறுதலாகக் கர்த்தர் ஏதாவது ஒன்றை நிச்சயம் செய்வார். வாழ்க்கையில் ஒருவருக்கு ஏற்பட்ட சில இழப்புகளுக்குப் பதிலாக, எதைக் கொடுத்தாலும் அது அவருக்கு உரிய ஆறுதலாக இராது. ஆயினும், கர்த்தர் ஒருவருக்கு ஏதாவது ஒன்றைச் செய்து ஆறுதல்படுத்த எண்ணும்போது, அது வலிமையாய்க் கிரியை செய்யும்.

சிந்தனைக்கு...

இழந்த நன்மைகள் இனித் திரும்ப வராது.
ஆனால், அதனால் இழந்த சந்தோஷம், கர்த்தரால் திரும்ப வரும்.

நாள் 23

பெரிதான கிருபை எது?

எபேசியர் 2:1–10

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு,
எபேசியர் 2:8

ஒருவர் தனக்குத் தெரிந்த ஒருவருடைய வீட்டிற்குச் சென்றார். அவர் அங்கு சென்ற கொஞ்ச நேரத்தில், அந்த வீட்டார் தங்கள் மகன் அடைந்த உயர்ந்த கல்வி நிலைகளையும், அவனுக்குக் கிடைத்த பல மெடல்களையும், ஆவார்டு களையும் காண்பித்தனர். கர்த்தருடைய பெரிதான கிருபையினால், தங்களுடைய மகன் பல்வேறு களங்களில், நிறையச் சாதனைகளைப் படைத்துள்ளதாகச் சாட்சி சொன்னார்கள். அதற்கு அந்த நபர் இதெல்லாம் உண்மையில் கர்த்தருடைய பெரிதான கிருபையால் கிடைத்தவை அல்ல. இவை சிறிதான கிருபைதான். உங்கள் மகன் கர்த்தரை இரட்சகராகப் பெற்றிருந்தால், அதுதான் பெரிதான கிருபை என்றார்.

இது உண்மையான கூற்று. ஆனால், சிலரால் இதனைப் புரிந்து கொள்ள இயலாது. நமக்குச் சற்றுப் பெரிதாகக் கிடைத்த நன்மைகள் யாவுமே, கர்த்தரின் பெரிதான கிருபையின் விளைவுகளாகவே தோன்றும். ஆனால், தேவனுடைய பெரிதான கிருபை, இரட்சகராகிய இயேசு நமக்குத் தரப்பட்டதுதான். தேவ கிருபையின் மிகப்பெரிய வெளிப்பாடு இயேசுவே. தேவ கிருபையின் மிகபெரிய வெளிப்பாடு அவரால் வரும் இரட்சிப்பே.

எனவேதான், எபிரெய நிருபத்தை எழுதிய தேவமனிதன், இவ்வளவு பெரி தான இரட்சிப்பு என்று எழுதினான். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்குத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்றுதான் சுவி சேஷம் கூறுகிறது. (யோவான் 3:16) நல்ல வேலை கிடைத்தது. நல்ல தொழில் விருத்தி கிடைத்தது. நல்ல வீடு கிடைத்தது நல்ல வசதியான வாழ்க்கை கிடைத்தது என்று கூறி, கர்த்தருக்கு நன்றி செலுத்துகின்றவர்கள் பலர். இவை யாவும் மிகப் பெரிய தேவ கிருபை என்று கூறுகின்ற பலர் உண்டு.

ஆனால், அவர்களோடு கிறிஸ்து இருக்கும் அடையாளம் இல்லை. அவர்களிடம் இரட்சிப்பின் அடையாளம் இல்லை. அவர்களிடம் நற்சுபாவ அடையாளங்கள் இல்லை. அவர்களிடம் பரிசுத்தப் பிரதிபலிப்புள்ள வாழ்க்கை முறை அடையாளம் இல்லை. எனவே, அவர்களிடம் பெரிதான கிருபை பெற்ற அடையாளம் இல்லை என்று கூறலாம். ஆம், நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய பிள்ளை என்ற ஆவிக்குரிய அந்தஸ்தைப் பெற்றால்தான், தேவ னுடைய பெரிதான கிருபையைப் பெற்றுள்ளோம் என்பது உறுதியாகும்.

சிந்தனைக்கு...

தேவ கிருபையின் பிரதான விளைவு,
நீ பணக்காரன் ஆவதல்ல, பரிசுத்தவான் ஆகுதலே.

மே 24

தவறை உணரலாம்

எபிரெயர் 4:7–16

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை.
எபிரெயர் 4:13

கர்த்தருடைய பிரசன்னம் என்றால் என்ன? கர்த்தர் நம்மோடிருப்பதை நாம் அறிவதே அது. கர்த்தர் நம்மோடிருந்தால் அது எப்படித் தெரியும்? நம்முடைய மனதில் சந்தோஷம் மிகுதியாயிருக்கும். (சங்கீதம் 16:11) ஆனால், கர்த்தருடைய பிரசன்னத்தின் அடையாளம், சந்தோஷம் மட்டுமல்ல. நமக்குச் சந்தோஷமான மனநிலை இருந்தால், அது கர்த்தருடைய பிரசன்னம்தான் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. கர்த்தர் நம்மோடிருந்தால் வெறும் சந்தோஷம் மட்டும் அல்ல, வேறு பல விஷயங்களும் இருக்கும்.

கர்த்தர் நம்முடன் இருந்தால், நம்முடைய குறைகளை நாம் அறியச் செய்வார். நாம் நம்முடைய குறை நிறைகளை அறிய இயன்றவர்களாயிருப்பது, தேவ பிரசன்னத்தில் வாழ்வதின் முக்கியமானதோர் சான்று. ஏசாயா தீர்க்கன் தேவ பிரசன்னத்தில் நிற்க நேர்ந்தது. அப்போது முதலாவது, அவன் தன்னை அசுத்த உதடுகளை உடைய ஒரு மனிதனாக அறிய முடிந்தது. நாம் நம் தவறுகளை அனுதின வாழ்க்கைச் சூழ்நிலைகளில் உணர இயன்றவர்களாயிருந்தால்தான், நாம் தேவ பிரசன்னத்தில் வாழ்கின்றோம் என்று அர்த்தம்.

அநேகர் தங்களின் தவறுகளையும் குறைகளையும், போதனை அல்லது பிரசங்கம் கேட்கும் போதே உணருகின்றனர். யாரோ ஒரு தேவ ஊழியர் வழியாக மட்டுமே தவறுகளை உணர இயன்றவர்களாயுள்ளனர். ஆனால், நாம் தேவ பிரசன்னத்தில் வாழ்கிற பழக்கமுடையவர்களாயிருந்தால், நமக்குள்ளேயே கர்த்தர் நமக்கு உணர்த்தி நடத்துவார். பிறர் சுட்டிக்காட்டும் நேரம் வரை, நாம் நம்முடைய தவறுகளை உணராதவர்களாயிருக்கத் தேவையில்லை. சிலர் 6 நாட்கள் செய்த தவறுகளை, 7-ம் நாள் சபைக்குப் போய், பாவ அறிக்கை செய்யும் போதுதான் உணர இயன்றவர்களாயிருப்பார்கள்.

நாம் உண்மையான தேவ பிள்ளைகளானால் அப்படியிராது. தேவ பிரசன்னத்தில் வாழ்கின்ற எவரும், தங்கள் தவறுகளையும், பாவங்களையும் தாமதமின்றி உணருவார்கள். தேவ ஆவியானவர் உடனுக்குடன் நம்முடைய தவறுகளை நாம் அறிந்து கொள்ளச் செய்வார். ஏனென்றால், தேவ பிரசன்னம் என்பது ஒரு தெய்வீக வெளிச்சத்தில் வாழ்கின்ற அனுபவம். அங்கே நாம் நம்முடைய உண்மை நிலைமையை அறிந்து கொள்ள வாய்ப்பு உண்டு. யார் மூலமாகவோ கர்த்தர் நம் குறை நிறைகளைச் சுட்டிக்காட்டத் தேவையில்லை.

சிந்தனைக்கு...

கர்த்தரோடிருக்கிறவன் கர்த்தருக்குப்
பிரியமற்றவைகளோடு சமரசமாகி இருக்க இயலாது.

மே 25

பரிசுத்தப் பிரசன்னம்

எபிரெயர் 12:14-29

அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமாயிருந்தது.
எபிரெயர் 12:21

தேவப் பிரசன்னம் ஆளுகை செய்யும் இடத்தில், ஜனங்கள் தாங்கிக் கொள்ள முடியாத உணர்ச்சி வேகம் பெறுவார்கள் என்றே பலர் நம்புகின்றனர். தேவப் பிரசன்னம் வல்லமையாய் வெளிப்படும் இடத்தில், ஜனங்கள் ஒரு பெரிய புயல்போன்ற விசையை உணர்ந்து, தங்களின் சுய நிலையை இழப்பார்கள் என்று பலர் கருதுகின்றனர். ஆனால், தேவப் பிரசன்னம் வெளிப்படும் இடத்தில், அதற்கு வேறொரு முக்கியமான அடையாளம் உண்டு. தேவப் பிரசன்னம் வெளிப்படும் இடம் பரிசுத்தம் வலிமையாக வெளிப்படும் இடம். அந்த இடத்தில் ஜனங்கள் மிக மிகச் சீரியஸாக தேவனுடைய பரிசுத்தத்தை உணருவார்கள்.

ஒருவர் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக் கொண்டு, இரட்சிப்பின் அனுபவம் பெற்றால், அவருடன் தேவப் பிரசன்னம் இருக்கும். (எபேசியர் 3:17) அது பரிசுத்த மான தேவனுடைய பிரசன்னம். அந்தப் பரிசுத்தமான தேவப் பிரசன்னத்தை அந்த நபர் ஆத்துமாவில் உணர முடியும். அது என்ன மாதிரி விளைவுகளை ஏற்படுத்தும்? அவருக்குள் பரிசுத்த உணர்ச்சிகளை ஏற்படுத்தும். அவருக்குள் அதனால் பரிசுத்த விழிப்புணர்வு ஏற்படும். அதனுடைய விளைவாக அவருடைய சிந்தனை, யோசனை, விருப்பங்கள், வார்த்தைகள், சுபாவங்கள், மனநிலை யாவும் கட்டுப்படுத்தப்படும்.

மிக மிக ஒழுங்கும், அதிகாரமும், பண்பு நலமும் உடைய ஒருவர் இருக்கும் இடத்தில், நீங்கள் இருந்தால் அவருடைய மிக மிக ஒழுங்குமிக்க நிலைமையின் விளைவாக, உங்களுக்குள் ஒருவித ஜாக்கிரதை உணர்வு ஏற்படும். அவர் இருக்கும் இடத்தில், மிக மிகச் சரியாக நடந்து கொள்ள வேண்டும் என்ற அவசர உணர்வு ஏற்படும். அவர் இருக்கும் இடத்தில் அவருடைய பிரசன்னம் உங்களைக் கட்டுப் படுத்தும். அவர் உங்களைக் தவறாகப் பார்த்துவிடக்கூடாது, என்ற எச்சரிக்கை உணர்வு உங்களுக்கு ஏற்படும்.

பரிசுத்தமான தேவனுடைய பிரசன்னம் பயங்கரமானது, நம்முடன் கர்த்தர் இருக்கிறதை விசுவாசத்தால் உணர்ந்து கொண்டு வாழ்வதே கிறிஸ்தவ வாழ்க்கை. அவ்விதம் உணர்ந்தால், நாம் அந்தப் பரிசுத்தத்திற்கேற்றபடி சரியாக நம்மை வைத்துக் கொள்ளத் தூண்டப்படுவோம். நம்முடைய வார்த்தைகள் தரமாக இருக்கும். நம்முடைய சிந்தனைகள் கட்டுப்பாடில்லாமல், அதன் வழியிலேயே போகாது. நம்முடைய விருப்பங்களும் தேர்வுகளும் தேவனுக்கேற்றதாகவே இருக்கும்.

சிந்தனைக்கு...

பரவசம் தராத பரிசுத்தம், பயனற்றது.
பரிசுத்தம் தராத பரவசம், பாதகமானது.

மே 26

துக்கத்தை விரும்பாதே

11 சாமுவேல் 22:1–21

எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி....
11 சாமுவேல் 22:7

சிலருக்கு சஞ்சலம் ஒன்றும் கிடையாது. ஆனாலும், அவர்கள் மகிழ்ச்சியில்லாதவர்களாக இருப்பதுபோலத் தங்களைக் காண்பிக்க, அதிகக் கவனம் செலுத்துவார்கள். சிலருடைய வாழ்க்கையில் துக்கத்திற்குரிய சூழல்கள் இருக்கும். இருந்தபோதிலும் அவர்கள் இப்போது துக்கத்திற்கு அடிமையாக இல்லை. ஆனாலும், அவர்கள் தாங்கள் இது போன்ற சூழலில், துக்கமில்லாதவர்கள் போல இருப்பது நியாயமல்ல என்று எண்ணுவார்கள். சிலருக்குத் துக்கப்படுவதற்கு நிறைய விஷங்கள் இருக்கும். ஆனாலும், அவர்கள் தங்களுக்குள் சந்தோஷமாயிருக்க இயன்றவர்களே. அதே வேளையில், பல பிரச்சினைகள் தங்களுக்கு இருக்கும் போது, சந்தோஷமாயிருப்பது சரியல்ல என்று எண்ணுவார்கள்.

ஆம், சந்தோஷமற்றவர்களாகக் காணப்படுகின்ற எல்லோரும் உண்மையில் துக்கத்திலோ சஞ்சலத்திலோ மூழ்கிக் கொண்டிருக்கின்றவர்கள் அல்ல. அவர்கள் ஏதோ ஒரு மனவியல் சார்ந்த காரணத்திற்காக, தங்களைத் துக்கமானவர்களாக வைத்துக் கொள்வதையே விரும்புகின்றனர். சிலர் பெரிய இழப்புகளைக் காண நேரிடும் போது, நீண்டகாலம் துக்கத்திலிருந்து மீள முடியாமலிருப்பார்கள். ஆனால், சிலகாலம் சென்ற பின்பு, துக்கத்தின் வலிமை இயற்கை விதிகளின்படி குறைந்து கொண்டே போகும். ஆனாலும், அவர்கள் தொடர்ந்து துக்கமாயிருக்க விரும்புவதால், அவ்விதம் துக்கமாயிருக்க மிகவும் மனமுயற்சி செய்வார்கள்.

ஒருவர் தன் மனைவியை இழந்து பலமாதம் துக்கப்பட்டார். அதன்பின்பு அவருக்குத் துக்கம் போய் விட்டது. ஆனால், அவரோ மனைவியை இழந்த நான், துக்கமில்லாதவனாயிருப்பது முறையல்ல என்று எண்ணுவார். எனவே, தன்னைத் தொடர்ந்து துக்க உணர்விற்குள் வைத்துக் கொள்வதற்காகப் பழைய திருமண ஆல்பத்தைப் புரட்டுதல், கல்லறைத் தோட்டத்திற்குச் செல்லுதல் போன்ற செயல்களைச் செய்து, தன்னைத் துக்கப்படுத்திக் கொள்வார்.

நாம் ஆரோக்கியமாயிருப்பதற்கு வாய்ப்புப் பெற்றிருந்தும், நம்முடைய உடலைச் சுகவீனப்படுத்தும் செயல்களைச் செய்வது தீங்கானது. நாம் துக்கத்தை எதிர்க்க வேண்டும். நாம் துக்கத்தை பலவீனப்படுத்த முயற்சிக்க வேண்டும். ஏனென்றால், நம்மை அழிக்கும் தன்மையுடைய துக்கத்தை, ஏதோ ஒரு மன உணர்வு காரணத்திற்காகத் தக்க வைக்க விரும்பக்கூடாது. நாம் துக்கமாயிருப்பது நமக்கோ, நம்முடன் இருப்பவர்களுக்கோ, எந்தப் பயனையும் தராது.

சிந்தனைக்கு...

பரிசுத்தவானும் துக்கத்தில் விழுவான்.
ஆனால், பாவிதான் எழுந்து வர இயலாமல் போவான்.

மே 27

கர்த்தரை ஏன் புகழணும்?

சங்கீதம் 148:1–14

அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்.
சங்கீதம் 148:13

தேவனைத் துதிப்பது என்பது ஒரு உன்னதமான அனுபவம். ஆனால் தேவனை ஏன் துதிக்க வேண்டும் அல்லது புகழ வேண்டும் என்பதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் தம்மை எதற்காகப் போற்றவும் புகழவும் நம்மை அழைக்கின்றார்? அவரை நாம் புகழ்ந்து கொண்டேயிருப்பதைப் பார்த்துச் சந்தோஷப்படவா? நிச்சயமாக அப்படியிருக்க முடியாது. அவருடைய புகழ்ச்சிகளை நாம் சொல்லிச் சொல்லி, அவரைக் கனப்படுத்துவது நம்முடைய தலை மேல் விழுந்த கடமை என்பதாலா? நிச்சயமாக அப்படியிருக்க முடியாது. ஒரு இராஜா தன்னை எல்லோரும் புகழ்வதையும், போற்றுவதையும் பார்த்து, கெம்பீரமாக உணர்வதைப் போல தேவனும் உணருகின்றாரா? அப்படியிருக்க முடியாது.

தேவன் பரிபூரணமானவர். அவருக்குள் சகல தெய்வீகப் பண்புகளும் குடி கொண்டிருக்கின்றன. அவரை நாம் பார்க்கப் பார்க்க அவருடைய நீதி, பரிசுத்தம், உண்மை, வல்லமை, ஞானம், மகிமை யாவும் அறியப்படும். அவற்றை நாம் உணர்ந்து போற்றும் போது, ஒரு நபரை துதிபாடுகிறோம் என்பது அல்ல. அவரிடம் உள்ள பரிசுத்தப் பொக்கிஷங்களை நாம் அடையாளம் கண்டு, அவற்றைச் சார்ந்து நாம் அவருக்கேற்றபடி வாழத் தூண்டப்படுகின்றோம். வெறுமனே வாயினால் இயந்திரம் போலக் கர்த்தரைத் துதித்து, அதற்காக கர்த்தர் ஏதாவது ஆசீர்வாதம் தருவார் என்று எதிர்பார்ப்பது அல்ல துதிசெய்தல்.

கர்த்தருக்குள் புகழ்சிக்கேற்ற விதமாக இருக்கும் யாவற்றையும், நாம் பார்த்து, அறிந்து, உணர்ந்து, அடையாளம் கண்டு, அதற்கேற்ப நாம் பயனடைய வேண்டும். அவருடைய பரிசுத்தத்தையும், வல்லமையையும், நீதியையும், அன்பையும், ஞானத்தையும் நாம் அடையாளம் காணும் போது, நாம் எப்படிப்பட்ட ஒரு மகத்துவமான நபரை அறிந்திருக்கிறோம் என்பதை உணர முடியும்.

அதனுடைய இறுதியான நோக்கம் என்ன? அவரை எவ்வளவாக நாம் அடையாளம் காண்கின்றோமோ, அவ்வளவாக நாம் நம்முடைய ஜென்ம சுபாவ அடையாளங்களை இழப்போம். அவர் பரிசுத்தராயிருப்பதை அடையாளம் கண்டு புகழும் போது, நாம் பாவ அடையாளத்தை இழந்து, பரிசுத்த அடையாளத்தை பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். அவருடைய அன்பை நாம் அடையாளம் கண்டு புகழ்வதின் வாயிலாக, நாம் கசப்பு வெறுப்புகளை இழந்து, அன்பின் மனநிலையுடையவர்களாய் மாறணும்.

சிந்தனைக்கு...

கர்த்தரைப் புகழ்ந்து வாழ்வது நல்லது.
கர்த்தரால் புகழப்படும்படி வாழ்வதே சிறந்தது.

மே 28

சுய வெறுப்பு என்றால்...

மத்தேயு 16:21–28

தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு...
மத்தேயு 16:24

சிலர் நன்றாக உடுப்பதில்லை. அவர்கள் நன்றாகச் சுவையாகச் சாப்பிடு வதில்லை. அவர்கள் சௌகரியமான சூழ்நிலைகளை விரும்புவதில்லை. அவர்கள் உடல் சார்ந்த இன்பத்தை ஏற்பதில்லை. ஏனென்றால், இவ்விதமாகத் தங்களை வெறுத்து ஒறுத்து வாழ்ந்தால், தேவனுடைய பார்வையில் விசேஷப் பக்தியாக இருக்கும் என்று எண்ணுகின்றார்கள். அந்த விதமாக வாழ்வது, பரிசுத்தமான வாழ்க்கைக்கு வலிமையான சான்றுகளாக இருக்கும், என்று எண்ணுகின்றனர்.

ஆடம்பரம், பகட்டு, அதிக சௌகரியம் போன்றவை, மனிதனுடைய சுகபோக ஆசைகளின் பிரதிபலிப்புகளாக இருக்கலாம். அவைகளைத் தவிர்ப்பது பக்தி யானவர்களுக்குத் தகுதியாக இருக்கலாம். ஆனால், சராசரி மனித வாழ்விற்குத் தேவையான, நன்மைகளையும் சௌகரியங்களையும் வெறுத்து விலக்கி, பக்தியை வெளிப்படுத்துவது தேவனுடைய சித்தமல்ல. அவ்விதமான ஒரு பக்திமுறையை வேதம் நமக்குச் சொல்லவில்லை. கர்த்தருக்காக நான் கல்யாணம் பண்ண வில்லை. கர்த்தருக்காக நான் சுவையாகச் சாப்பிடவில்லை. கர்த்தருக்காக நான் நன்றாய் உடுப்பதைத் தவிர்க்கின்றேன். இவ்விதமான பக்தி அறிவிப்புகள் தேவனைப் பிரியப்படுத்தாது.

நாமாக நமக்குக் கஷ்டங்களையும் துன்பங்களையும் வரவழைத்து, பக்தியைக் காட்ட விரும்புவது தேவையற்றது. நாம் சமநிலைப் பிரமாணத்தோடு வாழ வேண்டும். நாம் கர்த்தருக்காக வாழ்கின்றபோது கஷ்டம், துன்பம், இல் லாமை, இயலாமை, நிந்தை என எது வந்தாலும், முறுமுறுக்காமல், தேவ பக்தியில் நிலைத் திருப்பதுதான், தேவனைப் பிரியப்படுத்தும் பக்தி. நாம் தேவனுக்குப் பிரிய மாக வாழச் செல்லும் போது, நமக்கெதிராக அநீதி, அக்கிரமம், உபத்திரவம் போன்றவை வரலாம். அவற்றைத் தேவன்மேல் கொண்ட அன்பினால் சகிக்க வேண்டும். அதுதான் உண்மையான தேவ பக்தி.

சுய வெறுப்பு என்பது, நியாயமாக நாம் அனுபவிப்பதற்குக் கிடைத்திருக் கின்ற நன்மைகளை, நிராகரிப்பது அல்ல. சுய வெறுப்பு என்பது, நம்முடைய எண் ணங்கள், யோசனைகள், உணர்வுகள், சுபாவங்கள், ஆசைகள் ஆகியவற்றைத் தேவனுடைய விருப்பங்களுக்கும், தேவனுடைய நீதிக்கும் கீழ்ப்படுத்துவது ஆகும். சுய வெறுப்பு என்பது, எங்கெல்லாம் தேவனுடைய நீதிக்கு முரண்பாடாக, நம் முடைய மனம் செயல்பட விரும்புகிறதோ, அங்கே அவற்றைத் தேவனுக்குக் கீழ்ப்படுத்துவதாகும்.

சிந்தனைக்கு...

கர்த்தருக்காக, நீயாக உன்னைச் சிரமப்படுத்தாதே.
கர்த்தரின் பாதையில் சிரமங்கள் வந்தால், ஏற்கத் தயங்காதே.

மே 29

மனிதர்களை எதிர்கொள்ளுதல்

1 தெசலோனிக்கேயர் 5:12–28

தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்.
1 தெசலோனிக்கேயர் 5:15

இந்தப் பூமியில் நமக்கு ஏற்படும் மிகப் பெரிய எதிர்ப்புகளில் அதிக மானவை, மனிதர்கள் வாயிலாகவே வருகின்றன. நாம் மனிதர்களோடு போராட வேண்டிய தேவை உள்ளது. நாம் கடுமையாகப் போராடி, மனிதர்களால் வருகின்ற எதிர்ப்புகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. ஆனால், இந்தப் போராட்டத்திற்குத் தேவன் நமக்குக் காண்பிக்கும் ஆயுதங்கள் வித்தியாசமானவை. அவை, குணாதிசயம் சார்ந்த ஆயுதங்களே. பதிலுக்குப் பதில் செய், விடாமல் பின் தொடர்ந்து தாக்கு, புத்திசாலித்தனத்தையும் தந்திரத்தையும் சரியாகக் கையாண்டு எதிரியை முறியடி, என்பது போன்ற மனுஷீகமான ஆயுதங்களைப் பயன்படுத்தத் தேவன் சொல்லவில்லை.

சகிப்புத்தன்மை, பொறுமை, சாந்தம், விட்டுக் கொடுத்தல், தீமைக்குத் தீமை செய்யாதிருத்தல், கர்த்தரைச் சார்ந்திருத்தல் போன்ற, ஆவிக்குரிய ஆயுதங்களை நாம் பயன்படுத்த வேண்டும். ஆனால், இது போன்ற ஆயுதங்கள் பல பக்தி மான்களிடம் இல்லை. அவர்கள் ஒருபுறம் நல்ல பக்தியோடு வாழ்வார்கள். ஆனால், மறுபுறம் மனிதர்களால் வரும் எதிர்ச் செயல்களை, எல்லா மனிதர்களைப் போலவே எதிர்கொள்வார்கள். சில நேரங்களில், அவர்கள் இதை எப்படிச் சகிக்க முடியும்? இதை எப்படிப் பொறுக்க முடியும்? இதை எப்படி விட்டுக் கொடுக்க முடியும்? என்று கேட்பார்கள்.

ஏனென்றால், அவர்களிடம் ஆவிக்கேற்ற போராயுதங்கள் இல்லை. அவர்கள் பக்தியானவர்கள் என்ற போதிலும் பொறுமை, தாழ்மை, சாந்தம் போன்ற ஆவிக்குரிய நற்சுபாவங்களை, அவர்கள் தங்களிடம் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பக்தியானவர்கள் என்றாலும் கோபம், எரிச்சல், வெறுப்பு, வைராக்கியம், கசப்பு போன்ற மனுஷீக ஆயுதங்கள்தான் உள்ளன. ஏனென்றால், அவர்கள் இறை பக்தியாளர்களாய் வாழ்கின்றார்களேயன்றி, இறை உறவாளர்களாக வாழவில்லை.

அவர்கள் கர்த்தருடைய ஐக்கியம் தேடி வாழ்கின்ற, ஆவிக்குரிய அனுபவம் அறியாதிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குள் ஆவிக்குரிய நற்சுபாவங்களாகிய ஆயுதங்கள், கூர்மையாக இல்லை. அவர்கள் போதனைகளையும் உபதேசங் களையும் கேட்டு, ஓரளவிற்குத் தங்களின் கோபங்களையும், வெறுப்புகளையும் கட்டுப்படுத்த விரும்புகின்றார்கள். ஆயினும், ஒரு அளவைத்தாண்டி முடியாமல் போகிறது. ஆம், தேவ உறவு சார்ந்த ஆவிக்குரிய அனுபவம் இருந்தால்தான், ஆவிக்குரிய ரீதியாக மனிதர்களை வெல்ல முடியும்.

சிந்தனைக்கு...

பிறர் தங்களின் தீய சுபாவங்களைக் காட்டும் போது,
நீ உன்னுடைய நல்ல சுபாவங்களைக் காட்டத் தயங்காதே.

மே 30

ஏன் முடியவில்லை?

ரோமர் 7:14–25

நான் விரும்புகிறதைச் செய்யாமல்...
ரோமர் 7:15

பசிமிகுந்த ஒருவனுக்கு முன்பாக, பலவிதச் சுவைகளில் ஏராளமான உணவுகள் வைக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த உணவெல்லாம் நல்லதல்ல, சாப்பிடாதே, சாப்பிடாதே என்று யாரோ ஒருவர் எச்சரிக்கின்றார். அவருடைய எச்சரிப்பு சரிதான். ஆனாலும், அந்த உணவுகள் வேண்டாம் என்று வெறுத்து விலகுவதற்கு, அவனால் முடியவில்லை. அதற்குக் காரணம் பசி மட்டுமல்ல. அவனுடைய பசியை ஆற்றிக் கொள்ள, அங்கே வேறு உணவேதும் இல்லை.

இது போலவே, பலருடைய ஆன்மிக அனுபவங்களும் உள்ளன. பண ஆசை கூடாது, பொருளாசை கூடாது, இச்சை கூடாது, ஆகாத பழக்கம் கூடாது, தவறான சுகபோகம் கூடாது என்பது போன்று, ஏராளம் ஆவிக்குரிய ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. போதனைகளும் உபதேசங்களும் இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று எப்போதும் கட்டளையிடுகிறது. ஆனால், எவையெல்லாம் போதனைகளால் தவறு என்று அடையாளங்காட்டப்படுகிறதோ, அவைகள் மேல்தான் மனிதனுக்கு அதிகமான பசியும் பற்றும் ஏற்படுகிறது. எனவே, அவனால் போதனைகளின்படி தன்னைக் கட்டுப்படுத்தி வாழ முடியவில்லை.

இங்கே பிரச்சினை என்னவென்றால், மனிதனுடைய ஆத்துமாவுக்குள் சந்தோஷமும், நிறைவும் இல்லை. அவன் ஆன்மிக ரீதியாக நிறைவுடன் இல்லை. அவன் கர்த்தரால் உள்ளத்தில் மகிழ்விக்கப்படும் நிலைமையை அடையவில்லை. அவன் தனக்குள் தெய்வீகத் திருப்தி நிலைகளைக் காணவில்லை. அவன் சரியான பசியோடு இருக்கிறான். அந்தச் சூழ்நிலையில் அவனை, இதை விரும்பாதே, அதை விரும்பாதே என்றால், அவனால் அதைப் பின்பற்ற இயலாது.

அநேகர் இதைச் செய்யக் கூடாது, அதைச் செய்யக்கூடாது, என்ற ரீதியான ஒரு ஒழுங்குமுறை வாழ்க்கையை, ஆவிக்குரிய வாழ்க்கை என்று எண்ணுகின்றனர். முதலாவது, ஒரு மனிதன் கர்த்தராகிய இயேசுவை விசுவாசத்தால் தனக்குள் பெற வேண்டும். அவரோடு அவன் ஆவிக்குரிய நட்புறவை ஏற்படுத்தி, அவருடைய ஐக்கியத்தை ஆத்துமாவில் அனுபவிக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் ஆட்கொள்ளுதலினால் அவன் சமாதானம், சந்தோஷம், திருப்தி, ஆகியவற்றை அனுபவிக்கும் பழக்கத்திற்கு வரவேண்டும். அப்போது, அவன் நன்றாகச் சாப்பிட்டு திருப்தியான ஒரு மனிதனைப் போலிருப்பான். இப்போது, இவனுக்கு நல்ல ஆலோசனைகள் தந்தால், அவனால் பின்பற்ற முடியும்.

சிந்தனைக்கு...

சரியான சந்தோஷங்களால் உன்னைப் பலப்படுத்தாவிடில்,
தவறான சந்தோஷங்கள் உன்னைப் பலவீனப்படுத்தும்.

மே 31

விலக இயலாது

எபிரெயர் 3:7–19

ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கு ஏதுவான...
எபிரெயர் 3:12

ஜெபம், ஆராதனை, சபை கூடுதல், ஊழியம் என ஆவிக்குரிய செயல்களில், அதிக ஈடுபாடுகள் உடையவர்களாயிருந்த சிலர், பின்மாற்றம் அடைந்து போய்விட்டதாகக் கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். அவர்கள் இப்போது ஆவிக்குரிய செயல்பாடுகளில் ஆர்வம் எதுவும் காட்டுவதில்லை. அவர்கள் கிறிஸ்துவை விட்டு விலகிப் போய் விட்டனரே என்று பலர் கவலைப்படுகின்றனர். ஆனால், சிலருடைய நிலமை வேறு. அவர்கள் கிறிஸ்துவை விட்டும் விலகவில்லை. கிறிஸ்தவ அனுபவத்தை விட்டும் விலகவில்லை.

அவர்கள் ஒருபோதும் இயேசுவிடம் வரவில்லை. அவர்கள் ஒருபோதும் கிறிஸ்தவ அனுபவங்களோடு இருக்கவில்லை. அவர்கள் ஒரு பக்தி அனுபவத்திற்குள் வந்தார்கள். அவர்கள் ஆராதனைகளால் பரவசமடையும் அனுபவத்திற்குள் வந்தார்கள். அவர்கள் சுய பக்தி முயற்சி அனுபவத்திற்குள் வந்தார்கள். அவர்கள் உண்மையான மனந்திரும்புதலின் அனுபவத்தோடு, கிறிஸ்துவுடன் ஐக்கியம் பெறும் அனுபவத்திற்குள் வரவில்லை. எனவே, பாவத்தை மேற்கொண்டு வாழ இயலாமல், அவர்கள் பின்மாற்றம் அடைந்தார்கள். பரிசுத்தமான நற்குணங்களோடு வாழ இயலாமல், பின்மாற்றம் அடைந்தார்கள். ஆவிக்குரிய பக்தி நடவடிக்கைகளில் ஆர்வம் இழந்து, பின்மாற்றம் அடைந்தார்கள்.

நாம் சுயமாக, சுய முயற்சி சார்ந்து பெறுகின்ற ஆவிக்குரிய அனுபவங்களில் நிலைத்திருக்க முடியாது. ஏதாவது ஒன்று வலிமையாகக் குறுக்கிடும் போது, நாம் ஆவிக்குரிய அனுபவங்களில் நிலைத்திருக்க இயலாமல் போகும். உண்மையான மனந்திரும்புதலின் பின்னணியோடே ஒருவர் கிறிஸ்துவிடம் வருவதுதான் கிறிஸ்தவ அனுபவம். அப்படி வந்தால் கிறிஸ்துவினால் அவரிடம் சில அனுபவங்கள் தோன்றும். அவருக்குத் தேவ வார்த்தை பெறும் அனுபவம் கிடைக்கும்.

இந்த அனுபவங்கள் தேவ ஆவியால் ஒருவரிடம் ஏற்படுகின்றவை. இந்த அனுபவங்கள் ஒருவரைக் கிறிஸ்துவை விட்டு விலக விடாமல் தடுக்கும். இந்த அனுபவங்கள் ஒருவருக்குக் கிறிஸ்துவை விட்டு விலகிப்போவதற்கான காரணமில்லாமல் பண்ணும். இந்த அனுபவங்கள் உடையவரை பாவமோ, சுயமோ, உலகமோ இழுத்துக் கொண்டு போக முடியாது. எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்துவின் அன்பை விட்டு யார் நம்மைப் பிரிக்க இயலும் என்று கேட்டான்.

சிந்தனைக்கு...

துன்பங்கள் நம்மிடம் இருப்பது கடவுளா அல்லது
வெறும் கடவுள் பக்தியா என்பதை காட்டிவிடும்.

ஜூன் 1

நன்மை செய்யச் சோர்வு

கலாத்தியர் 6:1–10

நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாதிருப்போமாக.
கலாத்தியர் 6:9

பிறருக்கு நன்மை செய்யாமலிராதே. பிறருடைய நன்மையை எதிர்பார்த்து வாழாதே. இது ஒரு தந்தை மகனுக்கு அடிக்கடி சொல்லும் அறிவுரை வார்த்தைகள். பிறருக்கு நன்மை செய்வது என்பது நாம் மனித அடையாளத்தோடு வாழ்வதற்கு மிகவும் அவசியம். அதே வேளையில், பிறருடைய நன்மையை எதிர்பார்த்து வாழும் போது, நாம் சொந்தக் காலில் நிற்கப் பழகாமல் பலவீனமாகிவிடுவோம். சில வேளைகளில், பிறருடைய நன்மையை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைகின்றோம். சில வேளைகளில் பிறருடைய நன்மைகளை எதிர்பார்த்து ஏமாற்றம் காணும் போது, பிறருக்கு நன்மை செய்வதில் நமக்குச் சோர்வு ஏற்பட்டு விடுகிறது. எனக்கு யாரும் உதவி செய்யாமலிருக்கும் போது, நான் ஏன் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

நான் உனக்கு உதவி செய்தால், நீ எனக்கும் உதவி செய்ய ணேடும் என்ற கொள்கையைப் பின்பற்றினால், சில நேரங்களில் நமக்கு மனச்சோர்வே ஏற்படும். ஏனென்றால், அநேகர் உதவிபெற, தங்களைத் தகுதியானவர்கள் என்று எண்ணு கின்றார்களேயன்றி, பிறருக்குத் தாங்கள் உதவி செய்யக் கடமைப்பட்டவர்கள் என்று எண்ணுவதில்லை. எனவே, நம்மால் உதவி பெற்றவர்கள், நமக்கு உதவி செய்யவில்லையே என்ற வருத்தம் ஏற்பட்டு விடும்.

தேவன் என்னைப் பிறருக்கு நன்மை செய்ய வைத்திருக்கின்றார், என்ற ஆவிக்குரிய கொள்கை நமக்கு வேண்டும். அது போல, என் தேவைகள் யாவையும் கர்த்தர் சந்திப்பார் என்ற விசுவாசமும் நமக்கு வேண்டும். மனிதர்களுக்குச் செய் கின்ற உதவிகளுக்குப் பிரதிபலனை அவர்களிடம் நாம் தேடாமல், நம் தேவை களைக் கர்த்தர் சந்திப்பார் என்ற நம்பிக்கை வேண்டும். நாம் பிறருக்கு நன்மை செய்தால், கர்த்தர் வேறு வழியில் நமக்கு நன்மை செய்வார் என்ற நிச்சயம் வேண்டும்.

நாம் பிறருக்கு நன்மை செய்தோமானால், அது கர்த்தர் நமக்கு அளித்த நன்மை செய்யும் ஆற்றல். அந்த நன்மைக்கு மனிதர்களே நமக்கு பதில் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தால், தேவனிடமிருந்து நமக்கு வர வேண்டிய அபரிமித மான நன்மைகள் தடைபட்டுப் போகும். சிலர் உற்சாகமாகச் சில காலம் சிலருக்கு நன்மை செய்வார்கள். ஆனால், சிறிது காலத்தில் நன்மை செய்வதில் சோர்ந்து போய், இனி எவருக்கும் நன்மை செய்யக்கூடாது என்று சிந்திப்பார்கள். ஏனென்றால், நன்மை பெற்றவர்களிடமிருந்து நன்மை பெற விரும்பி, ஏமாற்றம் அடைகின்றனர்.

சிந்தனைக்கு...

நீ பிறருக்கு நன்மை செய்தால், நன்றியை எதிர்பாராதே.
உனக்குப் பிறர் நன்மை செய்தால், நன்றியாயிருக்க மறவாதே.

ஜூன் 2

அன்பை அனுபவிக்கணும்

1யோவான் 4:1–21

நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர ...
1யோவான் 4:11

நாம் தவறுகள் செய்யாமல் வாழ்வதால். ஆவிக்குரியவர்களாக வாழ்கின்றோம் என்று கூறி விட முடியாது. நாம் பாவம் எதுவும் செய்யாததால். பரிசுத்தவான்களாகயிருக்கின்றோம் என்று கூறிவிட இயலாது. நாம் ஆவிக்குரியவர்களாயிருந்தால். தேவ அன்பையும். சமாதானத்தையும். தேவ வல்லமையையும் அனுதின வாழ்வில் அனுபவிக்கின்றவர்களாயிருக்க வேண்டும். நம்மைத் தவறு எதுவும் செய்யாமல் விலக்கி வைத்துக் கொள்வதினால். தேவ கோபத்தை நாம் தவிர்க்கலாம். ஆனால், நமக்குத் தேவ அன்பு, தேவ கிருபை, தேவ பிரசன்னம் ஆகியவை வேண்டும்.

ஏனென்றால், பாவம் செய்யாமல் வாழ்வதால், பிறருக்கு நாம் தீங்கு செய்யாத வாழ்க்கை வாழ இயலும். ஆனால், தேவ ஐக்கியத்தால் தேவ அன் பையும், சமாதானத்தையும் அனுபவித்தால்தான், பிறரிடம் அன்பு காட்டவும், பிறருக்கு நன்மை செய்யவும் முடியும். ஆவிக்குரிய வாழ்க்கையின் பிரதிபலிப்பு, நாம் மற்றவர்களோடு எப்படிப்பட்ட சுபாவநிலைகளோடு, நடந்து கொள்கின்றோம் என் பதிலேயே விளங்குகிறது. நாம் பிறரோடு நற்சுபாவங்களோடு நடந்து கொள்ளும் போதுதான், நாம் ஆவிக்குரியவர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

ஆனால், அவ்வித சுபாவநிலை வாழ்க்கை என்பது, போதனைகளை நாம் கேட்பதினால் மட்டும் வந்துவிடாது. அதற்கு மிகப்பெரிய ஆவிக்குரிய அனுக்கிரகம் வேண்டும். நாம் தேவ ஐக்கியத்தோடு வாழ்வதற்கு அதிக நாட்டம் கொள்ள வேண்டும். ஜெபமாயிருந்தாலும் சரி, வேத வாசிப்பாயிருந்தாலும் சரி, வேத தியானமாயிருந் தாலும் சரி, தேவ ஐக்கியத்தின் அனுபவத்தை ஆத்துமாவில் உணருவதே நோக்க மாயிருக்க வேண்டும். அங்குதான் நமக்குள் தேவ அன்பையும், தேவ சமாதானத் தையும், தேவ வல்லமையையும் தேவ கிருபையையும் காண முடியும்.

அவற்றைக் கொண்டுதான் பிறரை நேசிக்கவும் பிறரைச் சகிக்கவும், பிற ருக்கு நன்மை செய்யவும் நம்மால் முடியும். சிலர் நான் எந்த தப்பும் செய்ய வில்லையே நான் எந்த தவறும் செய்யவில்லையே நான் எந்த பிரமாணத்தையும் மீறவில்லையே என்று கூறுவார்கள். ஆனால் நீங்கள் யாரைக் கர்த்தருடைய அன்பில் நேசிக்கின்றீர்கள்? யாரைக் கர்த்தருக்காகப் பொறுத்துக் கொள்கின்றீர்கள்? யாருக்குக் கர்த்தருடைய நாமத்தில் நன்மை செய்கிறீர்கள் என்று கேட்டால் எதையும் சொல்ல இயலாதவர்களாயிருப்பார்கள்.

சிந்தனைக்கு...

தீங்கு செய்யாதவனை யாரும் இகழ முடியாது.
நல்லது செய்யாதவனை யாரும் புகழ முடியாது.

ஜூன் 3

கிருபைக்குச் சான்றுகள்

எபேசியர் 2:6–22

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு.
எபேசியர் 2:8

குறிப்பிட்ட ஒருவர் அதிகமாக உபயோகிக்கும் ஆவிக்குரிய வார்த்தை, எல்லாம் கர்த்தருடைய கிருபைதான் என்பதே. அவர் சின்ன விஷயம், பெரிய விஷயம், எதுவாயினும், அது கர்த்தருடைய கிருபையினால் வந்தது என்று கூறுவார். வீடு, வாகனம், பொருட்கள், வேலை, தொழில், பிள்ளைகளின் படிப்பு, பிரயாணம் என எந்த ஒன்றையும், அவர் கர்த்தருடைய கிருபையினால்தான் என்பார். ஆனால், அவரை நன்கு தெரிந்த ஒருவர் அவரைக் குறித்துக் கூறும் போது, கர்த்தருடைய கிருபைக்கு இவர் ஒரு மோசமான சாட்சி என்பாராம்.

ஏனென்றால், அவர் உலகப்பிரகாரமான அனைத்து நன்மைகளையும், பொருட்களையும் கர்த்தருடைய கிருபையினால் வந்தது என்பார். ஆனால், வேதாகமம் கூறுகின்ற கிருபைக்குச் சாட்சியாக எதையும் அவரிடம் பார்க்க முடியாது. கிருபை என்பது உலகப் பொருட்களைப் பெறுதல் அல்ல. கிருபை என்பது உலகப் பிரகார நன்மைகளை அடைவது அல்ல.கிருபை என்பது தெய்வீக நன்மைகளை நாம் பெறுவது ஆகும். இரட்சிப்பு கிருபையால் வருகிறது. நற்குணங்கள் கிருபையால் வருகிறது. பாவத்தைச் ஜெயித்தல் கிருபையால் வருகிறது. சாட்சி வாழ்க்கை கிருபையால் வருகிறது.

தேவ கிருபையால் நாம் தேவனுக்கேற்ற குணாதிசயங்களோடும், தேவனைப் பிரதிபலிக்கும் செயல்களோடும் வாழ முடியும். தேவ கிருபையால் நாம் எல்லாச் சூழல்களிலும் சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ முடியும். தேவ கிருபையினால் இந்தப் பொல்லாத உலகத்திற்கு இசைந்து போகாமல், தேவனுடைய பிள்ளைகளுக்கேற்ற தகுதிகளோடு நிற்க முடியும். இது போன்றவைகளைத் தேவ கிருபை நம்மிடம் செயல்படுவதற்கான சான்றுகளாகக் காட்ட வேண்டும். திறமைகளாலும், உழைப்பினாலும், நல்ல சூழல்களால் வந்த நன்மைகளை மட்டும், தேவ கிருபையால் வந்தன என்று கூறுவது சரியல்ல.

ஒருவர் பல லட்சங்களை ஒரு அரசியல்வாதிக்குக் கொடுத்து, மகனுக்கு மருத்துவக் கல்லூரியில் சீட் வாங்கினார். ஆனால், அதைக் குறித்து சபையில் பேசும் போது, கர்த்தருடைய பெரிதான கிருபையினால், நன்மை கிடைத்தது என்றாராம். இவர் விசுவாசம் சார்ந்த பரிசுத்தமான ஒரு வழியில் போய் சாதித்திருந்தால், அதனை கிருபை எனலாம். இவர் மாம்சீக முயற்சியில் சாதித்ததைக் கிருபை என்று கூறுவது, தேவனைத் தூஷிப்பதற்குச் சமமாகும்.

சிந்தனைக்கு...

கர்த்தருடைய வழியில் நடக்காமல் சாட்சி சொல்லாதே.
அவருக்குப் பொய்சாட்சி பிடிக்காது.

ஜூன் 4

ஆசீர்வாதம் என்றால்.....

பிரசங்கி 5:9-20

செல்வப் பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை.
பிரசங்கி 5:10

சிலர் தங்களை, அதிகமதிகமாகத் தேவன் செல்வநிலைகளில் வளமை அடையச் செய்வதையே, அதிகமதிகமாகத் தேவன் ஆசீர்வதிப்பதின் சான்றுகளாகப் பார்க்கின்றனர். சாதாரணமாயிருந்த ஒருவர், இரட்சிப்பின் அனுபவம் பெற்ற பின்பு செல்வ நிலைகளில் அதிகமதிகமாக உயர்ந்தார். அதைக் குறித்துச் சாட்சி சொல்லு கின்ற அவர் ஆபிரகாமைத் தேவன் ஆசீர்வதித்தது போல, தன்னையும் ஆசீர் வதித்ததாகக் கூறுவார். ஆனால், அவரிடம் பலவீடுகள், பல சொத்துகள், பல வாக னங்கள் என செல்வங்கள் விருத்தியடைந்த போதிலும், ஆபிரகாமிடமிருந்த நற்குணங்கள் எதுவும் அவரிடம் இல்லை

ஒரு மனிதன் பொருளாதார ரீதியாக அடைகின்ற உயர்வுகளையே, தேவ ஆசீர்வாதங்களின் சான்றாகச் சொல்லிக் கொண்டிருந்தால், அந்த மனிதன் இன்னும் தேவ ஆசீர்வாதத்தை அடையாளங் காணவில்லை. என்பதே அர்த்தம். தேவ உறவுக்குள் செல்கின்ற மனிதனின் பார்வை, சுவை விருப்பம், தேடல் எல்லாம் ஆவிக்கேற்றபடி மாறுதல் பெற்றுவிடும். அவன் எவ்வளவு செல்வங்கள் வைத்திருந் தாலும், இப்போது அவன் தேவ உறவு, தேவ சந்தோஷம், தேவ வார்த்தை, தேவ குணங்கள் ஆகியவற்றையே பெரிய செல்வங்களாகப் பார்ப்பான். ஏனென்றால், அவைதான் அவனை ஆத்தும ரீதியாக அதிகமாகச் சந்தோஷப்படுத்தும்.

அதனுடைய விளைவாக பணம், பொருள், அந்தஸ்து தேடலின் வேகம் குறைந்துவிடும். அவன் தேவ ஐக்கியத்தில் தன்னை மகிழ்ச்சியாக்கவும், திருப்தி யாக்கவும் பழகிக் கொள்வதால், செல்வம் சார்ந்த ஈர்ப்புகளின் வேகம் குறைந்து விடும். போதும் என்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்ற உண்மை அவனுக்குள் உறுதிப்பட்டுவிடும். இன்னும் இன்னும் செல்வ வளமை பெருகுவதை அவன் ஆசீர்வாதப் பெருக்கமாக எண்ணாமல், இன்னும் இன்னும் கர்த்தருக்குள் வளருவதையே அவன் அதிக ஆசீர்வாதமாக எண்ணுவான்.

அநேகர் தங்கள் செல்வ வளங்களையே கர்த்தருடைய ஆசீர்வாதத்தின் சான்றுகள் என்று காண்பிக்கின்றனர். தங்கள் சுபாவங்களையும், திருப்தி நிலை களையும், சாட்சி வாழ்க்கையையும் அவர்கள் ஆசீர்வாதங்களாகக் காட்ட முடிவ தில்லை. ஏனென்றால், அவர்கள் இன்னும் கர்த்தருக்குள் இருக்கும் ஆவிக்கேற்ற உன்னதச் செல்வங்களை அறிந்து, அனுபவிக்க வரவில்லை.

சிந்தனைக்கு...

ஒருவர் செல்வந்தராக வாழ, சாத்தானும் உதவ முடியும்.
ஒருவர் பரிசுத்தமாக வாழ, கர்த்தர் மட்டுமே உதவ முடியும்.

ஜூன் 5

பிரியவிடாத அன்பு

ரோமர் 8:28–39

கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரிப்பவன் யார்?

ரோமர் 8:36

கர்த்தரை விட்டு நம்மை விலகிப் போக விடாமல், நம்மைப் பிடித்து வைக்கும் மிக முக்கியமான ஒரு அனுபவம் என்ன தெரியுமா? அதுதான் தேவ அன்பை ருசித்த அனுபவம். ஒருமுறை தேவ அன்பை நம்முடைய ஆத்துமா ருசித்து விட்டதென்றால், அதன் பின்பு நம்முடைய ஆத்துமாவிற்கு அந்தத் தேவ அன்பு என்பது மிகவும் இன்றியமையாதது ஆகிவிடும். தேவ அன்பு இல்லாத ஒரு வாழ்க்கை என்பது அதற்கு மிக மிகக் கடினமாகிவிடும். எனவேதான், அப்போஸ் தலனாகிய பவுல், கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? என்று கேட்கிறான். (ரோமர் 8:36)

தேவ அன்பை ருசித்தல் என்றால் என்ன? என்ற கேள்வி முக்கியமானது. எப்படித் தேவ அன்பை ருசித்து அனுபவம் பெறுவது? அவர் நமக்கு நிறைய நிறைய நல்லது செய்வதால், அவர் நம்மை நேசிக்கிறார் என்று அறிவதா? அவர் நம்மிடம் அன்புருக நிறையப் பேசுவதால், அவர் நேசிக்கின்றார் என்று புரிந்து கொள் வதா? இது மிகவும் நுண்ணுணர்வோடு புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. நாம் கர்த்தரை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் போது, பரிசுத்த ஆவியைப் பெறு கின்றோம். (அப் 2:38) அந்தப் பரிசுத்த ஆவியில் தேவ அன்பு உள்ளது. (ரோமர் 5:5)

அந்த ஆவியினால் நம்முடைய ஆத்துமாவிற்கு ஒரு செய்தி கிடைக்கிறது. கர்த்தர் நம்மை விரும்புகின்றார். கர்த்தர் நம்முடைய ஐக்கியத்தை விரும்புகின்றார். கர்த்தர் நம்முடைய தொடர்பை விரும்புகின்றார். கர்த்தர் நம்மேல் அன்பாயிருக் கின்றார். இந்தச் செய்திதான் கர்த்தரை நோக்கி நம்முடைய மனதையும், ஆவி யையும் கொண்டு செல்கிறது. கர்த்தர் என்னையும், என்னுடைய ஐக்கியத்தையும் விரும்புகின்றார் என்ற அறிவை நாம் பெறும் போது, கர்த்தருடைய அன்பு நமக்குள் அனுபவிக்கப்படுகிறது. அந்த அன்பை விட்டுப் பிரிந்து செல்வது இலகுவான ஒன்றாயிராது.

வாழ்க்கைப் பிரச்சினைகள், பொருளாதாரப் பலவீனம், தோல்விகள், குறைவு கள் என எவை நேரிட்டாலும், கர்த்தர் என்ன விரும்புகின்றார் என்ற அறிவைப் பெற்ற இருதயம், அவரை விட்டு விலக விரும்பாது. இது ஒரு பரிசுத்த ஆவியின் கிரியை. இவ்விதம் ருசித்தபின்பு தேவ தொடர்பை விட்டும், தேவ வார்த்தையை விட்டும், தேவனுடைய கிருபையை விட்டும் நாம் விலகிச் செல்வது, மிக மிகக் கடினமான விஷயமே.

சிந்தனைக்கு...

உங்களால் பிறரை நேசிக்க முடியாமல் போனால்,
கர்த்தர் உங்களை நேசிப்பதை உங்களால் அறிய முடியவில்லை என்று அர்த்தம்.

ஜூன் 6

கிரியைகளும் பலன்களும்

ரோமர் 8:1–17

நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே.
ரோமர் 8:17

நாம் எந்த ஒன்றைச் செய்தாலும், இதைச் செய்வதால் தேவன் எனக்குப் பலன் அளிப்பார் என்ற அடிப்படையில் செய்யக்கூடாது. நாம் எந்த ஒரு நல்ல காரியத்தைச் செய்தாலும், அதனை இது என்னை அழைத்த தேவனுடைய அழைப்பின் அடிப்படையில், நான் இயல்பாகச் செய்ய வேண்டிய ஒன்று என்ற விதமாகச் செய்ய வேண்டும். தேவன் நம்மை அவருடைய பிள்ளைகளாக அழைத்திருக்கின்றார். பிள்ளைகளுக்குத் தேவன் செய்கின்ற எந்த ஒரு நன்மையும், கிரியைகளுக்குப் பலன் என்ற அடிப்படையில் இராது.

அதுபோல, பிள்ளைகள் தாங்கள் பிள்ளைகள் என்ற பொறுப்புணர்வோடு, இவ்விதம் நாம் வாழ்வது அவசியம் என்ற விதமாகச் செயல்பட வேண்டும். நாம் ஜெபித்தாலும், ஆராதித்தாலும், நல்ல ஒழுங்குகளின்படி வாழ்ந்தாலும், நற் சுபாவங்களை வெளிப்படுத்தினாலும், நற்செயல்களைச் செய்தாலும், இவை நம்முடைய ஆவிக்குரிய இயற்கையின் விளைவுகளாக இருக்க வேண்டும். ஜெபித்தால் கர்த்தர் ஆசீர்வதிப்பார், காணிக்கை கொடுத்தால் ஆசீர்வதிப்பார், நற்செயல் செய்தால் தேவன் ஆசீர்வதிப்பார் என்று நாம் நம்பலாம்.

ஆனால், இந்த விதமான பார்வை பழைய ஏற்பாட்டு ரகமான கிரியை செய்தால், தேவன் பலன் தருவார் என்ற விதமானது. ஆனால், புதிய ஏற்பாட்டில் தேவன் அப்படியல்ல. நாம் பிள்ளைகளாயிருப்பதால் அவர் நம்மை ஆசீர்வதிக்கின்றார். அதுதான் கிரியைகளைச் சாராதக் கிருபையைச் சார்ந்த ஆசீர்வாதம். நாம் பிள்ளைகளாதலால் அந்தப் பிள்ளைக்குரிய சுபாவங்களோடும், செயல்களோடும் வாழ்கின்றோம். நாம் நற்சுபாவங்களோடும், நற்செயல்களோடும் வாழ்வதின் காரணம் அப்படியிருந்தால் கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார் என்பது அல்ல. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அறியப்பட அப்படித்தான் செயல்படணும்.

ஒரு தென்னை மரத்திற்கு உரம் இடப்படுகிறது. தண்ணீர் ஊற்றப்படுகிறது. இவை யாவும் இருந்தால்தான் அந்த மரத்தில் தேங்காய்கள் காய்க்கும். ஆயினும், தென்னை மரம் தேங்காய்களைக் கொடுப்பதின் காரணம், அது தென்னைமரமாய் இருப்பதால். அது போல கர்த்தரும் நிச்சயம் நம்மை ஆசீர்வதிப்பார். ஆயினும், அவை நாம் செய்கிற கிரியைகளுக்காக அல்ல. நாம் தேவனுடைய பிள்ளைகளாகப் பிறப்பிக்கப்பட்டதால் அதற்கேற்றபடி வாழ்கின்றோம். அதே வேளையில், தேவனுக்கேற்றபடி கனிகொடுக்கும் எல்லாவற்றிற்கும் தேவ ஆசீர்வாதங்கள் உண்டு என்பதும் நிச்சயம்.

சிந்தனைக்கு...

நன்மையை எதிர்பார்த்து நல்லதைச் செய்யாதே.
நீ நல்லவன் என்பதை உறுதிப்படுத்த நல்லதைச் செய்.

ஜூன் 7

தேவ சித்தம் அறிதல்

ரோமர் 12:1–12

தேவனுடைய ... பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று ...
ரோமர் 12:2

ஒருவர் தன் குடும்பத்தில் நிகழும் ஏராளம் நிகழ்வுகளைக் குறித்து, தன்னுடைய உறவினர் ஒருவருக்கு எதையும் சொல்லமாட்டார். ஆனால், அவருக்கு ஏதவாது தீமீர் நெருக்கடி, கஷ்டம், பிரச்சினை என்றால், அவரிடம் போய் சரணாகதி ஆகிவிடுவார். இந்தப் பிரச்சினைக்கு நீங்கள்தான் ஏதாது தீர்வு காட்ட வேண்டும் என்று கெஞ்சுவார். எனவே, அந்த நபர் அந்த உறவினர் வீட்டிற்கு வந்தாலே, அந்தக் குடும்பத்தினர் இவருக்கு ஏதோ பிரச்சினை போலிருக்கிறதே என்று கூறிப் பதட்டப்படுவார்கள்.

சிலர் கர்த்தரைத் தேடுகின்ற விஷயத்திலும் இப்படியே இருக்கிறார்கள். அவர்கள் பல விஷயங்கள் செய்வார்கள். ஆனால், அவை சரியா, தவறா, அவை தொடர் பான தேவனுடைய ஆலோசனை என்ன என்றெல்லாம் சிந்திக்கவே மாட்டார்கள். ஆனால், நிலம் வாங்குதல், வீடு கட்டுதல், வியாபாரம் துவங்குதல், திருமணக் காரியங்கள் செய்தல் போன்ற விஷயங்கள் வந்த உடன், தேவ சித்தம் அறியவும், தேவ கிருபை அறியவும் அங்குமிங்கும் ஓடுவார்கள். ஏதோ எதைச் செய்தாலும் கர்த்தரைக் கேட்டே செய்கிறவர்கள் போல நடந்து கொள்வார்கள்.

தேவன் நம்முடைய ஒரு சில பிரச்சினைகளுக்கு மட்டும் தேடப்பட வேண்டி யவர் அல்ல. நாம் நம்முடைய வாழ்க்கை முழுவதையும் அவருடைய நடத்து தலுக்கு உட்படுத்தாத போது, ஒரு சில விஷயங்களில் மட்டும் அவருடைய நடத்து தல்களைப் பெற முடியாது. நாம் கர்த்தருடைய பூரண ஆளுகைக்குள் வரும் போது தான், நம்முடைய வேறு பிரச்சினைகளுக்கு கர்த்தர் நமக்குத் தீர்வு காட்டுவார். முதலாவதாகத் தேவ ஆவியினால் நாம் நடத்தப்படும் வாழ்விற்கு நம்மை அர்ப் பணிக்க வேண்டும். சிலர் குறி சொல்லுகிறவர்களிடத்தில் போவது போல, நாம் ஒரு சில பிரச்சினைகளுக்கு மட்டும் தேவ சித்தம் தேடிச் செல்வது சரியல்ல.

கர்த்தர் நம்முடைய முழு வாழ்க்கையையும் ஆளுகின்ற ஒருவராக இருக்க வேண்டும். அப்போதுதான் அவருடைய விருப்பங்களை அறிகின்ற ஒரு அறிவை நாம் பெற முடியும். தேவனை அறிகின்ற அறிவின் அனு பவத்தில் நம்மைத் தேவன் நடத்தினால்தான், சின்ன பெரிய விஷயங்களில் நாம் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை அறிய முடியும். திடீரென்று போய் ஒரு விஷயத்தில் ஆலோ சனை கேட்பது அல்ல, நாம் எப்போதுமே தேவ ஆலோசனையின்படி வாழ்கின்ற ஒரு வாழ்க்கை முறைக்குள் முதலாவது வரவேண்டும்.

சிந்தனைக்கு...

தேவனுடைய வழிகளில் நடந்து பழகினால்,
தேவனுடைய சித்தத்தை அறிந்திடவும் பழகுவோம்.

ஜூன் 8

மனம்விட்டுப் பேசுதல்

சங்கீதம் 102:1–20

என் பெருமூச்சின் சத்தத்தினால்.
சங்கீதம் 102:5

தாவீதிற்கு ஒரு பழக்கம் இருந்தது. அது என்னவென்றால், எந்தப் பிரச்சினையானாலும் ஆண்டவரிடம் போய் நெடுநேரம் பேசுதல். நம்மில் அநேகர் ஆண்டவரிடம் ஜெபத்தில் பேசினாலும், இதைச் செய்வீராக, அதைச் செய்வீராக என்ற விதமாகவே பேசுகிறோம். ஆனால், தாவீது பின்பற்றின முறை வித்தியாசமானது. அவன் தான் சொல்ல விரும்பினவைகளையும், தான் தனக்குள் உணர்ந்தவைகளையும் தேவனிடத்தில் பேசிக்கொண்டேயிருப்பான்.

மனிதர்களிடம் போய் நமக்கு நடந்தவைகளையும் நடக்கின்றவைகளையும் சொல்லும் போது, சற்று நேரம் மனம் ஆறுதலாய் உணரும். ஆனால், எதுவும் மாறாது. ஆனால், ஆண்டவரிடம் போய் மனதில் உள்ளவைகளைக் கொட்டித் தீர்த்தால் ஆறுதல் மட்டுமல்ல. அதற்கொரு தீர்வின் பாதையும் தோன்றும். அநேகருக்குத் தேவனிடம் மன்றாடத் தெரியும். ஆனால், மனம் விட்டுப் பேசத் தெரியாது. அநேகர் மனம் விட்டுப் பேசுவதற்கு மனிதர்களிடம் போகிறார்கள். ஆனால், மன்றாடுவதற்கு மட்டும் தேவனிடம் செல்கின்றார்கள்.

ஆனால், தாவீது மன்றாட மட்டும் அல்ல, மனம் விட்டுப் பேசுவதற்குத் தேவனிடம் செல்வான். தாவீது எழுதிய சங்கீதங்களையெல்லாம் நீங்கள் கவனமாக வாசித்தால், அதனைக் கண்டறிய முடியும். தேவ ஐக்கியத்தை வளர்ப்பது மன்றாட்டு ஜெபம் அல்ல, மனம் விட்டுப் பேசும் ஜெபமே அது. என்ன வித்தியாசம். மன்றாடுதல் என்பது கெஞ்சிக் கெஞ்சிக் கேட்பது. மனம் விட்டுப் பேசுதல் என்பது, மன உணர்வுகளையெல்லாம் தேவனிடம் சொல்லிக் காட்டுவது. வாழ்வில் நடக்கும் அனைத்துக் காரியங்களையும் தேவனிடம் மனம் விட்டு திரும்பத் திரும்பப் பேசும் போது, மனமும் தேறுகிறது. தேவ ஐக்கியமும் வளருகிறது. பிரச்சினைக்குத் தீர்வும் தோன்றுகிறது.

இப்படிச் செய்யும், அப்படிச் செய்யும் என்பது விண்ணப்பம் செய்தல். இப்படி இப்படி நடந்தது ஆண்டவரே, இப்படி இப்படி நடக்கிறது ஆண்டவரே, என்று மனதிலுள்ளதை வெளிப்படுத்துதல் மனதைக் கர்த்தருக்குக் காண்பிப்பதாகும். இப்படி இப்படி உணருகின்றேன், இப்படி, இப்படிப் பயப்படுகின்றேன், இப்படி இப்படி யோசிக்கிறேன், இப்படி இப்படிப் பார்க்கின்றேன் என்ற விதமாகக் கர்த்தரிடம் சொல்லிக் கொண்டிருந்தாலே போதும். அந்தச் சூழலில் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை ஆண்டவர் அறிவார்.

சிந்தனைக்கு...

நன்மை பெறத் தேவனிடம் அழுது காட்ட வேண்டாம்.
அவரோடு நமக்கிருக்கும் உறவைக் காட்டினால் போதும்.

ஜூன் 9

கோபமும் நேர நஷ்டமும்

சங்கீதம் 37:1–18

கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு.
சங்கீதம் 37:8

கோபம் ஏற்படுத்தும் நஷ்டங்களில் முக்கியமான ஒன்று நேர நஷ்டம். கோபம் கட்டுப்படுத்தப்படாவிட்டால் நீண்ட நேர வாக்குவாதம் ஏற்படும். வாக்கு வாதங்களும், கோபதாபமான பேச்சுகளும் மனதில் கசப்பையும், எரிச்சலையும், சோர்வையும், குழப்பத்தையும் ஏற்படுத்தும். அதனுடைய விளைவாக நேர்மறை யாகச் சிந்திப்பதற்குப் பிரச்சினை ஏற்படும். செய்து முடிக்க வேண்டிய பொறுப்பு களை முடிக்க முடியாமல் மனம் செயலற்று இருக்கும். இதனுடைய விளைவாக மிகுந்த நேரங்கள் நஷ்டமாகும்.

சில நேரங்களில் சிலருடைய வார்த்தைகளும், சுபாவங்களும், தரமற்ற செயல்களும் மிகுந்த கோபத்தை வரவழைக்க தக்கவை. கோபத்தைக் கட்டுப்படுத்தி சும்மாயிருந்தால், சுய கௌரவத்தை இழப்பது போல இருக்கும். ஆனால், சற்று நேரம் சுய கௌரவத்தை இழப்பதைவிட, ஒரு நாளை இழப்பது அதிக நஷ்ட மானது. ஏனென்றால், வாக்குவாதங்களால் மனதில் ஏற்படும் எரிச்சல்கள், நீண்ட நேரம் எதையும் செய்ய அனுமதிக்காது.

ஆனால், கோபத்தின் ஆளுகைக்குள் வருகின்ற மனிதன், லாபநஷ்டம் பார்க்கமாட்டான். நடந்து முடிந்த பின்புதான் அற்பநேரம் கோபத்திற்கு வழி விட்டதால், இவ்வளவு பெரிய நஷ்டங்கள் ஏற்பட்டுள்ளதே என்று எண்ணித் துக்க மடைவான். கோபத்தை அடக்காமல் அதன் வழியே விட்டு விட்டால், எவ்வளவு நேரங்களைத் தேவையின்றி இழக்க நேரிடும் என்ற எச்சரிக்கையுணர்வும், விழிப்புணர்வும் தேவை. சாத்தான் நாம் நம்முடைய நேரங்களை இழக்கும் வித மாகப் பிறரைக் கோபத்தின் கருவிகளாகப் பயன்படுத்துவான். சில நேரம் நமக்கு அடுத்திருக்கின்றவர்களைக்கூட சாத்தான் கோபத்தின் அம்புகளாகப் பயன் படுத்திவிடுவான்.

கர்த்தர் நமக்குச் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், கடமையாற்றும் கரிசனையையும் தருவார். ஆனால், பிறருடைய கோபமூட்டும் செயல் மூலம், சாத்தான் அவற்றை நாசமாக்கிவிடாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். முதலா வதாக, எளிதாக நாம் கோபமடையாதபடி, தேவ உறவின் மூலம், தேவ சமாதானத் தால் மனதை ஆளுகை செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, அற்ப நேரக் கோபம் ஏற்படுத்தும் நீண்ட நேரத் தீமையான பின்விளைவுகளைக் குறித்த எச்சரிக்கையுணர்வு வேண்டும்.

சிந்தனைக்கு...

கோபம் உனக்குள் ஏற்படுவது பாவமல்ல,
அந்தக் கோபம் உன்னை வசப்படுத்துவதே பாவம்.

ஜூன் 10

முதல் கனம்

1 சாமுவேல் 15:13–23

கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்றான்.
1 சாமுவேல் 15:13

நான் சிறுவனாக இருந்தபோது ஒருமுறை உறவினர் ஒருவருடைய வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு வேறு சில உறவினர்களும் வந்திருந்தனர். மதியம் சாப்பாடு தயார் ஆனதும், எல்லோரோடும் சேர்ந்து நான் நன்றாகச் சாப்பிடப்போகிறேன் என்று கற்பனை செய்தேன். ஆனால், சாப்பாட்டு வேளை வந்த போது என்னை அழைக்கவில்லை. அவர்களெல்லாரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டு முடித்தனர். அதற்கு பின்னர் என்னைச் சாப்பிட அழைத்தனர். அவர்கள் சாப்பிட்ட அனைத்து உணவு அயிட்டங்களும் எனக்கும் தரப்பட்டது. ஆனால், அவர்களுக்கு முதலாவது, எனக்கு இரண்டாவது என்ற அவர்களின் மனநிலை, எனக்கு மிகவும் வருத்தமாயிருந்தது.

நம்மில் அனேகர் கர்த்தருக்கு நல்ல முக்கியத்துவம் தருகின்றோம். ஆனால், அது முதலிடத்தில் இல்லை. ஜெபம், வேத வாசிப்பு, ஆராதனை, வசனம் கேட்டல், விசு வாசித்தல், உயர்வாக நினைத்தல், காணிக்கை என பல காரியங்களைச் செய் கின்றோம். இவை யாவும் கர்த்தரைக் கனப்படுத்தும் விஷயங்களே. ஆயினும், கர்த்தருடைய ஐக்கியம், கர்த்தருக்கேற்ற வாழ்க்கை முறை, சுபாவரீதியான காரி யங்கள் போன்றவற்றை முதலிடத்தில் வைப்பதில்லை.

சிலர் நன்றாக ஆராதிக்காமலில்லை. தாராளமாக அவர்கள் காணிக்கை கொடுக்காமலில்லை. தவறாமல் அவர்கள் ஜெபிக்காமலில்லை. ஆயினும், பணம், செல்வம், சுயகௌரவம் போன்றவைதான் முதலிடத்தில் இருக்கும். பணம் தேடும் வழிகளுக்கும், கௌகவுரவம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்கும் முதலிடம் கொடுத்து விட்டு, தேவனுடையப் போதனைகளை பின்பற்றுவதற்கு இரண்டாம் இடம் கொடுத்தால், தேவன் அதை விரும்பமாட்டார்.

சவுல் அமலேக்கியரோடு சண்டையிட்டுச் ஜெயித்தான். தேவன் தந்த வெற்றியைக் கொண்டாட அவன் ஜெயக் கோபுரம் நட்டான். ஆயினும் அவன்மேல் தேவன் மனவருத்தமாயிருந்தார். (1 சாமுவேல் 15:11) ஏனென்றால், கர்த்தருக்கு வழிபாட்டு ரீதியான கனத்தை அவன் கொடுத்தான். ஆனால், அமலேக்கியர் விஷ யத்தில் தேவன் சொன்னபடி செய்வதற்கு முதலிடம் தரவில்லை. நம்முடைய சபை ஆராதனைகளும், ஜெபக் கூட்டப் பங்கேற்புகளும், காணிக்கை வழங்கல்களும் நமக்கு ஆன்மிக திருப்தியைத் தரலாம். ஆனால், தேவனுடைய வார்த்தைகளுக்கு முதலிடம் கொடுத்து வாழ்வதே முக்கியமானது.

சிந்தனைக்கு...

கர்த்தரை முதலிடத்தில் வைக்கத் தவறினால்,
சாத்தான் அந்த இடத்தைப் பிடித்து நம்மைத் தவற வைப்பான்.

ஜூன் 11

திருப்தி எதன்மேல்?

நீதிமொழிகள் 22:1–29

திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும்.
நீதிமொழிகள் 22:1

குறிப்பிட்ட ஒருவருக்கு, அவர் வேலை செய்யும் கம்பெனியில் ஐம்பதினாயிரம் சம்பளம் கிடைத்தது. அதே வேலைக்கு, இன்னொரு கம்பெனியில் 75000 சம்பளம் கொடுக்க முன்வந்தார்கள். அவரோ அதை ஏற்கவில்லை. இது என்ன உங்களுக்கு பண ஆசையே கிடையாதா என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர் பண ஆசை எல்லாம் உண்டு. ஆனால், திருப்தி மேல் தான் ரொம்ப ரொம்ப ஆசை என்றார். 50000 சம்பளம் கொடுத்த கம்பெனி வேலையில் அவருக்கு ஒரு திருப்தி இருந்தது. அதற்காக அவர் குறைவான சம்பளத்தை ஏற்றுக்கொண்டார்.

அநேகர் எந்த ஒரு விஷயத்திலும் எவ்வளவு வருமானம் கிடைக்குமோ, அந்த அடிப்படையில்தான் திருப்தியடைகின்றனர். அவர்களைத் திருப்திப்படுத்துவது பணத்தின் அளவு. ஆனால், சிலர் அப்படியல்ல, எந்த ஒரு விஷயத்திலும் அவர்கள் குறிப்பிட்ட ஒரு தரத்தையும், கொள்கையையும் முக்கியமாக எண்ணுகின்றனர். அதற்காகப் பண வருவாய் குறைவாயிருந்தாலும் கவலைப்படுவதில்லை. ஒரு உண்மையான கிறிஸ்தவர், எந்த ஒன்றிலும் சத்தியத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அந்த சத்தியத்தினால் அவர் திருப்தியடைய நாட வேண்டும்.

நமக்கு எவ்வளவு சம்பாதிக்க வாய்ப்புக் கிடைக்கிறது என்பதை அல்ல. நமக்கு எவ்வளவு ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது என்பதை அல்ல. எந்த அளவிற்கு ஒரு விஷயத்தில் நாம் தேவனைப் பிரியப்படுத்தி, சத்தியத்தைச் சார்ந்து வாழ முடிகிறது என்பதையே பார்க்க வேண்டும். சில வேலை வாய்ப்புகள் தங்க முட்டையிடும் வாத்து போன்றவை. சில தொழில்கள் பணம் காய்ச்சி மரம் போன்றவை. ஆனால், அங்கே உண்மை, உத்தமம், நேர்மை போன்றவற்றிற்கு இடமே கிடையாது.

ஆனால், கர்த்தருடைய பிள்ளைகள் பணத்தின் அளவில் அல்ல. உண்மையில், நேர்மையில், நீதியில் மகிழும் மனநிலையுடையவர்களாக இருக்க வேண்டும். வருவாய் குறைவாக இருந்தாலும் உண்மையாயிருக்கவும், நேர்மையாயிருக்கவும் எங்கே வாய்ப்பு உண்டோ, அங்கேதான் அவர்கள் திருப்தி அடைய வேண்டும். ஒருவர், கர்த்தர் எனக்கு மிக நல்ல சம்பளம் தருகின்ற ஒரு வேலையை தந்ததாகச் சாட்சி சொன்னாராம். ஆனால், அது என்ன வேலை? மதுபான விடுதியையும், தரங்கெட்ட நடன சாலையையும், ஒழுக்கமற்ற இரவு கிளப்பையும் நடத்துகின்ற ஒரு நவீன நட்சத்திர ஓட்டலில் வேலை. ஆனால், இது போன்ற வேலை கர்த்தரிடத்திலிருந்து வந்ததாக இருக்கவே இருக்காது.

சிந்தனைக்கு...

சரியற்ற வழியில் சம்பாதிக்கிறவனின் செல்வ
எல்லை பெருகும். ஆனால், திருப்தியின் எல்லை சுருங்கும்.

ஜூன் 12

ஐக்கியம் இல்லை

கொலோசெயர் 3:1–17

நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம்.
கொலோசெயர் 3:17

மிக நல்ல வேலையில் இருக்கும் ஒருவர், விதவையான தன் தாயை, மிக அருமையான ஒரு வீட்டில் தங்க வைத்து, மாதம் தோறும் கணிசமான ஒரு தொகையை அனுப்பி வைக்கின்றார். தினமும் டெலிபோன் செய்து அவர்களை விசாரிக்கின்றார். ஆன்லைனில் அவர்களுக்குத் தேவையான பொருட்களை ஆர்டர் செய்து அனுப்புகின்றார். இவரை ஒரு நல்ல மகன் என்பீர்களா? இல்லை. இவர் ஒரு சுயநலமி. தன் குடும்பத்தோடு தாய் இருந்தால், தனக்குச் சுதந்திர மாயிராது என்பதற்காகவே தாயைத் தூரப்படுத்தி, தனித்துத் தங்க வைத்திருக் கின்றார். தாய்க்குக் கொடுக்க வேண்டிய நேரடிப் பராமரிப்பையும், ஐக்கியத்தையும் கொடுக்க அவருக்குக் கவலையில்லை.

ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சிலருடைய நிலைமை இதுவே. அவர்கள் ஆலயத்தில் போய் கர்த்தரை மிக நேர்த்தியாக ஆராதிப்பார்கள். கர்த்தருக்குக் காணிக்கை தாராளமாகக் கொடுப்பார்கள். மிஷனரி ஸ்தாபனங்களைச் சிறப்பாகத் தாங்குவார்கள். பல தேவ ஊழியர்களை மிகுதியாய்க் கனப்படுத்துவார்கள். ஆனால், தங்களின் தனிப்பட்ட வாழ்க்கையில், கர்த்தருடைய ஆளுகையை ஏற்கமாட்டார்கள். தங்களைத் தேவன் தம்முடைய வழிகளில் நடத்துவதற்கேற்றபடி, தங்களை அர்ப்பணிக்கமாட்டார்கள்.

தங்களின் மனதின்படியே வாழ்க்கையின் எல்லா விஷயங்களையும் செய்து விட்டு, ஆவிக்குரிய விஷயங்களை ஒரு தனிப் பகுதியாக வைத்துச் செயல்படுவது ஆவிக்குரிய வாழ்க்கை அல்ல. நாம் தொழில் செய்தாலும், வேலை செய்தாலும், குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும், நாம் தேவ ஆளுகைக்கும் வழிநடத்து தலுக்கும் உட்பட்டவர்களாகவே இருக்க வேண்டும். தேவ உறவுடன் வாழ்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. தேவ பக்திக்காக பல காரியங்களைச் செய்வது, கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல.

சிலர் தங்களின் பக்தியைக் காட்டும் இடமாகக் கோயில் என்ற இடத்தைத் தேர்வு செய்துள்ளனர். அங்கு போனால். பக்தி பக்தி எல்லாம் பக்தி. ஆனால், வீட்டிற்கு வந்துவிட்டாலோ சுயம், சுயம், எல்லாம் சுயம். சிலர் கர்த்தருக்காக மாதந்தோறும் கணிசமான ஒரு தொகையைத் தனியாகப் பிரித்து வைத்து விடுவார்கள். ஆனால், தங்களின் நேரத்தில் சிறுபகுதியைக்கூட கொடுக்கமாட்டார்கள். தேவ ஐக்கியத் தோடும் தேவ ஆளுகையோடும் வாழ்வதே உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை.

சிந்தனைக்கு...

தேவ ஐக்கியம் தேடாதவர், எவ்வளவு
காணிக்கை தந்தாலும், தேவ நன்மை தேடி வராது.

ஜூன் 13

வாக்குதத்தமா, விசுவாசமா?

கலாத்தியர் 4:1–7

நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால் ...
கலாத்தியர் 4:6

இந்த வருடம் உங்களை கர்த்தர் இப்படி ஆசீர்வதிக்கப் போகிறார். இந்த மாதம் கர்த்தர் உங்களை அப்படி ஆசீர்வதிக்கப்போகிறார். இந்த விதமாகப் போதகர்கள் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு வாக்குத்தத்தம் கொடுக்கின்றனர். ஆனால், புதிய ஏற்பாட்டு சத்தியம் வேறுவிதமாக உள்ளது. புதிய ஏற்பாட்டின்படி, நாம் விசுவாசம் சார்ந்துதான் தேவனுடைய நன்மையைத் தேட வேண்டும். நாம் தேவனுடைய பிள்ளைகளாக மறுபிறப்பின் அனுபவம் பெற்றிருந்தால், தேவன் நம் தந்தை என்ற விசுவாசத்தோடு, அவரிடம் நன்மை தேட வேண்டும்.

பிள்ளைகள், அம்மா அல்லது அப்பா தங்களுக்கு அளிக்கப்படும் வாக்குறுதியைச் சார்ந்து, அனுதினத் தேவைகளுக்காக நம்பிக்கையோடு வாழ்வதில்லை. அவர்கள், அப்பா பிள்ளை என்ற உறவின் அடிப்படையில், தங்கள் தேவைகளைப் பெற்றோர் சந்திப்பார்கள் என்ற நம்பிக்கையோடு வாழ்கின்றனர். நாமும் தேவனுடைய பிள்ளைகள். பிள்ளைகளென்றால் தந்தையாகிய தேவன், நம்மை நடத்துவார் என்ற விசுவாசத்தோடு வாழ்வதுதான் ஆவிக்கேற்றது.

ஒருவேளை, அம்மா அப்பா பிள்ளைகளுக்கு எதையாவது செய்யப்போவது குறித்து வாக்குத்தத்தம் கொடுத்தாலும், அதை நேரடியாகத்தானே செய்வார்கள். அதை வேறு ஒருவர் மூலம் கொடுக்கமாட்டார்களே. அப்படியானால், நாம் தேவனுடைய பிள்ளைகளென்றால் தேவன் நமக்கு நேரடியாகத்தான் வாக்குத்தத்தம் தருவார். நாம் ஏதாவது ஒரு தேவ ஊழியர் வழியாக வாக்குத்தத்தம் பெற்றிடக் காத்திருப்பது சரியல்ல. முதலாவது நாம் வெறும் தேவ பக்தர்கள் என்ற விதமாக வாழாமல், தேவனுடைய பிள்ளைகள் என்ற நிலைமையை அடைய வேண்டும்.

பல கிறிஸ்தவர்கள், தேவன் அருளிய அப்பா பிள்ளை என்ற உறவின் ஆசீர்வாதத்தைப் பயன்படுத்தவில்லை. அவர்கள் பக்தர்கள் என்ற பொதுவான நிலைமையிலேயே தங்களைப் பார்க்கின்றார்கள். ஏனென்றால், முதலாவது மனந்திரும்பி, இரட்சிப்பின் அனுபவம் பெற வேண்டும் என்பதைக் குறித்துக் கவனம் செலுத்துவதில்லை. முதலாவது, மறுபடியும் பிறந்த அனுபவம் பெற வேண்டும். அப்போதுதான் தங்களைத் தேவனுடைய பிள்ளைகளாகப் பார்க்க இயலும். அப்போதுதான், பிள்ளைகளாகிய நாம் தந்தையாகிய தேவன்மேல் விசுவாசம் வைத்து, ஆசீர்வாதங்களைப் பெற முடியும்.

சிந்தனைக்கு...

தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்பதற்கு
அவருடைய பிரசன்னமே வலிமையான வாக்குத்தத்தம்.

ஜூன் 14

சுவிசேஷத் தாகம்

லூக்கா 24:34-53

நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கின்றீர்கள்.
லூக்கா 24:48

ஒரு பெரிய அலுவலகத்தில் பணிபுரிந்த கிறிஸ்தவர் ஒருவர், நல்ல ஆவிக்குரிய வைராக்கியம் கொண்டவர். அலுவலகத்திற்கு வந்தாலும் ஒரு ஐந்து நிமிடமாவது யாருக்காவது, போய் சுவிசேஷம் சொன்னால்தான், அவருக்குத் திருப்தி ஏற்படும். இல்லையென்றால், இன்று ஒரு ஆத்துமாவைச் சந்திக்கவில்லையே என்று துக்கத்தோடிருப்பார். ஆனால், அவரை அறிந்த ஒருவர், அவரைக் குறித்துக் கொண்டிருந்த சாட்சி வித்தியாசமானது. ஐந்து நிமிடமாவது இயேசுவைப் பற்றி யாருக்காவது சொன்னால்தான், இவருக்குத் தூக்கம் வருகிறது. ஆனால், ஒரு ஐந்து நிமிடமாவது, ஒரு நல்ல கிறிஸ்தவராக இவர் தன்னைக் காண்பிக்க வில்லையே என்று, எங்களுக்கு துக்கமாயிருக்கிறது என்றாராம்.

சிலர் இயேசுவைக் குறித்து யாருக்காவது சொல்ல வேண்டும் என்பதை, ஒரு கிறிஸ்தவக் கடமையாக எண்ணுகிறார்கள். இது ஒரு நல்ல மெச்சுதலுக்குரிய பழக்கம்தான். ஆனால், அநேகர் கிறிஸ்தவர்கள் என்று நாம் நம்மைச் சொல்லும் போது, நம்மிடம் ஒரு கிறிஸ்தவச் சாட்சி இருக்க வேண்டும் என்று அறியவில்லை. கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் ஒரு அடையாளம் நம்மிடம் காண வேண்டும் என்பதைப் பலர் சீரியஸாகச் சிந்திக்கவில்லை.

கிறிஸ்துவைப் பிறருக்கு அறிவிப்பது கிறிஸ்தவர்களின் கடமை. அதே வேளையில், கிறிஸ்துவால் நமக்கு என்ன ஏற்பட்டிருக்கின்றது என்பதையும் பிற ருக்குக் காட்ட வேண்டும். நீங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்று கட்டளை கொடுத்த இயேசு, நீங்கள் எனக்குச் சாட்சியாயிருக்க வேண்டும் என்றும் சொன்னார். (அப்போஸ்தலர் 1:8) பிரசங்கமும், சாட்சியும் கலந்து செல்லவேண்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கின்றவரின் வாழ்க்கையில் சுவிசேஷத்தின் பிரதி பலிப்பைக் காணாமல் போனால், அந்தச் சுவிசேஷ அறிவிப்பு ஒரு வெறும் மத விளம்பரமாகவே இருக்கும்.

சிலர் இரயில் பயணம் செய்யும் போதும், பஸ் பயணம் செய்யும்போதும், எங்கு போனாலும் சில சுவிசேஷப் பிரதிகளை அவசியம் வைத்திருப்பார்கள். இது மிகுந்த பாராட்டிற்குரிய ஒன்றே. அதே வேளையில், சுவிசேஷம் அறிவிக்க ஆத் தாகம் இருந்தும், சுவிசேஷத்தின் மகிமையை வாழ்க்கையில் பிரதிபலிக்காமல் போனால், ஜனங்கள் நம்மை மத விளம்பரதாரர்களாகப் பார்ப்பார்களேயன்றி, கிறிஸ்துவினால் சாட்சிகளாக்கப்பட்டவர்களாகப் பார்க்கமாட்டார்கள்.

சிந்தனைக்கு...

சுவிசேஷம் சொல்வது நமது கடமை. அந்தக்
கடமையைச் செய்ய சுவிசேஷத்தால் நாம் பெற்றதைக் காண்பிக்கணும்

ஜூன் 15

எல்லா இடங்களிலும்

சங்கீதம் 139:1–24

என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் ...
சங்கீதம் 139:2

ஒரு முதலாளி தன்னுடைய தொழில் கூடத்தை நிர்வாகம் செய்வதற்கு நியமித்த நபரிடம், நீங்கள் எனக்குத் தினமும் எட்டுமணி நேரங்கள் உண்மையும் நேர்மையுமாய் நடந்தால் போதும் என்றாராம். ஏனென்றால், அவருடைய தினசரி அலுவலக நேரம் எட்டு மணி நேரங்களே. அந்த முதலாளிக்கு மற்ற 16 மணி நேரங்கள் அவர் எப்படியிருந்தாலும் கவலையில்லை. ஆனால், தேவன் அப்படி அல்ல. அவர் நம்மிடம் 24 மணி நேர உண்மையை எதிர்பார்க்கின்றார்.

சிலர் குறிப்பிட்ட சில நேரங்களைப் பக்தி நேரங்களாகக் குறிப்பிட்டு வைத்திருப்பார்கள். அந்த நேரங்களில் அவர்கள் தேவ பயத்தோடும், தேவ பக்தி யோடும், பரிசுத்த உணர்வோடும் காணப்படுவார்கள். ஆனால், பிறநேரங்களில் எந்த ஒரு பக்தி உணர்வும், பய உணர்வுமின்றி, எல்லோரைப் போல வாழ்வார்கள். பல ஆண்டுகளாகத் திருச்சபைக்கு ஒருவர் ஒழுங்காக வந்து, பக்தியோடு நடந்து கொள்வாராம். அவரைக் குறித்து ஒருவர், இவர் இதுவரை நம் சபையில் எந்தத் தப்பும் செய்ததில்லை என்றாராம். அதைக் கேட்ட இன்னொருவர் அவர் தப்புச் செய்யாத ஒரே இடம் திருச்சபைதான் என்றாராம்.

சிலர் திருச்சபைச் சூழல்களிலும், ஊழியச் சூழ்நிலைகளிலும் மிக மிகப் பரி சுத்த உணர்வோடும், நற்சுபாவங்களோடும் காணப்படுவார்கள். ஆனால், பணி புரியும் இடங்களிலும், தொழில் செய்யும் இடங்களிலும், குடும்பச் சூழ்நிலைகளிலும் முற்றிலும் வித்தியாசமாயிருப்பார்கள். சிலர் கர்த்தர் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தாழ்மையோடும், எளிமையோடும் நடந்து கொள்வார்கள். ஆனால், பிற மனிதர்கள் சம்பந்தமான விஷயங்களில் பெருமையோடும், அகம்பாவத்தோடும் நடந்து கொள்வதில், எந்தக் குற்றத்தையும் உணர மாட்டார்கள்.

ஆனால், தேவன் எங்கும், எதிலும், எவரிடத்திலும், நம்முடைய நடத்தைகள் தமக்கேற்றபடியாக இருக்கிறதா என்பதைப் பார்ப்பார். நம்முடைய வாழ்க்கையின் ஆன்மிகப் பகுதிகளில் மட்டுமல்ல. எல்லா இடங்களிலும் நம்முடைய சுபாவங் களையும், மனநிலைகளையும், ஒழுங்குகளையும் அவர் கவனிக்கின்றார். நாம் வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும், கர்த்தரைப் பிரியப்படுத்துகின்ற ஒரு மனநிலமையோடு வாழ்வதையே, கர்த்தர் விரும்புகின்றார். சபையில் நம்மைப் பார்க்கின்ற கர்த்தர், பிற இடங்களில் நாம் எப்படி என்பதையும் கவனிக்கின்றார்.

சிந்தனைக்கு...

கடவுளைக் காண கோயிலுக்குச் செல்வது அல்ல.
கடவுளை நம்மிடம் காண்பிக்க எங்கும் செல்வதே கிறிஸ்தவம்.

ஜூன் 16

மனதில் பின்மாற்றம்

அப்போஸ்தலர் 7:39–54

தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி.
அப்போஸ்தலர் 7:39

சிலர் ஆவிக்குரிய வாழ்க்கையில் பின்மாற்றம் காண்கின்றனர். சிலர் ஆவிக்குரிய அனுபவங்களை விட்டு பின்வாங்கிப் போகின்றனர். இப்படி பின் மாற்றம் கண்டவர்களும், விசுவாசத்தை விட்டுப் பின்வாங்கிப் போனவர்களும், கிறிஸ்தவத்தை விட்டே விலகிப் போய்விட்டார்கள் என்று அர்த்தம் அல்ல. இவர் களில் அநேகர் வழக்கம் போல சபைகளுக்குச் செல்வார்கள். அவர்கள் வழக்கம் போல கிறிஸ்தவ நடவடிக்கைகளில் இருப்பார்கள். இவர்களில் சிலர் வழக்கம் போல கிறிஸ்தவ ஊழியங்களைச் செய்வார்கள். ஆனால், அவர்கள் தங்களின் மனதில் பின்மாற்றம் கண்டதை அறிவார்கள்.

கடந்த காலங்களைப் போல, பாவம் செய்யாமல் பரிசுத்தமாக வாழவேண்டும் என்ற கொள்கை, இப்போது அவர்களுக்கு கிடையாது. அவர்கள் பாவத்தை மேற்கொள்ளவோ, பாவத்திற்கு எதிராகச் செயல்படவோ எந்த தீவிரமும் காட்டுவ தில்லை. அவர்கள் சிறந்த குணங்களோடு வாழ்வதற்காக எந்தக் கரிசனையும் காட்டுவதில்லை. அவர்கள் தேவ ஐக்கியத் தேடலிலோ தேவனுக்குரிய காரியங் களிலோ எந்த விசேஷக் கரிசனையும் கொள்வதில்லை.

ஆனால், அவர்கள் சபைகளுக்கு வருவார்கள். வழக்கம் போல பல பக்திக் காரியங்களோடு தங்களை இணைத்துக் கொண்டிருப்பார்கள். குடும்ப ஜெபம் செய்வார்கள். அவர்கள் ஊழியமும் செய்வார்கள். அவர்களைப் பார்க்கும் பலர், அவர்கள் வழக்கம் போல ஆவிக்குரியவர்களாக இருப்பதைக் காண்பார்கள். ஆம், பின்மாற்றம் கண்ட எல்லோரும், கிறிஸ்தவ நடவடிக்கைகளை விட்டு வெளியேறுவதில்லை. ஆனால், அவர்கள் கனிகளற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் சிரமப்பட்டுத் தங்களைப் பக்தியானவர்களாகக் காண்பித்துக் கொண் டிருப்பார்கள். அவர்கள் கழுகுகளைப் போல தோற்றமளித்தாலும், ஆவிக்குரிய ரீதியாக உயரத்தில் பறக்க இயலாத கோழிகளைப் போன்றவர்களே.

இன்று சபைகளில் இவ்விதமான பின்மாற்றக்காரர்கள்தான் ஏராளமாக உள்ளனர். இவர்கள்தான் பலருக்கு இடறுதலாக இருப்பார்கள். ஏனென்றால், இவர்கள் கிறிஸ்தவ நடவடிக்கைகளோடு காணப்பட்டாலும், இவர்களிடம் மாய் மாலமே மேலோங்கி நிற்கும். இவர்களைப் பார்க்கின்றவர்கள், ஏன் இவ்வளவு பக்தி யிருந்தும், நற்குணம் எதுவும் இல்லாமலிருக்கின்றார்கள் என்று யோசிப்பார்கள். இவர்களால் கர்த்தருடைய நாமம் பலர் நடுவில் தூஷிக்கப்படும்.

சிந்தனைக்கு...

பரிசுத்தமான சிலரைக் கோயிலில் பார்ப்பதும் கடினம்.
பாவிகளான பலரைக் கோயிலில் பார்க்காமல் இருப்பதும் கடினம்.

ஜூன் 17

போகவிடாத அனுபவங்கள்

எபிரெயர் 10:19–39

நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல்.
எபிரெயர் 10:39

நம்முடைய ஆவிக்குரிய நிலமையை நாம் தக்க வைக்கப் பல போராட்டங்களைச் சந்திக்க நேரிடும். பல்வேறு விஷயங்கள் தேவ சமுகத்திலிருந்து விலகிப் போகும்படியான அழுத்தங்களை நமக்கு கொடுக்கும். ஒரு தேவனுடைய பிள்ளைக் கெதிராக உலகம், பண ஆசை, பொருளாசை, இச்சை, சுய கவுரவம், சுக ஜீவித ஆசை, தவறான பொழுதுபோக்கு என பல விஷயங்கள் போராடும். அவற்றைத் தேவ கிருபையோடும், தேவ பலத்தோடும் எதிர்கொண்டு ஜெயிக்க வேண்டும்.

தேவ பிரசன்னத்தை விட்டு விலகி வரத்தூண்டுகின்ற விசைகளை மேற்கொள்ள, வெறும் பக்தி வைராக்கியமும் சுய தீர்மானமும், விடாப்பிடித்தனமும் போதாது. அவர்களுக்குச் சில ஆவிக்குரிய அனுபவங்கள் வேண்டும். அந்த ஆவிக்குரிய அனுபவங்கள் அவர்களிடமிருந்தால், அவை அவர்களைத் தேவ சமூகத்தை விட்டு விலக விடாது. உண்மையான மனந்திரும்புதலைக் கண்டு, மறுபிறப்பின் அனுபவம் பெற்றவர்கள், கர்த்தரிடத்திலிருந்து சில ஆவிக்குரிய அனுக்கிரகம் பெறுவார்கள். அவைதான் எல்லாப் பாவத்தின் இழுவைகளையும், உலகத்தின் கவர்ச்சிகளையும் சுயத்தின் செயல்பாடுகளையும் மேற்கொள்ள அவர்களுக்கு உதவும்.

கர்த்தரை இரட்சகராகப் பெற்றுக் கொண்டவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுவார்கள். அந்தப் பரிசுத்த ஆவியை ஆத்துமாவில் உணருகின்றவர்கள், கர்த்தர் தங்களை நேசிப்பதை உறுதிப்படுத்த முடியும். அந்தப் பரிசுத்த ஆவியே தேவ அன்பின் சான்றாக உள்ளது. (ரோமர் 5:5) இந்தத் தேவ அன்பை ருசித்த அனுபவம் உடையவர்கள், பாவம் பல்வேறு விதங்களில் கவர்ந்திழுக்கும் போது, அதனை எதிர்கொள்ளும் திறன் பெற்றவர்களாயிருப்பார்கள். இரண்டாவதாக, இரட்சிக்கப் பட்டவர்கள் தேவ உறவின் விளைவான தேவ வார்த்தை தொடர்பைப் பெறுவார்கள். அந்த தேவ வார்த்தை பெற்றவர்கள், தேவ ஜீவனை உணருவார்கள். அது தேவ சமுகத்தை விட்டு விலகாமல், அவர்களை நிலைநிறுத்தும்.

கர்த்தரைத் தங்களுக்குள் பெற்றவர்கள், தேவ உறவால் சுபாவமாற்றம் கண்டவர்கள், அந்த மாற்றங்களை இழக்க அவர்கள் விரும்பமாட்டார்கள். அதனுடைய விளைவாக பாவம் அவர்களைக் கவர்ந்திழுத்துச் ஜெயிக்க முடியாது. தேவனுடைய பிள்ளைகள் கிருபையின் அனுபவம் பெறுவார்கள். அந்தக் கிருபை, பாவத்தால் வஞ்சிக்கப்படும் சூழல் வரும்போது, அவர்களை விலகிப் போகவிடாத படியான வேகத் தடைகளாக மாறும்.

சிந்தனைக்கு...

ஒருவர் விழுவதற்குக் காரணம், பாவத்தின் வலிமை அல்ல,
தேவ உறவின்மை என்ற பலவீனமே, அதன் காரணம்.

ஜூன் 18

வாக்குவாதம்

1 கொரிந்தியர் 6:1–12

நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை.
1 கொரிந்தியர் 6:7

சிலர் நியாயமில்லாமல் நடந்து கொள்கின்றார்கள். சிலர் மனம் நோகும் படியாக எதையாவது பேசிவிடுகின்றனர். சிலருடைய தவறான சுபாவநிலைகள் வெளிப்படும் போது, மனதில் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. இது போன்ற சூழல்களில் எதிர்வினையாற்றாமல், அப்படியே மௌனமாகப் பொறுத்துக் கொண்டு போய்விட வேண்டுமா? அல்லது அவர்களின் செயலும் வார்த்தையும் நியாயமற்றதாய் இருப்பதைச் சுட்டிக்காட்டவோ அல்லது சொல்லிக்காட்டவோ வேண்டுமா?

மற்றவர்களின் நியாயமற்ற செயல்களும் வார்த்தைகளும் நம்மை விசனப் படுத்தும் போது, அதனைப் பொறுத்துக் கொள்கின்ற பண்பிற்கு முதலிடம் தர வேண்டும். அதே வேளையில் அவ்விதம் பேசுவதும் செய்வதும் தவறு என்பதை மற்றவருக்குச் சுட்டிக்காட்டுவது தவறு அல்ல. ஆனால் அதனால், வாக்குவாதங் களும், தகாத வார்த்தை பேச வேண்டிய கட்டாயங்களும், கோபத்தைக் கொட்டு கின்ற தூண்டுதல்களும் வருகிறதென்றால், பேச இயலாத ஊமை போலப் போய் விடுவது ஞானமான விஷயம்.

ஏனென்றால், நியாயமற்றவர்களோடு வாக்குவாதம் ஏற்படும் போது, நல் விளைவுகள் தோன்றாது. அதனால், நம்முடைய மனதிற்கு அமைதிப் பாதிப்பு களும், காயங்களும், சந்தோஷமிழப்புகளுமே ஏற்படும். அதனால், நாம் ஆக்கப் பூர்வமாக அடுத்த செயல்களுக்குள் செல்ல இயலாத மனஸ்தம்பிப்புகள் ஏற்படும். எனவே, மனிதர்களிடம் நியாயத்திற்காப் போராடி நிரூபிப்பதைவிட, கர்த்தர் நம் முடைய எல்லா நியாயங்களையும் அறிகின்றார் என்ற விசுவாசத்தோடு, சாந்த குணத்தை இறுகப் பிடிப்பதே நல்லது. உலக மனிதர்கள் வாக்குவாதம் பண்ணி சண்டை போட்டு, தகாத வார்த்தை யுத்தம் நடத்தினாலும், அவர்களுக்கு அவை பழகிப்போன விஷயங்கள்.

ஆனால், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவை பல மனரீதியான பாதிப்பு களை ஏற்படுத்தும். எனவே, வாக்குவாத யுத்தம் நடத்தி நாம் ஜெயிப்பதை விட, நம்முடைய மனதின் அமைதியை இழக்காமலிருக்கத் தாழ்ந்து போய்விடுவதே நல்லது. அது பிரச்சினையின் வேளையில் சற்று கடினமானதுதான். ஆனால், அது தேவனைப் பிரியப்படுத்தும் செயலாகவும், நமக்கு நல்லதாகவும் இருப்பதால், விரைவில் மனம் ஒரு வெற்றிச் சந்தோஷத்தைக் காணும். சாந்த குணமுள்ள வர்கள் ஒருபோதும் பயனடையாமல் போவதில்லை.

சிந்தனைக்கு...

தவறைச் சுட்டிக்காட்டுவது தவறு அல்ல,
ஆனால், தவறைச் சுட்டிக்காட்டும் விதம் தவறாக மாறிவிடக்கூடாது.

ஜூன் 19

கிருபை செயல்படவே

2 கொரிந்தியர் 12:1–10

பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்.
2 கொரிந்தியர் 12:10

சில நேரங்களில் தேவன் நமக்கு எதிரான சூழ்நிலையை மாற்றி நமக்கு உதவி செய்வதில்லை. அதற்குப் பதிலாக அந்தச் சூழ்நிலையைச் சந்திப்பதற்குத் தேவையான கிருபையை அளித்து உதவி செய்வார். சூழ்நிலையை மாற்றிவிடும் போது, அதற்குப் பின் நமக்கு வேலையில்லை. ஆனால், சூழ்நிலை மாறாத போது, அதனை எதிர்கொள்வதற்கு நமக்குக் கிருபை தந்து நம்மை மிகுதியாகச் செயல் படுத்துகின்றார். கிருபை என்பது நம்மை சும்மா வைத்துக் கொண்டு தேவனே எல்லாம் செய்வதல்ல. நம்மைத் தேவன் பூரணமாக ஆட்கொண்டு, நம்மை அவர் பலத்தால் பலப்படுத்தி, அதிகமாக நம்மைச் செயல்பட வைப்பதே கிருபை.

பவுல் அப்போஸ்தலனை ஏதோ ஒரு முள்போன்ற ஒன்று மிகுதியாகப் பலவீனப்படுத்தியது. பவுல் அது தம்மை விட்டு நீங்க வேண்டும் என்று ஜெபித்த போதிலும், தேவன் அதை நீக்கவில்லை. அதற்குப் பதிலாகத் தம்முடைய கிரு பையை போதுமான அளவு அளித்தார். அந்தக் கிருபை பவுலின் பலவீனத்தின் நடுவில் பவுலை அதிகமாகச் செயல்பட வைத்தது. எனவே, பவுல் தன்னைப் பல வீனமாக எண்ணுவதற்குப் பதிலாக, தேவ பலத்தால் அதிக பலமுள்ளவனாக எண்ண முடிந்தது.

தாவீதுக்கு தேவ கிருபை கிடைத்தது. அந்தக் கிருபை அவனை அதிகமாகச் செயல்பட வைத்தது. அந்தக் கிருபை தந்த ஆற்றலினால், அவனால் வலிமைமிக்க கோலியாத்தை வீழ்த்த முடிந்தது. சில சூழல்களில் தேவன் நம்மை சும்மா யிருக்க விட்டுவிட்டு, அவரே செயல்படுவது உண்மைதான். ஆனால், பெரும் பாலும் தேவன் நம்மைச் சும்மாயிருக்க விடாமல், சுறுசுறுப்பாக அதிக ஆற்றலுடன் செயல்பட வைப்பதிலேயே கவனம் செலுத்துகின்றார். அதற்காகவே அவர் கிருபை அருளுகின்றார்.

நமக்குப் போராட்டங்களே இல்லையென்றால், தேவ பலத்தை நம்மிடம் காணும் வாய்ப்புகள் இல்லாமல் போகும். போராட்டங்களை அனுமதித்து, அவற்றின் வாயிலாக நாம் விசுவாசத்தோடும், தேவ சார்போடும், அதிக பலத்தோடும் செயல்பட வாய்ப் பளிக்கின்றார். எனவே, நம்மிடம் தேவனை அறிகிற அறிவும், தேவனுக் கேற்ற விசுவாசமும், தேவனுக்கேற்ற சுபாவங்களும் வளருகின்றன. கிருபையின் பின் பலத்தோடு நாம் செயல்பட செயல்படத்தான், இன்னும் இன்னும் நாம் கர்த் தருக்கேற்றவிதமாக வளருகின்றோம்.

சிந்தனைக்கு...

போராட்டங்கள் வரும் போதுதான்,
போராடி ஜெயிக்கத் தேவன் தந்த கிருபையை அடையாளம் காண முடியும்

ஜூன் 20

கர்த்தர் நல்லவரா?

சங்கீதம் 34:1–22

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்.
சங்கீதம் 34:8

உண்மையான கிறிஸ்தவர் என்பவர் கர்த்தருடைய ஐக்கியத்தில் வாழ்ந்து கர்த்தருடைய வழிகளில் நடக்கின்ற அனுபவத்தை உடையவராக இருப்பார். உண்மையான கிறிஸ்தவர் கர்த்தர்மேல் பரிபூரண நம்பிக்கை வைத்து, அந்த நம்பிக்கை சார்ந்து வாழ்வார். இவ்விதம் ஒருவர் இல்லாதிருந்தால் அதனுடைய காரணம் என்னவாகயிருக்கும்? அவர் கீழ்ப்படியாதவர் என்பதா! அவர் உண்மையில்லாத கிறிஸ்தவர் என்பதா ? இவை அல்ல காரணங்கள். அவர் கர்த்தர் நல்லவர் என்பதை அறியாதவர் என்பதே காரணம்.

ஆனால், இந்தக் காரணங்கள் உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். ஏனென்றால், கர்த்தர் நல்லவர் என்ற பரிபூரண நம்பிக்கை உடைய பலர்கூட, மேற்கண்டவிதமாக அனுபவங்களைக் கொண்டிருப்பதில்லை. பொதுவாக கிறிஸ்தவ பக்தியாளர்கள், கர்த்தர் நல்லவர் என்ற நல்ல நம்பிக்கை உடையவர்களே. ஆனால், கர்த்தர் நல்லவர் என்று பொதுவாக நம்புவது இயன்றவர்கள் அல்ல. கர்த்தர் செய்த நன்மைகளை தனிப்பட்ட முறையில் அனுபவித்து அறிந்தவர்களே, உண்மையாகக் கர்த்தர் நல்லவர் என்று அறிந்தவர்கள்.

பைபிள் சொல்கிறது என்பதற்காக அல்ல. எல்லோரும் கர்த்தர் நல்லவர் என்று நம்புகின்றார்களே என்பதற்காக அல்ல. நாம் கர்த்தர் நல்லவர் என்பதை நமக்கு அவர் செய்த நன்மைகளின் வாயிலாக அறிந்து நம்ப வேண்டும். அப்படி நம்பினால்தான் துவக்கத்தில் சொன்ன அனுபவங்கள் அனுதின வாழ்க்கையில் இருக்கும். நேற்று அல்லது கடந்த காலத்தில் பெற்ற தேவ நன்மைகள், இன்று கர்த்தர் நல்லவர் என்று நாம் கூறப் போதுமானவைகள் அல்ல. இன்று நம் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மையை நாம் காண வேண்டும்.

தினமும் நாம் கேட்ட நன்மை கிடைத்துக் கொண்டேயிருக்கும் என்று கூற முடியாது. தினமும் அற்புதம் நடந்துகொண்டேயிருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், ஒரு நன்மையை ஒவ்வொரு நாளிலும் நாம் பெறலாம். அது தான் கர்த்தராகிய இயேசு நம்முடைய இரட்சகராக ஏற்றுக் கொண்டதின் விளைவான தேவ ஐக்கியம். இந்த தேவ ஐக்கியத்தால் தினமும் தேவ சமாதானமும், தேவ சந்தோஷமும், தேவ நம்பிக்கையும், தேவ வார்த்தையும் கிடைக்கும். அப்போது கர்த்தர் நல்லவர் என்பதை ஆத்துமா பேசும். அப்போது நாம் துவக்கத்தில் பார்த்த அனுபவங்களை உடையவர்களாயிருப்போம்.

சிந்தனைக்கு...

கர்த்தர் நல்லவர் என்று நீ சொல்லத் தேவையில்லை.
கர்த்தர் உன்னை நல்லவனாக்கினால் அதை அவசியம் சொல்.

ஜூன் 21

தவறைச் சகிக்கணும், ஆனால்...

1 தீமோத்தேயு 5:17–25

மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே.

1 தீமோத்தேயு 5:22

அன்பு என்பது மற்றவர் செய்கின்ற தவறைச் சகிப்பதுதானேயன்றி ஏற்பது அல்ல. ஒருவருடைய தவறை சகித்துக் கொள்கின்றோம் என்றால், பதிலுக்கு பதில் செய்யாமல், அந்த வேதனையைப் பொறுத்துக் கொள்கின்றோம் என்று அர்த்தம். அதே வேளையில், அந்தத் தவறைச் சாதாரணமாக எடுத்துக் கொள்வதோ, அது தொடர்பான எதிர்ப்புணர்வைக் கட்டாமல் போவதோ நல்லதல்ல. சிலருக்கு மற்ற வருடைய உறவும் தொடர்பும் மிக முக்கியமாக இருப்பதால், அவருடைய தவ றையும் குறையையும் கண்டுகொள்ளமல் போகிற மனநிலை ஏற்படுகிறது.

இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களிடம் காணப்பட்ட குறைகளையும், தவறு களையும் சகித்துக் கொண்டார். அதே வேளையில் சீடர்கள் என்ற பாசத்தில் அவை களைச் சாதாரணமாக எண்ணவில்லை. அவர்களைச் சகித்துக் கொண்ட அவர், அவர்களின் தவறுகளை உணர்த்தவும் சுட்டிக்காட்டவும் தவறவில்லை. பேதுருவிடம் ஒரு தவறைக் காண நேரிட்ட பவுல், எல்லோரிடமும் போய் பேதுருவை விட்டு விலகுங்கள் என்று கூறவில்லை. ஆனால், பேதுரு தன் தவறை உணர வேண்டும் என்பதற்காகப் பலர் நடுவில், சுட்டிக்காட்டத் தவறவில்லை. (கலா 2:14)

ஒருவர் தன்னுடைய மனைவியைக் குறித்து, என் மனைவி உலகமே என்னை குற்றஞ்சாட்டினாலும் எனக்கு ஆதரவாயிருப்பார். ஆனால், யாரும் குற்றம் சாட்டாவிட்டாலும் என் குறையை முதல் ஆளாகச் சுட்டிக்காட்டுவார் என்றாராம். ஆம், ஒருவர் ஒரு தவறைச் செய்து விட்டால், உடனேயே அவரைத் தள்ளிவிட முந்தக்கூடாது. அதே வேளையில், அது தவறு என்பதை அந்த நபர் அறியச் செய்ய வேண்டியது அவசியம். இல்லையேல், தவறுக்குத் துணைபோகும் செய லாகவும், தவறை நியாயப்படுத்தும் செயலாகவும் மாறிவிடும்.

சில நேரம் மற்றவர் மேல் அன்பு கூருவது என்பது, அவருடைய குற்றத் தையும் தவறையும் பெரிதாக எண்ணாமல் போவது என்றே சிலர் எண்ணு கின்றனர். தவறு செய்த ஒருவர்மேல் நாம் காண்பிக்கின்ற அன்பு, அவர் தன் னுடைய தவறைச் சரிதான் என்று நினைக்க வழிவகுத்துவிடக்கூடாது. எனவேதான் அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்து சபை மக்கள்மேல் ஒருபுறம் அன்பைக் காட்டினாலும், மறுபுறம் அவர்களின் தவறுகளை வெளியரங்கமாய்ச் சுட்டிக் காட்டி கடிந்து கொண்டான். ஆம், தேவ அன்பினால் தவறைச் சகிக்கவும் வேண்டும். அதே நேரம் தேவ நீதியின்படி சுட்டிக்காட்டவும் வேண்டும்.

சிந்தனைக்கு...

ஒருவருடைய உறவிற்காக அவருடைய பல தவறுகளை நீங்கள் கண்டு கொள்ளாவிட்டால், இது ஒரு தவறான உறவு.

ஜூன் 22

தினந்தோறும் ஆசீர்வாதம்

யோவான் 14:12–23

நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்.
யோவான் 14:23

கர்த்தரால் ஒருவருடைய நோய் குணமாகியிருக்கலாம். ஆயினும், இனி ஒவ்வொரு நாளும் நோயில்லா வாழ்வுதான் என்று கூற இயலாது. கர்த்தர் ஒரு பிரச்சினையிலிருந்து உங்களை விடுவித்திருக்கலாம். ஆயினும், ஒவ்வொரு நாளும் இனி பிரச்சினையில்லாத நாள்தான் என்று கூற இயலாது. கர்த்தர் ஒரு நல்ல பொருளாதார ஆசீர்வாதத்தைத் தந்திருக்கலாம். ஆயினும், இனி தினமும் பொரு ளாதார ஆசீர்வாதம் கொட்டிக் கொண்டேயிருக்கும் என்று கூற இயலாது. இந்தப் பூமிக்குரிய ஒரு நன்மையை நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றாலும், இனி ஒவ்வொரு நாளும் நன்மையின் நாளே என்று கூற இயலாது.

ஆனால், கர்த்தர் செய்கின்ற ஒரு நன்மை மட்டும், ஒவ்வொரு நாளும் நமக்குச் சில நன்மைகளைத் தந்து கொண்டேயிருக்கும். அதுதான் நாம் தேவ னுடைய பிள்ளையாக மறுபிறப்பு அடையும் ஆவிக்குரிய நன்மை. ஒரு மனிதன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மறுபிறப்பின் அனுபவம் பெற்றால், அவன் ஒரு புது சிருஷ்டியாக மாறுகிறான். (11 கொரிந்தியர் 5:17) அந்தப் புது சிருஷ்டியின் அனுபவம் பெற்றவன், அதற்குரிய சில ஆவிக்குரிய நன்மை களைத் தினமும் பெற்றுக் கொண்டிருப்பான்.

மறுபிறப்பின் அனுபவம் பெற்றவன், பரிசுத்த ஆவியை உடையவன். அந்தப் பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தோடு வாழும் போது, தினமும் தேவனுடைய ஆசீர் வாதத்தை, அவன் தன்னுடைய ஆவியில் உணர முடியும். எந்தச் சூழ்நிலையிலும் அந்த ஆவியால் அவனுக்குள் சமாதானமும், சந்தோஷமும் காணப்படும். எந்த எதிர்மாறான சூழ்நிலையிலும் அவனுக்குள் நம்பிக்கையும், தேவ ஆதரவின் நிச்சயமும் கிரியை செய்யும். எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தருக்கேற்ற சுபாவங்கள் அவனிடம் செயல்படும்.

இவ்விதமான நன்மை மட்டுமே தினமும் நம்முடைய வாழ்க்கையில் தொடர் கதையாயிருக்கும். ஏனென்றால், மறுபிறப்படைதல் என்ற ஆவிக்குரிய நன்மை யோடு மட்டுமே தேவன் இருக்கின்றார். சாலொமோனுக்கு தேவன் எவ்வளவோ ஆசீர்வாதங்களை வழங்கிய போதிலும், அவனோடு தேவ ஐக்கியம் இருந்த தில்லை. அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையில் எவ்வளவோ பாடுகளும் துன்பங்களும் இருந்தாலும், அவனோடு தேவ சமாதானமும், சந்தோஷமும் இல்லாமலிருந்ததில்லை.

சிந்தனைக்கு...

தேவ உறவு இல்லாத செல்வங்களைவிட,
செல்வங்கள் இல்லாத தேவ உறவே ஆசீர்வாதம்.

ஜூன் 23

நற்சுபாவமே தேவை

கலாத்தியர் 5:13–26

ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம்.
கலாத்தியர் 5:22

உங்கள் சுபாவங்களைச் சரியாக வைத்துக் கொள்ள நீங்கள் அறிந்திருந்தால், உங்கள் வாழ்க்கை ஒரு போதும் உங்களுக்குச் சரியற்றதாக இராது. உங்கள் வாழ்க்கையில் பலவிதப் பிரச்சினைகள் இருக்கலாம். உங்கள் வாழ்க்கையில் பலவிதச் சோதனைகள் இருக்கலாம். ஆனால், உங்கள் சுபாவங்கள் சரியாயிருந்தால், உங்கள் வாழ்க்கை உங்களுக்குப் பிரச்சினையாகவோ, சோதனையாகவோ இராது. ஏனென்றால், நல்ல சுபாவங்கள் அல்லது நற்குணங்கள் என்பது, ஒரு வலிமையான கப்பல் போன்றது. அது எந்தக் காற்றையும், கடுமையான அலைகளையும் வெற்றியாகக் கடக்கும்.

ஆனால், மனிதனுடைய மிகப்பெரிய இயலாமையே, சுபாவங்களைச் சரியாக வைத்துக் கொள்வதுதான். சாந்தம், பொறுமை, அன்பு, தாழ்மை, விசுவாசம் ஆகிய சுபாவங்களை நம்மிடம் வளர்த்து வைப்பது கடினமான காரியம். அவை தீடீரென்று பார்த்தால் மிகவும் பலவீனமாயிருக்கும். அவற்றை ஏதாவது ஒரு சூழ்நிலையில் பார்த்தால், அவை எங்கேயோ காணாமல் போயிருக்கும். மனிதனுக்கு அறிவு, ஞானம், திறமை, புத்தி, தைரியம் என பல ஆற்றல்கள் இருக்க முடியும். ஆனால், சுபாவ ஆற்றலைப் பார்ப்பதுதான் கடினமாயிருக்கும்.

வாழ்க்கையில் மனிதன் பல விஷயங்களைப் பிரச்சினைகளாகப் பார்ப்பான். ஆனால், அவனுடைய உண்மையான பிரச்சினை, அவனிடம் நற்குணங்கள் வலிமையாய் இல்லாமையே. அவனிடம் சுபாவ ஆற்றல் இல்லாததால், அவனுக்கு எதிராக வரும் சில விஷயங்கள், அவனைக் கரையேறிப் போகவிடாதபடி செய்கின்றது. அப்படியானால், அன்பு, தாழ்மை, உண்மை, ஒழுக்கம், நேர்மை, சாந்தம், சகிப்புத்தன்மை போன்ற நற்சுபாவங்களை வளர்த்துக் கொள்வதெப்படி?

சுபாவங்கள் என்பது நாமே நம்மிடம் முயற்சிகளால் உருவாக்கிக் கொள்வது அல்ல. நற்சுபாவங்கள் என்பது மரத்தில் கனிகள் தோன்றுவது போல, ஒரு மரம் கனிகொடுக்கும் தன்மை உடையதாயிருக்க வேண்டும். மேற்கொண்டு அதற்குத் தேவையான நீர்பாய்ச்சி, உரமிட்டுப் பராமரித்தால், அந்த மரம் கனிகளை விளைவாகத் தரும். அதுபோல, முதலாவது நற்கனி கொடுக்கும் தன்மையுடைய தேவனுடைய பிள்ளைகளாக, தேவ ஆவியால் மறுபடி பிறக்க வேண்டும். தேவ உறவாலும், தேவ ஐக்கியத்தாலும், தேவ வார்த்தைகளாலும் நாம் நற்சுபாவக் கனிகளை இயல்பாகக் கொடுக்கிறவர்களாக மாற வேண்டும்.

சிந்தனைக்கு...

எவ்வளவு இருந்தாலும் நற்குணம் இல்லாதவன் பயனற்றவன்.
எதுவும் இல்லாவிட்டாலும். நற்குணமுள்ளவன் பயன் நிறைந்தவன்.

ஜூன் 24

துறவறமும் ஆடம்பரமும்

நீதிமொழிகள் 30:1–14

தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பாராக.
நீதிமொழிகள் 30:8

சிலர் கிறிஸ்தவ வாழ்க்கை என்றால், அது துறவி அல்லது சன்னியாசி போல வாழ்கின்ற வாழ்க்கை என்று நினைக்கின்றனர். இவர்கள் உணவு, உடை, உறவிடம், சௌகரியங்கள் என எந்த விஷயத்தையும் இன்னும் இன்னும் சாதாரண மாக்குவதிலும், குறைப்பதிலுமே ஆன்மிகத் திருப்தியை உணருகின்றனர். வேறு சிலர், கிறிஸ்தவ வாழ்க்கை என்றால், அதிக ஆடம்பரங்களோடும், அதிக சௌகரி யங்களோடும் வாழ்வது என்று எண்ணுகின்றனர். இவர்கள் இன்னும் அதிக சௌகரியநிலை அடைவதிலும், சுகபோக சூழ்நிலைகளில் வாழ்வதிலுமே ஆன்மிகத் திருப்தி காண்கின்றனர்.

இந்த இரண்டு பிரிவினரும் கிறிஸ்தவத்தைத் தங்கள் மனதின்படி தவறாகப் புரிந்து கொண்டவர்கள். இந்த இரண்டு பிரிவினருக்கும் கிறிஸ்தவம் என்னதென்றே தெரியவில்லை. ஆடம்பரமான வாழ்வும் தவறு. துறவித்தன மான வாழ்வும் தவறே. நாம் நம்மை எல்லைகளை மீறிப் போய் அடக்கி ஒடுக்கி வெறுத்து விடுவதால், கர்த்தருக்கு மகிமை வந்து சேராது. அதுபோல சுகபோகப் பிரி யர்களாக வாழ்வதாலும், தேவனுக்கு மகிமை வந்துவிடாது. கிறிஸ்தவ வாழ்க் கையின் நோக்கம் என்னவென்பதே முக்கியம்.

நாம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கேற்ற உயர்ந்த சுபாவங்களை உடையவர் களாக வாழ்ந்து, கிறிஸ்துவின் சாயலைப் பிரதிபலிக்க வேண்டும். நாம் நன்றாக உடுத்து, நன்றாக உண்டு, நல்லதோர் தங்குமிடத்தில் வாழ்வதால், மேற்கண்ட அனுவங்கள் பாதிக்கப்படாது. நாம் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும், தேவ ஐக்கியத்தோடு வாழ்ந்து, சிறந்த ஒரு வாழ்க்கை முறைக்கு மாதிரியாக இருக்க வேண்டும். ஜனங்கள் நம்மைத் துறவியாகவும் பார்க்க வேண்டாம். அவர்கள் நம்மை ஆடம்பர வாழ்க்கையாளர்களாகவும் பார்க்க வேண்டாம். அவர்கள் நம்மைப் பரிசுத்தமான தேவ பிள்ளைகளாகப் பார்க்க வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகளுக்கேற்ற சாட்சி வாழ்க்கைக்கு முரண்பாடாக, நம்முடைய வாழ்க்கை முறை அமையக்கூடாது. உண்ணவும், உடுக்கவும், நல்ல இடத்தில் தங்கவும், கர்த்தர் வாய்ப்புகளைத் தந்திருந்தால், சமநிலை தவறாமல் அவற்றைப் பயன்படுத்துவது தவறல்ல. ஒருவேளை, அதுபோன்று சில காரி யங்கள் அமையாமல் போனால், அதையும் ஏற்றுக் கொண்டு மனரம்மியமாக வாழப் பழகுவதே, உண்மையான கிறிஸ்தவ அனுபவம்.

சிந்தனைக்கு...

தேவன் தந்த செல்வங்கள் விலகுவது எளிதானதே.
தேவ உறவும், நல்ல நற்சுபாவமும் விலகுவது கடினமே.

ஜூன் 25

கனியா, கட்டளையா?

1 யோவான் 3:14–24

நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால்
1 யோவான் 3:14

அன்பு என்பது ஆவியின் கனி. அது ஒரு நியாயப்பிரமாணக் கட்டளை போன்றது அல்ல. ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பது இயேசுவின் கட்டளை. ஆனால், கனி கொடுத்தல் ரீதியாக அன்பு காட்டுவதற்கும், கட்டளைரீதியாக அன்பைக் காட்டுவதற்கும் வித்தியாசம் உண்டு. விமானப் பணிப் பெண்கள் பொதுவாக பயணிகளிடம் சிரித்த முகத்தோடும், பொறுமையோடும் நடந்து கொள்வார்கள். அவர்களின் புன்னகையும், பொறுமையும் அவர்களின் இயல்பான சுபாவங்கள் அல்ல. அவை அவர்களின் பணி தொடர்பான தவிர்க்க இயலாத கட்டளை சார்ந்த சுபாவங்கள்.

ஆனால், அன்பு என்பது நாம் கிறிஸ்தவர்கள் என்பதற்காக நிறைவேற்ற வேண்டிய கட்டளை அல்ல. அது நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதின் விளைவாக இருக்க வேண்டும். சிலரிடம் அன்பான பார்வை இருக்கும். அவர்களிடம் அன்பான வார்த்தை இருக்கும். அவர்களிடம் அன்பான பழக்கம் இருக்கும். ஆனால், அவர்களின் செயல்களில் அன்பின் அடையாளம் இராது. எனக்கு ஒருவரைத் தெரியும். மிகவும் அன்பாகப் பேசுவார். மிகவும் அக்கறையோட விசாரிப்பார். ஆனால், அந்த அன்பை உண்மை எனக் காட்ட, ஒரு ஐம்பது ரூபாயைத் தியாகம் செய்ய முன்வரமாட்டார்.

ஏனென்றால், கட்டளைரீதியான அன்பு, செயலில் அதிகமாக வெளிப்படாது. சிலர் மற்றவர்களை வெறுத்துக் கொண்டே நேசிப்பார்கள். சிலர் நேசித்துக் கொண்டே வெறுப்பார்கள். ஏனென்றால், அன்பு ஒரு மரம் கனிதருவதைப் போல வெளிப்படாமல், ஒரு மதக்கட்டளைக்காக வெளிப்படுகிறது. சிலர் அன்பாய் நடந்து கொள்ள ஆர்வம் காட்டுகின்ற அளவிற்கு, அன்பைத் தங்கள் உள்ளத்தில் வளர்த்துக் கொள்வதில்லை.

முதலாவது அன்பாயிருக்க நாடும் முன்பு, அன்பு வளத்தை இருதயத்தில் பெற்றிட நாட வேண்டும். நாமே நமக்குள் அன்பாயிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வது அல்ல. முதலாவது, கர்த்தருடைய அன்பை நமக்குள் நாம் அதிகமாக உணர வேண்டும். தேவ ஐக்கியத்தின் அனுபவத்தை அதிகமாகத் தேடும் போதுதான், தேவ அன்பை நம்முடைய இருதயம் பெற்றுக்கொள்ளும். நமக்குள் கர்த்தரின் அன்பை உணரும் போதுதான் நாம் இயல்பாக ஒரு மரம் கனிகொடுப்பது போல, பிறருக்கு நம் அன்பைக் கொடுப்போம்.

சிந்தனைக்கு...

கடவுளுக்குக் கீழ்ப்படிந்து பிறரை நேசிக்காதே.
கடவுளுடன் இணைந்திருந்து அதைச் செய்.

ஜூன் 26

அழைப்பை அறியவில்லை

மத்தேயு 6:25-34

இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று. ...
மத்தேயு 6:32

அநேகரைத் தேவன் பயன்படுத்த இயலவில்லை. ஏனென்றால், அவர்கள் தேவனை எப்படித் தங்கள் வாழ்க்கைத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவது என்பதில் தீவிரமாயிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய தரிசனம் இல்லை. அவர்கள் தேவ அழைப்பைக் குறித்துச் சிந்திப்பதில்லை. தங்களின் ஆசைகளை இயேசுவால் எப்படி நிறைவேற்றிக் கொள்வது, என்பதிலேயே அவர்கள் மூழ்கி யிருக்கின்றனர். ஆண்டவர் நம்மை அழைத்த நோக்கத்தைச் சந்திக்க இயலாதபடி, நாம் சரீரத்தோடும், உலகப்பிரகாரமானவைகளோடு சம்பந்தப்பட்ட காரியங் களிலும் மூழ்கியிருக்கின்றோம்.

நாம் இரட்சிக்கப்பட வேண்டும். நாம் தேவனுடைய பிள்ளைகளாக மறு பிறப்பின் அனுபவம் பெற வேண்டும். நாம் தேவ உறவுடன் வாழ வேண்டும். நாம் தேவ சாயலைப் பிரதிபலிக்கின்றவர்களாக மாறி, கர்த்தருக்குச் சாட்சிகளாக வேண்டும். நாம் நித்திய வாழ்வின் நிச்சயத்தோடு, இந்த நிரந்தரமற்ற உலகத்தின் மாயைகளுக்குள் சிக்கி விடாதபடி வாழ வேண்டும். இவைதான் நம்முடைய அழைப்பின் நோக்கங்கள்.

ஆனால், அநேகர் எப்படிக் கர்த்தருக்குப் பயனுள்ளவர்களாக விளங்க வேண்டும் என்று சிந்திப்பதில்லை. கர்த்தர் எந்தெந்த விதத்தில் அவர்களுக்குப் பயனுள்ளவராக இருப்பார் என்றே சிந்திக்கின்றனர். எனவே, பிரச்சினைகளி லிருந்து விடுதலை, வியாதிகளிலிருந்து விடுதலை, பொருளாதார நன்மைகள் போன்ற காரியங்களை நோக்கமாக வைத்தே கிறிஸ்தவத்தைச் சிந்திக்கின்றனர். இதுபோன்ற காரியங்களுக்காக எந்த ஊழியனை அணுகலாம், எந்தச் ஜெபக் கூட்டத்திற்குப் போகலாம், என்றே சிந்திக்கின்றனர். இயேசு எனக்கு இதைச் செய்வாரா, அதைச் செய்வாரா என்றே யோசித்துக் கொண்டிருக்கின்றபடியால், நான் எதற்காகக் கிறிஸ்தவனாக வாழவேண்டும் என்பது அறியப்படாமல் போகிறது.

முதலாவது, தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுவதற்குக் கவனம் செலுத்த வேண்டும். அதனுடைய விளைவாக நம்முடைய சரீரத்திற்குத் தேவையான நன்மைகளைத் தேவனிடத்திலிருந்து பெற வேண்டும். இதுதான் கர்த்தருடைய ஏற்பாடு. (மத்தேயு 6:33) ஆனால், அநேகர் முதலாவது எனக்கு இயேசு என்ன செய்வார் என்று கேட்பதிலேயே அதிகக் கவனமாயிருப்பதால், நாம் எப்படித் தேவ அழைப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதை அறியாமல் போகிறோம்.

சிந்தனைக்கு...

உன்னைப் பயன்படுத்தத் தேவன் வந்தால்,
உன்னால் பயன்பெறுகிறவர்கள் பலர் வருவார்கள்.

ஜூன் 27

துக்கம் நிரந்தரமல்ல

யோபு 2:1–13

அவன் துக்கம் மகா கொடிய துக்கம் என்று கண்டு.
யோபு 2:13

சில நிகழ்வுகள் வாழ்க்கையில் சிலரை உலுக்கி விடுகின்றது. சில இழப்புகள் சிலரை மனரீதியாக எங்கோ தூக்கி வீசிவிடுகிறது. அவர்கள் தங்களுக்கு நிகழ்ந்த மிகுந்த துயரமான நிகழ்வுத் தங்களுக்கு ஆயுட்கால, துக்கத்தை ஏற்படுத்தி விட்டதாக எண்ணுகின்றனர். சில தோல்விகளும் இழப்புகளும் தங்களை நிரந்தர மான துக்க மனிதர்களாக்கிவிட்டதாக உணருகின்றார்கள். இனி கடைசி வரை துக்கத் தோடுதான் வாழ்ந்து முடிக்க வேண்டும், என்று தங்கள் துக்கத்திற்கு ஒரு நீண்ட காலத்தை முன் குறித்து விடுகிறார்கள். ஆனால், மனித வாழ்வில் எந்தத் துக்கமும் நிரந்தரமானதல்ல. நாம் நினைப்பது போல அது கடைசி வரை நம்மை துக்கப் படுத்திக் கொண்டேயிருக்கும் என்பது உண்மையல்ல.

நேர்மறையான உணர்ச்சிகளாயினும்சரி, எதிர்மறையான உணர்ச்சி களாயினும் சரி, எதுவுமே இன்று போல என்றும் வலிமையாயிருப்பதில்லை. நாட்கள் செல்லச் செல்ல துக்கமாயினும் சரி, துயரமாயினும் சரி, வலுவிழந்து போய்க் கொண்டேயிருக்கும். நாம், அது வலுவிழந்தாலும், அதனை வலுவிழந்து போய் விடக்கூடாது என்ற எண்ணத்தோடு செயல்படக்கூடாது. ஒரு பெண் தன் கணவன் மரித்த பின்பு, அவன் மாலை வீடு திரும்பும் நேரத்தை கடிகாரம் ஞாபகப்படுத்தியதும், அழத் துவங்கிவிடுவாள். காலங்கள் கடந்த போது அவளுக்கு ஆழுகை வர வில்லை. ஆனால், அவளுக்கு அந்த மாலை நேரத்தில் கொஞ்சம் அழுதால், மனதிற்குத் திருப்தி ஏற்படுவது போல உணர்வாள்.

கர்த்தருடைய பிள்ளைகள் துக்கப்படுவதிலும் துயரப்படுவதிலும், ஒரு மன வியல் சார்ந்த திருப்தியை விரும்பக்கூடாது. ஒரு இழப்பு அல்லது தோல்வி அல்லது ஏமாற்றம் மட்டுமே, நம்முடைய வாழ்க்கையில் முழுச் செயல்பாட்டையும் கட்டுப் படுத்தி விடக்கூடாது. துக்கம் விலகவில்லை என்பதைவிட, சிலர் துக்கம் விலகுவதை விரும்பவில்லை என்பதும் உண்மை.

துக்கத்தின் ஆற்றலைவிட தைரியப்படுத்தும் தேவனுடைய பிரசன்னத்தின் ஆற்றல் அதிக வலிமையானது. எனவே, நாம் எந்தச் சூழ்நிலையின் நடுவிலும், தேவ பிரசன்னத்தில் வாழ்வதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது அந்தப் பிரசன்னம் எல்லா எதிர்மறை உணர்வுகளையும் பலவீனப்படுத்திவிடும். நாம் துக்க உணர்வோடு இசைந்து செல்ல விரும்பாமல், தேவ பிரசன்னத்தோடு இணைந்து செல்லத் தீர்மானிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

துக்கம் விலகாதது மட்டுமல்ல, துக்கத்தை விட்டு
விலக மனிதன் விரும்பாததும், துக்கம் தொடர்வதின் காரணமே.

ஜூன் 28

தனிமைப்படாமல்

1 இராஜாக்கள் 19:1–13

சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று....
1 இராஜாக்கள் 19:4

நாம் நம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளும் போது, உலகத்தில் நாம் ஒருவர்தான் அதிக பட்சமான துன்பம் அனுபவிப்பது போல, அது நம்மை எண்ண வைத்துவிடும். நாம் நம்மைத் தனித்த ஒரு சூழலில் வைத்துக் கொள்ளும்போது, நம்முடைய மனதும் எண்ணமும் நமக்கு என்ன நடக்கிறது என்பதையே அளவுக்கதிகமாகச் சிந்திக்கும். அங்கே உலகத்தின் வேறு எதுவும் நம்முடைய கவனத்திற்கு வராது. நம்மை மட்டுமே உலகத்தில் தனித்துப் பார்க்கும் போது, தவறான முடிவுகளுக்கு நேராக மனம் வேகமாகப் போகிற சூழ்நிலை உருவாகும்.

எலியாவிற்குத் திரும்பத் திரும்ப யேசபேலிடத்திலிருந்து மிரட்டல்கள் வந்த போது, சோர்ந்து போய் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டான். அங்கே தன்னுடைய உலகத்தில் தன்னை மட்டும் கண்டான். அங்கே வாழ்ந்து காட்டு வதற்குப் பதிலாக வாழ்க்கையை முடித்துக் கொள்ள அவனுடைய நொந்து போன மனம் அவனைத் தூண்டியது. சில நேரம் நமக்குள் ஏற்படும் மன நெருக்கடிகள், மனிதர்களை விட்டு விலகிப் போய் தனித்து உட்காரத் தூண்டும். ஆயினும், மனம் நொந்திருக்கும்போது நம்மை யாரும் இல்லாத, ஒரு தனிமை உலகத்திற்குக் கொண்டு செல்வது பாதகமானது.

சில சூழ்நிலைகளில், தாவீதைப் போலவும், இயேசுவை போலவும், நம்மை மனிதர்களிடத்திலிருந்து பிரித்துக் கொண்டு தனிமைப்படுவது நல்லதே. ஆனால், அந்தத் தனிமைப்படுதல், தேவனுடைய சமுகத்தின் ஆதரவைத் தேடும் ஒன்றாக இருக்க வேண்டும். தேவனிடம் மனம் விட்டுப் பேசி, நமக்குள் நடைபெறும் அழுத்தம் நிறைந்த போராட்டங்களிலிருந்து விடுபடுவதே, அதன் நோக்கமாயிருக்க வேண்டும். சில நேரங்களில், மனித உறவுகளின் நடுவில் நமக்கு ஆறுதலான சூழ்நிலை இல்லாமலிருக்கலாம். ஆயினும், மனித உறவுகளின் நடுவில் இருப்பதால், நம்மை மட்டுமே ஒரு தனியான தீவில் நிறுத்தி வைப்பதைத் தவிர்க்கலாம்.

என்னுடைய மிகுந்த வாழ்க்கைப் போராட்டங்களின் காலத்தில், மனித உறவு களை விட்டு என்னைத் தனிமைப்படுத்தி தேவ ஆறுதலைத் தேடின காலங்களும் உண்டு. தனிமை நிலையில் மனதில் ஏற்பட்ட மிகுந்த நெருக்கத்தைக் குறைக்க, மனித ஐக்கியச் சூழல்களைத் தேடின காலங்களும் உண்டு. சில நேரம் தனிமைப் பட்டு தேவனுடைய நெருக்கத்தைத் தேடுவதும் ஆறுதலான விஷயமாயிருக்கும். சில நேரம் எங்கோ போய் தனிமையில் அமர்வதைத் தவிர்த்து, மனித உறவு களுக்கு நடுவில் நம்மை நிறுத்தி வைப்பதும் ஆறுதலைத் தரக்கூடும்.

சிந்தனைக்கு...

தேவ உறவு போதும் என்று மனித உறவை விட்டு விலகாதே.
மனித உறவை அதிகமாக நாடி, தேவ உறவைத் தேட மறக்காதே.

ஜூன் 29

கிரியைகளுக்குப் பலன் உண்டு

எபிரெயர் 6:7-20

அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு ...
எபிரெயர் 6:10

தேவனுடைய ஆசீர்வாதங்கள் என்பது நம்முடைய கிரியைகள் சார்ந்தது அல்ல. அது தேவனுடைய கிருபையைச் சார்ந்தது. இது உண்மைதான். நாம் நம்முடைய ஆன்மிகச் செயல்களைக் காண்பித்து, அதற்குப் பிரதிபலனாக நன்மைகள் தாரும் என்று தேவனிடம் கேட்க முடியாது. அதே வேளையில், நம்முடைய கிரியைகள் அல்லது நற்செயல்கள் தேவனிடமிருந்து நன்மைகளைக் கொண்டு வரும் என்ற உண்மையையும் மறந்துவிடக்கூடாது. நாம் சில நல்ல செயல்களைச் செய்து, அதற்குப் பிரதிபலனாக தேவ நன்மைகளை எதிர்பார்ப்பது வேறு. நாம் தேவ உறவில் வாழ்ந்து கொண்டு, கர்த்தர் நம்முடைய நற்செயல் களுக்கு பிரதிபலன் தருவார் என்று விசுவாசிப்பது வேறு.

கர்த்தர் நல்லவர், அவர் தம்முடைய பிள்ளைகளின் நற்செயல்களைப் பாராட்டிக் கனப்படுத்த விரும்புகின்றவர். அவர் தம்முடைய நல்லவர் என்ற நிலைமையின் விளைவாக, நாம் அவருக்குப் பிரியமானதைச் செய்யும் போது, நமக்கு நல்ல ஆசீர்வாதங்களைத் தருவார். நல்ல தகப்பன், தன்னுடைய மகன் நல்ல குணங்களோடும் நல்ல செயல்களோடும் வாழும் போது, அவனை உற்சாகப் படுத்து வதற்காக நல்ல பரிசுகளை அளிப்பது இயற்கையான காரியம். அது போல, மகனும் தான் நல்லதைச் செய்யும்போது, தகப்பன் தனக்கு உரிய பலன் தருவார் என்று எதிர்பார்ப்பது இயல்பான காரியம்.

நாம் எவ்வளவு நல்ல ஆன்மிகச் செயல்களைச் செய்தாலும், அவற்றைக் காட்டி தேவனிடமிருந்து நாம் நன்மைகளை உரிமை கோர முடியாது. ஏனென்றால், தேவ நன்மைகள் என்பது தேவ உறவுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. (எபேசியர் 1:3) நாம் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளை என்ற நிலமை பெற்றால், அந்த உறவுக்குள் சென்று தேவ நன்மைகள் பெறலாம்.

அந்த உறவுக்குள் நாம் இருக்கும்போது, நம்முடைய ஒவ்வொரு நற்செயலும் தேவனைச் சந்தோஷப்படுத்தும். அதனுடைய விளைவாகக் கர்த்தர் நம்மை இன்னும் இன்னும் ஆசீர்வதிப்பார். இது வெறும் செயலுக்குக் கிடைத்த கூலி அல்ல. தேவ உறவு சார்ந்த செயலுக்குக் கிடைத்த ஆசீர்வாதப் பரிசு. தேவன் நம்முடைய நல்ல பிரயாசங்களைக் கௌரவிக்கும் செயல் அது. தேவ உறவுக்குள் வாழ்கின்ற நாம், தேவன்மேல் கொண்ட விசுவாசத்தால் நற்செயல்களுக்குப் பலன் எதிர்பார்க்கலாம்.

சிந்தனைக்கு...

நன்மை பெறுவதற்காகவே நற்செயல் செய்யாதே.
நற்செயல்களால் நன்மை வரும் என்பதையும் மறக்காதே.

ஜூன் 30

கிரியை செய்யப் பழகணும்

தீத்து 3:1–15

நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி....
தீத்து 3:8

ஒரு தகப்பன் எப்பொழுதுமே தன் மகனுக்கு நல்லது செய்வதற்கே விரும்புவான். ஆனால், அந்தத் தகப்பனின் நல்லெண்ணத்தின் விளைவான நன்மைகளைப் பெற்றிட, அந்த மகன் தகப்பனோடு இசைந்து செயல்பட வேண்டும். மகன் நன்மையடைவதற்குப் பின்னால் இருக்கின்ற அடிப்படையே உறவுதான். அந்த உறவின் மூலம்தான் அவன் நன்மை பெற முடியும். ஆயினும், அந்த உறவு மட்டுமே அவனை ஆசீர்வாதமாக வாழ வைத்துவிடாது. அவன் மகன் என்ற முறையில் சில ஆக்கப்பூர்வச் செயல்களைச் செய்ய வேண்டும்.

அவன் தகப்பனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவன் தகப்பனுடைய ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். அவன் ஒழுங்குடன் வாழ வேண்டும். அவன் சரியாகச் செயல்பட வேண்டும். இவை எதையும் செய்யாமல், தந்தை மகன் என்ற உறவு மட்டுமே தன்னை ஆசீர்வாதமாக வைக்கும் என்றால், அது பகல் கனவாகவே இருக்கும். அவன் பொறுப்புடனும் ஒழுங்குடனும் செயல்படாவிட்டால், தகப்பன் அவனுக்காக எவ்வளவுதான் நல்லது செய்யும் ஆசையை வைத்திருந் தாலும், அதனால் அவன் வாழ்வடைய முடியாது.

இன்று சில போதகர்கள் நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு, நம்முடைய நல்ல செயல்கள் அல்லது கிரியைகள் அவசியமல்ல என்று போதிக்கின்றனர். நமக்குத் தேவ உறவு மட்டும் போதும் என்று சொல்கின்றனர். நாம் செய்யவேண்டிய கிரியை களையெல்லாம் இயேசு சிலுவை மூலம் முடித்து விட்டார் என்று கூறுகின்றார்கள். எனவே, இனி நம்முடைய கிரியைகள் முக்கியமல்ல என்று போதிக்கின்றனர். ஆனால், உறவைக் குறித்த அறிவும் மட்டுமே போதாது. அந்த உறவைக் குறித்த விழிப்புணர்வோடு, ஆவிக்கேற்ற கிரியைகளைச் செய்ய வேண்டும்.

நாம் தேவ உறவின் பின்னணி தருகின்ற ஆவிக்குரிய பலத்தோடு, ஆவிக் குரிய கிரியைகளைச் செய்ய வேண்டும். அந்தச் செயல்படுதல்தான், தேவ உற வுக்குள் வைக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய நன்மைகளை நாம் அனுபவிக்க நமக்கு உதவி செய்யும். தேவ உறவுடன் நாம் வாழ்ந்தால், தேவ கிருபையும் தேவ பலமும் நம்மிடம் செயல்படும். அந்தக் கிருபையைச் சார்ந்து நாம் தேவ வார்த்தைகளின் படியும், தேவ ஆவிக்கேற்றபடியும் செயல்பட வேண்டும். அந்தக் கிரியைகள் நாம் தேவ உறவின் ஆசீர்வாதங்களை அனுபவிக்க மிகவும் அவசியம்.

சிந்தனைக்கு...

கிரியைகளால் தேவ நன்மைகளை உரிமைபாராட்ட முடியாது.
கிரியைகளின்றி தேவ நன்மைகளின் இடத்தை எட்ட முடியாது.

ஜூலை 1

நமது சுதந்திரம்

எபேசியர் 6:10–18

எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி...
எபேசியர் 6:11

சமாதானம், சந்தோஷம், நம்பிக்கை, பரிசுத்தம், வல்லமை ஆகியவை, தேவனால் பிறந்த அனுபவம் பெற்றவர்களின் ஆவிக்குரிய சுதந்திரங்கள். இந்த சுதந்திரங்களை அல்லது ஆவிக்குரிய அனுக்கிரகங்களை நாம் உரிமை கொண்டாடி அனுபவிக்க வேண்டும். இவை நமக்கு எல்லா நேரமும் எளிதாக நம்மிடம் வந்துவிடாது. இந்த நல்ல அனுக்கிரகங்களுக்கு எதிராக உலகம், பிசாசு, மனிதன், சுயம் என பல சக்திகள் போராடும். எனவே, நாம் அவற்றைச் சில நேரங்களில் போராடிப் பெற்றுத்தான் அனுபவிக்க வேண்டும்.

நம்முடைய சூழ்நிலைகள் எவ்விதமாயிருந்தாலும், இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்க இயலும். ஏனென்றால், அவை தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவ கிருபையின் விளைவாகக் கிடைப்பவை. ஆனால், அவற்றிற்காக நாம் போராட வேண்டும். ஆனால், ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாகத் தங்களை நம்புகின்ற பலரிடம், இந்த அனுபவங்கள் இல்லை. அவர்கள் வாழ்க்கையின் பல சூழ்நிலைகளில் எல்லோரைப் போலவே அமைதியற்றவர்களாகவும், ஆனந்தமற்றவர்களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவும் போகின்றனர்.

அதனுடைய உண்மையான காரணம், தேவன் அவ்விதமாக இருக்கும்படி, அவர்களை விட்டுவிட்டார் என்பது அல்ல. அவர்கள் இன்னும் தேவனுடைய பிள்ளைகளாகப் பிறக்கவில்லை. அவர்கள் இன்னும் தேவ ஆவியின் அனுபவங்களைப் பெறவில்லை. அவர்கள் ஜெபம், ஆராதனை, ஊழியம், பாடல்கள், சபை கூடுதல் போன்ற பக்திச் சூழ்நிலைகளில், தங்களைத் தேவனுடைய பிள்ளைகளைப் போல உணருகின்றார்கள். ஆயினும், வாழ்க்கையின் பிற சூழ்நிலைகளில், தங்களிடம் அவர்கள் எந்த விசேஷ நிலைமையையும் காண்பதில்லை.

மேலே நாம் பார்த்த ஐந்து ஆவிக்குரிய சுதந்திரங்களையும் நாம் போராடிப் பெற வேண்டுமானால், நமக்கு போராடும் ஆற்றல் வேண்டும். நாம் உண்மையான மறுபிறப்பின் அனுபவம் பெற்றுப் புதிய சிருஷ்டி என்ற நிலைமைக்குள் வந்திருந்தால்தான், அந்தத் தேவ வல்லமை நம்மில் செயல்படும். சிலர் எவ்வளவோ உரிமை கொண்டாடி, தேவ நன்மைகளைப் பெற விரும்பினாலும், அவர்களால் முடிவதில்லை. ஏனென்றால், அவர்களுக்குள் புதிய ஜீவன் இல்லை. அவர்கள் பக்தியான வாழ்க்கைக்குள் வந்த போதிலும், இன்னும் கர்த்தருடைய ஐக்கியத்திற்குள் வரவில்லை.

சிந்தனைக்கு...

சந்தோஷத்தைப் போராடிப் பெற முடியாது, பெற்றுக்கொண்ட சந்தோஷத்தைப் போராடாமல் தக்க வைக்க முடியாது.

ஜூலை 2

ஏன் வாழணும்?

ரோமர் 14:1–13

நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம்.
ரோமர் 14:8

சில நேரங்களில் ஒருவர் தன்னுடைய வாழ்க்கையை விரும்பி வாழ இயலாதபடி, சில சூழல்கள் அவருக்கு ஏற்படலாம். ஆனால், இந்த வாழ்க்கையை அவர் வாழ்ந்து முடிக்க வேண்டிய ஒரு பொறுப்பும், தேவையும் அவருக்கு உண்டு. சில வேளைகளில், ஒருவருடைய உறவுகள் அவருக்கு மிகுந்த வருத்தத்தைத் தரக்கூடும். எனவே, என்னை விசனப்படுத்தும் இந்த மனைவிக்காக, நான் ஏன் வாழ வேண்டும்? என்னைக் கஷ்டப்படுத்தும் இந்தக் கணவனுக்காக, நான் ஏன் வாழ வேண்டும்? எனக்கு மிகுந்த வியாகுலம் தருகின்ற இந்தப் பிள்ளைகளுக்காக, நான் ஏன் வாழ வேண்டும் என்ற கேள்விகள் எழ வாய்ப்புண்டு.

எனவே, இப்படிப்பட்ட உறவுகளுக்காக வாழ்வதற்கான ஒரு ஆசையே இல்லாமல் போகும். ஆனால், இந்தப் பூமியில் அப்படிப்பட்ட உறவுகளோடு நாம் இணைக்கப்பட்டுவிட்டபடியால், அவர்களுக்காக வாழ்ந்தாக வேண்டிய ஒரு தேவையும், பொறுப்பும் உண்டு. ஆனால், இவர்களுக்காக ஒருவர் நேரடியாக விரும்பி வாழ இயலாமல் போகும். இதுபோன்ற வேளைகளில்தான், இந்தப் பூமியில் நாம் தேவனுக்காக வாழ வேண்டிய கடமையை, வாழ்க்கையின் முதலிடத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

கணவனுக்காக, மனைவிக்காக, பிள்ளைகளுக்காக சகோதரர்களுக்காக வாழ விரும்பும் தூண்டுதல் இல்லாவிட்டால்கூட, தேவனுக்காக வாழ வேண்டிய கடமையை நாம் அலட்சியம் செய்ய முடியாது. தேவனுக்காக நாம் வாழும் போது, அதனுடைய விளைவு என்ன? யாருக்காக நாம் வாழ நம் மனம் விரும்பவில்லையோ, அவர்களுக்காக நாம் வாழ்ந்து விடுகிறோம். நம்முடைய வாழ்க்கையின் பயன்பாட்டை அவர்கள் பெற்றுக் கொள்கின்றார்கள். நம்முடைய பொறுப்பும், கடமையும் அங்கே நிறைவேறிவிடுகிறது.

தேவனுக்காக நாம் வாழும் போது, யாரையும் நாம் வெறுக்க இயலாதே. தேவனுக்காக நாம் வாழும் போது, யாரையும் நாம் நேசிக்காமல் இருக்க முடியாதே. தேவனுக்காக நாம் வாழும் போது, தீமை செய்தவர்களுக்கும் நாம் நன்மை செய்ய ஏவப்படுவோம். தேவனுக்காக நாம் வாழும் போது, நம் மனம் சொல்வதை பின் பற்றாமல், தேவ மனம் சொல்வதைப் பின்பற்றத் தூண்டப்படுவோமே. ஆம் தேவனுக்காக வாழ்கின்றவர்கள் தங்களுக்காகவும் வாழ்ந்துப் பிற உறவுகளுக்காகவும் வாழ்ந்து விடுகிறார்கள். அவ்விதம் வாழத் தேவையான வலிமையையும், மனப்பக்குவத்தையும், நம்பிக்கையையும் தேவ உறவு அளிக்கும்.

சிந்தனைக்கு...

நான் ஏன் வாழ வேண்டும் என்று உன்னிடமும் மனிதரிடமும் கேட்கும் முன்பு, தேவனிடம் கேள்.

ஜூலை 3

மன அமைதி அப்படி அல்ல

ஏசாயா 55:1–13

நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்.
ஏசாயா 55:1

ஏதாவது ஒரு வெம்மையான நாளில், கடற்கரைக்குப் போய் சற்று நேரம் கடற்காற்றை அனுபவிக்கலாம். ஆனாலும், தினமும் கடற்கரையிலே போய் நாம் தங்கிவிட முடியாது. நம்முடைய வீட்டில் காற்று வசதிக்காக நாம் ஏதாவது செய்தாக வேண்டும். கோடை காலத்தில் எங்காவது நீர்வீழ்ச்சி இருந்தால், ஒரு நாள் அங்கு போய் குளித்து வரலாம். ஆனால், குளிப்பதற்காக தினமும் நீர்வீழ்ச்சியைத் தேடிப் போக முடியாது. நம்முடைய இல்லத்தில் தினமும் குளியலுக்கான ஒரு ஏற்பாட்டை நாம் செய்தாக வேண்டும்.

அது போல, மன அழுத்தமான ஒரு நேரத்தில் கிறிஸ்தவப் பாடல்கள் கேட்டல், ஆராதனைகளில் பங்கேற்றல், ஜெபக் கூட்டம் போய் வருதல், தியானக் கூட்டத்தில் போய் பிரசங்கம் கேட்டல் என ஏதாவது ஒன்றினால், சற்று மன அமைதியைத் தேடலாம். ஆனால், அவற்றை வாழ்க்கை முறை ஆக்கிக் கொள்ளக்கூடாது. மன நிம்மதிக்காகப் பாடல்களையும், ஆராதனைகளையும், ஜெபக் கூட்டங்களையும், சார்ந்திருக்கக் கூடாது. இவைகளைக் கொண்டு நம்முடைய வாழ்க்கையை நாம் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் மாற்றிவிட முடியாது.

இது போன்ற வழிகளையே தொடர்ந்து மன அமைதிக்கான வழிகளாகத் தேடினால், பின்னர் தேவனால் மனதில் இளைப்பாறுதல் அடையும் வாய்ப்பை இழந்து போவோம். இளைப்பாறுதலை அல்லது மன அமைதியை நாம் இயேசு விடம் தேடிப் பெற வேண்டும். மனதைப் பக்தி உணர்வுகளுக்குள் கொண்டு சென்று, சற்று நேரம் நிம்மதியற்ற சூழல்களை மறுப்பது அல்ல. மனதைக் கர்த்தரிடம் கொண்டு சென்று, நிம்மதிக் குறைவுகளுக்கான தீர்வுகளைத் தேட வேண்டும். கர்த்தருடைய சமுகத்தால் அடைய வேண்டிய மனசமாதானத்தைப் பாடல்கள் வழியாகவும், பரவசப் பிரசங்கங்கள் வழியாகவும், அடைய விரும்பக்கூடாது.

அமைதிக்கு வழி கிறிஸ்துவின் ஐக்கியமே. கர்த்தரை நமக்குள் நாம் பெற்று, அந்தக் கர்த்தருடைய ஐக்கியத்தை ஆத்துமாவில் அனுபவிக்க வேண்டும். கிறிஸ் தவப் பாடல்களும், ஆராதனை நிகழ்ச்சிகளும் தற்காலிக ஆறுதலையே தரும். கர்த்தரிடம் நம்முடைய நிலைமைகளையெல்லாம் சொல்ல வேண்டும். தேவ ஐக்கிய அனுபவத்தை விசேஷமாக வாஞ்சிக்க வேண்டும். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் கர்த்தரோடு நமக்கு ஏற்படுகின்ற ஆழமான அனுபவங்களே, உண்மையான மன அமைதியைக் கொண்டு வரும்.

சிந்தனைக்கு...

எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்கிறாய் என்பது அல்ல.
எப்படிப்பட்ட மனதுடன் வாழ்கிறாய் என்பதைப் பார்.

ஜூலை 4

தேவ உறவா, தேவ பக்தியா?

11 தீமோத்தேயு 4:7–22

கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று...
11 தீமோத்தேயு 4:17

ஒருவர் உண்மையான கிறிஸ்தவர் என்றால் அவரிடம் காணப்பட வேண்டியது தேவ உறவின் வாழ்க்கை. ஆனால், பலரிடம் காணப்படுவது தேவ பக்தியின் வாழ்க்கையே. தேவ உறவின் வாழ்க்கை இருந்தால், அந்த உறவு எல்லாக் கஷ்டமான வேளையிலும் நம்மோடிருந்து நம்மைத் தாங்கும். ஆனால், பலர் துன்ப வேளைகளில் சோர்ந்து போய்விடுகின்றனர். அது போன்ற வேளைகளில் தங்களை விட்டுத் தேவன் விலகி விட்டது போலவோ அல்லது தேவனை விட்டு தாங்கள் விலகி விட்டதைப் போலவோ, உணருகின்றனர்.

ஆனால், உண்மை அதுவல்ல. அவர்கள் அதுவரை வாழ்ந்தது தேவ உறவின் வாழ்க்கை அல்ல. அது வெறும் தேவ பக்தி வாழ்க்கையே. அந்த தேவ பக்தி அவர்களின் கஷ்ட வேளைகளில் அவர்களைத் தாங்கவில்லை. ஏனென்றால், தேவ பக்தி என்பது ஒரு நபர் அல்ல. நாம் பக்தியாய் வாழ விரும்பிச் செய்த சில செயல்களின் அனுபவமே தேவ பக்தி. அந்தத் தேவ பக்தி துன்ப வேளையில் நம்மோடு நிலைத்திருந்து நம்மைத் தாங்காது. அது விலகிப் போகும்.

அவர்கள் தேவ உறவில் வாழ்ந்திருந்தால், கர்த்தர் அவர்களைக் கஷ்ட நேரங்களில் சோர்ந்து செயலிழக்காதபடி தாங்கியிருப்பார். வாழ்க்கையில் தோல்விகளும், ஏமாற்றங்களும், இழப்புகளும் ஏற்படும் போது, மனம் கர்த்தர் விஷயத்தில், சில நேரம் உற்சாகம் குறைந்து காணப்பட வாய்ப்புண்டு. ஆனால், நாம் தேவ உறவின் வாழ்க்கை அனுபவமுடையவர்களாயிருந்தால், நாம் தேவனைத் தேடும் உற்சாகம் குன்றியிருந்தாலும், தேவன் நம்மைத் தேடி வருவார். அவர் நம்மை ஊக்குவித்து உற்சாகப்படுத்துவார். நாம் ஒரு நல்ல உறவினரோடு இருந்தால், நம்முடைய கஷ்ட நேரத்தில் நாம் அவரைத் தேடாவிட்டாலும், அவர் நம்மைத் தேடி வருவது இயல்பான ஒன்று.

சில கஷ்டங்களைக் காண நேரிடும் போது, ஆவிக்குரிய அனுபவங்களில் சிலரால் தொடர முடிவதில்லை. ஏனென்றால், அவர்களிடம் அதுவரை இருந்தது அவர்கள் உருவாக்கிக் கொண்ட தேவ பக்தி வாழ்க்கைதானேயன்றி, தேவ உறவு வாழ்க்கை அல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் பலவிதமான போராட்டங்களையும், சோதனைகளையும் நெருக்கடிகளையும் சந்தித்தவன். ஆயினும், ஒருபோதும் சோர்ந்து போய் ஆவிக்குரிய அனுபவங்கள் இல்லாமலிருந்ததில்லை. ஏனென்றால், பவுலிடம் இருந்தது தேவ உறவின் வாழ்க்கை.

சிந்தனைக்கு...

சந்தோஷ வேளையிலும் நீ கர்த்தரைத் தேடு.
துன்ப வேளையில் அவர் உன்னைத் தேடி வருவார்.

ஜூலை 5

கர்த்தர் நடத்தாவிட்டால்...

சங்கீதம் 143:1–12

என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.
சங்கீதம் 143:10

அநேகர் தேவ பக்தியுடன் வாழ்கின்றார்கள். ஆனாலும், அவர்கள் தேவ ஆவியால் நடத்தப்படவில்லை. ஏனென்றால், அவர்கள் தேவனால் மறுபிறப் படையும் ஒரு உண்மையான ஆவிக்குரிய அனுபவத்துடன் கிறிஸ்தவ வாழக் கையைத் துவங்கவில்லை. எனவே, தேவ பக்தியிருந்தும் வாழ்க்கையில் ஏராள மான கஷ்டங்களும், சஞ்சலங்களும், போராட்டங்களும் ஏற்படுகின்றன. இந்தப் பூமியில் நாம் நீதிமான்களாயிருந்தாலும் அவர்களுக்கும் பல துன்பங்களும், கஷ்டங்களும் நேரிட முடியும். ஆனால், மனித வாழ்வில் வருகின்ற பெரும்பாலான கஷ்டங்கள், தேவ ஆவியினால் நடத்தப்படாததாலேயே வருகின்றது.

ஒருபுறம் ஆராதனை, ஜெபம், பக்தி ஒழுங்குகள் என சில விஷயங்கள் இருக்கும். ஆயினும், மறுபுறத்தில், தேவனுடைய வழிகளில் நடத்தப்படும் அனுபவம் இல்லாததால், எல்லோருக்கும் ஏற்படுவதுபோல பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஏனென்றால், ஏராளமான மனித துன்பங்களுக்குப் பின்னால் இருப்பவை, நற் சுபாவமற்ற வாழ்க்கை முறையும், நற்சாட்சி பெற இயலாத செயல்களுமே. யோசேப்பு, தாவீது போன்றோர் தேவனால் நடத்தப்படுபவர்களாயிருந்ததால், கஷ்டங் களின் நடுவிலும் தேவ உதவியைப் பெற்று சோதனைகளைக் கடந்தனர்.

அதே வேளையில், சவுல் இராஜா தேவ பக்தியுடையவனாயிருந்தும், தேவ வழியில் நடத்தப்பட்ட அனுபவம் இல்லாததால், மனக்கிலேசம் ஏற்படுத்தும் வித மான பல பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டான். ஆம், வாழ்க்கையில் நாம் தேவ வார்த்தைகளாலும் தேவ ஆவியாலும் நடத்தப்படும் போது, ஏராளமான பிரச் சினைகளும், சோர்வுக்குரிய காரியங்களும் தவிர்க்கப்படுகின்றன என்பது உண்மை. ஆயினும், இந்தப் பூமியில் நமக்குப் பிரச்சினைகளே இல்லாத வாழ்க்கை கிடைக்கும் என்ற வாக்குறுதி எதுவும் இல்லை.

அதே வேளையில், தேவ உறவுடன் வாழ்கின்றவர்கள் பலவிதக் கஷ்டங் களைக் காண நேரிட்டாலும், தேவன் அவர்களைச் சிறப்பாகக் கடந்துப் போகச் செய்வார். எந்தப் பாதையில், எந்த விதமாக அவர்களைக் கடந்து போகச் செய்ய வேண்டும் என்று கர்த்தர் அறிவார். தேவ ஆவியின் நடத்துதலுக்கு உட்பட்டு வாழப் பழகிக் கொண்ட மனிதன் சோர்ந்து போவதில்லை. ஏனென்றால், அவன் அநேக கஷ்டங்கள் வருகிறதே என்று பார்ப்பதில்லை. எது வந்தாலும் தன்னை நன்றாக நடத்திச் செல்ல கர்த்தர் தன்னோடு இருப்பதையே பார்ப்பான்.

சிந்தனைக்கு...

தேவ வழிகளில் நடக்கப் பழகிக் கொண்டவர்கள்,
சோதனை வேளையில் தேவனால் நடத்தப்படாமலிருப்பதில்லை.

ஜூலை 6

தேவப் பிரசன்னம் எப்படி?

யாத்திராகமம் 33:11–23

என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்.
யாத்திராகமம் 33:14

ஆராதனை வேளைகளிலும், ஜெபக்கூட்ட வேளைகளிலும், முக்கியமான ஆவிக்குரிய நிகழ்ச்சி வேளைகளிலும், ஜனங்கள் தேவ பிரசன்னத்தை உணருகின்றனர். ஆனால், உண்மையான தேவப் பிரசன்னம் என்பது, நாம் பாடல்கள் மூலமாகவோ, ஜெபங்கள் மூலமாகவோ, ஆராதனைகள் மூலமாகவோ நமக்குள் நாம் உணரும் ஒரு விசேஷ உணர்ச்சி அல்ல. உண்மையான தேவப் பிரசன்னம் என்பது விசுவாசம் சார்ந்தது. உண்மையான தேவப் பிரசன்னம் என்பது நாம் அவருக்கு நம்மை அர்ப்பணித்து வாழ முன்வந்ததின் விளைவானது.

இந்த தேவப் பிரசன்னம் என்பது, நாம் குறிப்பட்ட ஆன்மிகச் சூழல்களில் உணருவதற்கென்று தரப்படுவது அல்ல.யோசேப்போடு தேவப் பிரசன்னம் இருந்தது. மோசேயோடு தேவப் பிரசன்னம் இருந்தது. அது மனதில் உணர்ந்து பார்க்கும்படியான ஒரு உணர்ச்சி அனுபவம் அல்ல. அது விசுவாசத்தின் வாயிலாக, நம்முடைய வாழ்க்கையில் கர்த்தர் செயல்படுவதைக் காண்கின்ற ஒரு அனுபவம்.

அநேகர் பாடல்கள் மூலமாக, ஆராதனை மூலமாக எப்படியாவது தேவப் பிரசன்னத்தை உணர்ந்துவிட வேண்டுமே என்று வாஞ்சிக்கின்றனர். சில நேரங்களில், தங்களுக்குள் பரவசமான மனநிலையை எட்டும் போது, தேவப் பிரசன்னத்தை அனுபவிப்பதாக எண்ணுகின்றனர். ஆனால், சற்று நேரப் பரவச மன நிலை அனுபவமாக அது இருக்கிறதேயன்றி, வாழ்க்கைச் சூழல்களில் பரிசுத்தமாக வாழ உதவுகிற பிரசன்னமாக இல்லை. பிரசன்னம் என்பது அதைத் தேடுகிறவர்களுக்கு ஒரு பக்திப் பரவச மனநிலையைக் கொடுப்பது அல்ல. அது தேவனுடைய நோக்கங்களையும், திட்டங்களையும், ஒருவருடைய வாழ்வில் செயல்படச் செய்ய வேண்டும்.

நாம் பாடலின்றி, ஆராதனைச் சூழ்நிலையின்றி, சாதாரண வாழ்க்கைச் சூழ்நிலைகளில், விசுவாசத்தின் வாயிலாக நம்மிடம் தேவப் பிரசன்னத்தை எதிர்பார்க்க வேண்டும். மோசே கடுமையான ஒரு பொறுப்பை நிறைவேற்றும் ஒரு பகுதிக்கு வந்த போது, அவன் தேடியது தேவப் பிரசன்னம்தான். அது தனக்குள் ஒரு ஆன்மிக மன உற்சாக நிலையைப் பெறுவதற்காக அல்ல. அது தேவன் அளித்த கனமான வேலையைத் தேவ துணையோடும், வல்லமையோடும் செய்து முடிப்பதற்காகவே.

சிந்தனைக்கு...

தேவப் பிரசன்னம் என்பது ஒரு உணர்ச்சி அல்ல.
அது உண்மையான வாழ்க்கையின் உயிரோட்டம்.

ஜூலை 7

பல பிரச்சினைகள்

சங்கீதம் 34:4–22

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்.
சங்கீதம் 34:19

வாழ்க்கையில் ஒன்றிரண்டு பிரச்சினைகள் என்றால், அதனால் நாம் அதிகமாகச் சோர்வடைவதில்லை. ஆனால், பிரச்சினைகள் ஏராளமாயிருக்கும் போது, மனஞ்சோர்ந்து போக நேரிடுகிறது. என்ன இது, வாழ்க்கையில் எல்லாம் நமக்கு எதிராக இருப்பதுபோல இருக்கிறதே, என்று எண்ணிப் பதட்டப்படுகின்றோம். ஆனால், தேவ நம்பிக்கையோடு வாழ்கின்றவர்களுக்கு ஓரிரு பிரச்சினை என்றாலும், ஏராளம் பிரச்சினை என்றாலும் எல்லாம் கணக்கு ஒன்றுதான்.

ஏனென்றால், தேவ நம்பிக்கையோடு தேவனைச் சார்ந்து வாழ்கின்றவர்களுக்கு, ஒரு பிரச்சினை என்றாலும் கர்த்தர்தான் தீர்க்கின்றார். ஏராளம் பிரச்சினை என்றாலும், கர்த்தர்தான் தீர்க்கின்றார். கர்த்தரால்தான் நாம் நம்முடைய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றோம் என்றால், அது ஒரு பிரச்சனையாயிருந்தால் என்ன, பல பிரச்சனையாயிருந்தால் என்ன? எத்தனை பிரச்சினை வந்தாலும், அதனை நமக்காக நின்று தீர்க்கப் போகிறவர் அவரே.

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் சிலவாகவோ பலவாகவோ இருக்கலாம். ஆனால், கர்த்தர் அவை எல்லாவற்றினின்றும் அவனை விடுவிக்க வல்லவரே. தாவீதுக்கு வந்த போராட்டங்கள் ஏராளம்தான். மோசேக்கு வந்த போராட்டங்கள் ஏராளம்தான். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு வந்த துன்பங்கள் ஏராளம்தான். ஆனால், அவை கொஞ்சமா அதிகமா என்பது ஒரு முக்கிய விஷயமாயிருக்கவில்லை. கர்த்தர் அவர்களோடிருந்தார். எனவே, எல்லாப் பிரச்சினைகள் நடுவிலும் அவர்களுக்கு அவர் ஆதரவாயிருந்தார். ஆம், நம்முடன் இருக்கும் கர்த்தர் சில பிரச்சினைகளாயிருந்தாலும், பல பிரச்சனைகளாயிருந்தாலும், அவைகளிலிருந்து நம்மை அவர் விடுவிக்க வல்லவரே.

நாம் செய்ய வேண்டியதெல்லாம் அநேகப் பிரச்சினைகளைப் பார்த்து, எனக்கு ஏன் இத்தனை பிரச்சினை என்று எண்ணிச் சோர்ந்து போவதல்ல. பிரச்சினைகள் அதிகமாயிருந்தால், கர்த்தருடைய செயல்பாடுகளும் நம்மிடத்தில் அதிகமாயிருக்கும் என்று விசுவாசிப்பதே தேவை. நம்மோடு கர்த்தர் இருப்பதை நாம் நமக்குள் உணர்ந்து, உற்சாகமடையத்தக்கதாக தேவ சமுகத்தைத் தேடியும், உறுதிப்படுத்தியும் வாழ வேண்டும். கர்த்தருக்கு உகந்தவர்களாக வாழ்ந்து தேவ ஐக்கியத்தை அனுபவிக்கும்போது, பல பல பிரச்சினைகளுக்காக நாம் பயப்படத் தேவையில்லை.

சிந்தனைக்கு...

ஓரிரு பிரச்சினைக்கு உதவுகிற அதே கர்த்தர்,
ஒரு நூறு பிரச்சினை வந்தாலும், உதவி செய்ய இயன்றவரே.

ஜூலை 8

இதுவும் இறைப்பணியே

தானியேல் 6:10–22

நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்.
தானியேல் 6:22

ஒருவர், பல விதமான மனநிலை வேறுபாடுகளைக் கொண்டவர்கள் பணிபுரியும் ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்தார். அங்குள்ள சூழ்நிலை யாருக்கும் எளிதாகக் கோபத்தையும், அதிருப்தியையும், சோர்வையும் கொண்டு வரும். ஆனால், அவர்களுக்கு நடுவில் இவரால் கோபதாபமடையாமலும், அதிருப்தியடையாமலும், எதையும் சவாலாக எடுத்துக் கொண்டு பணிபுரிய முடிந்தது. ஏனென்றால், இவர் தன்னை அந்த நிறுவனப் பணியாளர் என்று பாராமல், ஒரு தேவ பணியாளராகவே பார்த்தார்.

தேவ ஊழியம் என்பது, போதகர்களோடு மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல. அது தேவனுக்காக, தேவனுக்கேற்ற சாட்சியோடு செயல்படுகிறவர்களோடும் சம்பந்தப்பட்டது. தேவப் பணிக்கு அல்லது கர்த்தருடைய ஊழியத்திற்குப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருப்பது மட்டுமே செயல்பாடு அல்ல. கர்த்தரையும் அவருடைய போதனைகளையும், பிரதிபலிக்கும் விதமாகச் செயல்படும் எந்த ஒரு நடவடிக்கையும் ஊழியமே. சில நேரங்களில் போதனை செய்யும் போதகர்களிடம் காண இயலாமல் போகும் முன்மாதிரி வாழ்க்கையை, வேறு பல வேலைகளைச் செய்கிறவர்களிடம் அதிகமாகப் பார்க்க முடியும்.

யோசேப்பு ஒரு போதகர் அல்ல. தானியேல் ஒரு போதகர் அல்ல அவர்கள் மிக முக்கியமான உலகப் பொறுப்புகளில் இருந்தனர். ஆனால், அவர்கள் அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றிய விதங்களில், தேவனுடைய நாமம் மிகுதியாக மகிமைப்பட்டது. அவர்கள் அரசர்களுக்கான ஊழியர்களாக அறியப்பட்ட போதிலும் கூட, தங்களை அவர்கள் தேவ சித்தம் செய்வதற்காக அழைக்கப்பட்ட தேவ ஊழியர்களாகவே எண்ணினார்கள்.

சிலர் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டுமே, தேவ அழைப்பைத் தெரிந்து கொள்ள முடியவில்லையே என்றெல்லாம் அங்கலாய்ப்பார்கள். அவர்களுக்குப் போதனை ஆற்றல் இல்லாவிட்டால்கூட, ஊழியத்திற்குப் போகணும், இறைப்பணி செய்யணும் என்று புலம்பிக் கொண்டிருப்பார்கள். அதே வேளையில், தாங்கள் செய்யும் பணிகளிலோ அல்லது வியாபாரத்திலோ, தேவனை மகிமைப்படுத்தும் விதமான உத்தமமோ உண்மையோ இல்லாதிருப்பார்கள். கர்த்தரையும் அவருடைய வழிகளையும் பிரதிபலித்துச் செய்கின்ற எதுவும் தேவ ஊழியமே.

சிந்தனைக்கு...

மற்றவர்களுக்குப் போதிக்கப் போதகராயிருக்க வேண்டியது கட்டாயமல்ல. முன்மாதிரியாக வாழ்ந்தாலும் அதைச் செய்யலாம்.

ஜூலை 9

அன்பும் அனுபவமும்

யோவான் 14:13–26

நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால்...
யோவான் 14:15

ஒரு பாஸ்டர் தேவனுடைய அன்பைக் குறித்து, மிக மிகப் புகழ்ந்து பிரசங்கம் செய்வார். அதுபோலவே, தேவனுடைய அன்பை மிக மிக மலையளவாக வர்ணிக்கும் நிறையப் பாடல்கள் பாடுவார். தேவனுடைய அன்பு எவ்வளவு பெரியது என்று அவர் உணர்ச்சிகரமாகப் பேசும் போது, அவர் கண்களிலிருந்து கண்ணீர் வரும். அதுபோல, அவர் செய்யும் அன்புப் புகழ்ச்சியைக் கேட்கும் விசுவாசிகளின் கண்களிலும் கண்ணீர் வரும். ஆனால், கர்த்தருடைய கற்பனைகளின்படி வாழ்கின்ற ஒரு சாட்சியை அவரிடம் யாரும் பார்க்க முடியாது.

காரணம் என்ன? தேவனுடைய அன்பைக் குறித்த விஷயங்கள் அறிவிலும், உணர்ச்சியிலும் இருக்கிறதேயன்றி, அனுபவத்தில் இல்லை. ஒருவர் கர்த்தருடைய அன்பை எவ்வளவு பிரமாதமாக அறிந்து வைத்திருக்கிறார் என்பது அல்ல. அவர் அதை எவ்வளவு அனுபவிக்கின்றார் என்பதே முக்கியம். அன்பைக் குறித்த அதிக அறிவோ, உணர்ச்சி வசப்பட்ட சிந்தனையோ, பெரிய நல்விளைவுகளை ஏற்படுத்தாது. நீங்கள் என்னில் அன்பாயிருந்தால், என்னுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்றார் இயேசு.

அதனுடைய அர்த்தம் என்ன? ஒருவன் கர்த்தருடைய அன்பை தனக்குள் உண்மையாக அனுபவித்தால், அவன் அவருடைய வார்த்தைகளின்படி செயல்படுவதற்கு ஆற்றல் பெறுவான். அதுதான் அவன் தேவ அன்பை ருசித்ததின் அடையாளம். சிலர் உலகத்தில் எல்லாரைவிட இயேசுதான் தங்களை அதிகமாக நேசிப்பதாகச் சொல்வார்கள். அதுபோல, கிறிஸ்துவை தாங்கள் எல்லாரைவிட அதிகமாக நேசிப்பதாகச் சொல்வார்கள். ஆனால், மனிதர்களைவிட, உலகத்தைவிட பணத்தைவிட, சுயத்தைவிட இயேசுவுக்குக் குறைவாகவே முக்கியத்துவம்தான் தருவார்கள்.

அவர்கள் மதபக்தியினாலும். உணர்ச்சிகரமான மனநிலையினாலும். இயேசுவின் அன்பைக் குறித்து அதிகமாகப் புகழவும், பாடவும், பேசவும் செய்கின்றார்கள். ஆனால், அவர்களின் மனவாஞ்சையெல்லாம் சுய உணர்வுகள் மேலும், பணம் பொருள் மேலும் மனிதர்கள் மேலுமே இருக்கும். ஏனென்றால், அகத்தில் இயேசுவின் அன்பு அவர்களுக்குள் வரவில்லை. தேவ அன்பு அப்போஸ்தலனாகிய பவுலை நெருக்கி ஏவியது (2 கொரி 5:14) ஆம், எந்த அளவிற்குக் கர்த்தருக்குப் பிரியமாக வாழ்கிறோமோ, அந்த அளவு அவரின் அன்பை அனுபவித்திருக்கிறோம்.

சிந்தனைக்கு...

தேவ அன்பை அனுபவித்துப் பழகியவர்கள்,
பிறரை வெறுத்துப் பண்பற்றவர்களாகப் போகமாட்டார்கள்.

ஜூலை 10

கர்த்தர் அருகில்

சங்கீதம் 118:1–17ஏ

கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்.

சங்கீதம் 118:6

தேவன் நமக்கு அருகாமையில் இருக்கின்றார். இது வேதம் நமக்குத் தரும் பொது அறிவு. இதை நாம் விசுவாசிக்க வேண்டும். இதை நாம் எதிர்பார்க்க வேண்டும். தேவன் நமக்கு அருகாமையில் இருந்தால் சோதனைகள், பிரச்சினைகள் எதுவும் நம்மைக் கலங்கடிக்க வாய்ப்பில்லை. எதுவானாலும் நமக்கு அருகாமையிலிருக்கின்ற கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை வந்து விடும். ஆனால், வாழ்க்கையின் சில கால கட்டங்களில், இந்த வேதாகம அறிவு நமக்குக் கைகொடுப்பதில்லை. ஏனென்றால், நமக்கு அருகாமையில் கர்த்தர் இருக்கின்றார் என்பதை, மனதில் நாம் உணர முடியவில்லை.

இதனை உறுதிப்படுத்தவே நாம் தேவனை நோக்கிச் ஜெபிக்க வேண்டும். ஜெபத்தின் மூலம் நாம் விசுவாசத்தோடு கர்த்தரிடம் பேசும் போது, அவர் நமக்கு அருகில் இருப்பதை நம்முடைய ஆத்துமா உணர ஆரம்பிக்கிறது. ஜெப நேரம் என்பதை வெறும் வேண்டுகோள் வாசிக்கும் நேரமாக எண்ணாமல், கர்த்தரை நமக்குள் அறிகின்ற ஒரு சூழலாக எண்ண வேண்டும். நாம், கர்த்தர் நமக்கு அருகில் இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு அவரிடம் பேசப் பேச, அவர் தம்மை நமக்குள் அறிகின்ற வாய்ப்பைத் தருகின்றார்.

நாம் வெறும் ஜெப பக்தியாளர்களாக அல்ல. நாம் கர்த்தருக்கு நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்து, தேவனுடைய பிள்ளையாக மறுபிறப்பின் அனுபவம் பெற வேண்டும். அந்த அனுபவப் பின்னணியில் நாம் தேவனை அப்பா பிதா எனக் கூப்பிட்டு அவரிடம் பேச வேண்டும். அப்போது, தேவன் நமக்கு அருகில் இருக்கிறார் என்ற வேதாகம உண்மை, தேவ ஆவியினால் நம்முடைய இருதயத்தில் உறுதிபடுத்தப்படுகின்றது. இந்த அனுபவம்தான் வாழ்க்கையில் எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும், நம்மோடு கர்த்தர் இருக்கின்றார் என்ற நம்பிக்கையையும், தைரியத்தையும் தருகின்றது.

சில நேரங்களில், நாம் ஜெபத்தில் விண்ணப்பிக்கிறபடியே பிரச்சினைகள் நீங்கிப் போய்விடுவதில்லை. ஆனால், நாம் ஜெபத்தின் வாயிலாக நமக்கு அருகில் கர்த்தர் இருப்பதை ஆவியில் உறுதிப்படுத்த முடிகிறது. கர்த்தர் அருகில் இருப்பதை நமக்குள் நாம் உறுதிப்படுத்துவதால், புதிய நம்பிக்கையையும் தைரியத்தையும் பெறுகின்றோம். எவை நமக்கு எதிராக இருந்தாலும், கர்த்தர் நம் பட்சத்தில் நமக்கு ஆதரவாகவே இருக்கின்றார் என்று அறிந்து, உறுதியான மனதுடன் எதையும் எதிர்நோக்க ஆயத்தப்படுகிறோம்.

சிந்தனைக்கு...

கர்த்தரோடு நெருங்கி வாழப் பழகினவனை,
பிரச்சினைகள் நெருக்கினாலும், அவன் ஒடுங்கமாட்டான்.

ஜூலை 11

மறுபடி விழுந்தால்...

யூதா 17–25

வழுவாதபடி உங்களைக் காக்கவும்...

யூதா 24

கர்த்தரை விசுவாசிக்கின்ற ஒருவர் செய்யக் கூடாத தவறைச் செய்துவிட்டு, குற்ற உணர்வினால் வருந்திக் கொண்டிருந்தார். தேவ ஊழியர் ஒருவர் அதை அறிந்து, கர்த்தரிடம் தவறை அறிக்கையிட்டு செய்த தவறுக்காக வருந்துங்கள். கர்த்தர் உங்களை மன்னிப்பார் என்று ஆலோசனை கூறினார். அதற்கு அவர் ஏற்கெனவே சிலமுறை மன்னிப்புக் கேட்டும் மறுபடியும் தவறியிருக்கிறேன். இப்போதும் மன்னிப்புக் கேட்டு விட்டு, மறுபடியும் தவறிவிட்டால் என்ன ஆகும் என்று பயமாயிருக்கிறது என்றார்.

அதற்கு அவர் இனியொருமுறை தவறிவிடுவேனோ என்பது எதிர்கால விஷயம். அது உங்கள் கையில் இல்லை. இப்போது நடந்ததைச் சொல்லி வருந்திக் கர்த்தரிடம் நல்மனம் பொருந்துங்கள் என்றார். அநேகர் கர்த்தர் மன்னிப்பார் என்று நம்பினாலும், மறுபடி அதே பாவத்தைச் செய்ய நேரிட்டால் என்ன செய்வது என்று அஞ்சுகின்றனர். இது ஒரு எதிர்காலம் சம்பந்தப்பட்ட பயம். மறுபடியும் தவறி விடாமல் வாழ கர்த்தர் கிருபை தருவார் என்று நம்பி வாழ வேண்டும். ஒரு குழியில் விழுந்து எழும்ப முயற்சிக்கும் போது, மறுபடியும் இன்னொரு குழியில் விழுந்து, பின் விடுவேனோ என்று அஞ்சினால், இப்போது எழும்ப முடியாது.

மறுபடியும் விழாமல் காக்கும் கிருபையைத் தேட வேண்டும். ஒரு தரிசனத் தோடும் விசுவாசத்தோடும் இனி கர்த்தருக்கு உகந்தவனாய் வாழ முடியும் என்று முன்னோக்கிச் செல்ல வேண்டும். ஒரு வேளை மறுபடி விழ நேரிட்டால் என்ன செய்வது? மறுபடி விழ நேரிட்டால், மறுபடியும் தேவ மன்னிப்பின் கிருபை நமக்குக் கிடைக்கும். மறுபடியும் விழுந்தால் மறுபடியும் தேவ கிருபையால் எழும்புவோம். தகப்பன் தன் குழந்தை விழ நேரிட்டால், ஒரு முறை இரு முறைதான் என்று வரம்பு வைக்கமாட்டான். பிள்ளை மறுபடி விழுந்தால், தகப்பன் மறுபடியும் தூக்கி விடுவான்.

கர்த்தர் ஒருபோதும் இனியொருமுறை மன்னிக்க இயலாது என்று கூற மாட்டார். சீடர்களிடம் ஏழு எழுபது முறை மன்னிக்கச் சொன்னவர், அதற்கு அதிக மாக நம்மை மன்னிக்க முடியும். அதே வேளையில், நமக்கு இன்னொரு விதமான நம்பிக்கை வேண்டும். இனியொரு முறை விழ நேரிடுமோ என்று பயப்படுவது அல்ல. இனியொருமுறை விழுந்துவிடாமல் கர்த்தர் என்னைக் காப்பார் என்று விசுவாசிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

விழாமல் நிற்போம் என்பதும் விசுவாசமே,
விழுந்தாலும் எழுவோம் என்பதும் விசுவாசமே.

ஜூலை 12

வளருவது எப்படி?

கொலோசெயர் 2:1–19

அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும்....
கொலோசெயர் 2:6

அநேகர் இன்னும் இன்னும், நாம் கர்த்தருக்குக் கீழ்படிந்து வாழ்வது எப்படி என்று யோசிக்கின்றார்கள். அநேகர் இன்னும் இன்னும் அதிகமாக, நாம் கேட்ட சத்தியப் போதனைகளின்படி வாழ்வது எப்படி என்று சிந்திக்கின்றார்கள். அநேகர் இன்னும் இன்னும், நாம் நல்ல குணங்களோடு வாழ்வது எப்படி என்று யோசனை செய்கின்றனர். இவ்விதம் சிந்திக்கின்ற பலர், இன்னும் இன்னும் சுய முயற்சிகளையே வேகமேற்றுகின்றனர். சாட்சியாய் ஜொலிப் பதற்கு இன்னும் இன்னும் சுய ஆற்றலையே பெருக்கிக் கொள்ளப் பார்க்கின்றனர்.

கனிகொடுத்தல், பிரகாசித்தல், சாட்சியாய் வாழ்தல், முன்மாதிரியாய் விளங்குதல், நற்குணத்தில் வளருதல் என எந்த ஒரு ஆவிக்குரிய உயர் அனு பவமும், தேவ உறவுடன் வாழ்தல் என்ற அனுபவத்தில் ஆழமாய் செல்வதாலேயே வருகிறது. தேவ ஐக்கிய அனுபவத்தில் நாம் இன்னும் இன்னும் ஆழமாகச் செல்ல வேண்டும். இன்னும் ஒரு வல்லமையான அபிஷேகம் அல்ல. இன்னுமொரு ஆழமான அர்ப்பணிப்பு அல்ல. நாம் கர்த்தரோடு பேசிப் பழகி வாழ்கின்ற ஆவிக் குரிய செயல்பாட்டில் இன்னும் வளர வேண்டும்.

அநேகர் இன்னும் இன்னும் சுய முயற்சி செய்வதிலேயே கவனம் செலுத்து கின்றனர். ஆனால், தேவ உறவை ஆத்துமாவில் உணருவதற்கேதுவான, தேவ சமுக அனுபவங்களில் நாம் தீவிரமாகச் செல்லாவிட்டால், முயற்சிகள் அதிக விளைவை ஏற்படுத்தாது. கணிசமான நேரங்களைத் தேவனுடன் நாம் பேசு வதற்கும், தேவனுடைய காரியங்களைச் சிந்திப்பதற்கும் செலவிட வேண்டும். ஜெபம் என்றால், நம்முடைய விண்ணப்பங்களைச் சொல்வதற்கான வேளையாக மட்டும் எண்ணாமல், நம்முடைய வாழ்க்கையின் எல்லாச் சூழல்களைக் குறித்தும் நிகழ்வு களைக் குறித்தும் கர்த்தரிடம் சொல்ல வேண்டும்.

ஒரு மனநிலைப் பரவசத்தை எட்டுவதை நோக்கமாகக் கொள்ளாமல், ஆத்துமாவில் அல்லது இருதயத்தில் கர்த்தரோடிருக்கின்ற நிச்சயத்தைப் பெற விரும்ப வேண்டும். கர்த்தரோடு சம்பந்தப்பட்ட விஷயங்களையும், வேத வார்த்தை களைக் குறித்த காரியங்களையும், மனதில் அதிகமாகத் தியானிக்க வேண்டும். தேவன் தம்மை நமக்குள் வெளிப்படுத்துவார். கர்த்தர் நம் வாழ்வில் இருப்பதை அறிந்து கொள்ள நமக்குள் வாய்ப்புகள் ஏற்படும். இவ்விதம், தேவ ஐக்கிய அனுபவங்களில் வளருவதின் விளைவே, கனிகொடுத்தலும் சாட்சி வாழ்க்கையும்.

சிந்தனைக்கு...

உன்னுடைய இறைபக்தி உண்மையானதா
என்பதைச் சொல்லும் தகுதி, உன்னுடைய சுபாவங்களுக்கு மட்டுமே உண்டு.

ஜூலை 13

மனிதனா புனிதனா?

மத்தேயு 11:1–19

மனுகுமாரன் போஜன பானம் பண்ணுகிறவராய்...
மத்தேயு 11:19

ஆன்மிகமாக வாழ விரும்பிய ஒருவர், எளிய வாழ்க்கைமுறை, தாழ்மையான தோற்றம், பக்தியான செயல்பாடுகள், சுய கட்டுப்பாடுகள் என தனக்கு நல்ல ஒரு புனிதத் தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டார். ஆன்மிகத்திற்கு அப்பால் எதையும் பேசமாட்டார். எல்லோரைப் போல் உலக சம்பந்தமான காரியங்களோடு அதிகத் தொடர்பு வைக்கமாட்டார். உலக சம்பந்தமாக எதையாவது பேசினால், நாங்களெல்லாம் உலகப்பிரகாரமானவர்கள் அல்ல என்பார். அவரைக் குறித்து அவருடைய முன்னாள் நண்பர் ஒருவர் பேசும்போது, அவர் புனிதராகி விட்டார். ஆனால், மனிதத்தை இழந்து விட்டார் என்றாராம்.

சிலர் ஆன்மிக அனுபவம் அல்லது ஆவிக்குரிய அனுபவம் என்றால், அது மனிதர்களை விட்டு விலகி, முற்றிலும் கடவுளுடன் இணைந்திருத்தல் என்றே நினைக்கின்றனர். எனவே, சிலர் இரவும் பகலும் ஜெபம், உபவாசம், தியானம் என கடவுளோடு தங்களை அதிகமாக இணைத்துக் கொள்ள விரும்பி, மனிதர்களோடுள்ள உறவைத் தவிர்த்து விடுகின்றனர். ஆனால், அது அப்படி அல்ல. கர்த்தரோடும், கர்த்தரோடு தொடர்புடைய செயல்பாடுகளிலும், நாம் அதிகமாகப் பிணைந்திருக்க வேண்டும். அதே வேளையில், மனிதர்களுக்குரிய காரியங்களோடும், நமக்குப் போதுமான ஈடுபாடுகள் வேண்டும்.

இயேசு கிறிஸ்து ஒரு துறவியைப் போல வாழவில்லை. அவர் மனிதர்களை விட்டு விலகி, ஒரு புனிதத் தோற்றத்தோடு ஒரு மடத்தில் தங்கி வாழவில்லை. அவர் மனிதர்கள் நடுவில் வாழ்ந்தார். மனிதர்களோடு பேசிப் பழகி வாழ்ந்தார். அவர் மனித வாழ்வோடு தொடர்புடைய எல்லாக் காரியங்களைக் குறித்தும் பேசினார். அவர் பக்தி அடையாளங்களுக்காகவோ, ஆன்மிகத் தோற்றங்களுக்காகவோ அறியப்படாமல், உயர்ந்த பண்புகளுக்காகவும், சிறந்த போதனைகளுக்காகவும், மேன்மையான மனித உறவுகளுக்காகவும் அறியப்பட்டார்.

நாம் புனிதர்களாகவே வாழ அழைக்கப்பட்டுள்ளோம். (1 கொரிந்தியர் 1:2) ஆனால், மனிதத்தை இழந்து அல்ல. நாம் நம்முடைய சுபாவங்கள், நடத்தைகள், சிந்தனைகள், ஒழுங்குகள், மனிதத் தொடர்புகள் ஆகியவற்றில் புனிதத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும். அதே வேளையில், மனிதர்களோடு மனிதர்களாக வாழ வேண்டும். மனித வாழ்க்கை தொடர்பான காரியங்களில் சம்பந்தப்பட வேண்டும். எல்லாவற்றிலும் தேவ சாயலை வெளிப்படுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

எல்லா மனிதர்களின் நடுவிலும் வாழப் பழகு.
ஆனால், எல்லா மனிதர்களைப் போல வாழப் பழகிவிடாதே.

ஜூலை 14

புதிய ஆசீர்வாதம்

யோபு 42:1–17

கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும்...
யோபு 42:12

தேவனுடைய பிள்ளைகளுக்கு இன்று தீமை போன்று தோன்றுகின்ற பல விஷயங்கள், நாளைக்கு நன்மையாக மாறும் என்பது உண்மை. தீமையாகப் பார்க்கவும் உணரவும்பட்ட சில விஷயங்கள், பின்னாட்களில் ஒரு எதிர்பார்த்திராத நன்மையாக மாறும் போது, அது மிகவும் பரவசமான அனுபவம். ஆனால் சில இழப்புகள், தோல்விகள், ஏமாற்றங்கள் என்றுமே நன்மைக்கேதுவானது என்று பார்க்க இயலாதவையே. பின்னாட்களில் எவ்வளவுதான் நல்லதைக் காண நேரிட்டாலும், அதற்கேதுவாகத்தான் கடந்த காலத்தில் ஒரு இழப்பு ஏற்பட்டது என்று கூற இயலாது.

ஆனால், சில நேரங்களில் சில தீமைகளுக்குப் பிறகு, தேவன் ஒரு புதிய நன்மையைக் காணச் செய்கின்றார். அது முன்னாளில் நாம் அனுபவித்து இழந்து போன நன்மையைவிடப் பெரியது. இந்தப் புதிய பெரிய நன்மையைத் தருவதற் காகத்தான், முன்பிருந்த பழைய நன்மையை இழப்பதற்குத் தேவன் அனுமதித் தாரா? இல்லை. அது வேறு அத்தியாயம். இது வேறு அத்தியாயம். யோபு தனக் கிருந்த எல்லாவற்றையும் இழந்தான். பின்னாளில் முன்பிருந்ததைவிட இரண்டத்தனையாகப் பெற்றுக்கொண்டான்.

இங்கே, இவ்விதம் இரண்டு மடங்கு ஆசீர்வாதங்களோடு வாழ்வதற்கு ஏதுவாகத்தான், முன்பிருந்த ஆசீர்வாதங்களை இழக்கத் தேவன் அனுமதித்தாரா? இல்லை. அது வேறு அத்தியாயம். இது வேறு அத்தியாயம். ஆனால், அங்கே கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு உண்மை உண்டு. மனதைப் பாதிக்கும் இழப்புகளின் நடுவிலும், வாழ்க்கையை அசைத்துவிட்ட துன்பங்களின் நடுவிலும், தேவனை சார்ந்து தேவனுக்காக வாழ்வது ஒரு பெரிய மகிமையான காரியம். அதனுடைய விளைவாகத் தேவன், ஒருவருக்கு ஒரு புதிய ஆசீர்வாதச் சூழலைக் கொடுக்க முடியும். அது முன்பிருந்ததைவிட அதிக சந்தோஷத்திற்குரியது.

ஆம், சில இழப்புகள், தோல்விகள், ஏமாற்றங்கள் நிரந்தரமானவை. அவை ஒரு போதும் திரும்ப வராது. ஆனாலும், கர்த்தரை நம்பி, அவருக்காக வாழ்ந்து காட்ட உறுதிகொண்டு நின்றவருக்குச் இனி வாழ்வின் இறுதிவரை துக்கத்தோடு தான் வாழ்ந்து முடிக்க வேண்டும் என்ற நிலமை இல்லை. கர்த்தர் யாருடைய வாழ்க்கையிலும் ஒரு புதிய காரியத்தைச் செய்ய முடியும். அது கடந்த காலம் நிகழ்ந்த இழப்புகள் ஏற்படுத்திய வெற்றிடத்தை நிரப்புவதோடு, ஒரு புதிய மகிமை யான திருப்தியின் அனுபவத்தையும் தரும்.

சிந்தனைக்கு...

எதிர்பாராத ஒரு துக்கம் வாழ்வில் வந்தது போல,
எதிர்பாராத ஒரு சந்தோஷமும் வாழ்வில் வரும்.

ஜூலை 15

தேவ உறவு இல்லாவிட்டால்...

யோவான் 3:1–21

ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.
யோவான் 3:6

ஒரு பெண் திருமணம் ஆகிற வரையில் பெயர் கிறிஸ்தவளாயிருந்தாள். இரட்சிப்பின் அனுபவம் பெற்ற ஒருவனுடன் திருமணம் நடைபெற்றதால், திருமணத்திற்குப் பின்பு கிறிஸ்தவப் பக்தி விஷயங்களில் அதிக ஆர்வம் காட்டினாள். ஜெபம், வேத வாசிப்பு, ஊழியம், சபை ஈடுபாடு என எப்பொழுதும் ஆவிக்குரிய சூழ்நிலைகளில் இருப்பதை பலரும் பார்க்க முடிந்தது. ஆனால், அவளுடைய கணவருக்கு அவளுடைய ஆவிக்குரிய நடவடிக்கைகளினால், சந்தோஷம் இருந்தாலும் அதிருப்தியும் உண்டு. ஏனென்றால், திருமணமான புதிதில் அவளிடம் காணப்பட்ட குணாதிசய குறைவுகளில், இதுவரை எந்த மாற்றமும் நிகழவில்லை.

சிலரைப் பக்தியானவர்களாகப் பார்ப்பதற்கு, ஏராளம் ஏராளம் நல்ல விஷயங்கள் இருக்கும். ஆனால், அவர்களின் ஜென்ம சுபாவ இயற்கை நிலைமை அப்படியே இருக்கும். சில பழக்கவழக்க இயற்கை மாறாமலே இருக்கும். சுய கருத்துக்கள், வைராக்கியங்கள் மாற்றமின்றி இருக்கும். இதனுடைய காரணம் என்ன? இவர்கள் ஏற்படுத்திக்கொண்டது இறைபக்தியான ஒரு வாழ்க்கைதானேயன்றி, இறை உறவின் வாழ்க்கை அல்ல. அவர்கள் தாங்களாக பல பக்தியான செயல்களையும், பழக்கங்களையும் தேவனுக்காக ஏற்படுத்திக் கொண்டார்கள்.

ஆனால், கிறிஸ்தவ வாழ்க்கை என்பது இறைப்பக்தி வாழ்க்கை அல்ல. அது இறை உறவு வாழ்க்கை. பக்தி வாழ்க்கை அடிப்படை மனநிலையையும், இயற்கை சுபாவங்களையும் மாற்றுவதற்கு இயலாதது. தேவ உறவுதான் அதைச் செய்யும். ஒருவருக்குள் தேவ உறவு வராமல் தேவ பக்தி மட்டும் வந்தால், பக்தி நடவடிக்கைகள் பெருகுமேயன்றி, பரிசுத்தத்திற்கு ஏதுவான மாற்றங்கள் ஏற்படாது. தேவ உறவுதான் அதைச் செய்ய முடியும்.

சிலர் கிறிஸ்தவ பக்தியின் விளைவாக மிகுதியான நேரங்களையும், பணத்தையும், உழைப்பையும் கர்த்தருக்காகச் செலவிடுவதைப் பார்க்க முடிகிறது. கர்த்தருக்காக எவ்வளவு ஆசையாகவும், ஆர்வமாகவும், தியாகமாகவும் பல விஷயங்களைச் செய்கிறார்கள் என்று ஆச்சரியப்பட வைக்கும். அதே வேளையில் சுய கௌரவத்தை விடவே மாட்டார்கள். சில பழக்கவழக்கங்களை மாற்றவே மாட்டார்கள். சிலரைக் குறித்த கருத்துக்களையும் பார்வைகளையும் மாற்றவே மாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் தேவ பக்தியாய் வாழப் பழகிய போதிலும், இன்னும் தேவ உறவை வாழ்வில் பெறவில்லை.

சிந்தனைக்கு...

எத்தனை நல்ல விஷயம் வந்தது என்பதை மட்டும் அல்ல,
எத்தனை கெட்ட விஷயம் இன்னும் போகவில்லை என்றும் பார்.

ஜூலை 16

ருசிக்கப்படாத அறிவு

தீத்து 2:1–15

உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாக...

தீத்து 2:7

குறிப்பிட்ட ஒரு பெண்மணி, தன் குடும்பத்தினருக்காக மிகச் சிறப்பாகக் கறிவகைகள் சமைத்துக் கொடுப்பார். அவர் சமைக்கும் கறி உணவு வகைகளை, அவளுடைய உறவினர் பலரும் சாப்பிட்டு மிகுதியாகப் பாராட்டுவார்கள். ஆனால், அவரோ காய்கறி உணவு வகைகளைத் தவிர, வேறு எந்த மாம்ச உணவு வகைகளையும் அறவே சாப்பிடமாட்டார். இது போலவே சிலர், மிகச் சிறந்த சிந்தனைகளையும், அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பிறருக்குக் கொடுப்பார்கள். ஆனால், அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் அவை எவற்றையும் பின்பற்ற மாட்டார்கள்.

போதகர் ஒருவரைக் குறித்து அநேகர் பிரமாதமாகப் பேசுவார்கள். அவர் கொடுக்கும் அருளுரைகளும், வேதாகமப் படிப்பித்தல்களும் மிகவும் ஆழமான உண்மைகள் அடங்கியதாக இருக்கும். ஆனால், போதனைக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தமே இல்லாத ஒரு மாய்மாலத்திற்கு, ஒரு மாதிரியைக் காட்ட வேண்டுமானால், இவரைத் தாராளமாகக் காட்டலாம். தான் போதிக்கின்ற வேத சத்தியத்தின் சிறு சாரத்தைக்கூட, இவருடைய வாழ்க்கையில் பார்க்க முடியாது.

ஒருவர் சபைகளில் மறுமலர்ச்சி பற்றிப் பேசும் போது நம்முடைய ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் போதனைகளைத் தாங்கள் பின்பற்றினால் சபையில் எழுப்புதல் வந்துவிடும் என்றாராம். இந்தக் கருத்து பேரளவில் உண்மைதான். அநேகர் மிக நன்றாகத்தான் இயேசுவைப் பற்றிப் பிறருக்குச் சொல்லுகின்றார்கள். அநேகர் கிறிஸ்தவப் போதனைகளைப் பலரும் அறியும் நோக்கத்தில், சிறந்த புத்தகங்களை எழுதி வெளியிடுகின்றனர். ஆனால், இவர்களில் அநேகர், சிறந்த வாழ்க்கை வாழ்வதற்காகவே சிறந்த போதனைகள் என்பதை உணரவில்லை.

கிறிஸ்தவ விசுவாசிகளாயிருந்தாலும் சரி, கிறிஸ்தவப் போதகர்களாயிருந்தாலும் சரி, முதலாவது தாங்கள் சிறந்ததாகக் கண்ட சத்தியம் தங்களை மாற்றியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். தாங்கள் சிறந்ததாகக் கண்ட போதனைகளினால் தங்களிடம் சாட்சி வாழ்க்கையை ஏற்படுத்தாமல், பிறருக்கு அவற்றைப் போதிப்பது அர்த்தமற்றது. பிறர் நம்மிடம் சிறந்த சிந்தனைகளையல்ல. சிறந்த போதனைகளை அல்ல. சிறந்த வேத அறிவை அல்ல. அவர்கள் நம்மிடம் கிறிஸ்தவப் போதனைக்கேற்ற சிறந்த வாழ்க்கையைப் பார்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

நீ நல்லவனாய் வாழ்வதை பிறர் காணாவிட்டால்,
நீ சொன்ன நல்லதின் மேல் யாருக்கும் நம்பிக்கை வராது.

ஜூலை 17

அறிவும் உணர்ச்சியும்

யோவான் 16:1–13

அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும்...
யோவான் 16:8

சில விஷயங்களுக்கு நமக்கு அறிவு இருந்தால் போதாது. அதைக் குறித்த உணர்ச்சி வேண்டும். மதியம் சாப்பிடுவது நல்லது என்ற அறிவு மட்டும் போதாது. சாப்பிடத் தூண்டும் பசி உணர்ச்சி வேண்டும். சுத்தமாக இருக்க வேண்டும் என்ற அறிவு மட்டும் போதாது. சுத்தமாயிராவிட்டால் அசௌகரியமாக உணருகின்ற உணர்ச்சி வேண்டும். என்னதான் அறிவு இருந்தாலும், அறிவைச் செயல்முறைப் படுத்தத் தூண்டும் உணர்ச்சி இல்லாவிட்டால், பயனில்லை.

ஆவிக்குரிய வாழ்க்கையிலும் ஆவிக்குரிய அறிவு மட்டும் போதாது. ஆவிக் குரிய உணர்ச்சி வேண்டும். அநேகருக்கு வேதாகமப் போதனை அறிவு இருக்கிறது. ஒரு சபையிலோ ஜெபக்கூட்டத்திலோ பிரசங்கம் பண்ண அழைத்தால், சந்தோஷி மாகப் போய்ச் சிறப்பாகப் பிரசங்கம் செய்வார்கள். ஆனால், தாங்கள் போதித்த வேத அறிவை வாழ்க்கையில் பயன்படுத்தமாட்டார்கள். ஏனென்றால், ஆவிக்குரிய உணர்ச்சித் தூண்டுதல் இல்லை. சிலர் தங்களிடமுள்ள தவறான குணங்களையும், பழக்கங்களையும், மறுக்காமல் ஒத்துக்கொள்வார்கள். ஆனால், அவற்றைத் திருத்தமாட்டார்கள்.

ஏனென்றால், அவற்றை வெறுக்கும் ஒரு உணர்ச்சி இல்லை. ஒரு முறை ஒரு தாயார் மகளைக் கடுமையாகத் திட்டிக் கொண்டிருந்தார்கள். ஏன் என்று விசாரித்த போது, அந்த மகள் காலையிலிருந்து குளித்து, சுத்த உடைகளை மாற்று வதற்குத் தாயார் சொன்னதைக் கேட்காமல், மாலை வரை தள்ளிப் போட்டுக் கொண் டிருந்தாள். ஏனென்றால், அவளுக்கு சுத்தமாயிருக்கத் தூண்டும் உணர்ச்சி இல்லை. வாரந்தோறும் ஞாயிறு ஆராதனை வேளையில், தங்களைப் பாவி என்று அறிக்கை செய்யும் அறிவு பலருக்கு இருக்கிறது. ஆனால் பாவம் நீங்கி வாழ் வதற்குத் தேவையானதைச் செய்யும் உணர்ச்சி இல்லை.

நண்பர் ஒருவர், சர்க்கரை வியாதிக்காரர்கள் எதை உண்ண வேண்டும், எதை உண்ணக் கூடாது என்று ஆலோசனை தரும் ஏராளம் யூடியூப் நிகழ்ச்சிகளைப் பார்ப்பார். ஆனால், அவரோ வழக்கமாகச் சாப்பிடுகிற சுவை உணவுகளில் எந்த மாற்றமும் செய்யமாட்டார். ஆவிக்குரியவர்கள் தேவ ஆவியைப் பெற்றிருந்தால் தான், அந்த ஆவியின் மூலம், பாவத்தை எதிர்க்கவும், பரிசுத்தத்தை விரும்பவும் உணர்ச்சி பெறுவார்கள்.

சிந்தனைக்கு...

பரிசுத்தத்தைக் குறித்த அதிக அறிவு அல்ல.
பரிசுத்தமாக வாழணும் என்ற உணர்வே முதல் தேவை.

ஜூலை 18

ஏன் மன்னிக்கணும்

ஆதியாகமம் 45:1–14

அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்.
ஆதியாகமம் 45:5

ஒருவர் நமக்கு எதிராக வார்த்தையாலோ செயலாலோ தவறு செய்தால், அவருக்குள் குற்ற உணர்வின் அழுத்தம் ஏற்படும். அந்தக் குற்ற உணர்வின் அழுத்தத்திலிருந்து விடுதலையாக, அவருக்கு நம்முடைய மன்னிப்புத் தேவை. நாம் மனதார அவரை மன்னித்தால்தான், அவர் தனக்குள் ஏற்பட்ட குற்ற உணர்வி லிருந்தும், மன அமைதிக் குறைவிலிருந்தும் விடுதலையாக முடியும். தவறாகப் பேசின ஒருவர் அல்லது தவறாகச் செயல்பட்ட ஒருவர், அதற்குரிய மனரீதியான தண்டனையை அனுபவிக்கட்டுமே என்று நாம் சிந்திக்கலாம். அல்லது என்னை மனவிசனப்படுத்திய அவருடைய மனதைக் குறித்து, நான் ஏன் கவலைப்பட வேண்டும் என்று சொல்லலாம்.

சில நேரம் இவ்விதம் பாதிக்கப்படுகின்றவர்கள், யாரோ எவரோ என்ற நிலையில் உள்ளவர்கள் அல்ல. அவர்கள் நம்முடன் ஏதாவது ஒரு விதத்தில் உறவு டனும், ஐக்கியத்துடனும் வாழ வேண்டியவர்கள். நம்முடைய உறவின் வட்டத்தில் உள்ள அவர்கள் நன்றாயிருந்தால், அதனுடைய பலன் நமக்கும் உண்டு. அவர்கள் நிம்மதியின்றியும் மனச்சோர்வுடனும் வாழ நேரிட்டால், அவர்களால் நமக்கும் பல கஷ்டங்கள் உண்டு. எனவே, அவர்களை மன்னித்து, குற்ற உணர் விலிருந்து அவர்கள் விடுதலையாகிட நாம் உதவினால்தான், அவர்களுடைய ஐக்கியத்தில் நாமும் மனக்கஷ்டமின்றி வாழ முடியும்.

யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பிற்கு எதிராகக் கடந்த காலத்தில் செய்த தவறுகளின் விளைவானக் குற்ற உணர்வுடையவர்களாயிருந்தார்கள். அவர்களோடு நல்ல உறவில் வாழ விரும்பிய யோசேப்பு, அவர்களின் குற்ற உணர்வுப் பிரச்சினை நீங்க உதவி செய்தான். தனக்கு நேர்ந்தவை எல்லாம் நல்ல துக்கே நடந்தது என்று அவர்களுக்குச் சொல்லி, அவர்களின் மனதில் இருந்த எதிர்மறை உணர்வுகள் நீங்க உதவினான்.

மற்றவரை மன்னிக்கும் போது, அதனால் அவர்களுக்கு மட்டும் அல்ல. அதனால் நமக்கும் பெரிய நன்மை உண்டு. பிறர் செய்ததை மன்னியாத இரு தயத்தில் கசப்புணர்வும், கோப உணர்வும், வருத்த உணர்வும் தங்கி, மன அமைதிக்குப் பிரச்சினை ஏற்படுத்தும். இது அகலாத வரை, நமக்குள் தேவ சமாதானத்தையும், தேவ ஐக்கியத்தையும் அனுபவிக்க முடியாது. நமக்குத் தவ றிழைத்தவர்களை நாம் மனப்பூர்வமாக மன்னித்தால் தேவ சமுகத்தில் குற்ற உணர் வின்றித் தேவ சமா தானத்தையும், சந்தோஷத்தையும் நாம் காண முடியும்.

சிந்தனைக்கு...

செய்துவிட்ட தவறைவிட,
அந்தத் தவறுக்காக வருந்தாததே பெரிய தவறு.

ஜூலை 19

மன்னித்து ஏற்றுக்கொள்ளணும்

லூக்கா 15:11–24

என் குமாரனாகிய இவன் திரும்பவும் உயிர்த்தான்.
லூக்கா 15:24

இன்னொருவருக்கு ஒரு பெரிய உதவியை செய்வது எளிது. ஆனால், இன்னொருவரை மன்னிப்பது என்பது எளிதானதல்ல. ஆனால், சில நல்ல விளைவுகளைக் காண, நாம் கடினமான விஷயங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஒரு ஆற்றை நீந்திக் கடக்க வேண்டும் என்று விரும்பினால், அது எளிதானதாயிராது. ஆனால், ஆற்றை நீந்திக் கடக்க வேண்டும் என்ற விருப்பம் இருப்பதால், ஆற்றைக் கடப்பதற்குத் தேவையான சிரமத்தை மனதார ஏற்றுக் கொள்வோம்

நாம் ஒருவரையொருவர் மன்னிக்க இயன்றவர்களாக வாழ வேண்டும் என்பது தேவ சித்தம். அது கடினமான ஒன்றாயிருந்தாலும், அது கர்த்தரைப் பிரியப் படுத்தும் விஷயமாயிருப்பதால், அதற்கு நாம் முக்கியத்துவம் செலுத்த வேண்டும். அதே வேளையில், ஒரு மத பக்திக்காகவோ அல்லது தேவனுக்குக் கீழ்ப்படிய வேண் டுமே என்பதற்காகவோ, இன்னொருவரை மனக்கஷ்டத்தோடு மன்னிக்கக்கூடாது.

ஒருவர், மனைவி செய்த தவறால் பாதிக்கப்பட்ட போதிலும், கடவுள் பக்திக்காக அவரை மன்னித்தார். அதே வேளையில், அவரை முன்பு போல அன்பிற்குரிய மனைவியாக ஏற்றுக்கொள்ளவில்லை. மனைவியிடம் வாக்குவாதம் செய் வதையும், அதிக கோபத்துடன் நடந்து கொள்வதையும் விட்டு விட்டார். ஆனாலும், மனைவியோடு வழக்கமாகப் பேசுவது போல பேசாமல், அமைதியாக ஒதுங்கி விட்டார். ஆனால், இது உண்மையான மன்னிக்கும் பண்பு அல்ல. தேவன் நமக்கு வெறுமனே பாவமன்னிப்புத் தந்துவிட்டுப் போய்விடவில்லை. அவர் தொடர்ந்து நம்மை பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, அன்பு காட்டினார். மன்னிப்பது என்பது கோபத்தை நிறுத்துவதோ, மறைப்பதோ அல்ல. மன்னிப்பு என்பது ஒருவர் மேல் உள்ள எதிர்மறை உணர்வை விட்டு விலகுவதோடு, நேர்மறையான அன்பின் காரியங்களைச் செய்வதுமாகும்.

கர்த்தர் நம்மை மன்னித்ததையும், நம்மைப் பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டதையும், நாம் அனுபவத்தில் காண வேண்டும். தேவ அன்பை அனுதின வாழ்க்கையில் நம்முடைய ஆத்துமாவில் உணர வேண்டும். கெட்ட குமாரன் தகப்பனிடமிருந்து மன்னிப்பை மட்டும் பெறவில்லை. தகப்பனுடைய அன்பையும் பெற்றான். அந்தத் தகப்பன் அவனை மன்னித்ததோடு, அவனைப் பாசத்திற்குரிய மகனாக ஏற்றுக் கொள்ளவும் செய்தான்.

சிந்தனைக்கு...

மன்னிக்கும் மனம் ஆனந்தமடையும்.
மன்னியாத மனம் அலசடிப்படும்.

ஜூலை 20

பாவம் இல்லை, ஆனால்....

லூக்கா 18:9–17

இந்த ஆயக்காரனை போலவும் இராததனால்.

லூக்கா 18:11

சிறு வயதிலிருந்தே கிறிஸ்தவ ஒழுக்கம் சார்ந்த வாழ்க்கை முறையில் வளர்க்கப்பட்டார் ஒருவர். அவர் வளர வளர தவறுகளைத் தவிர்த்து வாழ்வதற்கு அதிகக் கவனம் செலுத்தினார். ஒரு சிறு தவறு என்றால்கூட தவறு தவறுதான் என்று எண்ணி, தன்னைச் சரியாக வைத்துக் கொண்டார். இவரிடம் யாரும் எளிதாக ஒரு தவறையோ குற்றத்தையோ பார்க்க முடியாது. ஆனால், இவருடைய தவறற்ற வாழ்க்கையை யாரும் முன்மாதிரியாகப் பார்க்கவோ, பின்பற்றவோ இல்லை.

ஏனென்றால், இவர் தன்னைப் போல நன்றாகயிராத எவரையும், தாழ்குடி பிறப்பு என்பது போலப் பார்ப்பார். யாரிடத்தில் ஒரு சிறு தவறைப் பார்க்க நேர்ந்தாலும், அதனை மிகவும் பெரிதுபடுத்தி அவர்களைக் கடுமையாக விமர்சிப்பார். சபைக்குச் செல்லுகிற யாரிடமாவது ஒரு தவறைப் பார்த்தால், நீங்கள் எதற்காகச் சபைக்குப் போகிறீர்கள் என்று கேட்பார். தேவ ஊழியம் செய்கிற யாரையாவது தவறு செய்யக் கண்டால், உங்களுக்கு ஊழியம் செய்ய என்ன தகுதி உள்ளது என்று கேட்பார். எனவே, இவரின் அருகில் வரவே யாரும் தயங்குவார்கள்.

அநேகர் ஒரு காவல்துறை அதிகாரியைப் போல, பிறரிடம் காணப்படும் குற்றங்களை மட்டுமே பார்க்கின்றனர். பிறரிடமுள்ள தவறுகளும் குற்றங்களும் பார்க்கப்பட்டு விமர்சிக்கப்படுவது அவசியமே. அதே வேளையில், பிறர் நம்மைத் தவறு செய்யாதவராகவும், தவறுகளை வெளிப்படுத்துகிறவர்களாகவும் மட்டுமே பார்க்கக் கூடாது. யோசேப்பிடம் சரியான ஒழுங்குகளையும், பரிசுத்தமான செயல்பாடுகளையும் பார்க்க முடிந்தது. அதே வேளையில், அவனிடம் அன்பு, தாழ்மை, உண்மை, மன்னித்து ஏற்கும் மனநிலை போன்ற நல்ல விஷயங்களையும் எவராலும் பார்க்க முடிந்தது.

குற்றமற்ற ஒருவர், அன்பற்றவராக இருந்தால் பயனில்லை. தவறேதும் செய்யாத ஒருவர், தாழ்மைப் பிரதிபலிப்பற்றவராக இருந்தால் பலனில்லை. மிகவும் நல்ல ஒழுங்குகளைப் பின்பற்றும் ஒருவர் பிறருக்கு நன்மை செய்யும் பழக்கமற்றவராகயிருந்தால் பயனில்லை. தேவ நீதியைச் சார்ந்து தன்னைச் சீர் பெறச் செய்த மனிதன், ஒருபுறம் அன்பிற்காகவும் அறியப்படுவான். மறுபுறம் பாவமற்றவனாகவும் அறியப்படுவான். சுயநீதியைச் சார்ந்து வளர்கிறவனிடம் கிருபைக்குரிய அடையாளங்களைப் பார்க்க முடியாது.

சிந்தனைக்கு...

நாம் பாவமற்றவர்கள் என்பது நல்ல விஷயம்.
நாம் பயனுள்ளவர்கள் என்பதே விசேஷ விஷயம்.

ஜூலை 21

ஆசீர்வாத அடையாளம்

2 கொரிந்தியர் 6:1–11

ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும்...
2 கொரிந்தியர் 6:10

கிறிஸ்தவ நம்பிக்கை இல்லாத பலரும், தேவ நம்பிக்கை இல்லாத பலரும், பெரிய பணக்காரர்களாக முடிகிறது. அவர்கள் புத்தி, அறிவு, ஞானம், திறமை ஆகிய வற்றை மிகச் சரியாகக் கையாண்டு, அவ்விதம் பெரிய பணக்காரர்களாக மாற முடிகிறது. கிறிஸ்தவர்களும் அவர்களைப் போலச் செயல்பட்டால், பெரியப் பணக் காரர்களாகும் வாய்ப்பைப் பெற முடியும். ஆனால், தாங்கள் அடைந்த உயர்வு களை கிறிஸ்தவ ஆசீர்வாதத்தின் அடையாளங்கள் எனக் கூற இயலாது.

திறமைகள் குறைந்த பலர்கூட, நல்ல வசதி நிலைகளை அடைய வாய்ப் புண்டு. ஆயினும், அவை கிறிஸ்தவ ஆசீர்வாதத்தின் அடையாளங்கள் என்று கூற முடியாது. ஏனென்றால், கிறிஸ்துவின் ஆசீர்வாதம் முதலாவது, மனிதனுடைய அறிவு மண்டலத்திலோ அல்லது திறமை மண்டலத்திலோ அல்ல. கிறிஸ்துவின் ஆசீர்வாதம் மனிதனுடைய பண்பு மண்டலத்தில் வேலை செய்கிறது. கர்த்தர் ஒரு மனிதனுடைய இருதயத்தில்தான் முதலாவது செயல்படுகிறார்.

எனவே, ஒரு மனிதன் சிறந்த குணாதிசயங்களை வெளிப்படுத்துவதுதான், அவனிடம் கிறிஸ்தவ ஆசீர்வாதம் வந்திருப்பதின் அடையாளம். முதலாவது, ஆத்தும நிலையில் மனிதன் வாழ வேண்டும். ஒரு மனிதன் கர்த்தரால் தான் நல்ல செல்வந்த நிலைமையை அடைந்ததாகச் சொன்னால், அப்படி இருக்கவே இருக்காது என்று யாரும் சொல்ல இயலாது. ஆனால்,அவை கிறிஸ்துவினால் வந்தது என்று நம்பினால், முதலாவது அவனிடம் ஆவிக்குரிய நற்குண ஆசீர்வாதங்கள், கர்த்தரால் வந்திருப்பதை அவன் காட்ட வேண்டும். சுபாவங் களிலே மேன்மை இல்லை. நடத்தைகளில் மேன்மை இல்லை. செயல்களில் மேன்மை இல்லை. ஆனால், பொருளாதார நிலையில் மட்டும் மேன்மை இருக் கிறது என்றால், அது கர்த்தரால் வந்தது என்று கூற இயலாது.

சிலர் மிகவும் தரித்திர நிலையில் இருப்பார்கள். ஆனால், தங்களுக்குக் கர்த்தரே ஆசீர்வாதம் என்பார்கள். தங்களிடம் போதும் என்ற திருப்தியான மனநிலை இருப் பதால், தங்களை ஆவிக்குரிய ரீதியாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று அறிக்கை செய்வார்கள். ஆனால், இவர்களிடம் பொருளாதார தரித்திரம் மட்டும் இல்லை. ஆவிக்குரிய ரீதியான தரித்திரமும் இருக்கும். இவர்களிடம் ஆவிக்குரிய வளமையை வெளிப் படுத்தும் உயர்ந்த ஆவிக்குரிய குணங்களைப் பார்க்க முடியாது. தெய்வீக சுபாவங்கள் என்னும் ஆசீர்வாத அடையாளங்கள் இல்லாத யாவரும் தரித்திரர்களே.

சிந்தனைக்கு...

பரிசுத்தமாக வாழாதவர்கள் பெற்ற உயர்வுகள்,
தேவனிடத்திலிருந்து வந்ததாகச் சொல்வது ஒரு தேவ தூஷணமே.

ஜூலை 22

அறிவாளிப் போதகர்கள்

2 கொரிந்தியர் 11:1–15

உங்கள் மனதும் கிறிஸ்துவை பற்றிய உண்மையினின்று...
11 கொரிந்தியர் 11:3

சில போதகர்களிடம் நான் மிகுந்த அறிவு இருக்கிறதைப் பார்க்கின்றேன். அவர்களை மிகுந்த அறிவாளிகள் என்று சொன்னால், அது சரியான கூற்றே. ஆனால், அது கர்த்தரால் வந்த அறிவு அல்ல. ஏனென்றால், அந்த அறிவு அவர்களுடைய தவறான உபதேசங்களைச் சரியானது என்று காட்ட அவர்களுக்குப் பயன்படுகிறது. அந்த அறிவு அவர்களுடைய சரியற்ற செயல்களைச் சரியானது தான் என்று விளக்கிக் காட்டப் பயன்படுகிறது. அவர்கள் என்ன பேசினாலும், அதைச் சரி எனப் பிறரை நம்ப வைக்கின்றனர். அவர்கள் என்ன செய்தாலும், அந்த அறிவை பயன்படுத்தி அதெல்லாம் தவறல்ல என்று நம்ப வைத்து விடுகின்றனர்.

ஆனால், இது ஒரு சபிக்கப்பட்ட அறிவு. ஏனென்றால், இவர்கள் தங்களின் மனதின்படி பேசிவிட்டு, அதனைச் சத்தியம் என்று காட்டுகின்றார்கள். இவர்கள் உலகத்திற்கேற்றபடி வாழ்ந்துவிட்டு, அது சரியானதுதான் என்று சாதித்து விடுகிறார்கள். இவர்களின் அறிவுத்திறன், மாய்மாலத்திற்கும், முரண் பாடான வாழ்க்கைக்கும் இவர்களை வழிநடத்துகின்றது. எனக்குச் சிலரைத் தெரியும். அவர்கள் தங்களுக்கு வேண்டுமென்றால், ஒருவர் எவ்வளவு மோசமானவராக இருந்தாலும், அவரைப் பரிசுத்தவான் போலக் காட்டி, சாதித்து விடுவார்கள். அது போல, ஒருவரை வேண்டாம் என்றால், அவர் எவ்வளவு பரிசுத்தராக இருந்தாலும், அவரைப் பாவியைப் போலக் காண்பித்துச் ஜெயித்து விடுவார்கள்.

ஏனென்றால், அவர்களுக்குக் கறுப்பை வெள்ளையாகக் காட்டவும் வெள்ளையைக் கறுப்பாகவும் காட்டவும், தேவையான அறிவும் புத்திசாலித்தனமும் இருக்கிறது. ஆனால், சத்தியம் சாராத இந்த அறிவும், புத்தியும் வெறுக்கத்தக்கது. சில போதகர்கள் வேத சத்தியத்தைத் திரித்து சுய ஆதாயத்திற்காகச் ஜனங்களைத் தந்திரமாக நம்ப வைத்து விடுகிறார்கள். ஜனங்கள் எளிதாக அவர்களை தேவ ஞானம் பெற்றவர்கள் என்று நம்பி விடுகின்றனர். ஏனென்றால், அந்தப் போதகர்களின் அறிவின் பின்னாலுள்ள தந்திரத்தை ஜனங்கள் பகுத்தறியவில்லை.

சாத்தான் ஒரு முட்டாள் அல்ல. அவன் அறிவு பெருத்தவன். எனவேதான், ஏவாளை அவனால் தந்திரமாக ஏமாற்ற முடிந்தது. ஆனால், அவன் இயேசுவை ஏமாற்ற வந்தபோது, அது முடியவில்லை. ஏனென்றால், அவரிடம் சத்தியம் இருந்தது. இயேசு நம்மோடிருந்தால்தான், சாத்தானின் தந்திரமான அறிவை நம்மால் அடையாளம் காண முடியும்.

சிந்தனைக்கு...

பரிசுத்தமில்லாத போதகர்களின் அறிவுத்திறன்,
அநேகரை வஞ்சிக்கும் ஒரு வசிய மருந்து.

ஜூலை 23

இருதயத்தில் சுபாவம்

மத்தேயு 5:1–16

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்.
மத்தேயு 5:3

பானையில் இருப்பதுதான் அகப்பையில் வரும் என்பார்கள். உப்பு டப்பாவில் கரண்டியை விட்டு, சர்க்கரையை வெளியே கொண்டு வர முயற்சித்தால், நடக்காது. அநேகர் நல்ல சுபாவங்களோடு வாழ விரும்புகின்றனர். ஆனால், முடிவதில்லை. சிலர் தங்களிடமிருந்து நல்ல விஷயங்களைத்தான் பிறர் பார்க்க வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், முடியவில்லை. ஏனென்றால், அவர்கள் நல்ல சுபாவங்களைக் காண்பிக்க விரும்பினாலும், அவர்களின் இருதயத்தில் நற்சுபாவங்கள் இல்லை. இருதயத்தில் இருப்பதுதானே சுபாவங்களாக வெளியே வர முடியும்.

முதலாவது, பிறரிடம் நாம் நற்சுபாவங்களோடு காணப்பட விரும்பினால், அவற்றை முதலாவது நமக்குள் பார்க்க வேண்டும். நாம் மனதிற்குள் தாழ்மையாகச் சிந்திக்க இயன்றால்தான், பிறருக்கு முன்பாக அப்படிக் காணப்பட முடியும். நாம் நமக்குள் சாந்தமாகச் சிந்தித்தால்தான், பிறரோடு ஏதாவது பிரச்சினை ஏற்படும் போது, அதைக் காண்பிக்க முடியும். நாம் நமக்குள் அன்பாகச் சிந்தித்தால் தான், பிறரிடம் அன்பாக நடந்து கொள்ள இயலும்.

ஒருவரைக் குறித்து நீங்கள் மனதிற்குள் வெறுப்பாக நினைக்கின்றீர்கள். ஆனால், அவரிடம் அன்பாக நடந்து கொள்ள விரும்புகிறீர்கள். இது சாத்தியமற்றது. முதலாவது, அவரைக் குறித்து வெறுப்பாகச் சிந்திக்காமல், அன்பாகச் சிந்திக்கும் படி இருதயத்தில் நீங்கள் பழகணும். தேவ ஐக்கியத்தோடு நாம் வாழ விரும்பினால், நமக்குள் நம்மை எப்படிப் பார்க்க கர்த்தர் விரும்புகின்றாரோ, அப்படியிருக்க நாம் பழகணும். ஒருவரிடம் நேரடியாகப் போய், எப்படி நடந்து கொள்ள விரும்புகின்றோமோ, அந்தப்படியே மனதிற்குள் அவரைக் குறித்த நினைவுகளைச் சீர் செய்ய வேண்டும்.

கர்த்தாவே, எனக்கு உள்ளே மற்றவர்களை நேசிக்க, எனக்குக் கிருபை தாரும் என்று ஜெபிக்க வேண்டும். ஆண்டவரே, நீர் எனக்குள் என்னைப் பார்க்கும் போது அங்கே தாழ்மையும், பொறுமையும், சாந்தமும் இருக்கச் செய்யும் என்று விண்ணப்பிக்க வேண்டும். பிறரை மனதிற்குள் முதலாவது மதிக்க வேண்டும். பிறரை மனதிற்குள் முதலாவது சகிக்க வேண்டும். பிறரை மனதிற்குள் முதலாவது தவறாகச் சிந்திக்க கூடாது. மனதிற்குள் அப்படிப்பட்ட சிந்தையை தேவ கிருபை சார்ந்து வளர்த்தால் தான், புறம்பே அவை சுபாவங்களாக வெளிப்படும்.

சிந்தனைக்கு...

நற்சுபாவம் இல்லாதவனைவிட , அவை இல்லாத போது
இருப்பதை போலக் காண்பிப்பவன், அதிக மோசமானவன்.

ஜூலை 24

ஆசீர்வாத வழி

கலாத்தியர் 4:1–7

அப்பா, பிதாவே ! என்று கூப்பிடத்தக்கதாக...
கலாத்தியர் 4:6

திருச்சபை சிறப்புக் கூட்டம் ஒன்றிற்கு வரவழைக்கப்பட்ட போதகர், ஆசீர் வாதங்களைத் தலைப்பாக வைத்துப் பேச ஆரம்பித்தார். வேதாகமத்தில் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட தேவ மனிதர்களைப் பட்டியலிட்டுப் பேசினார். தேவன் நம்மைப் பிரமாதமாக ஆசீர்வதித்து உயர்த்த விரும்பும், அவருடைய மனதைக் குறித்து அதிகமாகப் பேசினார். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒவ்வொரு வரையும், இன்றிலிருந்தே மிகுந்த நன்மைகளினால் தேவன் ஆசீர்வதிக்கப் போவதாகத் தீர்க்கதரிசனம் உரைத்தார். ஆனால், ஆசீர்வாதம் பெறுவதற்குத் தேவன் விதித்த வழியைக் குறித்து எதையும் அவர் பேசவில்லை.

பல கிறிஸ்தவப் போதகர்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கப் போகிறார் என்று திரும்பத் திரும்பப் பேசுவதையே ஆசீர்வாத பிரசங்கம் என எண்ணு கின்றனர். பல விசுவாசிகள் ஆசீர்வாதம் தொடர்பான விஷயங்களைக் கேட்பதையே, தேவ வார்த்தை என நினைக்கின்றனர். ஆனால், ஆசீர்வதிக்கப்படுவதற்கான தேவ வழி என்ன என்பதை பல போதகர்கள் போதிப்பதில்லை. சிலர் போதித்தாலும், பல விசுவாசிகள் அவற்றை கேட்க விரும்புவதில்லை.

நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கான தேவ வழியை அறிவது முக்கியம். அது ஜெப வழி அல்ல. அது உபவாச வழி அல்ல. அது பொருத்தனை வழி அல்ல. அது விசுவாச வழி அல்ல. தேவனுடைய திட்டத்தை அறிந்து, அதற்கு நம்மை ஒப்பு வித்து, அந்தத் திட்டத்தின் பாதையில் நடப்பதே ஆசீர்வாத வழி. நாம் தேவனுடைய பிள்ளைகளாக இந்த பூமியில் வாழ்ந்து, நித்திய வாழ்வைச் சுதந்தரிக்க வேண்டும். நாம் முதலாவது, தேவனுடைய பிள்ளைகளாக மறுபடியும் பிறத்தல் என்ற அனு பவத்தை அடைய வேண்டும். ஏனென்றால், புதிய ஏற்பாட்டில் ஆசீர்வாதங்களைத் தேவனுடைய பிள்ளைகள் மட்டுமே சுதந்தரிக்க முடியும்.

எனவே, நாம் தேவனுடைய பிள்ளைகளாகப் பிறந்த நிச்சயத்தோடு, பிதா வாகிய தேவனுடைய உறவின் அனுபவத்தில் வளர வேண்டும். தேவ ஐக்கியத்தோடு வாழ்கின்றவர்களே தேவ நன்மைகளைச் சுதந்தரிக்க முடியும். ஆசீர்வதியும், ஆசீர் வதியும் என்று விடாப்பிடியாகக் கெஞ்சுவதினால் மட்டும், ஆசீர்வாதம் வந்து விடாது. நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்குத் தேவன் நியமித்த, இந்த அப்பா, பிள்ளை என்ற தேவ உறவின் பாதையில், தொடர்ந்து செல்ல வேண்டும்.

சிந்தனைக்கு...

ஆசீர்வாதங்கள் தீர்க்கதரிசன உரைப்பின் விளைவுகள் அல்ல.
தேவ தரிசனத்தோடு நடப்பதின் விளைவுகளே அவை.

ஜூலை 25

போராளி என்றால்...

எபேசியர் 6:10–24

தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.
எபேசியர் 6:13

உண்மையான கிறிஸ்தவர்கள் போராடுவதற்கு அழைக்கப்பட்டவர்களே. அவர்கள் போராளிகளே. போராளிகள் என்றால் திரும்பத் திரும்பப் போர்க்களங்களைக் காண நேரிடுவது இயல்புதானே. போரிட வந்த போராளி, ஏன் எனக்குத் திரும்பத் திரும்பப் போராட்டம் என்றால் அர்த்தமற்றது. நான் ஒரு போராளி, என் வேலை போராடுவதே என்ற கொள்கை போராடுகிறவனுக்கு இருக்க வேண்டும்.

விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு என்றான் அப்போஸ்தலனாகிய பவுல். (1 தீமோத்தேயு 6:12) சிலர் எத்தனை நாள் பொறுக்க முடியும்? எத்தனை தூரம் நான் சகிக்க முடியும்? எத்தனை நாள்தான் சாந்தமாயிருக்க முடியும் என்று விரக்தியோடு கேட்பார்கள். போராட்டம் என்ற ஒன்று திரும்பவும் வந்தால், போராடுவதற்கான விசுவாச ஆயுதங்கள் இவைதானே. இறுதிவரை பொறுமை தான் நம் ஆயுதம். கடைசி வரை சகிப்புத்தன்மைதான் நம்முடைய ஆயுதம். வேறு ஆயுதங்கள் நமக்கு இல்லை.

சிலர் ஒரு முறை இருமுறை, சகித்தால் போதாதா என்கின்றனர். துப்பாக்கியை ஏந்திப் போராட வந்த போராளி, கடைசி வரை அதனைக் கொண்டு போராட வேண்டியது அவசியம். இயேசு கிறிஸ்துவிடம் சிலுவை மரண பரியந்தம் பொறுமை, தாழ்மை, சாந்தம், மன்னித்தல் போன்ற ஆவிக்குரிய ஆயுதங்கள் இருந்தன. நாம் கிறிஸ்துவுக்காக வாழ வந்துவிட்டது உண்மையாயின், இறுதி வரை விசுவாச ரீதியான போராட்டங்கள் வரவே செய்யும். அங்கே இறுதிவரை ஆவிக்குரிய ஆயுதங்களாகிய பொறுமை, தாழ்மை, உண்மை, சாந்தம், விசுவாசம் போன்ற ஆயுதங்களை நாம் பயன்படுத்தியே ஆக வேண்டும்.

ஆனால், கிறிஸ்துவின் ஐக்கியத்தோடு நாம் போராடினால், நமக்குள் எப்பொழுதும் சமாதானம், சந்தோஷம், நம்பிக்கை ஆகியவை விலகாமல் இருக்கும். நாம் சகித்தாலும், வெறுத்தாலும், சாந்தத்தோடு செயல்பட்டாலும் அவற்றின் நடுவில், நமக்குள் தெய்வீக சமாதானமும், சந்தோஷமும், நம்பிக்கையும் விலகாமல் செயல்படும். போர் வீரன் இடர் மிகுந்த போர்களத்திலிருந்தாலும், அதுவே அவன் தெரிந்து கொண்ட பணியாயிருப்பதால், சமாதானத்தோடும் நம்பிக்கையோடும் செயல்படுவான்.

சிந்தனைக்கு...

திரும்பத் திரும்பப் போராட்டம் வந்தால்,
திரும்பத் திரும்பச் ஜெயித்துக் காட்டு.

ஜூலை 26

பிரிவது எளிதா?

ரோமர் 8:28–39

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?
ரோமர் 8:36

கிறிஸ்தவர் ஒருவர் வியாபாரத்தில் ஏற்பட்ட தோல்வியின் விளைவாகப் பெரிய கடனாளி ஆகிப் போனார். கடன்களைத் திருப்பிச் செலுத்துவது தொடர்பாக, அவர் தேவன் மேல் வைத்த விசுவாசத்திற்கு பலன் கிடைக்கவில்லை. எனவே, சபைக்குப் போவதை நிறுத்திவிட்டார். ஜெபம் செய்வதையும், ஆராதனை செய் வதையும் விட்டு விட்டார். அவருடைய குடும்பத்தாருக்கோ, அவர் கடனாளியாகி விட்டதைவிட, அவர் கடவுளை விட்டு விலகினதே அதிகத் துக்கம்.

உண்மையிலே இந்தப் பூமியில் நாம் எதை அடைந்தாலும், இழந்தாலும், எல்லாம் நிரந்தரமற்றவைகளே. பூமியிலிருந்து பெற்ற எதுவும், பூமியைக் கடந்து மறுமைக்கு வராது. ஆனால், கர்த்தருடைய உறவு என்பது, பூமியைக் கடந்து நித்தி யத்திற்கு நம்மைக் கொண்டு சேர்ப்பது. அந்த உறவை இழப்பதுதான் பெரிய நஷ்டம். அந்த நஷ்டத்தை எதனாலும் ஈடு செய்ய முடியாது. மனைவி இறந்ததால் இனி கர்த்தர் வேண்டாம், கணவர் இறந்ததால் இனி கர்த்தர் தேவையில்லை. பிள்ளை இறந்ததால் இனி கர்த்தர் எதற்கு, என்றெல்லாம் எண்ணுகிறவர்கள் உண்டு.

பணமோ, பொருளோ, அந்தஸ்தோ, மனித உறவுகளோ எவை நமக்குக் கர்த்தரால் தரப்பட்டிருந்தாலும், அவை ஒருநாள் இழக்கப்படத்தக்கவையே. எனவே, மண்ணிற்குரியவைகளை இழக்க நேரிட்டதால் விரக்தியடைந்து, விண்ணிற்குரிய இறை உறவை இழக்கக்கூடாது. அதே வேளையில், அநேகர் உண்மையில் இழந்தது தேவ உறவு அல்ல. அநேகர் சில சோக நிகழ்வுகளுக்குப் பின்பு, தேவ உறவை வேண்டாம் என்பது போல நடந்து கொள்வார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் இழந்ததும் தேவ உறவு அல்ல. அவர்கள் வேண்டாம் என்றதும் தேவ உறவு அல்ல. அவர்கள் விலகி வந்தது தேவ உறவிலிருந்து அல்ல. தேவன் தங்க ளோடிருக்கிறார் என்ற அவர்களின் நிஜமற்ற நம்பிக்கையை விட்டுத்தான் விலகி வந்திருக்கின்றனர்.

அவர்களிடம் ஏற்கெனவே இருந்தது தேவ உறவின் அனுபவம் அல்ல. அது வெறும் தேவ பக்திச் செயல்களுடன் வாழ்ந்த அனுபவமே. ஏனென்றால், என்ன துன்பம் வந்தாலும், ஒருவர் தேவ உறவுடன் வாழ்ந்துவிட்டு, அதை விட்டு விலகி வருவது, எளிதான விஷயமல்ல. தேவ ஐக்கியத்தை அனுபவித்த ஒருவர், வாழ்க்கைப் புயல்களின் விளைவாக, இனி தேவ உறவு வேண்டாம் எனப் பிரிந்து வருவது கடினமே. துன்பங்கள் தேவ அன்பை விட்டுப் பிரித்துவிடும் ஆற்றல் உள்ளவை அல்ல.

சிந்தனைக்கு...

சோதனைகள் சிலரோடு தேவன் இருப்பதைக் காட்டும்.
சிலரோடு தேவன் இல்லை என்பதையும் காட்டும்.

ஜூலை 27

செலவில்லாத விசுவாசம்

அப்போஸ்தலர் 17:22–34

அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.
அப்போஸ்தலர் 17:27

இந்தியாவில் சுவிசேஷகர் ஒருவர் நடத்தும் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, லட்சக்கணக்கில் செலவழித்து அமெரிக்காவிலிருந்து விசுவாசி ஒருவர் வந்தாராம். ஏன் அவ்விதம் வந்தாரென்றால், அந்த ஊழியரின் கூட்டத்தில் நடக்கப் போகும் அற்புதங்களில், தனக்கும் பங்கு வேண்டும் என்பதற்காக கர்த்தரால் வருகின்ற ஒரு அற்புத ஆசீர்வாதத்தைப் பெற, எத்தனை லட்சங்கள் செலவழித்தாலும், அது நஷ்டமல்ல என்பது அவருடைய விசுவாசம்.

ஆனால், கர்த்தரால் வருகின்ற ஆசீர்வாதத்தைப் பெற்றிட, எந்தச் செலவும் செய்யத் தேவையில்லை என்பதுதான் உண்மையான விசுவாசம். இயேசுவிடத்திலிருந்து அற்புதம் பெற விரும்புகின்ற நபருடைய விசுவாசம் சரியானதென்றால், அவர் பல லட்சங்களைச் செலவு செய்து இந்தியாவிற்கு வரத் தேவையில்லை. ஏனென்றால், அற்புதம் செய்கின்ற இயேசு அமெரிக்காவிலும் இருக்கிறார். அவர் தேடுகின்ற ஒவ்வொருவருக்கும் அருகாமையில்தான் இருக்கின்றார்.

ஆனால், அநேகருக்கு இயேசுவிடம் நேரடியாக ஒரு நன்மையை பெறத் தேவையானச் சரியான ஆவிக்குரிய விசுவாசம் இல்லை. இவர்கள் எவ்வளவுதான் இயேசுவையும், அவருடைய வல்லமையையும் நம்பினாலும், தங்களை அவருக்கு அந்நியர்களாகவே எண்ணுகின்றனர். எனவேதான், இன்னொரு தேவ ஊழியர் வாயிலாகவே இயேசுவின் நன்மையைப் பெற வருகின்றனர். நான் ஆண்டவரை விசுவாசிக்க ஆரம்பித்த துவக்க காலத்தில், மும்பையிலிருந்து கேரளா கோட்டயத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்திற்குப் போய் அற்புதம் பெற விரும்பினேன். ஆனால், போக இயலாமல் போய் விட்டது. அடுத்த முறை அதே ஊழியர் தூத்துக்குடியில் நடத்தின கூட்டத்திற்குப் போய் ஆசீர்வாதம் பெற விரும்பிப் போய் கலந்து கொண்டேன். அங்குதான் இது போன்ற நம்பிக்கைகள் தவறு என்று புரிந்து கொள்ள கர்த்தர் உதவி செய்தார்.

அன்றிலிருந்து இன்றுவரை நான் யார் வழியாகவும், ஒருமுறைகூட ஆசீர்வாதம் பெற்றிடப் போகவில்லை. ஏனென்றால், ஆண்டவரகிய இயேசு என்னோடு இருப்பதை நான் விசுவாசித்ததால், அது தேவையில்லாமல் போய் விட்டது. ஆம். நம்முடைய விசுவாசம் ஒரு தேவ ஊழியர் வழியாகச் செயல்படுகிற இயேசுவின் மேல் அல்ல. நம்மோடிருந்து, நம் வழியாகச் செயல்படச் சித்தங்கொண்ட கர்த்தர் மேல் இருக்க வேண்டும். அதுதான் உண்மையான விசுவாசம்.

சிந்தனைக்கு...

ஆசீர்வாதத்தைத் தேடி எங்கும் போகாதே,
ஆசீர்வதிக்கப்பட்டதை அறிவிக்க எங்கு வேண்டுமானாலும் போ.

ஜூலை 28

அன்பில் வைராக்கியம்

எபேசியர் 3:9–21

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள ...
எபேசியர் 3:19

ஒருவர் கர்த்தருக்கு தன்னை ஒப்புக் கொடுத்ததோடு, கர்த்தரை அதிகமாக நேசித்து வாழ்வதற்கு முடிவு செய்தார். எனவே, கர்த்தர்மேல் உள்ள அன்பைக் காண்பிக்க நிறைய விஷயங்களைப் பக்தியுடன், சிரமத்துடன் செய்வார். சில நேரங்களில், கஷ்டங்கள் நஷ்டங்கள் வரும் போது, கர்த்தரை நேசித்துச் செயல் படுவது கடினமாயிருக்கும். ஆயினும், மிக மிகச் சிரமப்பட்டுக் கர்த்தரை நேசிப் பதை விட்டுப் பின்வாங்காமல் செயல்பட்டார். கர்த்தர்மேல் வருத்தப்பட்டு பக்தியாகச் செயல்படுவதைத் தவிர்க்கும் பழக்கம் அவரிடமில்லை.

எனவே, சிலர் அவரை இயேசுவின்மேல் வெறித்தனமான அன்புள்ள பக்தர் என்று சொல்வார்கள். ஆனால், கஷ்டவேளைகளில் இவரிடம் எந்தச் சந்தோஷமும் தெரியாது. எல்லாரிடமும் மிக மிகக் கடுகடுப்பாக நடந்து கொள்வார். அவருக்குள் சமாதானமில்லாத நிலைமை பிறரோடுள்ள தொடர்புகளிலும் பிரதிபலித்தது. காரணம் என்ன? அவர் நியாயப்பிரமாணக் கிரியை போல கர்த்தரை நேசித்தாரே யன்றி, கர்த்தர்மேல் அவருக்குப் பெரிய சந்தோஷம் எதுவும் இல்லை.

கர்த்தரை நேசிப்பது என்பது கட்டளைகளையைப் பின்பற்றுவது போல் அல்ல. கர்த்தரை நேசிக்கிறோம் என்பதைவிட, கர்த்தருடைய நேசத்தை அனுபவிக் கின்றோம் என்பதே சரியானது. கர்த்தரிடத்தில் அன்பாயிருத்தல் என்பதைக் கர்த்த ருடைய அன்பை அனுபவித்துக் கொண்டு வாழ்தல் என்று அர்த்தப்படுத்தலாம். தேவனோடுள்ள ஐக்கியத்தில் ஆழமாகப் போய், தேவன் நம்மை எப்படி நேசிக் கின்றார் என்பதை, நாம் நம்முடைய ஆத்துமாவில் உணர வேண்டும். ஆழமறியாத ஆண்டவருடைய அன்பை ருசிக்க ருசிக்கத்தான், எத்தனை சோதனை வந்தாலும் அவருடைய ஐக்கியத்தை விட்டு விலக இயலாத நிலைமை நேரிடும்.

நாம் நம்முடைய பக்தி வைராக்கியத்தால் கர்த்தரை நேசிப்பது அல்ல. அவருடைய அன்பை நமக்குள் அனுபவித்த வைராக்கியத்தால், அவரை நேசிக்க வேண்டும். அவ்விதம் நேசிக்கும் போது, அது தேவனுக்கும் நமக்கும் இடையி லான ஒன்றாக மட்டும் இராது. தேவனை நேசிக்கிறவர்கள் பிறரையும் நேசிக்க வேண்டும். நாம் மற்றவர்களிடம் அன்பு காட்டி வாழும் போதுதான், நாம் தேவ அன்பை அனுபவிக்கிறோம் என்பது உறுதிப்படும்.

சிந்தனைக்கு...

தேவ ஐக்கியத்தின் அனுபவத்தைக் காணாமல்,
தேவனுடைய அன்பின் அனுபவத்தைக் காண இயலாது.

ஜூலை 29

நிம்மதிக் கவலை

2 கொரிந்தியர் 7:1–11

புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன.
2 கொரிந்தியர் 7:5

கிறிஸ்தவர் ஒருவர் அமைதியுடன் வாழ வேண்டும் என்பதில் அதிக கரிசனையுடையவர். அவர் பலரிடம் பேசிப் பழகுவது கிடையாது. ஏனென்றால், அவர்களோடு பேசிப் பழகும் போது, ஏதாவது பிரச்சினை வந்து, மன அமைதி பாதிக்கப்பட்டு விடும் என்ற பயம். அவர் வேலைக்காக எங்கு போனாலும், அதிக நாள் நிலைப்பதில்லை. அமைதியுடன் வேலை செய்ய ஒரு சூழல் இல்லை என்று கண்டவுடன் அந்த வேலையை விட்டு விடுவார். இவர் மனைவி எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும், ஏன் என்று கேட்கமாட்டார். ஏனென்றால், ஏதாவது வாக்குவாதம் வந்து, அமைதி பாதித்து விடும் என்ற பயம்.

வாழ்க்கையில் அமைதியுடன் வாழ வேண்டும் என்ற ஆசை அவசியம். ஆனால், அதுவே வாழ்க்கையின் இலக்காக இருந்தால், அமைதி பாதிக்கப்பட்டு விடக் கூடாதே என்ற அதிக ஆதங்கமும், அமைதி பாதித்து விடுமோ என்ற அதிகப் பயமும் வந்து விடும். பின்னர், அமைதி தொடர்பான நுண்ணுணர்வு அதிகமாகி, சற்று பிரச்சினையான சூழ்நிலையைக் கண்டாலே, பயந்து ஓட நேரிடும். நாம் மன நிம்மதியைப் பாதிக்காமல் காத்துக் கொள்வதை முதலிடத்தில் வைக்காமல், மனதைக் கர்த்தருக்கேற்ற பரிசுத்தமாக வைப்பதற்கே முதலிடம் தர வேண்டும்.

சிலருடைய செயலாலும் வார்த்தையாலும், நம்முடைய நிம்மதிக்குக் கொஞ்சம் தொந்தரவு ஏற்படலாம். அதற்குப் பயந்து யாருடனும் பேச்சு வார்த்தையின்றி, ஒதுங்கிக் கொள்ளுதல் நல்லதல்ல. சில செயல்பாடுகளுக்குள் செல்லும் போது, மன நிம்மதிக்குக் கொஞ்சம் பாதிப்பு ஏற்படலாம். அங்கே அமைதியே முக்கியம் என்று எண்ணி ஒதுங்கிக் கொண்டால், ஆக்கப்பூர்வமாய் நாம் எதையும் செய்ய முடியாது.

நாம் மற்றவர்களின் சொல்லாலோ அல்லது செயலாலோ, எளிதில் அமைதியை இழக்காத விதமாக, ஆவிக்குரிய நிலையில் வலிமையாயிருக்க வேண்டும். நாம் சில மனிதர்களாலோ சூழ்நிலைகளாலோ, மனதின் அமைதிக் குறைவை சற்று நேரம் காண நேரிடும். அதைத் தவிர்ப்பதற்காக நாம் எதிலும் ஈடுபடாமல் வாழ்ந்தால், வாழ்க்கையில் எதையும் சாதிக்க இயலாது. சில சோதனையான சூழல்களுக்குள் நாம் போய் ஆக வேண்டியது கட்டாயம் என்றால் போக வேண்டும். 24 மணி நேரமும் அமைதியான பூங்காவில் இருப்பது போல உணருவதற்கு விரும்பக் கூடாது.

சிந்தனைக்கு...

அமைதியைத் தேடி எங்கும் போகாதே.
உனக்குள் ஆண்டவரைத் தேடு, அவரோடு அமைதியும் வரும்.

ஜூலை 30

பிரசன்னமா வாக்குதத்தமா?

அப்போஸ்தலர் 18:1–11

நான் உன்னுடனேகூட இருக்கிறேன்.
அப்போஸ்தலர் 18:10

ஒருவர் வேதாகமத்தில் எதைப் படித்தாலும் தனக்கு அன்று ஒரு வாக்குத்தத்தமாக, ஏதாவது வசனம் கிடைத்ததா என்பதை அறியவே அதிகக் கவனமாயிருப்பார். அவர் எங்கு பிரசங்கம் கேட்கப் போனாலும், தனக்கு ஒரு வாக்குத்தத்த வார்த்தை கிடைத்திருக்கிறதா, என்பதை அறியவே அதிக ஆர்வமா யிருப்பார். ஏதவாது ஒரு வழியில், தனக்கு ஒரு வாக்குத்தத்தம் கிடைக்க வேண்டும் என்பதே, அவருடைய முதன்மையான தேடலாய் இருக்கும்.

தேவ ஆசீர்வாதங்களை அடைய விரும்பும் பலர், அதற்கு ஏற்ற ஒரு வாக்குத் தத்தத்தைப் பெறுவதிலேயே குறியாயிருக்கின்றனர். ஏதாவது ஒரு பிரச்சினை அல்லது கஷ்டம் என்றால், அதிலிருந்து தேவன் விடுவிப்பாரா என்று அறிய, ஒரு வாக்குத் தத்தத்தையே எதிர்பார்க்கின்றனர். இந்த விதமான ஒரு வசன வாக்குத் தத்த எதிர்பார்ப்பு, ஒருவர் தேவனுக்குத் தூரமாக அந்நியரைப் போல இருப்பதின் அடையாளமாகும். தேவன் ஏதாவது ஒன்றைச் செய்யப் போவது சம்பந்தமாக, வாக்குறுதி தந்தால்தான் நாம் நம்பிக்கையாயிருப்போம் என்றால், அது சரியான விசுவாசம் அல்ல.

தேவனுடைய பிரசன்னம்தான் நமக்கு மிகப்பெரிய வாக்குத்தத்தம். தேவ னோடிருக்கின்ற ஒரு நிச்சயம்தான், தேவன் நமக்கு ஆதரவாயிருந்து செயல் படுவார் என்ற நம்பிக்கையைத் தருகின்றது. கர்த்தர் நம்மோடிருப்பதை நாம் நமக்குள் அடையாளம் கண்டால், அவர் நம்முடைய சூழ்நிலையில் நிச்சயமாக நமக்கு ஆதர வாயிருந்து செயல்படுவார் என்றும் நம்பலாம். ஏனென்றால், அவர் நம்மோடிருப்பது அவருடைய சமுகத்தை உணருவதற்காக மட்டுமல்ல. அவர் நமக்கு ஆதரவான நன்மையான ஒன்றைச் செய்யவே இருக்கின்றார்.

எனவே, நாம் தேட வேண்டியதும் நாட வேண்டியதும், தேவன் நம்மோடிருக் கின்ற ஒரு அனுபவத்தையே. தேவ ஊழியர்கள் வழியாக நாம் வாக்குத்தத்தம் பெற்று, அதை நாம் நம்பிக் கொண்டிருப்பது நாம் தேவனோடு இல்லை என்பதின் அடையாளமாகும். மோசே ஒரு காலகட்டத்தில் கடினமான சூழல்களைச் சந்தித்த போது, தேவனிடத்திலிருந்து ஒரு ஆசீர்வாத வாக்குத்தத்தத்தை அல்ல, ஆசீர்வாதப் பிரசன்னத்தையே தேடினான். கர்த்தரின் பிரசன்னம் நம்மோடிருந்தால், நம்மிடம் பரிசுத்தமும் காணப்படும், தேவ நன்மைகளும் காணப்படும்.

சிந்தனைக்கு...

தேவனுடைய பிள்ளை என்ற நிச்சயம் பெற்றவனுக்கு,
மாதந்தோறும் வாக்குத்தத்தங்கள் தேவைப்படாது.

ஜூலை 31

கர்த்தர் நம்மோடு இருக்கிறாரா?

சங்கீதம் 23:1–6

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும்...
சங்கீதம் 23:4

நமக்கு நன்மைகள் கிடைப்பதை அடிப்படையாக வைத்து, கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்று புரிந்து கொள்வது, ஒரு சரியான விசுவாசம் அல்ல. ஏனென்றால், நன்மைகள் கிடைக்காத வேளையிலும் கர்த்தர் நம்மோடிருக்க முடியும். அது போல, நன்மைகள் நமக்கு மிகுதியாக இருக்கின்ற ஒரு வேளையில், கர்த்தர் நம்மோடு இல்லாமலும் இருக்க முடியும். சாலொமோனுக்கு ஒரு காலகட்டத்தில் ஏராளம் நன்மைகள் கிடைத்தன. ஆனால், தேவன் சாலொமோனோடு அந்தக் கால கட்டத்தில் இருந்தார் என்று கூற எதுவுமில்லை.

ஒரு காலகட்டத்தில் யோசேப்புக்கு எந்த விசேஷ நன்மையும் இல்லை. நன்மையான எதுவும் இல்லாத வெற்றிடம் இருந்தாலும், தேவன் அவனோடிருந்தார் என்று வேதம் சொல்கின்றது. (ஆதியாகமம் 39:2) ஆம், ஆசீர்வாதம் ஏதும் இல்லாதது போன்றதோர் சூழ்நிலையில், தேவ பிரசன்னம் நமக்கு ஆசீர்வாதமாக இருக்க முடியும். ஏராளம் நன்மைகள் இருக்கும் ஒரு காலகட்டத்தில், தேவ பிரசன்ன மற்ற ஒரு சாப நிலையும் இருக்க முடியும்.

சிலர் மிக நல்ல நிலைமையில் இருப்பதைப் பார்த்திருக்கின்றேன். அவர்கள் கையிட்டுச் செய்வதையெல்லாம் கர்த்தர் ஆசீர்வதித்து வெற்றியாக்குகிறார், என்று சொல்லத்தக்க ஒரு சூழ்நிலை அவர்கள் நடுவில் உள்ளது. அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட நல்ல நிலைமையை, கர்த்தர் தங்களோடிருப்பதற்கான வலிமையான சான்றாக எண்ணுகின்றனர். ஆனால், அவர்களோடு கர்த்தர் இல்லை என்பது சத்திய ரீதியாகப் பார்க்கும் போது விளங்குகின்றது. ஏனென்றால், கர்த்தரைத் தேடுகின்ற அனுபவம் அவர்களிடம் இருந்தாலும், அது முதலிடத்தில் இல்லை. தேவ பக்தி அவர்களிடம் இருந்தாலும், தேவனுக்கேற்ற சிறந்த சுபாவங்கள் அவர்களிடம் இல்லை. ஆராதனை ஜெபம் போன்ற ஈடுபாடுகள் இருந்தாலும், கர்த்தருக்கேற்ற வழிகளில் நடக்கும் அனுபவம் அவர்களிடம் இல்லை.

ஆனால், அவர்களின் நல்ல பொருளாதார நிலைமை, தேவனற்ற அவர்களின் நிலைமையைப் புரிந்து கொள்ளஅனுமதிக்கவில்லை. ஆம். நன்மையான சூழல்களின் அடிப்படையில், கர்த்தர் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கை தவறானது. அது போல நாம் எதிர்பார்த்த நன்மைகள் வராததால், கர்த்தர் நம்மோடு இல்லை என்ற நிதானிப்பும் தவறானது. தேவன் அருளிய சமாதானமும், சந்தோஷமும், திருப்தியும், நம்பிக்கையும் நம்மிடமிருந்தால், கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்றே அர்த்தம்.

சிந்தனைக்கு...

பரிசுத்தமாக வாழாதவர்கள் கண்ட
செல்வநிலைக்கும் தேவனுக்கும் சம்பந்தமில்லை.

ஆகஸ்ட் 1

சிறுமைப்பட்ட காலங்கள்

பிலிப்பியர் 4:8–23

தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்.
பிலிப்பியர் 4:12

என்னுடைய ஊழியத்தின் மிக மிகத் துவக்கப் பகுதியில், ஒரு நல்ல அமைதியான சூழலில் சற்று வசதியான ஒரு வீட்டில், சில காலம் தங்கியிருந்தேன். ஆனால், வீட்டு உரிமையாளர் வீட்டை விற்ற காரணத்தால், உடனடியாக அதைக் காலி செய்துவிட்டு, ஒரே ஒரு அறையுள்ள ஒரு மிகச் சாதாரண இடத்திற்குச் செல்ல நேரிட்டது. காற்றோட்டம் இல்லை. சரியான வாகனப் போக்குவரத்து இரைச்சல், கொஞ்சமும் எனக்கு அது பிடிக்கவில்லை. உடனடியாக அதைக் காலி பண்ணி விட்டு எங்காவது போக நினைத்தேன்.

பொருளாதாரச் சூழலின் விளைவாக எதையும் செய்ய முடியவில்லை. நாட்கள் போகப் போகப் பழகிவிட்டேன். ஒரு வாரம் தாக்குப் பிடிக்காது என்று எண்ணப்பட்ட அந்தச் சாதாரண அறையில், பல வருடங்களைக் கழித்தேன். தேவன் என் வேண்டுதலைக் கேட்டு அவருக்கு ஊழியம் செய்ய வந்தவனுக்கு, ஒரு நல்ல வீட்டைத் தரவில்லை. ஆனால், அந்த அறையில் மனரம்மியத்தோடு, விரக்தியின்றி, தங்கி, ஊழியத்தைச் செய்ய என்னைப் பழக்குவித்தார். என் ஊழியப் பாதையைத் திரும்பி பார்க்கும்போது, அந்த ஒற்றை அறையில் தங்கி ஊழியம் செய்த காலங்களின் நினைவுகள், எனக்கு நல்ல திருப்தியைத் தருகிறது.

வானத்தையும் பூமியையும் படைத்த தேவனுக்கு, ஒரு நல்ல சௌகரியத்தைத் தருவது பெரிய விஷயம் அல்ல. ஆயினும், தேவன் தம்மை நேசிக்கிறவர்களுக்கு சுய சௌகரிய வாழக்கையைத் தருவதைவிட சாதாரணச் சூழ்நிலைகளில் வாழ்ந்து பழகி, நல்ல அனுபவம் பெறுவதையே பெரிய விஷயமாக எண்ணுகின்றார். வாழ்வதற்குக் கடினமான இடங்களில் வாழ்ந்து, நல்ல மனப் பக்குவத்தையும், எந்தச் சூழ்நிலையிலும் வாழ்வதற்குத் தேவையான ஆற்றலையும் பெறுவது, உண்மையிலேயே ஒரு சிறந்த அனுபவமே. இன்றும் என்னால் சாதாரணச் சூழ்நிலையில் வாழ இயலும். சாதாரண நிலைமைகளில் திருப்தியடைய இயலும்.

ஒரு கால கட்டத்தில் கர்த்தர் அனுமதித்த சூழல்கள்தான், இன்றும் அவ்விதமான சில சூழல்களை ஏற்கும் பக்குவத்தைக் கொடுத்திருக்கிறது. ஆம். சாலொமோனுக்குக் கர்த்தர் கொடுத்த வளமையின் காலங்களைவிட, தாவீதுக்குக் கொடுத்த வனாந்திர அனுபவ காலங்கள் மிக மேன்மையானவை. அது போன்ற சிறுமைப்பட்ட காலங்கள்தான் தாவீதுக்குத் தேவனை அறிகிற அறிவினையும், வாழ்க்கை எதிர்காற்றுகளைச் சந்திக்கும் மனப்பயிற்சியையும் கொடுத்தது.

சிந்தனைக்கு...

குறைவுகளின் நடுவில் வாழப் பழகினவன்,
நிறைவுகளின் நடுவில் நிலைதவறாதிருப்பான்.

ஆகஸ்ட் 2

சத்தியமும் மனித நட்பும்

யோவான் 5:30–47

அவன் சத்தியத்திற்குச் சாட்சி கொடுத்தான்.
யோவான் 5:33

என்னால் எல்லாரையும் நேசிக்க இயலும். ஆனால், எல்லாரோடும் அந்த அன்பை நிரூபிக்கும்படி இசைந்து போக இயலாது. நாம் சிலரோடு சேர்ந்து நடக்கவோ, செயல்படவோ முடியாது. அதற்காக அவர்களை வெறுக்கின்றோம் என்று அர்த்தம் ஆகிவிடாது. எனக்குத் தனிப்பட்ட முறையில் பலரோடு இணைந்து நடக்கவும், சேர்ந்து செயல்படவும் அதிகமான ஆசை உண்டு. ஆயினும், அது நிறைவேறுவதில்லை.

ஏனென்றால், அவர்களோடு இசைந்து செல்லும் ஆசையை நிறைவேற்ற, சில நேரங்களில் அவர்களோடு சத்திய விஷயத்தில், சமரசம் ஆக வேண்டிய கட்டாயம் உள்ளது. இல்லையென்றால், அவர்களின் சத்தியத்திற்கு புறம்பான நம்பிக் கைகளையும், நிலைப்பாடுகளையும் கண்டுகொள்ளாமல் போக வேண்டிய தேவை உள்ளது. நாம் எதைச் சத்தியம் என்று கர்த்தரால் கற்றிருக்கின்றோமோ, அதற்கு முரண்பாடான ஒரு புரிந்து கொள்ளுதலை மற்றவர்கள் உறுதியாக பற்றிக் கொள்ளும் போது, அவர்களோடு நாம் சேர்ந்து செயல்படும் ஆசையை நிறைவேற்ற முடியவில்லை.

நான் சிலரோடு நல்ல நட்புடனும் ஐக்கியத்துடனும் வாழவே அதிகமாக விரும்புகின்றேன். ஆனால், நட்பு முக்கியமா, சத்தியம் முக்கியமா என்ற கேள்வி வரும் போது, என்னால் சத்தியத்தைத்தான் முதலிடத்தில் வைக்க முடிகிறது. ஏனென்றால், என்னோடு யாரும் நட்பு பாராட்டவோ, பழகவோ, சேர்ந்து செயல் படவோ விரும்பாத அந்தப் பழைய நாட்களில், நான் வாழ்ந்ததும் மகிழ்ந்ததும் இந்த சத்தியத்தால்தான். நான் இரண்டு நாள் மூன்று நாள் உணவில்லாமல் படுத்து தூங்க நேரிட்ட நாட்களிலும், தேவன் எனக்கு ஒரு நாள்கூட சத்திய உணவைத் தராம லிருந்ததில்லை.

நான் சத்திய வைராக்கியம் உள்ளவன் என்று பெருமையாகச் சொல்ல இயலாது. சத்தியம் என்னைத் தாங்கினதால், நடத்தினதால், திருப்தி தந்ததால், நம்பிக்கை கொடுத்ததால், அதனை இரண்டாம் இடத்தில் வைப்பதற்கு இயலாமல் போய் விட்டது என்பதே உண்மை. சிலர் எல்லாரோடும் இணைந்து நிற்பது தான் ஆன்மிகம் என்கின்றனர். சிலர் எல்லாரோடும் சேர்ந்து செயல்படுவது தான் சத்தியம் என்கின்றனர். ஆனால், சத்தியத்தை அறிந்து அதனால் வாழ்ந்து பழகியவர்கள், எல்லாரோடும் போய் நிற்க சத்தியம் அனுமதியாது என்பதை அறிவார்கள்.

சிந்தனைக்கு...

தவறு செய்கிறவர்கள் மட்டுமல்ல, அந்தத் தவறுகளைவிட
அவர்களின் உறவை விரும்புகிறவர்களும், தவறானவர்களே.

ஆகஸ்ட் 3

ஜெபத்தின் வல்லமை

1 பேதுரு 4:8–19

ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்.
1 பேதுரு 4:7

ஜெபத்தின் வல்லமையைக் குறித்து மிகுதியாகப் பேசப்படுகிறது. ஜெபத்தால் எதையும் சாதிக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஜெபத்தால் தேசத்தை அசைக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஜெபத்தால் மலைகளைப் பெயர்த்து விடலாம் என்று பிரசங்கிக்கப்படுகிறது. ஜெபம் மிக மிக வல்லமையான ஒரு ஆவிக் குரிய செயல். ஆனால், ஜெபத்தின் வல்லமையைப் பேசும் போதெல்லாம், அதைக் கேட்கும் பலர், தவறான புரிந்து கொள்ளுதலைப் பெறுவதும் உண்டு.

ஜெபம் என்றால் நாம் தேவனிடம் போய், விண்ணப்பங்களையும் வேண் டுதல்களையும் இடைவிடாமல் கொடுத்துக் கொண்டிருப்பது, என்றே பலர் எண்ணு கின்றனர். நாம் விடாப்பிடித்தனமாக விண்ணப்பித்துக் கொண்டிருந்தால், தேவன் களத்திலிறங்கி வல்லமையாய்ச் செயல்பட வந்துவிடுகின்றார் என்று யோசிக் கின்றனர். எனவே, அநேகர் மிகுதியாகச் ஜெபிக்கப் பழகிக் கொள்கின்றனர். தங்க ளிடம் இரட்சிப்பின் அனுபவம் இருக்கிறதா அல்லது தேவ உறவின் அனுபவம் இருக்கிறதா என்றெல்லாம் ரொம்பச் சிந்திக்காமலே, ஜெபம் என்ற செயலைத் தீவிர மாகச் செய்யப் பழகிக் கொள்கின்றனர்.

ஜெபத்தின் வல்லமை என்பது, விண்ணப்பித்துக் கொண்டிருப்பதின் வல் லமை அல்ல. விண்ணப்பிக்கின்ற நபருக்கும், விண்ணப்பம் கேட்கும் தேவனுக்கும் இடையே உள்ள தேவ ஐக்கியத்தின் வல்லமைதான் ஜெப வல்லமை. ஒரு மனிதன் ஜெபம் என்ற செயலின் வழியாகத் தொடர்ந்து, அதிகமான நேரங்கள் மன்றாடிக் கொண்டிருப்பது அல்ல ஜெப வல்லமை. அந்த மன்றாட்டு வேளையில், எந்த அள விற்குத் தேவ உறவை உறுதிபடுத்தி அனுபவிக்கின்றானோ அதுதான் வல்லமை. தேவ உறவோடு நாம் இருந்தால்தான் பெரிய வல்லமையான காரியங்கள் நிகழும்.

அனேகர் நாம் தொடர்ந்து மன்றாடுகின்ற செயலில் இருப்பதையே, ஜெப வல்லமை என நினைக்கின்றனர். எனவே, அநேகர் தங்களைச் ஜெபிக்கும் செயலில் பழகிக் கொண்ட இயந்திரங்களாக்கிக் கொள்கின்றனர். ஆனால், அவர்கள் உண்மையான மனந்திரும்புதலின் விளைவான தேவ உறவை அனுபவிக்கா மலேயே, அப்படிப் பழகிக் கொள்கின்றனர். தேவன் ஜெபிக்கும் செயலைப் பார்த்து அல்ல. ஜெபிக்கின்ற நபருக்குத் தம்மோடிருக்கின்ற ஐக்கியத்தின் நிலைமையைப் பார்த்தே வல்லமையாகச் செயல்படுகின்றனர்.

சிந்தனைக்கு...

தேவனோடுள்ள உறவுகளில் வலிமையாயிரு.
இல்லையென்றால், எவ்வளவு ஜெபித்தாலும் அது பலவீனமானதே.

ஆகஸ்ட் 4

பாவம் செய்தால்

எபிரெயர் 12:1–16

ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கு...
எபிரெயர் 12:15

விசுவாசி பாவம் செய்தால் பரலோகம் போகிற வாய்ப்பு பறிக்கப்பட்டு விடுமா? பாவம் செய்தால் இரட்சிப்பு இழக்கப்பட்டு விடுமா? என்பது போன்ற கேள்விகள் அதிகமாகக் கேட்கப்படுகின்றன. ஆனால், முக்கியமாக நாம் கேட்க வேண்டிய கேள்வி, பாவம் செய்தால் தேவ உறவை இழப்போமா அல்லது இழக்க மாட்டோமா என்பதே. ஏனென்றால், பரலோகம் போக முடிவதும் முடியாததும், இந்தப் பூமியில் தேவ உறவுடன் வாழ்வது அல்லது வாழாததிலேயே அடங்கியுள்ளது.

இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதன் பாவம் செய்தால் உடனேயே தேவ உறவை இழந்து விடமாட்டான். ஆனால், தேவ உறவை அனுபவித்து மகிழும் வாய்ப்பை தற்காலிகமாக இழக்கின்றான். தவறு செய்யும் போது தேவ உறவால் பெற்ற நல் மனசாட்சி பாதிக்கப்படும். தவறு செய்யும் போது, தேவ சமுகத்தின் விளைவான சமாதானத்தையும், சந்தோஷத்தையும், நம்பிக்கையுணர்வையும் அனுவிக்க இயலாமல் போகிறது.

அந்த மனிதன் தவறை உணர்ந்து வருந்திக் கர்த்தரிடம் ஒப்புரவாகும் போது, மறுபடியும் தேவ உறவின் ஆசீர்வாதங்களை அனுபவிக்க இயன்றவனாய் மாறுவான். தவறு செய்த மனிதனுக்கு ஏற்படும் நஷ்டம் தேவ உறவு அல்ல. தேவ உறவினால் வரும் சமாதானம், சந்தோஷம், நம்பிக்கை போன்றவையே நஷ்டம் ஆகும். கணவன் மனைவிக்கு ஒரு தவறு செய்தாலோ அல்லது மனைவி கண வனுக்கு ஒரு தவறு செய்தாலோ, உடனேயே உறவு இழக்கப்படாது. ஆனால், அவர்கள் உறவை இழக்காவிட்டாலும், அந்த உறவு தருகின்ற சந்தோஷத்தை அனுபவிக்க இயலாமல் போகின்றனர்.

தவறுகளுக்கு மனம் வருந்தி தேவனோடு ஒப்புரவாகும்போது, மறு படியும் தேவ ஐக்கிய சந்தோஷங்களை அனுபவிக்க முடியும். அதே வேளையில், தவறுகளில், பாவங்களில் நிலைத்திருக்கும்போது, தேவ உறவு தொடர்ந்து அனு பவிக்க இயலாததாக மாறும். தொடர்ந்து தேவ உறவை அனுபவிக்காமல் பாவத்தின் வாஞ்சையினால் மனம் கடினமானால், தேவ உறவு நஷ்டமடையும். அது தேவன் தாம் தந்த உறவை திருப்பி எடுத்துக் கொள்வது அல்ல. நாம் தேவ உறவை விட்டு விலகிச் செல்வதாகும். அதுதான் நித்திய வாழ்விற்கு நம்மைத் தூரமாக்கும். ஏனென்றால், நித்திய வாழ்வு என்பது, தேவ உறவுடன் வாழ்ந்து முடிக்கின்றவர்கள் பெறுகின்ற நித்திய ஈவு ஆகும்.

சிந்தனைக்கு...

பாவம் செய்கிறவனையும் கர்த்தர் நேசிப்பார்.
ஆனால், அந்த நேசத்தை அனுபவிக்க பாவம் அனுமதிக்காது.

ஆகஸ்ட் 5

பாவம்தான் துக்கப்படுத்துமா?

எபேசியர் 4:17–32

தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.
எபேசியர் 4:30

பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுவது என்பது, நாம் ஏதாவது தவறு செய்யும் போது மட்டும்தானா? இல்லை. நாம் செய்கின்ற தவறுகள் அல்லது பாவம் தான் தேவ ஆவியைத் துக்கப்படுத்தும் என்று கூற இயலாது. சில நல்ல விஷயங் களை நாம் செய்யத் தவறுவதும், தேவ ஆவியைத் துக்கப்படுத்தும். ஒரு தகப்பன் தன்மகன் ஒரு பெரிய தவறைச் செய்தால் துக்கப்படுவான். சில வேளை மகன் தான் எதிர்பார்த்தபடி ஒரு நல்ல நிலைமைக்கு வராமல் போனதாலும் துக்கப்படுவான்.

எனக்கு தெரிந்த நண்பர் ஒருவர் அவருடைய மகனுக்காக மிகவும் துக்கப் படுவார். அவன் எந்தத் தவறும் செய்வதில்லை. அவனிடம் எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. ஆனால், அவன் கல்லூரிப் படிப்பை ஆர்வமில்லாததால் தொடரவில்லை. அவன் ஒரு நல்ல கல்வி நிலை அடையவோ, நல்ல வேலையைப் பெறவோ இல்லை. எனவே, அவருக்கு மகனைக் குறித்த மிகுந்த துக்கமுண்டு. சில கிறிஸ் தவர்கள் பாவிகள் அல்ல. அவர்கள் தவறானவர்களோ, பொல்லாதவர்களோ அல்ல.

ஆனால், அவர்களிடம் குணாதிசய மேன்மைகள் இல்லை. அவர்களிடம் தேவனுக்கேற்ற எந்த உயர்ந்த வாழ்க்கை முறையும் இல்லை. எனவே, அவர்கள் கிறிஸ்தவ சாட்சிகளாகப் பிறருக்குக் காட்டப்படும் தகுதியில் இல்லை. அவர்களிடம் தேவ உறவைப் பிரதிபலிக்கும் பரிசுத்த சாயல் எதுவும் இல்லை. இது தேவனுக்கு அவகீர்த்தியை ஏற்படுத்தும். ஒரு பெரிய கல்வியாளரின் மகனாகத் தன்னைக் காண்பிக்கும் ஒருவன், பள்ளிக்கூடக் கல்வியில்கூட தேறாமலிருந்தால், அது அந்தத் தகப்பனுக்குக் கெட்ட பெயரைக் கொண்டு வரும். இயேசு கிறிஸ்து, தம்முடைய சீடர்கள் பரிசுத்த ஆவியால் பலப்பட்டு, சாட்சிகளாக நின்று காண்பிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

பல கிறிஸ்தவர்கள் யாருக்கும் தீமை செய்வதில்லை. ஆனால், அவர்கள் யாருக்கும் எந்த நன்மையும்கூட, செய்வதில்லை. பல கிறிஸ்தவர்கள் யாருக்கும் ஒரு அவமரியாதை செய்வதில்லை. ஆனால், அவர்கள் யாருக்கும் ஒரு கனம் கொடுப்ப தில்லை. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்றால், பாவம் செய்யாதது மட்டுமே நம்முடைய மகிமை அல்ல. நாம் பலர் நடுவில் உயர்ந்த குணாதிசயங் களோடு வாழ்ந்து, சாட்சியாக நில்லாமல் போனால், அது தேவனைத் துக்கப்படுத்தும் செயல்.

சிந்தனைக்கு...

தவறானவைகளைச் செய்வது பாவமே.
சரியானவைகளைச் செய்யாமையும் பாவமே.

ஆகஸ்ட் 6

உள்ளே உண்மை

சங்கீதம் 139:1–12

கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்.
சங்கீதம் 139:1

சில நேரங்களில் உங்களைச் சிலர் சில நல்ல விஷயங்களுக்காகவோ, நல்ல குணங்களுக்காகவோ பாராட்டுகின்றனர். ஆனால், நீங்கள் அந்த அளவுக்கு இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், நீங்கள் அந்தப் புகழ்ச்சியில் மகிழ்கின்றீர்களா? அப்படி மகிழ்ந்தால் நீங்கள் உங்களுக்குள் உண்மையாக இல்லை என்று அர்த்தம். ஏனென்றால், உண்மையுள்ளவர்கள் தங்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லாத பாராட்டில் மகிழமாட்டார்கள். அது போல, நீங்கள் பாராட்டிற் குரியவர்களாயிருந்தும் யாரோ சிலர் உங்களைத் தாழ்வாகக் காட்டும் போது, அது உங்களைத் துக்கப்படுத்துகிறதா? அப்படியென்றால், உங்களைக் குறித்து உங்களுக்கு சரியான புரிதல் இல்லை என்று அர்த்தம்.

நாம் நமக்குள் எப்படியிருக்கின்றோமோ, அப்படியே நம்மைப் பார்க்கின்ற கண்கள் நமக்குள் வேண்டும். நாம் கர்த்தருடைய பிள்ளைகளென்றால், கர்த்தர் நம்மைப் பார்க்கும் விதமாக, நம்மை நாம் பார்க்கும் அனுபவம் வந்திடும். அப்போது நாம் தகுதிக்கு மிஞ்சிப் பார்க்கப்பட்டால் அதை ஏற்கவும் மாட்டோம். தகுதிக்குக் குறை வாகப் பார்க்கப்பட்டால், துக்கப்படவும் மாட்டோம்.

நாம் நமக்குள் இல்லாததை நமக்குள் இருப்பதைப் போல எண்ணினால், அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுதல் ஆகும். சிலர் தங்களுக்குள் தவறு இருந்தாலும், அதைத் தவறற்றதாகக் காட்ட அதிகப் பிரயாசப்படுகின்றனர். ஏனென்றால், தாங்கள் சரியற்றிருப்பதை ஒத்துக்கொள்ள சுயம் இடம் தர மறுக் கிறது. அப்போஸ்தலனாகிய பவுல், பேதுருவிடம் ஒரு குறைவு இருந்ததை நேரடி யாகச் சுட்டிக்காட்டிய போது, பேதுரு ஆத்திரமடைந்து அதை மறுக்கவில்லை. ஏனென்றால், தன்னுடைய உண்மை நிலையை மறுத்து, அவன் தன்னைச் சரியானவன் போலக் காட்ட விரும்பவில்லை.

அவ்விதமே, நம்மிடம் உள்ள நல்லதை சிலர் மறைத்து, தீயது இருப்பது போலக் காண்பித்து, குஷியடைய விரும்புவார்கள். அது நமக்குச் சற்று மன வருத்தம் தரும் என்பது உண்மையாயினும், சோர்ந்து போகத் தேவையில்லை. ஏனென்றால், அவர்களுக்கு நம்முடைய உண்மை நிலைமையை ஏற்கும் சத்திய மனநிலை இல்லை. அவர்கள் சரியாகப் பார்க்கும் விதமான கண்களைத் தேவ னிடத்திலிருந்து பெறவில்லை. எனவே, நாம் நம்மைத் தேவப் பிரசன்னத்தில் சரியாகப் பார்த்து நம்பிக்கையோடிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

தவறானவர்களைவிட தவறானவர்களைச்
சரியானவர்களாகப் புகழுகின்றவர்கள் அதிகத் தவறானவர்கள்.

ஆகஸ்ட் 7

பரிசுத்தம் தராத சந்தோஷம்

பிரசங்கி 2:1–17

சந்தோஷத்தினாலே சோதித்துப் பார்ப்பேன்.
பிரசங்கி 2:1

பணம் மகிழ்ச்சியைத் தரும் என்பது உண்மையே. அந்தஸ்து மகிழ்ச்சி தரும் என்பது உண்மையே. சௌகரியமான சூழ்நிலைகள் மகிழ்ச்சி தரும் என்பது உண்மையே. ஆனால், இவை எதுவும் நமக்குப் பரிசுத்தமாக வாழ்வதற்கான ஆசையையோ, வலிமையையோ தராது. நாம் நல்ல வசதியான சௌகரியமான வலிமைச் சூழ்நிலைகளில் வாழும் போது, சந்தோஷத்தால் கர்த்தருக்கு நன்றி செலுத்தலாம். ஆயினும், அந்த சந்தோஷம், கர்த்தருக்கேற்ற விதமான பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கான தூண்டுதலையோ, வலிமையையோ நமக்கு தராது.

சாலொமோன் இராஜா தேவன் அளித்த மிகுதியான நன்மைகளினால், அதிகமான சந்தோஷத்தைத் தனக்குத் தேடிக் கொண்டவன். ஆனால், அந்த சந்தோஷம் தேவனுக்குப் பிரியமான பரிசுத்த வாழ்வை வாழ்வதற்கு அவனைத் தூண்டவில்லை. ஆனால், தாவீதின் வாழ்க்கையில் தேவனால் சந்தோஷம் கண்ட அவன், தேவனுக்குப் பயந்து, அவருடைய பிரமாணங்களின்படி வாழ்வதற்குத் தூண்டப்பட்டான். ஏனென்றால், அவன் கண்ட சந்தோஷம், தேவ உறவுடன் வாழ்ந்ததின் விளைவாக ஏற்பட்ட சந்தோஷம்.

நான் பக்தியும் செல்வமும் உடைய சிலரை அறிவேன். அவர்களிடம் நிறையப் பணம் மட்டும் அல்ல, பக்தியும் இருந்தது. அந்தப் பக்தியினால் தூண்டப்பட்டு, அவர்கள் கர்த்தருடைய பணிகளுக்காக, நிறையச் செலவு செய்தார்கள். அவர்கள் நிறைய ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். அவர்கள் நிறைய மிஷனரிப் பணிகளைத் தாங்கினார்கள். அவர்கள் நிறைய சமுதாயப் பணி செய்தார்கள். தங்களுக்குக் கிடைத்த செல்வ வளத்தின் சந்தோஷத்தினால், அவர்கள் பல நல்ல விஷயங்களைச் செய்தார்கள். ஆயினும், அவர்கள் பரிசுத்தமாக வாழ்வதில் உயர் நிலைகளை அடையவில்லை. அவர்கள் பக்தியாய் வாழ்வதற்கு ஆர்வம் காட்டின போதிலும், பரிசுத்தமாக வாழ முன்வரவில்லை.

ஏனென்றால், அவர்களுக்குள் தேவ ஐக்கியச் சந்தோஷம் இல்லை. அவர்கள் கர்த்தரைத் தங்களுக்குள் பெற்று, அதன் விளைவான பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தைப் பெறவில்லை. எனவேதான், அவர்களுக்குக் கர்த்தருக்கேற்ற உயர் குணங்களுடன் வாழவேண்டும் என்ற தூண்டுதல் வரவில்லை. பரிசுத்தமாக வாழ்ந்திடப் பரிசுத்த தேவ ஐக்கியம் மிகவும் தேவை.

சிந்தனைக்கு...

செல்வங்கள் கர்த்தரிடமிருந்து வந்தது என்று
நம்பினால், பரிசுத்தம் அதற்கு முன்பே வந்துவிட்டதா என்று பார்.

ஆகஸ்ட் 8

மன்னிப்பை விரும்பாவிட்டாலும்

எபேசியர் 4:32

நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

எபேசியர் 4:17–32

சிலருடைய மனம் சுயத்தினால் கடினப்பட்டுப் போனது. அவர்கள் தவறாகப் பேசுவார்கள். அவர்கள் பிறருக்குத் தவறு செய்வார்கள். அவர்கள் தவறாக நடந்து கொள்வார்கள். ஆனால், அவர்கள் தங்களின் தவறுகளை உணர இயன்றாலும், அதற்காக மனம் வருந்தவோ, மன்னிப்புக் கேட்கவோ, அவர்களின் கடின மனம் இடம் தராது. தவறு செய்தது ஒருபுறம், அதற்காக மனம் வருந்தாதது இன்னொரு புறம். இப்படியிருக்கும் போது, நாம் ஏன் இவர்களை மன்னிக்க வேண்டும்? மன்னிப்புக் கேட்கும் மனநிலையே இல்லாத இவர்களை, நாம் ஏன் மன்னித்து மறக்க வேண்டும்?

கர்த்தரை அறியாதவர்கள் தவறு செய்யும் மனநிலை உள்ளவர்கள் மட்டும் அல்ல. அவர்கள் தவறுகளின் விளைவான குற்ற மனசாட்சிகளைச் சாதாரண மாக எடுத்துக் கொண்டு வாழப்பழகியவர்கள். உறுத்தல்களோடு பழகிப் பழகி மனக் கடினப்பட்டு, அவர்களுக்கு யாரிடமும் மன்னிப்புக் கேட்கும் மனநிலை இராது. ஆனால், நாம் அவர்களை மன்னிக்க விரும்புவது அவர்களுக்காக அல்ல. நாம் தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய வேண்டும், என்ற நோக்கத்தின் விளைவாக மன்னிக்க வேண்டும். மேலும், தவறு செய்தவர்களுக்கு மன்னிப்புத் தேவைப்படா விட்டாலும், நாம் எதிர்மறை உணர்ச்சிகளினால் பாதிக்காதிருக்கும்படியாக, அவர்களை நாம் மன்னிக்க வேண்டும்.

நமக்கெதிராக ஒருவர் அநீதியாகத் தவறு செய்யும் போது, நமக்கு அவர்மேல் கோப உணர்வோ, வருத்த உணர்வோ அல்லது வெறுப்புணர்வோ ஏற்படுவது இயற்கையானது. இந்த எதிர்மறை உணர்ச்சிகள் நம்முடைய சமாதானத்திற்கும், சந்தோஷத்திற்கும், முன்னோக்கிச் செல்லும் செயல்பாடுகளுக்கும் பல இடையூறு களை ஏற்படுத்தும். அவை தேவனுடைய சமுகத்தை நாம் அனுபவிப்பதற்குத் தடைகளாக மாறிவிடும்.

ஏனென்றால், நமக்குள் ஏற்பட்ட வெறுப்பும், கோபமும், வருத்தமும் நியாய மானவை என்ற போதிலும், அவை நமக்குப் பாரங்கள்தானேயன்றி பிரயோஜன மானவைகள் அல்ல. இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் போது, பலர் அவருக்குத் தாங்கொணா துன்பத்தைத் தந்தார்கள். அவர்கள் அந்தத் தவறுகளை உணரவேயில்லை. ஆயினும், இயேசு அவர்களைத் தன்னார்வத்தோடு மன்னித்த தோடு, பிதாவாகிய தேவனிடமும் அவர்களை மன்னிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்.

சிந்தனைக்கு...

மன்னிப்புக் கேளாதவன் பாவி என்று நிரூபிக்கிறான்.
அவனை மன்னிப்பவன் பரிசுத்தன் என்று நிரூபணம் ஆகிறான்.

ஆகஸ்ட் 9

காணிக்கை கட்டாயம்

1 நாளாகமம் 29:5–18

உற்சாகமாகய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்.
1 நாளாகமம் 29:9

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் காணிக்கை கொடுப்பதற்குக் காரணம், அவர்களுக்கு காட்டப்படும் ஆசீர்வாத ஆசையும், மறைமுகமான பயமுறுத்தலுமே. ஆசீர்வாதம் வேண்டுமா காணிக்கை கொடு, சாபம் வராமலிருக்க வேண்டுமா காணிக்கை கொடு, என்பதே பல போதகர்களின் காணிக்கைப் போதனையாக உள்ளது. காணிக்கை கொடுத்து ஆசீர்வாதங்களைப் பெற்றவர்களின் சாட்சியைப் பலர் கேட்க வைப்பதும், காணிக்கை கொடுக்காதவர்களுக்கு ஏற்படுகிற நஷ்டங்களை எடுத்துரைப்பதும், காணிக்கை கொடுக்கத் தூண்டும் போதனைத் தந்திரமாக உள்ளது.

காணிக்கை கொடுத்தால் ஆசீர்வாதம் பெறுவாய் என்று போதிப்பதும், காணிக்கை கொடுக்காவிட்டால் சாபம் வரும் என்று போதிப்பதும், ஒரு பழைய ஏற்பாட்டு ரகமான நியாயப்பிரமாணப் போதனை ஆகும். காணிக்கை கொடுக்கின்ற எல்லாரும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்றோ, காணிக்கை கொடுக்காத எல்லாரும் ஆசீர்வாதங்களை இழந்து சபிக்கப்படுகின்றார்கள் என்றோ கூறிட முடியாது. நம்முடைய ஆசீர்வாதத்தை நிர்ணயிக்கின்ற ஒன்றாக தேவன் காணிக்கையை வைக்கவில்லை.

புதிய ஏற்பாட்டில் ஆசீர்வாதம் என்பதை நிர்ணயிப்பது, தேவ உறவே. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற அடிப்படையில் வாழ்வதே, ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற அடிப்டையில் வாழாவிட்டால், காணிக்கை கொடுத்தாலும், அங்கே ஆசீர்வாதங்களை நாம் காண முடியாது. தேவனுடைய பிள்ளைகள் என்றால், நமக்கு யாரும் ஆசீர்வாத ஆசை காட்டத் தேவையில்லை. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்றால், சாபங்களைக் குறித்து எச்சரித்துக் காணிக்கை கொடுக்க வைக்கத் தேவையில்லை.

இன்று ஏராளமான விசுவாசிகளிடமிருந்து, ஆசீர்வாத ஆசைகாட்டிதான் சபைகளால் காணிக்கை வாங்க முடிகிறது. அநேகர் ஆசீர்வாத ஆசைகளின் விளைவாகத்தான் காணிக்கை தருகின்றனர். அநேகர் சாபம் கோபம் என பயமுறுத்தப்படுவதால்தான், காணிக்கை தருகின்றனர். ஏனென்றால், அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இல்லை. தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவ காரியங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற பொறுப்பும், ஆசையும், கடமையும் நிச்சயம் இருக்கும். அவர்கள் தாங்களாக விரும்பிச் சந்தோஷத்தோடு கொடுப்பார்கள்.

சிந்தனைக்கு...

காணிக்கையின் அளவைப் பாஸ்டர் பார்ப்பார்.
காணிக்கை கொடுக்கிறவனின் தகுதியைக் கர்த்தர் பார்ப்பார்.

ஆகஸ்ட் 10

செயல்பட தடை

ஏசாயா 59:1–12

கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை.
ஏசாயா 59:1

தேவன் நம்முடைய வாழ்க்கைச் சூழல்களில் நமக்கு ஆதரவாகச் செயல்பட விரும்புகின்றார். ஆனால், தேவனைச் செயல்பட விடாமல், பாவம் தடைகளை ஏற்படுத்துகிறது. நாம் பாவம் செய்தவுடன் தேவன் கோபமடைந்து, நமக்கு உதவி செய்ய வராமல் நின்று விடுகிறார் என்று நாம் எண்ணக்கூடும். ஆனால், பாவம் அல்லது தேவனுக்கு எதிரான செயல்பாடு, தேவன் நமக்கு உதவி செய்யாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி விடுகிறது. தேவன் நமக்கு உதவுவதற்கு வந்தாலும், பாவம் அவர் செயல்படுவதற்கு இடையூறு செய்கின்றது.

ஏனென்றால், தேவன் நமக்கு உதவி செய்வதற்கு ஏதுவாக நம்மிடம் வந்து அவர் செயல்பட வேண்டியுள்ளது. தேவன் நமக்குத் தேவையான உதவிகளைப் பரலோகத்திலிருந்து தூதன் வழியாகக் கொடுத்தனுப்புவார் என்று எண்ணக் கூடாது. தேவன் நம்முடைய ஆவியோடும் மனதோடும் இணைந்து வேலை செய்து தான், நமக்குத் தேவையான பல நன்மைகளைச் செய்ய முடியும்.

இங்கே நாம் தேவனுக்குப் பிரியமில்லாத விதமாகச் செயல்பட்டால், நம்முடைய மனம் தேவனோடு இணைந்து செயல்பட இயலாத சூழல் ஏற்படும். எனவே, அவர் நம்முடன் ஐக்கியமாயிருப்பதற்கு முடியாமல் போய், நமக்குத் தேவையான உதவியைச் செய்ய முடியாமல் போகிறது. தேவன் நம்முடைய வாழ்க்கையில் அவருடைய சித்தம் நிறைவேறும் விதமாகச் செயல்பட முடியாத தடையை நம்முடைய தவறுகள் உருவாக்குமானால், அது ஒரு பெரிய பாவமே. யோசுவாவின் நாட்களில், ஆகான் என்பவனுடைய பாவத்தால் தேவன் அவர்கள் நடுவில் வந்து செயல்பட்டு, இஸ்ரவேலர்களின் எதிரிகள்மேல் அவர்களுக்கு வெற்றியைக் கொடுக்க முடியாமல் போய்விட்டது. அந்தப் பாவம் கண்டறியப்பட்டு அகற்றப்பட்ட பின்புதான், தேவன் அவர்களுக்காகச் செயல்பட முடிந்தது.

ஏசாயா தீர்க்கதரிசியின் நாட்களில் தேவன் செயல்பட விரும்பியும், அக்கால யூதர்களின் பாவங்கள் அவரைச் செயல்பட அனுமதிக்கவில்லை. பாவங்களும் அக்கிரமங்களும் பிரிவினையை ஏற்படுத்தியது. நம்முடைய வாழ்க்கையில், தேவன் செயல்பட வேண்டுமானால், நம்முடைய இருதயத்தில் தேவன் தங்கிச் செயல்படுவதற்கேற்ற, ஒரு சூழலை நாம் ஏற்படுத்த வேண்டும். நம்மிடம் தவறுகள் காணப்படுமாயின், அவற்றிற்காக மனம் வருந்திக் கர்த்தர் நம்முடன் தங்கிச் செயல்படுவதற்கேற்ற ஒரு சூழலை உருவாக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவன் நம்மை ஆசீர்வதித்தாலும்,
பாவம் இருந்தால் அது நம்மை அனுபவிக்க விடாது.

ஆகஸ்ட் 11

நம்மிடம் கர்த்தர்

1 கொரிந்தியர் 6:9–20

சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது.
1 கொரிந்தியர் 6:19

கர்த்தர் எங்கே இருக்கிறாரோ அங்கே வல்லமையான செயல்களைக் காணலாம். தேவப் பிரசன்னம் எங்கே உண்டோ, அங்கே வாழ்க்கையின் பல பிரச்சினைகளுக்கு விடுதலையும் தீர்வும் ஏற்படுகிறது. அநேகர் கர்த்தர் எங்கே செயல்படுகிறார் என்று கேட்டறிந்து, அங்கே சென்று தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைத் தேடுகின்றனர். ஆனால், அவர்கள் கர்த்தர் இருப்பதாக நம்பிச் செல்லும் இடங்கள் எவை? சில ஆலயங்கள். சில ஜெபக்கூடுகை ஸ்தலங்கள். சில தேவ ஊழியர்கள் ஊழியம் செய்யும் களங்கள். இங்கெல்லாம் ஜனங்கள் போய் வாழ்க்கையின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுகின்றனர்.

அநேகர், கர்த்தர் ஆலயங்களிலும், ஜெபக் கூட்டங்களிலும், தேவ ஊழியர்களிடமும் இருப்பதாக நம்புகின்றனர். ஆனால், அவரை உண்மையாகத் தேடுகின்ற ஒவ்வொருவரிடமும், அவர் வந்து தங்க விரும்புகின்றார், என்ற உண்மைக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கவில்லை. (யோவான் 14:23) கர்த்தர் எங்கே இருக்கின்றார் என்று தேடிச் செல்லும் நம்முடனே, கர்த்தர் இருக்க விரும்புகின்றார் என்ற வேத சத்தியம் அநேகருக்கு இன்னும் மறைக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

நம்முடன் கர்த்தர் இருக்கிறார். நம்முடன் இருக்கின்ற கர்த்தர், நமக்கு உதவி செய்யச் சித்தமாயிருக்கின்றார் என்ற விசுவாசம் நமக்கு வர வேண்டும். ஜெபக் கூட்டத்தில் மட்டும் அல்ல. நாம் அவரை உண்மையாகத் தேடினால், அவர் நம் வழியாக நமக்கு வல்லமையான காரியத்தைச் செய்ய முடியும், என்ற நம்பிக்கை நமக்கு வரவேண்டும். நான் சிலரிடம் பேசும் போது, அவர்களோடு கர்த்தர் இருக்கிறதை அவர்கள் விசுவாசிப்பதை அறிய முடிகின்றது.

ஆனால், அவர்கள் ஒரு தேவ உதவியைப் பெற விரும்பும் போது, ஒரு ஜெபக் கூட்டத்திற்கோ அல்லது தேவ ஊழியர்களிடமோ செல்லுகின்றனர். தங்களோடிருப்பதாக நம்பப்படுகின்ற கர்த்தர், தங்களுக்கு ஒரு அற்புதத்தை அல்லது ஆசீர்வாதத்தைத் தர முடியும் என அவர்கள் நம்பவில்லை. உண்மை என்ன? ஏராளமான கிறிஸ்தவர்கள், பழைய ஏற்பாட்டுக் கால விசுவாசச் சிந்தையிலிருந்து, புதிய ஏற்பாட்டுக் கால விசுவாச சிந்தைக்கு இன்னும் வந்து சேரவில்லை. நாம் ஒவ்வொரு வரும் தேவன் தங்கும் ஆலயம் என்று புதிய ஏற்பாடு சொல்கிறது. ஆனால், இவர்களோ பழைய ஏற்பாட்டுக் கால சிந்தையுடன் தேவ ஊழியர்கள் வழியாகவும், ஆலயங்கள் வழியாகவுமே ஆசீர்வாதங்களைப் பெற இயலும் என்று நம்புகின்றனர்.

சிந்தனைக்கு...

கோயிலில் சென்று கடவுளைத் தேடுகிறவன்,
அவர் இல்லாத முகவரியில் அவரைத் தேடுகிறான்.

ஆகஸ்ட் 12

பரலோகத் தகுதி

1 யோவான் 5:1–13

குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்.
1 யோவான் 5:12

பரலோகத்தில் பிரவேசிக்க என்னென்ன தகுதிகள் வேண்டும்? நித்திய வாழ்வு பெற என்னென்ன கிரியைகள் செய்திருக்க வேண்டும்? எந்தத் தகுதியும் தேவையில்லை. எந்தக் கிரியைகளும் தேவையில்லை. சிலுவையில் அறையப் பட்டிருந்த கள்ளன் எந்தத் தகுதியும் பெறாமல், எந்தக் கிரியைகளும் செய்யாமல், தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கும் பாக்கியம் பெற்றானே. அப்படியானால் யார் வேண்டுமானாலும் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க இயலுமா? அப்படி யல்ல. இயேசு கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொண்ட ஒரு தகுதி வேண்டும். அது தவிர வேறெந்தத் தகுதியும் தேவை இல்லை.

நித்திய ஜீவனைப் பெற்றவர்கள், நித்திய தேவ இராஜ்யமாகிய பரலோக இராஜ் யத்தில் பிரவேசிப்பார்கள். அந்த நித்திய ஜீவன் இயேசுவே. (1 யோவான் 5:11–12) இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு, அவருடன் வாழ்கின்றவர்கள் நித்திய தேவ இராஜ்யத்தில் வாழும் வாய்ப்பைப் பெறுவார்கள். அதே வேளையில், பூமிக் குரிய நம்முடைய ஓட்டம் முடியும் வரை, இயேசுவோடு நாம் வாழ வேண்டும். ஏனென்றால், இயேசுவின் ஐக்கியம் மட்டுமே நம்முடைய நித்திய வாழ்விற்குரிய தகுதி.

அப்படியானால், இந்தப் பூமியில் இயேசுவோடு எப்படி வாழவேண்டும் என்பதே மிக முக்கியமான விஷயம். அது தொடர்பாகவே நமக்குக் கவனம் வேண்டும். இயேசுவோடு இருப்பவன் புதிய படைப்பாக இருப்பான். அவன் பழைய விதமான வாழ்க்கைமுறையோடு இருக்கமாட்டான் என்று வேதம் சொல்கிறது. (11 கொரி 5:17) ஆம். பரிசுத்தராகிய இயேசுவோடு நாம் வாழ்ந்தால், சுபாவங்களில், நடத்தைகளில், ஆசைகளில், நோக்கங்களில், சிந்தனைகளில் நாம் அவருக்கு உகந்தவர்களாக வாழ வேண்டியது அவசியமாகிறது.

அவருக்கேற்ற விதமாக வாழ்வதற்கு ஏதுவாக தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்திருக்கிறார். அந்தப் பரிசுத்த ஆவியினால் நமக்குப் பரிசுத்தமான சிந்தை பரிசுத்தமான வார்த்தை பரிசுத்தமான வல்லமை கிடைக்கின்றன. இந்த ஆவிக்குரிய ஆதரவுகளைக் கொண்டு, கர்த்தரோடு நாம் இந்த பூமியில் ஐக்கியத் தோடு வாழ வேண்டும். கர்த்தருடைய ஐக்கியத்தோடு வாழ்வதற்கு நாம் அதிகக் கவனம் செலுத்தும் போது, அந்த ஐக்கியத்தினால் நாம் அவருக்கு உகந்தவர்களாக இந்த பூமியாக வாழ்வோம். ஒருநாள் அவரோடு நாம் அவருடைய இராஜ்யத்தில் வாழ்வோம்.

சிந்தனைக்கு...

இந்தப் பூமியில் கர்த்தரோடு வாழாதவன்,
மறுபூமியில் அவரோடு வாழப்போவது வெறும் கனவே.

ஆகஸ்ட் 13

கிரியை செய்யணுமா?

தீத்து 3:1–15

நற்கிரியைகளைச் செய்ய ப்பழகட்டும்.
தீத்து 3:14

இயேசு கிறிஸ்து சிலுவையில் நமக்காக யாவற்றையும் நிறைவேற்றி முடித்துவிட்டதால், தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற, நாம் எந்தக் கிரியையும் செய்யத் தேவையில்லை என்ற போதனை தவறானதல்ல. அதே வேளையில், இனி நாம் எந்தக் கிரியையும் செய்யத் தேவையில்லை என்ற தவறான புரிதலை அது கொடுத்து விடக்கூடாது. தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற, நம்முடைய எந்தக் கிரியையும் தேவையில்லைதான். ஆனால், மனிதர்களின் நடுவில், நாம் தேவனுக்கேற்ற சாட்சிகளாக வாழ வேண்டிய தேவை உள்ளது.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று கூறும் போது, ஜனங்கள் நம்மிடம் அதற்குரிய அடையாளங்களை தேடுவார்கள். அவர்களிடம் போய் எனக்காக எல்லாக் கிரியைகளையும் இயேசு செய்து முடித்துவிட்டார். எனவே, என்னிடம் எந்த நல்ல கிரியைகளும் தேவையில்லை என்று கூறினால் சரியாயிராது. தேவன் நம்முடன் தங்கி கிரியை செய்வதை ஜனங்கள் காண வேண்டும். (மத்தேயு 5:16)

சிலுவையில் இயேசு நமக்காகச் செய்து முடித்த நீதியின் கிரியைகளைத் தேவன் பார்க்கின்றார். ஆனால், இப்போது ஜனங்கள், இயேசு நம்மிடம் என்ன செய்கிறார் என்று பார்க்க வேண்டும். அப்படியானால், நாம் தேவ கிருபையினைச் சார்ந்தும், தேவ ஆவியைச் சார்ந்தும், தேவ ஐக்கியத்தைச் சார்ந்தும், செயல்பட்டு ஆவிக்குரிய நற்கிரியைகளைச் ஜனங்களுக்குக் காட்ட வேண்டும். எனவே, நம்மில் கர்த்தர் நற்கிரியைகளைச் செய்ய ஆரம்பித்ததைக் குறித்து வேதத்தில் வாசிக்கின்றோம். (பிலிப்பியர் 1:5)

சிலுவையில் தொங்கின கள்ளன், இயேசு பாவிகளுக்காகச் செய்துமுடித்த நீதியின் கிரியைக் கொண்டுதான், தான் எந்த நற்கிரியைகளையும் பூமியில் செய்யா விடினும், நித்திய வாழ்வு பெற்றான். ஆனால், நாம் இன்னும் உலகத்தில் வாழ் கின்றோம். எனவே, இன்று கர்த்தர் நமக்குள் கிரியை செய்து நற்கிரியைகளைச் ஜனங்கள் காணும்படி செய்கின்றார். அதுதான் கனி கொடுத்தலின் அனுபவம். இதற்கு நாம் கர்த்தரோடு இணைந்து செயல்பட வேண்டும். என்னைப் பெலப் படுத்துகின்ற இயேசு கிறிஸ்துவினாலே, எல்லாவற்றையும் செய்யப் பெலனுண்டு என்று பவுல் உரைத்த பிரகாரம், நாமும் கர்த்தரைச் சார்ந்து அவர் பெலத்தால் கிரியை செய்யணும்.

சிந்தனைக்கு...

சுய கிரியை சார்ந்த பக்தி பெலனற்றது.
தேவ கிரியை வெளிப்படாத பக்தி பயனற்றது.

ஆகஸ்ட் 14

பரிசுத்தமாக வாழ முடியாது

1 தெசலோனிக்கேயர் 4:1–12

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே...
1 தெசலோனிக்கேயர் 4:3

ஒரு தேவ ஊழியர், யாருமே பரிசுத்தமாக வாழ இயலாது, தேவ கிருபையால் மட்டுமே தேவ ஆசீர்வாதங்கள் பெற முடியும் என்ற நம்பிக்கையுடையவர். அவரிடம் ஒருவர், கர்த்தருடைய கிருபையினால் நான் பரிசுத்தமாக வாழ்கிறேன் என்றார். உடனேயே, அந்த ஊழியர் உங்களால் பரிசுத்தமாக வாழ இயலுமா? மகா பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக உங்கள் வாழ்க்கை எப்படிப் பரிசுத்தமாக இருக்க முடியும் என்று வாதம் செய்தார்.

பரிசுத்தத்தைப் பூரணப்படுத்த நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். (11 கொரி 7:1) பரிசுத்தமாக வாழ்கின்றோம் என்றால், மகா பரிசுத்தமான தேவனுடைய பரிசுத்தத்தின் அளவிற்குப் பூரணமாய் வாழ்கின்றோம் என்று அர்த்தம் அல்ல. தேவன் நம்மை தம்முடைய பரிசுத்தத்திற்கு முரண்படாதவர்களாக வாழ்வதற்கு அழைக்கின்றார். தேவன் தம்முடைய பரிசுத்த நிலமையைக் குறித்த அறிவை நாம் பெற்று, இன்னும் இன்னும் பரிசுத்தமாக வாழ விரும்புகின்ற ஒரு வாழ்க்கையையேப் பரிசுத்த வாழ்க்கையாக பார்க்கின்றார்.

முகேஸ் அம்பானியின் மகனுடைய திருமணம் மிக மிக ஆடம்பரமாக, அதிகச் செலவுடன் நடந்தது. முகேஸ் அம்பானியால் அழைக்கப்பட்ட எவரும், அவருடைய அந்தஸ்தின் அளவிற்கு உள்ளவர்கள் அல்ல. அதே வேளையில், அவருடைய அந்தஸ்து மிக்க ஆடம்பரச் சூழ்நிலைக்குப் பொருந்தாதவர்களாகவும் இல்லை. திருமண வீட்டார் அணிந்திருப்பது போன்ற, அதி நவீனமான ஆடம்பர உடையை அங்கு வரும் அவருடைய உறவினர் அணிந்திருந்தால்தான், அந்தஸ்திற்குப் பொருந்துகின்றது என்று கூற முடியாது. அவர்கள் அந்த அளவிற்கு அந்தஸ்தாக அணிந்து வராவிட்டாலும், தங்களால் இயன்ற அளவு நல்ல விதமாக உடுத்தி வந்தால், அந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தும்.

தேவன் நம்மை பரிசுத்தமானவர்களாகப் பார்ப்பது என்பது, அவருடைய பரிசுத்த நிலமைக்கு முரண்படாமல் வாழ்வதுதான். அவருடைய பிரிசுத்த நிலைமையைப் புரிந்து வைத்துக் கொண்டு, இன்னும் இன்னும் அவரைப் போல பரிசுத்த நிலையை நோக்கி, முன்னேறும் விதமாகச் செயல்படுவதும் பரிசுத்தம்தான். தேவ ஐக்கியத்தில் வாழ அழைக்கப்பட்ட நாம், அவருக்கேற்ற விதமாக வாழ வேண்டும் என்ற சிந்தையோடு, இன்னும் இன்னும் கிருபை தேடும் வாழ்க்கையே பரிசுத்த வாழ்க்கை.

சிந்தனைக்கு...

பரிசுத்தம் என்பது தேவன் உன்னோடு வாழ அல்ல.
நீ அவரோடு வாழ்வதற்காக.

ஆகஸ்ட் 15

ஆயுள் நீடிப்பு

2 தீமோத்தேயு 4:5–22

நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது.
2 தீமோத்தேயு 4:6

நான் வாழ்ந்ததுப்போதும் என்று தேவன் அறிந்து, என்னை மரணத்திற்கு நேராகக் கொண்டு செல்லும்போது, அநேகர் ஜெபித்து, தேவன் என் ஆயுள் நாட்களை நீட்டித்தால், அது எனக்கு அவசியமில்லை என்றாராம் ஒரு தேவ ஊழியர். ஏன் ஜெபித்து மன்றாடி, ஆயுள்நாளை நீடிக்க ஆண்டவரிடம் கெஞ்சக் கூடாதா என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர், நான் கர்த்தரை விசுவாசிக்கின்றேன். ஆண்டவர் நான் வாழ்ந்தது போதும் என்று நினைத்தால், அது மிகச் சரியான ஒன்றாகவேயிருக்கும். அதற்கு மேலும் வாழ்வதற்கு ஆசைப்பட்டுச் ஜெபிப்பது எனக்குச் சரியாகத் தெரியவில்லை என்றாராம் அவர்.

உண்மையாகத் தேவனுக்காக வாழ்கின்ற எவரும், ஆண்டவரே, எனக்கு ஆயுளைக் கூட்டித்தாரும் என்று கேட்பது சரியானது அல்ல என்பதே என்னுடைய கருத்தாகவும் இருக்கிறது. ஆண்டவர், நான் இந்த நிலையற்ற பூமியில் வாழ்ந்தது போதும் என்று எண்ணினால், அது தேவ ஞானம் சார்ந்த சரியான தேவ சித்தமாகவே இருக்கும். அதற்கு எதிராகப் போய் இல்லை இல்லை ஆண்டவரே, நான் இன்னும் கொஞ்ச காலம் வாழ்ந்துவிட்டு வருகிறேன் என்று சொன்னால், அது தேவ முடிவைச் சரி என்று சிந்திக்காத ஒரு செயலாகவே இருக்கும்.

அப்போஸ்தலனாகிய பவுலும், பேதுருவும் மரணத்தின் புள்ளிக்கு நேராகத் தேவன் தங்களைக் கொண்டு செல்வதை உணர்ந்தனர். ஆயினும், உயிர் பிச்சையோ, ஆயுள் நீடிப்பு அபேட்சையோ செய்யவில்லை. தேவ முடிவை ஏற்றுக் கொண்டு, நித்திய வாழ்வின் சிந்தைக்கு நேராகச் சென்றனர். சில நேரம் ஒருவருக்கு இவ்விதமான நிலைப்பாடு இருந்தாலும், அவருடைய நெருங்கிய உறவுகளுக்கு, அவர் இன்னும் சில காலம் தங்களோடு வாழ்ந்தால், அது தங்களுக்கு நலமாயிருக்குமே என்ற உணர்வோடு, கர்த்தரிடம் மன்றாடலாம். அது தவறல்ல.

எனக்குப் பின் என் மனைவிக்கு யார் ஆதரவு? என் பிள்ளைகளை யார் கவனிப்பார்? இன்னும் சில காலம் வாழ்ந்தால் சில கடமைகளை நிறைவேற்றி விடலாமே? என்பது போன்ற சிந்தனைகள் இயல்பானது. ஆனால், தேவன் நியமித்த நாட்கள் வரை, நம்முடைய பொறுப்புகளையும், கடமைகளையும் சரியாகச் செய்ய வேண்டும். தேவன், போதும் என்று எண்ணிவிட்டால், அதன்பின்பு அவரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்று அர்த்தம். நம்மைவிட நாம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளைக் கர்த்தர் சிறப்பாகச் செய்து நிறைவேற்றுவார்.

சிந்தனைக்கு...

நித்திய ஜீவனையே நமக்குத் தந்துவிட்ட பிறகு, இந்த உடலில் வாழ்வதற்கு உயிர் பிச்சை கேட்பது தேவையில்லை.

ஆகஸ்ட் 16

எங்கும் பரிசுத்தம்

கொலோசெயர் 3:12–25

வார்த்தையினாலாவது கிரியையினாலாவது...
கொலோசெயர் 3:17

நான் முதன்முதலாக ஒரு கன்வென்ஷன் கூட்டத்தில் பேச அழைக்கப் பட்டுச் சென்றேன். அப்பொழுது அந்தச் சபையின் முக்கியமான ஒரு உறுப் பினரைக் குறித்து சிலர் சொன்னார்கள். சபைக்குத் தாராளமாக உதவி செய்கின்ற அவருடைய முக்கியமான தொழில், சினிமா தியேட்டர் நடத்துவது. பரிசுத்தமான சபை காரியங்களோடு அதிக ஈடுபாடுகளோடு இருக்கும் ஒருவர், அநேகரைப் பாதிக்கும் தன்மையுடைய திரைப்படங்களை ஓட்டிச் சம்பாதிக்கிறாரே என்று யோசித்தேன்.

சிலர் தொழில் என்று வரும்போது ரொம்ப பரிசுத்தம் எல்லாம் பார்க்கக் கூடாது என்று சொல்வார்கள். சிலர் மதுபானம் பரிமாறும் பார்களுக்குக் கிறிஸ்தவப் பெயரை வைக்கின்றனர். சிலர் சினிமாவில் நடித்து சம்பாதிப்பதோ, சினிமா படங்களை இயக்குவதோ, சினிமாவுக்கு இசை அமைப்பதோ தவறு அல்ல என் கிறார்கள். அதையெல்லாம் தொழிலாக மட்டும் பார்க்க வேண்டும் என்கின்றனர்.

ஏராளம் தில்லுமுல்லுகளை எல்லாரைப் போலச் செய்து, மிகுதியாக ரீயல் எஸ்டேட் தொழில் செய்து சம்பாதிக்கும் ஒருவர், சபைக்கு லட்சம் லட்சமாகக் காணிக்கை கொடுப்பார். மிக மிகத் தப்பிதமான வழிகளில் சம்பாதிக்கும் ஒருவ ருடைய காணிக் கையைக் கர்த்தர் அங்கீகரிப்பாரா என்று ஒருவர் கேட்டார். அதற்கு அந்தப் பாஸ்டர் அதெல்லாம் தொழில். அதில் எல்லாம் பரிசுத்தம் பார்த்தால், எதையும் செய்ய முடியாது என்றார். ஆனால், ஒரு உண்மையான கிறிஸ்தவனுக்கு குடும்பம், வேலை, தொழில், சமுக உறவுகள் என எந்த ஒரு களமும், பரிசுத் தத்தை வெளிப்படுத்தும் களங்களே. ஆவிக்குரிய வாழ்க்கை வேறு, வியாபாரம் வேறு, சமூக உறவுகள் என்று கூறுவது சரியல்ல. எங்கிருந்தாலும் பரிசுத்த வானாக நிற்பதில் உறுதியாயிருப்பதே கிறிஸ்தவ வாழ்க்கை.

பரிசுத்தமான கர்த்தரை விசுவாசிக்கும் எவரும், தங்களுடைய வாழ்க்கை யின் அனைத்துப் பகுதிகளிலும், கர்த்தருக்குப் பிரியமான பரிசுத்தக் கொள்கை உடையவர்களாக இருக்க வேண்டும். வேலை செய்தாலும், தொழில் செய்தாலும், ஊழியம் செய்தாலும், எந்த சபை நடவடிக்கைகள் என்றாலும், அங்கே பரிசுத் தத்துக்கு முரண்பாடானவைகளை ஏற்றுக் கொள்ளக்கூடாது. யோசேப்பு, தானியேல் போன்றவர்கள் அரசியல் சூழல்களிலிருந்தாலும், பரிசுத்த அடை யாளங்களோடிருந்தார்கள்.

சிந்தனைக்கு...

முதலாவது நீ ஒரு பரிசுத்தவான் என்பதைக் காண்பி.
அதன் பின்னர் தேவைப்பட்டால் செல்வ ஆசீர்வாதத்தைக் காண்பி.

ஆகஸ்ட் 17

தனிமை உணர்வு

ஆதியாகமம் 32:13-32

யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான் .

ஆதியாகமம் 32:24

தனிமைப்படுதல், தனிமை உணர்வு, தனித்துவிடப்படுதல் போன்றவை மிக மிக வருத்தமான விஷயங்கள். தனிமை உணர்வு என்பது, எவரும் நம் முடன் இல்லை என்பதினால் மட்டும் ஏற்படுவது அல்ல. சில நேரம் எல்லோரும் வழக்கம் போல நம்முடன் இருப்பார்கள். ஆனால், அவர்கள் யாரும் நமக்குள்ளே நாம் உணரும் பிரச்சினைக்கு உதவி செய்ய முடியாது. நமக்குள் நாம் ஏதாவது ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். இப்போது நம்முடன் எல்லா உறவுகளும் நெருக்கமாகத்தான் இருக்கிறார்கள். ஆனால், எவரும் நமக்கிருக்கும் மனக் கஷ்டத்தை மாற்ற முடியாது.

இதுதான் மனரீதியாகத் தனிமைப்படுதல். யாக்கோபு பாதான் அராமிலிருந்து சொந்த ஊரை நோக்கித் திரும்பும் போது, தன் சகோதரனைக் குறித்த ஒரு பய உணர்வைப் பெற்றான். அப்போது அவனோடு மனைவிகளும், பிள்ளைகளும், வேலைக்காரர்களும் இருந்தனர். ஆனால், அவர்கள் யாரையும் பார்த்து அவனால் தைரியமாக நிற்க முடியவில்லை. பலர் தன்னைச் சூழ்ந்திருக்கும் போதே மன நிலையில் தனிமைப்பட்டுப்போனான். தன்னை ஒரு நெருக்கடியான சூழலில் தனித்து விடப்பட்டதைப் போல உணர்ந்தான்.

ஆனால், அவன் தனிமை உணர்வை மேற்கொள்ள ஒரு வழியை கண் டுபிடித்தான். தன்னைத் தனிமைப்படுத்தி தேவனை நோக்கி பேச ஆரம்பித்தான். தன்னுடைய நிர்ப்பந்தச் சூழலுக்கு உதவி செய்யத் தன்னுடன் இருக்கும் எவராலும் முடியாது என்றுணர்ந்த அவன், தேவனை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டான். நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய நான் உம்மைப் போகவிடேன் என்று சொன்னான். அந்தச் செயல்பாடு அவனுக்கு கைகொடுத்தது. அவன் தனித்து விடப்பட்ட சூழலை வென்று தன்னோடு தேவன் இருக்கிறார் என்ற நம்பிக்கையைப் பெற்றான்.

ஆண்டவராகிய இயேசு, மனிதர் என்ற நிலையில் சிலுவைப் பாடுகளைச் சந்திக்கும் நேரம் வந்தபோது, தனித்துவிடப்பட்டதைப் போல உணர்ந்தார். அந்தத் தனித்து விடப்படுதலை மேற்கொள்ள, அவருடன் இருந்த சீடர்களால் எந்த உதவியும் செய்ய முடியவில்லை. ஆனால், கெத்செமெனே தோட்டத்தில் போய் திரும்பத் திரும்பப் பிதாவை நோக்கிச் ஜெபித்தபோது, அவர் தனியாக நிற்பதாக உணராமல், தைரியம் பெற்றார். பிதா எல்லாச் சூழலிலும் தம்மோடிருப்பார் என்று நம்பிக்கையோடு பாடுகளைக் குறித்து அஞ்சாமல் புறப்பட்டுச் சென்றார்.

சிந்தனைக்கு...

மனிதர்கள் உன்னை விட்டு விலகினால் கவலைப்படாதே.
தேவனை விட்டு நீ விலகாதவரை உனக்குத் தனிமையில்லை.

ஆகஸ்ட் 18

ஆசீர்வாதமா அர்ப்பணமா?

எபிரெயர் 11:8–19

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப் போல...
எபிரெயர் 11:9

ஆபிரகாம் என்றால் ஆசீர்வாதம். ஆபிரகாமின் வாழ்க்கை என்றால் செழிப்பும் பூரிப்பும். தேவனுடைய மிகுந்த செழிப்பையும் வளமையையும் அனுபவிக்கவே ஆபிரகாம் அழைக்கப்பட்டான். ஆபிரகாமைப் போல நாமும் கர்த்தரை விசுவாசித்தால், ஆபிரகாமைப் போல எல்லையில்லாப் பெருஞ்செல்வ நிலையை அடையலாம். இப்படித்தான் அநேகர் போதிக்கின்றனர். இப்படித்தான் அநேகர் நம்புகின்றனர். ஆனால், உண்மையோ வித்தியாசமானது.

முதலாவது, ஆபிரகாம் தேவன் சொன்ன எல்லாவற்றையும் விசுவாசித்தான். (ஆதியாகமம் 15:6) ஆனால், ஆபிரகாம் விசுவாசித்தது என்ன? தனக்குக் கிடைக்கப் போவதாகத் தேவன் சொன்ன மிகுந்த செல்வ வளங்களை விசுவாசித்தானா? இல்லை. ஆபிரகாம் விசுவாசித்தது தேவனுடைய திட்டத்தை தேவன் தம்முடைய சித்தத்தின்படி செய்யப்போகும் ஒரு திட்டத்தைக் குறித்த விஷயம்தான் ஆபிரகாமுக்குச் சொல்லப்பட்டது. அங்கே தனக்கு ஏதோ மிகப்பெரிய நன்மை வருகிறது என்ற பூரிப்பில் அல்ல. நாம் தேவனுடைய திட்டத்திற்குப் பயன்படப் போகிறோம் என்ற உணர்வினால்தான் விசுவாசித்தான்.

ஆபிரகாமின் விசுவாசம் அவனுக்கு மிகுந்த செல்வங்களையும், அபரிமிதமான சௌகரியச் சூழ்நிலைகளையும் கொண்டு வந்தது என்பது அல்ல செய்தி. ஆபிரகாமின் விசுவாசம் முற்றிலுமாகத் தன்னைத் தேவனுக்காக அர்ப்பணித்துச் செயல்படுவதற்கு ஆபிராகாமை வழிநடத்தியது. ஆபிரகாமின் விசுவாசித்தின் பிரதிவிளைவுகள் செல்வங்களும், செழிப்புகளும் அல்ல. தேவனுக்காக எதையும் செய்யவும், எதையும் ஏற்றுக்கொள்ளவும் ஆபிரகாம் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டதே விளைவு. ஆபிரகாமின் வரலாறு நமக்கு பிரதானமாகச் சொல்வது, ஆபிரகாம் தேவனால் விசேஷமாக ஆசீர்வதிக்கப்பட்டு, ஐஸ்வரியம் நிறைந்த ஒரு வாழ்க்கையில் திளைத்தான் என்பது அல்ல.

ஒரு மனிதன் எதை வேண்டுமானாலும் இழந்து, தேவ திட்டம் நிறைவேறும் விதமாக வாழ்வதே உண்மையான விசுவாசம், என்பதைத்தான் ஆபிரகாமின் விசுவாசம் காட்டுகிறது. இன்று பல போதகர்கள், செல்வ சௌகரியங்களோடு ஆபிரகாமைப் போல வாழ்வதே தேவ சித்தம் என்று போதிக்கின்றனர். அது தவறு. ஆபிரகாமை ஒரு ஆசீர்வாதமான வாழ்க்கையின் மாதிரியாக அல்ல. அர்ப்பணிப்பு மிக்க தேவனுக்கேற்ற ஒரு வாழ்க்கையின் மாதிரியாகவே ஆபிரகாம் விளங்குகிறான்.

சிந்தனைக்கு...

தேவ உறவினால் இருதயத்தில் செழிப்படையாதவர்கள்,
எவ்வளவு பொருளாதாரச் செழிப்புப் பெற்றாலும் வறியவர்களே.

ஆகஸ்ட் 19

இன்னும் மாறணுமே

பிலிப்பியர் 3:7–16

அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்...
பிலிப்பியர் 3:12

சிலரிடம் இயேசுவை ஏற்றுக்கொண்ட அந்தப் பழைய நாட்களில் எந்த மாதிரி மாற்றங்கள் ஏற்பட்டதோ, அந்த மாற்றங்கள்தான் கடைசிவரை தொடர் கிறது. புதிதாக எதுவும் இல்லை. ஆனால், வாழ்க்கையில் மாற்றங்கள் என்பது ஒரு காலகட்டத்தில், முழுமையாகப் போதுமான அளவு ஏற்பட்டு விடுவதில்லை. தொடர்ந்து பல மாற்றங்கள் நடந்து கொண்டே இருக்க வேண்டும்.

ஒருவர் கர்த்தரை இரட்சகராக ஏற்றுக்கொண்ட காலத்தில், கணிசமான மாற்றங்கள் நடைபெறுகிறது என்பது உண்மை. ஆயினும், இதற்குமேல் தேவை யில்லை என்று சொல்லுகின்ற அளவில் நடந்துவிடவில்லை. சொல்லப் போனால், மாற்றங்கள் நடைபெறுவது துவங்கியிருக்கிறது என்பதுதான் உண்மை. நான் சிலரிடம் பார்த்திருக்கின்றேன். அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு கால கட்டத்தில் சில நல்ல ஆவிக்குரிய ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு மேல் எத்தனையோ ஆண்டுகள் கடந்தும், எவ்வளவோ மாற்றங்கள் தொடர்பான போதனைகள் கேட்டும், எந்த மாற்றமும் இல்லை.

என்றோ ஒருநாள் ஏற்பட்ட நல்ல சில சுபாவ மாற்றங்களும், நல்ல சில செயல்மாற்றங்ளும், கர்த்தராலும் நடந்திருக்கலாம், சுயதீர்மானத்தாலும் நடந் திருக்கலாம். கர்த்தரால் மாற்றங்கள் நடந்திருந்தால், நிச்சயம் அது தொடர்கதையா யிருக்கும். சுய தீர்மானத்தால் ஏற்பட்டிருந்தால், அங்கே தொடர்ந்து நல்ல மாற்றங் களைக் காண முடியாது. குறிப்பிட்ட ஒரு விசுவாசியிடம், நீங்கள் கர்த்தரால் தொடர்ந்து பரிசுத்தமான மாற்றங்களை அடைகின்றீர்களா என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், கடந்த காலத்தில் என்னிடம் ஏற்பட்ட நல்ல மாற்றங்களை இழக்கா திருக்க, நான் கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. புதிய மாற்றங்களை என் னால் யோசிக்க முடியவில்லை என்றாராம்.

ஒரு விசுவாசி கர்த்தருடைய கிருபையால் நான் இரட்சிப்பின் அனுபவத்தை விட்டுப் பின்வாங்காமல் நிலைத்திருக்கிறேன் என்றாராம். அதைக் கேட்ட பாஸ்டர், பின்வாங்காமலிருக்க உதவி செய்யும் கர்த்தர், உங்களை ஏன் முன்னேறிப்போகச் செய்யவில்லை. நீங்கள் சில விஷயங்களை இழக்கவில்லை. ஆனால், அவசிய மான நிறைய விஷயங்களைப் பெறவேயில்லையே என்றார். ஆம். தேவ ஆவி நம்மிடம் கிரியை செய்வது உண்மையானால், நாம் மாற்றம் பெற்றவர்களாக மட்டும் அல்ல, இன்னும் இன்னும் மாற்றம் பெற்றுக் கொண்டேத் தொடருவோம்.

சிந்தனைக்கு...

பாவி என்று உங்களை யாரும் பார்க்கல,
ஆனால், பரிசுத்தவான் என்று யாரெல்லாம் பார்க்கின்றார்கள்?

ஆகஸ்ட் 20

கிருபை கிடைக்கல ஏன்?

அப்போஸ்தலர் 12:1–16

பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில்...
அப்போஸ்தலர் 12:5

சில நேரம் சிலருடைய நல்ல சாட்சிகள் வேறு சிலருக்கு ஒரு விதமான கேள்வியையும், மன நெருடலையும் ஏற்படுத்தும் என்பது உண்மை. அந்த விபத்தில் என் கணவன் உயிர் பிழைத்தது தேவனுடைய சுத்தக் கிருபை என்று ஒருவர் சாட்சி சொல்வார். விபத்தில் தன் கணவனை இழந்த ஒரு பெண் இதைக் கேட்கும் போது, என் கணவனுக்கு அதுபோல, கிருபை கிடைக்காமல் போனதே என நினைக்க வாய்ப்புண்டு. ஒருவர் தன்னுடைய வியாபாரம் மிக நன்றாய் நடப்பதைப் பார்த்து, இது தேவனுடைய சுத்த கிருபை என்பார். எவ்வளவோ ஜெபித்தும், தொழிலில் நஷ்டமடைந்த ஒருவர், தனக்கு அது போல ஒரு கிருபை கிடைக்காதது ஏன் என்ற கேள்விக்குள் தள்ளப்படுவார்.

சிலர் பெரிய தீங்கைக் காண நேரிட்ட சூழ்நிலையில், வேறு சிலர் தங்களுக்கு அவ்விதம் நிகழாதது, தேவ கிருபைதான் என்று சாட்சி சொல்வார்கள். அப்படியானால், தீங்கைச் சந்தித்தவர்கள் கிருபை பெற்றிடத் தகுதியற்றவர்களோ என்று எண்ண நேரிடும். கிருபை என்றால் அது தகுதியின் அடிப்படையால் தரப்படாமல், தேவனுடைய இரக்கத்தின் அல்லது அன்பின் அடிப்படையில் தரப்படுவதுதானே. அப்படியானால் சிலருக்கு அது கிடைத்து, வேறு சிலருக்குக் கிடைக்காமல் போவது, ஏன் என்ற கேள்வி எழும்பும்.

யாக்கோபு ஏரோதால் கொல்லப்பட்டான். ஆனால், பேதுருவை தேவன் காப்பாற்றி வாழ விட்டார். பேதுரு ஏரோதுக்குத் தப்பினது தேவ கிருபை என்று நாம் சொல்லலாம். அப்படியானால் யாக்கோபுக்கு அந்தக் கிருபை ஏன் கிடைக்க வில்லை என்ற கேள்வி நியாயமானது. பொதுவாக நமக்கு ஒரு நல்லது நடக்கும் போது, நாம் அதை இறையியல் ரீதியாகச் சிந்திக்க முடியாது. நாம் உணர்ச்சிவசப் பட்டு, நாம் ஏதோ நமக்கு மட்டும் தேவன் ஒரு விசேஷ அனுக்கிரகம் செய்தார் என்ற விதமாகச் சொல்வோம்.

ஆனால், உண்மை என்ன? தேவனுடைய திட்டத்தின்படி சில காரியங்கள் நிகழ் கின்றது. சில காரியங்கள் தடுக்கப்படாமல் அனுமதிக்கப்படுகின்றது. ஒருவரை மரிக்க விட்டுவிட்டு, இன்னொருவரை வாழ வைத்தால், அது தேவ கிருபை என்பதை விட, அது தேவனுடைய திட்டம் சார்ந்த ஒரு தேவ செயல் என்பதே உண்மை. தேவன் தம்முடைய அனாதி திட்டத்தின்படி, சிலருக்கு ஒரு தீங்கு நடக்காமல் தடுத்திருக் கலாம். அதற்காகத் தீங்கைச் சந்தித்தவர்களுக்குக் கிருபை கிடைக்கவில்லை என்று அர்த்தம். அல்ல. அது தேவனுடைய திட்டம் சார்ந்த செயல்பாட்டின் ஒரு விளைவு.

சிந்தனைக்கு...

நினைத்தபடி நடந்தது என்பது அல்ல கிருபை,
நினையாதது நடந்தாலும் தாங்கச் செய்வதே கிருபை.

ஆகஸ்ட் 21

தேவன் வழிநடத்துவாரா?

எபேசியர் 5:1–17

கர்த்தருடைய சித்தம் இன்னதென்று...
எபேசியர் 5:17

நாம் கர்த்தருடைய ஆலோசனையையும் வழிநடத்துதலையும் தேடினால். கர்த்தர் நிச்சயமாக வழிநடத்துவார் என்று போதகர் ஒருவர் போதனை செய்தார். அதைக் கேட்ட ஒரு பெண் அவரிடம் வந்து வாக்குவாதம் செய்தாள். உங்கள் போதனை சரியல்ல என்றார். நீங்கள் போதித்தபடி தேவன் யாரையும் வழிநடத்துவதில்லை என்றார். அதற்கு நானே சாட்சி என்றார். ஏனென்றால், நான் ஒவ்வொருமுறையும் கர்த்தரின் ஆலோசனையையும் வழிநடத்துதலையும் திரும்பத் திரும்பக் கேட்கிறேன். ஆனால், கர்த்தர் அவ்விதம் எனக்கு ஆலோசனையோ, வழிநடத்துதலோ தந்ததே இல்லை என்றார்.

உண்மைதான். சிலர் தங்களின் வாழ்க்கைப் பகுதியில் பல விஷயங்களுக்குத் தேவனுடைய வழிநடத்துதலைக் கேட்டுச் ஜெபிக்கின்றனர். ஆனால், அப்படி விசேஷமாகத் தேவனால் அவர்கள் வழிநடத்தப்படுவதில்லை. முதலாவது, தேவன் தம்முடைய பிள்ளைகளைத்தான் வழிநடத்துகின்றார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். (ரோமர் 8:14) ஒருவர் பக்தியுடையவராயிருந்து தேவ சித்தம் கேட்பதால் தேவசித்தம் வெளிப்பட்டுவிடாது. அவர் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளையாக மறுபிறப்பின் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

தேவ ஆவியைப் பெற்றவர்கள்தான் தேவ சித்தம் புரிந்து செயல்பட முடியும். நாம் அவருடைய பிள்ளைகளாயிருந்து அவருடைய வழிநடத்துதலைத் தேடும் போதுதான் வழிநடத்துவார். சிலர் வேலை, வியாபாரம், திருமணம், சொத்து வாங்குதல், வெளிநாடு செல்லுதல் போன்ற விஷயங்களில் உண்மையாகவே தேவ சித்தம் அறிய விரும்புவார்கள். ஆனால், தங்கள் வாழ்க்கையின் பிறபகுதிகளில், தேவனுடைய விருப்பத்தின்படி வாழ்வதற்கு எந்தச் சிந்தனையும் இல்லாமல் இருப்பார்கள்.

நம்முடைய சுபாவங்கள், சிந்தனைகள், ஆசைகள், தேர்வுகள், மன நிலைகள், உறவுகள் போன்ற பல விஷயங்களிலும், தேவனுடைய விருப்பத்திற் கேற்றபடி வாழ விரும்பும் ஒரு கொள்கை வேண்டும். அனுதின வாழ்க்கையில் நாம் எப்படி எப்படி வாழ்ந்தால், அது தேவனைப் பிரியப்படுத்தும் வாழ்வாகயிருக்கும் என்ற ஒரு பார்வை வேண்டும். நாம் வாழ்கின்ற விதங்களில், தேவ சித்தத்தையும் நோக்கத்தையும் மிக முக்கியமாகத் தேட வேண்டும். அப்போது அவர் நம்மைத் தம்முடைய ஆவியால், சரியான முடிவுகளை எடுக்கத்தக்கதாக வழிநடத்துவார்.

சிந்தனைக்கு...

தேவ ஆவியால் நீங்கள் நடத்தப்படப் பழகாவிட்டால்,
எந்தப் போதகரும் உங்களை நடத்த முடியாது.

ஆகஸ்ட் 22

தேவன் அன்பானவரா?

1 யோவான் 4:11–21

அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால்...
1 யோவான் 4:19

தேவன் அன்பானவர் என்று நம்புவது நம் எல்லாருக்கும் எளிதான காரியம். ஆனால், தேவன் அன்பானவர் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும் என்று ஒருவர் கேட்டால், நீங்கள் என்ன சொல்லுவீர்கள்? பைபிள் சொல்கிறதே என்று சொல்லலாம். பைபிள் சொல்கிறது என்பதற்காக நம்புவது மத விசுவாசம். ஆனால், அது நம்முடைய மனதிற்கு எப்படி உண்மை என்று தெரியும்?

ஏராளமான கிறிஸ்தவர்கள் கர்த்தர் அன்பானவர் என்று சொல்வது, வேதாகமத்தில் படித்ததினால்தான். அவர்களின் மனதில் உண்மையாக அது உணர்ந்து உறுதிப்படுத்தப்பட்டது அல்ல. ஆனால், தேவனைக் குறித்த உண்மைகள் யாவும், விசுவாசத்தோடு மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல. அவற்றை உண்மை என்று நாம் உணர்ந்து உறுதிப்படுத்த முடியும். சூரியன் வெம்மையானது என்பது வெறும் நம்பிக்கை விஷயம் அல்ல. அதனை நாம் உணர்ந்து அறிந்திருக்கின்றோம்.

தேவ அன்பு தேவ ஆவியின் மூலமாக நம்முடைய இருதயத்திற்கு அனுப்பப்படுகிறது. (ரோமர் 5:5) அதனை நாம் அனுபவிக்க முடியும். தேவன் தம்முடைய அன்பை நமக்குள் நாம் அறியச் செய்கின்றார். இதற்கு என்ன அடையாளங்கள்? ஒன்று, தேவ அன்பை நாம் நமக்குள் பெறும் போது, அந்த அன்பு நம்முடைய இருதயத்திற்குப் போதுமானதாக இருப்பதை அறிவோம். சிலர் நம்மை நேசிக்க வேண்டியவர்கள். ஆனால், அவர்கள் நேசிக்கவில்லை. ஆனால் நம்மை அது அதிகமாகத் துக்கப்படுத்தவில்லை. ஏனென்றால், யாருடைய அன்பு, நமக்குக் கிடைக்காமல் போயினும், நமக்குள் நாம் பெறும் தேவ அன்பு, அந்தக் குறைவையெல்லாம் நிறைவாக்கி விடுகிறது.

மனித அன்பு கிடைக்காத போதும் நாம் உள்ளத்தில், தேவ அன்பை அனுபவித்துத் திருப்தியடைந்தால், அது தேவன் அன்பாயிருக்கிறார் என்ற வேதாகம உண்மையை உறுதிப்படுத்துகிறது. மேலும், தேவ அன்பு நமக்குள் வந்தால், அந்த அன்பைப் பிறரோடு பகிர முடியும். மனிதர்கள் நம்மை நேசித்தால் அந்த அன்பை நாம் பிறரோடு பகிர முடியாது. அதை நாம் மட்டுமே அனுபவிக்க முடியும். நாம் தேவ அன்பால் உந்தப்பட்டுப் பிறரை நேசித்தால், தேவன் அன்பானவர் என்ற உண்மை சாட்சியோடு உறுதிப்படுகிறது.

சிந்தனைக்கு...

தேவ அன்பை அனுபவித்து அடையாளம் கண்டவர்கள்,
மனிதர்களின் அன்பிற்காக அங்கலாய்க்கமாட்டார்கள்.

ஆகஸ்ட் 23

பரிசுத்தமாக வாழ்ந்தால்

2 கொரிந்தியர் 6:1–17

பிரிந்து போய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்.
2 கொரிந்தியர் 6:17

நாம் பரிசுத்தராகிய தேவனோடு ஐக்கியமாயிருப்பதின் பெயர்தான் பரிசுத்த வாழ்க்கை. நாம் பரிசுத்தமாக வாழ்கின்றோமா ? நாம் பரிசுத்தராயிருக்கிற தேவனோடு ஐக்கியமாயிருக்கின்றோமா? என்பது போன்ற கேள்விகள் எழுவது இயற்கை. எப்படி நாம் கண்டறிவது? முதலாவதாக நாம் பரிசுத்தமாக வாழ்கின்றோமென்றால், பாவமான செயல்களோடு அல்லது பாவங்களோடு நாம் சமரசமாகிப் போக முடியாது. சில தவறுகளையோ, குறைவுகளையோ, பாவ சுபாவங்களையோ, பாவ சிந்தனைகளையோ நம்முடைய வாழ்க்கை முறையாக்க முடியாது.

சிலர் வழக்கம் போல ஆராதிப்பார்கள். வழக்கம் போலச் ஜெபம் செய்வார்கள். வழக்கம் போல் ஊழியம் செய்வார்கள். அது போல சில தவறான சுபாவங்களும், தவறான பழக்க வழக்கங்களும் வழக்கம் போலத் தொடரும். இது பரிசுத்த வாழ்க்கை அல்ல. தேவ உறவுடன் வாழும் எவரும், தங்களுடைய தவறான சுபாவங்களையும், செயல்களையும் சாதாரணமாக எடுத்துக் கொண்டு, அவற்றோடு மனஉறுத்தல் இல்லாமல் தொடர முடியாது.

அது போல, பரிசுத்தமாக வாழ்கின்ற எவரும், பரிசுத்தத்தைப் பற்றிக் கவலைப்படாத மனிதர்களோடு நெருங்கிய ஐக்கியத்தோடு வாழ முடியாது. சிலர் தங்களைப் பரிசுத்தமாக வாழ்கின்றவர்களாக அடையாளம் காட்டினாலும், பாவத்தோடு இசைந்து வாழ்கின்றவர்களோடு எந்த மன உறுத்தலும் இன்றி, ஆழமான உறவுகளோடிருப்பார்கள். நாம் பரிசுத்தமாக வாழ்வதால், பரிசுத்தமாக வாழாத எவரோடும் இனித் தொடர்பில்லை என்று கூற இயலாது. பாவிகளோடும் நாம் பல சூழ்நிலைகளில் இணைந்து செயல்பட வேண்டிய தேவை ஏற்படும். அதே வேளையில், பாவத்தைக் குறித்துக் கவலைப்படாதவர்களோடு, மன ஐக்கியத்தோடும் தோழமையோடும் வாழ்வது என்பது வேறு.

தேவ வழிகளில் நடவாமல், உலகப்பிரகார வழிகளில் நடப்பவர்களோடு நாம் தோழமைக்காக இணைந்து நடந்தால், பரிசுத்த நோக்கங்களை நிறைவேற்ற முடியாது. எல்லோரையும் நேசிக்க வேண்டும். ஆனால், எல்லோரோடும் இசைந்து வாழக்கூடாது. தேவனோடு நாம் உண்மையான ஐக்கியமுடையவர்களாக வாழும் போது, அவருக்குப் பொருந்தாத விதமான வாழ்க்கை முறைகளை விட்டு விலகாமலிருக்க முடியாது. பரிசுத்தராகிய தேவனோடு ஐக்கியமாயிருந்தால், பாவத்தோடு இணைந்து வாழ்கிறவர்களோடு ஐக்கியமாக வாழ இயலாது.

சிந்தனைக்கு...

வழி தவறிச் செல்வோரை வெறுக்காதே,
ஆனால், அவர்களின் வழிகளை ஒருபோதும் விரும்பாதே.

ஆகஸ்ட் 24

ஜனங்களின் பாராட்டு

1 தெசலோனிக்கேயர் 2:1–13

சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத் தக்கதாய்.
1 தெசலோனிக்கேயர் 2:4

சில தேவ ஊழியர்கள்மேல் ஜனங்களுக்கு நல்ல அபிமானமும் மதிப்பும் உள்ளது. எதற்காக அந்த அபிமானமும் மரியாதையும்? அவர்கள் ஜனங்களுக்கு நிறைய நல்ல காரியங்களைச் செய்கின்றார்கள். மருத்துவமனைகள், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், சமூகசேவை மையங்கள் என நிறையக் கட்டிச் சமுதாயத் திற்கு நல்ல பயனுள்ளவர்களாக இருக்கின்றனர். ஏனென்றால், இவைகள் ஜனங் களுக்கு நல்ல பிரயோஜனமான விஷயங்கள். இவர்கள் பாராட்டத்தக்கவர்களே.

ஆனால், இவ்விதம் பாராட்டுப் பெறும் சிலர், தேவனுடைய பாராட்டைப் பெற இயலாது. ஜனங்கள் இப்படிப்பட்ட நல்லவர்களுக்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்துகின்றனர். ஆனால், தேவனோ அவர்களை எண்ணி விசனப்படுகிறார். ஏனென்றால், அவர்கள் ஜனங்களின் பாராட்டுதலைப் பெறுவதற்குத் தகுதியான காரியங்களைச் செய்தாலும், தேவனால் பாராட்டுப் பெறும் காரியங்களைச் செய்ய வில்லை. தேவ ஊழியர்களைக் கர்த்தர் பிரதானமாக எதற்கு அழைத்து அனுப்பு கின்றார்? அவர்களிடம் ஆண்டவர் முக்கியமாக எதை எதிர்பார்க்கின்றார்?

அவர்கள் சத்தியத்தைப் பேச வேண்டும். ஜனங்களின் பாவங்களை அறியக் காட்டி, அவர்களை இரட்சிப்பிற்கு வழிநடத்தணும். அவர்களைக் கர்த்தருக் கேற்ற சத்தியத்தில் நடத்திச் சாட்சிகளாக நிறுத்தணும். இந்த ஊழியர்கள் இவற்றைச் சரியாகச் செய்யவில்லை. சத்தியத்தைச் சரியாகப் போதிக்கவில்லை. எது ஜனங்களுக்கு மிக மிகத் தேவை என்று நினைத்து இயேசு சிலுவையில் ஜீவனைக் கொடுத்தாரோ, அதை அவர்கள் உரியவிதமாகப் பேசவில்லை. உண் மையைப் பேசுவதற்காக அனுப்பப்பட்ட ஊழியர்கள், கர்த்தருடைய பெயரில் நிறையப் பொய்களைச் சொல்லுகிறார்கள்.

இவர்களை உலகம் பாராட்ட நிறைய நியாயம் உள்ளது. ஆனால், இவர்களைப் பாராட்டத் தேவனுக்குக் காரணம் கிடைக்கவில்லை. ஏனென்றால், சத்தியத்தை இரண்டாம் இடத்தில் வைத்து விட்டு, ஜனங்களுக்கு ஆயிரம் நன்மைகள் செய் தாலும், ஆண்டவருடைய பார்வையில் அவை குப்பைகளே. ஏனென்றால், தேவ ஊழியரின் மிக முக்கியக் கடமை சத்தியத்தைச் சரியாகப் பேசுதலும், சத்தியத்தின் படி சரியாக வாழ்தலுமே. அங்கே தோல்வி கண்ட ஊழியர்கள், சமூக மேம்பாட்டிற் காக ஆயிரம் செய்தாலும், தேவன் அவர்களைப் பாராட்ட முடியாது.

சிந்தனைக்கு...

தவறானவர்களும் பிறருக்கு நல்லதைச் செய்ய முடியும்.
நல்லவர்கள் மட்டுமே பிறருக்கு நல்வழிகாட்ட முடியும்.

ஆகஸ்ட் 25

அவர்கள் வெறுக்கையில்

1 யோவான் 3:1–16

பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு.
1 யோவான் 3:1

ஒரு ஆவிக்குரிய மனிதனுக்கு, எவ்வளவாய் மனிதர்கள் என்னை வெறுக்கின்றார்கள், என்ற உணர்வே மேலோங்கி நிற்கக்கூடாது. எவ்வளவாய் கர்த்தர் என்னை நேசிக்கிறார் என்ற உணர்வே மேலோங்கி நிற்க வேண்டும். அடுத்தவர்களும் நம்மை வெறுக்க நேரிடலாம். அடுத்திருக்கிறவர்களும் நம்மை வெறுக்க நேரிடலாம். அவை வருத்தமானவைதான். ஆனால், நாம் வெறுக்கப்படும் பக்கத்தையே திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. நாம் ஆவிக் குரியவர்கள் என்றால், நாம் நேசிக்கப்படும் பக்கத்தை அதிகமாக மனதை ஈடு படுத்திக் கவனிக்க வேண்டும்.

யோசேப்பு சகோதரர்களால் வெறுக்கப்பட்டான். ஆனால், தேவனால் நேசிக்கப்பட்டான். தாவீது சவுல் இராஜாவால் வெறுக்கப்பட்டான். ஆனால், தேவனால் நேசிக்கப்பட்டான். மோசே ஜனங்களால் திரும்பத் திரும்ப இகழப் பட்டான். ஆனால், தேவனால் திரும்பத் திரும்பப் புகழப்பட்டான். எனவே, இவர்கள் தங்களை வெறுத்த வர்களால் மனம் உடைந்து செயலற்றுப் போகவில்லை. அதற்கு பதிலாக தங்களை நேசிக்கும் தேவனால் மேலும் மேலும் உத்வேகமடைந்து, செயல் வீரர்களாக விளங்கினார்கள்.

சில மனைவிகள், தங்கள் கணவர்களால் வெறுக்கப்படும் விதங்களையே, நாள் முழுவதும் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். சில கணவர்கள், மனைவிகளால் தாங்கள் அவமதிக்கப்படுவதையே, தங்களின் வேலை ஸ்தலங்களில் இருந்து கொண்டு சிந்திப்பார்கள். விளைவு என்ன? குடும்பக் கடமைகளும் ஸ்தம்பித்துப் போகும். பணிகளும் ஸ்தம்பித்து, போகும். அநேகர் தேவ அன்பை நினைத்துப் பார்க்க நேரமில்லாமல், தாங்கள் வெறுக்கப்படுவதையே சிந்தித்துச் சிந்தித்து நிலை குலைந்து போவார்கள். சிலர் சபை கூடுகைக்கு வந்தால் கர்த்தரின் அன்பைக் கேட்டு அழுவார்கள். ஆனால், வீடுகளில் இருக்கும் போது, மனிதர்களின் வெறுப் பையே எண்ணி எண்ணி அழுவார்கள்.

தேவன் சிலருடைய வெறுக்கும் மன நிலைகளை மாற்றுவதில்லை. ஏனென்றால், அவர்கள் கர்த்தரை அவர்களுக்குள் அனுமதிப்பதில்லை. ஆனால், வெறுக்கப்படுபவர்களின் இருதயத்திலே தம்முடைய அன்பை வெளிப்படுத்த விரும்பு கிறார். ஏனென்றால், மனிதர்களின் வெறுப்பை மேற்கொள்ள தேவ அன்பை அதிகமாக ருசிப்பது ஒன்றே வழி.

சிந்தனைக்கு...

பிறர் நல்லவர்களாயிருப்பதற்காக அவர்களை நேசிக்காதே.
நீங்கள் நல்லவர்களாயிருப்பதால் நேசியுங்கள்.

ஆகஸ்ட் 26

கனிகள் இல்லை ஏன்?

யோவான் 15:1–16

கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால்.
யோவான் 15:4

யோவான் 15-ம் அத்தியாயம் மிக முக்கியமாகக் கனிகொடுத்தலைக் குறித்துப் பேசுகிறது. கனிகொடுத்தலுக்கு அடிப்படையாக அங்கே சொல்லப்படுவது நிலைத்திருத்தல். நிலைத்திருத்தல் என்றால் இயேசு கிறிஸ்துவோடு இணைந் திருத்தல். நற்கனிகள் அல்லது நற்குணங்கள் என்பது இயேசுவோடு இணைந் திருத்தலின் விளைவாக நடைபெறும் காரியமாகும். ஒருவர் நற்குணங்களாகிய கனி களைக் கொடுக்காமல் போனாலோ அல்லது குறைவுபட்டாலோ என்ன அர்த்தம்? அவர் கிறிஸ்துவோடு உரியவிதமான ஐக்கியத்தோடு இல்லை என்றே அர்த்தம்.

சில நேரங்களில், நம்மிடம் நற்சுபாவங்கள் இல்லாததையோ அல்லது குறைவுபடுவதையோ பார்த்தால், நாம் எப்படிச் சிந்திக்கின்றோம்? நான் சுபாவரீதி யாக சரியாயில்லையே, சுபாவங்களைச் சரி செய்ய முடியவில்லையே? என்று சிந்திக்கின்றோம். நல்ல சுபாவங்களோடு வாழ இயலாமல் இருக்கிறதை எண்ணி வருந்துகிறோம். நற்குணங்களோடு வாழ்வது முடியாத காரியம் என்றும் எண்ணுகின்றோம்.

ஆனால், அடிப்படைப் பிரச்சினை என்ன? நாம் கர்த்தரோடுள்ள உறவில் ஆழமாகச் செல்லக் கவனம் செலுத்தவில்லை. நாம் கனிக்கொடுக்க இயலாத பல வீனத்தை எண்ணி வருந்துகின்றோம். ஆனால், கனிகொடுக்கத்தக்கதாக நாம் கர்த்தரோடு போதிய ஐக்கியத்தில் இல்லாத பலவீனத்தைச் சரியாகப் பார்ப்பதில்லை. திராட்சைக் கொடியானது செடியோடு உரிய விதமாக இணைந்திருப்பதால்தான், கனிகொடுக்கும் சக்தியைப் பெற முடியும். நாமும் கர்த்தரோடு நல்ல ஐக்கியத்தோடு வாழ்ந்தால்தான் நற்குணங்களாகிய கனிகொடுக்கும் சக்தியை பெற முடியும். அநேகர் ஜெபம், வேத வாசிப்பு, சபை கூடுகை என பல விஷயங்களோடு வாழ்ந் தாலும், ஆத்மரீதியாகக் கர்த்தரோடிருக்கின்ற அனுபவங்களில் வலிமையாக இல்லை.

கர்த்தர் நமக்கு அவருடைய ஐக்கியத்தை வாக்களித்திருக்கின்றார். அதனை நாம் விசுவாசித்து அதனை நாம் தேட வேண்டும். கர்த்தருடைய சமு கத்தில் போதிய நேரங்களைச் செலவழித்து, கர்த்தர் நம்மோடிருப்பதை ஆத்து மாவில் உணரும் அனுபவங்களைத் தேட வேண்டும். தேவன் தம்மை நமக்குள் வெளிப்படுத்தி அவரோடு நாம் இருப்பதை அறியச் செய்வார். அதனுடைய விளைவே கனி கொடுத்தல்.

சிந்தனைக்கு...

தேவ உறவினால் வராத நற்குணங்கள் நிலையற்றவை.
நற்குணங்களைத் தராத தேவ உறவு கற்பனையானது.

ஆகஸ்ட் 27

பரிசுத்த வல்லமை

2 கொரிந்தியர் 7:1–11

பரிசுத்தமாகுதலை பூரணப்படுத்தக்கடவோம்.
2 கொரிந்தியர் 7:1

நாம் கர்த்தரோடிருப்பதை உறுதி செய்யும் மிக முக்கியமானதோர் அடையாளம் என்ன தெரியுமா? நாம் பரிசுத்தமான விஷயங்களில் மிகவும் முனைப்பாகயிருப்போம். ஏனென்றால், கர்த்தர் நம்மோடிருந்தால் அவர் நம்மிடம் பரிசுத்தக் கிரியைகளைச் செய்வதில் அதிக முனைப்பாயிருப்பார். ஏனென்றால் பரிசுத்தமான ஒரு வாழ்க்கை என்பது மிக மிகச் சக்தியான வாழ்க்கை. வாழ்க்கையில் செல்வ வளங்களால் நமக்கு ஏற்படும் ஆற்றலைவிட, பரிசுத்தத்தால் வருகின்ற ஆற்றல் மிக மிக அதிகம்.

இந்தப் பரிசுத்த ஆற்றல் நம்மிடம் அதிகமாயிருந்தால், அதனால் பல பல கஷ்டங்கள் தவிர்க்கப்படும். ஏனென்றால், ஏராளமான கஷ்டங்கள் நாம் பரிசுத்த நிலையில் வலிமையற்றிருப்பதாலேயே வருகிறது. பாவம் நமக்கு பல கஷ்டங்களைக் கொண்டு வரும். தரமற்ற சுபாவங்கள் நமக்கு பல கஷ்டங்களைக் கொண்டு வரும். சரியற்ற உறவுகள் நமக்குப் பல கஷ்டங்களைக் கொண்டுவரும். கட்டுப்பாடற்ற ஆசைகள் நமக்குப் பல கஷ்டங்களைக் கொண்டு வரும். இது போன்ற கஷ்டங்கள் நம்மிடம் பரிசுத்தம் இருந்தால் வராது.

ஏனென்றால், பரிசுத்தம் என்பது ஒரு பெரிய வல்லமை. அந்த வல்லமையினால் பாவம், சுபாவம், தவறான உறவு, ஆசைகள் எல்லாமே எதிர்க்கப்படும். எனவே, இவைகளால் பலவிதமான தேவையற்ற கஷ்டங்கள் தவிர்க்கப்படும். அத்தகைய பரிசுத்த வல்லமையை நம்மிடம் பெருகச் செய்வதற்காக, நாம் அதிகமான நேரங்களைத் தேவ சமுகத்தில் செலவு செய்தால், அது நமக்கு நஷ்டமே இல்லை. நாம் பரிசுத்த அனுபவங்களில் மேலும் மேலும் வளர வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கேற்ற ஆவிக்குரிய நடவடிக்கைகள் நம்மிடம் இருந்தால், அங்கே கர்த்தர் நம்மோடிருப்பதற்கு வலிமையான சான்றுகள் இருக்கிறது என்று அர்த்தம்.

நாம் இன்னும் இன்னும் பரிசுத்தமாயிருக்க அதிகமாக நாடுவோமென்றால், இன்னும் இன்னும் வாழ்க்கையில் அதிகத் தெய்வீக வல்லமையோடிருக்க விரும்புகின்றோம் என்று அர்த்தம். அதாவது, தேவனோடுள்ள ஐக்கியத்தில் வலிமையாயிருக்க நாடுகின்றோம் என்று அர்த்தம். அந்த அனுபவம்தான் நாம் சமாதானமாயிருக்கவும், சந்தோஷமாயிருக்கவும், நம்பிக்கையோடிருக்கவும், உயர் குணங்களோடிருக்கவும் நம்மைப் பலப்படுத்துகின்றது.

சிந்தனைக்கு...

பரிசுத்தத்தைக் கொண்டு எதையும் சகிப்பவனைவிட,
பணத்தைக் கொண்டு எதையும் சாதிப்பவன் பலமுள்ளவன் அல்ல.

ஆகஸ்ட் 28

வார்த்தை தரும் நம்பிக்கை

எபிரெயர் 13:1–15ஏ

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை.
எபிரெயர் 13:5

வேத வார்த்தைகள் மூலமாக நமக்கு சில நம்பிக்கைகள் கொடுக்கப்படு கின்றன. அந்த நம்பிக்கைகளுக்குச் சில பின்னணிகள் உள்ளன. நாம் தேவனை நமக்குள் தினமும் தேடுகின்ற அனுபவப் பின்னணியிருந்தால், நமக்கு ஒரு குறைவும் ஏற்படாது என்ற நம்பிக்கை வேதாகமத்தில் தரப்பட்டுள்ளது. (சங்கீதம் 34:10) கர்த்தரைத் தேடுவது என்பது ஒரு தீடீர் அனுபவம் அல்ல. அது ஆவிக் குரிய வாழ்க்கையில் உள்ளவர்களின் தொடர் அனுபவம். அந்த அனுபவம் உடை யவர்களுக்குக் குறைவு ஏற்படாமல், கர்த்தர் தேவையானதைத் தருவார் என்ற நம்பிக்கை உண்டு.

நாம் நீதிமான்கள் என்ற நிலைமையிருந்தால், எல்லாச் சூழ்நிலைகளிலும் கர்த்தருடைய கண்கள் நம்மேல் நோக்கமாயிருக்கும் என்று நாம் நம்பிக்கையோடு வாழலாம். எலியா ஒரு நீதிமான். தேவ வார்த்தையின்படி அவன் கேரித் ஆற்றி னருகே ஒளிந்திருந்தான். அந்த ஆற்றின் தண்ணீர் ஒருநாள் வற்றிப்போயிற்று. ஆனால், கர்த்தர் அந்தச் சூழ்நிலையைக் கவனித்துக் கொண்டேயிருந்தார்.

நீதிமானாகிய எலியாவிற்கு என்ன நடக்கிறது என்பதைத் தொடர்ந்து கவ னித்த தேவன், கேரீத் வற்றிப் போனதும், சாறிபாத்தில் அவனுக்கு ஆதரவான ஆயத்தங் களை உருவாக்கினார். நாமும் இயேசு கிறிஸ்துவாகிய நீதியை நமக்குள் பெற்று, நீதிமான் என்ற ஆவிக்குரிய அந்தஸ்துடன் வாழ வேண்டும். அப்போது கர்த்தருடைய கண்கள் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கும். நமக்கு என்ன நடக்கிறது என்று அவர் கவனிப்பார். அடுத்து எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிந்து, அதை அவர் ஆயத்தம் செய்வார். எனவே, நாம் நீதிமான்கள் என்றால், வேத வார்த்தை தரும் நம்பிக்கையைச் சார்ந்து தைரியமாக வாழலாம்.

சில நேரங்களில் நாளைய நம்முடைய சில தேவைகளை எண்ணும்போது, இன்றைய தினம் அது தொடர்பாக நம்மிடம் எந்த ஆயத்தமும் இராது. ஆனால், நம்மோடு கர்த்தர் இருக்கிறார் என்ற நம்பிக்கையின் பின்னணி இருந்தால், நாம் பதட்டப்படத் தேவையில்லை. நமக்கிருக்கிறவைகளை நாம் போதும் என்று கூறலாம். (எபிரெயர் 13:5) ஏனென்றால், நம்மிடம் இருப்பவைகள் கொஞ்சமா யிருக்கலாம். ஆனால், நான் உன்னை விட்டு விலகுவதில்லை என்று கர்த்தர் சொல்கிறாரே. அவர் இருந்தால் அவர் எல்லாத் தேவையையும் சந்திப்பார்.

சிந்தனைக்கு...

நாளைய தினத்திற்கு நிறையப் பணம் கட்டாயமல்ல.
கர்த்தர் நம்மோடிருக்கின்ற நம்பிக்கையே போதும்.

ஆகஸ்ட் 29

பின்னணி என்ன?

ஏசாயா 1:1–17

நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்.
ஏசாயா 1:15

சிலருடைய விசுவாசம் மலை அளவு பெரியது. ஆனால், எதிர்பார்த்த நன்மை எதுவும் கிடைக்கவில்லை. சிலர் இடைவிடாமல் போராடிச் ஜெபிக்கும் ஜெபவீரர்கள். ஆனாலும், ஜெபத்திற்கேற்ற பலன் எதுவும் கிடைக்கவில்லை. சிலர் மிகத் தாராளமாகக் கர்த்தருக்கென்று விருப்பத்தோடு கொடுக்கின்றவர்கள். ஆயினும், அதற்குரிய ஆசீர்வாதங்களை அவர்கள் பெறவில்லை. இப்படிச் சிலருடைய விசுவாசமும், ஜெபமும், காணிக்கையும் அவர்களுக்கு எந்த நன்மையையும் கொண்டுவராததைக் காணும் போது, மற்றவர்களுக்கும் சோர்வு ஏற்படுகிறது.

சிலருடைய மிகப் பக்தியான செயல்களுக்குக் கர்த்தர் பலனளிக்காதது போல நாம் பார்க்கும் போது, அது சிலருக்கு இடறுதலாகவும் இருக்க முடியும். ஆனால், ஜெபத்தையோ, விசுவாசத்தையோ, காணிக்கையையோ நாம் சார்ந்து, நாம் தேவ நன்மைகளைப் பெற்றுவிட முடியும் என எண்ணக்கூடாது. தேவ உறவைப் பின்னணியாகக் கொண்டிராத எந்த நல்ல பக்திச் செயல்களுக்கும், நாம் பலனை எதிர்பார்க்க முடியாது. நாம் தேவனுடைய பிள்ளை என்பதை உறுதிப்படுத்தும் பரிசுத்தச் சான்றுகள் இல்லாதபோது, வேறு நல்ல பக்திச் செயல்களை செய்து ஆசீர்வாதம் பெற முடியாது.

அநேகர் விசுவாசத்தை வலிமையாக எண்ணுகின்றார்கள். ஆனால், யாருடைய விசுவாசம் வலிமையானது? சிலர் ஜெபத்தை வல்லமையாக எண்ணுகின்றார்கள். ஆனால் யாருடைய ஜெபம் கேட்கப்படும்? சிலர் காணிக்கைகள் தேவனிடத்திலிருந்து ஏராளம் நன்மைகளைக் கொண்டு வரும் என்று எண்ணுகின்றனர். ஆனால், யாருடைய காணிக்கையைக் கர்த்தர் அங்கீகரிப்பார்? அதுதான் முக்கியம். விசுவாசப்பக்தி அல்ல. ஜெபப் பக்தி அல்ல. காணிக்கைப் பக்தி அல்ல. தேவனுடைய பிள்ளை என்ற பக்தி வேண்டும். பரிசுத்தவான் என்ற பக்தி வேண்டும்.

தேவன் பக்தியான செயல்களைப் பார்த்து அல்ல. அவர் தம்முடைய பிள்ளைகளின் பக்தியைப் பார்த்தே கிரியை செய்கிறார். தேவன் விசுவாசப் பக்தியைப் பார்த்து அல்ல. அவர் தம்முடைய உறவுக்குள் வந்தவர்களின் விசுவாசத்தைப் பார்த்தே ஆசீர்வதிக்கிறார். தேவன் காணிக்கைகளைப் பார்த்து அல்ல. அந்தக் காணிக்கைகளை க்கொண்டு வருகிறவர்களின் ஆவிக்குரிய பின்னணி எது என்பதையும் பார்க்கின்றார்.

சிந்தனைக்கு...

கர்த்தரை மிக வல்லமையாக விசுவாசி
ஆனாலும், அந்த விசுவாசத்தையே நம்பிவிடாதே.

ஆகஸ்ட் 30

செய்யாத நன்மைகள்

2 கொரிந்தியர் 11:21–33

ஆறுகளால் வந்த மோசங்களிலும் கள்ளரால் வந்த மோசங்களிலும்.
2 கொரிந்தியர் 11:26

கிறிஸ்தவர் ஒருவர் தன் வாழ்வில் நடந்த சில அற்புதமான தேவ செயல்களைத் தன்னுடைய பிறமத நண்பரிடம் விவரித்துச் சொன்னார். உடனேயே அவர் இந்த கிறிஸ்தவருடைய வாழ்வில் நிகழ்ந்த சில தோல்விகள், விபத்துக்கள், வியாதிகள், பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி, இங்கெல்லாம் உன்னுடைய கடவுள் ஏன் உதவி செய்யவில்லை என்று கேட்டார். உண்மையில் அவர் சொல்ல வந்த விஷயம், நல்லது நடந்தால் இயேசு செய்தார் என்று சொல்கிறீர்களே, நன்மைகள் நடக்காத போது அவற்றை இயேசு செய்யவில்லை என்று ஏன் சொல்ல மறுக்கின்றீர்கள் என்பதுதான்.

சிலருடைய வாழ்க்கையில் கர்த்தர் எந்த நன்மையும் விசேஷமாகச் செய்வதில்லை. ஆனால், அவர்கள் தங்களுக்குச் சாதகமாகக் காரியங்கள் நிகழும் போதெல்லாம், அவற்றைக் கர்த்தர் செய்ததாகவே சொல்வார்கள். ஆனால், சிலருடைய வாழ்க்கையில், நிறைய விஷயங்கள் கர்த்தர் விசேஷமாகச் செய்கின்றார். அதே வேளையில் வேறு சில விஷயங்களில் கர்த்தர் எதையும் செய்வதில்லை. இங்கெல்லாம் கர்த்தர் எதையும் செய்யவில்லையே, பின்னர் எப்படிச் சாதகமாக நடந்தவைகளை மட்டும் கர்த்தர் செய்ததாகச் சொல்கிறீர்கள் என்று சிலர் கேட்க நேரிடுகிறது.

வாழ்க்கையின் பல சூழ்நிலைகளில் கர்த்தர் விசேஷமாகப் பல நன்மைகளைச் செய்கிறார். அவை உண்மையாகவே அவர் தம்முடைய கிருபையை வெளிப்படுத்தி விசேஷமாகச் செய்தவையே. ஆயினும், அவர் சகல சூழ்நிலைகளிலும், சகல தேவைகளிலும் நாம் கேட்டபடி நமக்கு நன்மைகளைச் செய்கிறார் என்று கூற இயலாது. சில நேரங்களில் வியாதிகளை அவர் குணமாக்குகிறார். ஆயினும், சகல வியாதிகளையும் அவர் குணமாக்கிக் கொண்டேயிருப்பதில்லை.

இந்தப் பூமியில் கர்த்தர் நமக்கு ஆதரவான அனைத்துக் காரியங்களையும் செய்து, நமக்குப் பாதகமான அனைத்துக் காரியங்களையும் நடக்காமல் நிறுத்துகிறார் என்று கூற இயலாது. அப்போஸ்தலனாகிய பவுலுக்குக் கர்த்தர், பல நேரங்களில் பல அற்புதமான காரியங்களைச் செய்திருக்கிறார். ஆயினும், பல சூழ்நிலைகளில் சாதாரண உலக மனிதருக்கு நிகழ்வது போலவே பவுலுக்கும் நிகழ்ந்தது. ஆயினும், எல்லாச் சூழல்களிலும், எல்லா நிகழ்வுகளிலும் ஏதவாது ஒரு விதத்தில் ஆதரவாக நமக்கு சில காரியங்களைக் கர்த்தர் செய்யாதிருப்பதில்லை.

சிந்தனைக்கு...

நீ கேட்டதைக் கர்த்தர் தந்தால் நன்றியோடிரு.
நீ கேட்டதைத் தராமல் போனாலும் நம்பிக்கையாயிரு.

ஆகஸ்ட் 31

பண ஆசை

நீதிமொழிகள் 14:20-35

சகல பிரயாசத்தினாலும் பிரயோஜனமுண்டு.
நீதிமொழிகள் 14:23

சிலருக்கு வேலை செய்து சம்பாதிக்கும் சிரமத்தை ஏற்பதற்கு மனமே யில்லை. சிலருக்குப் பெரிய ஒரு சம்பளம் கிடைக்காவிட்டால், எந்த வேலைக்கும் போகமாட்டார்கள். சிலருக்கு முதலாளிகளாயிருக்க மட்டுமே ஆசை. ஆனால், முதலாளியாவதும் இல்லை. எங்காவது ஒரு முதாளிக்கு கீழ் வேலை செய்வது மில்லை. சிலருக்கு இன்னொருவர் வருமானத்தைச் சார்ந்து வாழ்ந்து அதுவே வாழ்க்கை முறையாகிவிட்டது. சிலருக்கு சில நாள் வேலை செய்தால் பல நாள் விடுதலை வேண்டும். சிலர், எனக்குப் பண ஆசை இல்லை, பொருளாசை இல்லை எனக்கூறிக் கொண்டு, நாலணா சம்பாதிக்காமல், யாருக்கும் பிரயோஜனம் இல்லாமலிருப்பார்கள்.

பண ஆசை கூடாது என்றால், பணமே கூடாது என்று அர்த்தம் அல்ல. பொருளாசை கூடாது என்றால், பொருளே கூடாது என்று அர்த்தம் அல்ல. பணம் பொருள் சார்ந்த ஆசைகள் வாழ்க்கையின் முதலிடத்திற்குப் போகும் போதுதான், அவை தவறாக மாறுகின்றது. மற்றபடி வாழ்க்கைக்குப் பணமும் பொருளும் வேண்டும். பண ஆசையும் பொருளாசையும் எல்லைக்குட்பட்ட அளவில் நமக்கு வேண்டும்.

சிலருக்குப் பண ஆசை இல்லைதான். சிலருக்குப் பொருளாசை இல்லை தான். ஆனால், இவர்களிடம் பணம் பொருள் எதுவும் இல்லாததால், யாருக்கும் இவர்களால் எந்தப் பொருளாதார ரீதியான பிரயோஜனமும் இல்லை. பண ஆசை தவறல்ல. அதைவிட தேவ உறவின் ஆசை அதிகமாக இருந்தால், பொருளாசை தவறல்ல. அதைவிட தேவனுக்கேற்ற நற்குண ஆசை அதிகமாயிருந்தால், பண ஆசையும் பொருளாசையும் போதிய அளவு இல்லாவிட்டால், சம்பாதிக்கும் ஆசையும் இராது. சம்பாதிக்கும் ஆசை இல்லாவிட்டால் நாம் கடன் கொடுப்பதற்கு எதுவுமில்லாதவர்களாகவும், கடன் வாங்குவதற்கு மிகுந்த கட்டாயமுடையவர் களுமாயிருப்போம்.

பண ஆசை என்பது பணத்தை முதலிடத்தில் வைத்துப் பணத்திலேயே சந்தோஷத்தை எதிர்பார்ப்பது ஆகும். பண ஆசை என்பது பணத்திற்காகச் சரி யான வழிகளையும், சரியான சுபாவங்களையும், சரியான உறவுகளையும் கண்டு கொள்ளாமல் போய் சேர்ப்பதாகும். தேவ வழிகளையும், தேவ போதனைகளையும், தேவ சமுகத்தையும் முதலிடத்தில் வைத்துச் செயல்படுகிறவர்களுக்கு பண ஆசை பாதகமாக மாறாது.

சிந்தனைக்கு...

பணத்தை ஏராளமாகச் சம்பாதிப்பது தவறல்ல.
ஆனால், பரிசுத்தத்தை நஷ்டப்பட்டுச் சம்பாதிப்பது நல்லதல்ல.

செப்டம்பர் 1

பலவீனமான சான்றுகள்

2 கொரிந்தியர் 13:1–14

இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று...
2 கொரிந்தியர் 13:5

அநேகர் கர்த்தர் தங்களோடிருப்பதற்குச் சான்றாக சின்ச் சின்ன விஷயங்களை அடையாளங்களாகப் பார்க்கின்றனர். சிலர் பொருளாதார ரீதியாகக் கிடைத்த சிறு நன்மையைத் தேவன் செயல்படுவதற்கு அடையாளமாகப் பார்க்கின்றனர். வியாதி நேரத்தில் கிடைத்த விடுதலை, வேலை வாய்ப்பு பெற்றமை, பரிட்சையில் வெற்றி என தங்களுக்குச் சாதகமாக நிகழ்ந்த விஷயங்களைக் கர்த்தர் தங்களுக்கு ஆதரவாக இருப்பதற்கான அடையாளங்களாகப் பார்க்கின்றனர். சிலர் ஆராதனை வேளையில் கிடைத்த சிறு பரவச நிலையையும் சொப்பனங்களையும் தேவனோடிருப்பதற்கான அடையாளங்களாகப் பார்க்கின்றனர்.

இதனுடைய விளைவாகச் சில போராட்டங்கள், சோதனைகள், நெருக்கடிகள் ஏற்படும் போதும், அற்ப நேரத்தில் அவர்கள் கர்த்தரை விட்டு விலகுகின்ற ஒரு அனுபவத்திற்குச் செல்கின்றனர். உண்மையில் அவர்கள் சோதனை வேளையில் கர்த்தரை விட்டு விலகவில்லை. உண்மையில் அதுவரையிலும் அவர்கள் கர்த்தரோடிருக்கவில்லை. கர்த்தரோடிருப்பது போன்ற ஒரு மாயையான சிந்தனையிலிருந்து விலகி கர்த்தர் தங்களைவிட்டு தூரமாகிப் போனது போல உணருகின்றனர்.

ஒருவர் கர்த்தரோடிருப்பதற்குச் சான்றாக, வலிமையான அடையாளங்களைக் கொண்டிருக்க வேண்டும். சின்னச் சின்ன சாதகக் காரியங்களைப் பார்த்து, அவற்றிற்குப் பின்னால் கர்த்தர் இருப்பதாக நம்பினதால், பெரிய பிரச்சினைகள் வந்தால் தாக்குப்பிடிக்க இயலாமல் போகின்றனர். அப்போஸ்தலனாகிய பவுல் நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன் என்றான். (11 தீமோ 1:12) சின்னச் சின்ன நன்மைகளுக்காக நன்றி செலுத்துவது வேறு. சின்னச் சின்ன விஷயங்களைப் பார்த்து கர்த்தர் தங்களோடிருப்பதாக நம்புவது வேறு.

வலிமையான வாழ்க்கை மாற்றம், சுபாவ மாற்றம், வலிமையான சமாதான மனநிலை, பரிசுத்த வாஞ்சை, உறுதியான தரிசனம், தேவ உறவின் நிச்சயம் போன்ற வலிமையான விஷயங்களைக் கர்த்தரோடிருப்பதற்கான சான்றுகளாகக் கொண்டிருக்க வேண்டும். சில விஷயங்களில் நாம் தேவனால் உணர்த்தப்பட்டதை போல உணர்ந்திருக்கலாம். சில விஷயங்களில் கர்த்தர் நம்மைத் தைரியப்படுத்தியதாக நம்பலாம். சில விஷயங்களில் தேவ உதவியைப் பெற்றது போல எண்ணலாம். ஆயினும், அவை பனித்துளிகள் வெயிலில் காணாமல் போவது போல மறைந்து விட வாய்ப்புண்டு. வலிமையான ஆவிக்குரிய சான்றுகளைப் பெற்றுக்கொள்வோமாக.

சிந்தனைக்கு...

கர்த்தர் ஒருவரோடு இருப்பதை விளக்க,
கர்த்தருக்குச் சாட்சியாக வாழ்வதைவிட வலிமையான சாட்சி இல்லை.

செப்டம்பர் 2

தேவனுடைய திட்டம்

ஆதியாகமம் 17:1–16

உன்னோடே பண்ணுகிற என் உடன்படிக்கை என்னவென்றால்...
ஆதியாகமம் 17:4

தேவன் விண்ணப்பங்களைக் கேட்கிறவரே. ஆனால், யாருடைய விண்ணபங்களைக் கேட்கிறார்? தேவன் அற்புதங்கள் செய்கிறவரே. ஆனால், யாருக்கு அற்புதம் செய்கிறார்? தேவன் நமக்குச் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், ஆசீர்வாதங்களையும் தருகிறவரே. ஆனால், யாருக்கு அவ்விதம் செய்கிறார்? ஜெபிக்கிற எல்லோருக்குமா? விசுவாசிக்கின்ற எந்த ஒருவருக்குமா? இல்லை. யார் அவருடைய அநாதி திட்டத்திற்குள் தங்களையும் தங்களின் வாழ்க்கையையும் இணைத்துக் கொண்டார்களோ அவர்களுக்கே.

ஆபிரகாமையும், ஈசாக்கையும், யோசேப்பையும் தேவன் ஆசீர்வதித்ததின் காரணம் என்ன? அவர்கள் பக்தியாக வாழ்ந்ததாலா? இல்லை. அவர்கள் மன்றாடிச் ஜெபிக்கிறவர்களாக இருந்ததாலா? இல்லை. அவர்கள் தேவனுடைய திட்டத்திற்குள் தங்களை இணைத்துக்கொண்டு, அதற்கேற்ப வாழ்ந்ததாலேயே ஆசீர்வாதிக்கபட்டனர். தேவன் யோசேப்பு, தாவீது, தானியேல் போன்றோரின் பிரச்சினைகளுக்கு உதவியது ஏன்? அவர்கள் மன்றாட்டு வீரர்கள் என்பதாலா? இல்லை. அவர்கள் ஆராதனை வீரர்கள் என்பதாலா? இல்லை.

அவர்கள் தேவனுடைய திட்டத்திற்குள் வந்து, அந்தத் திட்டத்தின் நியமங்களுக்கு உட்பட்டு வாழ்ந்ததாலேயே. ஆம், அநேகர் கர்த்தரை ஒரு ஆசீர்வாதக் கடவுள் என்று மட்டுமே எண்ணுகின்றனர். அநேகர் கர்த்தரை ஒரு அற்புதக் கடவுள் என்றே எண்ணுகின்றனர். ஆனால், தேவன் தம்முடைய அநாதி திட்டத்தின் அடிப்படையில் செயல்படுகிறவர். நாம் தேவ திட்டத்திற்குள் இணைந்து, தேவ சித்தத்தின்படி வாழ்வதற்கு முன்வரவேண்டும். அப்போது நம்மை அவர் தம்முடைய திட்டத்தின் இலக்கை நோக்கி நடத்துகின்றார். அந்த இலக்கை நோக்கிச் செல்லும் பாதையில்தான், கர்த்தர் நம்மை நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் காணச் செய்கின்றார்.

தேவனுடைய திட்டம் என்ன? இந்தப் பூமியில் நாம் தேவனுடைய பிள்ளைகளாக, ஆவியில் மறுபடியும் பிறந்து வாழ வேண்டும். நாம் வாழ்கின்ற விதங்களால் தேவனுடைய மகிமையைப் பிரதிபலித்து வாழ வேண்டும். நாம் இந்தப் பூமியில் தேவ உறவோடு வாழ்ந்து, நித்திய வாழ்விற்குள் ஒரு நாள் பிரவேசிக்க வேண்டும். இந்தத் தெய்வீகத் திட்டத்தின் பாதையில் நாம் செல்லும்போதுதான் நம்மை பிரச்சினைகளிலிருந்து விடுவிக்கவும், நமக்கு நன்மையானவைகளைச் செய்யவும் தேவனுக்குக் கடமையுண்டு.

சிந்தனைக்கு...

தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர் என்று அல்ல,
தமக்காக வாழ்கிறவர்களுடைய ஜெபத்தைக் கேட்கிறார் என்பதே சரி.

செப்டம்பர் 3
விசுவாசம் மனப்பயிற்சியா?

எபிரெயர் 11:1–9

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்...
எபிரெயர் 11:1

ஒருவர் கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், எனக்குக் குறைவேதும் இல்லை என்று தினமும் நூறு முறை வாயினால் அறிக்கையிடுவாராம். ஏன் இப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டால், வாயினால் இப்படி அறிக்கையிட்டுக் கொண்டேயிருந்தால், விசுவாசம் பெருகி ஆசீர்வாதம் வரும் என்று பதில் சொல் வாராம். மேற்கண்ட வசனத்தையோ, இது போன்ற வேறு வசனங்களையோ, திரும்பத் திரும்ப அறிக்கையிடுவது தவறல்ல. ஆனால், இவ்விதம் அறிக்கையிடு வதால் விசுவாசம் பெருகும் என்பதும், ஆசீர்வாத விளைவுகள் ஏற்படும் என்பதும் மூட நம்பிக்கை.

ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை என்பது, நாம் வாயினால் பேசிப் பேசி நம்முடைய மனதை பழக்குவிப்பதால் ஏற்படுவது அல்ல. விசுவாசம் சம்பந்தமாக வாயினால் திரும்பத் திரும்ப அறிக்கையிட்டு விசுவாசத்தை வளர்த்தால், அது ஒரு மனவியல் சார்ந்த மனப்பயிற்சி ஆகும். இது ஆவிக்குரியது அல்ல. இது விசுவாசமும் அல்ல. விசுவாசம் என்பது நாம் பயிற்சி எடுத்து எடுத்து வளர்க்கின்ற ஒன்று அல்ல. ஒரு நல்ல தகப்பனுடைய மகன், என் தகப்பன் நல்லவர், எனக்கொரு குறைவும் வராது என்று வாயினால் அறிக்கையிட்டுக் கொண்டிருக்க வேண்டுமா?

அவன் அந்த நல்ல தகப்பனுடைய ஐக்கியத்தில் இருக்கும் போது, அந்த நம்பிக்கை அவனுக்கு இயல்பாகவே இருக்கும். அவனுக்கு அந்த நம்பிக்கையைக் கொடுப்பது ஐக்கியம்தானேயன்றி மனதின் பயிற்சி அல்ல. அநேகருக்கு தேவ பக்தி இருந்தபோதிலும் தேவ ஐக்கிய அனுபவம் இல்லை. எனவே, விசுவாசம் இயல்பாக வரவில்லை. நாம் தேவ உறவின் அனுபவத்தோடு வாழ்ந்தால், தேவன் நமக்கு வேதாகமத்தில் சொல்லியிருக்கின்ற வார்த்தைகளின்மேல் இயல்பான நம்பிக்கை வரும். மனப்பயிற்சி தேவையில்லை.

நாம் குறிப்பிட்ட விதமாகக் கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்கள் செய்வார், என்று திரும்பத் திரும்ப வாயினால் அறிக்கையிடுவதால், கர்த்தர் அப்படிச் செயல்பட மாட்டார். கர்த்தர் ஒரு காரியத்தை நமக்காக செய்வார் என்று நேர்மறையாக நம்பு வதற்கு நம்மை நாமே பழக்கிவிட்டதற்காக அவர் செயல்படுவார் என்று நம்பினால், அது ஒரு மந்திர ரீதியான நம்பிக்கை. நாம் கர்த்தருடைய ஐக்கியத்தில் வாழப் பழகிவிட்டால், அவர் நம்மிடம் காண்பிக்கும் அன்பின் விளைவாக, அவர் சொன்ன நல்ல வார்த்தைகளின்படி, நமக்கு நல்லது செய்வார் என்று உறுதியாக நம்புவோம்.

சிந்தனைக்கு...

நம்புவதற்குப் பழகிக் கொள்வது அல்ல விசுவாசம்,
தேவனோடு பழகி வாழ்வதின் விளைவானதே விசுவாசம்.

செப்டம்பர் 4

எதிர்மறை அணுகுமுறை

பிலிப்பியர் 4:4–13

உண்மையுள்ளவைகளெவைகளோ...
பிலிப்பியர் 4:8

ஒருவர் பாவம் செய்யக்கூடாது, தவறு செய்யக்கூடாது என்று விசேஷமாகச் சிந்தித்துக் கவனமாகச் செயல்படுவார். யாருக்கும் ஒரு தீங்கு செய்துவிடக் கூடாது என்றும், யாரையும் மனம் நோகச் செய்யக்கூடாது என்றும் மிகவும் விழிப்பாயிருப்பார். ஆனால், காலப்போக்கில் அவர் இது போன்று கவனமாயிருத்தலையும் விழிப்பாயிருத்தலையும் விட்டுவிட்டார். ஏனென்றால், அவர் எவ்வளவோ கவனமாகயிருந்தும் அவரால் பாவம் செய்யாமலும், பிறரை மனம் நோகச் செய்யாமலும் இருக்க முடியவில்லை.

இதற்குக் காரணம், உண்மையில் அவரால் முடியாதது அல்ல. அவருடைய எதிர்மறையான ஒரு அணுகுமுறைதான் காரணம். இவர் சரியானவைகளைச் செய்வதில் அதிகக் கவனம் செலுத்தாமல், சரியற்றவைகளைச் செய்யாமலிருப்பதிலேயே கவனம் செலுத்தினார். அவர் பிறரை நேசிப்பதற்குக் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, பிறருக்குக் கஷ்டம் கொடுக்கக் கூடாது என்பதிலேயே கவனம் செலுத்தினார்.

சில கணவன்மார்கள் மனைவிகளை விசனப்படுத்தி வாழ்வதைக் கவனித்தார் ஒருவர். அதனால் வருத்தமடைந்த அவர், தன் மனைவியை ஒரு போதும் தான் விசனப்படுத்தக்கூடாது என்பதில் எச்சரிக்கையாயிருந்தார். உண்மையில் அவர் மனைவியைக் கொஞ்சமும் கசந்து கொள்ளமாட்டார். மனைவிக்கு வருத்தம் வரும் விதமாக எதையும் செய்யமாட்டார். ஆயினும், அவருடைய மனைவியோ தன் கணவன் தன்னிடம் அன்பாக நடந்து கொள்வதேயில்லை என்று விசனப்பட்டார். ஏனென்றால், இந்தக் கணவர் மனைவியை விசனப்படுத்தாமலிருப்பதில் அதிகக் கவனமாயிருந்தார். ஆனால், மனைவியிடம் அன்பு காட்டி நடந்து கொள்ள எதையும் செய்யவில்லை.

சிலருடைய பக்தியும் இப்படியே. கர்த்தரைக் கோபப்படுத்திவிடக்கூடாது. கர்த்தருக்குப் பிரியமற்றதைச் செய்யக்கூடாது என்று விழிப்பாயிருப்பார்கள். எவை பாவமோ அவற்றைத் தவிர்க்க அதிகக் கவனம் செலுத்துவார்கள். ஆனால், பாவம் என்பது கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து, அவருக்குப் பிரியமானதைச் செய்வதில் முதற்கவனம் செலுத்துவதினால்தான் தவிர்க்கப்படும். நாம் நேர்மறையான ஆவிக்குரிய காரியங்களில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். கர்த்தரோடு அதிக ஐக்கியம் ஏற்படுத்தும் காரியங்களை அதிகமாகச் சிந்தித்து, அவைகளைச் செய்திட அதிகக் கவனம் செலுத்தினால் பாவம் தானாகத் தவிர்க்கப்பட்டு விடும்.

சிந்தனைக்கு...

நீ செய்யாத தவறை யாரும் பார்ப்பதில்லை.
நீ செய்கின்ற நல்லதை சிலராகிலும் பார்க்காமல் இருப்பதில்லை.

செப்டம்பர் 5

அன்புதான் தேவை

யோவான் 21:15–25

நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார்.
யோவான் 21:15

ஒருவர் மிகப்பெரிய கனத்தையும் மரியாதையையும் கர்த்தருக்குக் கொடுக்க முன்வரலாம். ஆனால், அவரிடம் கர்த்தர் நீ என்னிடம் அன்பாயிருக்கிறாயா என்றுதான் கேட்பார். ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அடிமையைப் போல வேலை செய்ய முன்வரலாம். ஆனால், கர்த்தர் அவரிடம், நீ என்னிடத்தில் அன்பா யிருக்கிறாயா என்றுதான் கேட்பார். ஒருவர் கர்த்தர்மேல் மிகப்பெரிய விசுவாசத்தை வைத்து வாழ முன்வரலாம். ஆனால், கர்த்தர் அவரிடம், நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றுதான் கேட்பார்.

ஆம், கர்த்தருக்கு நாம் கனத்தையும் மரியாதையையும் கொடுக்க வேண்டும். நாம் அவர் மேல் வலிமையான நம்பிக்கையை வைக்க வேண்டும். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டும். ஆயினும், நம்மையும் தேவனையும் பிணைப்பது அன்பே. தேவனிடத்தில் அன்பாயிருப்பதின் வாயிலாக மட்டுமே, நாம் தேவனுடைய நோக்கத்தையும் சித்தத்தையும் நிறைவேற்ற இயன்றவர்களாக மாறுவோம். அன்பு ஆவிக்குரிய வாழ்க்கையின் அடித்தளமாக மாறாத பட்சத்தில், நம்முடைய ஆவிக்குரிய கிரியைகள் எதுவும் தேவனுக்கு உகந்ததாகவும், பிரியமானதாகவும் இராது.

எப்படிக் கர்த்தரிடத்தில் அன்பாயிருப்பது? ஒருவரோடு உறவோ ஐக்கியமோ இல்லாமல், நாம் அன்பைக் காண்பிக்கவோ, பெறவோ முடியாது. எனவேதான், தேவன் நம்மை அவருடைய பிள்ளைகளாக வாழ அழைக்கின்றார். பிள்ளைகள் பெற்றோரின் அன்பையும் ஐக்கியத்தையும் நிறைவாகப் பெற முடியும். அந்த அன்பினால் ஏற்படும் மன உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் கொண்டுதான், தேவனுக்குப் பிரியமாக வாழ முடியும். நாம் எப்பொழுது பாவத்தைத் தவிர்த்து வாழ முடியும்? தேவ அன்பை அனுபவித்து, அதனை இழக்கக்கூடாது என்ற எச்சரிக்கையின் விளைவாகத்தான் பாவத்தைத் தவிர்க்க முடியும்.

தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற எண்ணத்தைவிட, தேவ அன்பில் வாழ வேண்டும் என்ற எண்ணத்தின் பின்னணியில்தான், பாவம் ஜெயிக்கப் படுகிறது. ஒருவருக்குப் பயந்து, அவருக்காகச் செயல்படுவதைவிட, ஒருவரிடம் அன்புகூர்ந்து நாம் அதிகமாக அவருக்காகச் செயல்பட முடியும். பக்தியின் வலிமையைவிட, கீழ்ப்படியும் மனவிருப்பத்தின் வலிமையை விட, அன்பின் வலிமை அதிகமானது.

சிந்தனைக்கு...

தேவனுக்குப் பயந்து பயந்து நல்லதைச் செய்வது சுயநீதி.
தேவனை நேசித்து நேசித்து நல்லதைச் செய்வது தேவ நீதி.

செப்டம்பர் 6

கஷ்டங்கள் தேவசித்தமா?

நியாயாதிபதிகள் 6:1–13

இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்?
நியாயாதிபதி 6:13

கிறிஸ்தவர் ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்ட போதும், அவற்றை கர்த்தரின் சித்தம் என்று ஏற்றுக்கொண்டார். கர்த்தர் அனுமதிக்கின்ற எதையும் நாம் முறுமுறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுவார். இவரைப் பொறுத்தவரை எல்லாம் தேவ சித்தப்படி நடக்கிறது என்பதே அவருடைய விசுவாசம். ஆனால், இந்த விதமான சிந்தையிலும் நமக்குப் போதுமான விழிப்புணர்வு வேண்டும். ஏனென்றால், சில நேரங்களில் தேவ சித்தம் நம் வாழ்க்கையில் செயல்பட வாய்ப்பில்லாததாலும், இப்படி நடைபெறலாம்.

நாம் தேவனுடைய சித்தத்தின் பாதையில் நடக்கும் போது, நம் வாழ்வில் எது நிகழவேண்டும், நிகழக்கூடாது என்பதில் தேவன் தம்முடைய சித்தத்தைச் செயல்படுத்துவார். நாம் தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடாமலும், தேவனுக்கு உகந்த வாழ்க்கை வாழாமலும் போகும் போது, தேவன் நம் வழிக்கு நம்முடைய வாழ்க்கையை விட்டு விடுவார். தேவ ஆளுகை இல்லாததாலும், தேவனுடைய சித்தம் அங்கே செயல்படுத்தப்படாததாலும், பலவிதக் கஷ்டங்களும் நஷ்டங்களும் வர வாய்ப்புண்டு. அது அப்படி நடக்க வேண்டும் என்று தேவன் சித்தம் கொண்டதால் அல்ல. தேவ சித்தம் செயல்படாததின் விளைவாகவே அப்படி ஏற்பட்டது.

நியாயாதிபதிகளின் புத்தகத்தில் இது போன்ற விஷயங்களை நிறையப் பார்க்க முடியும். இஸ்ரவேல் ஜனங்கள் தேவ ஆளுகைக்குக் கீழ்ப்படிந்து செயல்படாததால், தேவன் சில காலகட்டங்களில் அவர்களை விட்டு விலகி விடுவார். அது போன்ற தேவ பாதுகாப்பில்லாத நேரங்களில், அவர்களுடைய எதிரிகள் எளிதாக வந்து அவர்களை அடிமைப்படுத்தி, அவர்களைத் துன்புறுத்துவார்கள். அது தேவ சித்தத்தின் விளைவு அல்ல. தேவ சித்தம் செயல்பட வாய்ப்பில்லாததின் விளைவு.

ஒருவருடைய வாழ்க்கையில் தேவ ஆளுகைக்கு வாய்ப்பு இல்லாவிட்டால், அவருடைய சுயம் அங்கே ஆளுகை செய்து, பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்க முடியும். தேவ ஆளுகை இல்லாததால், மனிதர்களும் சாத்தானும் அவருக்கு எதிராகத் தடையின்றிச் செயல்பட்டு, பல சோதனைகளைக் கொண்டு வரலாம். எனவே, எல்லாம் தேவ சித்தப்படி நடக்கிறது என்று எண்ணிவிடக்கூடாது. கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் இல்லாததின் விளைவாக இப்படி நடைபெறுகிறதோ என்று சிந்தித்து, அதற்கேற்றபடி மனந்திரும்பிச் செயல்பட வேண்டும்.

சிந்தனைக்கு...

தேவ உறவுடன் வாழப் பழகிவிட்டால்,
தேவ சித்தமறியப் பழகுவது கடினமல்ல.

செப்டம்பர் 7

கர்த்தர் நமக்குத் தேவை

1சாமுவேல் 30:1–8

தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்.

1சாமுவேல் 30:6

ஒருவர் தொடர்ந்து தன் வாழ்க்கையில் எதிர்பார்த்ததைவிட, அதிகமான வெற்றிகளையும் உயர்வுகளையும் பெற்றுவந்தார். ஆனால், ஒருமுறை ஒரு சிறு முயற்சியில் அவர் எதிர்பார்த்தபடி காரியம் நடக்காததால், மிகவும் மனப்பாதிப்புக்குள் தள்ளப்பட்டார். அவருடைய மனைவி அவர் பெற்ற ஏராளம் வெற்றிகளையும் உயர்வுகளையும் சுட்டிக்காட்டி, அவரை உற்சாகப்படுத்த முயன்றார். ஆனால், இத்தனை விஷயங்களைச் சாதித்த என்னால், இந்த சிறு விஷயத்தைச் சாதிக்க முடியாமல் போய்விட்டதே, என்ற எண்ணமே அவருக்குள் மேலோங்கியது.

வாழ்க்கையில் இது ஒரு யதார்த்தமான விஷயம். நாம் எத்தனை வெற்றிகளை ஏற்கெனவே பெற்றிருந்தாலும், அடுத்து ஒரு தோல்வி வந்தால் தாங்குவது கடினமான விஷயமே. உடல் முழுவதும் நல்ல பலமாகவும் ஆரோக்கிமாகவும் இருக்கிறது. ஆனால், காலில் மட்டும் ஒரு சிறு புண் வலியைக் கொடுக்கிறது. சரீரத்தின் பிற பகுதிகளில் உள்ள ஆரோக்கியத்தை எண்ணி, அந்த வலியை மறக்க முடியாது.

ஒரு செல்வந்தரிடம் ஒருவர் தேவ பக்திக்குரிய காரியங்களைப் பேசினார். அவரோ இந்நாள் வரை இத்தனை பெரிய உயர்வுகளையெல்லாம் தேவபக்தி எதுவுமில்லாமல் தான் பெற்றேன். இனி எதைச் சாதிக்க தேவ அருள் வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர், நீங்கள் எத்தனை படிகள் தனித்து ஏறிப் போனாலும், எங்காவது தடுமாற நேர்ந்தால், தாங்கிட ஒருவர் தேவைப்படுவார் என்றார். ஆம், வாழ்க்கையின் அடுத்த நிகழ்வு எப்படியிருக்கும் என்பதை நாம் அறியமாட்டோம். திறமைகளால் ஆயிரம் வெற்றிகளைப் பெற இயலும். ஆனால், ஒரு தோல்வி ஏற்பட்டால், அதைத் தாங்கும் திறமையும் ஆற்றலும் அவருக்கு இல்லாமல் போகலாம்.

எனவே, நாம் எத்தனைதான் சாதித்து வாழ்ந்தாலும் கர்த்தர் நம் வாழ்விற்கு மிக மிகத் தேவை. எங்காவது சறுக்க நேரிடும். எங்காவது இழக்க நேரிடும். எங்காவது தடுக்கப்பட நேரிடும். அதுபோன்றதோர் காரியம் நிகழும் போது, இதுவரை அடைந்த சாதனைகளைக் கொண்டு அதனை எதிர்கொள்ள இயலாது. நம்முடைய சக்திக்கும் புத்திக்கும் அப்பாற்பட்டுச் செயல்படும் ஒரு வல்லமை தேவைப்படும். அந்த வல்லமை கர்த்தரிடம் மட்டுமே உண்டு. எனவே, கர்த்தரின் தேவையைக் குறித்த உணர்வுகள் நமக்கு வரும்போது, கர்த்தரை அண்டிக்கொண்டு அவருடன் வாழ முன்வரவேண்டும்.

சிந்தனைக்கு...

விழுந்து விடுவேனோ என்ற பயத்தை விட்டுவிடு.
விழுந்துவிட வாய்ப்புண்டு என்ற எச்சரிக்கையை விட்டுவிடாதே.

செப்டம்பர் 8

நெருக்கடி வரும் முன்பே

எரேமியா 22:18-30

நீ சுகமாய் வாழ்ந்திருக்கையில் நான் உனக்குச் சொன்னேன்.
எரேமியா 22:21

கஷ்டம், துன்பம், தோல்வி, ஏமாற்றம், வியாதி என்பது போன்ற சூழ்நிலைகள் வருகிறது. இவைகளைத்தான் நாம் கர்த்தரிடம் வருவதற்கான வாய்ப்புகளாகத் தேவன் வைத்திருக்கின்றார் என்று நாம் எண்ணக்கூடாது. பிரச்சினைகள், கஷ்டங்கள், தீரா வியாதிகள் வரும் போது, கர்த்தரை அண்டிக் கொள்ள எவருக்கும் ஒரு தூண்டுதல் ஏற்பட முடியும். அது போன்ற நேரங்களில், கர்த்தர் பெரிய காரியங் களைச் செய்வார் என்ற பெரிய விசுவாசமும் ஏற்பட முடியும். ஆனால், இது போன்ற வேளைகளில் வருகின்ற விசுவாசமும், தேவ சார்பும், சந்தர்ப்பவாதமாகவும், சுய நலன் சார்ந்ததாகவும் இருக்க முடியும்.

அநேகர் ஒரு நெருக்கடி வந்தால் மட்டுமே கர்த்தருடைய சகாயம் எவ்வளவு தேவை என்று உணருகின்றனர். இது உண்மையில், கர்த்தரிடத்திலிருந்து ஒவ்வொரு மனிதனும் பெற வேண்டிய, பிரதானமான சகாயத்தை நோக்கமாகக் கொள்ளாமல், நாம் விரும்பினதைப் பெறுவது தொடர்பானதாக மட்டுமே உள்ளது. கர்த்தரிடமிருந்து பெற வேண்டிய உண்மையான சகாயம் அல்லது நன்மை எது? பாவ விடுதலையும், பரிசுத்த வாழ்வுமே பிரதான நன்மைகள்.

சிலர் ஆபத்துக் காலத்தில் மட்டுமே ஆண்டவரைத் தேடுவார்கள். தேடினதின் பலனைப் பெற்றாலும், கர்த்தரிடத்திலிருந்து பெற வேண்டிய பிரதானமான இரட் சிப்பைப் பெறுவதில்லை. அதற்குப் பதிலாகச் சற்றுப் பக்தியோடு வாழ்கின்ற ஒரு உணர்வை மட்டும் பெற்றுக் கொள்கின்றார்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. கர்த்தரைத் தேடுவது என்பது அவசரகாலத் தேடுதலாக மட்டும் இருக்கக் கூடாது. நாம் நன்றாக வாழ்கின்ற போது தேவனுடைய சகாயத்தைப் பெறுவதற்கு, நிறையக் கண்டிப்பான தேவைகள் இருப்பதை உணர வேண்டும்.

ஒருவருக்குள்ளிருக்கும் பாவமும், நற்குணமற்ற மனமும், பரிசுத்த தேடலற்ற இருதயமும், கர்த்தரைத் தேடுவதற்கு வலிமையான காரணங்களாக உள்ளன. ஆவிக்குரிய அவசியமான நன்மைகளை எப்பொழுது அலட்சியம் செய்துவிட்டு, ஏதாவது ஒரு நெருக்கடி வந்ததும், உம்மையன்றி வேறு கதி இல்லை என்று ஓடுவது, மேன்மையான ஒன்று அல்ல.வாழ்க்கை எந்த ஒரு நேரத்திலும் நாம் எதிர்பாராத ஒன்றைக் காணச் செய்வதற்கான இயற்கை உடையதே. எனவே, நெருப்புப் பற்றின பிறகு எங்கே தண்ணீர் என்று ஓடுவதற்குப் பதிலாக, ஏற் கெனவே ஒரு ஆயத்தத்தோடு இருப்பதே ஞானம்.

சிந்தனைக்கு...

விழுந்த பின்பு தூக்கிவிடக் கர்த்தரைத் தேடுவது அல்ல,
விழுந்துவிடாதபடி நடத்துவதற்குக் கர்த்தரைத் தேடு.

செப்டம்பர் 9

உறவா? விசுவாசமா?

ரோமர் 8:17-32

மற்ற எல்லாவற்றையும் அருளாதிருப்பது எப்படி?
ரோமர் 8:32

எவ்வளவு நேரம் ஜெபம் செய்கிறீர்கள் என்பது அல்ல. எவ்வளவு பெரிதாக விசுவாசிக்கிறீர்கள் என்பதே முக்கியம் என்பார். ஒருவர் எவ்வளவு ஜெபத்தில் மன்றாடுகிறீர்கள் என்பது முக்கியமல்ல, எவ்வளவு வலிமையாய் வாயினால் விசுவாச வார்த்தை பேசுகிறீர்கள் என்பதே முக்கியம் என்பார். அவரைப் பொறுத்தவரை நாம் எவ்வளவு பெரிதாய் விசுவாசிக்கிறோமோ, அவ்வளவு பெரிதாக அடைவோம் என்பதே நம்பிக்கை. அதேவேளையில், தன்னை ஒரு தேவனுடைய பிள்ளை என்று நம்புகின்ற நம்பிக்கை அவருக்கு மிகக் குறைவு.

விசுவாசம் என்பது இரண்டு வகை. ஒன்று, நாமாக நமக்குள் ஏற்படுத்திக் கொள்கின்ற விசுவாசம். இன்னொன்று, நமக்குள் கர்த்தருடைய ஐக்கியத்தினால் ஏற்படுகின்ற விசுவாசம். நாமாக நமக்குள் ஏற்படுத்திக் கொள்கின்ற விசுவாசம் சுயமுயற்சி சார்ந்தது. தேவ உறவு நமக்குள் ஏற்படுத்தும் விசுவாசம், ஆவியினால் நமக்குள் ஏற்படுகின்ற ஒன்று. அதுதான் உண்மையான விசுவாசம்.

நல்லவர் ஒருவர் நல்லது நமக்குச் செய்வார் என்று நாம் நம்புவதால், நல்லது செய்ய அவரைக் கட்டாயப்படுத்தி விடாது. நல்லதை எதிர்பார்க்கும் நபருக்கும், நல்லது செய்வார் என்று நம்பப்படுகிற நபருக்கும் இடையே ஒரு தொடர்பும், உறவும் தேவை. அந்த உறவு இருந்தால், விசுவாசம் இரண்டாவது இடத்திற்குப் போய்விடும். அந்த உறவே அந்த நபரை நல்லது செய்யத் தூண்டும். ஒரு மகன் தகப்பனின் உறவுடன் வாழும் போது, அவனுடைய தேவைகள் சந்திக்கப்படுவது அவனுடைய விசுவாசத்தால் அல்ல. தகப்பனோடுள்ள உறவினால்தான் அவனுடைய தேவைகள் சந்திக்கப்படுகிறது.

அந்த மகன் தினமும் தகப்பன் தனக்குத் தேவையான எல்லாவற்றையும் தருவார் என்று நம்புவது விசுவாசத்தின் அடிப்படையில் அல்ல. அது தகப்பனோடுள்ள ஐக்கியத்தின் விளைவானது. இன்று என் தகப்பனால் என் தேவைகள் யாவையும் சந்திப்பேன், என்று அவன் விசுவாச அறிக்கை செய்யத் தேவையில்லை. தகப்பனுக்குத் தான் பிள்ளை என்ற அறிவும், தகப்பனோடுள்ள இயற்கையான உறவும், அவனுக்கு அந்த நம்பிக்கையைக் கொடுக்கும். ஆம், நாம் பிள்ளைகளாயிருப்பது உறுதியானால், தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்பதும் உறுதிப்பட்டதே.

சிந்தனைக்கு...

பரலோகத்தில் இருக்கிற கர்த்தரை நம்புவது மத நம்பிக்கை.
உனக்குள் இருக்கிற கர்த்தரை நம்புவது இறை நம்பிக்கை.

செப்டம்பர் 10

யாரும் பாராட்டவில்லை

எண்ணாகமம் 12:1–16

என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்.
எண்ணாகமம் 12:7

பிறர் நம்மைப் பாராட்டினால் நல்லதே. அது இன்னும் நல்லதைச் செய்யவும், நல்லவர்களாய் வாழவும் நம்மை உற்சாகப்படுத்தும். ஆயினும், சில விஷயங்களுக்காக நாம் பாராட்டப்படுவோம் என்று எதிர்பார்க்க முடியாது. சிலர் நம்மிடம் நல்ல விஷயங்களைக் கண்டாலும், அவர்களின் குறுகின மனநிலை நம்மைப் பாராட்ட அனுமதியாது. சிலநேரம், நாம் மிக நல்லதாக எண்ணுகின்ற விஷயம், அவர்களுக்கு ஒரு முக்கிய விஷயமாயிராது.

இது போன்ற சூழலில் யாரும் நம்மைப் பாராட்டவில்லையே, யாரும் நம்மை ஊக்குவிக்கவில்லையே என்று சிந்திக்கக் கூடாது. நாம் செய்கின்ற ஒன்று சிறந்தது என்றும், பாராட்டத்தக்க ஒன்று என்றும் நாம் அறிந்திருந்தால், பிறரின் பாராட்டை எதிர்பார்க்கக் கூடாது. அப்படிப் பாராட்டாவிட்டாலும் அதனை நாம் நிறுத்திவிடக் கூடாது. ஏனென்றால், நாம் பிறருடைய பாராட்டிற்காக நல்லது செய்கிறோம் என்ற நிலைமை வரக்கூடாது.

ஒரு பெண் மிக மிகச் சுவையாகச் சமைப்பாளாம். ஆனால், அவளுடைய கணவன் அவளைப் பாராட்டவில்லையே என்று சோர்ந்து போய், மிக மிகச் சுமாராக சமைக்க ஆரம்பித்தாளாம். சில காலம் கடந்து, தன் பிள்ளைகளுக்காகச் சுவை யாகச் சமைக்க விரும்பிய போதிலும், அவளால் முன்னரைப் போல சிறப்பாகச் சமைக்க முடியாமல் போய்விட்டது. சிலர் திருமணத்திற்கு முன்பு, பலரால் பாராட்டும் விதமான சிறந்த ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்ந்ததாகச் சொல்வார்கள். ஆனால், குடும்ப உறவுகளால் ஏற்பட்ட மனச்சோர்வினால், பழைய அனுபவங்களை இழந்து போனதாகச் சொல்வார்கள். ஆனால், நல்ல மரம் யார் பாராட்டினாலும் சரி, பாராட்டாவிட்டாலும் சரி, நல்ல கனிகளைத்தான் கொடுக்கும்.

உண்மையையும், உத்தமத்தையும், நேர்மையையும், நியாயத்தையும் உலகம் பெரிய விஷயங்களாக எண்ணிப் பாராட்டாது. ஆனால், உலகம் நல்லதோர் மனதைக் கொண்டிராததால் அப்படி நடந்து கொள்கிறது. ஆனால், நம்முடைய மனம் அவற்றைப் பெரிதாக எண்ணிப் பாராட்டுகிறதா என்பதே முக்கியம். நம் முடைய மனம் அவற்றைப் பாராட்டுமானால், அவற்றை நாம் உறுதியோடு தொடர்ந்து செய்ய வேண்டும். மோசேயின் சிறந்த சாந்த குணத்தை எபிரெய மக்கள் பாராட்டவில்லை. ஆனால், தேவன் பாராட்டினார். அதுதான் முக்கியம்.

சிந்தனைக்கு...

மனிதர்கள் பாராட்டிவிட்டதால் நீ நல்லவன் அல்ல.
மனிதர்கள் பாராட்டாததால் நீ தீயவனும் அல்ல.

செப்டம்பர் 11

ஆசீர்வாதம் இல்லை. ஏன்?

கொலோசெயர் 2:1–12

அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.
கொலோசெயர் 2:10

ஒருவர் தான் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படாததைப் போல் உணர்ந்தால், அதன் காரணங்களை அறிய வேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் ஏன் இல்லை? ஜெபக்குறைவு காரணமா? காணிக்கை கொடாமை காரணமா? அவிசுவாசம் காரணமா? கீழ்ப்படியாமை காரணமா? சபை கூடி வராமை காரணமா? இவை எதுவும் ஆசீர்வாதமின்மையின் உண்மையான காரணங்கள் அல்ல. அப்படியென்றால் எது உண்மையான காரணம்?

ஒருவர் தேவ உறவுடன் வாழவில்லை என்பது மட்டுமே உண்மைக் காரணம் அல்ல. இங்கே கவனிக்க வேண்டியது ஒருவர் தேவ உறவுடையவரா இல்லையா என்பது அல்ல. அவர் தேவ உறவுடையவராயிருப்பதோடு, அதற்கேற்றபடி வாழ்கின்றாரா என்பதே முக்கியம். தகப்பனோடு நல்லுறவுடன் வாழாவிட்டாலும் உறவு போய்விடாது. ஆனால், உறவினால் கிடைக்க வேண்டிய ஆசீர்வாதம் போய்விடும். சிலர் மனந்திரும்பியவர்கள்தான். அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள்தான். அவர்கள் தங்களைத் தேவனுடைய பிள்ளைகள் என்று நம்புகின்றவர்கள்தான்.

ஆனால், தேவ உறவுடனும் தேவ ஐக்கியத்துடனும் வாழ்வதில் அவர்கள் விழிப்பாகயில்லை. தேவ ஐக்கியத்தோடு வாழ்கின்ற ஒரு அனுபவத்தின் பின்னணியில்தான், தேவ ஆசீர்வாதங்களை வாழ்க்கையில் அனுபவிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது என்பதை அவர்கள் உணரவில்லை. ஏதோ கடமைக்காகச் ஜெபித்தோம், கடமைக்காகப் பைபிள் படித்தோம், கடமைக்காகச் சபைக்கு போனோம் என்ற அளவில் வாழ்ந்தால், அது தேவ உறவை அனுபவித்து வாழ்கின்ற வாழ்க்கை அல்ல. கர்த்தருடைய ஐக்கியத்தில் வாழ்கின்றோம் என்ற ஆவிக்குரிய நிச்சயத்தைப் பெறுகின்ற அளவிற்கு, ஆவிக்குரிய செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

அப்படியானால் தேவ ஐக்கியத்தோடு வாழ்ந்திடப் போதிய கவனம் செலுத்தாதவர்களுக்கு, கர்த்தர் நன்மை செய்யாமல் நிறுத்திவிடுகிறாரா? அப்படியல்ல. தேவ ஆசீர்வாதங்கள் என்பது தேவன் ஏற்கெனவே ஆயத்தமாக்கி வைத்திருக்கின்ற ஒன்று. கிறிஸ்துவின் உறவை அனுபவிக்கின்ற ஒரு ஆவிக்குரிய பகுதிக்கு நாம் வரும் போது, ஆசீர்வாதங்கள் செயல்பட ஆரம்பிக்கின்றது. உதாரணமாகச் சமாதானம், சந்தோஷம், பரிசுத்தம் போன்ற ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவோடு இருக்கின்றன. அந்த கிறிஸ்துவின் தொடர்பை உணரும் விதமாக நாம் ஐக்கியம் தேடி வாழ்கின்றபோது, அவை நமக்குள் அனுபவிக்கப்பட வாய்ப்பு ஏற்படுகின்றன.

சிந்தனைக்கு...

தேவ உறவுதான் ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறது.
தேவனை நோக்கிய ஜெபங்கள்தான் அவற்றைக் கொண்டு வந்துசேர்க்கிறது.

செப்டம்பர் 12

ஆசீர்வாதம்தான் ஆவிக்குரிய வாழ்வா?

பிலிப்பியர் 2:12–30

தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ் செய்வதுபோல....
பிலிப்பியர் 2:22

பிரபலமான ஒரு போதகரின் எந்த ஒரு பிரசங்கமும் சொல்லுகின்ற செய்தி, ஆசீர்வாதம் தொடர்பானதாகவேயிருக்கும். தேவன் எவ்வளவு எவ்வளவு ஆசீர் வாதங்களை நமக்காக வைத்திருக்கின்றார், என்பதையே எந்த ஒரு தலைப்பில் பேசினாலும் அவர் சுட்டிக்காட்டுவார். ஆவிக்குரிய வாழ்க்கை என்றாலே, தேவனால் வரும் நன்மைகளை விசுவாசித்துப் பெறுவது சம்பந்தமான ஒன்று, என்பதே அவருடைய அனைத்து பிரசங்கங்களின் கருப்பொருள்.

ஆசீர்வாதங்கள் பெறுதலும், பிரச்சினைகளிலிருந்து விடுதலையடைதலும், வியாதிகளிலிருந்து குணமடைதலும், அற்புதகரமாக நன்மை பெறுதலுமே ஆவிக் குரிய வாழ்க்கையின் நோக்கங்களாக இருக்கக்கூடாது. முதலாவது, தேவனுக்குப் பிரியமாக வாழ்வது சம்பந்தமாகச் சிந்திக்க வேண்டும். முதலாவதாகத் தேவ நோக்கங் களை நிறைவேற்றுவது தொடர்பான ஒரு தரிசனத்தோடு செயல்பட வேண்டும். முத லாவது, தேவனுடைய திட்டத்தில் இணைந்து செயல்பட்டு, தேவ மகிமை விளங்கச் செய்வதே, ஆவிக்குரிய வாழ்க்கையின் பிரதான இலக்காக இருக்க வேண்டும்.

இதனுடைய பிரதிவிளைவுகளே தேவ நன்மைகளும் ஆசீர்வாதங்களும். ஆசீர்வாதங்களைத் தேடுதலே ஆவிக்குரிய வாழ்க்கையில் முக்கியச் செயல்பாடாக இருந்தால், பிற மதச் செயல்பாடுகளுக்கும் கிறிஸ்தவ மார்க்கச் செயல்பாடு களுக்கும் இடையே வித்தியாசம் எதுவும் இராது. இயேசுவின் போதனைகளை நன்கு கவனியுங்கள். அப்போஸ்தலர்களின் நிருபங்களைக் கவனியுங்கள். அங்கு நாம் வாசிப்பவை, இந்தப் பூமியில் தேவனுக்குப் பிரியமாக வாழ்வது தொடர்பான விஷயங்களே. ஆசீர்வாதங்களைத் தேடுவதும் அடைவதும் முக்கியச் செய்திகளாக அங்கு இல்லை.

ஒரு கம்பெனியில் வேலை செய்யச் செல்கின்றவன், தனக்குக் கிடைக்கப் போகும் சம்பளத்தையும், பிற சலுகைகளையுமே சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. அந்தக் கம்பெனியில் சிறப்பான ஒரு பணியாளனாக எப்படி எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைக் குறித்தே சிந்தித்துச் செயல்பட வேண்டும். ஏனென்றால், அந்த கம்பெனியின் பிரதான நோக்கம், அவனுக்குச் சம்பளம் கொடுத்து, அவனைச் சௌகரியமாக வைப்பது அல்ல. உண்மையான நோக்கம் அவனைப் பயன்படுத்தி ஒரு செயலை நிறைவேற்றுவதே.

சிந்தனைக்கு...

தேவனுக்காக நீ வாழ்வது உறுதி என்றால்,
உனக்காக தேவன் வாழ்வது உறுதி அற்றது அல்ல.

செப்டம்பர் 13

மூளையும் இருதயமும்

மத்தேயு 23:1–15

அவர்கள் செய்கையின்படி செய்யாதிருங்கள்.
மத்தேயு 23:3

போதகர் ஒருவர் மிக மிகச் சிறப்பாக வேதாகம ஆராய்ச்சிப் பாடம் நடத்தினார். அவர் வேத உண்மைகளை விளக்கிச் சொன்ன விதம், குறிப்பிட்ட ஒருவரை மிகவும் தொட்டுவிட்டது. இவ்வளவு சிறப்பாக வேத விஷயங்களைப் பேசுகின்ற ஒருவரோடு தனக்கு ஒரு நட்புக் கிடைத்தால், மிகவும் நல்லதாயிருக்கும் என்று எண்ணினார். அவரோடு பேசவும் பழகவும் ஆரம்பித்தார். ஆனால், விரைவிலேயே அவருடைய நட்பை விட்டு விலகிப் போனார்.

காரணம் என்ன? அவருடைய மூளையெல்லாம் வேத அறிவால் நிரம்பியிருந்தது. அவருடைய இருதயமோ பொய்யினாலும், கபடத்தினாலும், மாய்மாலச் சிந்தையாலும் நிரம்பியிருந்தது. இருதயத்தில் இருக்க வேண்டிய வேத விஷயங்கள் மூளையில் இருந்ததால், இருதயத்தைக் கள்ளமும் கபடமும் ஆக்கிரமித்து விட்டதைக் குறித்து அவர் கவலைப்படவில்லை. வேத அறிவும், ஞானமும் ஆவிக்கேற்ற இருதயத்திலிருந்து வருகிறதா அல்லது மனுஷீக மூளையிலிருந்து வருகிறதா என்று கவனிக்க வேண்டும்.

சிலர் தாழ்மையைக் குறித்து மிக மிகப் பிரசங்கித்துக் கொண்டே ,வாழ்க்கையில் பெருமையின் அடையாளங்களாக இருப்பார்கள். சிலர் அன்பைக் குறித்துக் கண்களிலிருந்து நீர்வரும் விதமாக உருகி உருகிப் பேசுவார்கள். ஆனால், வாழ்க்கையிலோ வெறுப்பையும் கசப்பையும் காட்டி ,பிறர் மனதை உடைத்து விடுவார்கள். ஏனென்றால், அவர்களின் மூளை பிரகாசித்தாலும், இருதயமோ இருளுக்குள் மூழ்கிக் கிடக்கின்றது. ஒரு சபை பாஸ்டர் நடத்தும் பைபிள் ஸ்டடிக்கு பிற சபைகளிலிருந்துகூட ஆட்கள் வருவார்களாம். ஆனால், அவருடைய மனைவி மட்டும் வரமாட்டாராம்.

ஏனென்றால், அவருடைய மூளையிலிருந்து வரும் வேத அறிவு பலரைக் கவர்ந்தாலும், அவருடைய இருதயத்திலிருந்து வரும் வெறுப்பும் ஆணவமும், அவருடைய மனைவியைக் கசக்க வைக்கும். வேதாகம அறிவு மட்டும் போதாது. வேதாகமம் கூறுகின்ற நல்ல இருதயம் ஒருவருக்கு வேண்டும். இருதயம் தேவனை அறிந்தால் ஒருவரிடம் இருக்கும் வேத அறிவு அநேகருக்கு வெளிச்சமாயிருக்கும். வேத சத்தியம் இருதயத்தில் இருந்தால் போதனைகள் மட்டுமல்ல, அவருடைய வாழ்க்கை முறை அநேகருக்கு முன்மாதிரியாயிருக்கும்.

சிந்தனைக்கு...

நல்லவைகளைப் பேசுகின்றவர்களுக்குச் செவி கொடு.
நல்லவர்களாய் வாழ்கின்றவர்களைப் பின்பற்று.

செப்டம்பர் 14

கவலையை தாக்கணும்

மத்தேயு 6:25-34

முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும்...
மத்தேயு 6:33

சிலர் கவலையைத் தங்களுக்குள் தாங்கித் தாங்கிப் பழகிவிடுகின்றார்கள். சிலர் எப்போதுமே ஒரு அழுத்தமான மனநிலையிலும், சோகமான ஒரு மனநிலை யிலேமே இருப்பார்கள். இவர்களை எப்பொழுது பார்த்தாலும் அதே விதமான ஒரு அழுத்தமான உணர்வுடனேயே காணப்படுகின்றனர். இவர்களின் இருதயத்தில் சில கவலைகள் பல ஆண்டுகளாக இருக்கின்றன. இவர்களுடைய இருதயத்தில் பல ஆண்டுகளாக சில சோகங்கள் அப்படியே இருக்கின்றது.

சிலருக்கு விரும்பியவிதமான வாழ்க்கைத் துணைவர் அமையாமல் போன கவலை. சிலருக்கு எதிர்பார்த்த வேலை கிடைக்காத கவலை. சிலருக்குச் செய்ய நினைத்த தொழிலைச் செய்ய வாய்ப்பின்றிப் போன கவலை. சிலருக்குச் சொந்த மாக ஒரு வீடு கட்ட இயலாமல் போன கவலை. சிலருக்கு மகனை மகளை டாக்டருக்குப் படிக்க வைக்க முடியாமல் போன கவலை. இந்த விதமாக அநே கருக்கு பல பல கவலைகள். இந்தக் கவலைகள் கலைவதுமில்லை கரைவது மில்லை. யாரிடம் மனந்திறந்தாலும், இவர்கள் இந்தக் கவலைகளின் கதைகளைத் தான் திரும்பத் திரும்பச் சொல்வார்கள்.

கவலைகளை நாம் தாங்கக்கூடாது. அவைகளை நாம் தாக்கி அழிக்க வேண்டும். சிலருக்குத் தங்களின் கவலைகளை எங்காவது உட்கார்ந்து, நினைத்து நினைத்துப் பார்ப்பதில் ஒரு விதமான திருப்தி உண்டு. கவலைகளை நமக்குள் தக்க வைப்பது அல்ல. அவைகளை நம்மிடமிருந்து துரத்த வேண்டும். ஆனால் பிரச் சினை என்னவென்றால், கவலைகளை எதிர்க்கவோ, தாக்கவோ, துரத்தவோ இவர் களால் முடியாது. துரத்திவிட்டாலும் சுவற்றில் அடித்த பந்துபோல திரும்ப வந்து விடும். ஏனென்றால், மனித மனம் கவலைகள் எதிர்மறையானவை என்று அறிந் திருந்தாலும், அவற்றை எதிர்க்கும் ஆற்றல் அற்றது.

எனவேதான் ஆண்டவராகிய இயேசு, முதலாவது தேவனுடைய இராஜ் யத்தைத் தேடுங்கள் என்றார். தேவனுடைய இராஜ்யம் நமக்குள் ஸ்தாபிக்கப் பட்டால், அவருடைய ஆளுகை நமக்குள் நடக்கும். அந்த ஆளுகை வரும் போது, மனதில் சமாதானமும், சந்தோஷமும், நம்பிக்கையும், தைரியமும் ஆளுகை செய்யும். அங்கே கவலை கரைந்து விடும். அங்கே கவலை கட்டுப்பாட்டிற்குள் வரும். கர்த்த ரோடுள்ள நம்முடைய நல்ல உறவும் ஐக்கியமும் அதிகரிக்க அதிகரிக்க, கவலை களினால் வரும் அழுத்தமும், சோகமும், சோர்வும் மறைந்து போகும்.

சிந்தனைக்கு...

சிலரைக் கவலைகள் விட மறுக்கிறது.
சிலர் கவலையை விட மறுக்கின்றனர்.

செப்டம்பர் 15

ஐக்கியமே அவசியம்

ரோமர் 8:9–25

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று...
ரோமர் 8:16

சிலரிடம் வலிமையான விசுவாசம் உள்ளது. ஆனால், வலிமையான ஜெப அனுபவம் இல்லை. சிலரிடம் நன்றாகச் ஜெபிக்கும் பழக்கம் இருக்கிறது. ஆனால், அவர்களிடம் விசுவாசம் இல்லை. விசுவாசிக்கின்றவர்களிடம் ஏன் ஜெப அனுபவம் இல்லை? ஜெபிக்கும் அனுபவம் உடையவர்களிடம் ஏன் விசுவாசம் இல்லை? இரண்டு பிரிவினரிடமும் தேவனோடு ஐக்கியமாயிருக்கும் அனுபவமில்லை. இரண்டு பிரிவினரும் பக்திச் செயல்களாகவே சிலவற்றைச் செய்கின்றனர். சிலருக்கு விசுவாசித்து விட்டால் எல்லாம் நடக்கும் என்ற நம்பிக்கை. சிலருக்கு ஜெபித்து விட்டால் எல்லாம் கிடைக்கும் என்ற நம்பிக்கை.

ஆனால், உண்மையில் எது நம்பிக்கை? அது கர்த்தராகிய இயேசு என்னோடு இருக்கின்றார் என்ற நிச்சயம் சார்ந்த உண்மையான நம்பிக்கைதான். நாம் தேவன் இப்படிச் செய்வார் என்று வலிமையாக நம்புவதைப் பார்த்துச் செயல் படமாட்டார். தேவன் நாம் விடாப்படியாக மன்றாடுகின்றோமே என்பதற்காகச் செயல்பட மாட்டார். தேவன் நாம் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு வழியாகக் காட்டியிருப்பது அவருடன் நாம் ஏற்படுத்தும் அப்பா பிள்ளை என்ற உறவே.

நாம் அப்பா பிள்ளை உறவு சார்ந்து செயல்பட்டுக் கொண்டு விசுவாசிக்க வேண்டும். நாம் தேவன் நமக்குத் தந்தையாயிருக்கின்றார் என்ற நிச்சயத்தின் பின்பலத்தோடு ஜெபிக்க வேண்டும். தேவன் நமக்கு அளித்த உறவைப் பயன் படுத்தி ஆசீர்வாதங்களைத் தேட வேண்டும். சிலர் தேவ உறவை வாழ்வில் உறுதிப் படுத்தி, நம்பிக்கை பெறுவதற்கேதுவான ஜெபப் பழக்கத்தைக் கொண்டிருப்ப தில்லை. சிலர் கர்த்தரோடுள்ள உறவை அனுபவிப்பதற்கு ஏதுவாகச் ஜெபத்தைப் பயன்படுத்துவதில்லை.

அநேகர் தங்களின் பக்தித் தன்மை கொண்ட செயல்களைத்தான் அதிகமாக நம்புகின்றார்கள். நான் விசுவாசிக்கிறேன், நான் ஜெபிக்கிறேன், நான் ஆரா திக்கிறேன், நான் கீழ்ப்படிகிறேன் என்று சொல்லத்தக்கதாகச் சில பக்திச் செயல் களைச் செய்கின்றனர். அதே வேளையில், நான் கர்த்தரோடுள்ள உறவை எனக்குள் உணரவும், உறுதிப்படுத்தவும் தக்கதான காரியங்களில் ஈடுபடுகிறேன், என்று அவர்களால் சொல்ல இயலாது. ஒரு மகனுக்கு அப்பாவின் மேல் நம்பிக்கை தேவை. ஆயினும், அவன் தனக்குத் தேவையானதைப் பெறுவது, தந்தை மகன் என்ற உறவின் விளைவாகத்தான்.

சிந்தனைக்கு...

விசுவாசம் இல்லாத ஜெபம் பயனற்றது.
ஜெபமற்ற விசுவாசம் பெலனற்றது.

செப்டம்பர் 16

செலவில்லாத அன்பு

1 யோவான் 3:14–24

கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்.
1 யோவான் 3:18

குறிப்பிட்ட ஒருவருக்கு மிகவும் அன்பானவர் என்ற நற்சாட்சி உண்டு. அவரை ஒரு முறை சந்தித்த எவரும் அதற்கு பின்பு, அவரை மிகவும் அன்பான ஒருவர் என்றே அடையாளப்படுத்த முடியும். அவருடைய இல்லத்திற்கு வருகின்ற எவரையும் மிகுந்த புன்னகையோடும், அன்பு மிகுந்த வார்த்தைகளோடும், கலகலப்பான செயல்களோடும் விரும்பி ஏற்றுக்கொள்வார். யாரைக் கண்டாலும் சிரித்த முகத்துடனும், இனிய வார்த்தைகளோடும், மிகுந்த அக்கறையோடும் விசாரிப்பார். ஆனால், ஐந்து பைசாகூட செலவில்லாமல் பிறரை நேசிப்பது எப்படி என்று ஒரு புத்தகம் எழுதினால், இவரைத் தவிர வேறு யாரையும் தகுந்த மாதிரி யாகக் காட்ட முடியாது.

ஏனென்றால், அன்பாக சிரித்துச் சிரித்துப் பேசிப் பழகும் இவர், யாருக் காகவும் ஒரு ரூபாயைக்கூட கொடுக்க முன்வரமாட்டார். சிலருடைய அன்பினால் நமக்கு எந்தப் பிரயோஜனமும் கிடைக்காது. அன்பான ஒரு பழகும் முறையைத் தவிர அன்பை உண்மை என்று காண்பிக்கும் எந்த ஒரு செயலும் அவர்களிடம் இராது. இவர்கள் செலவேதும் செய்ய த் தேவையில்லாத, ஒரு அன்பின் முறையைப் பின்பற்றுகிறார்கள்.

ஆனால், அன்பு என்பது சிரித்துப் பேசுவதும் அன்பொழுக பேசுவதும் அல்ல. அன்பிற்காக நாம் சில செலவுகளைச் செய்ய வேண்டும். சில கஷ்டங்களையும் நஷ்டங்களையும் ஏற்க வேண்டியது வரும். இயேசு தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்தார். அன்பை வெளிப்படுத்தினார். அன்பு என்பது எல்லா வேளையிலும் இலகுவான ஒன்றல்ல. அதற்காகச் சில பாரங்களைச் சுமக்க நேரிடும். அன்பை உறுதிப்படுத்த சில தியாகங்களைச் செய்ய நேரிடும். எரிகோவுக்குச் செல்லும் சாலையில் குற்றுயிராய்க் கிடந்த மனிதனுக்கு சமாரியன் காண்பித்த அன்பு செல வற்ற அன்பு அல்ல. தன்னுடைய பயணத் தேவைகளுக்காக இருந்தவைகளை, அவன் அந்த மனிதனுக்காகத் தியாகமாகச் செலவிட்டு, தன்னுடைய அன்பின் வலிமையைக் காண்பித்தான்.

சிலர் மற்றவர்களின் கஷ்டங்களையும் பிரச்சினைகளையும் கேட்டு, அவர் களோடு சேர்ந்து பரிதாபப்பட்டு அழுவார்கள். ஆனால், அவர்களுடைய கஷ்டத்திற்கு ஒரு சிறு உதவியைத் திராணியிருந்தும் செய்யமாட்டார்கள். வசனத்தினாலும் நாவி னாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூர வேண்டும் என்று வேதம் சொல்கிறது. (1 யோவான் 3:18)

சிந்தனைக்கு...

அன்பில்லாமலே அள்ளி அள்ளித் தர முடியும்.
எதையும் தராமலே அன்புடையவர்களாக இருக்க முடியாது.

செப்டம்பர் 17

போராடுவது எங்கே?

எபிரெயர் 12:1–16

பாவத்திற்கு விராதமாய்ப் போராடுகிறதில்...

எபிரெயர் 12:4

அநேகர் ஆசீர்வாதங்களுக்காகக் கர்த்தரோடு போராடுகிறார்கள். அவர்கள் யாக்கோபைப் போல போராடிச் ஜெபிக்கிறார்கள். அவர்கள் யோசபாத்தைப் போலக் கூட்டம் கூடி, உபவாசித்துச் ஜெபிக்கின்றார்கள். அவர்கள் அன்னாளைப் போல அழுது மன்றாடி ஜெபிக்கின்றார்கள். நோக்கம் என்னவென்றால், எப்படியாவது கர்த்தரை மனதுருக வைத்து, நம்மை ஆசீர்வதிக்கச் செய்ய வேண்டும். ஆனால், நாம் தேவனுடைய பிள்ளைகள். அவரோடு போராடி, விடாப்பிடித்தனம் காண்பித்து, அவரிடமிருக்கிற ஆசீர்வாதங்களைப் பெறத் தேவையில்லை.

உண்மை என்னவென்றால், தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குரிய நன்மைகளை, ஏற்கெனவே ஆயத்தமாக வைத்துள்ளார். அவரிடம் கெஞ்சி, மன்றாடி, அழுது கூக்குரலிட்டு அவற்றைப் பெறத் தேவையில்லை. நமக்குரிய நன்மைகளும் ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள் ஆயத்தமாக உள்ளன. (எபேசியர் 1:3) இதனை நாம் அனுபவிக்க மூன்று விஷயங்கள் வேண்டும். ஒன்று. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிற நம்பிக்கை நமக்கு வேண்டும். (யோவான் 1:12) இரண்டு: பிள்ளைகளானால் சுதந்திரருமாமே என்ற உண்மையை விசுவாசிக்க வேண்டும். மூன்று: நாம் தேவன் நமக்குக் கொடுத்த கிறிஸ்துவோடிருக்கின்ற நிச்சயம் வேண்டும்.

இங்குதான் சில பிரச்சினைகள். இவ்வித மூன்று விஷயங்கள் சரியாயிருந்தால், ஆசீர்வாதங்கள் அங்கே நமக்கு ஆயத்தமாகவே உள்ளது. ஆனால், மேற்கண்ட மூன்று ஆவிக்குரிய அனுபவங்களில் இராதபடி பாவம், சுயம், உலகம், சாத்தான் என நான்கு விஷயங்கள் செயல்படும். நாம் பாவத்தாலோ, சுயத்தாலோ, உலகத்தாலோ, சாத்தானாலோ இழுக்கப்பட்டால், நம்மை நாம் தேவனுடைய பிள்ளைகளாக நம்பி உணர முடியாது. அப்போது நாம் தேவ ஐக்கியத்தில் இருக்கிறவர்களாக விசுவாசிக்க முடியாது. பிள்ளைகளானால் ஆசீர்வாதங்களுக்குச் சுதந்திரர்கள் என்ற தேவ வார்த்தையை நம்பி, அதனைச் சார்ந்து நிற்க முடியாது.

இங்கேதான் பாவத்திற்கு எதிராகவும், சுயத்திற்கு எதிராகவும், உலகப்பிரகாரமான ஈர்ப்புகளுக்கு எதிராகவும், ஆவிக்குரிய ஆயுதங்களை எடுத்துப் போராட வேண்டும். அதன் மூலம், நம்மை நாம் தேவனுடைய பிள்ளைகளாக நிலைநிறுத்த முடியும். நாம் தேவ ஐக்கியத்தில் இருக்கிற நிச்சயத்தைப் பெறுவோம். நாம் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே என்று நம்பி தேவன் நமக்காக ஆயத்தமாக வைத்துள்ள ஆசீர்வாதங்களைச் சுதந்தரிப்போம்.

சிந்தனைக்கு...

ஆசீர்வாதங்களைப் பெற ஆண்டவரிடம் போராடத் தேவையில்லை.
ஆனால், ஆசீர்வாதங்களைத் தடுக்கும் சாத்தானை எதிர்த்துப் போராடணும்.

செப்டம்பர் 18

பக்தியே தடை

லூக்கா 18:1–14

வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன்.
லூக்கா 18:12

பாவம் ஆசீர்வாதங்களுக்குத் தடையாக வரும் என்பது எல்லாருக்கும் தெரிந்த உண்மை. ஆனால், பக்தியும் ஆசீர்வாதங்களுக்குத் தடையாக வரும் என்பதைப் பலர் அறிவதில்லை. ஆவிக்குரியவர்களாக தங்களை நம்புகின்ற பலரிடம் இருப்பதுப் பக்தி அனுபவம் தானேயன்றி பரிசுத்த அனுபவம் அல்ல. தேவன் நம்மை அழைப்பது பரிசுத்த வாழ்விற்குத் தானேயன்றி, பக்தி வாழ்க்கைக்காக அல்ல.

பக்தி உடையவர்கள் உணர்வுப்பூர்வமாகத் தேவனைக் குறித்த உயர்ந்த மரியாதையையும், கனத்தையும் உடைவர்களாயிருப்பார்கள். அவர்கள் பக்தியாய்ச் ஜெபித்தும், வேதம் வாசித்தும், ஆராதனை செய்தும் தங்களை நல்ல பக்தர்களாக உணருவார்கள். அவர்கள் பல பக்தி நெறிமுறைகளையும் பின்பற்றுவார்கள். இவ்விதமாக தங்களைத் தேவ பக்தியுடையவர்களாக உணர்ந்து, தேவ ஆசீர்வாதங்களை எதிர்பார்ப்பார்கள்.

ஆனால், தேவன் எதிர்பார்ப்பது என்ன? கர்த்தராகிய இயேசுவை நாம் இரட்சகராகப் பெற்றுப் பாவத்திலிருந்து நாம் விடுதலையாக்கப்பட்டுவிட்ட அனுபவத்தைப் பெற வேண்டும். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதை விசுவாசித்துப் பரிசுத்தத்தைப் பிரதிபலிக்க வேண்டும். நாம் பக்தியாக பல விஷயங்களைச் செய்வதை வைத்து நம்மைப் பக்தியானவர்கள் என்று எண்ணுவதல்ல. நாம் பரிசுத்தமான குணாதிசயங்களைக் கொண்டிருப்பதால், பக்தியானவர்கள் என்று எண்ண வேண்டும். நாம் தேவாலயத்திற்குப் போய் ஆராதனையில் ஈடுபடுவதால் பக்தியானவர்கள் என்று எண்ணுவதல்ல. நாம் தேவனுக்கு ஆலயமாயிருப்பதை உணர்வதின் அடிப்படையில், பக்தியானவர்கள் என்று எண்ண வேண்டும்.

இவ்விதமான ஒரு ஆவிக்குரிய அனுபவம், தேவன் நமக்காகத் திட்டம் பண்ணி வைத்திருக்கின்ற ஆசீர்வாதங்களுக்கு நம்மைக் கொண்டு செல்லும். ஆனால், நாம் பக்தியாகப் பல காரியங்களைச் செய்வதை அடிப்படையாக வைத்து பக்திமான்கள் என்று நம்பினால், அதுவே ஆசீர்வாதங்களுக்குத் தடையாக மாறும். சிலரால் தங்களின் பக்திச் செயல்களைச் சாதாரணமாக எண்ண இயலாது. இவ்வளவு பக்தியான தங்களைக் கர்த்தர் எப்படிக் கண்டு கொள்ளாமல் போக முடியும் என்று எண்ணுவார்கள். இந்த சிந்தையே அவர்களை ஆசீர்வாதங்களை விட்டு வெகுதூரமாக்கிவிடும்.

சிந்தனைக்கு...

நாம் விரும்பிச் செய்வது பக்தி.
தேவன் விரும்புவதைச் செய்வதே பரிசுத்தம்.

செப்டம்பர் 19

முதல் மன்னிப்பு

1 யோவான் 3:1–10

அவன் தேவனால் பிறந்தபடியால் பாவஞ் செய்யமாட்டான்.
1 யோவான் 3:9

பாவத்தை மன்னிக்கும் கர்த்தரைக் குறித்து ஒருவர் சிறப்பாகப் பிரசங்கித்தார். அதனைக் கேட்ட ஒருவர் உணர்வடைந்து கண்ணீர்விட்டார். அதைப் பார்த்த போதகர் அவரின் அருகில் சென்று உங்களுக்காகச் ஜெபிக்கலாமா என்று கேட்டார். அதற்கு அந்த மனிதர் நான் ஏற்கெனவே பலமுறை பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்புப் பெற்றவன். ஆனால், திரும்பத் திரும்ப நான் பாவத்தில் விழுகின்றேன். எனவே, இன்னுமொருமுறை கர்த்தர் என்னை மன்னிப்பார் என்ற நம்பிக்கையும் போய்விட்டது இனியும் நான் பாவம் செய்யாமல் வாழ முடியும் என்ற நம்பிக்கையும் போய்விட்டது என்றார்.

அவரைக் குறித்து சில விஷயங்களைக் கேட்டறிந்த போதகர், அவருக்கு ஒரு உண்மையைச் சொன்னார். நீங்கள் இன்னும் இயேசுவிடமிருந்து முதல் முறை பெற வேண்டிய மன்னிப்பைப் பெறவில்லை. அதனால்தான், நீங்கள் எத்தனை முறை மன்னிப்புப் பெற்றாலும், மறுபடியும் மறுபடியும் பாவத்தில் விழுகிறீர்கள் என்றார். அது உண்மைதான். அநேகர் தாங்கள் எத்தனைமுறை மனந்திரும்பி வந்தாலும், மறுபடியும் விழுந்திட நேரிடுகிறது என்று கூறுவார்கள். ஆனாலும், அவர்கள் அதுவரை மனந்திரும்பின அனுபவமோ, மறுபடியும் பிறந்த அனுபவமோ பெறவில்லை.

ஒருவர் உண்மையான மனந்திரும்புதலின் அனுபவத்தோடு கிறிஸ்தவராக வாழ்ந்திடத் துவங்கியிருந்தால், அவரிடம் மறுபிறப்பின் அனுபவம் கிரியை செய்யும். அவர் பரிசுத்த ஆவியின் பலத்தைப் பெற்றிருப்பார். அவர் தேவ உறவின் அனுபவத்தோடு பாவத்தைச் ஜெயிக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பார். அப்போது பாவம் அவரை மேற்கொள்ள இயலாது. (ரோமர் 6:14) தேவனால் பிறந்தவன் பாவம் செய்யமாட்டான் என்று வேதம் சொல்கிறது. அதாவது அவன் திரும்பத் திரும்பப் பாவத்தில் விழுகின்ற ஒரு அனுபவத்தில் தொடரமாட்டான்.

அநேகர் சில பக்தி வாஞ்சையான செயல்களுக்குள் வந்ததைக் கர்த்தரிடம் வந்த அனுபவமாக எண்ணி விடுகின்றனர். ஆனால், அவர்கள் உண்மையாகக் கர்த்தரைத் தங்களுக்குள் பெற்றுக் கொள்ளவில்லை. எனவே, சுய முயற்சியில் கொஞ்சகாலம் பக்தியோடு நடந்து கொள்கின்றனர். ஆனால், பாவக் காற்று பலமாய் வீசும் போது, எதிர்கொள்ள இயலாமல் சாய்ந்து விடுகின்றனர். எனவே, உண்மையான இரட்சிப்பின் அனுபவத்தைக் கர்த்தரிடமிருந்து பெற வேண்டும்.

சிந்தனைக்கு...

பாவம் உன்னை எதிர்த்துக் கொண்டேதானிருக்கும்.
நீ அதனைச் ஜெயித்துக் கொண்டேயிருக்கணும்.

செப்டம்பர் 20

சந்தேக வியாதி

1 கொரிந்தியர் 13:1–13

சகலத்தையும் விசுவாசிக்கும், சலத்தையும் நம்பும்.
1 கொரிந்தியர் 13:7

சந்தேகம் என்னும் நோய் சில கணவர்களின் இறுதிநாள் வரை தொடர் கிறது. சந்தேகம் என்ற பேய் சில மனைவிகளைக் கடைசிவரை கையகப்படுத்தி வைக்கிறது. குடும்பத்தில் யாராவது ஒருவருக்கு நோய் என்றாலும், அங்கிருக்கின்ற எல்லாருக்கும் சில பாதிப்புகள் உண்டு. கணவனோ மனைவியோ யாராவது ஒரு வரைச் சந்தேக வியாதி தொற்றினாலும் இருவருக்கும் கஷ்டம், ஒரு நபரை நீங்கள் சந்தேகித்தால், அவருக்கு அது ஒரு பெரிய வேதனை. அது போல, சந்தேகிக்கும் உங்களுக்கும் அந்த வேதனை உண்டு.

சில கணவன்மார்கள் சந்தேகத்தை விட்டு விலக விரும்பினாலும், சந்தேகம் அவர்களை விட்டு விலகாது. சில மனைவிமார்கள் இனி சந்தேகிக்கக் கூடாது என்று தீர்மானம் செய்வார்கள். ஆனால், சந்தேகம் இவர்களை விட்டுப் போகவே கூடாது என்று, ஏற்கெனவே பெரிய தீர்மானம் செய்து வைத்திருக்கும். என் மனைவி என்னைச் சந்தேகிப்பதை விட்டுவிட்டாள். ஆனால் அவள் என்னை சந்தேகிக் கிறாள் என்ற என் எண்ணத்தை என்னால் விட முடியவில்லை என்றாராம் ஒருவர்.

அநேகர் தாங்கள் சந்தேகித்தது சரிதான் என்று எண்ணும்படி என்றும் எதையும் பார்ப்பதில்லை. ஆனாலும், அவர்களால் தங்களின் வாழ்க்கைத் துணை களைச் சந்தேகிப்பதை விட்டுவிட முடியவில்லை. எனவே, சிலருடைய விஷயத்தில் இது ஒரு மனவியல் வியாதியாகவும், சிலருடைய விஷயத்தில் இது ஒரு பிசாசின் அலைக்களிப்பாகவும் உள்ளது. ஒரு தேவ பிள்ளை இது போன்ற பிரச்சனைக்கு அடிமையாக நேரிட்டதால், அது ஒரு விசித்திரமான விஷயம். ஏனென்றால், சத்திய வெளிச்சத்தில் வாழ வாய்ப்புப் பெற்ற ஒருவர், இல்லாத ஒன்றை இருப்பதை போலப் பார்க்க நேரிட்டால், அது ஒரு மோசமான அடையாளம்.

சமீபத்தில் முதிர்வயதை எட்டிவிட்ட ஒரு கணவர், தன் மனைவியை இள வயதின் நாட்களில் சந்தேகப்பட்டதைப் போல, இன்றும் சந்தேகப்படுகிறார் என்று ஒருவர் சொல்லக் கேட்டேன். எனக்குச் சிரிப்பு வந்தது. இப்படியுமா வயதானவர் களைச் சந்தேகிப்பார்கள் என்ற கேள்வி வந்தது. ஆனால், சந்தேக வியாதி ஒருவரை இறுகப் பாதித்துவிட்டால், அது வயது வரம்பு எதையும் பார்க்காது. சந்தேகம் யாருக்கும் வரும். ஆனால், ஒரு பூச்சியைத் துரத்தி விடுவதை போல துரத்திவிட முயற்சிக்க வேண்டும். யாரைக் குறித்தாவது சந்தேகம் வர ஆரம்பித்தால், துவக்கத் திலேயே கர்த்தரிடம் பேசி, அதிலிருந்து வெளியேறக் கிருபை கேட்க வேண்டும்.

சிந்தனைக்கு...

சந்தேகம் எளிதாக உள்ளே வந்துவிடும்.
ஆனால், எளிதாக வெளியே போகாது.

செப்டம்பர் 21

கடைசி இலையும் உதிர்ந்தது

ஆதியாகமம் 39:7-23

அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான்.
ஆதியாகமம் 39:20

சில மரங்கள் ஒரு பருவகாலத்தில் இலைகளை இழந்து கொண்டே யிருக்கும். ஒவ்வொரு இலையாக இழந்து ,இறுதியில் கடைசி இலையும் உதிர்ந்து போகும். ஆனாலும், எல்லாம் முடிந்து போய்விடவில்லை. அது ஒரு சீசன். அது தான் நடக்கும். ஆனால், அந்த சீசன் அப்படியே தொடருவதில்லை. அடுத்த சீசன் விரைவில் வரும். மறுபடியும் இலைகள் துளிர்த்து, பசுமை நிற மரமாக மாறிச் செழித்து நிற்கும்.

வாழ்க்கையும் அப்படியே. ஒன்றன்பின் ஒன்றாக நிறைய நடந்து, இறுதியில் இனி ஒரு நம்பிக்கையும் இல்லை என்ற நிலமைக்கு வந்துவிடலாம். ஆனாலும், எல்லாம் முடிந்துவிட்டது என்று அர்த்தம் அல்ல. இன்னும் சில துவக்கங்கள் வரும். அவைகள் தொடர்ந்து பல நல்ல விஷயங்களைக் கொண்டு வரும். இதற்குமேல் ஒன்றும் இருக்க வாய்ப்பில்லை என நாம் எண்ணலாம். ஆனால், தேவன் நம்மை இன்னொரு சூழலைக் காணச் செய்ய முடியும். அங்கே புதிய நம்பிக்கையும் புதிய நன்மைகளும் துளிர்க்க ஆரம்பிக்கும்.

யோசேப்பின் வாழ்க்கைச் சூழல் எகிப்தின் சிறைச்சாலைக்குள் அவனைக் கொண்டு சென்றது. அதற்குமேல் இனியொரு துவக்கமும், தொடர்ந்து நன்மையும் வரும் என்று எண்ணிப் பார்க்க எதுவும் இல்லை. ஆனால், ஒரு புதிய துவக்கம் வந்தது. அவன் கற்பனை செய்து பார்க்க இயலாத உயரத்திற்குச் சென்றான். சிக்லாக் என்ற இடத்தில் தாவீதின் கடைசி நம்பிக்கை என்ற இலையும் உதிர்ந்து விழுந்தது. ஆனால், மனிதப் பார்வையில்தான் அது இறுதிப் புள்ளி. தேவனுடைய பார்வையில் அங்குதான் ஒரு புதிய துவக்கம் நடைபெறப் போகிறதாக இருந்தது. அதுவே நடந்தது.

சரி, இதுபோன்ற ஒரு சூழ்நிலையில் நாம் இருந்தால் என்ன செய்ய வேண்டும்? ஒரு புதிய திருப்பத்தைக் காண என்ன செய்ய வேண்டும்? நிறையச் ஜெபம் செய்ய வேண்டுமா? ஏதாவது பொருத்தனை செய்யணுமா? உபவாசம் போட்டு மன்றாடணுமா? ஜெபக்கூட்டங்களுக்குப் போகணுமா? முதலாவது, கர்த்த ருடைய திட்டத்திற்குள் நாம் வரணும். நாமம் தேவனுடைய திட்டத்தில் இணைய வேண்டும். எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று மன்றாடும் முன்பு, தேவனே என் வாழ்வில் நீர் என்ன செய்ய விரும்புகிறீர் என்று கேட்க வேண்டும். தேவனுக்குச் ஜெபம், உப வாசம், காணிக்கை எல்லாவற்றைவிட, நம் வாழ்க்கை அவருடைய நோக்கத்திற்காகத் தரப்படுவதே தேவை. அங்கே புதிய துவக்கங்கள் உருவாகும்.

சிந்தனைக்கு...

வாழ்க்கையில் பல தோல்விகள் வரலாம்.
ஆனாலும், வாழ்க்கையே தோற்றுவிட்டது என்று அர்த்தம் அல்ல.

செப்டம்பர் 22

பிரச்சினைக்குக் காரணம்

1 பேதுரு 3:9–22

நன்மை செய்து பாடனுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.
1 பேதுரு 3:17

சில குடும்பங்களில் ஓயாத பிரச்சினைகளுக்கு மூல காரணமாயிருப்பது, கணவன் அல்லது மனைவி இருவரில் ஒருவரின் தவறான சுபாவங்களே. அதே வேளையில், அந்தக் குடும்பங்கள் அது போன்ற சுபாவக்குறைவுகளின் விளைவாக மிகுதியாகப் பாதிக்கப்படுவதின் மிக முக்கிய காரணம், கணவன் அல்லது மனைவி இருவரில் ஒருவரின் தவறுகள் அல்ல. அந்த இருவரும் தவறாக இருப்பதே அதன் காரணம். எப்படி? ஒருவரிடம் தவறான சுபாவங்கள் இல்லாமலிருக்கலாம். ஆனால், தவறுகளை அல்லது குறைகளைச் சகிக்கும் இருதயம் அவரிடம் இல்லா விட்டால், அங்கு பிரச்சினை வளரும்.

ஒருவர் தன்னுடைய தவறான சுபாவங்களின் விளைவாக மோசமாக நடந்து கொள்கின்றார். ஆனால், மற்றவர் தன்னிடம் பொறுமை, தாழ்மை, சாந்தம் போன்ற குணங்கள் இல்லாததால், பதிலுக்குப் பதிலாக நடந்து கொள்கின்றார். தீமையை சகிக்க முடியாததால் கொந்தளிக்கின்றார். அநீதியைப் பொறுக்க இயலாததால் பொங்கி எழுகின்றார். தீமையான செயலைத் தாங்கிக் கொள்ள இயலாததால், பதி லுக்குப் பதிலாக நடக்க விரும்புகின்றார். எனவே, தவறான சுபாவக்காரரால் உரு வான பிரச்சினை, தாழ்மை பொறுமை இல்லாதவரால், பெரிதாக்கப்படுகின்றது.

ஒரு வணிக வளாகத்தில் யாரோ ஒருவர் நெருப்பு வைக்கின்றார். வணிக வளாகம் பற்றி எரிகிறது. விசாரணை நடக்கும் போது, யாரோ ஒருவர் நெருப்பு வைத்தது மட்டுமே காரணமாகப் பார்க்கப்படுவதில்லை. நெருப்புப் பற்றி எரியும் போது, வணிக வளாகத்தில் ஏன் போதுமான நெருப்பு அணைக்கும் கருவிகள் இல்லை என்பதும் பார்க்கப்படும். ஆம், ஒருவர் தீமை என்னும் நெருப்பை எரிய விடும் போது, மற்றவரிடம் அந்த நெருப்பை அணைக்கத் தேவையான பொறுமை சகிப்புத் தன்மை, அமைதி போன்றவை தேவை. அவை இல்லாவிட்டால் இருவரும் குற்றவாளிகளே.

ஆம், தேவனுடைய பிள்ளைகள் தவறுகள் செய்யாமல் வாழ்வதோடு, தவறுகளைச் சகிக்கும் ஆற்றலோடும் வாழ வேண்டும். கோபமூட்டாதவர்களாக இருப்பதோடு, யாரோ கோபமூட்டும் போது, கோபத்திற்கு அடிமையாகாமலும் இருக்கவேண்டும். அநீதி செய்யாதவர்களாக அவர்கள் இருப்பதோடு, அநீதியைக் கண்டு பொங்கி எழாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

பிறருடைய தீய பண்புகளை மேற்கொள்ள,
நம்முடைய நற்பண்புகள்தான் மிகப் பெரிய ஆயுதம்.

செப்டம்பர் 23

தேவனை அறிதல்

அப்போஸ்தலர் 22:1–21

தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும்...
அப்போஸ்தலர் 22:14

சிலர் தேவனோடு சம்பந்தப்பட்ட காரியங்களை மிக மிக விரிவாக க் கற்று, இறையியல் வல்லுனர்களாக விளங்குகின்றனர். எந்த ஒரு வேதாகம சம்பந்தமான விஷயத்தைக் குறித்துக் கேட்டாலும் மிக சிறப்பான விளக்கம் தருவார்கள். அதே வேளையில், தேவனுக்கேற்றபடியான ஒரு வாழ்க்கையில் அவர்கள் எந்த அளவு தேறியிருக்கின்றார்கள் என்று பார்த்தால், ஏமாற்றமே மிஞ்சும். தேவனைக் குறித்து இவ்வளவு தெளிவாக அறிந்து வைத்திருக்கும் இவர்களால், தேவனுக்குப் பிரியமாக ஏன் வாழ இயலவில்லை என்பது முக்கியமான கேள்வி.

ஆனால், சிலருக்கு மிக ஆழமான வேத அறிவு கிடையாது. தேவனைக் குறித்த ஏராளமான தகவல்கள் அவர்களிடம் இல்லை. வேதாகம சம்பந்தமான இறையியல் விஷயங்கள் அவர்களுக்கு நிறையத் தெரியாது. ஆனால், அவர் களிடம் தேவ பயம் உண்டு. அவர்களிடம் தேவ அன்பு உண்டு. அவர்களிடம் தேவ னுடைய சத்தத்தைக் குறித்த அறிவு உண்டு. அவர்களுக்குத் தேவனுடைய பிரியங் களைக் குறித்துப் பகுத்தறிந்து செயல்படும் அறிவு உண்டு. அவர்கள் தேவனைக் குறித்து கொஞ்சமே அறிந்தவர்கள். ஆனால், அந்தக் கொஞ்சத்தை நேரடியாகத் தேவனிடத்தில் கண்டு அறிந்தவர்கள்.

அவர்கள் தேவ உறவைக் கண்டவர்கள். அவர்கள் இறையியல் வல்லுனர் களைப் போல, தேவனைக் குறித்து ஆயிரம் தகவல்களைப் பெற்றவர்கள் அல்ல. ஆனால், தேவனுடைய பார்வையில் எது சரி, எது தவறு என்பது அவர்களுக்குத் தெரியும். அந்த அறிவு மூளை அறிவு அல்ல. அது தேவ ஐக்கியத்தின் விளை வாகப் பெற்றது. அந்த அறிவு கர்த்தருக்கேற்றபடி அவர்களை மாற்றுகிறது. ஏனென்றால், அவர்கள் தேவ னுடைய பிள்ளைகளாக மறுபிறப்பின் அனுபவம் பெற்றவர்கள். அவர்களுக்குத் தேவன் தம்மை வெளிப்படுத்துவதால், அவர் களுக்குத் தேவனைக் குறித்த அறிவு கிடைக்கிறது.

நமக்குத் தேவனைக் குறித்து எவ்வளவு தகவல்கள் தெரியும் என்பது முக்கிய மல்ல. நமக்குத் தேவனைக் குறித்த விளக்கங்கள் எவ்வளவு தெரியும் என்பது முக்கியம் அல்ல. நமக்குத் தேவனுடைய திருச்சித்தங்கள் எவ்வளவு தெரியும் என்பதே முக்கியம். அவரோடுள்ள ஒரு ஐக்கியம், தேவனுடைய விருப்பு வெறுப்பு களைக் குறித்த சரியான அறிவையும், உணர்வையும் தருகின்றது. அது நமக்குள் ஆழமாகக் கிரியை செய்து, நாம் அதற்கேற்றபடி வாழ்வதற்கு உதவி செய்கிறது.

சிந்தனைக்கு...

இறையியல் அறிவால் நன்றாகப் பேசலாம்.
இறைவனை அறியும் அறிவால்தான் நன்றாக வாழ முடியும்.

செப்டம்பர் 24

தனிப்பட்ட உறவுடன் அன்பு

ரோமர் 5:1–11

தேவ அன்பு நம்முடைய இருதயங்களில்...
ரோமர் 5:5

தேவனிடம் அன்பாயிருப்பதை யாரும் விரும்பாமலிருக்கமாட்டார்கள். தேவ நம்பிக்கை உடைய எவரும் தேவனை நேசிப்பதற்கு மனதார விரும்புவார்கள். அநேகர் தேவனைப் பலவிதங்களில் நேசிக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், அவ்விதம் நேசிக்கின்ற ஒரு செயல், அவர்களுக்கு ஒரு ஆன்மீக திருப்தியைக் கொடுத்த போதிலும், அது அவர்களுக்குப் பெரிய ஆத்தும சந்தோஷத்தைக் கொடுப்பதில்லை. ஏன் தெரியுமா? அவர்களுக்குத் தேவனோடு தனிப்பட்ட ஒரு உறவோ அல்லது ஐக்கியமோ இல்லை.

ஒரு கட்சியின் தலைவரைப் பெருங்கூட்டம் மக்கள் நேசிப்பார்கள். ஆனால், நேசிக்கிற இவர்களுக்கும், நேசிக்கப்படுகின்ற ஒரு தலைவருக்கும் இடையில், எந்தத் தனிப்பட்ட உறவும் இல்லாததால், அன்புகூரும் செயல் பெரிய ஆனந்தத்தைத் தரவில்லை. உங்களைத் தனிப்பட்ட முறையில் அறியாத ஒருவரை நீங்கள் நேசிக்கலாம். ஆனால், அது உங்களுக்குப் பெரிய சந்தோஷத்தைத் தராது.

அது போல, நாம் தேவனைத் தனிப்பட்ட முறையில் அறியாமல், ஒரு பக்திக் காக நேசித்தால், அதனால் நமக்கு விசேஷ மகிழ்ச்சி வராது. எனவே, நாம் கர்த்தரை நமக்குள் ஏற்றுக்கொண்டு அவரை நேசிக்க வேண்டும். அப்படித் தனிப்பட்ட உறவின் பின்னணியுடன் நேசிக்கச் செல்லும் போது, இன்னொரு அனுபவமும் உண்டு. அவரை நாம் உறவு சார்ந்து நேசிக்கும் போது, அவர் நம்மை நேசிப்பதை தனிப்பட்ட முறையில் அனுபவிக்க இயலும். அது போல, நாம் அவரை நேசிப்பதை நினைத்து விசேஷமான ஒரு உற்சாகத்தைப் பெற முடியும். ஆம், எங்கோ இருக் கின்ற ஒருவராகத் தேவனை நேசிப்பது அல்ல. நம்மோடிருக்கின்ற ஒருவராகப் பார்த்து நேசித்தலே அவசியமானது.

எவ்வளவுதான் வேதாகமச் செய்திகள் தேவ அன்பை நமக்கு அறிவித்தாலும், நம்முடைய ஆத்துமாவில் தேவ அன்பை அனுபவிப்பது என்பது, ஒரு வித்தியாச மான அனுபவம். எவ்வளவுதான் பக்திக்காகக் கர்த்தரை நாம் நேசித்தாலும், நம் முடனிருக்கிறவராகக் கர்த்தரைக் கண்டு நேசிப்பது, ஒரு விசேஷமான அனுபவம். எனவே, தேவ அன்பை அனுபவிக்கவும், தேவனை நாம் நேசிப்பதை உணர்ந்து சந்தோஷப்படவும், ஆவிக்குரிய தனிப்பட்ட ஐக்கியம் தேவை. எனவே, இயேசு கிறிஸ்து நம்முடன் ஐக்கியமாயிருப்பதற்காகக் கொடுக்கப்பட்டவர் என்பதை விசு வாசித்து, அந்த ஐக்கியத்தை நாம் தேட வேண்டும்.

சிந்தனைக்கு...

இறை உறவில்லாமல் நாம் கர்த்தரை நேசிக்கலாம்.
இறை உறவிருந்தால்தான் தேவன் நேசிப்பதை அனுபவிக்க முடியும்.

செப்டம்பர் 25

அவரகள் மாறாவிட்டால்

மத்தேயு 5:39–48

உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.
மத்தேயு 5:44

அவர்கள் பெருமையை விட்டுவிட்டு தாழ்மை உடையவர்களாக மாற வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

ஆனால், அவர்களோ பெருமையை விட்டு விலகவில்லை.

எனவே, அவர்களின் பெருமையைச் சகிக்கும்படி அதிகத் தாழ்மையுடையவனாய் நான் மாற விரும்புகின்றேன்.

அவர்கள் தங்களின் ஆகாத குணங்களைவிட்டு மாறவேண்டும் என்று பிரார்த்தனை செய்தேன்.

அவர்களோ அவைகளை விட்டு விலகவில்லை.

எனவே, அவர்களைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளும் மனநிலை உடைய வனாய் என்னை மாற்றும்படி தேவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

அவர்கள் எனக்குச் செய்த அநியாயங்களை உணர்ந்து மாற வேண்டும் என்று எதிர்பார்த்தேன். அவர்களோ தங்களை மாற்றிக் கொள்ளவேயில்லை.

எனவே, அவர்கள் செய்த அநியாயங்களைச் சற்றும் இனி நான் நினையாத வனாக மாறும்படி விரும்புகின்றேன்.

அவர்களுக்கு நான் செய்த நன்மைகளை அவர்கள் நினைத்து, நன்றி யுணர்வு டையவர்களாக மாறிட நான் விரும்பினேன். அவர்களோ மாறாமல் மேலும் மேலும் நன்றிகெட்டவர்களாக மாறினார்கள்.

எனவே, நன்றி மறந்தவர்களுக்கும், நல்லதைச் செய்யும் இருதயம் உடைய வனாக மாறிட நான் வாஞ்சிக்கின்றேன்.

அவர்கள் என்னைக் காரணமின்றிப் பகைக்கும் மனநிலையைவிட்டு மாற வேண்டும் என்று ஜெபித்தேன். ஆனால், அவர்களோ மாறவில்லை. ஹ

எனவே, என்னைப் பகைக்கின்றவர்களையும் நேசிக்கும் பண்பட்ட இருதய முள்ளவனாக என்னை மாற்றும்படி ஜெபிக்கின்றேன்.

ஆம். மற்றவர்கள் மாறாத நிலையில் அந்தச் சூழ்நிலையைச் சந்திப்பதற்கு நமக்கு இருக்கும் ஒரே வழி, நம்மை இன்னும் இன்னும் மாற்றிக்கொள்வதுதான்.

சிந்தனைக்கு...

தன்னுடைய நியாயத்தை தலைமேல் வைக்க விரும்புகிறவன்,
தேவ நியாயத்தை காலின் கீழ் போட்டு விடுகிறான்.

செப்டம்பர் 26

ஜெபம் மட்டும் போதுமா?

மத்தேயு 7:21–29

கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.
ஏசாயா 59:1

ஜெபம். விசுவாசம், உபவாசம், காணிக்கை ஆகியவை ஆவிக்குரிய வாழ்க்கையின் ஆசீர்வாதங்களுக்கு மிகவும் முக்கியமானவைகள். ஆனால், இவைகளைக் கொண்டே எல்லாவற்றையும் சாதித்துவிட முடியும் என்ற எண்ணமும், நம்பிக்கையும் இவைகளைப் பயனற்றதாக்கி விடும். பயணம் செய்ய ஒரு வாகனம் தேவை. ஆனால், அந்த வாகனம் ஓட வேண்டுமானால் எரிபொருள் தேவை. அது போலவே, நம்முடைய ஜெபம், விசுவாசம், உபவாசம், காணிக்கை ஆகியவற்றை ஆசீர்வாதத்திற்கு நேராகக் கொண்டு செல்ல, வேத வார்த்தைகளுக்கு இசைந்த ஒரு நல்ல வாழ்க்கை தேவை.

தேவனுக்குப் பிரியமாக வாழ்வதற்கு முக்கியத்துவம் செலுத்தாமல், ஜெபத்தையோ உபவாசத்தையோ அதிகமாக நம்பினால், அந்த நம்பிக்கை பலன் தராது. இந்நாட்களில் ஜெபம், விசுவாசம், காணிக்கை ஆகியவற்றின் மூலமாக மட்டுமே நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் தேடும் பழக்கம், ஜனங்கள் நடுவில் பெருகிவருகின்றன. பல தேவ ஊழியர்களும் ஜெபத்தையும், உபவாசத்தையும் அதிகமாக முக்கியப்படுத்தி, ஒரு நல்ல ஆவிக்கேற்ற நெறிமுறை சார்ந்த வாழ்வின் தேவையைப் போதிய அளவு சொல்லவில்லை.

சரியான மனமாற்றம், குணங்கள் சீரடைதல், தேவனுடைய வழிகளைச் சார்ந்து கொள்ளுதல், போன்ற ஆவிக்குரிய அனுபவங்கள் இல்லாத நிலையில் நம்முடைய ஜெபங்களும், உபவாசங்களும் தேவ நன்மைகளுக்குத் தகுதியாயிராது. ஏசாயா தீர்க்கனின் காலத்தில் ஜனங்கள் ஜெபித்தார்கள், உபவாசித்தார்கள். ஆனால், அவைகள் அவர்களுக்கு உதவவில்லை. ஏனென்றால், அவர்கள் வாழ்ந்த விதங்களும், அவர்களின் இருதயநிலைகளும், சுபாவங்களும், செயல்பாடுகளும் தேவனுக்குப் பிரியமானதாக இருக்கவில்லை. எனவே, அவர்களின் பாவங்களும் அக்கிரமங்களும் அவர்களுடைய ஆசீர்வாதத் தடைகளாக இருப்பதை, ஏசாயா தீர்க்கன் ஜனங்களுக்குத் தெரிவித்தான்.

ஆம், நாம் எவ்வளவு ஜெபிக்கின்றோம், எப்படி உபவாசிக்கின்றோம் என்பவைகளை விட, நம்முடைய வாழ்க்கை எந்த அளவிற்கு தேவனுக்கு உகந்த ஒரு வாழ்க்கையாக இருக்கிறது என்பதே முக்கியமானது. தேவனுக்குப் பிரியமாக வாழ்தல் என்ற எரிபொருள் இன்றி, நம்முடைய ஜெபங்கள் வல்லமையாகச் செயல்படாது.

சிந்தனைக்கு...

உன் தேவைகளை வற்புறுத்த அல்ல ஜெபம்,
தேவ உறவில் உன்னை நிலைநிறுத்தவே ஜெபம்

செப்டம்பர் 27

ஊழிய அழைப்பு

ரோமர் 8:25-32

எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்...
ரோமர் 8:30

இஸ்ரவேலை ஆட்சி செய்யத் தேவன் சவுலைத் தேர்வு செய்தார். ஆனால், அவனோ ராஜாவாக மனமின்றி ஓடி ஒளிந்துகொண்டிருந்தான். ஆனாலும், தேவன் தீர்மானித்தபடி அவனே ராஜாவானான். நினிவே மக்களை எச்சரிக்கத் தேவன் யோனாவைத் தேர்வு செய்தார். ஆனால், அவன் வழிவிலகி, தர்சீசுக்குப் போனான். ஆயினும், அவனைத் தேவன் வழிமறித்து, தாம் நினைத்தபடி நினிவேக்குப் போகச் செய்தார். புதிய ஏற்பாட்டு சபையைக் கட்டுவதற்காக அழைக்கப் பட்டவன் பவுல். ஆனால், அவனோ சபையை அழிக்கும் வேலையில் தன்னை ஈடு படுத்திக் கொண்ட மனிதனாயிருந்தான். ஆயினும், தேவன் நினைத்தபடியே ஒருநாள் அவன் சபையைக் கட்டுகிற மனிதனாக மாறினான்.

ஆம், கர்த்தர் யாரைத் தம்முடைய ஊழியத்திற்காகத் தெரிந்து கொள் கிறாரோ, அவர்களை அதற்குரிய வேளையில் அழைத்துச் செயல்படுத்தவும் வல் லவராயிருக்கிறார். ஏனென்றால், எல்லாத் தடைகளையும் கடந்து போய், தேவன் தாம் தீர்மானித்ததைச் செய்து முடிக்கின்றவராயிருக்கின்றார். இதற்கு நம்முடைய சுயசித்தங்கள் கூட தடையாக நிற்க முடியாது. கர்த்தர் ஊழியத்திற்கு அழைத்தால் போகத் தயார் என்ற முடிவோடு, கர்த்தருக்குப் பிரியமானதொரு வாழ்க்கையை செவ்வையாக வாழப் பிரயாசப்படும் போது, உரிய நேரத்தில் அவரது அழைப்பு நமக்கு வெளிப்படும்.

தேவன் நம்மை ஊழியத்திற்காகத் தெரிந்து கொண்டிருப்பாரென்றால், அதனை ஏதாவது ஒரு விதத்தில் தெளிவாக நிச்சயமாக நாம் அறிந்து கொள்ளவும் செய்வார். அது யாரோ ஒருவர் வெளிப்படுத்த வேண்டிய மறைபொருளாயிராது. முதலாவது, நாம் அவரது சித்தத்தின் பாதையில் அவர் பிரியப்படும் விதமாக நடக்கும்போது, சரியான வேளையில் எல்லாம் நன்கு புரிந்து விடும்.

நாம் முழு நேரமும் கர்த்தருடைய பணியில் ஈடுபட, அவர் நம்மை அழைத் திருக்கிறாரா என்பது கேள்விக்குறியாகத் தொடர முடியும். ஆனால், இப்போது நாம் எந்தப் பணியிலிருந்தாலும், கர்த்தருக்காக வாழ்வதற்கும், கர்த்தருடைய வழிகளில் நடப்பதற்கும் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பது தெளிவாகத் தெரிந்த விஷயம். தேவனுக்கு உகந்த ஒரு வாழ்க்கையை வாழ்வதே நம்முடைய வாழ்வின் பிரதான ஊழியம். அந்த ஊழிய அழைப்பை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது, பிற ஊழியம் தொடர்பான விஷயங்கள் கர்த்தருடைய வேளையில் நிச்சயம் வெளிப்படும்.

சிந்தனைக்கு...

தேவ சத்தத்தை இதயத்தில் கேட்டுப் பழகாதவர்களால்,
அவருடைய சித்தத்தைப் புரிந்து கொள்ளுதல் இயலாது.

செப்டம்பர் 28

அனுபவங்கள்

11 கொரிந்தியர் 1:1–10

அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து...

சங்கீதம் 84 : 6

தேவன் நம்மை சுகமான சூழ்நிலைகளில் வைத்து மகிழ்ச்சியாக்க வல்லவரே. ஆயினும், நாம் எவைகளை அனுபவிக்கின்றோம் என்பதைவிட, நம்மால் மற்றவர்களுக்கு ஏற்படும் நன்மைகள் என்னவென்பதையே தேவன் முக்கியமாக எண்ணுகின்றார். எனவே, நாம் தேவனை அறிகின்ற அறிவிலும், அனுபவங்களிலும் வளருவதற்கான சூழ்நிலைகளை அனுமதிக்கின்றார். நாம் நல்ல ஆவிக்குரிய அனுபவங்களைப் பெற்றுக் கனி கொடுக்கும் போது, பிறர் மிகுதியாகப் பயன்படுகின்றனர்.

கர்த்தருக்கு என்னை அர்ப்பணித்து இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்ற போது, நான் பலவிதமான பிரச்சினைகளின் நடுவில் இருந்தேன். இரட்சிக்கப்பட்டு ஆண்டுகள் சில ஆன பின்பும் நான் கேட்ட, ஜெபித்த, மிக அவசரம் என வேண்டுதல் செய்த பல நன்மைகள் எனக்குக் கிடைக்கவில்லை.அந்த நாட்களில், பலருடைய சாட்சிகளைப் புத்தகங்கள் வாயிலாகவும், சபை கூடுகைகளிலும் கேட்டிருக்கிறேன். கடன், குடும்பப் பிரச்சினை, பொருளாதாரப் பற்றாக்குறை, போன்ற விஷயங்களில் பலர் கர்த்தரிடமிருந்து ஆச்சரியமான விடுதலை பெற்றதைக் கேட்கும் போது நம்பிக்கையாயிருக்கும்.

ஆனால், எவ்வளவோ மன்றாடியும், கர்த்தர் என் வாழ்க்கையில் இது போன்ற எதையும் செய்யவில்லையே, என்ற எண்ணம் அடிக்கடி என்னை வருத்தப்படுத்தும். ஆனால், கர்த்தர் ஒரு நோக்கத்துடன்தான் அவ்விதம் தவிக்கவிட்டுத் தவிக்க விட்டு, என்னை நடத்தியிருக்கிறார் என்பதை இப்போது உணருகிறேன். வருத்தங்களோடும், போராட்டங்களோடும், சிரமத்தோடும் நடத்தப்படாதிருந்திருந்தால், இப்போது எனக்கு இருக்கும் ஆவிக்குரிய அறிவில் நான்கில் ஒரு பங்கு கூட எனக்கு இருந்திருக்காது.

அந்த அனுபவங்களின் பின்னணியில்தான் நடைமுறை வாழ்க்கையோடு நேரடியாகச் சம்பந்தப்பட்ட பல விஷயங்களை அறிவு ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் தேவ கிருபையால் என்னால் எழுத முடிகிறது. தாவீதை தேவன் சாலொமோனைப் போலச் சுகமான பாதையில் நடத்தியிருந்தால், எண்ணிலடங்காதோரை உணர்வுப் பூர்வமாகத் தொடுகின்ற சங்கீதங்களை அவன் தந்திருக்க முடியாது. எல்லாம் தேவன் திட்டமிட்டே செய்கிறார். ஆம், இன்று அவர் நம்மை நடத்திச் செல்லும் பாதை நம்முடைய அறிவிற்கு ஏற்றதாக இராமல் போகலாம். ஆனால், அதில் தேவ ஞானம் செயல்பட்டிருக்கிறது என்பதைப் பின்னர் அறிந்து கொள்வோம்.

சிந்தனைக்கு...

பாடுகள் உன்னைப் புண்படுத்தும் போதுதான்,
பண்புகளால் உன் மனம் பக்குவமடைகிறது.

செப்டம்பர் 29

நற்குணங்களை விடாமல்

வெளி. 2:1 – 10

மரணபரியந்தம் உண்மையாயிரு.

வெளி. 2 : 10

தங்களின் உழைப்பிற்கேற்றபடி ஊதியம் தரப்படவில்லை என்று அதிருப்தியில், சிலர் தாங்கள் பணிபுரியும் இடங்களில் நன்றாக உழைப்பதில்லை. உழைக்காமல் சும்மா இருப்பதிலேயே அவர்கள் கவனம் செலுத்துவதினால், அவர்கள் தங்களின் உழைக்கும் திறனை இழந்து போகிறார்கள். இது அவர்களுக்குப் பெரிய நஷ்டம் என்பதை உணர்வதில்லை. அதுபோலவே, சிலர் தங்களின் நல்ல குணங்களைப் பிறர் மதிக்கவில்லை என்பதற்காக, அவைகளை விட்டுவிடுவார்கள். சிலர் தங்களின் நற்செயல்களுக்கு பிறர் நன்றியுணர்வோடிருக்கவில்லை என்பதற்காக, நல்லது செய்வதை விட்டு விடுகின்றார்கள்.

ஆனால், இவைகளினால் பிறருக்கு அல்ல. நமக்குத்தான் அதிக நஷ்டம். மற்றவர்களின் மனநிலையைப் பார்த்து வருத்தமுற்று, நாம் நற்குணங்களை விட்டும், நற்செயல்களை விட்டும் விலகிப் போவதின் விளைவாக, நாம் நம்முடைய மேன்மை நிலைகளை இழக்கின்றோம். யோசேப்பின் நற்செயலுக்கும், நற்பண்பிற்கும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. ஆயினும், அவன் சோர்ந்து போய் நல்ல குணங்களை விட்டு இறங்கி வரவில்லை. அவைகளில், அவன் நிலைத்திருந்தான்.

எனவே, நல்ல பண்பு நிலைகளை விரும்புகின்ற தேவன், ஏற்ற காலத்தில் அவனை உயர்த்திக் கௌரவித்தார். தாவீதின் பொறுமையையும், சாந்தத்தையும், நல்ல எண்ணத்தையும் சவுல் மதித்துச் செயல்படவில்லை, ஆயினும், தாவீது தன்னுடைய நிலைப்பாட்டை விட்டு இறங்கி வரவில்லை. எனவே, தேவன் ஒருநாள், அவனைச் சிங்காசனத்தில் அமர்த்திக் கௌரவித்தார். மற்றவர்களின் தாழ்வான மனநிலையைப் பார்த்து, நாம் நம்முடைய நல்ல பண்பு நிலைகளை விட்டு இறங்கி வருவது என்பது, தேவனுடைய பார்வையில், மேன்மையாகத் தோன்றும் ஒரு உயர்ந்த ஸ்தானத்தை விட்டு, இறங்கி வருகின்ற செயலாகும்.

நற்குணங்களும் நற்செயல்களும் மனிதர்களால் எப்படிப் பார்க்கப் படுகிறது? எப்படி மதிக்கப்படுகிறது? என்பதையல்ல. தேவனால் அவைகள் எப்படிப் பார்க்கப் படுகிறது? எப்படி மதிக்கப்படுகிறது? என்பதையே பார்க்க வேண்டும். ஏனென்றால் தேவனைக் கனப்படுத்தவும், அவருக்குப் பிரியமாயிருப்பதற்காகவுமே நாம் நற்குணங்களோடும், நற்செயல்களோடும் வாழ்கின்றோம். அவர் உரிய நேரத்தில் உரியவிதமாக அதற்குப் பலன் தருவது நிச்சயம்.

சிந்தனைக்கு...

நற்குணங்களோடு இணைந்திராதவனின் இதயம்,
இறைவனை விட்டு வெகுதூரம் விலகியேயிருக்கிறது.

செப்டம்பர் 30

காலம் கடக்கும் முன்பு

மாற்கு 14:1 – 9

தைலம் பூச முந்திக்கொண்டாள்.

மாற்கு 14 : 8

பல வருடங்களுக்கு முன்பு சைக்கிள் ரிக்ஷா ஓட்டிப்பிழைக்கும் ஒருவன் நோயுற்ற நிலையிலும், சரியான உடை, உணவு இல்லாத நிலையிலும் கஷ்டப் படுவதைக் கண்டு, என் மனம் வருத்தப்பட்டது. கொஞ்சம் பணமும், துணிகளும் அவனுக்குக் கொடுக்கத் திட்டமிட்டேன். ஆனால், இன்று, நாளை என்று காலந் தாழ்த்திக் கொண்டிருந்தேன். ஒரு நாள் அந்த உதவியை நான் செய்வதற்கு முன்னே, அவன் மரித்துப் போனதைக் கண்டு மிகுந்த மனவேதனையடைய நேரிட்டது.

நன்மை செய்தல் என்பது அதற்குரிய காலத்தில் செய்து முடிக்கப்பட வேண்டியதாகும். நாம் விரும்பிய வேளையில் எல்லாம் அதைச் செய்ய முடியாது. செய்தாலும், அதற்கு நல்ல பயன் இராது. நமக்கு நல்ல சிந்தனையும், நன்மை செய்யும் ஆர்வங்களும் இருக்கலாம். ஆனால், அவைகளைச் செயல்படுத்த நாளை வரையிலும் காத்திருக்கக்கூடாது. நாளைக்கு நாம் செய்ய நினைத்தாலும், அவை களைச் செய்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போகும். இயேசுவின் தலையில் பரிமளத்தைலத்தை ஊற்றிய பெண், சரியான நேரத்தில் அதைச் செய்தாள். அவரைக் குறித்த தன்னுடைய ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்தவும்,அவரைக் கௌரவப்படுத்தவும், அவள் காலத்தை அறிந்து செயல்பட்டாள்.

ஆனால், அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும், நிக்கொதேமுவும் பிந்தி விட்டார்கள். உயிரோடிருந்த காலத்தில் உரிய விதமாக அவரைக் கனப்படுத்த அவர்கள் தவறிவிட்டார்கள். கடைசியில் மிகுதியாக அவரைக் கனப்படுத்த வந்தார்கள். ஆனால், அதற்குள் காலம் கடந்து போய்விட்டது. ஆம். எதையும் உரிய நேரத்தில் செய்ய முந்திக் கொள்ள வேண்டும். இல்லையேல், நம்முடைய நல்ல விருப்பங்களை நிறைவேற்றும் வாய்ப்புகள் நம்மை விட்டு விலகிப் போகும்.

எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. சிலருக்கு நாம் உதவி செய்ய இன்று தான் சரியான வேளையாக இருக்கலாம். அதனை நாம் உணராவிட்டால், நல்லதைச் செய்ய நமக்குக் கிடைத்த நல்ல வாய்ப்புகளை இழந்தவர்களாகி விடுவோம். நன்மை செய்ய வேண்டும் என்று இன்று நம்மிடம் இருக்கும் உந்துதல், நாளைக்கு இல்லாமல் போகலாம். அப்படி இருந்தாலும், அதனைச் செய்வதற்கு நாளைக்கு ஆற்றல் இல்லாமல் போகலாம். எனவே, நல்லதைச் செய்வதற்கு உரிய நாள் இன்றே என்ற உணர்வோடு நாம் செயல்பட வேண்டும்.

சிந்தனைக்கு...

நல்லவராயிராமலே நன்மை செய்ய முடியும். ஆனால்,
நன்மை செய்யாமல் நல்லவராயிருக்க முடியாது.

அக்டோபர் 1
ஆசீர்வாதம் எப்படி?

மத்தேயு 5:1 –11

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

மத்தேயு 5:5

நண்பர் ஒருவர் நல்ல ஆரோக்கியத்தோடு வாழ விரும்புகின்றவர். சரீரத்தில் ஏதாவது வியாதி, பலவீனம் என்றால் உடனேயே மருத்துவரை அணுகுவார். ஆனால், மருத்துவர் கொடுக்கும் நல்ல ஆலோசனைகளைப் பின்பற்றமாட்டார். இதைச் சாப்பிடாதே, அதைச் சாப்பிடாதே என்பது போன்ற கட்டுப்பாடுகளை அவர் விரும்பமாட்டார். இது போலவே, நாம் நன்றாக ஆசீர்வாதமாக வாழ விரும்பு கின்றோம். அதற்காக தேவனை நோக்கிப் பிரார்த்திக்கவும், உபவாசிக்கவும் செய் கின்றோம். ஆனால், ஆசீர்வாதமான வாழ்க்கைக்கு அவசியமாகத் தேவன் தரும் நல்ல போதனைகளையும், ஆலோசனைகளையும் பின்பற்றவோ கஷ்டப் படுகிறோம்.

ஆசீர்வாதமான வாழ்க்கை, சமாதானமான, சந்தோஷமான வாழ்க்கை, என்பதெல்லாம் பரலோகத்திலிருந்து மேஜிக் போல நமக்குக் கிடைத்து விடுகின்ற வைகள் அல்ல. பிரார்த்தனைகளாலும், உபவாசங்களாலும், விசுவாச வலிமை களாலும், காணிக்கைத் தாராளங்களாலும் ஆசீர்வாதமான வாழ்க்கை அமைந்து விடாது, அவ்விதமான ஆசீர்வாத வாழ்க்கையைப் பெற விரும்பினால், முதலாவது நம்முடைய குணங்களும், சுபாவங்களும், தன்மைகளும், நடத்தைகளும், மன நிலைகளும் மாற வேண்டும். ஏனென்றால் வாழ்க்கை மாற்றங்கள், குணாதிசய மாற்றங்கள் போன்றவற்றின் வாயிலாகத்தான் ஆசீர்வாதமான, ஒரு வாழ்க் கையை மனிதன் அனுபவிக்க முடியும்.

எனவேதான் தேவன் நல்ல மருத்துவரைப் போல அன்பாயிரு, தாழ்மை யாயிரு, உண்மையாயிரு, கபடமற்றவனாயிரு, பொருளாசைக்குச் சாயாமலிரு, தூய மனதுடையவனாயிரு என்பது போன்ற ஆலோசனைகளைத் தருகின்றார். ஆசீர்வாதமாக வாழ விரும்பும் நாம், தேவன் தரும் ஆசீர்வாத ஆலோசனை களைக் கண்டுகொள்ளாமல் போனால், தேவன் நம்மை ஆசீர்வதிக்க முடியாது.

இயேசு யாரைப் பாக்கியவான்கள் என்றார்? மனத்தாழ்மை, சாந்தம், சமா தானம், இதயத் தூய்மை, இரக்கம், நீதியின்மேல் பிரியம், போன்ற நற்பண்புடை யவர்களை. அதனுடைய பொருள் என்ன? இது போன்ற நற்சுபாவங்கள் மூல மாகத்தான் பாக்கியமான அல்லது ஆசீர்வாதமான வாழ்க்கையைக் காண முடியும். எனவேதான் நாம் முதலாவது மனந்திரும்புதல், இரட்சிப்பு, வாழ்க்கை மாற்றம், ஆகிய படிகள் வழியாகச் செல்ல வேண்டிய தேவை உள்ளது.

சிந்தனைக்கு...

பணம் இல்லாமல் வாழ்வது கடினம்.
நல்ல குணமில்லாமல் வாழ்க்கையில் தொடர்வது கடினம்.

அக்டோபர் 2
நிறைவு தரும் வெற்றி

சங்கீதம் 26:1 – 12

நான் என் உத்தமத்திலே நடக்கிறேன்.
சங்கீதம் 26 : 1

வாழ்க்கையில் சில வெற்றிகளை நாம் அடைவது மட்டுமே போதுமான தல்ல. அந்த வெற்றிகள் நமக்கு நிறைவு தரும் வெற்றிகளாக இருக்க வேண்டும். வெற்றிகள் மட்டும் அல்ல, வென்ற விதங்களும் மிகவும் முக்கியமானவை. பணம், பொருள், அந்தஸ்து, பதவி போன்றவற்றில் நாம் எதிர்பார்த்தபடியே வெற்றிகளைக் கண்டிருக்கக் கூடும். ஆனால், அந்த வெற்றிகளால் நாம் மகிழவும், திருப்தி யடையவும் வேண்டுமானால், அந்த வெற்றிகளை நாம் அடைவதற்குக் கடைப் பிடித்த வழிகள் எப்படிப்பட்டவைகள் என்பது முக்கியமானது.

ஒருவர் எப்படிச் செல்வங்களைச் சேர்த்தார்? எப்படி உயர் பதவியைப் பிடித்தார்? எப்படி நினைத்ததைச் சாதித்தார்? என்பது போன்ற விஷயங்கள் பிற ருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், அந்த நபருக்கு அவைகள் தெரியாமல் இருக்க முடியாது. தான் வெற்றியை அடைவதற்குப் பின்பற்றிய வழிகள் சரி யானவை அல்ல என்பதை, அந்த நபர் அறிந்திருக்கும் போது, வெற்றி அவருக்குத் திருப்தியையோ, நிறைவையோ, மனமகிழ்ச்சியையோ, அளிக்காது.

சரியான வழிகளில் நடக்கின்ற ஒருவன், ஒரு குடிசையில் வாழும் சூழ்நிலை யிலிருக்கலாம். தவறான வழியில் நடக்கின்றவன், ஒரு பெரிய வசதியான பங்களா வீட்டில் வாழும் வாய்ப்பைப் பெற்றிருக்கலாம். ஆயினும், அந்தக் குடிசை வாசிக்குத் தான் நிம்மதியான தூக்கமும், போதும் என்ற திருப்தியும் இருக்குமேயன்றி, அந்தப் பங்களாவாசிக்கு அல்ல. ஏனென்றால் திருப்தி, நிறைவு, மகிழ்ச்சி, நிம்மதி ஆகிய வைகள், நாம் எவைகளையெல்லாம் அடைய முடிந்தது என்ற அடிப்படையில் அல்ல. நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் நெறிமுறைகள்தான் அவைகளை நிர்ணயிக்கின்றன.

நல்ல நெறிமுறைகளில் வாழ்கின்ற சிலரால், தாங்கள் விரும்பிய வெற்றி களை அடைய முடியாமல் போயிருக்கலாம். ஆயினும், வெற்றிகளைக் குறியாக வைத்து, தவறான வழிகளில் செல்லவில்லை என்ற ஒரு நிச்சயம், அவர்களுக்குப் பெரிய திருப்தியை அளிக்கும். சவுல் ராஜாவுக்கு எதிரான போராட்டத்தில் தாவீதுக்கு வெற்றிகள் விரைந்து வரவில்லை. ஆனால், சவுலை வீழ்த்துவதற்குத்தான் தேவனுடைய வழிகளைவிட்டு விலகி, தவறான வழியில் போகவில்லை என்ற நிச்சயம் தாவீதுக்கு உண்டு. அதுவே அவனுக்கு பெரிய திருப்தியையும், மன நிறைவையும் கொடுத்திருக்கும்.

சிந்தனைக்கு...

நல்லவன் விழுந்தால் மீண்டும் தான் எழும்ப
இயன்றவன் என்பதை நிரூபிக்கின்றான்.

அக்டோபர் 3
அற்பமானவை, ஆனால்...

யாத்திராகம் 4:1–9
உன் கையிலிருக்கிறது என்ன?
யாத்திராகம் 4 : 2

இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து விடுவிப்பதற்காக மோசேயைத் தேவன் அனுப்பியபோது, அவனிடம் ஒரு தங்கக் கோலை கொடுத்து அனுப்ப வில்லை. அவனிடமிருந்த சாதாரணக் கோலைத்தான் ஆசீர்வதித்துக் கொடுத் தனுப்பினார். அந்தக் கோலினால் மோசே மிகப் பெரிய காரியங்களைச் செய்தான். சாதாரணமான ஐந்து அப்பங்களைக் கொண்டுதான், இயேசு பல்லாயிரக் கணக் கானவர்களைப் போஷித்துத் திருப்தியாக்கினார். கையிலிருந்த அற்பமான அப்பங்ககைக் கர்த்தரிடம் ஒப்புவித்தபோது, அவைகள் அநேகருக்குப் போதுமான தாகயிருந்தது.

தேவன் அற்பமானவைகளைக் கொண்டு அற்புதமான காரியங்களைச் செய்கின்றார். அற்பமான பன்னிரண்டு மனிதர்களைக் கொண்டு, கர்த்தர் அகிலத் தையே அசைக்கவில்லையா? கர்த்தர் ஒன்றை ஆசீர்வதிப்பாரானால், அது எவ்வளவு அற்பமானதாக இருந்தாலும், அதன்மூலம் ஆச்சரியமான விளை வுகள் ஏற்படமுடியும். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தில் இழிவானவை களையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார் என்று வேதம் சொல்கிறது. (1 கொரிந்தியர் – 1:28)

ஒருவேளை நீங்கள் செய்கின்ற வேலையோ, தொழிலோ, வாழ்கின்ற சூழ்நிலையோ, அல்லது கிடைக்கப்பெற்ற வாய்ப்போ மிகச் சாதாரணமாக இருக் கலாம். இவைகளால் அப்படி என்ன மேன்மை வந்துவிடும் என நீங்கள் எண் ணலாம். ஆனால், உங்கள் வாழ்க்கை கர்த்தருக்கு முற்றிலுமாக அர்ப்பணிக்கப் பட்ட ஒன்றாகயிருந்தால், தேவன் உங்களுக்கு முன்பாக உள்ள இந்தச் சாதா ரணங்களையே, ஆச்சரியமான காரியங்கள் விளையும்படி ஆசீர்வதிப்பார். அவர் அற்புதங்களின் தேவன்.

சவுல் ராஜாவிடம் ராஜ கெம்பீரமும், ஏராளமான போர்ப் பயிற்சி பெற்ற வீரர் களும் இருந்தனர். ஆனாலும், தேவன் கோலியாத்தை வீழ்த்த விரும்பிய போது, அந்த ராஜாவையோ, ஆற்றல் மிக்க ஊழியர்களையோ உபயோகிக்கவில்லை. ஏனென்றால், சவுல் தேவனுடைய ஆளுகைக்குள்ளும், வழி நடத்துதலுக்குள்ளும் இருக்கவில்லை. ஆம், தேவ ஆளுகையையும், ஆலோசனைகளையும் ஏற்றுக் கொண்டு வாழ்கின்றவர்கள், அற்பமானவர்களாக இருந்தாலும்,தேவன் அவர் களைக் கொண்டு, அற்புதமான காரியங்களைச் செய்வார்.

சிந்தனைக்கு...

தேவனுக்காக சிலர் முன்னால் கோழையாய் நில்.
நாளை பலர் முன்னால் தேவன் உன்னை வீரனாக நிறுத்துவார்.

அக்டோபர் 4

நல்லது நடக்கிறது

1 பேதுரு 5:7–14

கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களை...

1 பேதுரு 5:10

ஒருவருக்கு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருந்த டாக்டர் ஒருவர் ஆப்பரேஷன் தியேட்டருக்கு வெளியே வந்தார். அங்கே அந்த நோயாளியின் குடும்பத்தினர் மிகுந்த துயரத்துடன் அழுதுகொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்து அவர் நாங்கள் நல்ல காரியம் செய்துகொண்டிருக்கின்றோம். நல்ல ஒரு வேலை நடந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் ஏன் சந்தோஷப்படாமல் அழுது கொண் டிருக்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

ஆம், அந்த அறுவைச் சிகிச்சையின் நேரம் வேதனையான ஒரு நேரம் போல இருந்தாலும், அந்த நபர் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு அது அவசியமானது. அது ஒரு நல்லது நடக்கும் நேரமே. சில நேரங்களில் நாமும் இதுபோன்ற காலச் சூழ்நிலைகளைக் கடந்து செல்ல நேரிடலாம். ஆனால், அத னுடைய விளைவாக நல்லவைகள் தோன்றும் என்பது உண்மை. இன்று நாம் சந்திக்க நேரிடும் சில துன்பங்கள் நம்முடைய பார்வையில் வருத்தத்திற்குரிய தாக இருக்கலாம். ஏன் இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்று நாம் எண்ணலாம். ஆனால், வாழ்க்கையில் நாம் மகிழ்ச்சியான காலங்களையும், அர்த்தம் மிகுந்த காலங்களையும் காண்பதற்கு, இவைகளும் தேவனுடைய பார்வையில் அவசிய மாகலாம்.

மோசே தேசத்தைவிட்டு ஓடிவந்து பரதேசியாக வாழ நேர்ந்தது. யோசேப்பு தந்தையின் அன்பின் சூழ்நிலைகளைவிட்டு வந்து அடிமையாக வாழ நேர்ந்தது. தாவீது அரண்மனைச் சூழ்நிலைகளை விட்டு வெளியேறி, காடுகளில் அனாதை போல அலைய நேரிட்டது. இதுபோன்ற காலங்கள் துன்பத்தின் காலங்கள் போலத் தோன்றினாலும், தேவன் அவைகளை நல்லதென்று கண்டார். அவைகள் மூலம் சில நல்ல விளைவுகள் ஏற்படப் போவதைக் கண்டு, அவைகளை அனுமதித்தார். அவ்விதமாகவே, அந்த துன்ப நிகழ்வுகள் பின்னாட்களில் நிகழவேண்டிய மேன்மையான ஆசீர்வாத விளைவுகளுக்கு, அடித்தளங்களாக மாறியது.

இன்று நாம் காண நேரிடுகின்ற தனிமைப்படுதல்கள், தோல்விகள், ஏமாற்றங்கள், நஷ்டங்கள், போராட்டங்கள், ஆகியவைகள் நாளைக்கு நமக் கென்று ஆயத்தமாக்கப்படும் மேன்மையான ஆசீர்வாதங்களுக்கு, அவசிய மானவைகளாக இருக்கலாம். அந்த விசுவாசத்தோடு தொடர்ந்து செல்வோம்.

சிந்தனைக்கு...

உன் வாழ்க்கை எதிர்ப்புகளற்றதாகிப் போனால்,
உன் வாழ்க்கையே உனக்கு எதிரியாகிவிடும்.

அக்டோபர் 5
பதட்டமடைந்து

11 நாளாகமம் 16:1–14

இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்.
11 நாளாகமம் 16:9

சாலையில் ஓரமாக நடந்து கொண்டிருந்த மனிதன், கொஞ்ச தூரத்தில் ஒரு பாம்பு ஊர்ந்து வருவதைக் கண்டான், உடனேயே பதறிப்போய் முன் பின் பார்க்காமல் சாலையின் மறு ஓரத்தை நோக்கி ஓடினான். அந்தோ பரிதாபம்! வேகமாக வந்த ஸ்கூட்டர் ஒன்றில் மோதி பலத்த காயமடைந்தான். சில நேரங்களில், நம்முடைய வாழ்க்கையில் நமக்கெதிராக வீசுகின்ற துன்பக் காற்றுகளின் வேகங்களைவிட, அவைகளைக் குறித்த மனதின் சிந்தனைகளின் வேகம் பல மடங்கு அதிகமாயிருக்கின்றது. துன்பங்கள் நம்மை அழுத்துவதை விட, அவைகளைக் குறித்த பதட்டமான எண்ணங்கள்தான், நம்மை அதிகமாக அழுத்தி நிலைகுலையச் செய்துவிடுகின்றன.

சில வேளைகளில், நமக்கெதிராக வருவது போன்று காட்சியளிக்கும் பிரச்சினைகள், நமக்கு எதிர்பார்த்த கஷ்டத்தைத் தருவதில்லை. ஆனால், அதனைக் குறித்த அதிக பயத்தின் விளைவால், அவசரப்பட்டு எடுக்கும் சில நடவடிக்கைகள்தான், பெரும் பாதிப்புகளை உருவாக்கிவிடுகிறது. கர்த்தர் மேல் விசுவாசமுள்ளவர்கள் எத்தகைய சூழ்நிலையின் நடுவிலும், அந்த சூழ்நிலையைக் கடந்து செல்ல, தேவன் ஒரு வழியை வைத்திருப்பார் என்ற உணர்வோடு, அதனைக் கண்டறியக் கருத்தாயிருக்க வேண்டும்.

ஆசா என்ற யூதாவின் ராஜாவிற்கு எதிராக பாஷா என்ற இஸ்ரவேல் ராஜா யுத்தம் செய்ய வந்தான். பொறுமையாகத் தேவ ஆலோசனையைக் கேட்டுச் செயல் பட்டிருந்தால், அந்த எதிர்ப்பினைச் சாதாரணமாக மேற்கொண்டிருக்க முடியும். ஆனால், ஆசாவோ பதறிப்போய் கர்த்தருடைய ஆலயத்துப் பொன்னை எடுத்துப் பெனதாத் என்ற ராஜாவிற்குக் கொடுத்துச் சகாயம் தேடினான். அதன் விளைவாக தேவன் அவனைக் கைவிட்டார். எனவே, அவன் பல வேதனைகளைச் சந்திக்க நேர்ந்தது.

எப்பொழுதுமே அவசரப்படாமல் தேவ சமுகத்தில் காத்திருந்து, அவருடைய உதவியை நாடப் பிரயாசப்பட வேண்டும். தேவன் அறியாமல் எதுவும் வரமுடியாது என்ற விசுவாச உறுதியுடன் பதட்டப்படாமல் தேவனைத் தேடினால், நலமான வழிகள் தோன்றும். சூழ்நிலைகளைப் பார்த்து அவசரப்படும்போது அங்கே சுய யோசனைகளும், மாம்சீக வழிகளும் முன்னுரிமை பெற்றுவிடுகின்றன. அவைகள் தேவனுடைய வழிகளுக்கும் நியாயங்களுக்கும் புறம்பாக நம்மை இழுத்துச் சென்றுவிடுகின்றன.

சிந்தனைக்கு...

அடைய முடியாமல் போன ஒரு நன்மையைக் குறித்த ஒரு சோர்வு,
அடைந்துவிட்ட அநேக நன்மைகளைப் பயனற்றதாக்குகிறது

அக்டோபர் 6
தேவ சித்தம் அறிந்திட

சங்கீதம் 25 : 1 – 15

கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்.
சங்கீதம் 25 :4

தகப்பனுடைய ஆலோசனையைக் கேட்காமல், மகன் தன் விருப்பப்படி ஒரு பெண்ணைத் தேர்வு செய்தான். அதன்பின்பு திருமணத்தை எங்கே, எப்போது எவ்விதம் நடத்தலாம் என்று தகப்பனிடம் ஆலோசனை கேட்டான். உன்னுடைய யோசனையின்படியே ஒரு பெண்ணைத் தேர்வு செய்த நீ, உன்னுடைய ஆலோசனைகளின் படியே பிற காரியங்களையும் செய்துகொள் என்று தகப்பன் கூறி விட்டார். அநேகர் தங்களுடைய வாழ்க்கையின் முக்கியமான சில பகுதிகளில் தேவனுடைய ஆலோசனைகளையோ, சித்தங்களையோ ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், வேறு சில பகுதிகளில் தேவ சித்தம் அறிய ஆவலாயிருப்பார்கள்.

நம்முடைய வாழ்க்கையின் மையத்தில், தேவனுடைய ஆலோசனைகளை நாம் முக்கியப்படுத்தி தேவனைக் கனப்படுத்தினால்தான், பிற பகுதிகளில் தேவன் தம்முடைய ஆலோசனைகளை நமக்குத் தருவார். நாம் கர்த்தருக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, உண்மையான இரட்சிப்பின் அனுபவத்திற்கு வந்து, கர்த்தரைக் கனப்படுத்துகின்ற விதமாக வேதத்திற்கேற்றபடி வாழவேண்டும். இதுவே தேவன் நமக்குத் தருகின்ற முக்கியமான ஆலோசனையாகும்.

ஆனால், இந்த ஆலோசனையை முழுமையாக ஏற்றுக் கொள்ளாத நிலையில், எங்கே பெண் எடுக்கலாம்? வீட்டை எங்கே கட்டலாம்? பிள்ளைகளை எந்தக் கல்லூரியில் சேர்க்கலாம்? எந்தத் தொழில் செய்யலாம்? எந்த வேலையைத் தேடலாம்? என்பது போன்ற விஷயங்களில் தேவ ஆலோசனையைத் தேடினால் பெற முடியாது. ஏனெனில் தேவன் ஜோசியரோ, குறி சொல்லுகிறவரோ அல்ல. திடீரென்று அவரிடம் வந்து தேவ சித்தம் கேட்டால் அவர் சொல்லமாட்டார்.

நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய பிள்ளைகளாக மாறி, அவருக்கு முன் பாகப் பரிசுத்த ஜீவியம் செய்ய வேண்டும் என்பதே அவருடைய பிரதான சித்தம். அந்த சித்தத்தை மதிப்போருக்குத்தான், பிற காரியங்களில் ஆலோசனை தருவார். தேவனுடைய சித்தத்தின்படி தேவனுடைய பிள்ளைகளாக மாறி, தேவனை அறிகின்ற அறிவினைப் பெற்றுகொண்டவர்களால்தான், தேவ சித்தத்தை ஏற்கவும், அதனைச் செயல்படுத்தவும் முடியும். ஏனென்றால், தேவனுடைய சித்தங்களை அறிவதற்கும் செயல்படுத்துவதற்கும், தேவனுக்கேற்ற ஓர் இருதயம் மிகவும் தேவை.

சிந்தனைக்கு...

உன்னுடைய உள்ளத்தில் உள்ளதை நீ கண்டு கொண்டால்,
இறைவனிடம் உனக்காக உள்ள நன்மைகளையும் கண்டு கொள்வாய்.

அக்டோபர் 7
முதிர்வயதிலும்

யோசுவா 14:8–15

அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து...
சங்கீதம் 92:15

வயதுகள் போகப் போக வாழ்க்கையில் சந்தோஷத்தையும், சுகத்தையும், திருப்தியையும் தந்துகொண்டிருந்த சில கதவுகள், அடைக்கப்பட்டுக் கொண்டே போகும். துள்ளிக் குதித்து, ஓடியாடித் திரிந்த சிறுவயதின் காலங்கள் முடிந்துவிட்டன. கனவுகளோடும், கற்பனைகளோடும், ஒரு விதமான பரபரப்போடும் வாழ்ந்து கொண்டிருந்த வாலிபக் காலங்கள் முடிந்துவிட்டன.

இனி உணவுகளினால் வருகின்ற சந்தோஷமும், உடைகளினால் வருகின்ற சந்தோஷமும், மனம் விரும்பிய உறவுகளினால் வருகின்ற சந்தோஷமும், பணம், பொருள், வசதிகளினால் வருகின்ற சந்தோஷமும் பேரளவில் குறைந்துவிடும். கடமைகளும், பொறுப்புகளும், சுமைகளாக மாறி, அதிகமாக அழுத்த ஆரம் பிக்கும். இனி வாழ்க்கையில் என்ன இருக்கிறது? இனிப் பழைய நாட்களைப் போல கனவு காணமுடியுமா? கற்பனையில் மிதக்க முடியுமா? புள்ளிமான்போல் ஓடித் திரிய முடியுமா? இனிதான் வரப்போகிறது வளமான வாழ்க்கை என்று காத்திருக்க முடியுமா? என்பது போன்ற எண்ணங்கள் ஏராளம் வந்துவிடும்.

ஆம், வயதுகள் போகப் போக, வாழ்க்கையைச் சுவையுடையதாக வைக் கின்ற பல இயற்கையான விஷயங்கள், விடை பெற்றுக்கொண்டே இருக்கும். ஒரு விதமான வெற்றிடங்கள் வாழ்க்கையில் உருவாக ஆரம்பிக்கும். அந்தச் சூழ்நிலை களில் நம்முடைய வாழ்க்கையைச் சுவையுணர்வோடு வாழவும், வாழ்க்கையை நிறைவு தரும் ஒன்றாகப் பார்க்கவும், நமக்கு ஏதாவது தேவை. வாழ்வதற்கு கிடைத்த ஒவ்வொரு நாளையும், சந்தோஷமாய் அனுபவிக்கத்தக்க ஒரு நாளாகப் பார்ப்பதற்கு ஏதுவாக, ஏதாவது வேண்டும்.

இனி அந்தத் தேவையைப் பணமோ, பொருளோ, உணவோ, உடையோ, உறவோ தந்திட முடியாது, தேவனுக்காக வாழ்கின்ற ஒரு வாழ்வுதான் அந்தத் தேவையைச் சந்திக்கும், கர்த்தரோடு வாழ்கின்ற, கர்த்தரை மையமாக வைத்து வாழ்கின்ற ஒரு வாழ்க்கை முறை, நம்மை முதிர் வயதிலும் கனிகொடுக்கின்ற மரங்களாக மாற்றும். ஆபிரகாமைப்போலவும், தாவீதைப் போலவும், பவுலைப் போலவும், யோவானைப் போலவும் நீடிய ஆயுளுடன் வாழ நேரிட்டாலும், நாம் யாருக்கும் சுமைகளாகத் தேவன் விடமாட்டார். நாம் இறுதி வரை நிறைவோடு பிறருக்கு ஆசீர்வாதமாகவே வாழ்ந்து வாழ்க்கையை திருப்தியாய் முடிப்போம்.

சிந்தனைக்கு...

அன்பு எனக்கு என்ன கிடைக்கும் என்று கேளாது.
என்னால் பிறருக்கு ஏதாவது கிடைக்குமா என்றே கேட்கும்.

அக்டோபர் 8
உண்மையை மறைக்காமல்

மத்தேயு 21 : 23 –32

எங்களுக்குத் தெரியாது என்றார்கள்.

மத்தேயு 21 : 27

"யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ?" என்று இயேசு பரிசேயர்களிடம் கேட்டார். (மத்தேயு - 21:25) அவர்களோ எங்களுக்குத் தெரியாது என்று மழுப்பினார்கள். அவர் கேட்ட கேள்விக்குச் சரியாகப் பதிலளிக்க அவர்களால் முடியும். ஆனால், தாங்கள் உள்ளுக்குள் நம்பும் உண்மையை வெளிப்படையான பதிலாகக் கொடுத்தால், அதனால் தங்களுக்குப் பாதிப்பு வரும் என்று எண்ணினார்கள். எனவே, அவர்கள் சரியான பதிலேதும் தரவில்லை.

நாம் எதை உள்ளத்தில் உறுதியாக நம்புகின்றோமோ அதனைத் துணிவுடன் வெளிப்படுத்தும் தைரியமும் வேண்டும். கோப்பர் நிக்கஸ் வானியல் சம்பந்தமான பல உண்மைகளைக் கண்டுபிடித்தார். ஆனால், அந்த உண்மைகள் அக்கால, திருச்சபைத் தலைவர்களின் கருத்துக்கு முரண்பாடானவை. எனவே, அவர்களுக்குப் பயந்து உண்மைகளை வெளியரங்கமாக்காமலே மரித்தார். ஆனால், அவர் கண்டு பிடித்த உண்மைகள் இன்று மிகவும் சரியானவை என்று விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்டுள்ளன. ஆயினும், உண்மையைத் துணிந்து பேசி, மேன்மை மிக்க மனிதராக நிற்கும் வாய்ப்பை கோப்பர் நிக்கஸ் இழந்து போனார்.

அநேகர் எது சரி? எது தவறு? என்ற சரியான அறிவை தங்களுக்குள் கொண்டிருக்கின்றனர். ஆனால், பிறருடைய உணர்வுகளைப் பாதிக்கக் கூடாது என்பதற்காக மௌனமாயிருந்து விடுகின்றனர். நாம் சரி அல்லது தவறு என்று நம்புவதை வெளிப்படையாகக் கூறினால், சிலரது வெறுப்பைச் சம்பாதிக்க நேரிடலாம். சில பாதிப்புகள் நமக்கு ஏற்படலாம். ஆனால், சுயநலத்திற்காக அறிந்த உண்மையை மறைத்துக் கொண்டு மௌனமாய் வாழ்வது, தேவனுக்கு நாம் உகந்தவர்கள் அல்ல என்பதன் அடையாளமாகும்.

வேதப் பண்டிதர் வில்லியம் பர்கிளே கூறுவது போல உண்மையை ஒருவர் அறிந்திருந்தால், வானமே இடிந்து விழுந்தால்கூட, அதனை மறைக்காமல் அறிக்கையிடும் கடமை அவருக்குண்டு. தான் அறிந்த அல்லது கர்த்தரால் உணர்த்துவிக்கப்பட்ட உண்மையை, தன்னுடைய சுய நலத்திற்காக மறைக்கும் மனிதன் தேவனுடைய பார்வையில் உண்மைக்குப் புறம்பானவனே. எது சரியோ அதனை ஓங்கி உரைக்காமல் அமைதி காக்கும் போது, சரியற்றவைகள் எந்த எதிர்ப்புகளுமின்றி கோலோச்ச ஆரம்பிக்கின்றன.

சிந்தனைக்கு...

உன் குற்றங்களைக் கண்டறிய நீ கவனமாயிருந்தால்,
பிறருடைய குற்றச்சாட்டுகளால் நீ குற்றவாளியாவதில்லை.

அக்டோபர் 9
பாதைகளை மறந்து

1 தீமோத்தேயு 6 : 10–21

அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி...
1 தீமோத்தேயு 6 : 10

மரத்தில் அமர்ந்திருந்த அழகான கிளியைப் பார்த்து ஆசைப்பட்ட சிறுவன், அதனை எப்படியாவது பிடித்துவிட விரும்பினான். அதனைத் தொடர்ந்து சென்றான். கிளியோ மரத்திற்கு மரம் தாவிப் போய்க் கொண்டேயிருந்தது. சிறுவனும் விடாமல் பின்தொடர்ந்தான். வெகு நேரம் கடந்து விட்டது. சூரியன் அஸ்தமித்தது. இருள் பரவ ஆரம்பித்தது. கிளி கண்களுக்குப் படாமல் மறைந்தது. ஏமாற்றம் அடைந்த சிறுவன் வீடு திரும்ப எண்ணினான். ஆனால், திரும்பிப் போகும் வழியை அவன் மறந்து விட்டான். பறவையின் மேல் பார்வை வைத்து தொடர்ந்து வந்த அவன், திரும்பிப் போகும் வழியை அறியாமல் இருளின் நடுவில் திகைத்துத் தடுமாறினான்.

நம்முடைய வாழ்க்கையில் ஏதாவது ஒன்றினால் கவரப்பட்டு அல்லது இழுக்கப்பட்டு, அதனை எப்படியாவது அடைய வேண்டும் என்ற ஆதங்கம் பெருகும் போது, பல வேளைகளில் இந்தச் சிறுவனைப் போல பாதை தவறி, பழைய நிலைக்குத் திரும்ப முடியாத நிலைமைகள் ஏற்பட வாய்ப்புண்டு. இன்பத்தின் எல்லையை எட்டிவிட விரும்பிப் பின்தொடர்ந்த சாலொமோன் இராஜா, மறுபடியும் தேவனிடம் திரும்பி வர முடியாத அளவிற்கு நெடுந்தூரம் பாதை விலகிப் போனான். ஒரு குறிப்பிட்ட பதவி, அந்தஸ்து, படிப்பு, உயர்வு, பொருளாதார நிலைமை ஆகியவற்றை மிக முக்கியமாகக் கருதி ஓடும் போது, சில வேளை பரிசுத்தம், உண்மை, நீதி, விசுவாசம் ஆகிய பாதைகளை விட்டு விலக வேண்டிய கட்டாயம் ஏற்படலாம்.

ஓரளவிற்கு குடும்பத்தை நன்றாக நடத்துகின்ற அளவிற்குப் பொருளாதார வசதி பெற்றிருந்த ஒருவர், நல்ல ஆவிக்குரிய ஈடுபாடுகளை உடையவராயிருந்தார். ஆனால், அவருக்குள் எல்லாரையும் போல நாமும் உயரவேண்டும் என்ற ஆசை வந்தது. எனவே, அதிகமாகச் சம்பாதிக்கும் வழிகளை அதிகமாகத் தேட ஆரம்பித்தார். அவர் நினைத்தபடி நல்ல வருவாயைப் பெற முடிந்தது. ஆனால், ஆவிக்குரிய நடவடிக்கைகள் எதற்கும் நேரமில்லாத நிலைமை ஏற்பட்டது.

ஆவிக்குரிய அனுபவத்தில் தான் மிகவும் பின்தங்கிப்போன உண்மை அவருக்குப் புரிந்தது. ஆனாலும், வருவாய் தேடும் வழிகளை விட்டு ஒருபோதும் அவரால் திரும்பிவந்து, ஆவிக்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட இயலவில்லை. உலகப் பிரகாரமாக சில காரியங்களை விரும்புவதோ, எதிர்பார்ப்பதோ தவறல்ல. அதே வேளையில், அவைகள் நம்முடைய இலக்குகளாக மாறிவிடுமாயின், நம்முடைய பாதங்கள் வழிவிலகுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

சிந்தனைக்கு...

பண ஆசை காட்டாற்று வெள்ளம் போன்றது.
அதில் விழுந்தவர்களை அதன் போக்கில்தான் அது கொண்டு போகும்.

அக்டோபர் 10
உண்மை நிலை வெளிப்படும்

உபாகமம் 8:1–20

உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கு..
உபாகமம் 8:2

சீரியா தேசத்து நாகமான் பொன்னோடும் வெள்ளியோடும் எலிசாவிடம் வந்தபோதுதான், அவனுடைய வேலைக்காரனாகிய கேயாசியின் பொருளாசையின் உருவம் வெளியரங்கமானது. பாபிலோன் தேச பிரபுக்கள் எசேக்கியா ராஜாவின் அரண்மனைக்கு வந்தபோதுதான், எசேக்கியா ராஜாவின் சுயபெருமை தேடும் சுபாவமும், மனமேட்டிமையும் வெளிப்பட்டது. ஆம், ஒவ்வொரு மனிதனும் அவனுக்குள் உண்மையில் எப்படியிருக்கிறான் என்பதை வெளிப்படுத்தும் வேளைகளும் சூழ்நிலைகளும் வரும்.

சாதாரணமான சூழ்நிலைகளில், நம்முடைய உள்ளான மனதில் மறைந்திருக்கும் தீய சுபாவங்களும், இயல்புகளும் வெளியே தெரிவ தில்லை. ஏனென்றால், அவைகள் வெளிப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லை. மேலோட்டமாக நம்மிடம் வெளிப்படும் நல்ல குணநிலைகளைக் கண்டு, நாம் நம்மை மிகச் சிறந்தவர்களாக எண்ணிக் கொண்டிருப்போம். ஆனால், நம்முடைய உள் நிலையில் உள்ள தீய அம்சங்களை, நாம் சரியாகக் கண்டு கொள்ளத்தக்க சூழ் நிலைகளில், தேவன் நம்மை நிறுத்துகின்றார். அப்போதுதான், நம்மை உண்மை நிலையில் யார் என்று கண்டு கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

தேவன் இஸ்ரவேல் மக்களை கானகத்தில் கடுமையான சில சோதனைகள் வழியாகக் கடந்து வரச் செய்தார். அவர்கள் தங்களைக் குறித்த நிஜ நிலையைச் சரியாக அறிந்து கொள்ள வேண்டுமென்பது தேவ நோக்கமாயிருந்தது. சில நேரங்களில் நாம் நம்முடைய தவறுகளுக்கு சூழ்நிலையையோ, பிறரையோ காரணம் காட்டுகின்றோம். இந்த சூழ்நிலையால்தான் அல்லது இந்த மனிதரால்தான் தவறாக நடந்துகொள்ள நேர்ந்தது என எண்ணி, நம்மைப் பாதுகாக்க முனைகிறோம். ஆனால், உண்மையில் சூழ்நிலைகளும் சில மனிதர்களும், நாம் உண்மையில் உள் நிலையில் எந்தெந்தப் பகுதியில் பலவீனமாகவும், குறைவுபட்டவர்களாகவும் இருக்கின்றோம் என்பது வெளிப்படவே காரணமாகின்றன.

எனவே, நாம் உண்மையிலேயே சரியாக இருந்திருந்தால் எந்தச் சூழ்நிலையும், மனிதர்களும் நம்மிடம் தீயதைப் பிறக்கச் செய்ய முடியாது என்ற உணர்வோடு நம்முடைய பலவீனங்களை உணர முன்வர வேண்டும். சூழ்நிலையையும் மனிதர்களையும் காரணம் காட்டிக் கொண்டிருந்தால், அவைகள் தொடர்ந்து கொண்டிருக்கவே வழிவகுக்கும்.

சிந்தனைக்கு...

உன் குற்றங்களைக் கண்டறிய நீ கவனமாயிருந்தால்
பிறருடைய குற்றச்சாட்டுகளால் நீ குற்றவாளியவதல்ல.

அக்டோபர் 11
மனமும் சரீரமும்

சங்கீதம் 16:1–11

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்.
சங்கீதம் 16:8

மனிதன் சரீர ரீதியான பலவித வேதனைகளையும், கஷ்டங்களையும் தாங்கிக் கொள்கிறான். பல விதமான நோய்கள் அவனை கடுமையாகத் தாக்கி வருத்தப்படுத்தினாலும், அவைகளைச் சகித்துக் கொள்ள முடிகிறது. ஆனால், மனரீதியாக வரும் விசனங்களையும், நோவுகளையும், அழுத்தங்களையும் அந்த அளவிற்குத் தாங்கிக்கொள்ள, அவனால் முடிவதில்லை. மனித மனம் மிகவும் நுண்ணுணர்வு கொண்டதாக இருப்பதால், சில நேரங்களில் சிறு சிறு வேதனை களைக்கூட சகிக்க முடிவதில்லை.

அடிதடிகளும், சண்டைகளும், கொலைகளும் ஏன் நிகழ்கின்றன? மனித மனதில் ஏற்படும் சிறு காயங்களைத் தாங்க முடியாததால்தானே. ஏன் இவ்வளவு தற்கொலைகள் நிகழ்கின்றன? மனவேதனையைப் பொறுத்துக் கொள்ளும் வலிமை இல்லாததால்தானே. பரீட்சையில் தோற்றதற்காக ஒரு மாணவி தற் கொலை செய்கிறாள். கணவன் திட்டிவிட்டானே என்ற மனவேதனை ஒரு மனைவியைத் தற்கொலைக்குத் தூண்டுகிறது.

இவற்றிலிருந்து எதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது? சரீரப்பிரகார மான வேதனைகளைவிட, மனம் சம்பந்தமான வேதனைகளே மனிதனை மிகவும் பாதிக்கிறது. அப்படியானால், இந்த மனதில் எழும் பிரச்சினைகளைச் சந்திக்கவும், தாங்கவுமே ஒரு மிகப் பெரிய ஆற்றல் தேவைப்படுகிறது. யார் அதைத் தரமுடியும்? தேவன் மட்டுமே தர முடியும். ஆனால், அநேகர் தங்கள் சரீர சம்பந்தமான தேவைகளுக்காக கர்த்தரை அதிகமாகத் தேடுகின்றார்களே யன்றி, மனசம்பந்தமான தேவையைச் சரியாக உணருவதில்லை. சரீர சுகம், பிரச் சினைகளிலிருந்து விடுதலை, போன்ற உடல் சம்பந்தப்பட்ட காரியங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை மனதின் தேவைகளுக்குக் கொடுப்பதில்லை.

இந்த உலக வாழ்க்கைச் சூழ்நிலைகளில் நாம் பலவித மனப்பிரச்சினை களைச் சந்திக்க நேரிடுகிறது. பல விதங்களில் மனநிலையில் வேதனைகளை அனுபவிக்கும் வேளைகள் வருகின்றது. எனவே, நம்முடைய மனதிற்குத் தைரியத் தையும், தாங்கும் சக்தியையும், நிதானத்தையும், அமைதியையும், உற்சாகத் தையும், நம்பிக்கையையும், சந்தோஷத்தையும் பெற்றிட, கர்த்தரை அதிகமாகத் தேடவேண்டும். அது பிறருடைய ஜெபங்களால் நமக்குள் வராது. நம்முடைய இருதயத்தில் கர்த்தர் தங்கிச் செயல்படவேண்டும்.

சிந்தனைக்கு...

செல்வங்களின் பெருக்கம் அல்ல. இறைவனோடுள்ள
நெருக்கமே உனக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தரும்.

அக்டோபர் 12
தாழ்மை

1 கொரிந்தியர் 4:1–21

உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்?
1 கொரிந்தியர் 4:7

தாழ்மை என்னும் சுபாவம், தேவனுடைய நன்மைகளை நம் பக்கமாகக் கொண்டுவரும் சக்திவாய்ந்த காந்தமாகும். ஒரு மனிதன் தேவனை எந்த அளவிற்கு அறிந்திருக்கின்றான்? எந்த அளவிற்கு தேவ வல்லமை அவனிடம் இருக்கின்றது? இவைகளை அறிய விரும்பினால், அவனிடம் காணப்படும் தாழ்மையின் அளவை வைத்து அதனை அறிந்து கொள்ளலாம். ஏனென்றால், தேவனை அதிகமாக அறிகின்ற அனுபவமும், தேவனுடைய காரியங்களைப் புரிந்து கொள்ளுகின்ற பக்குவமும் பெருகுகின்றபோது, தாழ்மை என்னும் சுபாவமும் சேர்ந்தே பெருகும்.

தேவன் ஒரு மனிதனுக்குத் தம்மை அதிகமாக வெளிப்படுத்தும் அல்லது தம்முடைய ரகசியங்களை அறிவிக்கும் ஒவ்வொரு படிகளுக்கு முன்னாலும், அந்த மனிதன் தன்னுடைய தகுதியற்ற நிலைமையை அறிந்து கொள்ளச் செய்கிறார். தன்னுடைய சுயஞானம், அறிவின் மிகுதி, திறமைகள் ஆகியவற்றின் மூலம் தேவனை அறியவும் முடியாது. தேவனுடைய காரியங்களைச் செய்யவும் முடியாது என்ற உண்மையை அவன் அனுபவரீதியாக அறிகின்றான்.

அந்த அறிவு வளர வளர, அவன் தேவனுக்கு முன்பாகத் தன் தகுதியின்மையை உணர்ந்து, முற்றிலுமாக அவரை நிஜமாகச் சார்ந்து கொள்கின்றான். அங்கே தேவன் தம்மை அவன் அதிகமாக அறியும்படி செய்கிறார். தம்முடைய கிருபைகளை அதிகமாக அவனுக்குக் கொடுக்கின்றார். இப்போது அவன் மேன்மை பாராட்டத்தக்க உயர்ந்த நிலையில் வந்துவிட்டான். ஆனால், அது யாவுமே தேவனுடைய கிருபையால் மட்டுமே வந்தது என்பதை அவன் அனுபவ ரீதியாக அறிந்திருப்பதால், தன்னைத் தாழ்த்திக் கொள்வதில் அவன் விசேஷ மகிழ்ச்சி அடைகிறான்.

தேவ ஐக்கியத்திலும் தேவனுக்கேற்ற வாழ்க்கையிலும் தொடர்ந்து செல்லுகின்ற மனிதன், சின்னச் சின்ன விஷயங்களில் கூட, தேவனுடைய கரம் விசேஷமாக ஏதாவது செய்தால் மட்டுமே, தன்னால் நிற்க முடியும் என்ற நிர்ப்பந்த நிலைக்கு வந்துவிடுகிறான். தன்னிடத்தில் அவன் பெலவீனத்தை உணரும்போது தேவனைச் சார்ந்து நின்று பலப்பட வேண்டிய தேவையை அதிகமாக உணருவான். அவ்விதம் அவன் பலப்படும்போது, தான் நிற்பதும் நிலைப்பதும் தேவ கிருபையால் வந்த பலமே என்பதைத் தெளிவாக உணருவான். அது அவனை மேலும் மேலும் தன்னைத் தாழ்த்திக் கொள்ள அவனை ஏவுகிறது.

சிந்தனைக்கு...

மனிதர்கள் முன்பாக உன் தாழ்மை வெளிப்படாவிட்டால்,
இறைவனின் முன்பாக உன் தாழ்மைக்கு எந்த விலையுமில்லை.

அக்டோபர் 13
பெற்றோரின் கடமை

சங்கீதம் 78:1–8

எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குத் தெரிவித்தார்கள்.
சங்கீதம் 78:3

நியூயார்க்கில் 10,000–ல் நூறு டீன்ஏஜ் பெண்கள் பள்ளிக்கூட நாட்களிலேயே குழந்தை பெற்றுக் கொள்கின்றார்கள். இப்பொழுது இப்படிப்பட்ட டீன் ஏஜ் தாய்மார்களுக்காக அங்கு தனியாகப் பள்ளிக்கூடங்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. நியூயார்க்கில்தானே, இந்தியாவில் அப்படியில்லையே என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுவிடாதீர்கள். நியூயார்க் அளவிற்கு இல்லாவிடினும் இந்தியாவிலும் இதுபோன்ற நிகழ்வுகள் ஏராளம் நடைபெறுகின்றன. பிள்ளைகளின் குழந்தைத்தனம் மறையும் முன்னே, அவர்கள் குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றார்கள். இந்த நிலமை நோவாவின் காலத்தைவிட, லோத்துவின் காலத்தைவிட, நாம் வாழும் உலகம் மிகவும் சீர்கெட்டுப் போய்விட்டதை வெளிப்படுத்துகின்றது.

இதற்குப் பிள்ளைகள் மட்டும் காரணம் அல்ல. இந்தத் தலைமுறைப் பெற்றோர்களில் பலர் ஆடம்பரத்தனத்தில் அதிகப் பிரியமுள்ளவர்கள். தேவனுடைய வழிகளில் நடவாத பெற்றோர்களின் பிள்ளைகள், சுய இச்சையின் பாதையில் செல்ல அதிகமாகத் தூண்டப்படுவார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக உலகப்பிரகாரமான கனவுடையவர்களாக விளங்குகின்றனர். வருவாய் போதுமான அளவிலிருப்பதால், பிள்ளைகள் டாக்டராக வேண்டும். இஞ்சீனியராக வேண்டும். விசேஷ தாலந்துடையவர்களாக வேண்டும் என்று ஆசைப்படுகின்றார்கள். ஆனால், பிள்ளைகள் சரியான ஒழுக்கங்களோடு, சரியான வழிகளில் நடக்கத்தக்கதாக அவர்கள் மேல் உயர்ந்த கனவுகள் இல்லை.

பக்திமிக்க பெற்றோரால் பக்தியான வழிகளில் வளர்க்கப்பட்ட சில பிள்ளைகள் கூட, இந்தப் பொல்லாத உலகத்தின் பாவ அழுத்தங்களை மேற்கொள்ள இயலாமல் வீழ்வது உண்மைதான். ஆயினும், பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்து கர்த்தருடைய வழிகளில் நடத்தி, அவர்களுக்குள் ஒழுக்கம் சார்ந்த உயர்ந்த வாழ்வைக் குறித்த நல்ல தரிசனத்தைக் கொடுக்க வேண்டியது பெற்றோரின் கடமை.

சிறுவயதிலிருந்து அவர்களைக் கர்த்தருடைய போதனைகளில் வளர்க்காமல், அவர்கள் டீன் ஏஜ் வயதுகளை எட்டும் போது அவர்களிடம் கீழ்ப்படிவையும், ஒழுக்கத்தையும் எதிர்பார்ப்பது சரியல்ல. தேவ உறவின் மகிமையை சிறுவயதுகளில் அவர்கள் உணர்ந்து கொண்டால், இந்த உலகத்தில் தவறான உறவுகளை அடையாளங்கண்டுகொண்டு விலகிச் செல்ல வாய்ப்பு கிடைக்கும். உங்கள் கடமையை நீங்கள் செய்தீர்களா?

சிந்தனைக்கு...

நீ சொன்னவைகளை உலகம் விரைவில் மறந்து விடும்.
உன்னிடம் பார்த்ததையோ என்றும் நினைவில் வைக்கும்.

அக்டோபர் 14
எது ஆசீர்வாதம்?

ஆதியாகமம் 39:1–23

கர்த்தர் யோசேப்போடே இருந்தார்.
ஆதியாகமம் 39:2

நம்மை வருத்துகின்ற பிரச்சினைகளிலிருந்து நமக்கு விடுதலை தந்து, நம்மை இளைப்பாற்றுவது தேவனுடைய ஆசீர்வாதம்தான். உலக வாழ்க்கைக்குத் தேவையான நன்மைகள் பலவற்றைத் தந்து, வாழ்க்கையைச் சற்று சௌகரியப் படச் செய்வது தேவ ஆசீர்வாதம்தான். ஆயினும், இதுபோன்ற காரியங் களை நாம் பெறுகின்றபோதுதான், தேவனால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக எண்ணக் கூடாது.தேவன் நம்மோடிருப்பதை விசுவாசித்து, அதனை நமக்குள் உண்மை யாகக் காணும் போதே, நாம் ஆசீர்வதிக்கப்பட்டுவிட்டோம் என்றுதான் அர்த்தம்.

ஏனென்றால், தேவன் நம்மோடிருப்பதை நமக்குள் உணர்வதுதான் மிகுதி யாக ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாகும். சர்வ லோகத்தையும் படைத்த தேவன் நம்மோடு உறவு கொண்டு ஐக்கியமாயிருப்பது அற்பமான ஒரு காரியமா? ஒரு வேளை தேவன் நம்முடைய வாழ்க்கையில் தம்முடைய நோக்கங்கள் நிறை வேறுவதற்கேதுவாக பணம், பொருள், உயர்வு போன்ற நன்மைகளைத் தரக் காலதாமதம் ஆகலாம். நாம் தேவனுக்கேற்ற விதமாக உருவாக்கப்படுவதற்காக சில பிரச்சினைகளிலிருந்து விடுதலை செய்யவும், சில கஷ்டங்களிலிருந்து நம்மை வெளியே கொண்டுவரவும், தேவன் சற்று காலதாமதம் செய்யலாம்.

ஆனால், தேவ ஐக்கியம் நமக்குள் உணரப்படும் போதே சமாதானம், தெய்வீக சந்தோஷம், நம்பிக்கை, பரிசுத்தம் ஆகிய மேன்மையான செல்வங்கள் நமக்குக் கிடைத்து விடுகிறது. ஒரு வேளை பணம் பொருள், அந்தஸ்து, செழுமை போன்ற விஷயங்கள் நம்மிடம் இல்லாத நிலையில், உலகத்தின் பார்வைக்கு நாம் எதுவுமற்றவர்களாகக் காணப்படலாம். ஆனால், தேவனுடைய பார்வையில் நாம் தெய்வீகச் செல்வங்களைப் பெற்றுவிட்ட ஆசீர்வாதமான மக்களே.

தேவன் என்னோடிருக்கின்றார் என்று உறுதியாகக் கூற முடிந்த மனித னுடைய வாழ்வில், குறைவுகள் பல இருந்தாலும் தனக்குள் ஒரு பெரிய நிறை வையும், நிம்மதியையும், ஆவியின் சந்தோஷத்தையும் காண்பது உறுதி. அந்த அனுபவம் அவன் தேவனால் ஏற்கெனவே ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதை உறுதிப் படுத்தும். யோசேப்பின் ஆசீர்வாதம் எகிப்தில் உயர்பதவி அடைந்ததல்ல. சிறைச் சாலையிலிருந்தாலும் கர்த்தர் அவனோடிருந்தாரே. அந்த தேவ ஐக்கிய நிலை தான் அவனது மேன்மையான ஆசீர்வாதம்.

சிந்தனைக்கு...

இறை ஐக்கியம் என்னும் ஆசீர்வாத வேரைக் குறித்துக் கவலைப்படாதோர்,
இறைவனின் நன்மைகள் என்னும் கனிகளைக் காணமுடியாது.

அக்டோபர் 15

அறிவுத்திறன்

லூக்கா 10:17–24

ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து...
லூக்கா 10:21

அவர் ஒரு கிறிஸ்தவர். சமூகநலன் தொடர்பாக பல ஆய்வுக்கட்டுரைகள் எழுதி டாக்டரேட் பட்டங்கள் பெற்றவர். இறையியல் கல்வியும் கற்று வேதப் புலமை பெற்றவர். ஆனால், ஒரு நாள் அவர் சென்ற சபையில் பிரசங்கம் செய்தவர் மிகவும் குறைவான கல்வியறிவு பெற்றவர். இறையியல் கல்லூரி செல்லாதவர். ஆனால், பைபிள் தொடர்பாக அவர் கூறிய பலவிஷயங்கள் இவரை ஆச்சரியப்படுத்தியது. மிகுதியாக இறையியல் கற்றிருந்தும் தன்னால் புரிந்து கொள்ள இயலாமலிருந்த சில வேதப் பகுதிகளை, இந்தச் சாதாரண மனிதனால் எப்படி இவ்வளவு சிறப்பாகப் புரிந்து கொள்ள முடிந்தது என்று யோசித்தார்.

உண்மை என்னவென்றால் இறையியல் கற்றவர் எதையும் அறிவுத்திறன் சார்ந்து சிந்தித்தார். ஆனால், அதிகம் கல்லாத இந்தப் பிரசங்கியாரோ, தேவ கிருபையையும் தேவ உறவையும் சார்ந்து நின்று சிந்தித்தார். இயேசுவின் சீடர்கள் இறையியல் வல்லுனர்களோ, வேதப் பண்டிதர்களோ அல்ல. ஆனால், இயேசு வின் உறவையும், பரிசுத்தாவியின் ஐக்கியத்தையும் அனுபவங்களாகக் கொண்ட வர்கள். அவர்கள் அறிவுத்திறன் மூலமாகச் சிந்தித்ததின் விளைவாக வேத உண்மைகளை அறியவில்லை. தேவ உறவுதான் அவர்களின் கண்களைத் திறந்து, உண்மைகளை விளங்கிக் கொள்ளச் செய்தது.

உயிர்த்தெழுந்த இயேசு சீடர்களிடம் செய்த முக்கியமான ஒரு கிரியை அவர்களின் மனக்கண்களைத் திறந்து வேதத்தை அறியச் செய்ததுதான். அறிவுத் திறன் அவசியமானது. நன்மையானது. ஆனால், தேவ சார்பின் அனுபவமும் தேவ உறவின் அனுபவமும்தான், தெய்வீக உண்மைகளை விளங்கிக்கொள்ள நமக்கு உதவி செய்யும்.

உலகரீதியாகப் பலவிஷயங்களுக்கு நம்முடைய அறிவுத்திறன் அதிக உபயோகமானது. ஆனால், உலகத்தைப் படைத்த தேவனோடு தொடர்புடைய காரியங்களைப் புரிந்து கொள்ளவும், அதன்படி நடக்கவும், அறிவுத்திறன் அல்ல. அனுபவங்கள் வேண்டும். மனந்திரும்பி இரட்சிப்பின் அனுபவம் பெற்று, தேவ ஆவியின் ஐக்கியம் ஏற்பட்டால்தான், ஆவிக்குரியவைகளைப் புரிந்து கொள்ளும் தெய்வீக அறிவு கிடைக்கும். ஏனென்றால் ஞானிகளுக்கும், கல்வி மான்களுக்கும் மறைவாயிருக்கும் விஷயங்கள், மறுபடியும் பிறந்த தேவனுடைய பாலகர் களுக்குத்தான் வெளிப்படுத்தப்படும்.

சிந்தனைக்கு...

தன்னுடைய முட்டாள்தனங்களை நன்கு கண்டுகொண்டவனே,
பிறரால் ஞானியாகப் பார்க்கப்படும் தகுதி பெறுகிறான்.

அக்டோபர் 16

கர்த்தரின் வழிகள்

சங்கீதம் 25:1–22

கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்.
சங்கீதம் 25:4

வேதம் நம்முடைய வாழ்க்கை தொடர்பான பல நல்ல வழிகளைக் காண்பிக்கின்றது. ஆயினும், நாம் சந்திக்கும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் வேதாகமம் நமக்குப் போதுமான வழிகாட்டியாகிவிட முடியாது. அதாவது, நாம் சந்திக்கும் ஒவ்வொரு சவால் மிக்க சூழ்நிலையிலும், அதனைக் கடந்து செல்ல வேதாகமத்தைப் படித்து ஒரு வழியைக் கண்டுபிடித்துவிட முடியாது. வேதாகமச் சத்தியங்களை வாசித்து பல விஷயங்களில் நல்ல வழிகாட்டுதலைப் பெற முடியும் என்பது உண்மையே. வேதம் குறைவற்றது என்று வேதம் சொல்கிறது. (சங்கீதம் 19:7) ஆயினும், வேதாகமம் என்பது முக்கியமாக நம்மைத் தேவனை நோக்கிச் செல்லவே வழிகாட்டுகிறது.

உன்னுடைய எந்த ஒரு சூழ்நிலைக்கும், எந்த ஒரு பிரச்சினைக்கும், எந்த ஒரு கேள்விக்கும், தேவன்தான் சரியான ஒரு வழியையும் தீர்வையும் காண்பிக்க முடியும் என்பதே, வேதம் நமக்கு உணர்த்துகின்ற உண்மை. நாம் வேதாகமத்தைச் சார்ந்து நிற்க அல்ல. வேதத்தைத் தந்த தேவனைச் சார்ந்து நிற்க அழைக்கப் படுகிறோம். எனவே, நமக்கு வேதாகமம் மட்டும் போதாது. வேதாகமத்தை நமக்குத் தந்தருளின தேவனும் வேண்டும்.

புதிய சூழ்நிலைகள், புதிய பிரச்சினைகள், புதிய கேள்விகள், புதிய முடிவுகள் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஆகியவை வரும்போது, வேதாகமத்தை மட்டும் படித்து நாம் ஒரு வழியைக் கண்டு பிடித்துவிட முடியாது. அங்கே தேவன்தான் நமக்கு ஒரு புதிய வழியைக் காண்பிக்க வேண்டும். எனவே, வேத விஷயங்களைத் தெரிந்தவர்களாக மட்டுமல்லாமல், தேவ உறவை அனுபவித்து, தேவனை அறிந்தவர்களாகவும் நாம் காணப்பட வேண்டும். செங்கடலைக் கடப்பதற்கும், யோர்தானைக் கடப்பதற்கும், எரிகோவைக் கடப்பதற்கும் பின்பற்றப்பட்ட வழிகள் ஒரே விதமானவைகள் அல்ல. அவைகள் வேறு வேறு வகை. அந்த வழிகள் அந்தந்தச் சூழ்நிலையில் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வழிகள்.

சிலரிடம் வேதாகம வழிகளைக் குறித்த நல்ல அறிவு உள்ளது. ஆனால், தேவனோடு தொடர்பு இல்லை. இதனுடைய விளைவாக அவர்கள் அறிந்த வேத வழிகள் அவர்களுடைய வாழ்க்கைச் சூழல்களுக்குப் பயன்படவில்லை. தேவனைச் சார்ந்து வாழும்போதுதான், புதிய புதிய சூழல்களில் சரியான வழிகளைத் தேவன் நமக்கு வெளிப்படுத்தித் தர முடியும்.

சிந்தனைக்கு...

இறைவனைக் குறித்த அறிவினால் பல பட்டங்களைப் பெறலாம்.
இறைவனுக்கேற்ற வாழ்வினால்தான் இறை ஆசியைப் பெற முடியும்.

அக்டோபர் 17
கவனத்தை ஈர்க்கட்டும்

மத்தேயு 5:1–16

மலையின் மேலிருக்கிற பட்டணம்...
மத்தேயு 5:14

சில இடங்களில் மலையின் உச்சியில் வீடுகள் மற்றும் கோயில்கள் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அந்தப் பகுதியில் எவ்வளவோ வீடுகள் இருந்தாலும், மலையின் மேலுள்ள அந்த வீடு உங்கள் கவனத்தை அதிகமாக ஈர்க்கும். வெகு தூரத்திலிருக்கும்போதே அந்த வீட்டின் மேல் உங்கள் கவனம் ஆச்சரிய உணர்வோடு பதிந்து விடும். ஏனென்றால், அது கவனத்தை ஈர்க்கின்ற விதத்தில் உயரமான இடத்தில் கட்டப்பட்டுள்ளது. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, அநேகருடைய கவனத்தைப் பட்டென்று ஈர்க்கத்தக்க விதத்தில், அமைய வேண்டிய ஒரு வித்தியாசமான விசேஷமான வாழ்க்கையாகும்.

நம்முடைய வாழ்க்கை கிறிஸ்துவுக்கேற்ற உயர்ந்த குணாதிசயங்கள், சிறந்த செயல்கள் என்னும் உயர்ந்த மலையின்மேல் கட்டப்பட்டிருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும். இன்று பலர் கிறிஸ்தவர்கள் என்று பிறரால் அறியப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் யாருடைய கவனத்தையும் விசேஷமாக ஈர்க்கவில்லை. உயர்ந்த வேறுபாட்டின் அனுபவம் அவர்களிடம் இல்லை. மற்றவர்களைப்போலவே அவர்களின் வாழ்க்கையும் தாழ்ந்த உலகத்திற்கேற்ற கொள்கைகளின் மேலும், குணங்களின் மேலும் கட்டப்பட்டிருக்கின்றன.

இன்று கிறிஸ்தவம் பேரளவிற்கு வளர்ச்சியடையாததற்குக் காரணம் என்ன? கிறிஸ்தவத்தை வாயினால் சொல்லுகின்ற அளவிற்கு, உயர்ந்த வாழ்க்கை மூலம் சொல்லாமல் போவதுதான். நாம் வார்த்தைகள் மூலமும், சித்தாந்தங்கள் மூலமும், உபதேசங்கள் மூலமும், கிறிஸ்தவமே சரி என்று நிரூபிக்க ஆர்வப்படுகின்ற அளவிற்கு, ஒரு சரியான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து காட்ட ஆர்வமற்றுப் போனமையால்தான், கிறிஸ்தவ ஒளி பிறருக்குத் தெரியவில்லை.

கிறிஸ்துவின் போதனைகளை வாசித்துத் அவைகளை மிகச் சிறந்தவைகளாக அறிக்கையிட்டு மெச்சிய பல அறிஞர்களும், மிகப்பெரியதலைவர்களும் உண்டு. ஆனால், அப்படி மெச்சியவர்களில் சிலர் அத்தகைய உயர்ந்தபோதனைகளின்படி வாழ்கின்றவர்களை தாங்கள் காணவில்லை என்று கூறியுள்ளனர். பலருடைய ஆன்மீக வெளிச்சம் சபை கூடுகை சூழ்நிலைகளில் மட்டுமே வெளிப்பட்டு, பொது ஜனங்களுக்கு எதுவும் தெரியாமல் போகிறது ஆனால், கிறிஸ்தவ வாழ்க்கை விளக்குத் தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்காக இருந்தால் மட்டுமே, பிறர் அதன் வெளிச்சத்தைக் கண்டு கர்த்தரை மகிமைப்படுத்தமுடியும்.

சிந்தனைக்கு...

இயேசுவின் வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவதைத் தவிர,
அவரைக் காண்பிக்க மேன்மையான வழி இல்லை.

அக்டோபர் 18
எச்சரிக்கை அவசியம்

1 கொரிந்தியர் 10:1–13

தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன்...
1கொரிந்தியர் 10:12

இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒரு இளைஞன், தன்னைப் போன்ற வாலிப வயதினரை, கர்த்தரை நோக்கி நடத்துவதில் அதிகக் கரிசனையுடன் செயல்பட்டான். குறிப்பாகக் கல்லூரி நாட்களிலே காதல் மாயைகளில் சிக்கி, பாலுணர்வு சார்ந்த பாவங்களுக்குள் வீழ்ந்திடாமல், இளவயதினரை மீட்க அதிக ஆசையுடன் செயல்பட்டான். ஆனால், அதுபோன்ற ஒரு ஊழியத்தில் கல்லூரி மாணவி ஒருத்தியின் கண்ணியில் விழுந்து, தன்னுடைய பெயரைக் கெடுத்துக் கொண்டான்.

நியூயார்க் உலக வர்த்தக மையம் செயல்பட்ட இரட்டைக் கோபுரம் தீவிர வாதிகளால் தாக்கப்பட்டது. அந்தக் கட்டிடத்தில் பற்றி எரிந்த நெருப்பை அணைத்து பலரை மீட்பதற்காக நூற்றுக்கணக்கான தீயணைப்புப் படை வீரர்கள் சென்றனர். ஆனால், அவர்களே நெருப்பில் சிக்கி யாவரும் உயிரிழந்தனர். மற்றவர்களைக் காப்பாற்றி நல்வழிப்படுத்தச் செல்லுகின்ற சிலர், தீயவழிகளில் திசைமாறிப் போய்விடுவது பரிதாபமான விஷயம். பாவத்தினால் பழுதுபட்டவர் களை மீட்கச் செல்லும் சிலரையே, பாவத்தில் விழும்படி பிசாசானவன் தந்திர மாகச் செயல்பட்டு விடுகிறான்.

அழியும் ஆத்துமாக்கள்மேல் கரிசனை கொண்டு செயல்படுவது சிறந்த விஷயம். பாவக்குழிகளில் வீழ்ந்து விடுவோரைத் தூக்கி விடச் செல்வது மேன்மை யான விஷயம். ஆனால், அதற்குத் தாகமும் விருப்பமும் மட்டும் போதாது. பாவத் திற்கேதுவான சூழ்நிலைகளிலும், சோதனைகளின் அழுத்தம் அதிகமாகச் செயல்படும் இடங்களிலும், உறுதியாக அசையாமல் நிற்கத் தக்க ஆவியின் ஆற்றல் வேண்டும். வலிமையான தேவ உறவும் பரிசுத்தாவியினால் பலப்படுத்தப் பட்டு நடத்தப்படும் அனுபவமும், தெளிவான தரிசனமும் இல்லாவிட்டால், எளிதாகப் பிசாசானவன் பாவக்கண்ணிகளுக்குள் விழவைத்து விடுவான்.

ஓநாய்களின் நடுவில் ஆடுகளைப் போலச் செல்லும் நாம், போதிய அளவிற்கு ஆவிக்குரிய வலிமையும், தேவனைச் சார்ந்த விசுவாசமும் இல்லாமல், எதையும் செய்ய முடியாது. யோசேப்பைப் போல தேவனோடிருக்கும் அனுபவம் வேண்டும். ஆபிரகாமைப் போல தரிசனத்தை நோக்கிப் பயணிக்கும் கிருபை வேண்டும். பவுலைப் போல தேவ ஆவியினால் பலப்படுத்தப்படும் அனு பவங் களோடு செயல்படும் பழக்கம் வேண்டும். அப்பொழுதுதான் உயர்ந்த நோக்கங் களில் வெற்றியடைய முடியும்.

சிந்தனைக்கு...

தவறுகள் வாழ்க்கையைக் காயப்படுத்துகின்றது, அதனை உணர மறுப்பதோ காயத்தை நிரந்தரப் புண்ணாக்குகிறது.

அக்டோபர் 19
கடின வார்த்தைகள்

11 தீமோத்தேயு 4:1–8

கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு புத்தி சொல்லு.

11 தீமோத்தேயு 4:2

ஒருமுறை குறிப்பிட்ட ஒரு சபையில் தேவ ஊழியர் ஒருவர் பிரசங்கம் செய்தார். அவர் பிரசங்கம் செய்யும் போது, தேவனுடைய சத்தியத்திற்கு முரண் பாடாக வாழ்வதையும், உண்மையில்லாமல் ஊழியம் செய்வதையும், விபச்சாரப் பாவத்திற்கு ஒப்பிட்டுப் பேசினார். பிரசங்கம் முடிந்த பின்பு ஒருவர் அவரிடம் வந்தார். ஐயா, உங்கள் பிரசங்கம் மிக மிக அருமையாக இருந்தது. ஆனால், ஒரு அன்பான தேவனைக் குறித்து பிரசங்கிக்கும் நீங்கள், உபயோகித்த கடுமையான வார்த்தைகளையும், பரிசுத்தமான ஒரு ஊழியத்தைச் செய்கின்ற உங்கள் வாயி லிருந்து வந்த விபச்சாரம் என்பது போன்ற வார்த்தைகளையும், என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை என்றார்.

அதற்கு அந்த தேவ ஊழியர், அந்த அன்பான ஆண்டவர் விரியன் பாம்புக் குட்டிகளே, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே, மறைந்திருக்கிற பிரேதக் குழிகள் (மத் 23:27) என்பது போன்ற கடுமையான வார்த்தைகளால் சிலரைக் கண்டித்தாரே. அதே பரிசுத்தமான கர்த்தர் இந்தப் பொல்லாத விபச்சார சந்ததியார் (மத் 16:4) என்ற அருவருப்பான வாக்கியத்தை உபயோகித்து சிலரைக் கண்டனம் பண்ணினாரே. அவற்றை எப்படி உங்களால் ஜீரணிக்க முடிந்தது? என்று கேட்டார். அதற்கு அவரால் பதில் சொல்ல இயலவில்லை.

பலருடைய சிந்தனை இவ்விதமாகவே உள்ளது. தேவன் அன்பாக இருப் பதால் அவரைக் குறித்த பிரசங்கங்கள் செய்திகள் யாவும் இனிமையாகவும், இலேசாகவும் இருக்கவேண்டும் என எண்ணுகின்றனர். தேவ செய்தி என்றால் எப்போதும் மற்றவர்களை உற்சாகப்படுத்துகிறவைகளாகவும், அவர்களுடைய ஆத்துமாவில் இதமாகத் தொனிக்கின்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றனர்.

ஆனால், ஒரு மனிதனுடைய வாழ்க்கையைச் சீர்திருத்தவும், அவனுடைய மனதைப் பண்படுத்தவும், அவனுடைய குணநிலைகளை ஒழுங்குபடுத்தவும், வெறும் கனிவும் இனிமையுமான வார்த்தைகள் மட்டும் போதாது. தேவன் தம் முடைய அன்பை மட்டுமே பிரசங்கங்கள் வழியாக வெளிப்படுத்தவில்லை. சில தவறான காரியங்களின் மேல் அவருக்கிருக்கும் கோபத்தையும், சில செய்கை களின் மேல் அவர் கொண்டிருக்கும் அதிருப்தியையும், அவர் தம்முடைய செய்தி களில் வெளிப்படுத்த விரும்புகிறார்.

சிந்தனைக்கு...

சத்தியத்தின் கசப்பை ஏற்க விரும்பாதவர்கள்,
நித்தயத்தின் இனிமைக்குத் தகுதிபெற முடியாது.

அக்டோபர் 20

வெளிப்படுத்துங்க

சங்கீதம் 30:1–12

கர்த்தாவே என்னை நீர் குணமாக்கினீர்.
சங்கீதம் 30:2

இன்னொருவரின் ஒரு வார்த்தையோ அல்லது ஏதாவது ஒரு செயலோ உங்களைக் கோபப்படுத்துகிறது. ஆனால், கோபத்தை வெளிப்படுத்தாமல் மறைக்கின்றீர்கள். மறைக்காவிட்டால் உங்களைக் கோபக்காரர் என்று பேரிடு வார்கள். இன்னொருவர் நடந்து கொண்ட விதம் உங்களை மனவருத்தப்படுத்து கிறது. ஆனால், அந்த மனவருத்தத்தை மறைத்துக் கொள்கின்றீர்கள். ஏனென் றால், அந்த வருத்தத்தை வெளிப்படுத்தினால், அது மேலும் பல வருத்தங்களை வர வழைத்துவிடும். இவ்விதமாகப் பிறரால் ஏற்பட்ட கோபம், வருத்தம், மனக் காயம், விசனம் ஆகியவற்றை மறைத்துக்கொண்டே வாழ்ந்து, பிரச்சினைகளைத் தவிர்க்க விரும்புகின்றீர்கள்.

உங்களின் நோக்கம் நல்லது. இவ்விதமாக அடக்காமல் எல்லாவற்றையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தால், வாழ்க்கையே போராட்டக் களமாகிவிடும். ஆனால், இது ஆபத்தானது. மனிதன் தனக்குள் ஏற்படும் நியாயமான உணர்வு களை அடக்கி அடக்கியே வாழ்ந்தால், அது அவனை மனதிலும் உடலிலும் பாதித்து, பல பிரச்சினைகளைக் கொண்டு வரும். இவ்விதம் அடக்கிப் பழகுகின்றவரர் களுக்கு அல்சர், இரத்தக் கொதிப்பு, இதயக் கோளாறுகள், சர்க்கரை நோய் போன்ற பல வியாதிகள் உருவாக முடியும்.

உணர்வுகளை அடக்கினாலும் பிரச்சினைதான். வெளிப்படுத்தினாலும் பிரச்சினைதான். அப்படியானால் என்ன செய்யலாம்? நாம் மனதிற்குள் ஏற் படுகின்ற விசனங்களையும், கோபங்களையும், காயங்களையும், நேருக்கு நேர் மனிதர்களிடம் வெளிப்படுத்துவதால்தான் பிரச்சினைகள் அதிகமாகின்றன. ஆனால், அவைகளை தேவனிடம் சொல்லிப் பழக வேண்டும். இருதயத்தில் எதையும் வைக்காமல் கர்த்தருக்கு முன்பாகக் கொட்டிப்பழக வேண்டும்.

கோபத்தை, எரிச்சலை, விசனத்தை, வருத்தத்தை, காயப்பட்ட விதத்தை, அவமானமாக உணர்ந்த விதத்தை, அப்படியே மறைக்காமல் சொல்லிப்பழக வேண்டும். இந்த வழிமுறையைத்தான் தாவீது கடைப்பிடித்தான். அவன் தன் னுடைய வருத்தங்களையும், மனத்தாங்கல்களையும், கோபத்தையும், நேருக்கு நேர் காண்பித்து, மேலும் மேலும் தன்னை வேதனைப்படுத்தவில்லை. அதற்குப் பதிலாகத் தேவனிடம் போய், எல்லாவற்றையும் சற்றும் மறைக்காமல் பகிர்ந்து கொள்வான். அதனுடைய விளைவாக ஏற்பட்டவைதான் அநேகருக்கு அமைதி யையும், ஆறுதலையும் தரும் ஏராளம் சங்கீதங்கள்.

சிந்தனைக்கு...

உலகம் உன்னைப் பகைக்கும் போதுதான்,
இறைவனோடு உனக்குள்ள நட்பு உறுதிப்படும்.

அக்டோபர் 21

கோபம் ஏன்?

அப்போஸ்தலர் 7:51–60

அவர்கள் கேட்டபொழுது மூர்க்கமடைந்து...
அப்போஸ்தலர் 7:54

நாம் மறைக்க விரும்பியதை யாராவது ஒருவர் பார்த்துவிட்டால், அவர் மேல் கோபம் வருகின்றது. பிறருடைய கருத்துக்கள் நம்முடைய கருத்துக்களோடு இசையாவிட்டால், நமக்குக் கோபம் வருகின்றது. நாம் எப்படிப் பார்க்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோமோ, அப்படி நம்மை மற்றவர்கள் பார்க்காமல் உள்ளபடியே நம்மைப் பார்த்துவிட்டால், நமக்குக் கோபம் வருகிறது. நம்முடைய செயலில் உள்ள ஓர் தவறை ஒருவர் சுட்டிக்காட்டினால், நமக்குக் கோபம் வருகிறது. எனவே, அவர்களை நமது எதிரிகளாகவும் விரோதிகளாகவும் எண்ணுகின்றோம்.

ஆனால், இது நியாயமற்ற கோபம் அல்லவா. நாம் கோபிப்பது உண்மையில் இன்னொரு மனிதனை அல்ல. ஒரு உண்மையைத்தான் கோபித்துக் கொள்கின்றோம். நாம் சில நேரங்களில் சத்தியத்தைத்தான் விரோதிக்கின்றோம். சத்தியத்தைத்தான் வெறுக்கின்றோம். அழகாகத் தோன்றவேண்டும் என்ற ஆசையில் ஒரு மனிதன், நன்றாக ஒப்பனை செய்து கொண்டு கண்ணாடியைப் பார்த்தான். அங்கே அந்தத் தோற்றம் எதிர்பார்த்த அளவிற்கு நன்றாகயில்லை. கோபமடைந்த அவன் இந்த கண்ணாடி மிகவும் மட்டமானது என்று எண்ணி, அதனைக் கீழே போட்டு உடைத்தான். ஆனால், உண்மையில் அவன் கோபமடைந்தது ஒரு காண்ணாடியின் மேல் அல்ல. ஒரு உண்மையின்மேல்.

என்னுடைய புத்தகத்தின் செய்திகள் கர்த்தருடைய கிருபையினால் பலரை மகிழ்ச்சியாக்குகிறது. ஆனால், சிலரைக் கோபமூட்டவும் செய்கின்றது. அது நான் எழுதியது தவறு என்பதால் அல்ல. அவர்களின் தவறு சுட்டிக் காட்டப்பட்டதாலேயே அந்தக் கோபம். அவர்களின் உண்மைநிலை சுட்டிக் காட்டப்படும் போது, அவர்கள் கோபமடைகின்றனர். இந்தக் கோபம் ஒரு மனிதனுக்கு எதிரானது அல்ல. அது சத்தியத்திற்கு எதிரானது.

ஆனால், நம்முடைய உண்மையான நிலைமைகள் அறியப்படும்போது நாம் கோபமடைந்தால், அது நோயாளியின் நோயை மருத்துவர் கண்டு பிடித்ததற்காக அவர்மேல் கோபமடைவது போன்ற செயலாகும். அதனால் நோயாளிக்குத் தான் நஷ்டம். இயேசுவின் சத்திய வார்த்தைகள் அன்றைய பரிசேயர்களின் உண்மைநிலையை வெளியரங்கமாக்கியது. அவர்கள் அதற்காகத் துக்கப்பட்டு மனந்திரும் பாமல், இயேசுவின்மேல் கோபமடைந்து அவரை வெறுத்தார்கள். எனவே, தேவனுடைய தண்டனைக்குத் தப்பும் வாய்ப்பை இழந்து போனார்கள்.

சிந்தனைக்கு...

பக்தியில்லாத துன்மார்க்கனைவிட, பண்புகள் இல்லாத சன்மார்க்கன் அதிகக் கேடானவன்.

அக்டோபர் 22

நான் யார்?

1 சாமுவேல் 17:26–40

நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண...
1 சாமுவேல் 17:33

ஒருவர் இன்னொருவரை முட்டாள் என்றோ, அறிவில்லாதவன் என்றோ எண்ணலாம். ஒருவர் இன்னொருவரை எதற்கும் லாயக்கில்லாதவன் என்றோ, தகுதியற்றவன் என்றோ எண்ணலாம். ஆனால், இது ஒருவர் மற்றொருவரைக் குறித்துக் கொண்டிருக்கும் ஒரு கருத்துத்தானேயன்றி, அதுவே அந்த நபரைக் குறித்த உண்மை ஆகிவிடாது. சில நேரங்களில் மற்றவர்கள் கோபத்தின் விளை வாகவோ, பொறாமையின் விளைவாகவோ, தவறான கணக்கிடுதலின் விளை வாகவோ, நம்மைக் குறித்துத் தவறான அபிப்பிராயத்தைக் கொள்ள நேரிடும். அதை நாம் சரி என எண்ணுவது போல நடந்து கொள்ளக் கூடாது. நம்மைக் குறித்து நமக்கு ஒரு சரியான தெளிவான கருத்து இருக்க வேண்டும்.

கோலியாத்தை வெல்லுவதற்கான ஆற்றலும், தேவ கிருபையும் தாவீதுக் கிருந்தது. ஆனால், அவனுடைய ஆற்றலை அரசனாகிய சவுலோ, அவனுடைய சகோதரர்களோ சரியாக அறிந்திருக்கவில்லை. அவர்கள் அவனை சாதாரண மான ஒரு ஆட்டிடையனாகவே பார்க்க விரும்பினார்கள். ஆயினும், அவர் களுடைய அபிப்பிராயத்தின் அடிப்படையில் தாவீது தன்னைப் பார்க்கவில்லை. அவன் தனக்குத் தேவன் தந்துள்ள ஆற்றலினைக் குறித்த, சரியான நிச்சயத்தைக் கொண்டிருந்தான். எனவே, மற்றவர்கள் முடியாது என்று சொன்ன ஒன்றை, அவன் முடியும் என்று நிரூபித்தான்.

அறிவியல் கண்டுபிடிப்புகளுக்காக பிரசித்தி பெற்ற, தாமஸ் ஆல்வா எடிசனின் அற்புதமான ஆற்றல்களை அறியாமல், கல்வி கற்க லாயக்கற்ற ஒரு வராக அவர் எண்ணப்பட்டதுண்டு. ஆனால், அவர் மற்றவர்களின் கணக்கீடுகளை அடிப்படையாக வைத்துச் செயல்படாததால், பெரிய சாதனையாளராக மாறினார்.

மற்றவர்களின் கருத்துக்களையும், விமர்சனங்களையும், அபிப்பிராயங் களையும் நாம் அசட்டை செய்துவிடுவது நல்லதல்ல. நம்மை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதே வேளையில், நம்மைக் குறித்த ஒரு சரியான கணக்கீட்டை நாம் கொண்டிருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பெயல்செபூல் என்றும், ஜனங்களை வஞ்சிக்கின்றவர் என்றும், கலகம் செய்கிறவரென்றும் அக்காலப் பரிசேயர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். ஆனால், அவைகள் இயேசுவை வருத்தப்படுத்தவில்லை. ஏனென்றால், அவர் தம்மைக் குறித்த சரியான அறி வினையும் தெளிவினையும் கொண்டிருந்தார்.

சிந்தனைக்கு...

அவசரப்பட்டு ஒருவரின் கருத்தை ஏற்காதே.
ஆத்திரப்பட்டு எதிர்க்கவும் செய்யாதே. சிந்தித்துப்பார்.

அக்டோபர் 23
சாட்டையும் கோலும்

ரோமர் 14:1–13

ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று...
ரோமர் 14:13

சகோதரர் சத்தியசாமி ஒரு பெரிய ஆவிக்குரிய சபையில் முக்கியமானவர். சிலர் பினகாஸ் என்றும், சிலர் நாத்தான் என்றும், சிலர் யோவான் ஸ்நானன் என்றும் அவரை அழைப்பதுண்டு. ஏனென்றால் பெரியவர், சிறியவர் என்று பாராமல் யாருடைய குற்றங்குறைகளையும் அவர் தயங்காமல் கோடிட்டுக் காட்டுவார். சின்னதோ, பெரியதோ தவறு, குற்றம் என வந்துவிட்டால் தன்னுடைய எக்ஸ்ரே கண்களால் பார்த்து, அதனைத் தைரியமாகக் கண்டிக்காமல் விட மாட்டார். அவருடைய கண்களுக்கு ஒருவர் சரியானவராகக் காணப்படுவது மிக, மிகக் கடினம். ஆனால், இவர் அன்பானவர் என்றோ, தாழ்மையானவர் என்றோ, பிறருக்கு உதவியானவர் என்றோ யாராலும் அறியப்படவில்லை.

சிலருக்கு நல்ல வேத அறிவு உள்ளது. எது சரி, எது தவறு என்று சரியாகப் பார்க்கவும், அதன் அடிப்படையில் யார் தவறினாலும் சுட்டிக்காட்டும் தைரியமும் உள்ளது. ஆனால், அந்த அறிவையும், தைரியத்தையும் கொண்டு மற்றவர்களை வலது இடது புறம் சாயவிடாமல் நியாயந்தீர்க்க முடிகின்றதேயன்றி, மற்றவர் களுக்கு எந்த விதத்திலும் உதவியாயிருக்க முடியவில்லை. அவர்கள் தங்களை யோவான் ஸ்நானனைப் போல, மிகுந்த கறாறானவர்களாகக் காட்டிக் கொள்ள இடம், ஏவல், சூழ்நிலை பாராமலே நீ செய்தது சரியல்ல என்று முழங்குகின்றனர்.

நாம் பினகாசுகளாகவும், யோவான்களாகவும் இருப்பது நல்லதுதான். ஆனால், தவறுகளைக் கண்டறிந்து தீர்க்கமாகக் கூறுவது மட்டுமே நமக்கு ஆன்மீகமாகிவிடக்கூடாது. ஜனங்கள் நம்மை கிறிஸ்தவ நற்குணங்களுக்காகவும் அறிந்திருக்க வேண்டும். நம்முடைய அன்பை, தயவை, இரக்கத்தை, தாழ்மையை, பொறுமையை அநேகர் காண முடிகிற அளவிற்கு, நம்முடைய வாழ்க்கை இருக்க வேண்டும். எந்த ஒரு செயலோடும், அன்பும், உண்மையும், தாழ்மையும், உயர்ந்த குறிக்கோளும் இணையவில்லையெனில் அது வீணானது.

பரிசேயரையும், சதுசேயரையும், வேதபாரகரையும் கடுமையாகக் கண்டிக்கிற வராகவும், எச்சரிகின்றவராகவும் அறிப்பட்டிருந்த இயேசு, நன்மை செய்யச் சுற்றித் திரிகிறவராகவும், மனதுருக்கமுள்ளவராகவும், பிறரது துன்பங்களுக்காகப் பரிதவிக் கிறவராகவும் அறியப்பட்டிருந்தார். அவருடைய கையில் மாய்மாலக்காரர் களை அடிக்கும் சாட்டை மட்டுமல்ல. அநேகரை ஆற்றி, தேற்றி, திடப்படுத்தி, நல்வழியில் நடத்திச் செல்லும் நல்ல மேய்ப்பனின் கோலும் இருந்தது.

சிந்தனைக்கு...

உன்னுடைய அன்பை ஒரு சிலராவது காணாத நிலையில், உன்னுடைய கண்டிப்பை எத்தனைபேர் கண்டாலும் அது பரிசுத்தம் அல்ல.

அக்டோபர் 24

பதவி

பிலிப்பியர் 2:1–19

அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்.
பிலிப்பியர் 2:7

ஒருமுறை கிறிஸ்தவத் தொழிலதிபர் ஒருவர், பல லட்சங்களை ஒரு சபைக்குத் தாராளமாகக் கொடுத்து சபைக் கமிட்டியின் முக்கிய பதவியைப் பெற்றதாக சிலர் கூறினர். அது அவர்கள் கூறியபடியே உண்மைதானா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், இதுபோன்ற காரியங்கள் இன்றைய கிறிஸ்தவ உலகில் பரவலாக நடைபெறுவது உண்மை. ஒரு கூட்டம் ஜனங்களின் நடுவில் ஒரு தலைவனைப் போல அறியப்பட வேண்டும், மற்றவர்கள் மேல் அதிகாரம் செலுத்த வேண்டும். மற்றவர்களிடமிருந்து கனத்தையும், மரியாதையையும், எவ்வழியிலாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வெறி, இன்று சபைகளின் நடுவில் அநேகரைப் பேய்களாக மாற்றிவிட்டது.

ஆனால், இது கிறிஸ்தவமும் அல்ல. இத்தகைய நபர்கள் கிறிஸ்தவர்களும் அல்ல. ஆண்டவராகிய இயேசு, தம்முடைய சீடர்கள் அடிமைகள் போல, மற்றவர்களுக்கு பணி செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தார். எனவே, ஒரு முன் மாதிரியை ஏற்படுத்துவதற்காக அவரே அடிமை போல, தம்முடைய சீடர்களின் கால்களைக் கழுவினார்.

இயேசுவின் பார்வையில் தலைவன் என்பவன், மற்றவர்களின் கால்களைக் கழுவுகின்ற அளவிற்குத் தன்னைத் தாழ்த்தி, பணி செய்கின்ற ஒரு அடிமை போன்றவன். ஆனால், இன்று தலைவன் என்பவன் மற்றவர்களை அடிமைகளாக்கி, தன்னுடைய கால்களைக் கழுவிக் கொள்கின்ற அகம்பாவமான முதலாளி போன்றவன். எனவே, இன்றைய கிறிஸ்தவச் சபைகளிலும், ஸ்தாபனங்களிலும், தலைமைத்துவ பதவிகளுக்கு வெறித்தனமான போட்டி நிலவுகிறது. எல்லோருக்கும் தலைகளாகத் தோன்ற ஆசையிருக்கின்றதேயன்றி, கால்களாக நடந்து களைக்க மனமில்லை. எனவேதான் இன்றைய சபைகளும் ஸ்தாபனங்களும், கிறிஸ்துவின் பாதையில் நடந்து எதையும் சாதிக்க இயலாமல் முடமாகிக் கிடக்கின்றன.

ஆம், உண்மையாக நாம் கிறிஸ்துவை மகிமைப்படுத்தவும், அவருக்குச் சேவை செய்யவும் விரும்பினால், நாம் அடிமைகளைப் போல எந்தக் கனத்தையும், மரியாதையையும், புகழையும் எதிர்பாராமல், நம்மை தாழ்த்திக் கொள்ளவே முன் வருவோம். யார் பெரியவன்? என்ற எண்ணம் இயேசுவின் சீடர்களுக்கு இருக்கவே செய்தது. ஆனால், அவர்கள் தங்களை மாற்றிக்கொண்டார்கள். இன்று நாம் தலையாக இருந்து உலகத்தின் கனத்தை எதிர்பாராமல், காலாக நடந்து கர்த்தரின் கனத்தைத் தேடுவோமாக.

சிந்தனைக்கு...

தலையாக இருக்கிறவர்களையே ஜனங்கள் மதிக்கிறார்கள்.
தாழ்மையாக இருப்பவர்களையே இறைவன் மதிக்கிறார்.

அக்டோபர் 25
உலகத்தையே கவனித்தால்...

பிரசங்கி 1:1–18

சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம்...
பிரசங்கி 1 : 14

அரசனும் ஞானியுமாகிய சாலொமோன் உலக ரீதியாக சகல விதமான நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் மிகுதியாகப் பெற்றிருந்தான். பணம், பொருள், செல்வாக்கு, அந்தஸ்து, அறிவு, ஞானம், சுகபோகம் யாவும் அவனுக்குக் குறைவின்றி இருந்தது. ஆயினும், சூரியனுக்குக் கீழே நடந்த யாவற்றையும் கவனித்துப் பார்த்த அவனுக்கு யாவும் மாயையாகவும், மனசஞ்சலத்திற்குரிய தாகவுமே தோன்றியது. அவன் திருப்தியையும், நிறைவையும் அனுபவிப்பதற்குப் பதிலாக சஞ்சலத்தையும், அதிருப்தியையுமே கண்டான்.

அவன் உலகத்திலுள்ள யாவற்றையும் ஆராய்ந்தும், தன்னை ஆராய்ந்து பார்க்கவில்லை. அவனுடைய கண்கள் தேவனுக்குரியவைகளைக் காணவில்லை. அவை எப்போதும் உலகத்திற்குரியவைகளையே பார்த்தன. அவன் தேவனையும் தன்னையும், தன்னுடைய மனநிலைகளையும் சரியாகக் கவனிக்க ஆர்வப் பட்டிருந்தால், அவன் திருப்தியையும் நிறைவையும் கண்டிருக்க முடியும். உலகத் தையும் உலக இன்பங்களையுமே பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய கண்கள் எதனாலும், எப்போதும் திருப்தியடைய முடியவில்லை.

தாவீதின் கண்கள் எப்போதும் தேவனையே நோக்கிக் கொண்டிருந்தது. அவன் தன்னை தனக்குள் ஆராய்ந்து பார்க்கும் பழக்கத்தை உடையவனா யிருந்தான். உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாக இருக்கிறது என்று தேவனைப் பார்த்துச் சொன்னான். (சங் - 26:3) நம்முடைய கண்கள் தேவனுக்கு முன்பாக நம்முடைய நிலைமை என்ன என்பதை, அனுதினமும் கவனித்துப் பார்க்க வேண்டும். அப்போது, நம்முடைய கண்கள் மேன்மையானவைகளையும், நிறைவானவைகளையும் காணும் வாய்ப்பைப் பெறும்.

சிலருடைய பார்வையும், சிந்தனையும் எப்போதும் பிறர் மேலும், பிறருடைய நடவடிக்கைகள் மேலுமே இருக்கும். அவர்கள் தங்களையும், தங்களின் நட வடிக்கைகளையும் கவனித்துப் பார்ப்பதில்லை. எனவே, பிறருடைய பேச்சுகளும், செயல்களும்,அவர்களை மிகுதியாகப் பாதித்து, அதிருப்திக்குள்ளும் சலிப்பிற் குள்ளும் ஆழ்த்திவிடும். நம்மைக் கவனித்துப் பார்க்கும் பழக்கம் நம்முடைய குறைகளையும், தவறுகளையும் தேவனுடைய வெளிச்சத்தில் கண்டறிந்து, அகற்றும் வாய்ப்பை உருவாக்கும். அதுவே தேவனுடைய அன்பிலும், உறவிலும், சந்தோஷத்திலும் நம்மை வளர்ந்தோங்கச் செய்யும்.

சிந்தனைக்கு...

மற்றவர்களையே கவனித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றவன் தன்னைக் கவனித்து உணரும் பண்பை இழந்து போயிருக்கிறான்.

அக்டோபர் 26
ஆவியைப் பெற்றால்...

1 யோவான் 3:1–16

தேவனால் உண்டானவனல்ல...

1 யோவான் 3 : 10

தேவன் பரிசுத்தர், நீதிபதி, நியாயம் நிறைந்தவர், உண்மையானவர், அக்கிரமம் வெறுப்பவர் என்றெல்லாம் அநேக விதங்களில் நாம் அறிந்திருக்கிறோம். எனவே, அவருக்குள் இருக்கும் ஆவி, பரிசுத்தம், நீதி, நியாயம், உண்மை, அக்கிரம வெறுப்பு, அன்பின் நிறைவு ஆகிய தன்மைகளைக் கொண்டதாகவே இருக்க முடியும். அத்தகைய பரிசுத்த ஆவியைத்தான் இரட்சிப்பின் அனுபவத்தின் மூலம் நாம் பெறுகின்றோம்.

மேற்கொண்ட தன்மைகளைக் கொண்ட பரிசுத்த ஆவியை நாம் பெற்றால், அந்த ஆவி நீதியை, பரிசுத்தத்தை, அன்பினை, நியாயத்தை, உண்மையை, நேசிக்கவும், அவைகளை வாஞ்சிக்கவுமே நம்மைத் தூண்டவும், ஏவவும் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. இதுவே பரிசுத்தாவியின் கிரியையாக இருக்க முடியும். எனவே, பரிசுத்தாவியை நாம் பெற்றுக்கொண்டால், அந்த ஆவியின் தன்மைகளுக்கேற்ப, நாம் நீதியை, பரிசுத்தத்தை, உண்மையை, அன்பை, தாழ்மையை வாஞ்சித்துப் பற்றிக்கொள்கிறவர்களாக இருக்க முடியும்.

ஆனால், ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றதாக அறிக்கையிட்டும், அநேகரின் வாழ்க்கையில் நீதியின் வாஞ்சை இல்லை. உண்மையின் மேல் தாகம் இல்லை. அன்பைக் குறித்து அக்கறையில்லை. வெறுப்பு, பொறாமை, கசப்பு, பெருமை, விரோத உணர்வு, கபடம் போன்றவை வாழ்க்கையிலிருந்து விலகவில்லை. இதன் பொருள் என்ன? அவர்களிடம் பரிசுத்த ஆவி இல்லை. ஆவி இருக்குமிடத்தில் ஆண்டவரின் குணாதிசயங்களும் இருப்பதே உண்மை அடையாளம். பலர் தங்களை பரவசப்படுத்துகின்ற, தங்களுக்கு உற்சாக விசை அளிக்கின்ற ஒரு சக்தியாக மட்டுமே பரிசுத்தாவியைப் புரிந்து கொள்கின்றனர்.

பரிசுத்தாவியின் நிறைவின் அனுபவங்களை ஜெப வேளைகளிலோ, சபை கூடி ஆராதிக்கும் வேளைகளிலோ, நாம் உணரும் உற்சாகங்களைக் கொண்டோ, பரவசமான மனநிலையைக் கொண்டோ உறுதிப்படுத்த முடியாது. ஆவியின் கனிகளைக் குறித்துப் பேசிய அப்போஸ்தலனாகிய பவுல், அங்கே நற்குணங்களையே ஆவியின் விளைபலன்களாகக் காட்டினான். பரிசுத்த ஆவியினால் நாம் உற்சாகப்பட முடியும். பரவசப்படவும் முடியும். ஆயினும், நம்மில் வெளிப்படும் ஆவிக்கேற்ற குணாதிசயங்கள்தான் சரியான அடையாளங்கள். எனவே, சில நேரங்களில் நாம் நன்றாக உணர்வதையே ஆவியின் கிரியை என எண்ணாமல், நன்றாக வாழ்வதையே ஆவியின் கிரியையின் விளைவாக எண்ண வேண்டும்.

சிந்தனைக்கு...

இறைவனின் நற்குணங்கள் உன்னிடம் வெளிப்படாத நிலையில்,
நீ பெற்றதாக எண்ணும் இறைச் சந்தோஷம் போலியானதே

அக்டோபர் 27
அற்பம், ஆனால்...,

சகரியா 4:6–10

அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை...
சகரியா 4 : 10

நமக்குரிய சுதந்திரத்தை நாமே நம்முடைய வழியில் தேடிப் பெற வேண்டும். மற்ற நாடுகளின் ஆதரவையோ, தீவிரவாத முறைகளையோ சார்ந்தி ருக்கக் கூடாது என்பவை மகாத்மா காந்தியின் கொள்கை. அதன் அடிப்படையில் ராட்டை சுழற்றுதல், வெளிநாட்டுப் பொருட்களை பகிஷ்கரித்தல், தியானம் செய்தல், பாத யாத்திரை செய்தல், சக்தியாகிரகம் செய்தல் ஆகியவற்றைக் கடைப்பிடித்தார் காந்திஜி. தீவிரவாத சிந்தனையுடையவர்களும், வெளிநாட்டவர்களும் இந்த எளிய அமைதியான முறைகளைக் கேலி பேசினார்கள். ஆனாலும், அதனால் சோர்வடையாத காந்திஜி, இறுதியாக அவைகள் வழியாகவே சுதந்திரம் பெற வழி செய்தார்.

நம்முடைய சில எளிய நடவடிக்கைகள், அமைதியான திட்டங்கள், போன்றவை பிறரால் அற்பமாக எண்ணப்படுவதும், வேடிக்கையாகப் பேசப்படுவதும் இயற்கையே. ஆனாலும், சோர்ந்து போகக் கூடாது. அவைகளில் தொடர்ந்து தொய்வுறா, மன ஊதுடன் செல்லும்போது, பெரிய வெற்றிகள் அங்கே வருகின்றது. நேகேமியா எருச லேமின் அலங்கத்தைக் கட்டினபோது, நரி ஏறிப்போனால் கல்மதில் இடிந்து போகும் என்று பரிகாசம் செய்தான் எதிரியாகிய தொபியா. ஆனாலும், சோர்ஊவடையாத நெகேமியா மாபெரும் வெற்றியைக் கண்டான். (நெகே – 4:3)

நாம் செய்கிற காரியங்கள் பிறருடைய பார்வையில் ஒன்றுமில்லாதது போலத் தோன்றலாம். ஆனாலும், தேவன் அதை எப்படிப் பார்ப்பார் என்பதே முக்கியமானது. நாம் செய்வது சின்னதா, பெரியதா என்பது முக்கியமல்ல. எதைச் செய்தாலும் அதனைக் கர்த்தருடைய உண்மையைச் சார்ந்தும், கர்த்தருடைய நாமம் மகிமைப்பட வேண்டும் என்ற சிந்தையைச் சார்ந்தும் செய்தால், அது தேவனுடைய பார்வையில் மேன்மையானது. கொஞ்சத்தில் உண்மையாயிருப் பதையே, கர்த்தர் பெரிய விஷயமாக எண்ணுகின்றார். அதுவே பெரிய விஷ யத்துக்கு நம்மைத் தகுதிப்படுத்துகிறது.

உலக வரலாற்றில் மாபெரும் மனிதர்களாக முயற்சியில் பின்னோக்காமல், தொடர்ந்து வெற்றி சிறந்த பலர், துவக்கத்தில் மற்றவர்களால் பரிகசிக்கப்பட்ட வர்களே. அவர்களின் ஆரம்பகால முயற்சிகள் மற்றவர்களால் அற்பமாக எண்ணப் பட்ட போதிலும், தொய்ந்து போகாமல் தொடர்ந்ததால்தான் பின்னாளில் பெரிதும் பாராட்டப்பட்டார்கள்.

சிந்தனைக்கு...

உண்மையைச் சார்ந்தவனின் செயல் இன்று அற்பமாய்த் தோன்றினாலும்,
நாளை அது அநேகரை ஆச்சரியப்படுத்தாமல் போகாது.

அக்டோபர் 28

பழைய தேவன், புதிய பாதை

யோசுவா 3:1–17

நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய்...
யோசுவா 3:4

நாம் சந்திக்க நேரிடும் பிரச்சினைகளைவிட, அவைகளைக் குறித்த நம்முடைய மதிப்பீடுகளும், மனோபாவமும்தான் நமக்கு அதிக மனக்கஷ்டங்களையும், மன அழுத்தங்களையும் ஏற்படுத்துகிறது. பல நேரங்களில், போர்க்களம் காண விரும்பாத போர் வீரர்களாக நாம் நிற்கின்றோம். எனவே, பிரச்சினைகள், சோதனைகள் என்று வருகின்றபோது, அவைகளை வரக் கூடாதவைகள் போல எண்ணிவிடுகின்றோம். நாம் சந்திக்க நேரிடும் எந்தத் துன்பமும், நெருக்கமும் நமக்கு மட்டுமே முதன் முறையாக நேரிடுகின்றவைகள் அல்ல. எந்த ஒரு பிரச்சினையும் இந்த உலகத்திற்குப் புதிதல்ல. இதுபோன்ற கஷ்டங்களையும், போராட்டங்களையும், இப்போது நாம் வாழ்கின்ற சமுதாயத்தில் அநேகர் சந்தித்துக் கொண்டுதானிருக்கின்றனர்.

நாம் இன்று கடந்து செல்ல நேரிடுகின்ற சில கஷ்டங்களின் பாதை, ஏற்கெனவே பல தேவ பக்தர்கள் கடந்து சென்று வெற்றி கண்ட பாதைதான். யோசேப்பும், மோசேயும், தாவீதும், யோபும், பவுல் அப்போஸ்தலனும் இது போன்ற பலவிதச் சோதனைகளின் பாதையில் நடந்து வந்தவர்கள்தான். அவர்களோடிருந்த தேவன் இன்றும் தம்மை உண்மையாகப் பின்பற்ற வாஞ்சையாயிருக்கின்ற ஒவ்வொருவரோடும் இருக்கின்றார். எனவே, அன்று அவர் களை கஷ்டங்களின் நடுவிலும், கைவிடாமல் நடத்தியது போல இன்றும் அவர் நம்மை நடத்துவார்.

ஒருவேளை இன்று நீங்கள் நடக்க நேரிட்டுள்ள பாதை உங்களுக்கு மிகவும் புதிதான ஒன்றாகயிருக்கலாம். ஆனால், இதுபோன்ற பாதைகளில் அநேகரைத் தேவன் வழி நடத்திக் கடந்துபோக வைத்திருக்கின்றார். அவருக்கு இது புதிய பாதை அல்ல. எனவே, இந்தப் பாதையில் எப்படி உங்களை கடந்து போகச் செய்ய வேண்டும் என்பதை அவர் அறிவார். அந்த நம்பிக்கையில் இன்று நீங்கள் சந்தோஷமாயிருங்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆலங்குளம் என்ற பகுதியில் உள்ள, கிராமத்தின் ஒரு வயல்வெளி வழியாக இரவு நேரத்தில் நடக்க நேரிட்டது. எங்கும் இருள். ஒரு பாதையும் கண்ணுக்குத் தெரியவில்லை. மேடு பள்ளம், வளைவு, நெளிவு ஏராளம். ஆனால், என்னுடன் வந்த நண்பருக்கு அது மிகவும் பழக்கமான பாதை. என் பின்னாலே வந்து கொண்டேயிருங்கள்" என்ற அவருடைய ஆலோசனையை ஏற்றுப் பின்தொடர்ந்தபோது, நான் ஒருபோதும் நடந்திராத அந்த இடர்மிகு பாதையை வெற்றியாகக் கடந்து போக முடிந்தது.

சிந்தனைக்கு...

தேவனோடு நடக்கப் பழகினவர்கள், சோதனையான பாதைகளில் நடக்க இயலாதவர்களாக இருக்க முடியாது.

அக்டோபர் 29

பாவத்தை உணராமல்

1 யோவான் 5:1–21

வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்.
எபேசியர் 5 : 13

கர்த்தர் எந்த ஒரு பாவியையும் அன்புடன் ஏற்றுக்கொள்கின்றார். எவ்வளவு மோசமான பாவங்களைச் செய்திருந்தாலும். அவர் வேண்டாமென்று தள்ளாமல் மகிழ்ச்சியுடன் சேர்த்துக்கொள்கின்றார். நாம் பாவக்கறைகள் மிகுந்தவர்களாயினும் நம்மைக் கர்த்தர் வேண்டாம் என்று புறக்கணிப்பதில்லை. ஆனால், எந்தப் பாவி யையும் விரும்பி ஏற்றுக்கொள்ளும் கர்த்தர், எந்தப் பாவத்தையும் அவர் விரும்பு வதில்லை. எந்தத் தவறையும், குறைவையும் கண்டுகொள்ளாமல் போவதில்லை.

எனவேதான், எந்த ஒரு பாவியையும் கரங்களை விரித்து ஏற்றுக்கொள்ளும் தேவன், எந்த ஒரு பாவத்தையும் சுட்டிக் காண்பித்து, அவற்றைக் களையும்படி ஏவுகின்றார், கர்த்தர் எந்தப் பாவியையும் பார்த்து "நீ போய் உன்னை சுத்தமாக்கிக் கொண்டு பின்னர் என்னிடம் வா" என்று சொல்வதில்லை. ஆனால், தம்மிடம் வந்தவர்களின் தவறுகளையும், குறைகளையும், குற்றங்களையும், பாவங்களையும் தொடர்ந்து வெளிப்படுத்திக் காண்பிக்கின்றார். அவைகளை உணர்ந்து அகற்ற விரும்பும்போது, அவர் நமக்கு உதவி செய்து அவைகள் அகலச் செய்கின்றார்.

தேவனோடு இணைந்த ஐக்கியத்தில் வாழ்வதுதான், உண்மையான கிறிஸ் தவ வாழ்க்கை. ஆனால், அந்த ஐக்கியத்தில் தொடர வேண்டுமானால் நமக்குள் எவை மாறவேண்டும், எவை நம்மை விட்டு விலக வேண்டும் என்று கர்த்தர் காண்பிக்கின்றாரோ, அவற்றை விலக்கிக் கொண்டேயிருக்க வேண்டும். இன்று சிலர் தங்களை ஆவிக்குரியவர்கள் என்று நம்புகின்றார்கள். ஆனால், பெருமை, கோபம், வெறுப்பு, கசப்பு, பொறாமை, பேராசை, ஆடம்பரம் போன்ற ஆகாத பாவங்கள் அவர்களை விட்டு நீங்காமலே தொடருகின்றது. அவற்றிற்காக அவர்கள் மனம் வருந்துவதில்லை.

ஆனால், தேவ உறவைப் பெற்ற உண்மையான தேவ பக்தர்கள் அவ்விதம் இருக்க இயலாது. ஏனென்றால், பாவிகளை நேசித்து ஏற்றுக்கொள்ளும் தேவன், இது போன்ற பாவ விஷயங்களோடு அனுசரித்துப் போக இயலாது. அவர் அவற்றைச் சுட்டிக்காட்டாமல் சும்மா இருக்க இயலாது. சிலரிடம் தேவன் வெறுக்கும் தீய சுபாவங்களும், தீய செயல்களுமிருந்தும், அவர்கள் தங்களை தேவ உறவு உடையவர்களாக எண்ணுகின்றனர். ஆனால், அது, ஒரு தவறான நம்பிக்கை. தேவ உறவு என்னும் வெளிச்சத்தில் வாழ்கின்றவர்கள். அவற்றைத் தங்களிடம் வைத்துக் கொண்டு, தேவனுக்குரிய ஆவிக்குரியவர்களாக இருக்க இயலாது.

சிந்தனைக்கு...

உன் குறைகளை உரிய முறையில் பார்க்கப் பழகினால்,
இறைவனின் நிறைவுகளை உரிமையுடன் கேட்கப் பழகுவாய்.

அக்டோபர் 30
ஏன் தேவ பயமில்லை ?

மத்தேயு 3 : 1– 10

மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள்...

மத்தேயு 3 : 8

ஆவிக்குரிய ஈடுபாடுகள் உடைய பல விசுவாசிகள் மற்றும் ஊழியர்களின் வாழ்க்கையில், இன்று தேவ பயமற்ற ஒரு மதிகேடான நிலை காணப்படுகிறது. கள்ளம், கபடு, போலித்தனம் போன்றவற்றை விட்டு அவர்கள் விலகாதிருக் கிறார்கள். ஆயினும், அவர்கள் தங்களை பல ஆவிக்குரிய செயல்களோடு இணைத்துக் கொண்டு, தங்களைப் பக்தியாளர்களாகவும், ஆவிக்குரிய மக்களாக வும் எண்ணிக்கொள்கின்றார்கள்.

இந்த தேவ பயமற்ற நிலைக்கு முக்கியமான ஒரு காரணம், அநேகர் தேவ பிரசன்னத்தையோ, ஆவியானவரின் அசைவாடுதலையோ, தேவ சமுக சந்தோ ஷத்தையோ உண்மையான நிலையில் அனுபவிக்கவேயில்லை. ஆனால், உரத்த சத்தத்துடன் ஜெபிக்கும் போதும், ஆரவார ஆராதனையின் போதும், தங்களிடம் உணருகின்ற உற்சாக நிலையை தேவப் பிரசன்னம் என்று எண்ணிவிடுகிறார்கள். ஆனால், அது உண்மையான தேவப் பிரசன்னம் அல்ல.

குறிப்பிட்ட ஒரு சகோதரர் ஆராதனை வேளைகளிலோ அல்லது ஏதாவது கூட்டங்களின் போதோ, யாராவது மனதுருக்கத்தோடு ஒரு பாடல் பாடினால், அவர் கண்ணீர்விட ஆரம்பித்து விடுவார். ஆராதனை வேளையில் உற்சாகமான பாடல்கள் பாடப்படும் போது, பரலோகத்தை நேரில் கண்டவரைப் போல அவ்வளவு பரவசமாய் கைகளை, உடலை அசைத்து, சத்தமிட்டு ஆராதனை செய்வார். அவரை அவ்வித வேளைகளில் பார்க்கின்ற எவரும், அவர் தெய்வீக அன்பில் அதிகமாக ஆட் கொள்ளப் பட்டிருக்கிறார் என்றே எண்ண முடியும். ஆனால், அவருடைய தனிப் பட்ட வாழ்க்கையில் தேவனை அறியாதவரைவிட மோசமாக இருப்பார். தெய் வீகத்திற்கேற்ற எந்த நல்ல பண்பையும் அவரிடம் பார்க்க முடியாது. அப்படி யானால் அவர் அடைகின்ற ஆனந்தப் பரவச நிலைகள் எப்படி வந்தது?

பரவசமான பாடல்களும், ஆரவார இசைக்கருவிகளும், ஆராதனை நடத்து கின்றவர்களின் உணர்ச்சிவசப்படுத்தும் வார்த்தைகளும், பலருடைய உணர்ச்சி களைக் கிளறி, குதூகலிக்க வைத்து விடுகிறது. முரட்டாட்டமாகவும், மாய்மால மாகவும் வாழ்கின்றவர்கள்கூட, அந்த வேளையில் பரவசமடைந்து ஆடிப்பாட முடிகின்றது. ஆனால், ஆராதனை வேளையின் போது உணருகின்ற பரவசம், வாழ்க்கையைக் கனிகொடுக்கத் தக்க விதத்தில் மாற்றவில்லையேல், அது ஆவியினால் வந்த பரவசமல்ல.

சிந்தனைக்கு...

ஆண்டவர் அருகிலிருப்பதை ஆராதனையில் அனுபவி,
அந்த அனுபவத்தை அனுதின வாழ்வில் பிரதிபலி.

அக்டோபர் 31
தீமை செய்வதருக்கு

யாக்கோபு 5:7 –20

ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்.
யாக்கோபு 5 : 9

பொதுவாகத் தீங்கு செய்தவர்கள் வீழ்ந்து போக வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோருக்குள்ளும் இருக்கிறது. நமக்கு அநீதி இழைத்தவர்கள் தேவனால் தண்டிக்கப்படுவதைக் காண வேண்டும் என்ற ஆசை எல்லோருக் குள்ளும் இருக்கிறது. அக்கிரமக்காரர்கள் வீழ்ச்சிகளுக்குப் பதில் எழுச்சிகளைக் காண நேரிடுவது, எல்லோருக்குள்ளும் ஒரு கஷ்டத்தை ஏற்படுத்தவே செய்யும்.

ஆனால், கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் எதையும் பார்க்க வேண்டும் என்று அழைக்கப்பட்டிருக்கின்ற நாம், இதுபோன்ற விஷயங்களில் வேறுபட்டுத்தான் நிற்கவேண்டும். நம்முடைய நீதிக்கும் நியாயத்திற்கும் தக்கவாறு தேவன் நற் பலன்கள் அருளுவார் என்று நாம் விசுவாசித்துச் செயல்பட வேண்டுமேயன்றி, நியாயக்கேடு செய்தவர்களுக்கு நம் கண்களுக்கு எதிரில் ஏதாவது நடக்க வேண்டும் என எதிர்பார்க்கக்கூடாது.

எனக்குப் பிறரால் என்ன நேரிட்டது, அதற்காகத் தேவன் எனக்கு என்ன செய்யப்போகிறார், என்றுதான் நாம் பார்க்க வேண்டுமேயன்றி, எனக்கு எதிராக இயங்கியவருக்கு என்ன நேரிடப் போகிறது. என்று பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. நமக்குத் தவறானவர்களாகத் தெரிகின்ற சிலருக்கு தேவன் இரக்கத்தையும், கிருபையையும் காண்பிக்கலாம். ஒருவேளை அவர்கள் மனந்திரும்புவதற்கு கால அவகாசம் அளிக்கலாம். எனவே, தேவனுடைய எண்ணங்களுக்கு எதிராக என் னுடைய எதிர்பார்ப்புகள் இருக்கக் கூடாது. நம்மைத் தேவையின்றி விரோதித் தவர்கள், நியாயமின்றி எதிர்த்தவர்கள், மனச்சாட்சியின்றி தீங்கு செய்தவர்கள், நம் முடைய கண்களுக்கு முன்பாக எந்தத் தீங்கையும் காணாதவர்களாக உலாவுவது, நம்முடைய உள் மனதில் நெருடல்களை ஏற்படுத்தலாம். அது நம்மைச் சிறுமைப் படுத்துவது போலவும் இருக்கலாம்.

ஆனால், இவைகளைச் சகிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் நாம் மனநிலையில் பக்குவமடைய வேண்டும். அதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. யோசேப்பிற்கு அநீதி செய்த போத்திபாரின் குடும்பத்திற்கு என்ன தண்டனை கிடைத்தது என்பது நமக்குத் தெரியாது. அதை நாம் அறியும் தேவையும் இல்லை. ஆனால், அநீதியைச் சகித்து, தன்னைத் தாழ்த்திய யோசேப்பை தேவன் உயர்ந்த உன்னத ஸ்தானத் திற்குக் கொண்டு வந்தார். அநீதி இழைத்தவருக்கு என்ன நடக்கிறது என்பதை விட, அநீதியைச் சகித்தவருக்கு என்ன நடை பெறுகிறது என்பதே முக்கியம்.

சிந்தனைக்கு...

விழ வைத்தவரையே நினைத்து செயலற்றுப் போகாதே,
நிலை நிறுத்தத் தேவன் இருப்பதை எண்ணிச் செயல்படத் துவங்கு.

நவம்பர் 1

ஏன் வெறுக்கின்றார்கள்?

மத்தேயு 10:1–25

நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்.
மத்தேயு 10:22

தீவிரக் கிறிஸ்தவப் பக்தி உடைய ஒருவரை அவருடைய உறவினர்கள் பலரும் விரும்புவதில்லை. அவர் ஐக்கியம் வைத்திருக்கின்ற சபையிலும் பலர் அவர்மேல் நல்ல ஒரு கருத்து இல்லாதவர்களாகவே உள்ளனர். ஆனால், தான் அநேகரால் வெறுக்கப்படுகிற ஒரு நிலைமைக்காக மகிழ்ச்சியடைவதாக அவர் பலரிடம் கூறுவார். ஏனென்றால், "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்" என்று கிறிஸ்து சொன்ன வசனத்தின்படியே, தான் பலராலும் வெறுக்கப்படுகிறதாக அவர் நம்புகிறார்.

ஆனால், உண்மை அதுவல்ல. அவர் தீவிரக் கிறிஸ்தவப் பக்தரென்பது உண்மையாயினும், யாரோடும் நல்ல மனநிலையோடு அவர் பழகமாட்டார். உபதேச விஷயத்திலே தன்னுடைய கருத்துக்கு உடன்படாதவர்களை விரோதிகளைப்போல பாவிப்பார். தன்னுடைய தவறான குணங்களால் அநேகரை அவர் தனக்கு விரோதிகளாக மாற்றிவிட்டார். நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதால் நம்மை வெறுப்பவர்களெல்லாம் நம்முடைய கிறிஸ்தவ நீதிக்காகத்தான் வெறுக்கின்றார்கள் என்று கூற முடியாது.

நம்முடைய தவறான குணநிலைகளும், பக்குவப்படாத மனநிலைகளும், நமக்குப் பல உபத்திரவங்களை வரவழைத்துத் தர முடியும். அவைகளை நீதியினிமித்தம் துன்பப்படுதலாக எண்ணி, நம்மைப் பாக்கியவான்களாகப் பார்ப்பது சரியல்ல. நாம் தேவ பக்தியோடு அன்பு, தாழ்மை, பொறுமை, சாந்தகுணம், புத்தியாய் செயல்படுதல் ஆகிய நற்பண்புகளைச் சேர்த்துச் செயல்படுத்த வேண்டும். அப்போது பிறர் நம்மை வெறுக்கவும், விரோதிக்கவும் செய்தால், அதுதான் கிறிஸ்து வினிமித்தம் பகைக்கப்படுதல் ஆகும். பல நேரங்களில் நம்முடைய தாழ்ந்து போகாத, விட்டுக் கொடுக்காத, பணிந்து போகாத, சுய பெருமையான தவறான மன நிலைகள் தேவனுக்காக வைராக்கியமாயிருத்தல், சத்தியத்திற்காக வைராக்கியம் கொள்ளுதல் ஆகிய பொய்யான முகமூடிகளைப் போட்டுக் கொள்கிறது.

தவறான ஜன்ம சுபாவங்கள் தேவபக்தியின் வேஷம் தரித்துக் கொண்டு, தேவையில்லாமல் பலருடைய வெறுப்பையும், அதிருப்தியையும் சம்பாதித்து விடுகிறது. சுய மதியீனங்களாலும், வளைந்து போக விரும்பாத மனநிலைகளாலும் பலருடைய கோபத்தைச் சம்பாதித்துவிட்டு, அவைகளை நீதியினிமித்தம் துன்பப்படுதலாக எண்ணி ஆறுதல்பட்டுக் கொள்வது, மிகத் தவறான ஒன்றாகும்.

சிந்தனைக்கு...

நீங்கள் எவ்வளவு பக்தியானவர் என்பதைவிட, எவ்வளவு அன்பானவர் என்பதையே பலர் பார்க்கின்றனர். அன்பாயிருங்கள்

நவம்பர் 2

எழுப்புதல் எப்போது?

சங்கீதம் 80:1–19

கர்த்தாவே எங்களைத் திருப்பிக் கொண்டுவாரும்.
சங்கீதம் 80:19

எழுப்புதல் என்ற வார்த்தை நமக்கு மிக மிகப் பழகிப் போன ஒன்றாகி விட்டது. அதிகப் பழக்கம் அந்த வார்த்தைக்கு விசேஷ அர்த்தம் எதுவும் இல்லாமல் செய்து விட்டது. நம்முடைய நாட்டில், மாநிலத்தில், மாவட்டத்தில், ஊரில், சபையில் எழுப்புதல் கூட்டங்களும், ஜெபங்களும் ஏராளம், ஏராளம். ஆனால், பெரும்பாலான எழுப்புதல் செயல்பாடுகள் யாவும் இலக்கு ஏதுமின்றி வானத்தை நோக்கிச் சுடுவதைப் போலவே உள்ளது. எந்த விளைவுகளும் ஏற்படவில்லை.

ஏனென்றால், மற்றவர்கள் எழுப்பப்பட வேண்டும் என்பது நம்முடைய தாகமாயிருக்கிறது. ஆனால், நாம் எழும்பி நிற்கின்றோமா என்று பார்க்க நமக்கு உணர்வில்லை. நாம் எழுப்புதலுக்காகக் கதறி ஜெபிக்கின்றோம். ஆனால், நமக்குள் எழுப்புதல் ஏற்பட்டதா, அப்படி ஏற்பட்டிருந்தால் அது நம்மிடம் என்ன செய்கிறது என்று சிந்திக்கவில்லை. நம்முடைய இரட்சிப்பின் அடையாளங்களைப் பிறருக்குக் காட்டாமலே பிறருடைய இரட்சிப்பிற்காக நாம் ஜெபிக்கின்றோம். நாம் சரியான மனந்திரும்புதலைக் காணாமலே தேசங்களின் மனந்திரும்புதலுக்காக அழுது புலம்புகின்றோம்.

நாம் மற்றவர்களுக்குச் சிகிட்சை பார்ப்பதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி, நாம் குணமாக்க முடியாத நோயாளிகளாக மாறிக்கொண்டிருப்பதை அறியாமலிருக்கின்றோம். எழுப்புதல் கூட்டம், எழுப்புதம் ஜெபம், எழுப்புதல் முகாம் என தீவிர நடவடிக்கைகளில் இறங்கி நம்முடைய எழுப்புதலற்ற, குளிர்ந்து போன உப்புசப்பற்ற ஆவிக்குரிய நிலைகளை நினைத்துப் பார்க்க நேரமில்லாமல் போனோம். நாம் ஓட்டை படகை வைத்துக் கொண்டு, விரைவில் மூழ்கிப் போகும் நிலையில் இருப்பதை உணராமல், அக்கரை செல்லப் படகுக்கு வாருங்கள் என்று சொன்னால், யார் நம்பி வருவார்கள்?

இன்றைய சபைகளிலே, ஊழியங்களிலே ஜெபக் குழுக்களிலே, ஆத்தும சேவை நிறுவனங்களிலே, பூமியையும், சமுத்திரத்தையும் சுற்றி ஆத்துமாக்களைத் தேடும் வேலை தீவிரமாக நடக்கின்றது. ஆனால், தேடிக் கண்டுபிடிக்கப்பட்ட ஆத்துமாக்கள் நம்முடைய சாட்சியற்ற வாழ்க்கையாலும், தெளிவற்ற உப தேசங் களாலும், பொருளாசை சார்ந்த செயல்பாடுகளாலும் இரட்டிப்பான நரகத்தின் மக்களாக மாற்றப்பட்டு விடுகிறார்களே. நம்முடைய எழுப்புதல் கூக்குரல்களைத் தேவன் எப்படி உண்மையென்று நம்பிச் செயல்படமுடியும்.

சிந்தனைக்கு...

எண்ணெய் இருந்து என்ன பயன் விளக்கு இல்லாவிட்டால்,
அறிவு இருந்து என்ன பயன் அதற்கேற்ற செயல் இல்லாவிட்டால்.

நவம்பர் 3

சந்தோஷம் தராத ஆன்மீகம்

யோவான் 15:1–11

என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும்...
யோவான் 15:11

ஆவிக்குரிய விசுவாசிகள் என்றும், அழைக்கப்பட்ட தேவ ஊழியர்கள் என்றும் அறியப்பட்ட அநேகர் பணம், பொருள், அந்தஸ்து, பேர், புகழ், உலகப் பிரகாரமான தவறான சந்தோஷங்கள் போன்றவற்றிலிருந்து விடுதலையாகாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அவர்கள் மகிழ்ச்சியையும், திருப்தியையும், மனச் செழிப்பையும், பணம், செல்வம், பிரபலம், அந்தஸ்து ஆகியவற்றின் வடிவத் திலேயே காணப் பிரசாயப்படுகின்ற காரணம் என்ன?

ஆவிக்குரிய வாழ்க்கை அவர்களுக்கு அவ்வளவு ஆனந்தமாக இல்லை. ஆவிக்குரிய வாழ்க்கை மூலமாக அவர்கள் விசேஷச் சந்தோஷம் எதையும் காண வில்லை "என்னுடைய சந்தோஷம், என்னுடைய சமாதானம்" என்று இயேசு குறிப்பிட்டாரே . அவைகள், இவர்களின் வாழ்க்கைப் பகுதிக்கு வந்து சேரவில்லை. (யோவான் -14:27;15:11) மொத்தத்தில் அவர்களுடைய தேவ பக்தியின் வாழ்க்கை அவர்களுடைய மனதை மகிழவைக்கவில்லை.

எனவே, அவர்களால் பணம், பொருள், புகழ், அந்தஸ்து ஆகியவற்றினால் வரும் சந்தோஷ நிலைகளை அற்பமாக எண்ண இயலவில்லை. ஏனென்றால் இந்தப் பாவ உலகின் சந்தோஷங்களை மேற்கொள்கின்ற அளவிற்கு, ஆவிக் குரிய வாழ்க்கையின் சந்தோஷம் அவர்களிடம் நிறைவாக இல்லை. மிகுந்த பசியாயிருக்கின்ற ஒருவனை மிக அற்பமான உணவுகூட எளிதாகக் கவர்ந்து விடும். அதுபோல, ஆவிக்குரிய சந்தோஷங்களை அனுபவியாமல் பட்டினியாக நின்று கொண்டிருந்தால், இந்த அநித்திய உலகத்தின் அற்ப சந்தோஷங்கள்கூட எளிதாகக் கவர்ந்துவிடும்.

அநேகர் பரிசுத்தாவியினால் தாங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக நம்புகின்றார்கள். ஆனால், பரிசுத்தாவியினால் வரும் சந்தோஷம் அவர்களிடம் இல்லை. அநேகர் தேவன் தங்களோடிருப்பதாக நம்புகின்றார்கள். ஆனால், தேவ ஐக்கியத்தின் சந்தோஷம் இன்னதென்றுகூட அவர்கள் அறியவில்லை. எனவேதான், அவர் களின் இருதயம் அவர்களின் மன விருப்பத்தையும் மீறிப்போய், பாவ உலகின் அற்ப சந்தோஷங்களை ஆவலாய்த் தேடுகிறது. ஆம், பண ஆசை, பொருளாசை, புகழாசை ஆகியவற்றிலிருந்து விடுதலையாகாதவர்களைக் கண்டால், அவர்கள் தேவ ஐக்கிய சந்தோஷத்தை அனுபவியாமல் பட்டினியாக இருப்பதுதான், அதற்குக் காரணம் என்று புரிந்து கொள்ளுங்கள்.

சிந்தனைக்கு...

பணமில்லாமல் எதையும் சாதிக்க முடியாது.
பணமிருந்தாலும் எல்லாவற்றையும் சாதிக்க முடியாது.

நவம்பர் 4

யார் பார்க்க வேண்டும்?

மத்தேயு 6:1 –6

மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக...
மத்தேயு 6 : 1

நாம் நன்மை செய்யும் போதோ அல்லது காணிக்கை கொடுக்கும் போதோ அதனை யாரும் பார்த்துவிடக்கூடாது என்று அதிக ஜாக்கிரதையாயிருக்கத் தேவை யில்லை. அவற்றை யாராவது பார்க்க வேண்டுமே என்ற எண்ணம் இல்லாதிருந்தால் போதும். சிலர் தாராளமாக உதவி செய்கின்றவர்கள். ஆனால், அதற்கு பலருடைய சாட்சிகள் வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். சிலர் உதார குணமுள்ளவர்கள்தான். ஆனால், உதாரத்துவமாய்ச் செய்வதை பலர் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர்.

பாஸ்டர் ஒருவர் குறிப்பிட்ட ஒரு பணக்கார விசுவாசியின் வீட்டிற்குச் செல்லும் போது, சிலரை அழைத்துக் கொண்டு செல்வாராம். ஏனென்றால், அந்தப் பணக்கார விசுவாசி பாஸ்டர் மட்டும் வந்தால் கொஞ்சம் காணிக்கை தருவார். பலரோடு வந்தால் ஏராளம் காணிக்கை தருவார். தான் தாராளமாகக் கொடுப் பதைப் பார்க்க சிலர் இருக்கின்றார்களே என்ற திருப்தி அவருக்கு.

நம்முடைய நற்செயல்களையோ, நல்ல காணிக்கைகளையோ பலர் பார்க்கத் தேவையில்லை. யார் பார்க்காவிட்டாலும் கர்த்தர் பார்க்கின்றாரே. அவர் நம்முடைய நற்செயலுக்குச் சாட்சியாயிருந்தால் போதும். அவர் சாட்சி தந்தால் அந்த நற்செயலுக்கு நல்ல பலன்களும் வரும். மனிதர்கள் நம்முடைய தாராள குணங்களைப் பார்த்து மெச்சிக்கொள்ளக் கூடும் அல்லது நம்மைச் சற்று மரி யாதையாகப் பார்க்கக்கூடும். ஆனால், அவர்களால் நமக்குப் பலன்களோ, பரிசு களோ இல்லை. ஆனால், கர்த்தரின் சாட்சி போதுமென்றெண்ணினால், அவர் நிச்சயம் வெளியரங்கமாய்ப் பலன் அளிப்பார். மனிதர்களின் சாட்சியை எதிர் பார்க்கும் எண்ணம், தேவனால் வருகின்ற பலனைத் தடுத்துவிடும்.

சிலர் தங்களுடைய தாராளமான காணிக்கைகளுக்காக, தங்களின் பெயர் சுவர்களிலும் தூண்களிலும் எழுதப்படுவதை அதிகமாக விரும்புகின்றனர். இந்தத் தவறான ஆசைக்குத் தீனி போடும் விதமாக, சில ஊழிய ஸ்தாபனங்களும் சபைகளும் செயல்படுகின்றன. இது தங்களுடைய நல்ல செயல்களுக்கும் உதாரத்துவமான உதவிகளுக்கும் தேவனால் தரப்படும் நல்ல ஆசீர்வாதங் களைத் தடை செய்யும் ஒரு செயலாகும். எதைச் செய்தாலும் கர்த்தருக்காகச் செய் வதற்கே நாம் அழைக்கப்படுகின்றோம். இங்கிருக்கின்றவர்களின் சாட்சியும் காட்சியும் முக்கியமாகிவிட்டால், பரத்திலிருந்து வருகின்ற பலனை இழப்பதைத் தவிர வேறு வழியில்லை.

சிந்தனைக்கு...

மனிதர்களின் அங்கீகாரத்திற்காக அலைகிறவன்,
இறைவனின் அங்கீகாரத்தை ஏற்கெனவே இழந்திருக்கிறான்.

நவம்பர் 5

துதித்தால் மட்டும் போதுமா?

ஏசாயா 29:9–19

தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்.
ஏசாயா 29 : 13

அவர் மிகவும் பிரபலமான ஒரு கிறிஸ்தவ ஊழியர். அவருடைய கொள்கை தேவனைத் துதித்துக் கொண்டேயிருப்பதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை என்பதாகும். எனவே, அவருடைய பிரசங்கங்கள் முழுக்க, முழுக்க, எப்படி நோய் விலகும். பிசாசு ஓடும். துன்பம் அகலும் என்று, எல்லாமே துதிப்பதால்தான் நடைபெறுகிறது என்ற அடிப்படையிலேயே அவர் போதனை செய்வார். கேட்பதற்கு இது ஒரு ஆவிக்குரிய இனிமை கொண்டிருந்தாலும், இது ஒரு தவறான போதனையாகும்.

தேவனைத் துதித்தல் என்பது ஆவிக்குரிய வாழ்க்கையில் இடம் பெற வேண்டிய மிக முக்கியமான ஒரு அனுபவமாகும். ஆனால், துதிப்பதால் மட்டும் எல்லாப் பாவங்களும் ஓடி, எல்லா ஆசீர்வாதங்களும் வந்து விடாது. துதித்தல் என்றால் தேவனைப் புகழ்தல் ஆகும். ஆனால், வாயினால் மட்டும் புகழ்வதால் தேவன் மகிழ்ந்து விடமாட்டார். நாம் நம்முடைய வாழ்க்கையின் மூலம் அவரை உண்மையாகப் புகழுகின்ற அனுபவம் மிகவும் அவசியம். நாம் எப்படி வேண்டு மானாலும் மனம் விரும்பியபடி வாழ்ந்து விட்டுக்கூட, தேவனை உற்சாகமாகத் துதிக்க முடியும். நம்முடைய குணநிலைகளும், சுபாவ நிலைகளும் தவறாக இருக்கும் போதுகூட, இறை பக்தியால் நாம் அதிகமாக வாயினால் ஸ்தோத்தரிக்க முடியும்.

ஆனால், நாம் வாழ்கின்ற விதங்களின் மூலம் தேவனைத் துதிக்க வேண்டும். நம்முடைய நல்ல குணநிலைகளின் மூலம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். நம் வாழ்க்கை தேவனுக்குப் புகழ்ச்சியாக இராதபோது, நம்முடைய வாயின் துதிகள் தேவனுக்கு விருப்பமானதாக இராது. நாம் மிகுந்த நற்குணங்களாகிய கனி களைக் கொடுக்கும்போதுதான் தேவன் மகிமைப்படுகிறார். (யோ – 15:8)

கிறிஸ்துவை அவருடைய வசனங்களின்படி பின்பற்றுவதுதான் கிறிஸ்தவம் என்ற உயர்ந்த தூய நிலையிலிருந்து, வெறும் வழிபாடுகளே கிறிஸ்தவம் என்ற குறைந்த நிலைக்கு, கிறிஸ்தவத்தைத் தள்ளிய பாவத்தை ரோமன் கத்தோலிக்கச் சபை செய்தது. ஆனால், இன்று சீர்திருத்த சபைகளும் அதே பாவத்தை வித்தியாச மான வடிவத்தில் செய்து வருகிறது. இயேசு கிறிஸ்துவின் வசனங்களை கருத்தாய்க் கவனித்து, அவரோடு ஐக்கியங்கொண்டு, அவருடைய வழிகளிலே நடப்பதுதான் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை. இதனை உணராத நிலையில் எவ்வளவுதான் துதித்தாலும், ஸ்தோத்தரித்தாலும், ஆடினாலும், பாடினாலும், ஆர்ப்பரித்தாலும், சிரித்தாலும் அவைகள் வெறும் வழிபாடுகளேயன்றி வேறொன்றுமில்லை.

சிந்தனைக்கு...

இருதயத்தில் இறைவன் விரும்பும் குணமில்லாதவர்கள்,
வாயினால் துதிப்பதெல்லாம் வீணான வேலையே.

நவம்பர் 6

தேவ உறவுடன் வாழ்வது எப்படி?

யாத்திராகமம் 33 :17–23

ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல ...

யாத்திராகமம் 33 : 11

நான் எழுதுகின்ற புத்தகங்களிலும், நான் செய்கின்ற பிரசங்கங்களிலும், தேவ உறவுடன் வாழ்தல்தான் ஆவிக்குரிய வாழ்க்கையின் அடிப்படை, என்ற கருத்து திரும்பத் திரும்ப நினைவூட்டப்படுகிறது. இதனை எல்லாக் கிறிஸ்தவப் பிரிவினரும் மிகச் சரியானது என்ற ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். ஆனால், இதனை எப்படி வாழ்க்கையில் அனுபவமாகக் காண்பது என்பதே முக்கியக் கேள்வியாக உள்ளது.

யார் தேவனோடு நெருங்கி வாழ முடியும்? யாரால் தேவ உறவின் நிச்சயத்தை நிஜமாக ருசிக்க முடியும்? என்ற கேள்விகளுக்கு வேதாகமரீதியாக விடை காண வேண்டியது அவசியம். நோவா, ஆபிரகாம், யோசேப்பு, மோசே, தாவீது போன்றோரால், தேவ உறவின் வட்டத்திற்குள் வாழ்கின்ற அனுபவங்களைப் பெற முடிந்தது. அவர்கள் தேவனுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக வாழ இயன்றது. இது எப்படி? என்ற கேள்விக்கு விடை காண்பதுதான் முக்கியம்.

இவர்கள் தேவ உறவுடன் வாழ்வதற்கு முக்கியக் காரணம், அவர்கள் தேவனுடைய திட்டத்திற்காக வாழ்வதற்குத் தங்களை அர்ப்பணித்திருந்ததுதான். தங்களின் சொந்த நன்மைகளுக்காகவும், சொந்த நலன்களுக்காகவும் இவர்கள் ஆன்மீக வாழ்வை வாழாமல் தேவனுடைய திட்டத்திற்காக வாழ்ந்தார்கள். எனவே, தேவன் அவர்களோடிருந்து அவர்களை நடத்தினார். ஏனென்றால், தம்முடைய திட்டத்திற்காக வாழ வந்தோருடன் சேர்ந்து வாழ்ந்தால்தான் அந்தத் திட்டங்கள் நிறைவேறும். தேவன் தமக்கு அருகாமையில் நம்மை வைத்து நடத்தாவிட்டால், அவர் விரும்புகின்ற விதமான காரியங்கள் நம்மிடம் நிறைவேறாது.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்களுக்காகச் செயல்படும்படி இயேசுவை அழைப்பதையும், தங்கள் வாஞ்சைகளை நிறைவேற்ற இயேசுவை ஆராதிப்பதையுமே ஆவிக்குரிய வாழ்க்கை என்று எண்ணுகின்றனர். எனவே, அவர்களால் தேவ பிரசன்னத்தையும், தேவனுடைய அன்பையும் அனுபவிக்கும் வாய்ப்பை அடையாமல் போகின்றனர். நம் சித்தம் தேவன் செய்வதல்ல. தேவ சித்தம் நாம் செய்வதே ஆவிக்குரிய வாழ்க்கை. அவருக்காக வாழ்வதற்கு நாம் நம்மை அர்ப்பணித்துச் செயல்படும் போது, அவர் நம்மை தம்மண்டையில் சேர்த்துக் கொண்டு, நம்மை அவருக்காகச் செயல்படுத்துகின்றார். அதனுடைய விளைவே தேவ நன்மைகளும், தேவ ஆசீர்வாதங்களும்.

சிந்தனைக்கு...

இறைவன் உன்னிடம் இருக்கிறார் என்பதைவிட,
அவர் உன்னிடம் என்ன செய்கிறார் என்பதே முக்கியம்.

நவம்பர் 7

தேவனைச் சார்ந்திருப்போம்

சங்கீதம் 118 :1–29

மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும்...
சங்கீதம் 118: 8

சில ஆண்டுகளுக்கு முன்பு, என்னை ஓரளவிற்கு மாதந்தோறும் உதவிகளால் தாங்கி வந்த சிலர், சொல்லி வைத்தாற்போல், தங்கள் உதவிகளை நிறுத்திவிட்டார்கள். சில காலம் அதனால் எனக்குக் கொஞ்சம் மனக்கஷ்டம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால், அவர்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால், சிலருடைய உதவிகள் நின்று போனால்கூட, தேவன் தம்மைச் சார்ந்திருக்கிறவனுக்கு அளித்து வரும் உதவிகள் நின்று போவதில்லை, என்ற உண்மையை அதன் வழியாகத்தான் நான் அழுத்தமாகக் கற்றுக்கொள்ள முடிந்தது.

நம்மைத் தாங்குகின்ற, நமக்கு உதவுகின்ற, ஒத்தாசை செய்கின்ற மக்களுக்காக கர்த்தரைத் துதிக்க வேண்டும். அவர்களினால் நமக்குக் கிடைக்கும் ஆதரவுகளுக்காக நன்றியுடன் செயல்பட வேண்டும். ஆனால், எந்த நேரமும் அவர்களின் ஆதரவு நின்று போகலாம். ஏதாவது ஒன்று குறுக்கிட்டு நமக்கு அவர்கள் உதவி செய்ய மனமற்றுப் போகலாம். அவ்விதம் நேரிடலாம் என்ற எதிர்பார்ப்பு நமக்கு இருக்க வேண்டும். அப்படி நேரிட்டால்கூட, நம்முடைய தேவன் நம்மைக் கைவிடப் பட்டவர்களாக விட்டுவிடப் போவதில்லை என்ற விசுவாசம் நமக்கு வேண்டும்.

தேவன் சில நேரங்களில் நமக்கு உதவியாயிருக்கின்ற மக்களை சற்றுத் தூரப்படுத்தி விடுகிறார். நாம் தேவனை மட்டுமே முற்றிலும் சார்ந்து வாழ வேண்டியதின் கட்டாயத்தை உணர்த்தவே அவ்விதம் செய்கின்றனர். ஆம், உண்மையான தேவனுடைய பிள்ளைகள் மனிதர்களைச் சார்ந்தோ, சாதகமான சூழ்நிலைகளைச் சார்ந்தோ வாழக் கூடாது. தேவனைச் சார்ந்து வாழ்வதே அவர்களின் பலம். அப்போது மனிதர்கள் இல்லாத இடத்தில் காகங்களால் எலியா போஷிக்கப்பட்டது போல, தேவன் நம்மை அதிசயமாய் நடத்துவதைக் காண முடியும். ஆயிரம் கரங்களின் ஆதரவு நமக்கு நின்று போனால்கூட, தேவ கரத்தின் ஆதரவு நமக்கு உண்டு. அது போதுமானது. அந்த நம்பிக்கையில் நிலைத்திருப்போம்.

எகிப்தில் அடிமைகளாயிருந்த இஸ்ரவேல் ஜனங்கள், மோசேயின் தலைமையில்தான் கானானை நோக்கிப் புறப்பட்டார்கள். நாற்பதாண்டுக் காலம் மோசேதான் அவர்களை நடத்தினான். மோசேயின் மூலமாகத் தேவன் தலைமை தாங்கிய பயணமே அது. ஒருநாள் மோசே மரித்துப் போனான். ஆயினும், பயணம் அத்துடன் முடிந்து போகவில்லை. தேவன் யோசுவாவை எழுப்பித் தொடர்ந்து அவர்களை வழிநடத்தினார். ஏனென்றால், அது தேவனால் ஏற்படுத்தப்பட்ட பயணம்.

சிந்தனைக்கு...

இறைவனுக்குத் தன்னை அடிமையாக்கிக் கொண்டவனைப் போல்,
உலகத்தில் சுதந்திரமாய் வாழ்கிறவன் யாருமில்லை.

நவம்பர் 8

அன்பிற்குச் சான்று

1 யோவான் 4 :7 –21

தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே...
1 யோவான் 4 : 10

தன்னுடைய வீட்டில் ஸ்தோத்திர ஜெபக்கூட்டம் ஒன்றை நடத்திய வசதிமிக்க கிறிஸ்தவப் பிரமுகர் ஒருவர், கர்த்தர் தங்களுக்குச் செய்த நன்மைகளைக் குறித்துச் சாட்சி கூறினார். கர்த்தர் தங்களை மிகுதியாக நேசிப்பதாகக் கூறி, அவர் அதற்குச் சான்றுகளாக கர்த்தர் தங்களுக்கு அளித்த பலவித நன்மைகளைப் பட்டியலிட்டார். ஆனால், அவருக்கு இரட்சிப்பின் அனுபவமோ, கர்த்தருக்காக ஒரு வித்தியாசமான பரிசுத்த வாழ்க்கையை வாழ்கின்ற அனுபவமோ கிடையாது. அநேகர் உலகப் பிரகாரமாக அடைந்த பலவித நன்மைகளையே, கர்த்தர் தங்களை நேசிப்பதற்கான சான்றுகள் என்று புரிந்து கொள்கின்றார்கள்.

இவ்விதமான ஒரு புரிந்து கொள்ளுதல், எதிர்பார்த்த நன்மைகள் வராமல் போகும் போதும், வாஞ்சித்தபடி சில பிரச்சினைகளிலிருந்து தீர்வு கிடைக்காமல் போகும் போதும், கர்த்தருடைய அன்பைச் சந்தேகிக்கும் மனநிலைக்குக் காரணமாகி விடுகிறது. சரீரப்பிரகாரமான நன்மைகள் தேவனுடைய அன்பின் விளைவாக இருக்க முடியும் என்பது உண்மையாயினும், தேவ அன்பிற்கு அவைகளே உண்மையான அளவுகோல்கள் அல்ல. இஸ்ரவேல் ஜனங்களுக்கு வனாந்திர யாத்திரையின் போது தேவன் செய்த நன்மைகள் எண்ணிலடங்காதவை. ஆயினும், அவர்கள் மேல் தேவன் பிரியமாயிராதபோதுகூட, அவ்விதம் செய்தார் என்று வேதம் சொல்கிறது. (1 கொரி – 10:5)

தேவன் தமது அன்பை தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காகப் பாவ பலியாகத் தந்ததின் மூலமாகவே வெளிப்படுத்தினார். (1 யோ – 4:10) இயேசு கிறிஸ்து நமக்காக ஜீவன் தந்து இரட்சிப்பினை உருவாக்கியதின் வாயிலாகவே, அவருடைய அன்பு பரிபூரணமாக வெளிப்பட்டது. எனவே, இயேசு கிறிஸ்துவினால் வரும் பாவ மன்னிப்பும், பாவ விடுதலையும், பரிசுத்த வாழ்க்கையுமே தேவ அன்பை உறுதிப்படுத்தும் சான்றுகளாகும்.

பவுல் அப்போஸ்தலன் தன்னைப் பற்றிய சில தகவல்களைத் தரும்போது, இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களாகவும், தாக முள்ளவர்களாகவும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம் என்றான். அதே வேளையில் கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்றும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு எங்களைப் பிரிப்பவர் யார் என்றும் கூறினான். (ரோமர் – 8:36) உலகப் பிரகாரமாக நன்மைகள் எதையும் பெறாத நிலையிலும், அவன் தனக்குள் கிறிஸ்துவுக்குள்ளான அன்பை மிகுதியாக அனுபவித்தான்.

சிந்தனைக்கு...

கர்த்தரின் உருக்கங்களை உணர்ந்து கொண்டவன், அவருடைய பாதையில் வரும் நெருக்கங்களால் நிலைகுலைவதில்லை.

நவம்பர் 9

நண்பர்களின் கருத்து

11 நாளாகமம் 18 :1–17

ராமோத்தின் மேல் யுத்தம் பண்ணப் போகலாமா?

11 நாளாகமம் 18:5

சிலர் நாம் எவ்வளவு நல்ல கருத்துக்களைச் சொன்னாலும், அதனைத் தவறானதாகக் காண்பிக்க வகை தேடுவார்கள். சிலர் நாம் எவ்வளவு நல்ல செயல்கள் செய்தாலும், அவற்றில் குறைவுகள் உண்டு என்று காண்பிக்க அதிக ஆர்வமாயிருப்பார்கள். இவர்களைக் குறித்து நாம் கவலைப்படத் தேவையில்லை. இவர்களுடைய விமர்சனங்களுக்குப் பின்னால் அன்பற்றதும், நல்லெண்ணமற்றதுமான ஒரு தவறான மனநிலை உள்ளது. ஆனால், இவர்களின் எதிர்விதமான பார்வைகளும், குறைகாண நாடும் மனோபாவமும் நமக்கு நல்லதே. அவற்றால் நாம் இன்னும் இன்னும் நம்முடைய செயல்களையும் கருத்துக்களையும் குறைகளற்றதாக்கிக் கொண்டிட, நல்ல உந்துவிசை கிடைக்கும்.

ஆனால், நாம் செய்வது எதுவாயினும் சரியாகவேயிருக்கும் என்றும், நாம் சொல்வது எல்லாம் நல்ல கருத்தாகத்தான் இருக்கும் என்றும் நம்புகின்ற சிலர் உண்டு. அவர்கள் எதையும் ஆராய்ந்து பாராமலே, நம்மைச் சரி என்று ஒத்துக் கொள்கின்றவர்கள். எதையும் ஆழ்ந்து சிந்திக்காமலே, நமக்கு நற்சாட்சி தந்து விடுகின்றவர்கள். இதற்குக் காரணம் நம்மேல் வைத்த அன்பாகவோ அல்லது நம் மேல் கொண்ட கண்மூடித்தனமான நம்பிக்கையாகவோ இருக்கக் கூடும்.

ஆனால், இங்கே நமக்கு சற்று ஜாக்கிரதை உணர்வும், கவனமும் வேண்டும். ஏனென்றால், நம்மை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து கூர்ந்து கவனிக்கின்றவர்களைவிட, நம்மை எந்த யோசனையும் இன்றி ஏற்றுக் கொள்கின்றவர்களால், நமக்கு மோசமான பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. ராமோத்தின் மேல் யுத்தம் பண்ண விரும்பினான் ஆகாப் ராஜா. அவனுடைய அந்த முயற்சியை 400 தீர்க்கதரிசிகள் ஒரு மனதாய் ஆதரித்தனர். ஆனால், ஆகாப் வீழ்வதற்கே அது வழிவகுத்தது. ஏனென்றால், அவர்கள் ராஜாவின் கருத்துக்கு ஆதரவு தந்து இசைந்து போவதையே ராஜாவிற்குச் செய்யும் நல்ல விஷயமாக எண்ணினார்கள்.

ஆம், சில நேரங்களில் விரோதிகளின் வெறுப்பின் விளைவான விஷயங்களில் நாம் ஜாகிரதையாயிருப்போம். ஆனால், நண்பர்களின் அன்பின் விளைவான சில செயல்கள், நமக்கு எதிரிடையான விளைவுகளை ஏற்படுத்திவிட வாய்ப்புண்டு. எனவே, எந்த ஒரு கருத்தும், எந்த ஒரு செயலும் நண்பர்களின் பார்வையில் எப்படியிருக்கின்றது என்பதை மட்டும் சார்ந்து செயல்படாமல், தேவனுடைய பார்வையில் எப்படியிருக்கும் என்று சிந்திக்க, அதிகமான கவனம் செலுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

உண்மைகளினால் உன்னை மாற்றிக் கொண்டிரு.
இல்லையேல் பொய்கள் உன்னை ஏமாற்றிக்கொண்டிருக்கும்.

நவம்பர் 10
முயற்சி

நியாயாதிபதிகள் 6:11–24
உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ.
நியாயாதிபதிகள் 6:14

ஆவிக்குரிய வாழ்க்கையில் எதுவுமே முயற்சிகளினால் அல்ல. எல்லாம் தேவ கிருபையினால் மட்டுமே நடக்கும் என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனால், தேவ கிருபையினால்தான் எல்லாம் ஆகும் என்பதால், முயற்சிக்கு அவசியமே இல்லை என்று அர்த்தம் கொள்ளக் கூடாது. முயற்சிகளை மட்டுமே சார்ந்து செயல் பட்டால் அதனால் சுயதிறன்தான் உருவாகும் என்பது உண்மை. ஆனால், தேவ கிருபையைச் சார்ந்து நாம் முயற்சிக்காமலே, எல்லாம் தானாக நடந்து விடும் என்பதும் தவறான சிந்தனை.

மனிதன் தன்னுடைய சுய ஆற்றலை அதிகமாக நம்பி, அதனைச் சார்ந்து முயற்சிப்பது பரிசுத்த விளைவுகளைத் தராது. ஆனால், தேவ ஆற்றலைச் சார்ந்து முயற்சிக்காவிட்டாலும், பரிசுத்த விளைவுகள் ஏற்படாது. அநேகர் கிறிஸ்தவ வாழ்க்கை, முயற்சிகள் எதுவுமின்றி தானாக எளிதாக நடந்து விடும் என்று நம்புகின்றார்கள். அவ்விதமான நம்பிக்கையின் பின்னணியில் வெற்றிகளைக் காண முடியாமல் போகும் போது முடியவில்லையே, முடியவில்லையே என்று சோர்ந்து போகின்றனர்.

பாலியியல் சம்பந்தமான விஷயங்களிலும், நற்குணம் சம்பந்தமான விஷயங்களிலும், பிறருடைய அநீதியான விஷயங்களைத் தாங்குகின்ற விஷயங்களிலும், பலர் தோற்றுப்போய் விடுகின்றனர். அதற்கு முக்கியமானதோர் காரணம், முயற்சிகளும் அவசியம் என்பதைப் புரிந்து கொள்ளாததால்தான். பார்வோனிடமிருந்து எபிரேய மக்களை விடுவிக்கத் தேவன்தான் மோசேயை எகிப்துக்கு அனுப்பினார். ஆனாலும், உடனேயே அது நடந்துவிடவில்லை. ஒன்பது முயற்சிகளில் தோல்வி கண்ட பின்னரே நடந்தது. ஆனால், மோசே தேவ பலத்தையும் வழிகாட்டுதலையும் சார்ந்து திரும்பத் திரும்ப முயற்சிக்க வேண்டியது அவசியமாயிருந்தது.

இராணுவத்தில் சேர்ந்து, யுத்தகளத்தில் போய் நின்று சண்டை போடுவது எளிதாக நடந்து விடுமா? நாம் தேவ கிருபையைத்தான் நம்பித் தேட வேண்டும். அதற்காகவே ஜெபிக்கவும் வேண்டும். அதற்காகவே நாம் அதிகமாக விசுவாசிக்க வேண்டும். இப்போது நமக்காகத் தேவன் வந்து செயல்படுவார் என்ற நம்பிக்கையோடு, நாம் முன்னோக்கிப் போக வேண்டும். முடியாதவைகள் போல இருந்தாலும், என்னைப் பலப்படுத்தும் இயேசு கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு, என்ற விசுவாசத்தோடு முழுபலத்தோடு முயற்சிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

உண்மையற்றவனின் உயர்வுகள் அவனை மகிழ்விப்பதில்லை.
உண்மையுள்ளவனின் தாழ்வுகள் அவனைச் சங்கடப்படுத்துவதில்லை.

நவம்பர் 11
நிர்ப்பந்திக்க வேண்டாம்

1 கொரிந்தியர் 2:9–16

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்
1 கொரிந்தியர் 2:15

பக்தியான ஒருவர், கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடிவெடுத்து ஆயத்த மாயிருந்தார். ஆனால், கர்த்தர் தன்னிடம் வந்து இந்த ஊழியத்தைச் செய் என்று சொல்லும் வரை ஊழியத்திற்குச் செல்லமாட்டேன் என்றும், ஒரு நிபந்தனை வைத்திருந்தார். பல ஆண்டுகள் ஆகியும் எதுவும் நடக்கவில்லை. ஊழியம் செய்ய ஆயத்தமாயிருந்தும், கர்த்தர் ஊழியத்திற்குப் போகச் சொல்லவில்லையே என்பது அவருடைய வருத்தம். இன்னொரு விசுவாசி, ஆண்டவர் தனக்கு ஒரு பெண்ணைக் காண்பிக்கும் வரை திருமணம் செய்யமாட்டேன் என்று பிடிவாத மாயிருந்தார். வயதுகள் கடந்தன. கர்த்தர் யாரையும் காட்டவிலை. இறுதியில் கர்த் தருக்காகக் காத்திருந்தும் கர்த்தர் உதவவில்லையே என்பது அவரின் வருத்தம்.

வியாதியினால் பாதிக்கப்பட்ட ஒருவர், கர்த்தர்தான் என்னை அற்புதமாகச் சுக மாக்க வேண்டும். மருந்து மாத்திரை சாப்பிடவேமாட்டேன் என்று வைராக்கியமா யிருந்தார். ஆனால், வியாதி அவரை விட்டுப் போகவேவில்லை. இவ்வளவு விசுவாசித்தும், கர்த்தர் தனக்கு சுகம் தரவில்லையென்பது அவரின் வருத்தம். ஆண்டவரிடம் பெரிய காரியங்களை விசுவாசித்து எதிர்பார்க்க நமக்கு உரிமை உண்டு. அதே வேளையில், ஆண்டவரைக் குறிப்பிட்ட விதமாகச் செயல்படும்படி நாம் கேட்க முடியாது. விசுவாசம், வைராக்கியம் என்ற போர்வையில், நாம் எதிர் பார்க்கின்ற விதமாகக் கர்த்தர் செயல்பட வேண்டும் என்று நிர்ப்பந்திக்க முடியாது.

ஆண்டவர் ஒரு வியாதியை மருந்தில்லாமலும் குணமாக்க முடியும், ஒரு மருத்துவர் மூலமும் குணமாக்க முடியும். மருந்தில்லாமல் குணமாவது மட்டும் தான் அற்புதம் எனக் கூற முடியாது. மருத்துவர் மூலமாகவும் கர்த்தர் அற்புதம் செய்ய முடியும். எசேக்கியா ராஜாவுக்கு தேவன் அப்படித்தானே செய்தார். (2 ராஜா 20:7)

அதுபோல தேவ சித்தம் தேட நமக்கு உரிமை உண்டு. ஆனால், அதற்காக யாரோ ஒருவர் வந்து சொல்ல வேண்டும் என்றோ, சொப்பனத்தில் பேச வேதாகமம் படிக்கும்போது வெளிப்பட வேண்டும் என்றோ, கர்த்தரைக் கட்டாயப்படுத்த முடியாது. வேறு விதமாகவும், சூழ்நிலைகள் மூலமாகவும், நல்ல சிந்தனைகள் மூல மாகவும் கர்த்தர் அதைச் செய்ய முடியும். சில காரியங்களைக் கர்த்தர் நமக்குத் தந்திருக்கிற ஞானத்தையும், அறிவையும் உபயோகப்படுத்தி, ஒரு பரிசுத்தமான பார்வையோடும், நோக்கோடும் நாம் செய்ய முன்வரவேண்டும்.

சிந்தனைக்கு...

இறைவனின் சத்தத்தை இதயத்தில் கேட்டுப் பழகினால், அவருடைய சித்தத்தைக் கேட்கப் பிறரிடம் போகத் தேவையில்லை

நவம்பர் 12

சரியான பாதைதானா?

அப்போஸ்தலர் 5:34-42

யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி ...
அப்போஸ்தலர் 5:37

பல ஆண்டுகளுக்கு முன்பு பாண்டிச்சேரியில், ஒரு குறிப்பிட்ட குறுக்கு சாலை வழியாக நான் என் வாகனத்தில் செல்ல நேர்ந்தது. அந்தச் சாலை வழியாக சில வாகனங்கள் போவதைப் பார்த்து, நானும் ஒன்றையும் யோசிக்காமல் பின் தொடர்ந்தேன். செல்லும் வழியில் திடீரென்று போக்குவரத்து போலிஸ்காரர் ஒருவர் என்னை நிறுத்தினார். விபரம் தெரியாமல் நான் விழித்தேன். பின்னர்தான் தெரிந்தது நான் ஒரு வழிச்சாலை வழியாகத் தவறாக வந்த விபரம்.

சில நேரங்களில் மற்றவர்கள் செல்வது சரியான பாதைதானா என்பதைக் கவனிக்காமல், அவர்களைப் பின்பற்றிப் போய்விடுகிறோம். நாம் செல்லும் பாதை நாம் போகத்தக்க பாதைதானா என்பதைக் குறித்துக் கவனித்து அறியாமல், பலர் செல்கின்றார்களே என்பதற்காக நாமும் சென்றால், அது நமக்கு எந்த நேரத்திலும் கேட்டைக் கொண்டுவர முடியும்.

நாம் எந்த ஒன்றையும் அது சரிதானா, அது தேவனுக்குப் பிரியமானது தானா, அது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உகந்ததுதானா, அதில் தேவ நியாய மீறுதலுக்கு இடமில்லையா, அது தேவனுடைய வசனங்களுக்கு முரணாக இல்லையா என்று ஆராய்ந்து பார்த்து அவற்றில் ஈடுபடவேண்டும். பலர் அவ்வழியாகப் போகிறார்களே என்பற்காக நாமும் போகக்கூடாது. ஒருவேளை தவறான பாதையில் சென்ற பலருக்கு எந்தத் தீதும் ஏற்படாமல் இருக்கலாம். ஆனால், நமக்குத் தீது ஏற்பட அங்கு வாய்ப்புண்டு. ஏனென்றால், அது தீங்கு விளைவதற்கு ஏற்ற ஒரு பாதை. சாலை விதியை மீறி எனக்கு முன் சென்ற பலர் தப்பித்துக் கொண்டனர். ஆனால், அறியாமல் சென்ற நானோ மாட்டிக்கொண்டேன்.

சில இளநிலை தேவ ஊழியர்கள், முன்னேறி உயர்ந்து நிற்கும் ஊழியர் களின் வழி முறைகளை அப்படியே பின்பற்றுவார்கள். அதே வேளையில், அந்த உயர்ந்த ஊழியர்களின் ஊழிய நடைமுறைகள் வேதத்திற்கு முரணானதாகவும், தேவனுடைய சித்தத்திற்கு எதிரானதாகவும் இருப்பதுண்டு. ஆம், எந்த ஒருவரையும் நாம் அப்படியே பின்பற்றிவிடக் கூடாது. பலர் செல்வதால் ஒரு பாதை சரியான பாதை என எண்ணிவிடக்கூடாது. அந்தப் பாதையின் நன்மை தீமையை வேத வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்த்து, நிதானித்தறிந்தே பின்பற்றுவதா, வேண்டாமா என்று முடிவு செய்ய வேண்டும். ஒருவர் கிறிஸ்துவை சரியாகப் பின்பற்றுகிறாரா என்று பார்த்துணரும் முன்பே, அவர் வழியில் செல்ல அவசரப்படாதிருப்போமாக.

சிந்தனைக்கு...

பலர் நம்புவதால் ஒரு விஷயம் உண்மை என்று ஆகிவிடாது,
சிலரே நம்புவதால் ஒரு விஷயம் பொய் என்றும் ஆகிவிடாது.

நவம்பர் 13
குறை உணர்த்தல்

நீதிமொழிகள் 15:1–17

கடிந்து கொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகி.
நீதிமொழிகள் 15:5

என்னுடைய நண்பர்களின் பாராட்டு வார்த்தைகளைவிட, என்னை விரும்பாதவர்களின் விமர்சனங்கள்தான், என்னைச் சீர் செய்ய அதிக உதவியாயிருந்தது என்றார் உலகப்பிரசித்தி பெற்ற ஒருவர். நம்முடைய குற்றங்களைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டவர்கள், நமக்குப் பாசமான நண்பர்களாகவே தோன்றியிருப்பார்கள். ஆனால், அவர்கள் உண்மையில் நமக்கு நன்மையை அல்ல, தீமையையே செய்திருக்கின்றார்கள்.

என்னுடைய வாழ்க்கைப் பாதையில் என் குறைகளை, என் தவறான முடிவுகளை, மேன்மைக்குத் தகுதியற்ற சில காரியங்களை நேரடியாகச் சுட்டிக் காட்டின சிலர் உண்டு. அவர்கள் நல்ல நோக்கத்திலோ அல்லது குறைகூறக் கிடைத்த வாய்ப்பை உபயோகப்படுத்தியோ அப்படிச் செய்தார்கள். எனக்கு அது உடனே வருத்தமாக இருந்தது. சில நேரம் அவர்கள் மேல் வெறுப்பும் ஏற்படத்தான் செய்தது. ஆனால், அவற்றால் நான் பெற்ற பலன்கள் பல. அவற்றால் என்னை ஆராய்ந்து பார்த்துச் சில காரியங்களை மறுபரிசீலனை செய்ய வழி ஏற்பட்டதுண்டு.

ஆம், நம் குறைகளைத் துல்லியமாகக் கண்டறியச் சிலர் தேவையே. நாம் சில காரியங்களைக் குறித்த சிந்தனையை மறுபரிசீலனை செய்யத்தக்கதாகச் சுட்டிக் காட்டும் சிலர் தேவையே. நம்மை நாம் சரியாகக் கண்டுகொள்ளும் கண்ணாடியாக அவர்கள் விளங்க முடியும். ஒரு வேளை அவர்கள் தவறான ஒரு நோக்கத்தினால் அவ்விதம் செய்தாலும், நாம் நம்மையும், நம் செயல்களையும் உற்றுக் கவனிப்பதற்கும், அவைகளைச் சீர்செய்ய வேண்டிய தேவையை உணர்வதற்கும் அவை உதவினபடியால், அவர்கள் நமக்கு நல்லதையே செய்திருக்கிறார்கள்.

சில நேரங்களில் நம்முடைய நட்பு காக்கும் உணர்வு, சிலருடைய தவறுகளைக் கண்டு கொள்ளாமல் போகத் தூண்டுகிறது. சில நேரங்களில் நட்பு, நமது குறைகளைப் பிறர் கண்டு கொள்ளாமல் போகவேண்டும் என மனம் எதிர்பார்க்கிறது. இது தவறானது. நம்முடைய நண்பரோ, சக விசுவாசியோ, வாழ்க்கைத் துணையோ செய்கின்ற ஒரு செயல் அவருக்கோ, பிறருக்கோ தீது ஏற்படுத்தும் என நம்புகின்ற சூழ்நிலையில், மற்றவர் நம்மைக் கசந்து கொள்வாரோ என்ற கவலையின்றி தவறானதைச் சுட்டிக்காட்ட முன்வர வேண்டும். அது இன்று அவருக்கு வேம்பாகக் கசந்தாலும், என்றாவது ஒரு நாள் அதனால் வந்த நன்மையை அவர் உணர்ந்து கொள்வார்.

சிந்தனைக்கு...

தவறுகளைக் கண்டு கொள்ளாதவனிடம் கவனமாயிரு.
கண்டித்து உணர்த்துகிறவனுக்கோ கடனாளியாயிரு.

நவம்பர் 14
சந்தோஷ அழைப்பு

யோவான் 15:1–15

என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கு...
யோவான் 15:11

நான் சில தீவிரமான கிறிஸ்தவர்களைப் பார்த்திருக்கின்றேன். அவர்கள் முகத்தை எப்போதும் தொங்கவிட்டுக்கொண்டு, முகத்தில் வருத்தமான உணர்வுகளைப் பிரதிபலித்துக் கொண்டே இருப்பார்கள். புன்னகையையோ, சிரிப்பையோ அவர்களிடம் பார்க்க முடியாது. அவர்கள் எல்லா வேளைகளிலும் சீரியஸான ஒரு மனநிலையுடனும், நொந்துபோன உணர்வுகளுடனுமே பேசவும், பழகவும் செய்வார்கள்.

ஆனால், இது ஒரு உண்மையான கிறிஸ்தவ அனுபவம் அல்ல. ஏனென்றால், கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு சந்தோஷம் நிறைந்த அனுபவமாகும். உண்மையான கிறிஸ்தவனுக்குச் சிரமங்கள் உண்டு. கஷ்டங்களும், பிரச்சினைகளும் உண்டு. துக்கத்திற்கேதுவான துன்பச் சூழ்நிலைகள் வழியாக அவன் கடந்து செல்ல நேரிடுவதுண்டு. ஆயினும், அவன் சந்தோஷத்திற்கும், உற்சாகத்திற்கும் தூரமானவனல்ல. பாடுகளின் நடுவில் அவன் வாழ்ந்தாலும், கர்த்தருடைய சந்தோஷத்தின் வெளிப்பாடாகவே அவன் விளங்குவான். இது கிறிஸ்தவ வாழ்க்கையில் பரிசுத்த ஆவியினால் ஏற்படும் ஆச்சரியமான ஒரு அனுபவமாகும்.

பலவிதப் பாடுகளின் நடுவில் வாழ்ந்த இயேசு, சந்தோஷமற்றவராகயிருக்கவில்லை. எனவேதான் என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்க வேண்டும் என்றும், நிறைவாயிருக்க வேண்டும் என்றும் இயேசு தம்முடைய சீடர்களிடம் கூறினார். (யோ–15:11) ஆம். சந்தோஷத்திற்கான ஒரு அழைப்பைப் பெற்ற நாம், அதனை உள்ளான நிலையில் அனுபவிப்பது மட்டுமன்றி, நாம் சந்தோஷமாயிருப்பது பிறருக்குத் தெரியத்தக்கதாக வாழவும் வேண்டும். சந்தோஷத்தைப் பற்றிப் பேசுகின்ற நாம், எப்போதும் துக்கமுகமாகக் காணப்பட்டால், அது நாம் சொல்வதை நாமே பொய்யாக்குகின்ற ஒரு செயலாகும்.

சிறைச்சாலைக்குள் அடைபட்டிருந்த வேளையிலும், வெளியிலுள்ள விசுவாசிகளுக்குக் கிறிஸ்துவினால் வரும் சந்தோஷத்தைக் குறித்து, ஞாபகமூட்ட அப்போஸ்தலனாகிய பவுல் மறக்கவில்லை. (பிலி–4:4) ஏனென்றால், கிறிஸ்துவோடு தங்களின் வாழ்க்கையை இணைத்துக்கொண்ட ஒவ்வொருவருக்கும், கிறிஸ்துவுக்குள் உலகம் தர இயலாத ஒரு சந்தோஷம் வைக்கப்பட்டுள்ளது. பாடுகளையும், பலவிதச் சோதனைகளையும் கடந்து செயல்படும் ஆற்றலுள்ள அந்தத் தெய்வீக சந்தோஷத்தை அனுபவிக்க நாம் தவறக்கூடாது.

சிந்தனைக்கு...

கவலைகள் உன்னைவிட்டு ஓட வேண்டுமானால்,
நீ கர்த்தரை நோக்கி ஓட முதலில் கற்றுக்கொள்.

நவம்பர் 15
பாடம் கற்பதற்காக

சங்கீதம் 119:55-72

நான் உபத்திரப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்.
சங்கீதம் 119:67

ஆவிக்குரிய சகோதரர் ஒருவர் நல்ல பக்தியுள்ளவராகவும், நல்ல அன்புள்ளவராகவும் பழகிவந்த ஒருவரோடு, நெருக்கமான ஒரு நல்ல ஐக்கியத்தை வைத்திருந்தார். ஆனால், சில காலம் சென்ற பின் அந்த மனிதர் உள்ளொன்றாகவும், வெளியொன்றாகவும் இருப்பதை அறிய நேர்ந்தது. அவருடைய உண்மையான மனநிலை அறியாமல் ஆழ்ந்த ஐக்கியம் வைத்ததின் விளைவாக, அவர் பல கஷ்டங்களைக் காண நேர்ந்தது. இந்த சகோதரருடைய ஒரு அங்கலாய்ப்பு என்னவென்றால், அந்த நபரோடு தொடர்பு வைத்து, சில கஷ்டங்களைக் காணும் வரை, கர்த்தர் ஏன் அவ்வித உறவு ஏற்படாமல் தடுக்கவில்லை என்பதாகும்.

சில நேரங்களில் தேவன் தம்முடைய பிள்ளைகள் தவறான பாதையில் செல்லும்போது, தடுக்காமலிருந்து விடுகிறார். சில தவறான மனிதர்களோடு நட்புக் கொள்ள நேரிடுகின்ற போது தடை செய்யாமலிருந்து விடுகிறார். ஏனென்றால், சில தவறுகள் வழியாகக்கூட நமக்கு சில பாடங்களை, கற்றுத் தருவது அவருடைய சித்தமாயிருக்கிறது. சில தவறான நட்பு மற்றும் பாதைகளின் விளைவுகளை நாமாகக் கண்டு, அதை உணர்ந்து ஒரு ஜாக்கிரதை உணர்வை ஏற்படுத்திக் கொள்ள அவர் அனுமதிக்கிறார்.

கானானில் பஞ்சம் வந்தபோது ஆபிரகாம் எகிப்தை நோக்கிச் சென்றான். அது ஒரு தவறான பாதை. ஆயினும், தேவன் தடுக்கவில்லை. அங்கே அவனுக்கு சில மனவியாகுலங்கள் நேரிட்டது. அதன் மூலம் சுய ஆலோசனையின்படி பாதைகளைத் தெரிந்து கொள்ளுதல், எவ்வளவு தவறானது என்பதை உணர்ந்து ஜாக்கிரதையோடு செயல்பட வழி ஏற்பட்டது. எவ்வளவு நெருக்கங்கள் ஏற்பட்டாலும் தேவ வழி நடத்துதலுக்காகக் காத்திருக்க வேண்டியது. எவ்வளவு அவசியம் என்பதை அனுபவப்பூர்வமாக உணர முடிந்தது.

சில தவறான முடிவுகளை நாம் எடுத்து அதன் விளைவாக பல கஷ்டங்களை அடைய நேரிடும்போதுதான், பின்னாட்களில் எச்சரிக்கையோடு நல்ல முடிவுகளை எடுப்பதற்கான விழிப்புணர்வு கிடைக்கின்றது. சில தவறான மனிதர்களின் உறவால் கஷ்டப்பட நேரிடும் போதுதான், பின்னாட்களில் மனிதர்களோடுள்ள உறவு நிலைகளில் மிகுந்த ஜாக்கிரதையுடன் செயல்பட வழி ஏற்படுகின்றது. ஒரு வேளை அவ்விதமான ஒரு கசப்பான அனுபவத்தின் வழியாகக் கடந்து செல்ல தேவன் அனுமதியாதிருந்தால், அவ்விதப் பாடங்களை நாம் கற்கும் வாய்ப்பில்லாமல் போய், பின்னர் பெரிய குழிகளில் விழுந்து வியாகுலப்பட நேரிடும்.

சிந்தனைக்கு...

பிறரிடம் நீ கண்ட ஏமாற்றங்களெல்லாம் உன் மூலம்
பிறர் ஏமாற்றம் அடையாமல் இருக்க உதவட்டும்.

நவம்பர் 16

தேவன் மேல் அன்பு

உபாகமம் 6:1–14

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும்...
உபாகமம் 6:5

சில நேரங்களில் நாம் பிறர்மேல் நல்ல அன்பு காண்பிக்கின்றோம். ஆனால், அது தேவன் மேல் கொண்ட அன்பின் விளைவாக இராமல் சுயத்தில் உருவான அன்பாக உள்ளது. எனவே, அவ்விதம் அன்பு கூர்ந்த செயலே கசப்பான நினைவுகளை ஏற்படுத்திவிடுகிறது. சில நேரங்களில் நாம் பிறருக்கு நல்ல நன்மைகளைச் செய்கின்றோம். ஆயினும், தேவன் மேல் கொண்ட அன்பினால் செய்யாமல் தனிப்பட்ட காரணங்கள் சார்ந்து அதைச் செய்கின்றோம். எனவே, அதுபோல பதிலுக்கு நமக்கு நல்லதை அவர்கள் செய்யாவிட்டால் விசனமடை கின்றோம். சில நேரங்களில் பிறரிடம் நாம் மிக நல்ல பண்புகளோடு நடந்து கொள்கின்றோம். ஆயினும், தேவன்மேல் கொண்ட அன்பினால் அல்ல. மற்ற வரைப் பிரியப்படுத்தும் நோக்குடன் அவ்விதம் நடந்து கொள்கின்றோம்.

நாம் மற்றவர்களை நேசிக்க வேண்டும். நல்ல பண்புகளோடு நடந்து கொள்ள வேண்டும். ஆனால், இவை யாவும் தேவனை நேசிப்பதின் காரணமாகச் செய்ய வேண்டும். அவற்றைத் தேவனைப் பிரியப்படுத்து வதற்காகச் செய்ய வேண்டும். அவ்விதம் எதைச் செய்தாலும் தேவனுக்காகச் செய்தால், நாம் செய்தவைகளுக் காக வருத்தப்பட நேரிடாது. நாம் செய்தவைகளுக்காக நன்றியுணர்வு பதிலாகக் காண்பிக்கப்படாவிட்டாலும், நமக்கு வருத்தம் வராது.

ஏனென்றால், நாம் எதையும் மனிதர்களுக்காகவோ, மனிதர்களின் பதில் செயல்களுக்காகவோ செய்யவில்லை. தேவனுக்காகச் செய்தோம் என்ற உணர்வு நமக்குத் திருப்தியையும், தேவன் பதில் செய்வார் என்ற நம்பிக்கையையும் தரும். நம்முடைய அன்பை, செயலை, நற்பண்பை மனிதர்கள் மறந்து போனாலும், தேவன் மறக்கமாட்டார்.

சிலர் அன்பை மழையாகப் பொழிகின்றார்கள். ஆனால், திடீரென்று அன் பின்றி வறண்டு போய் விடுகின்றனர். சிலர் தியாகமாக பல நன்மைகளைச் செய் கின்றனர். ஆனால், ஏதோ ஒன்றைக் காரணமாகக் காண்பித்து, ஒரு சிறு உதவி கூட யாருக்கும் செய்யாமல் போகிறார்கள். சிலர் நற்பண்புகளோடு நன்றாகப் பழகு கின்றனர். ஆனால், ஏதோ ஒன்று அவர்களை விசனப்படுத்துகிறது. உடனேயே பண்புகளின்றிச் செயல்படுவதே, இந்த பூமிக்குப் பொருத்தம் என்று எண்ணி விடுகின்றனர். ஏனென்றால், தேவன் மேல் கொண்ட அன்பினாலோ, தேவன் மேல் கொண்ட பற்றினாலோ, தேவன் மேல்கொண்ட நம்பிக்கையினாலோ அவ்வித மாகச் செயல்படவில்லை.

சிந்தனைக்கு...

நன்மையைப் பெற்றவன் அதை மறந்தால் கவலைப்படாதே,
நன்மையைச் செய்யச் சொன்னவர் மறக்கமாட்டார் அதை மனதில் வை.

நவம்பர் 17

கொள்கையில் உறுதி

நீதிமொழிகள் 22:1–21

நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப் படத்தக்கது.
நீதிமொழிகள் 22:1

தேவன் அனுமதிக்கும் சில சூழ்நிலைகள் நம்மிடம் காணப்படும் தவறான குணங்கள், பழக்கங்கள், கொள்கைகள், நிலைப்பாடுகள் ஆகியவற்றை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்புகளாக இருக்கக் கூடும். நாம் நம்மையும் நம்முடைய தவறான எண்ணங்களையும், மாற்றிக்கொள்ள வேண்டிய தேவையை அவை வற்புறுத்தும்போது நாம் மாற வேண்டும்.

ஆனால், வேறு சில சூழ்நிலைகள் நாம் ஏற்றுக்கொண்ட நல்ல கொள்கை களையும், வழிகளையும், நிலைப்பாடுகளையும், மாற்றிக்கொள்வதற்கு நம்மைக் கட்டாயப்படுத்துகின்றவை. அவ்விதம் மாற்றிக்கொண்டால், அங்கே கவர்ச்சியான உயர்வுகளும், நல்ல அனுகூலங்களும் ஏற்படும். ஆனால், இது போன்ற சூழ் நிலைகள் நம்முடைய நல்ல சத்தியம் சார்ந்த உறுதிப்பாடுகளை விட்டு கீழே இறங்கி வரத் தூண்டும் சோதனைகள் ஆகும். இங்கே நாம் மாறாதவர்களாக இருக்க வேண்டும். பணமோ, புகழோ, உயர்வோ, பதவியோ, தற்காலிக இன்பங்களோ நம்மை மாற்றுவதற்கு இயலாதவைகள் என்பதை நிரூபிக்க வேண்டும்.

அநேகர் மாற வேண்டிய அவசியமான சூழ்நிலைகளில் தங்களை மாற்றிக் கொள்ள விரும்பாமல், மனக்கடினம் சார்ந்து வாழ்கின்றார்கள். ஆனால், மாறாமல் உறுதியாக நின்று பரிசுத்தத்தின் வலிமையை விளக்க வேண்டிய இடங்களில், சமரச மாகிப் போகின்றார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் தேவ உறவு சார்ந்த ஒரு உண்மையான ஆவிக்குரிய அனுபவம் இல்லாமையே, சரியான சத்தியம், சரியான கொள்கை, சரியான வாழ்க்கை முறை என்பவைகள் நமக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகின்றவைகள். நாம் தேவ உறவுடன் வாழ்ந்தால் இவை யாவும் நமக்கு அதிக மகிழ்ச்சி தரும் விஷயங்களாக மாறும். அப்பொழுது பணம், பொருள், பதவி போன்றவை அதிக சந்தோஷம் தரும் விஷயங்களாகத் தோன்றாது.

தானியேல் பாபிலோன் அரண்மனையில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றான். ஆயினும், அரண்மனை மூலமாக வருவதற்கு வாய்ப்புள்ள அதிக ஆதா யங்களுக்காக, தன்னுடைய இறைபக்தி சார்ந்த நல்ல கொள்கைகளையும், பழக் கங்களையும் விட்டு விட அவன் தயாராயிருக்கவில்லை. ஏனென்றால், அவன் நல்ல கொள்கை சார்ந்த வாழ்க்கையில்தான் அதிக கனத்தையும், அதிக சந் தோஷத்தையும் உணர்ந்தான். எனவே, அவனை மாற்றுவது கடினமாயிற்று.

சிந்தனைக்கு...

உன் கருத்தைக் கூறும் முன்பு பலமுறை சிந்தி,
பிறருடைய கருத்தைக் கேட்ட பின்பு, சிலமுறையாகிலும் சிந்தி.

நவம்பர் 18

தொடரும் குறைகூறல்

11 தீமோத்தேயு 4:1–5

அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும்...
நீதிமொழிகள் 29:1

ஒரு குடும்பத்தில் உள்ள மனைவி தன்னுடைய போதகரிடம் சென்று. என் கணவன் நான் வீட்டை சுத்தமாக வைக்கவில்லை என்று, தினமும் சராசரி ஒரு முறையாவது குறை கூறுகின்றார். அவருடைய குறை கூறும் பழக்கம் என்னை ரொம்பவும் துன்பப்படுத்துகிறது" என்று முறையிட்டாள். அதை அந்தப் போதகர் அவருடைய கணவனிடம் சென்று, ஓயாமல் குறை சொல்வது நல்ல பழக்கமில் லையே என்று கூறினார். அதற்கு அந்தக் கணவன், "ஐயா, என் வீட்டை என் மனைவி குப்பைக் காடாக்கிப் போட்டு விட்டு, சும்மாயிருப்பதை தினமும் சராசரி ஒரு முறை யாவது என் கண் பார்த்து விசனமடைகிறது. நான் என்ன செய்வேன்? என்றார். போதகருக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் போய்விட்டது.

திரும்பத் திரும்பக் குறை கூறும் பழக்கம் நல்லதல்ல. அது தவிர்க்க வேண் டியதே. அதே வேளையில் மீண்டும், மீண்டும் நாம் ஏன் குறைகூறப்படுகிறோம், குற்றஞ்சாட்டப்படுகிறோம் என்பதையும் சிந்திக்க வேண்டும். திரும்பத் திரும்பக் குறைகளும், குற்றங்களும் நிகழும் போது, திரும்பத் திரும்பக் குறை கூறல்களும், குற்றஞ்சாட்டல்களும் நிகழவே செய்யும். சிலர் எத்தனை முறை தவறை உணர்த்தி னாலும் எந்த மாற்றத்தையும் செய்துகொள்ள மாட்டார்கள். அதே வேளையில், குறை கூறல்களை மட்டும் கவனித்துக் குறை கூறுதலைப் பெரிய குற்றமாகச் சித்தரித்துக் கொண்டிருப்பார்கள்.

பிறர் குறை கூறுகிறார்களே, குற்றஞ்சாட்டுகின்றார்களே என்று நாம் அவர் களைக் கசந்துகொள்ளும் முன்பு, ஏற்கெனவே கூறப்பட்ட குறைகளை உணர்ந்து சரிசெய்தோமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறைகளைத் தொடர விட்டால், குறை கூறல்களும் தொடரும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்களின் பாவங்களை உணர்த்தி தீர்க்கதிரிசிகள் மீண்டும், மீண்டும் கண்டனம் செய்தனர். அவர்களின் குறைவுகளையும், தவறுகளையும் அவர்கள் மீண்டும் மீண்டும் சொன்னபோது, அவர்கள் அதனால் எரிச்சலைடைந்து தீர்க்கதரிசிகளைக் கண்டனம் செய்தனர். குறைகளை உணர்ந்து தங்களைத் திருத்துவதற்குப் பதிலாகத் தீர்க்கர்களைக் கசந்து கொண்டதால், அவர்கள் பெரிய கேடுகளைச் சந்திக்க நேர்ந்தது. குறையைக் கூறுகிறவனைக் குறைகூறும் ஆவி எனக்கூறும் முன்பு, குறைகளை உணர்ந்து சரி செய்யும் ஆவி நம்மிடம் உள்ளதா என்று கவனிப்போம்.

சிந்தனைக்கு...

இன்னொருவரைக் குறைகூறும் ஆவி என நீ கூறும் முன்பு,
உன்னிடம் குறை உணரும் ஆவி உண்டா என்று பார்.

நவம்பர் 19

உண்மையான மாற்றம் ?

எபேசியர் 4:17–32

புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்...
எபேசியர் 4:24

என்னுடைய ஊழியப் பாதையின் மத்தியில் நான் காண்கின்ற வேதனையான ஒரு விஷயம் என்ன வென்றால், இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லுகின்ற அநேகர், அதனுடைய உண்மைப் பொருளை சரியாக அறியாமலே வாழ்வதுதான். அவர்களின் பழைய வாழ்க்கைக்கும், புதிய வாழ்க்கைக்கும் இடையே பெருத்த மாறுதல்கள் இருப்பது உண்மைதான். பல பாவமான செயல்கள் போயிருக்கின்றது. ஆகாத பழக்கங்கள் அநேகம் அகன்றிருக்கின்றது. இயேசுவின் மேல் அதிக மரியாதையும் அன்பும் ஏற்பட்டிருக்கின்றது. இயேசுவைக் குறித்து எல்லோரும் அறிய வேண்டும் என்ற ஆசை வந்திருக்கின்றது. ஆவிக்குரிய காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்பட்டிருக்கின்றது.

ஆயினும், சுபாவரீதியான, குணரீதியான ஒரு அடிப்படை மாறுதல்தான் மனந்திரும்பிய வாழ்க்கையின் முக்கிய அடையாளம் என்றும், அதுதான் இயேசுவைக் கனப்படுத்துகின்ற உண்மையான வழி என்றும் அவர்கள் அறியவில்லை. அறிந்திருந்தால்கூட அதற்கேற்ப தேவ கிருபையை நாடி, தங்களை அந்த அனுபவத்திற்குள் உட்படுத்தவில்லை. மேலே குறிப்பிட்ட விதமான பல மாறுதல்களை தங்களில் பார்ப்பதால் அவர்கள் அதிக திருப்தியடைந்து, ஆண்டவரின் பார்வையில் இன்னும் அரைகுறையாகவே நிற்கின்றார்கள்.

மாற்றங்கள் பல இருக்கலாம். ஆயினும், கபடமற்ற பேச்சு, பொறுமையில் உறுதி, கோபவசப்பட்டு நிலைதவறாமை, வெறுப் புணர்வை விட்டுவிடுதல், பதிலுக்குப் பதில் செய்யும் ஆசையின்மை, ஆத்திர உணர்வுகளுக்கு ஆட்படாமை, பொய்த் தோற்றம் கொடாமை போன்ற உயர்ந்த குணங்களால் ஒரு பெரிய மாறுதலைக் காணாவிட்டால் அது மனந்திரும்பிய வாழ்க்கையும் அல்ல.

நாம் ஒரு ஆன்மீகப் பக்திக்காக அல்லது தேவனைப் பிரியப்படுத்தும் வாஞ்சையில் சில ஆகாத பழக்க வழக்கங்களை விடவும், சில நல்ல ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும். ஆனால், இவைகளே மனந்திரும்புதல் ஆகிவிடாது. முதலாவது, நாம் நமக்குள் எப்படியிருக்கிறோம் என்பதைக் கவனிக்க வேண்டும். நம்மிடம் உள்ள தெய்வீகக் குணாதிசயங்கள் எவ்வளவு என்பதைச் சிந்திக்க வேண்டும். இவற்றை உணர்ந்து ஒரு அடிப்படை மாற்றத்திற்கான தேவ கிருபையை வாஞ்சித்துத் தேடும்போதுதான், மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள் நம்மிடம் தோன்றும்.

சிந்தனைக்கு...

இரட்சிக்கப்பட்டேன் என்று உன் வாய் அல்ல.
உன் வாழ்க்கையே சாட்சி சொல்லட்டும்.

நவம்பர் 20

ஒப்பிட்டுப் பார்த்தல்

1 கொரிந்தியர் 12:1–18

காலானது நான் கையாயிராத படியினாலே...
1 கொரிந்தியர்12:15

விசுவாச சகோதரர் ஒருவர், குறிப்பிட்ட தேவ ஊழியர் ஒருவருடைய அருமை பெருமைகளைக் குறித்து மிகவும் விசேஷமாகப் பேசுவார். அந்தக் குறிப்பிட்ட தேவ ஊழியர் உண்மையிலேயே ஒரு முன்மாதிரியான நல்ல ஊழியர் தான். அவர் பாராட்டுதலுக்குரியவரே. ஆனால், இந்த விசுவாச சகோதரர் அந்த ஊழியரின் நிறைவுகளின் அளவிற்கு வராத எந்த ஊழியரையும் ஒரு தேவ ஊழியராக ஏற்றுக்கொள்ளமாட்டார். ஊழியம் செய்தால் அவரைப் போலவே ஊழியம் செய்ய வேண்டும் என்று எப்போதும் பேசுவார்.

ஒருவர் உண்மையும், உத்தமமும், நேர்மையுமாக இருந்தால் அவரை மதிப்பதும், பாராட்டுவதும் நற்பண்புகளே. அது அவசியமே. அதே வேளையில், அவரையே அளவு கோலாக மாற்றிக் கொண்டு, எல்லோரையும் அளந்து பார்த்து குறைந்தவர்களாகத் தீர்ப்பு அளிப்பது சரியல்ல. கையில் எல்லா விரல்களும் ஒரே விதமாக இல்லை. சுட்டு விரல் அதிக பிரயோஜனமான விரல். அதற்காக இருந்தால் சுட்டு விரல் போலதான் இருக்க வேண்டும். மற்ற விரல்கள் எல்லாம் வேஸ்ட் என்று சொல்வது சரியாக இருக்குமா?

யோசேப்பு மிக மிக உத்தமமான ஒரு தேவ மனிதன். ஆனால், யோசேப் போடு தாவீதை ஒப்பிடும் போது, அவன் சற்று குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். பாலியல் விஷயத்திலும், யுத்த விஷயத்திலும் அவனுடைய செயல் களில் குறைவுகள் பல உண்டு. ஆனால், யோசேப்பை விட தாவீது தேவனால் அதி கமாகப் பயன்படுத்தப்பட்டவன் என்பது உண்மை. பவுல் அப்போஸ்தலனோடு யோவான் ஸ்நானனை ஒப்பிட்டால், யோவானின் ஊழிய எல்லை மிக மிகக் குறைவு. பவுல் சாதித்த சாதனைகளோடு யோவானின் சாதனையை ஒப்பிடும் போது, அது மிக மிகக் குறைவு. ஆனால், யோவான் பவுலை விட மிகப்பெரிய பெயரையும் சாட்சியையும் பெற்றான்.

அவரவர்களை அவரவர்களிடம் வெளிப்படும் நற்பண்புகளின் அடிப் படையில் மதிக்கப் பழகவேண்டும். ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்து விட்டால் ஒருவரை உயரத்தில் வைத்து, மற்ற எல்லோரையும் கீழே தள்ளிவிடுவோம். அது தவறானது. எல்லோரும் மிஷனரிகளாக இருக்க முடியாது. எல்லோரும் பாஸ்டர் களாக இருக்க முடியாது. எல்லோரும் சுயபலத்தால் அல்ல, தேவ கிருபையாலேயே செயல்படுகிறார்கள். எனவே, அரவர்களின் ஊழியத்தை அந்த நிலையில் மதிக்கப் பழகவேண்டும்.

சிந்தனைக்கு...

பிறரிடம் உள்ள உண்மைக்கு உரிய மதிப்பளிப்பவனே,
தன்னிடம் உண்மையை வளர்த்திட வாஞ்சையாயிருக்கின்றான்.

நவம்பர் 21

உண்மையான நோக்கம்

நீதிமொழிகள் 21:1–19

கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார்...
நீதிமொழிகள் 21:2

ஒரு குறிப்பிட்ட சபையின் உறுப்பினர் ஒருவர் மீது அந்த சபையின் பாஸ்டர் மிகவும் அதிருப்தி அடைந்தார். அது மட்டுமல்லாமல் அந்த உறுப்பினர் அந்த சபையை விட்டுப் போய்விட வேண்டும் என்ற சிந்தையோடு செயல்பட்டார். தான் சத்தியத்தை முக்கியமாக எண்ணுவதால், அந்த பாஸ்டர் தன்னை வெறுப்பதாக. அந்த நபர் பலரிடம் போய் சொல்லி வருத்தப்பட்டார்.

நடந்தது என்ன? அந்த சபைப் பாஸ்டரின் நடவடிக்கைகளில் இந்த விசுவாசிக்கு ஒத்த கருத்து இல்லை. அவர் தவறாக உபதேசிப்பதாக இவர் கருதினார். எனவே, அந்த சபைப் பாஸ்டரின் செயல்களையும், உபதேசங்களையும், தவறு என்று காண்பிக்கும் விதமான கட்டுரைகளை எங்காவது வாசிக்க நேர்ந்தால், அதைப் பிரதி எடுத்துக் கொள்வார். அந்தப் பிரதிகளை ஜெராக்ஸ் செய்து, அந்தச் சபை மக்களுக்கும் பாஸ்டருக்கும் கொடுப்பார். அந்த கட்டுரை அந்த பாஸ்டரை நன்றாகக் குத்தட்டும் என்பது இவரது நோக்கம்.

தவறு அல்லது குறைவு என்பதை யார் சுட்டிக் காட்டினாலும் சரி, எந்த விதத்தில் சுட்டிக் காட்டினாலும் சரி, அதனை நாம் உணர்வதுதான் நல்ல பண்பு. பிறருடைய நோக்கம் தவறாக இருந்தாலும், நம்முடைய தவறு உணர்த்தப் படுவதால் நம்மைத் தாழ்த்திக் கொள்வதுதான் நேர்மை. அதே வேளையில், தவறான ஒன்றைச் சுட்டிக் காட்டுவதில் தவறான ஒரு நோக்கம் அல்ல, சரியான நோக்கம் இருக்க வேண்டும். சுட்டிக் காட்டுவது என்பது வேறு, குத்திக் காட்டுவது என்பது வேறு.

மற்றவர் தன் தவறை உணர வேண்டும் என்பதும், அதனைச் சரி செய்ய வேண்டும் என்பதும் நம்முடைய நோக்கமாயிருந்தால், அதற்குத் தேவனுக்கு உகந்த சரியான நேர்மையான வழிகளைக் கையாள வேண்டும். மற்றவரின் தவறைக் குத்திக் காட்டி, அவரை அது நன்றாகக் குத்தட்டும், உறுத்தட்டும் என்று எண்ணினால் அது விவேகமான வழி அல்ல. யாருடைய தவறை உணர்த்தும் முன்பும், அதன் பின்னால் நம்முடைய நோக்கம் என்னவென்பதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். அவ்விதம் செய்யும் போது நாம் நல்ல ஒரு நோக்கத்தைக் காரணமாகக் காட்ட இயலும், ஆனாலும், அதுதான் நாம் கொண்டிருந்த உண்மையான நோக்கமா என்பதைச் சிந்திக்க வேண்டும். ஏனென்றால், தேவன் நாம் என்ன செய்கின்றோம் என்பதை அல்ல. அதனை, எதற்காக நாம் செய்கின்றோம் என்பதையே பார்க்கின்றார்.

சிந்தனைக்கு...

எதைச் செய்கிறாய் என்பதல்ல, எதற்காக அதைச் செய்கிறாய் என்பதை அறிந்து செய்.

நவம்பர் 22

விசுவாசத்தின் அர்த்தம்

ஆதியாகமம்17:1–14

நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு.
ஆதியாகமம் 17:1

விசுவாசம் என்பதற்கு தேவன் மேல் வைக்கும் நம்பிக்கை என்பது மட்டுமே பொருளல்ல. விசுவாசம் என்பதற்கு உண்மையும் உத்தமுமாயிருத்தல் என்ற அர்த்தமும் உண்டு. அநேகர் தங்களுடைய ஆசீர்வாதங்களுக்காகவும், நன்மைகளுக்காகவும், ஆச்சரியமான விடுதலைகளுக்காகவும், தேவன்மேல் நம்பிக்கை வைத்தல் என்ற ஒன்றை மட்டுமே சார்ந்திருக்கின்றனர். மிகுதியாக நம்ப முடிந்தால், மிகுதியாக ஆசீர்வாதங்களைப் பெற முடியும் என அவர்கள் எண்ணுகின்றனர். இது ஒற்றைச் சிறகுடன் பறக்க முயற்சிக்கும் செயலாகும். தேவனுக்கு முன்பாக நாம் உண்மையாயிருக்கவும், உத்தமமாயிருக்கவும் போதிய கரிசனை இல்லாத நிலையில், வெறும் நம்பிக்கை வைக்கும் அனுபவம் மட்டும் ஆசீர்வாதங்களுக்கு அருகில் நம்மைக் கொண்டு செல்லாது.

நாம் தேவனை மிகுதியாக நம்ப இயன்றவர்களாக மட்டும் இருந்தால் போதாது. தேவனுடைய நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் நாம் விளங்க வேண்டும். ஆபிரகாம் தேவனை அதிகமாக நம்பினவன் மட்டுமன்றி, அவருடைய நம்பிக்கையைப் பெற்ற மனிதனாகவும் இருந்தான். தேவன் அவனை விசுவாசிக்க மட்டும் அழைக்காமல். தமக்கு முன்பாக உத்தமனாக இருக்கவும், அழைத்திருந்தார்.

நான் பெறுவேன், அடைவேன், ஜெயிப்பேன், சாதிப்பேன் என்பது போன்ற நம்பிக்கையான சிந்தனைகளை வளர்த்துக் கொண்டால், உண்மையாகவே காரியங்கள் வெற்றியாக முடியும் என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுவதுண்டு. பல கிறிஸ்தவ விசுவாசிகளும் இந்த அடிப்படையில் நம்பிக்கையான எண்ணங்களை வளர்த்து, பெரிய வெற்றியாளர்களாக மாற விரும்புகின்றனர். இது தவறல்ல. ஆயினும், நம்மால் எவ்வளவு வலிமையாக நம்ப முடிகிறது என்பதைத் தேவன் பார்க்காமல், நாம் அவருக்கு முன்பாக எவ்வளவு உண்மையும் உத்தமுமாயிருக்கிறோம் என்பதையே பார்க்கிறார்.

இங்கே விசுவாசத்தின் எளிய ரகசியத்தைச் சொல்கிறேன். நாம் நல்லது நடக்கும் என்று அதிகமாக நம்ப மிகவும் சிரமப்படத் தேவையில்லை. ஆண்டவருக்கு முன்பாக குணநிலையிலும், செயல்நிலையிலும், மனநிலையிலும் அவருக்குப் பிரியமாயிருக்கக் கற்றுக்கொண்டால் போதும். உண்மையிலும் உத்தமத்திலும், பெருகப் பெருக கர்த்தர் மேல் நம்முடைய விசுவாசமும், தானாக வளர்ந்து கொண்டே செல்லும்.

சிந்தனைக்கு...

இறைப்பண்புகளை இதயத்தில் வளர்க்க விரும்பாதவனின் இறை நம்பிக்கை, எவ்வளவு வளர்ந்தாலும் பலன் தராது.

நவம்பர் 23

உள்ளான நோய்

எரேமியா 30:12–17

நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி...
எரேமியா.30:17

சிலருக்கு உடலில் சில புண்கள் தோன்றுவதுண்டு. அந்தப் புண்களை ஆற்ற மருத்துவரை அணுகினால், அவர் புண்களை ஆற்றுவதற்கு ஏதாவது ஒரு களிம்பை மட்டும் தந்து அனுப்பமாட்டார். அதற்குப் பதிலாக, இரத்தத்தைப் பரிசோதனை செய்து, அந்தப் புண்களுக்குக் காரணமான உள்ளான நோய்களைக் கண்டுபிடித்து, அதற்குரிய சிகிச்சையைத் தருவார். உள்ளான நோய்கள் குணமாகும் போது, வெளிப்புறப் புண்கள் தானாக ஆறிப்போகும்.

சில நேரங்களில் சிலருக்குப் பயம், சமாதானமின்மை, கோபம், நம்பிக்கையற்ற உணர்வுகள் ஆகிய பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. எனவே, அவற்றை அகற்றுவதற்கு சில ஆறுதலான பிரசங்கங்கள், ஊழியர்களுடைய ஜெபங்கள் ஆகியவற்றை எதிர்பார்ப்பதுண்டு. ஆனாலும், பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுவதில்லை. ஏனென்றால், அவை உள்ளான வாழ்க்கையில் உள்ள சில நோய்களின் வெளிப்புறப் பிரதிபலிப்பாகும். முதலாவது உள்ளான வாழ்க்கையைச் சோதித்து, சரி செய்கின்றவரை வெளிப்புறத்தில் அந்தப் புண்கள் ஆறுவதில்லை.

எசேக்கியா ராஜாவின் வெற்றிக்கு, இவ்விதமான ஒரு வெளிப்பாடுதான் முக்கியக் காரணமாயிருந்தது. அவன் ஆட்சிக்கு வந்தபோது தேசம் எல்லா நிலைகளிலும் வீழ்ச்சி அடைந்து, எந்த ஆசீர்வாதமுமின்றி இருந்தது. அங்கே ராஜா சூழ்நிலைகளைச் சரிசெய்ய விரைந்து செல்லாமல், வீழ்ச்சியின் காரண காரியங்களை ஆராய்ந்து பார்த்தான். தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழாததின் விளைவாகவே, தேசம் ஆசீர்வாதத்தை இழந்துள்ளது என்பதை அவன் உணர்ந்தான். எனவே, முதலாவது அரண்மனைக்குப் போகாமல் ஆலயத்திற்குப் போய், அங்கே தேவ மகிமை மீண்டும் வெளிப்படுவதற்கேற்ப காரியங்களைச் சரி செய்தான். அது தேசத்தின் செழிப்பிற்கு வழிவகுத்தது.

பல நேரங்களில் நாம் நம்முடைய உட்புற நிலைகளின் தன்மைகளை ஆராயாமல், வெளிப்புற விஷயங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு செயல்படுவதினால்தான், பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணாமல் போகிறோம். சமாதானமின்றி இதயம் அலசடிப்பட்டுக் கொண்டிருந்தால், உட்புறத்தில் தேவனோடு ஐக்கியம் சரியாக இல்லை என்று அர்த்தம். நம்பிக்கையற்ற மனநிலையோடு ஒருவன் இருந்தால், தேவனுக்கு முன்பாக அவனுடைய செயல்கள் திருப்திகரமாக இல்லை என்று அர்த்தம்.

சிந்தனைக்கு...

உள்ளான மாற்றம் இல்லாதவனுடைய பக்தியான வெளித்தோற்றம் தேவனை மகிமைப்படுத்துவதில்லை, அவரை விசனப்படுத்துகிறது.

நவம்பர் 24

எங்கும் உண்மை

எண்ணாகமம் 12:1–8

மோசேயோ...என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்...
எண்ணாகமம்.12:7

சந்தனக் கடத்தல் வீரப்பன் நூற்றுக்கணக்கானோரை கொன்று குவித்தவன். அனேகம் குடும்பங்கள் கண்ணீரில் மிதக்கக் காரணமானவன். ஆனால், அவனிடமும் மெச்சத்தக்க சில குணங்கள் உண்டு. இரக்கமான பல செயல்களை அவன் செய்ததுண்டு. தீமை செய்வதில் பேர்பெற்றவனாயினும், அவனுடைய நன்மையான செயல்களால் பயனடைந்த குடும்பங்கள் அனேகம் உண்டு. இப்போது அவனுடைய சில நல்ல குணங்களையும், நல்ல செயல்களையும் பார்த்து அவனை நல்லவன் என்று நாம் கூற முடியுமா? நன்மையான செயல்களை மட்டும் பார்த்து தீமையான செயல்களைக் கண்டு கொள்ளாமல் போக முடியுமா?

ஒருவரிடம் உள்ள நல்லதை மட்டும் பார்க்கவேண்டும் என்ற மனோபாவம் அனேகரிடத்தில் உண்டு. ஆனால், அது ஒரு தவறான மனோபாவம் ஆகும். ஒரு கிறிஸ்தவரோ, கிறிஸ்தவ ஊழியரோ நல்லவராக இருக்கவேண்டும் அல்லது தவறானவராக இருக்கவேண்டும். இரண்டும் கலந்த கலவையாக இருக்கக் கூடாது. எந்த ஒரு தீய மனிதரிடமும்கூட சில நற்செயல்களும், நற்குணங்களும் இருக்கவே செய்யும். ஆனால், ஒரு மனிதனை மேலாண்மை செய்வது நற்குணமா அல்லது துர்க்குணமா என்பதே முக்கியம்.

குறிப்பிட்ட ஒரு ஊழியர் பண ஆசையும், ஆடம்பர மோகமும் நிறைந்தவர் என்பது பலருக்குத் தெரியும். ஆனாலும், சிலர் சொல்கின்ற நியாயம் என்ன வென்றால், "அவர் சில விஷயங்களில் செவ்வையாய் இராமலிருந்தால்கூட, அவர் மிகுந்த ஆத்தும பாரம் உடையவர். இரவும், பகலும் அயராமல் ஊழியம் செய்கிறவர். எனவே, அவருடைய சில குறைகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது" என்பதாகும்.

ஒருமுறை ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தார் என்னை மிக அன்புடன் ஏற்றுக் கொண்டு, ஒரு ஊழியனுக்குச் செய்யவேண்டிய அத்தனை கடமைகளையும் மிகச் சிறப்பாகச் செய்தார்கள். ஆனாலும், அவர்களை என்னால் கிறிஸ்தவர்கள் என்று நிலையில் பார்க்க முடியவில்லை. அவர்களின் சூழ்நிலைகள், நடவடிக்கைகள், பொழுதுபோக்குகள், நடத்தைகள், பேச்சுகள் யாவும் கிறிஸ்தவத்திற்கு அவர்கள் வெகுதூரமானவர்கள் என்பதை விளக்கியது. ஆம். நம்முடைய வாழ்க்கையில் எல்லாப் பகுதிகளையும் கவனிக்கும்போது, அவை நாம் தேவனைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொல்லப் போதுமானவையா என்று பார்க்கவேண்டும்.

சிந்தனைக்கு...

உயர்ந்த கருத்துக்களால் உலகத்தைக் கவருவதைவிட, உயர்ந்த வாழ்க்கையால் ஒரு சிலரையாகிலும் கவருவதே சிறப்பு.

நவம்பர் 25

பயணத்தில் துணை

ஆதியாகமம்.28:1–16

நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக்காத்து...
ஆதியாகமம். 28:15

2003-ம் ஆண்டு லேன்காஸ்டர் என்ற இடத்திலிருந்து சகோதரர் சிவா என்னை காரில் நியுயார்க் அழைத்து வந்தார். 2008-ம் ஆண்டு சகோதரர் ஜெப்தா, நிதர்சன் ஆகிய சகோதரர்கள் ஜெர்மனியிலிருந்து பாரிசுக்கு காரில் சென்ற போது துணையாக உடன் வந்தனர். 2013-ம் ஆண்டு சகோதரர் கண்ணன் டென்மார்க்கிலிருந்து நார்வேக்கு சென்ற கப்பல் பிரயாணத்தில் எனக்குத் துணை யாக வந்தார். இந்தப் பயணங்களை மறக்க முடியாது. ஏனென்றால் நான் தனித்து நீண்ட தூரம் பிரயாணம் செய்ய சற்றுத் தயங்கிய வேளையில், எனக்காக அவர்கள் துணையாக வந்தனர். அந்தப் பயணங்கள் மகிழ்ச்சிகரமாக இருந்தன.

வாழ்க்கையில் சில நேரங்களில், நமக்குத் துணையாக யாராவது உடன் வந்தால் நலமாயிருக்குமே என்று எண்ணம் நேரிடுகின்றது. ஏனென்றால், புதிய சூழ்நிலை, அறியாத இடங்கள் போன்றவை நமக்குத் தெம்பூட்ட யாராவது வந்தால் நன்றாயிருக்குமே என்று எண்ண வைக்கின்றது. ஆயினும், வாழ்க்கைப் பயணங் களில் சில நேரங்கள் நாம் எவ்வளவுதான் அங்கலாய்த்தாலும், அங்கே நமக்கு ஆதரவாக யாரும் வரமுடிவதில்லை.

ஒரு கால கட்டத்தில் யோசேப்பு தனித்து தன்னுடைய வாழ்க்கைப் பய ணத்தை தொடர நேரிட்டது. புதிய இடம், புதிய சூழ்நிலை, புதிய அனுபவம் என பழக்க மில்லா பாதையிலே, தனியனாகப் பயணம் செய்தான். தாயைவிட்டுப் பிரிந் திருந்து பழகியிராத யாக்கோபு, தனித்துக் கானக பாதையில் பயணம் செய்ய நேரிட்டது. பல சகோதரர்கள் நடுவில் வாழ்ந்த தாவீது, தனித்து விடப்பட்டுக் கசப்பான பாதைகளில் நடக்க நேரிட்டது.

ஆயினும், அவ்விதப் பயணங்களில்தான் அவர்கள், தாங்கள் ஒருபோதும் தனியாக இல்லை என்பதை உணர்ந்தார்கள். தங்களோடு நடக்க மனித உறவுகள் கிடைக்காத பாடுகள் நிறைந்த பாதையில், தங்களை அறிந்த தேவன் தங்களுக்குத் துணையாக வருவதை அவர்கள் உணர்ந்து உறுதிப்படுத்தினார்கள். தங்களின் தனிமைப் பயணங்களில் தங்களோடு வந்து கொண்டிருக்கும் தேவனை அவர்கள் கண்ட பின்னர், மனித உறவுகளுக்காக அவர்கள் மனச்சோர்வு அடையவில்லை. இடுக்கமான பாதைகளில் நாம் தேடினாலும் தகுந்த துணைகள் கிடைப்பது கடினம். ஆயினும், நம்முடைய அனைத்துச் சூழல்களிலும் நம்மோடு வந்து, நமக்குத் தைரியமூட்டி, ஐக்கியம் தர தேவன் ஆயத்தமாகவேயிருக்கின்றார்.

சிந்தனைக்கு...

துன்பங்களின் துணையுடன்தான் இன்பங்கள்
வாழ்க்கையில் பெருகுகின்றன.

நவம்பர் 26

உண்மையான கனம்

லூக்கா 6 :27 –49

ஆண்டவரே! ஆண்டவரே! என்று சொல்லியும்...
லூக்கா 6 :46

பக்தியுள்ள கிறிஸ்தவர் ஒருவர் எந்த ஒரு சிறு செயலைச் செய்யும் முன்பும் ஜெபிக்கத் தவறமாட்டார். எவ்வளவு குறைகள் இருந்தாலும், காணிக்கை விஷயத்தில் குறைவுபட மாட்டார். தேவ ஊழியர்களை உற்சாகமாக உபசரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவார். எந்தச் சூழ்நிலையிலும் ஞாயிற்றுக்கிழமை எந்த வேலையிலும் ஈடுபடமாட்டார். சுகவீனம் ஏற்பட்டால்கூட ஆராதனைகளில் கலந்து கொள்ளத் தவறமாட்டார். இவை யாவற்றிற்கும் முக்கியக் காரணம், கர்த்தரைக் கனப்படுத்தி வாழவேண்டும் என்ற அவரின் கொள்கையேயாகும்.

ஆனால், கொடுக்கல் வாங்கல்களில், வியாபார விஷயங்களில், பிறரோடுள்ள தொடர்பு நிலைகளில், அவர் உலக மனிதனைவிட மோசமாகச் செயல்படுவார். இந்த விதமான ஒரு வாழ்க்கை கர்த்தரைக் கனப்படுத்தும் வாழ்க்கையல்ல. சில செயல்கள் மூலம் நம்முடைய தேவ பக்தியையும், கர்த்தரைக் குறித்த கௌரவ உணர்வையும் காட்டிவிட்டு, பிற நிலைகளில் உலகத்திற்கேற்ப வாழ்தல், தேவனைக் கனப்படுத்துதல் ஆகாது.

முதலாவதாக, தேவன் எப்படி, எதன் மூலம் கனப்படுவார் என்பதையும், எதனால் நாம் அவரைக் கனப்படுத்த முடியும் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். மனிதர்களோடுள்ள தொடர்பு நிலைகளில் பொறுமை, தாழ்மை, தயவு, சாந்தம், அன்பு ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதுதான் கர்த்தருக்குக் கொடுக்கும் கனமாகும். சுய உணர்வுகளுக்கேற்ப சாய்ந்து போகாமல், கர்த்தரின் உணர்வுகளை அறிந்து செயல்படுதலே, தேவனுக்குக் கொடுக்கும் மரியாதை ஆகும். பணம், பொருள், புகழ் போன்றவற்றின் இழுவைகளுக்கு இசைந்து போகாமல், தேவன் மேல் விசுவாசம் வைத்து வாழ்தலே, அவரை மகிமைப்படுத்தும் அனுபவமாகும்.

ஒருவர் தன்னுடைய வீட்டின் சில பகுதிகளை மட்டும் நன்றாகச் சுத்தமாகப் பராமரித்துவிட்டு, வேறு சில பகுதிகள் எவ்வளவு அழுக்கடைந்திருந்தாலும் கண்டு கொள்ளாமலிருந்தால், அவரைச் சுத்தவான் என்று எடுத்துக்கொள்ள முடியாது. சுத்தவான் எல்லா இடங்களிலும் சுத்தத்தைக் காண்பிக்க வேண்டும். அதுபோலவே, தேவ பக்தி என்பது உள்ளத்தின் ஒரு குணாதிசயமாயிருந்து, வாழ்க்கையின் எந்த ஒரு செயலிலும் அது பிரதிபலிக்க வேண்டும். ஆம், இதயம் என்னும் அடித் தளத்தில் ஒரு உண்மையான வாழ்க்கை மாற்றம் ஏற்பட்டால்தான் அது பிற செயல் களிலும், குணங்களிலும் பிரதிபலிக்க முடியும்.

சிந்தனைக்கு...

ஒருவனுடைய இருதயத்தின் அழகை யாரும் பார்க்க இயலாது. ஆனாலும் அவனுடைய குணாதிசயங்களில் அதன் அழகு வெளிப்படாமல் இருப்பதில்லை.

நவம்பர் 27
துன்ப வேளையில்

11 கொரிந்தியர் 1:1 –10

எங்களுக்கு வரும் சகல உபத்திரவங் களிலேயும்...
11 கொரிந்தியர் 1:4

வேதனைக்குரிய ஒரு நிகழ்வு நிழ்ந்துவிட்ட பிறகு, மூன்று விதமான கேள்விகள் எழும்புகின்றது. ஏன் இப்படி நிகழ்ந்தது? இதனை எப்படி நான் தாங்கிக் கொள்ளப் போகின்றேன்? இனி என்னுடைய எதிர்காலம் எப்படி? இவைதான் அந்தக் கேள்விகள். ஒரு விதத்தில் பார்த்தால் ஏன் இப்படி நிகழ்ந்தது என்ற கேள்வி நியாயமற்றதுதான். ஏனென்றால் வியாதி, மரணம், விபத்து, தோல்வி, ஏமாற்றம் போன்றவை நேரிடுவதற்கு வாய்ப்புகள் நிறைந்த ஒரு பூமியில்தான் நாம் வாழ்கின்றோம். இந்த பூமிக்குரிய இயற்கையின்படி சில விஷயங்கள் நிகழும் போது, அதற்குரிய காரணத்தைக் கூறும்படி கடவுளைக் கட்டாயப்படுத்த முடியாது.

ஏனென்றால், பக்தி மிக்கவர்களாயினும் இப்படியெல்லாம் நிகழாது என்று, தேவன் நமக்கு எந்த உத்தரவாதத்தையும் தரவில்லை. எனவே, ஏன்? ஏன்? என்ற கேள்விகளுக்கு விடை தெரிவது இயன்ற விஷயமல்ல. எனவே, அடுத்த கேள்விக்கு வரவேண்டியதுதான். நடந்து விட்டதோர் சம்பவம் எற்படுத்தியிருக்கின்ற வேதனைகளை எப்படித் தாங்கிக்கொள்வது? இறை உறவு உடையோருக்கு இந்த உலகத்தில் தாங்கமுடியாத துயர் என்று எதுவும் வருவதில்லை. இது மிகப்பெரிய துன்பம்தான். இது மிகப்பெரிய துயர்தான். ஆனால், இதையும் தாங்கிட நமக்கு இறைபலம் தாராளமாகக் கிடைக்கும்.

வேதனையை உணராமலே கடந்து போய்விடமுடியாது என்பது உண்மை யாயினும், இதனை ஏற்கவும், சகிக்கவும் தேவன் ஆற்றல் தராமலிருக்கமாட்டார். இன்று உணர்கின்ற வேதனை, இனி ஒவ்வொரு நாளும் தொடர்கதையாய் இருக்கப் போவதில்லை. துன்பத்தை ஏன் அனுமதித்தார் என்ற கேள்வியால் நன்மை வரா தென்பதால், துன்பத்தில் துணைநிற்க தயாராயுள்ள தேவனைத்தான், இந்த நிமிடத்தில் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும்.

எதிர்காலம் எப்படியிருக்கும் என்ற கேள்வியும் நியாயமானதே. வாழ்வதற்குத் தேவன் இன்னொரு நாளைத் தந்தால், அந்த நாளுக்குத் தேவையான ஆதரவுகளையும் நிச்சயம் தருவார். நேற்று, துக்கத்தில் மூழ்கிய பலர் இன்று துக்கம் நீங்கி துணிவுடன் வாழ்கின்றார்கள். இன்று துக்கப்படும் நீங்கள் நாளைக்கு துயர் நீங்கித் துணிச்சலுடன் வாழ்ந்து காட்ட தேவன் வலிமை தருவார். இருளை ஏன் அனுமதித்தார் என்ற கேள்வியோடு இருளுக்குள்ளேயே வாழ வேண்டாம். இந்த இருளில் அவர் ஒளியாயிருந்து உதவுவார்.

சிந்தனைக்கு...

கசப்பான கடந்த காலத்தை மறந்துவிடு. ஆனாலும்
அதன் மூலம் கற்ற பாடங்களை மறந்து விடாதே.

நவம்பர் 28

அன்பின் ஐக்கியம்

யோவான் 17 :10–26

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்...
யோவான் 17:21

காலை நேரம் காபி பார் ஒன்றில் காபி அருந்திக் கொண்டிருந்தார் ஒருவர். அங்குவந்த ஒரு மனிதன் அவரைப் பார்த்து "ஐயா காலை வணக்கம். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்றான். முன்பின் தெரியாத ஒருவர் தனக்கு வாழ்த்துக் கூறுவதைக் கண்டு மற்றவர் குழம்பினார். அவர் "உன்னை எனக்குத் தெரியாதே. எனக்கு ஏன் வாழ்த்துக் கூறுகிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவன் நீங்கள் வாழ்கின்ற இதே உலகத்தில்தான் நானும் வாழ்கின்றேன், எனவே, தான் வாழ்த்துக் கூறினேன் என்றான்.

சிலர் ஒரே குடும்பத்திற்குள் இருந்தாலும் ஒருவரையொருவர் அறியாத வர்கள் போலும், அன்னியர் போலவும் வாழ்வார்கள். சிலர் திருச்சபையில் ஒரு தலை முறை காலம் வாழ்ந்தாலும், சக உறுப்பினரை எங்கேயாவது பார்த்தால் அது வரை, ஒருவரையொருவர் அறியாதவர்கள் போல நடந்து கொள்வார்கள். ஒவ் வொரு மனிதனும் என் நண்பன், ஒவ்வொரு மனிதனும் சகோதரன் என்றொரு அழகான பழைய தமிழ் பாடல் உண்டு.

கடவுளை நேசிப்பதாகக் கூறுகின்ற பலர், சக மனிதனையே விரோதியைப் போல பார்ப்பார்கள். தேவனுடைய அன்பை அனுபவிப்பதாகக் கூறுகின்ற பலர், மனிதர்களை வெறுப்பதிலோ பின்வாங்குவதில்லை. ஒவ்வொரு மனிதனும் நம்மைப் படைத்த தேவனால் படைக்கப்பட்ட இன்னொரு மனிதன். ஒவ்வொரு மனிதனும் நம்மை நேசிக்கும் தேவனால் நேசிக்கப்படும் இன்னொரு மனிதன். எனவே, இங்கு யாரும் அந்நியர்கள் அல்ல, யாரும் பரதேசிகள் அல்ல. பிறப்பித்த வரிடத்தில் அன்பு கூறுகின்றவர்கள் பிறப்பிக்கப்பட்டவர்களிடமும் அன்பு கூர வேண்டும் என்றான் அப்போஸ்தலனாகிய யோவான்.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சபை என்ற இடத்திற்கு வந்தாலும், சபை எதற்காக என்ற நோக்கம் அறிந்து வரவில்லை. தேவனை ஆராதிக்க வந்தோம் என்ற சிந்தனை உண்டே தவிர, தேவனுடைய அன்பினால் ஒருவரோடொருவர் நட்பு வளர்க்கவும், நல்ல ஐக்கியம் காணவும் வந்தோம் என்ற சிந்தனை இல்லை. எனவே, ஆராதனைக்காகச் சபைக்கு வந்தும், ஐக்கியம் என்ற ஆவிக்குரிய நோக்கம் நிறைவேறவில்லை. பாவத்தால் மாசுபட்ட உலகத்தில் கிடைக்காமல் போகும் நல்ல ஐக்கியத்தை சபையில் பெறவேண்டும். அதுதான் சபையின் நோக்கம்,

சிந்தனைக்கு...

இறைவனை நோக்கிய உன் அன்பில் முழுமையில்லையேல்,
மனிதனை நோக்கிய உன் அன்பு அரைகுறையாகவேயிருக்கும்.

நவம்பர் 29

இறையியல் அறிவு

மத்தேயு 7 :14 –29

நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு...
மத்தேயு 7:24

குறிப்பிட்ட ஒரு சகோதரருக்கு வேதாகம சம்பந்தமான விளக்கங்களை அறிவதென்றால் அலாதிப்பிரியம். வேதத்தை விளக்கும் பல புத்தகங்களை விரும்பிப் படிப்பார். வேதாகம ஆராய்ச்சிக் கருத்தரங்குகள் எங்கு நடந்தாலும் போய்விடுவார். பல்வேறு ஸ்தாபனங்கள் அளிக்கும் வேதாகமக் கல்வித் திட்டங்களில் ஆர்வமாய் பங்கேற்பார். வேதம் சம்பந்தமாக யாராவது சற்று வித்தியாசமாகப் பேசினாலோ, போதித்தாலோ, அவர்களது கருத்தைத் தவறு என வேதாகம ஆதாரங்களோடு சிறப்பாக நிரூபிப்பார். ஆனால், அவருடைய வாழ்க்கையிலோ, பிறரோடுள்ள தொடர்புகளிலோ, குணநிலை விஷயங்களிலோ, பிற பண்பு நிலைகளிலோ எந்த வித கிறிஸ்தவத் தன்மைகளையும் பார்க்க முடியாது.

வேதாகமம் சம்பந்தப்பட்ட காரியங்களைப் போதிக்கும் கல்லூரிகளுக்குச் சென்று, படித்து, பலவிதப் பட்டங்களைப் பெற்று, இறையியல் வல்லுனர்களாக விளங்க முடியும். விஞ்ஞானம், வரலாறு, பொருளாதாரம் போன்ற கல்வித் துறைகளைக் கற்றுத் தேறுவது போல், ஒருவர் இறையியல் கல்வியையும், தன்னுடைய மூளையின் மூலம் கற்றுத் தேற முடியும். இத்தகைய அறிவினில் தேர்ச்சி பெற்ற பலரிடம், ஒரு துளி அளவுகூட தெய்வீக குணாதிசயங்கள் காணப்படாமல் போவதுண்டு.

நாம் வேத அறிவு மிகுந்தவர்களாக மாற வேண்டும் என்பது அல்ல தேவனுடைய பிரதான நோக்கம். வேதத்திற்கேற்றபடி நம் வாழ்க்கை பண்பட்டதாக மாறவேண்டும் என்பதே அவருடைய பிரதான நோக்கம். வேதாகமத்தைப் பல கோணங்களில் ஆராய்ந்து, கிறிஸ்துவைப் பற்றி நாம் அதிகம் அறிந்து கொள்வதல்ல. கிறிஸ்துவைப் போல நாமும், தெய்வீகத் தன்மைகளுடன் மாறிக் கொண்டிருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

பலர் வேத விளக்கங்களை மிகுந்த ஆர்வத்தோடு கேட்பார்கள். ஆனாலும், அவற்றை மூளையின் வழியாகக் கேட்டு, சிந்தனை நிலையில் மகிழ்வார்களேயன்றி, இதயத்தில் அவைகளை ஏற்று, ஆத்துமாவில் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்கமாட்டார்கள். எனவே, அவர்கள் வேத அறிவு மிகுந்தவர்களாக விளங்கினாலும், அனுதின நடைமுறை வாழ்க்கையில் தேவனுடைய வழிகளையும், விருப்பங்களையும் அறியாதவர்களாகவேயிருப்பார்கள். தேவனோடு தனிப்பட்ட ஐக்கியம் கொண்டு, வாழும்போதுதான் தேவனுடைய ஆவியின் துணையினால் தேவனுக்கேற்ற சுபாவங்களும், தெய்வீக இயல்புகளும் நம்மில் வெளிப்படும்.

சிந்தனைக்கு...

வேதத்தை ஆராயந்து பார்த்தால், அறிவாளி ஆகலாம்.
வேதத்தால் நம்மை ஆராய்ந்து பார்த்தால், பரிசுத்தர்கள் ஆகலாம்.

நவம்பர் 30

தேடல் தேவை

மத்தேயு 7:7–29

தேடுகிறவன் கண்டடைகிறான்...

மத்தேயு 7:8

இன்று விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளின் வளர்ச்சி, மனிதனுடைய கற்பனையின் வேகத்தைக் கடந்ததாக உள்ளது. புல்லரிக்கின்ற அளவிற்கு மனிதன் புதிது புதிதாக நவீன சாதனங்களைக் கண்டுபிடித்துக் கொண்டேயிருக் கின்றான். இதனுடைய முக்கியக் காரணம் என்ன? மனிதனுடைய சளைப்படை யாத தொடர்ந்த தேடல்கள்தான். முடியாதது போன்று தோற்றமளிக்கும் சில விஷ யங்களை முடியும்படி செய்ய வேண்டும் என்ற மனித ஆர்வம், அதனைச் சாதித்து விட முடியும் என்ற நம்பிக்கை, அதனை நிஜமாகக் காண்பதற்கு அவன் எடுத்து கொள்ளுகின்ற முயற்சி ஆகியவைதான், அவனுடைய தேடலைப் பலனுள்ள தாக்குகின்றன.

ஆர்வம், நம்பிக்கை, முயற்சி ஆகியவை இணைகின்ற போது வருவதே உண்மையான தேடல், தேடுகின்றவன் கண்டடைகின்றான் என்றார் இயேசு. நாம் தேவனோடு இணைந்து இந்த உலகத்தில் தெய்வீகமான ஒரு உயர்ந்த வாழ்க் கையை வாழ்ந்து காட்ட வேண்டும். இதுவே கிறிஸ்தவத்தின் முடிவான எதிர்பார்ப்பு. இதனை கிறிஸ்தவர்கள் என்று பெயர்பெற்ற பெரும்பான்மையான மக்கள் நிறை வேற்றவேயில்லை. காரணம் என்ன? உண்மையான தேடல் இல்லை. உயர்ந்த விதமாக வாழவேண்டும் என்ற ஆர்வமும், அதைக் குறித்த விசுவாசமும், போதிய முயற்சியும் இல்லாவிடில், கிறிஸ்தவம் பிரகாசிக்க முடியாது.

எதுவுமே தானாக நடந்து விடாது. ஒருவேளை நமக்கு ஆர்வமும், விருப்பமும் இருக்க முடியும். ஆனால், அதனைச் சார்ந்த ஒரு முயற்சிமிக்க பிரயாசம் இல்லை யேல், அவை பிரயோஜனமற்றவை. தேடல் என்னும் அனுபவம் இல்லாவிடில் எதுவும் நிகழாது. கர்த்தருக்கு ஏற்ற பிரகாரம் வாழ வேண்டும் என்ற தாகமும், அது நம்மால் கூடும் என்ற விசுவாசமும், அதற்கேற்ற ஆவிக்குரிய பிரயாசங்களும் எங்கே உண்டோ, அங்கே கிறிஸ்தவம் பிரகாசிக்கும்.

அன்று கானானை வேவு பார்க்கச் சென்ற பத்துப் பேர், அந்த தேசம் கைப் பற்றப்பட முடியாதது என்றனர். ஆனால், தேவனை அறிந்த இரண்டு பேர் முடியும் என்றனர். அவர்கள் தேவ பலத்தோடு முயற்சித்தபோது முடியாமல் போகவில்லை. இந்நாட்களில் அநேகர் தேவ மகிமைக்கேதுவான காரியங்களில் போதுமான ஆர்வங்கொண்டு தேடாமல், தங்கள் சுய தேவைகள் தொடர்பான காரியங்களை மட்டுமே தேடுகிறார்கள். எனவே, உண்மையான தெய்வீக இலக்குகளை அடைய முடியாத நிலை ஏற்படுகிறது.

சிந்தனைக்கு...

இறை நம்பிக்கை என்பது இறைவனின் பாதையில் நடப்பதால்
இதயத்தில் பெருகும் இறையாற்றலே.

டிசம்பர் 1

தேவன் மகிமைப்பட

லூக்கா 5 :12–28

உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி ...

மத்தேயு 5:16

நாம் தினமும் ஜெபிக்கிறோம். நன்றாகத் துதிக்கிறோம். வேதத்தைத் தியானிக்கிறோம். சபை ஆராதனைகளில் ஒழுங்காகக் கலந்து கொள்கிறோம். நல்லது. ஆனால், இவை மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கை என்ற பெயரைப் பெற்று விட முடியாது. ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்வதற்காகச் செய்யப்படும் வெறும் ஆயத்தங்கள் மட்டுமே இவைகள். ஜெபித்து வேதத்தைப் படித்து, ஆராதனைகளில் கலந்துகொண்டு வாழ்வதினால், தேவனை மகிமைப்படுத்திவிட்டோம் என்று நாம் சொல்ல முடியாது.

புதிய ஏற்பாட்டின்படி உண்மையான ஆராதனை என்பது, தேவனுடைய நாமம் மகிமைப்படும் விதமாக நாம் வாழ்வதுதான். நம்மில் உள்ள தெய்வீகப் பண்புகள் பிறமக்கள் நடுவில் வெளிச்சம் போல பிரகாசிக்கும் போது, அங்கே தேவனுடைய நாமம் உயர்வாக எண்ணப்பட்டு மகிமைப்படுகிறது. அதைத்தான் தேவன் நாம் செய்ய வேண்டிய பிரதான ஆராதனையாக எதிர்பார்க்கின்றார். ஆராதனை என்றால் தேவன் கனப்படுவது என்பதுதான் ஆவிக்குரிய உண்மையான அர்த்தம். நாம் ஒரு அறையில் கூடி வந்து நன்றாகத் துதித்து, ஸ்தோத்தரித்து, பாடி தேவனை உற்சாகமாகத் தொழுதுகொண்டாலும், அவை தேவன் கனப்படத் தக்கவிதமான ஒரு வாழ்க்கைக்கான ஆயத்தம்தானேயன்றி, அவையே ஆராதனையின் அனைத்தும் அல்ல.

தேவன் எப்போது மகிமைப்படுகிறார்? ஜெபத்தில் அல்ல. வேத வாசிப்பில் அல்ல. ஆராதனையில் அல்ல, இவைகளில் தேவன் நமக்கு அவர் விரும்பும் பிரகாரமான வாழ்க்கையை வாழத் தேவையான வலுவையும், ஆயத்தத்தையும் தருகிறார். அதனைத் தொடர்ந்து நாம் எப்படிப் பேசுகிறோம், எப்படிப் பிறரோடு சம்பந்தப்படுகிறோம், அலுவலகங்களில் எப்படி நடந்து கொள்கிறோம், ஜனங்களின் மத்தியில் எந்த விதமாக இயங்குகிறோம் என்பதைப் பொறுத்தே அவர் மகிமைப்பட முடியும்.

ஜெபம், தியானம், ஆராதனை மூலம் நம்மைப் பெலப்படுத்தும் தேவன், அந்த பெலத்தைப் பெற்று நாம் தொடர்ந்து எப்படி வாழ்கிறோம் என்பதையே கவனிக்கிறார். அங்கே அவர் மகிமைப்பட விரும்புகிறார். அங்கே நாம் வித்தியாசமான முறையில் கிறிஸ்து விரும்பும் சுபாவங்களோடு செயல்பட்டால், அதுவே உண்மையான ஆராதனை. அங்கேதான் தேவனின் எதிர்பார்ப்பு நிறைவேறுகிறது.

சிந்தனைக்கு...

நற்குணங்களோடு இணைந்திராதவனின் இதயம்
இறைவனை விட்டு வெகுதூரம் விலகியேயிருக்கிறது.

டிசம்பர் 2

கொஞ்சத்தை

யோவான் 6:1–13

அவன் கையில் ஐந்து அப்பங்களும்...
யோவான் 6:9

அந்தச் சிறுவன் தன்னுடைய பசிக்காக ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் வைத்திருந்தான். அந்த அற்பமான ஆகாரம், பல்லாயிரங்களின் பசியைப் போக்கும் அற்புத உணவாக மாறப் போகிறது என்பது, அந்தச் சிறுவனுக்குத் தெரியாது. அந்த ஒருவேளை ஆகாரம் இயேசுவின் கரங்களால் தொடப்படும் போது, பல்லாயிரங்களைக் காப்பாற்றப் போகிற உண்மையை அவன் அறியவில்லை. ஆனால், அவனுடைய விசுவாசமும், தாராள மனப்பான்மையும் மற்றவர்களின் பிரயோஜனத்திற்காக, அந்தச் சிறு உணவை இயேசுவிடம் கொடுக்க அவனை ஏவினது, அது ஒரு பெரிய அற்புத நிகழ்வுக்குக் காரணமாகியது.

நம்மிடம் உள்ளது அற்பமானதாக இருக்கலாம். ஒரு திறமை, உழைக்கும் திறன், சிந்தனை ஆற்றல், பணவசதி, வேலை, தொழில் போன்றவை ஒரு சிறிய அளவில் நம்மிடம் இருந்தாலும், அவற்றை விசுவாசத்தோடு ஆண்டவரின் ஆளுகைக்கும், சித்தத்தின் செயல்பாட்டிற்கும் ஒப்புவிக்கும்போது, அவை கர்த்தரின் கரத்தால் மிகுந்த ஆசீர்வாதத்திற்கு ஏதுவாக அமைய முடியும். கொஞ்சம் எண்ணெய்யை ஆசீர்வதித்து ஒரு குடும்பத்தின் கடன் சுமையே நீங்கும் அளவிற்கு தேவன் அதனைப் பெருகச் செய்யவில்லையா?

நம்மிடம் இருக்கும் கொஞ்ச ஆற்றலையோ, கொஞ்ச வசதியையோ, கொஞ்ச அறிவையோ நமக்காகவே வைத்துக் கொண்டிருந்தால், நமக்கு அவை பெரிய ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்துவிட முடியாது. பிறருக்கும் அவைகளால் எந்த நன்மையும் வராது. ஆனால், அந்தச் சிறுவனைப் போல விசுவாசத்தோடு அதனை ஆண்டவரிடம் அர்ப்பணிக்கும்போது, அவை கர்த்தரால் அனேகருக்குப் பயனேற்படுத்தும் ஆசீர்வாதங்களாக மாறுகின்றன.

சில நேரங்கள் நாம் நம்மிடம் உள்ள கொஞ்சத்தை ஆசீர்வதிக்கும்படி கர்த்தரிடம் கேட்கிறோம். ஆயினும், நம்முடைய சொந்த ஆசீர்வாதத்திற்காகவே அவ்விதம் கேட்கிறோம். கர்த்தர் அவற்றை அநேகருக்கு ஆசீர்வாதமாக்கும் திட்டத்தை, நாம் ஏற்காமல் போகிறோம். எனவே, அவை நமக்கு உண்மையான ஆசீர்வாதங்களாக மாறவில்லை. நம்முடைய கொஞ்சத்தை கர்த்தர் ஆசீர்வதித்து அநேகருக்குப் பயனுண்டாக்குவதே நோக்கமாயிருக்க வேண்டும். அப்போது நம்மிடம் உள்ள கொஞ்சம் கர்த்தரால் நமக்கும், அநேகருக்கும் நன்மையுண்டாக்கும் விதமாக ஆசீர்வதிக்கப்படும்.

சிந்தனைக்கு...

இல்லாருக்கு "இல்லை" எனச் சொல்வதற்கு இல்லாமை அல்ல முக்கிய காரணம், இதயத்தில் இரக்க குணம் இல்லாமையே முதல் காரணம்.

டிசம்பர் 3

சுத்த இதயம் வேண்டும்

ரோமர் 14:1–14

அசுத்தமுள்ளவர்களுக்கு ஒன்றும் சுத்தமாயிராது...
தீத்து 1:15

சிற்பி ஒருவன் மிகச் சிறப்பாகச் சிலை ஒன்றைச் செய்து அதன் அருகில் ஒரு கரும்பலகையை வைத்துப் பார்வையாளர்களின் கருத்தை எழுதும்படி குறித்திருந்தான். எல்லோரும் அந்தச் சிலையின் மிக உயர்ந்த கலை நுணுக்கத்தை வியந்து பாராட்டி, சிற்பியைப் புகழ்ந்து எழுதினார்கள். ஆனால், அங்கே இன்னொரு சிற்பி ஒருவன் வந்தான். மனதின் பொறாமை அவனுடைய கண்களைக் குறை கண்டுபிடிக்க ஏவியது. எனவே, பலமணி நேரங்கள் சிலையை மிகக் கவனமாகச் சோதித்தான். இறுதியாக அதில் ஒரு குறையைக் கண்டுபிடித்தான். அதன் குறையைப் பெரிய எழுத்துக்களில் கரும்பலகையில் எழுதினான். அதன் பின்னர் அங்கே வந்தவர்களெல்லாம் அந்தக் குறையையே கவனமாகப் பார்த்தனர். அங்கே குறை இருந்தது. பின்பு எவரும் சிற்பியைப் புகழவில்லை

பிறருடைய நல்ல செயல்களில், நல்ல வாழ்க்கையில் குற்றம் கண்டுபிடிக்க நினைத்தால் அதனை எளிதாகக் கண்டுபிடிக்க முடியும். ஆனால், அதில் மேன்மை பாராட்ட எதுவும் இல்லை. பிறருடைய செயல்களில், வழிகளில் பெரும்பகுதி நல்லதாகவும், நன்மையானதாகவும் இருந்தால், அதனைப் பார்த்து பிரயோஜனப்படப் பழக வேண்டும். ஒருவரிடம் பாராட்டத்தக்க ஏராளமான காரியங்கள் இருக்கும் போது, ஒரு சிறு குறையைக் கண்டுபிடித்துப் பெரிதுபடுத்தி மட்டம் தட்ட நினைப்பது வேதனையானது.

எவ்வளவு நீதியும், நேர்மையும், சுத்தமுமாய் வாழ விரும்புகின்றவர்களிடமும் சில குறைவுகள் இருப்பதுண்டு. குறை தேடும் விருப்போடு கூர்ந்து கவனிப்பவர்களுக்கு அது தெரிவதும் உண்மை. இப்படிக் கூறுவதால், குறைகளைக் கண்டு கொள்ளக் கூடாது என்றோ, எந்த ஒன்றிலும் நல்ல பகுதிகளை மட்டுமே பார்க்க வேண்டும் என்றோ அர்த்தம் அல்ல. குறைகளைக் காண்பது என்பது வேறு. குறைகளைக் காணும்படியாகத் தேடுவது என்பது வேறு. குறை தேடும் சிந்தை நம்மிடம் இருந்தால், எந்த நல்ல காரியத்திலும் குறைகளை மட்டுமே நம் கண்கள் காணும்.

குறைகள் மேல் கொண்ட பாரத்தினாலோ, குறை தவிர்க்கப்பட வேண்டும் என்ற உயர் குணத்தினாலோ அல்ல. சம்பந்தப்பட்ட நபரைத் தாழ்வாகப் பார்க்கவும், பிறருக்குக் காண்பிக்கவும் ஒரு வாய்ப்பு கிடைத்த குஷியினாலேயே அப்படிச் செய்கிறார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையில் நமக்கு இதய சுத்தமும் நல்ல எண்ணங்களும் வேண்டும். அப்போது பிறரால் நமக்கு பல ஆதாயங்கள் உண்டு.

சிந்தனைக்கு...

குறைகூறாமல் வாழ்வதும், குறையில்லாமல் வாழ்வதும்
மனிதனுக்குக் கடினமான காரியங்கள்.

டிசம்பர் 4

முகஸ்துதி

கலாத்தியர் 2:11–21

முகஸ்துதி பேசுகிறவனைப் பார்க்கிலும்...
நீதிமொழிகள் 28:23

நான் மும்பாயில் இருந்தபோது, வசதியான ஒருவரைக் குறித்து எனக்கு நன்கு தெரியும். அவர் யார் கிடைத்தாலும், தன்னுடைய குடும்பம் மற்றும் கொடுக்கல், வாங்கல் நியாயங்களை மணிக்கணக்கில் பேசுவார். அவர் சொல் வதையெல்லாம் "சரிதான்" என்று ஆமோதித்து, பொறுமையாக கேட்டுக் கொண் டிருக்கின்றவர்களின் மீது அதிகமாகப் பிரியப்படுவார். அவர்களுக்கு காபி, டிபன் வாங்கிக் கொடுத்து, தன்னுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்துவார்.

ஆம், சிலருக்குத் தாங்கள் செய்வது, சொல்வதையெல்லாம் சரியென்று சொல்லுகின்றவர்கள் மேல்தான் அதிகப் பிரியம். ஆனால், இது ஒரு தவறான சுபாவம் ஆகும். நாம் நல்லதைச் செய்யும் போதும், சொல்லும் போதும் அதனைப் பாராட்டி உற்சாகப்படுத்தும் நபர்கள் தேவை. அதே வேளையில், நம்முடைய செயல் களில், நியாயங்களில், முடிவுகளில் உள்ள குறைபாடுகளைச் சரியான விதத்தில் சுட்டிக்காட்டுகின்றவர்களும் தேவை. இல்லையேல், நாம் தவறுகளைச் சரி யென்றும், நியாயமற்றவைகளை நியாயமென்றும் எண்ணி, ஒரு நாள் மிகுந்த கேடு களுக்குள் விழும் அபாயம் நேரிடும்.

பேதுருவிடம் ஒரு தவறான போக்கைக் கண்ட பவுல் அங்கே அதனைத் தவறு என்று சுட்டிக்காட்டத் தயங்கவில்லை. அதன் மூலம் பேதுரு தன்னுடைய தவறான போக்கைச் சிந்தித்துச் சரி செய்திருப்பான். தாவீதிடம் தகாத விஷயத்தைக் கண்ட போது நாத்தான் தீர்க்கதரிசி அதனைக் கண்டுகொள்ளாமல் இருக்கவில்லை. அவன் நேருக்கு நேர் தாவீதைக் குற்றம் சாட்டினான். எனவேதான், தாவீதால் தன் தவறை உணர்ந்து, மனஸ்தாபப்பட்டு, தேவ இரக்கத்திற்காக கெஞ்ச முடிந்தது. சரி யானதைச் சரி என்றும், சரியற்றதைச் சரியற்றது என்றும் தயங்காமல் கூறுகின்ற சிலர் நமக்கு அவசியம் தேவை.

ஒரு வேளை, இன்றும் நாம் சில தவறுகளைச் சுட்டிக்காட்டும் போது, சம்பந்தப் பட்டவர்களுக்கு அது ஒரு காயமாகவும், கசப்பாகவும் இருக்க முடியும். ஆனால், ஒரு நாள் அவர்கள் அது நல்லது என்றும், அவசியமான ஒன்றாக இருந்தது என்றும் அறியும் நாட்கள் வரும். நாம் சுட்டிக்காட்டத் தயங்கிய, தவறு என்று உணர்த்தத் தவறிய சில காரியங்கள், ஒருவரைத் தவறான பாதைகளில் நடக்கத்தூண்டும் ஊக்குவிப்பாக மாறி, சீர்கேடுகளுக்கு வழிவகுக்க முடியும். நாளைக்கு ஏதோ ஒன்று நடந்த பிற்பாடு, நான் அதை சொல்லத் தவறிவிட்டேனே, என்று வருந்த நேரிடும்.

சிந்தனைக்கு...

இறைவனுக்காக எவ்வளவு செய்கிறாய் என்பதல்ல.
அவர் எதிர்பார்ப்பதைச் செய்கிறாயா என்பதே முக்கியம்.

டிசம்பர் 5

அரைகுறை மாற்றம்

11 கொரிந்தியர் 5:1–17

பழையவைகள் ஒழிந்து போயின.
11 கொரிந்தியர் 5:17

தன்னுடைய வீட்டில் தேவையில்லாமல் இடத்தை அடைத்துக் கொண்டிருந்த ஏராளமான பழைய பொருட்களை, பழைய பொருள் வாங்குகிறவனிடம் ஒருவர் விற்க முன்வந்தார். பழைய பொருள் வாங்குகிறவன் வந்து ஒவ்வொரு பொருளாக எடை போட ஆரம்பித்தான். ஆனால், அந்த மனிதர் சில பொருட்களை விற்க மனமின்றி, அது ஏதாவது உபயோகத்திற்கு ஆகும் என எண்ணி அவைகளை ஒதுக்கி வைத்தார். விற்பதாகச் சொன்ன பொருட்களில் பாதிக்கு மேற்பட்ட பொருட்களை, அவர் தனக்காகவே வைத்துக்கொள்ள விரும்பியதைக் கண்ட பழைய பொருள் வியாபாரி கோபமடைந்து "ஐயா... எல்லா பொருட்களையும் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு எதற்காவது உதவும்" என கூறிவிட்டுப் போய்விட்டான்.

சிலருடைய இரட்சிப்பின் அனுபவமும் இப்படியே உள்ளது. அவர்கள் தங்களிடம் உள்ள எல்லாப் பாவ சாயலான குணங்களையும், சுபாவங்களையும் அகற்றிட இயேசுவை அழைக்கின்றனர். ஆனால், பரிசுத்த ஆவியானவர் உள்ளான ஆத்துமாவில் உள்ள ஆகாத குணங்கள், பண்புகள், தன்மைகள், எண்ணங்கள் இவற்றை அகற்றும்படி செயல்படும் போது, முற்றிலுமாக அவைகளைக் களைய அவர்கள் விரும்புவதில்லை. சில குணங்களும், பழக்கங்களும், சிந்தைகளும் தங்களை விட்டு விலகாமல் இருப்பதையே அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள்.

ஜாதியுணர்வு, பண மோகம், அந்தஸ்து மிக்கவர்களாக அறியப்பட விரும்புதல், தாழ்ந்து போக விரும்பாமை, வைராக்கியமாக இருத்தல், கசப்பை விட மறுத்தல் போன்ற பல ஆகாத சுபாவங்களைத் தங்களிடம் வைத்துக்கொண்டே, வேறு பல தீங்கான குணாதிசயங்களை விட்டுவிட வாஞ்சிப்பவர்கள் உண்டு. ஆனால், பரிசுத்த ஆவியானவர் ஒரு ஒட்டுமொத்த மாறுதலுக்கு ஏதுவாகவே, நமக்குள் கிரியை செய்ய விரும்புகின்றார்.

சில விஷயங்களில் நாம் ஆவிக்கேற்றவர்களாக மாற விரும்பியும், வேறு சில விஷயங்களில் பழைய ஜென்ம சுபாவ நிலையில் நாம் நீடிக்க விரும்பும் போது, ஆவியானவர் நம்மிடம் தொடர்ந்து செயல்பட வாய்ப்பில்லை. ஆவியானவர் நம்மிடம் வல்லமையாகக் கிரியை செய்து, நம்மை முற்றிலும் பரிசுத்தமான ஒரு நிலைக்குக் கொண்டு வர விரும்புகிறார். அவர் கிரியை செய்ய வேண்டுமானால் நாம் விரும்புகிற ஏதாவது தேவனுக்குப் பிரியமற்றிருந்தால், அவற்றை அப்புறப்படுத்த ஆவியானவரை அனுமதித்து, ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

சிந்தனைக்கு...

நீ இருக்கும் இடம் தேடித் தீயவை வரும்.
நல்லதை அது இருக்கும் இடம் தேடி நீதான் செல்ல வேண்டும்.

டிசம்பர் 6

பரிசுத்தவான் யார்?

1 பேதுரு 1:7–25

நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும்...

1 பேதுரு 1:16

சகோதரர் ஆத்ம சீலனை அநேகர் உண்மையான பரிசுத்தவான் என்று நற்சாட்சி தருகின்றனர். அவ்வாறு நற்சாட்சி தரும் ஒருவரிடம் "அவரை எப்படி நீங்கள் பரிசுத்தவான் என்று கூறுகிறீர்கள்?" என்று கேட்டபோது, அவர் சொன்ன பதில் "சகோதரர் ஆத்மசீலன் தவறாக எதையாவது பேசியதையோ, தவறான காரியங்களைச் செய்ததையோ நான் எப்போதுமே பார்த்ததில்லை" என்பதாகும். இவரைப் பொறுத்தவரைக்கும் தவறாக எதையும் பேசாமலும், தவறாக எதையும் செய்யாமலும் இருப்பதுதான் பரிசுத்தம். ஆனால், ஒருவரிடம் தவறுகள் எதையும் பார்க்க முடியாத நிலையைப் பரிசுத்தம் எனக் கூற முடியாது.

பரிசுத்தம் என்பதை தெய்வீகம் என அர்த்தம் கொள்ளலாம். பரிசுத்தமான வாழ்க்கை என்பதை தெய்வீக வாழ்க்கை எனப் பொருள் கொடுக்கலாம். அதாவது மனுஷீக நிலையைக் கடந்து, தெய்வீக அம்சங்கள் கொண்ட ஒரு வாழ்க்கையை வாழ்கின்றவரே பரிசுத்தவான். ஒரு சுத்தமான துணி என்பதற்கும், அழகான துணி என்பதற்கும் இடையிலுள்ள வேற்றுமை என்ன? சுத்தமான துணியில் அழுக்குகள் ஏதும் இல்லை. அவ்வளவுதான். அழகான துணியிலோ, சுத்தமும் இருக்கும். அத்துடன் காண்போரைக் கவரும் விதமான நல்ல வேலைப்பாடுகளோ அல்லது விசேஷ நிறங்களோ அதில் இருக்கும்.

அதுபோலவே சுத்தமான வாழ்க்கையில் தவறுகள் இராமல் இருக்கும். ஆனால், பரிசுத்தமான வாழ்க்கை என்ற தெய்வீக வாழ்க்கையில், அநேகரைக் கவரத்தக்க தெய்வீகத் தன்மைகள் இருக்கும். ஏனென்றால், தேவனோடு நல்ல ஐக்கியம் கொண்டு வாழும் வாழ்க்கைதான் தெய்வீக வாழ்க்கை. அந்த வாழ்க்கையில் தேவனோடு சம்பந்தப்படுவதின் விளைவாகப் பல தெய்வீகக் குணாதிசயங்களும், விசேஷ நற்பண்புகளும் பிரகாசமான சுபாவங்களும் வெளிப்படும்.

பாலியல் தவறுகள், பொருளாசை சார்ந்த தவறுகள், பொய், புரட்டு, சண்டையிடுதல், புறங்கூறுதல், இது போன்ற பல தவறுகளை ஒருவரிடம் காண முடியாவிட்டால், உலகம் அவரைப் பரிசுத்தவான் என்று சொல்லும். அது தவறு அல்ல. ஆனால், இவைகளோடு உண்மையான அன்பு, தாழ்மை, பொறுமை, பிறர் மேல் பரிவு, விட்டுக்கொடுத்தல், விசுவாசம், கசப்பின்மை, பொறாமையின்மை, விரோதங்களால் எரிச்சலடையாமை போன்ற பல தெய்வீகப் பண்புகள் இணையும் போது தான், தேவனுடைய பார்வையில் அவர் பரிசுத்தவானாயிருப்பார்.

சிந்தனைக்கு...

சிறந்த சிந்தனைகள் என்ற உரம் இல்லையேல், வாழ்வில் உயர்ந்த செயல்கள் என்ற கனிகள் இருப்பதில்லை.

டிசம்பர் 7

யார் கெட்டவர்கள் ?

மத்தேயு 18:1–13

மனுஷ குமாரன் கெட்டுப் போனதை...

மத்தேயு 18:11

கெட்டுப்போனவர்களை இரட்சிக்கவே தாம் வந்ததாக இயேசு கூறினார். சிலரைப் போல நாம் தவறாக வாழாமலும், பொல்லாப்புச் செய்யாமாலும், ஆகாத பழக்கவழக்கங்களில் மூழ்காமலும் இருக்கும் போது, நம்மை நாம் கெட்டவர்களாகப் பார்ப்பது சுலபமானதல்ல. ஆனால், தேவனை நம்முடைய வாழ்க்கையின் மையமாகக் கொண்டு செயல்படாத நிலையில், நாம் யாவரும் அவருடைய பார்வையில் கெட்டுப் போனவர்களே.

அன்றைய பரிசேயர்கள் சமுதாயத்தில் ஒரு சிலரைப் பாவிகள் என்று முத்திரை குத்திவிட்டு, தங்களையோ நீதிமான்கள் என எண்ணிப் பெருமையடைவார்கள். அவர்களின் பல இறைவழிபாடுகளும், சமயப் பற்றும், சில நற்செயல்களுமே அவர்களை அவ்விதம் எண்ண வைத்தது. அவைகளே, தங்களைப் பாவிகள் என்ற நிலையில் பார்க்கவிடாமல் அவர்களைத் தடுத்தது. நம்மிடம் சுய நீதியின் அடிப்படையில், அதாவது நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்கின்ற சில பக்தி ஒழுங்குகளால், நல்ல சில விஷயங்கள் நம்மிடம் இருக்க முடியும். அவைகளே நாம் உண்மையில் அடைய வேண்டிய உயர்நிலைகளை அடையவிடாமல் நம்மைத் தடுத்து விட முடியும்.

ஆவிக்குரிய வாழ்க்கையின் மிக முக்கியமான அனுபவம் தேவனோடு உறவாடுவதும், அவருடைய அன்பை நமக்குள் உணருவதாகும். தேவ ஐக்கியத்தின் விளைவாக நமக்குள் நாம் உணர இயன்ற சந்தோஷமும், சமாதானமுமே, ஆவிக்குரிய சந்தோஷமும், சமாதானமும் ஆகும். சில நற்கிரியைகளைச் செய்வதால் கூட, நமக்குள் ஒரு சந்தோஷ மனநிலையை உணர முடியும். ஆனால், தேவ ஐக்கியம் கொண்டு வரும் சந்தோஷம் என்பது வித்தியாசமான ஒன்று. சுய நீதி சார்ந்த வாழ்க்கையில் அது இல்லை.

நாம் சிலரைப் போல மோசமானவர்களாக இல்லை. யாருக்கும் நம்மால் தொந்தரவு இல்லை. நமக்குக் கிறிஸ்தவ மதபக்தியும், பல ஒழுங்குகளும் உண்டு. ஏன்? ஊழிய ஈடுபாடுகள்கூட உண்டு. ஆயினும், தேவ ஐக்கியத்தை நாம் உணர முடியாவிட்டால், தேவனுக்கேற்ற முழுமையான சுபாவநிலை இல்லாவிட்டால், இரட்சிப்பின் விசேஷ சந்தோஷம் இல்லாவிட்டால், நாம் தேவனுடைய பார்வையில் கெட்டுப்போனவர்களே. அங்கே இயேசுவால் நாம் இரட்சிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. நம்மை நாம் ஆராய்ந்து, இயேசுவால் வரும் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுவோம்.

சிந்தனைக்கு...

இப்போது நீ இருக்கும் இடத்தை அறிய விரும்பினால், முதலில் உன் இருதயம் இப்போது எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடி.

டிசம்பர் 8

தேவ ஐக்கியம்

எபேசியர் 1:13–23

தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான...
எபேசியர் 1:17

தேவ ஐக்கியம் என்ற வார்த்தை என்னுடைய புத்தகங்களிலாயினும் சரி, பிரசங்கங்களிலாயினும் சரி, அதிகமாக உபயோகிக்கப்படும் வார்த்தை. ஏனென்றால், ஆவிக்குரிய வாழ்க்கையின் உயிர் நாடி அதுதான். ஆயிரம்தான் ஆன்மீகத் தன்மையுடைய செயல்களில் நாம் ஈடுபட்டிருந்தாலும், தேவ ஐக்கியத்தை நமக்குள் உணர்கிற அனுபவம் இல்லையேல், எந்தப் பிரயோஜனமுமில்லை. கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்ற விசுவாசத்திற்கு அடுத்தபடியாக, கர்த்தர் நம்மோடிருப்பதை நமக்குள் உறுதிப்படுத்துகின்ற அனுபவமும் தேவை. சிலர் கர்த்தர் தங்களோடிருப்பதை ஒருபோதும் அனுபவப்பூர்வமாக உணர்வதில்லை. "கர்த்தர் நம்மோடிருக்கின்றார்" என்ற விசுவாசத்தைத் தாண்டி அவர்கள் செல்வதேயில்லை.

சிலர் ஞாயிறு ஆராதனை வேளையிலும், விசேஷக் கூடுகைகளிலும் மட்டுமே தேவ ஐக்கியத்தையும், தேவப் பிரசன்னத்தையும் உணருவார்கள். அதையே கர்த்தர் தங்களோடிருப்பதற்கான அடையாளமாக எடுத்துக் கொள்வார்கள். ஆனால், ஆராதனை வேளையிலும், உற்சாகமான பாடல் வேளையிலும் நாம் உணருகின்ற குதூகல உணர்வும், பரவச மனநிலையும் தேவன் நம்மோடிருப்பதற்கான உறுதியான அடையாளங்கள் அல்ல.

பலர் கூடி வருகின்ற அல்லது பலரோடு சேர்ந்து ஆராதிக்கின்ற ஒரு ஆன்மீக ஆரவாரச் சூழ்நிலையில் அல்ல. நாம் தனித்திருக்கும் போதும், அமைதியான சூழ்நிலைகளிலும் தேவப்பிரசன்னத்தை உணர்வதே முக்கியமானது. அதுவே உண்மையானது. கூட்டத்தோடு கூட்டமாக தேவ ஐக்கியத்தை உணர்வது அல்ல. நாம் தனிப்பட்ட முறையில் உணர வேண்டும். ஆரவார நேரங்களில் மட்டும் அல்ல. அமைதியான தனிமை நேரங்களில் ஆண்டவரின் அன்பையும், உறவையும், தொடுதலையும், தூண்டுதலையும் நமக்குள் உணர்ந்து நிச்சயப்பட வேண்டும். அதுவே அசைக்க முடியாத அனுபவம்.

எப்படி அதனை உணர்வது? நாம் தேவனை உண்மையாக நமக்குள் தேடுவோமானால், அவரை நாம் கண்டடைவோம். உண்மையான மனந்திரும்புதலைக் கண்டு, கர்த்தருக்காக உண்மையான சாட்சியாக வாழ வேண்டும் என்ற வாஞ்சை யுடையோர், தங்களுக்குள் கர்த்தரை அறிவார்கள், உணர்வார்கள். ஏனென்றால், தேவன் உண்மையாய்த் தேடுகின்றவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தாவிடில், அவர்களால் சரியான ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ முடியாது.

சிந்தனைக்கு...

தேவனின் தொடுதலை உணர நீ காட்டும் ஆர்வம்தான்,
உன்னைத் தொட முடியாமல் சாத்தானை ஓட வைக்கும்.

டிசம்பர் 9

இந்த இரட்சிப்பு வேண்டாம்

மத்தேயு 3:1–12

மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள்.
மத்தேயு 3:8

மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று, அந்நிய பாஷையின் அடையாளத்தோடு அபிஷேகம் பெற்றுக்கொண்டதாகச் சாட்சி சொல்லுகின்ற சகோதரி அவர். ஆனால், பெரும்பாலான அவருடைய செயல்களில் பரிசுத்த சாயலைப் பார்க்க முடியாது. அவருடைய வார்த்தைகளில் உண்மையைப் பார்ப்பது மிக அரிது. அவருடைய பெரும்பாலான சுபாவங்கள் அவரிடம் முன்னரே இருந்த ஜென்ம சுபாவங்களைக் கொண்டவைகளே. ஆனால், அந்த சகோதரியோ எங்காவது போய் சிலருக்கு இயேசுவின் இரட்சிப்பைக் குறித்து நற்செய்தி சொல்லா விட்டால், நிம்மதியாகத் தூங்க மாட்டார்கள்.

நாம் இரட்சிக்கப்பட்டதாக, அறிக்கை செய்வது சந்தோஷமானது. ஆனால், அந்த இரட்சிப்பு, நமக்கு என்ன செய்திருக்கின்றது என்பது முக்கியம். இரட்சிப்பு நம்மை நற்செயல்கள் செய்திடப் பலப்படுத்தியிருக்க வேண்டும். இரட்சிப்பு தேவ உறவில் நாம் வாழ்வதற்கு உதவியிருக்க வேண்டும். இரட்சிப்பு தவறான சுபாவங்களை மேற்கொள்ளும் கிருபையை நமக்குத் தந்திருக்க வேண்டும். இரட்சிப்பு எதைச் செய்தாலும் பரிசுத்த சிந்தையோடு செய்யும் தூண்டுதலை நமக்குள் தந்திருக்க வேண்டும். இரட்சிப்பு துணிந்து பாவத்தை எதிர்ப்பதற்கும், தூய்மையாய் மனதை வைத்திருப்பதற்கும் நமக்குள் போதிய ஆர்வத்தையும், ஆசையையும், ஆற்றலையும் தந்திருக்க வேண்டும்.

இப்படியில்லையென்றால், நம்மிடம் உள்ள இரட்சிப்பு உண்மையானதல்ல. அது இயேசுவால் வந்ததல்ல. அது தேவனால் வராத இரட்சிப்பாயிருப்பதால், அது தேவனுக்குப் பிரியமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. அது உண்மையான இரட்சிப்பாயிராததால், அதனால் உண்மையான கிறிஸ்தவ மகிமையை நம்மிடம் வெளிப்படச் செய்ய இயலவில்லை.

நாம் வாங்கி வந்த ஓர் இயந்திரம் நாம் எதிர்பார்த்த வேலையைச் செய்யா விட்டால், அதனை வீட்டில் வைத்துக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. நம்மைக் கிறிஸ்துவுக்கேற்ற பரிசுத்தவான்களாக்க இயலாமல் போன போலி இரட்சிப்பை வேண்டாம் என்று வீசிவிட்டு, உண்மையான இரட்சிப்பின் அனுபவத்தை இயேசுவிடம் கேட்டு வாங்க முன்வருவோம். பாவ விடுதலை, தேவ உறவு, பரிசுத்த வாழ்க்கை இவற்றை முன்னிலைப்படுத்திக் கேட்டால், அந்த உண்மையான இரட்சிப்பு வரும்.

சிந்தனைக்கு...

நல்லதைப் பகைவனிடம் பார்த்தாலும் மெச்சிடத் தயங்காதே,
தீயதை நண்பனிடம் பார்த்தாலும் சுட்டிக்காட்டத் தவறாதே.

டிசம்பர் 10

அன்புக் கடன்

1 யோவான் 4:4–13

அன்பு கூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.
1 யோவான் 4:11

நாம் மற்றவர்களை நேசிக்கக் கடன்பட்டிருக்கின்றோம் என்று வேதம் சொல்கின்றது. (1 யோவான் 4:11) ஆனால் கவனித்துப் பார்க்கும்போது, சிலருக்கு நாம் அன்பு விஷயத்தில் நாம் கடன்பட்டுள்ளதாகச் சிந்திக்க வாய்ப்பு இல்லை. ஏனென்றால், அவர்கள் நம்மை நேசிக்கவில்லை. அவர்கள் நம்மேல் கரிசனை எதுவும் கொண்டவர்கள் அல்ல. ஆனால், அவர்கள் நம்மை வெறுப்பதையும், கசப்பதையும், நமக்கு எதிராகச் சிந்திப்பதையும் நாம் அறிந்திருக்கின்றோம்.

அப்படியிருக்கையில், அவர்களை நேசிக்க நாம் எப்படிக் கடன்பட்டவர்களாக இருக்க முடியும்? நம்மை நேசிக்காதவர்களை நாம் நேசிக்க வேண்டிய கடமைப் பட்டவர்களா?ஆம். நம்மை நேசிக்காதவர்களை நேசிக்க நாம் கடன்பட்டவர்களே. அதுதான் தெய்வீக நியதி. ஏனென்றால், நாம் தேவனை நேசிக்காமல், சிந்தனை களாலும், செயல்களாலும், சுபாவங்களாலும் அவருக்கு எதிராகவே இருந்தோம். ஆயினும், தேவன் நம்மை வெறுத்துத் தள்ளாமல், தம்முடைய குமாரன் வாயிலாக தம்முடைய அன்பை நம்மேல் ஊற்றினார்.

நம்மை நேசிப்பதற்கு தேவன் கடன்பட்டிருக்கவில்லை. ஆனாலும், தேவன் நம்மை நேசித்தார். அதுபோல, நம்மை நேசிக்காதவர்களை நாமும் நேசிக்கக் கடன்பட்டிருக்கின்றோம். தேவன் நமக்குக் காண்பித்த அன்பை நாம் பிறருக்குக் காண்பிப்பதே கிறிஸ்தவ நியதி. வெறுக்கத்தக்கவர்களாயிருந்த நமக்குத் தேவன் காண்பித்த அன்பை, நம்மால் வெறுக்கத்தக்க நிலையில் உள்ளவர்களுக்கும் நாம் காண்பிக்க வேண்டும். ஆம், தேவனிடமிருந்து அன்பைப் பெற்று, மனிதர்களுக்கு அதனை திருப்பிக் கொடுப்பதே கிறிஸ்தவ ரீதியாக அன்பு கூறுதல்.

இந்த தெய்வீக நியதியை நம்மால் ருசிக்க இயலும். ஆனால், அதனைச் செயல்படுத்துவது கடினம். யாரால் இதனைச் செயல்படுத்த இயலும்? மறுபடியும் பிறத்தலின் அனுபவம் பெற்றிருந்தால்தான், தேவ அன்பை அனுபவிக்க வாய்ப்புக் கிடைக்கும். ஏதோ ஒரு மத பக்திக்காகவோ, கிறிஸ்தவ நம்பிக்கைக்காகவோ பிறரை நாம் நேசித்துவிட இயலாது. நாம் கிறிஸ்துவை இரட்சகராக நமக்குள் பெற்ற பாவ மன்னிப்பின் நிச்சயம் அடைய வேண்டும். அப்போதுதான் பரிசுத்த ஆவியினால் தேவன் நம்மை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை அனுபவரீதியாக உணர முடியும். அப்போது நாமும் பிறரை நேசிக்கக் கடன்பட்டவர்கள் என்பதை அறிவோம்.

சிந்தனைக்கு...

பிறரை நேசிப்பதால் அவர்களுக்கு ஏற்படும்
நன்மைகளைவிட, உனக்குத்தான் அதிக நன்மை.

டிசம்பர் 11

உதவி வரும் நேரம்

சங்கீதம் 105:1–22

கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும்...
சங்கீதம் 105:19

யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்கு எதிராக தீங்கான முடிவு எடுத்து, அவனுக்குக் கேடு செய்யத் துணிந்தபோது, தேவன் தலையிட்டு அவனைக் காப்பாற்றி, அவனுடைய சகோதரர்களைத் தண்டித்திருக்கலாம். ஆனால், தேவன் அப்போது அவ்விதம் உதவி செய்யவில்லை. யோசேப்பு போத்திபாரின் வீட்டில் அதிகாரியாக இருந்தபோது, யோசேப்பின் மேல் பழிசுமக்கத் தக்கதான ஒரு சம்பவமே நடைபெறாமல் தேவன் தடுத்திருக்கலாம். தேவன் அவ்விதம் செய்யவில்லை. யோசேப்பு சிறையில் இருந்தபோது, இவன் மூலம் சொப்பனத்திற்கு விளக்கம் கேட்டு விடுதலையானவன் மூலமாக, யோசேப்பு விடுதலையாகும் படியான ஒரு உதவியைச் செய்திருக்கலாம். ஆனால், அவ்விதம் தேவன் உதவி செய்யவில்லை.

காரணம் என்ன? சகோதரர்களின் சதியைத் தடுத்திருந்தால், அவன் யாக் கோபின் மகன் என்ற அந்தஸ்தை மட்டுமே உடையவனாயிருந்திருப்பான். போத்தி பார் வீட்டு சம்பவம் நடைபெறாமல் தடுத்திருந்தால், அவன் போத்திபார் வீட்டு அதிகாரி என்ற அந்தஸ்தை மட்டுமே பெற்றிருப்பான். சிறைச்சாலை நண்பன் வழியாக உதவி கிட்டியிருந்தால், ஒரு விடுதலையான கைதி என்ற அந்தஸ்தில் மட்டுமே இருந்திருப்பான். ஆனால், தேவன் அவனுக்குச் சரியான ஒருநேரத்தில், சரியான ஒரு சூழ்நிலையில், சரியான ஒரு விதத்தில் உதவி செய்யக் காத்திருந்தார். அந்த உதவியினால் அவன் ஒரு தேசத்திற்கே அதிபதி ஆனான்.

நம்முடைய வாழ்க்கையிலும்கூட நாம் கெஞ்சிக் கேட்ட சில சூழ்நிலைகளில், நமக்குத் தேவன் உதவி செய்யாமலிருந்திருக்கலாம். அதன் விளைவாக நம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலைகள் அதிகப் பிரச்சினைகள் உள்ளதாக மாறியிருக்க முடியும். ஆனாலும், நாம் உண்மையாகத் தேவனைப் பின்பற்றி வாழ்கின்ற மக்களாக இருக்கும்போது, அவருடைய உதவி தாமதமாகின்றதே ஒழிய, இல்லை என்று ஆகிவிடவில்லை. எந்த இடத்தில் எந்த நேரத்தில் நமக்கு உதவி செய்தால், அவர் விரும்புகின்ற விதமான ஒரு உயர்ந்த மேன்மை நமக்கு வரும் என்று அவர் அறிகிறாரோ, அந்த வேளைக்காகக் காத்திருக்கின்றார். சகலவற்றையும் அவர் தம்முடைய கட்டுப்பாட்டிற்குள்ளேயே வைத்துச் செயல்படுகின்றார். எந்த ஒரு சோதனையின் பாதையும் நம்மை அழித்துவிட அனுமதியாமல், தப்பிக்கும்படியான போக்குகளை உருவாக்கிக் கொண்டேயிருப்பார்.

சிந்தனைக்கு...

உலகம் உன்னைக் கசக்க வைக்கும் போதெல்லாம் இறைவன் உனக்கு இனிமை தரக் காத்திருக்கிறார் என்பதை மறவாதே.

டிசம்பர் 12

தேவனுக்காக வாழவேண்டும்

அப்போஸ்தலர் 20:17–27

என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும்...
அப்போஸ்தலர் 20:24

என்னுடைய மீதமுள்ள வாழ்க்கை காலங்கள்மேல், தேவனுக்கு ஒரு நல்ல நோக்கம் இருக்கிறது, என்ற விசுவாச சிந்தனை ஒவ்வொருவருக்கும் அவசியம். ஏனென்றால், ஏதோ ஒன்று வாழ்க்கையில் நிகழ்ந்துவிடும்போது, இத்துடன் உன் வாழ்க்கையின் நோக்கம் முடிந்துவிட்டது, என்பது போன்ற தவறான தகவலைக் கொடுத்து விடுகிறது. எனவே, அநேகர் இனி வாழ்வதற்குக் கணிசமான காலங்கள் இருந்தாலும், அவற்றை அர்த்தமற்ற காலங்களாகவும், எந்தப் பிரயோஜனமும் இல்லாத காலங்கள் போலவும் எண்ணிவிடுகின்றனர்.

உடலில் ஏற்பட்ட வியாதி, உடனிருந்தோரின் மறைவு, வாழ்வின் பாதையில் ஏற்பட்ட வீழ்ச்சி, இனி ஆடுவதற்கு களம் இல்லை என்ற எண்ணம், இனி நான் அதிகமாகத் தேவைப்படவில்லை என்ற சிந்தனை, ஆகியவை மீதமிருக்கும் காலங்களுக்கு இனி எந்தப் பெரிய அர்த்தமும், அழகும் இல்லை என்பது போல, சிந்திக்க வைத்துவிடுகிறது. சிலர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற உடனேயே, எல்லாம் முடிந்தது என்று எண்ணிவிடுகின்றனர். சிலர் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து கொடுத்து அவரவர் தனித்தனியாகக் கூடாரம் போட்டதும், இனி இங்கே என்ன மீதம் இருக்கிறது என்ற எண்ணம் வந்து விடுகிறது.

இதுபோன்ற உணர்வுகள் இயற்கையானவை. ஆனால், இனி மீதம் இருப்பது பல ஆண்டுகளோ அல்லது ஒரு சில நாட்களோ எதுவாயினும், தேவனுக்கு ஒரு நோக்கமுள்ளது. நாம் வாழ்வது கடைசி வரையிலும் விறுவிறுப்பாகவும், அவசியமானதாகவும் உணரப்படவேண்டுமானால், தேவன் நம் வாழ்க்கையில் ஒரு நோக்கம் வைத்துள்ளார் என்ற விசுவாசம் தேவை. தேவனே உமக்காக வாழ்ந்திடவே இன்னும் நான் இங்கிருக்கிறேன் என்ற விசுவாச சிந்தை வந்துவிட்டால், ஒவ்வொரு நாளும் உபயோகமானதும் அவசியம் வாழ வேண்டியதுமான நாளே.

வாழ்க்கை என்பது கணவனுக்காகவோ, மனைவிக்காகவோ, பிள்ளைகளுக்காகவோ, வேறு சில பணிகளுக்காகவோ அல்ல. வாழ்க்கை என்பது தேவன் தந்த பரிசு. அது கடைசி வரையிலும் உணரப்படவேண்டும். ஒருவரைவிட்டுப் பிரிந்ததும், மறைந்ததும், விலகினதும் வாழ்க்கை மிக மிக அர்த்தமற்ற ஒன்றாக இருக்கலாம். ஆயினும், தேவனுக்காக வாழ்வதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்ற விசுவாச சிந்தை, எது விலகினாலும் வாழ்க்கையின் அவசியத்தையும், அர்த்தத்தையும் அழிந்துவிடாமல் காத்துக் கொள்ளும்.

சிந்தனைக்கு...

தேவனுக்காக வாழ்கின்றவர்களால் சிலர் எழுகின்றனர்.
தங்களுக்காக வாழ்கின்றவர்களால் பலர் விழுகின்றார்கள்.

டிசம்பர் 13

ஏன் உபதேசங்கள் ?

மாற்கு 6:30–44

அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்.

மாற்கு 6:34

வேதாகமத்தில் அதிலும் குறிப்பாக புதிய ஏற்பாட்டில் தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை தொடர்பான உபதேசங்களே, பெரும்பான்மையான இடத்தைப் பிடித்துள்ளது. சத்தியம், உண்மை, நேர்மை, நீதி, பரிசுத்தம், பிறருக்கு உதவுதல், தேவ ஐக்கியம், தேவனுடைய இராஜ்யம் ஆகியவை தொடர்பான போதனைகளே அதிகப் பக்கங்களை ஆக்கிரமித்துள்ளது. வாழ்க்கைப் பிரச்சனை சம்பந்தமான விஷயங்களை அதிகமாகப் பேசாமல், வேதம் மனித வாழ்க்கையை நெறிமுறைப்படுத்துவதைக் குறித்தே, அளவுக்கு அதிகமாகப் பேசுகிறதே என்று நான் எண்ணிய வேளைகள் உண்டு.

ஏன்? தேவன் நம்முடைய அனுதின வாழ்க்கைப் பிரச்சனைகளின் மேல் அக்கறையற்றவரா? ஆன்மீக விஷயங்கள் மட்டும்தான் அவருக்கு முக்கியமா? இயேசு, பேதுரு, பவுல், யோவான் போன்றோர் மக்களின் வாழ்க்கைப் போராட்டங் களையும், கஷ்டங்களையும், வாழ்வின் மேடு பள்ளங்களையும் குறித்துக் கவலை யற்றவர்களாக இருந்தனரா? இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் நமக்கு ஒரு தெய்வீக இலக்கைக் காண்பித்து, அதை நோக்கிச் செல்வதற்குத் தேவையான தெய்வீக ஆலோசனைகளையும் கொடுத்தார்கள்.

அந்த இலக்கை நோக்கி நம்முடைய கவனம் வைக்கப்பட்டு, அந்த இலக்கை நோக்கிய பாதையில் நம்முடைய கால்கள் சென்றால் அங்கே தேவனை நம்மோ டிருப்பவராகக் காண முடியும். அந்த தேவனே நம்முடைய தேவைகளுக்கும், பிரச்சினைகளுக்கும், கஷ்டங்களுக்கும், சகல போராட்டமான வாழ்க்கைச் சூழ் நிலைகளுக்கும் பதிலாகவும், தீர்வாகவும் இருப்பார். ஒரு பரிசுத்தமான வாழ்க்கைப் பாதையில், நமக்குத் தேவன் எல்லா விதத்திலும் போதுமானவராயிருப்பார் என்பதே, வேதாகமம் தரும் சுருக்கமான செய்தி.

ஒரு தகப்பனோடு மகன் பிரயாணம் சென்றால், மகன் தகப்பனோடு இசைந்து போக மாத்திரம் கவனம் செலுத்தினால் போதும். எந்தப் பேருந்து? எங்கே சாப்பாடு? எங்கே தங்குவது? தேவைகளுக்கான பணம்? சரீர அசௌகரியங்கள் ஏற்பட்டால்? என்பது போன்ற அநேக கேள்விகளுக்குத் தகப்பன் முதலிலேயே பதில் தரவேண்டிய அவசியமில்லை. மகன் கேட்டுத் தெரிய வேண்டியதுமில்லை. ஆம், தேவனுடைய உயர்ந்த போதனைகளுக்குள்தான் நம்முடைய வாழ்க்கையைக் குறித்த சகல கரிசனைகளும் இருக்கின்றன.

சிந்தனைக்கு...

தேவனைக் குறித்த நினைவுகள் உள்ளத்தில் இருந்தால்,
உலகத்தைக் குறித்த கவலைகள் உன்னை வருத்துவதில்லை.

டிசம்பர் 14

அன்பை விளக்கிய இடங்கள்

ரோமர் 5:1–10

தேவ அன்பு நம்முடைய இருதயங்களில்...
ரோமர் 5:5

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் வாயிலாகத் தேவன் மனுக் குலத்தின் மேல் தாம் வைத்திருந்த அன்பை விளக்கிக் காட்டினார். இந்த அன்பை மனுக்குலம் புரிந்துகொள்வதற்கு ஏற்றவிதமாகத் தேவன் இரண்டு இடங்களைத் தெரிந்து கொண்டார். ஒன்று கல்வாரி மலை, அங்கேதான் இயேசு மனிதர்களின் பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார். பரிசுத்தராகிய அவர் மனிதர் களின் பாவங்களைச் சுமந்து தீர்ப்பதற்காக, சிலுவையில் அறையப்பட தம்மையே ஒப்புக்கொடுத்ததின் வாயிலாக, தேவ அன்பின் ஆழம் எவ்வளவு என்பதை மனுக்குலம் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டியது.

இவ்விதம் அன்பு விளக்கிக் காட்டப்பட்ட சம்பவம் சரித்திர ரீதியானது. இதனைத்தான் ஏராளமான கிறிஸ்தவ மக்கள் அறிந்துள்ளனர். இந்த சம்பவத்தை அடிப்படையாக வைத்துதான், அநேகர் கர்த்தர் மிகவும் அன்பானவர் என்று விசுவாசிக்கின்றனர். இந்த கல்வாரி நிகழ்வுதான் பலருடைய விசுவாசத்தின் அடிப்படை. இயேசுவின் பாடு மரண நிகழ்வின் செய்திகள்தான், கர்த்தர் அன் பானவர் என்று அநேகரை நம்பச் செய்கின்றன.

ஆனால் இது மட்டும் போதாது. தேவன் தம்முடைய அன்பை விளக்கிக் காட்டிய இடம் கல்வாரி மட்டுமல்ல. அவர் இன்னொரு இடத்தையும் அதற்காகத் தெரிந்து கொண்டிருக்கிறார். அதுதான் நம்முடைய இருதயம். கல்வாரி அன்பு சரித்திர ரீதியானது. அது விசுவாசத்திற்குரியது. ஆனால், நம்முடைய இருதயத்தில் அவர் விளக்கிக் காட்டுவது அனுபவரீதியானது. அங்கே நாம் அன்பைக் குறித்து மூளையில் அறிகின்றவர்களாக மட்டும் இராமல், இருதயத்தில் உண்மையாக உணர்ந்து ருசிக்கின்றவர்களாக மாறுகின்றோம். இதுவே முக்கியமானது.

அநேகர் இயேசுவின் அன்பைக் குறித்து அதிகமாக அறிந்திருந்தாலும், அது ஒரு சரித்திர ரீதியான அறிவே. அதனால் ஒரு பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதற்கான ஆற்றலைப் பெற முடியாது. பிரச்சினைகள், கஷ்டங்கள் வரும் போது, அந்த அறிவில் நிலைத்திருக்க முடியாது. சரித்திர ரீதியாகக் கல்வாரியில் வெளிப்பட்ட தேவ அன்பை, தேவன் நம்முடைய உள்ளங்களுக்குள் கொண்டு வந்து, அதைக் குறித்து முழுமையாகப் புரிந்து கொள்ளச் செய்கிறார். அங்கே தேவ அன்பை நாம் நம்முடைய ஆத்துமாவில் உணரவும், ருசிக்கவும் முடியும். அங்கே அன்பு உண்மையாக விளக்கப்படுகிறது.

சிந்தனைக்கு...

அன்பு என்பது செயல்களினால் விளக்கப்பட வேண்டிய ஒன்று,
அதனை வார்த்தைகளால் விளக்கிவிட முடியாது.

டிசம்பர் 15

இதோ உங்களோடிருக்கிறார்

யோசுவா 1:1–9

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை.
யோசுவா 1:5

நீங்கள் ஆண்டவராகிய இயேசுவினால் வரும் இரட்சிப்பினை அனுபவப் பூர்வமாகப் பெற்றுக் கொண்டவர்களா? நீங்கள் தேவனுடைய உறவையும், ஐக்கியத்தையும் தினமும் தேடி, அதைக் குறித்த நிச்சயத்தைப் பெறும் அனுபவம் உடையவர்களா? நீங்கள் கர்த்தருடைய வழியில் நடந்து, கர்த்தரைக் கனப்படுத்தும் செயல்பூர்வமான சிந்தையை உடையவர்களா? உங்களால் "ஆம்" என்று உறுதியாகச் சொல்ல முடிகிறதா? சொல்ல முடிந்தால் நீங்கள் பாக்கியவான்கள். இப்போது நிம்மதியாகக் காலை நீட்டி உட்காருங்கள். ஒரு பாதுகாப்புணர்வை இப்போது உணருங்கள். பயம், பீதி, சந்தேகம், அங்கலாய்ப்பு அனைத்திற்கும் விடை கொடுத்து விட்டு, ஒரு நிம்மதிப் பெருமூச்சு விடுங்கள்.

ஏனென்றால், நீங்கள் தேவனுடைய பார்வையில் இருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கை அவருடைய ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் உட்பட்டே இருக்கிறது. நீங்கள் ஒரு தனித் தீவில் அல்ல, தேவ ஐக்கியத்தில் இருக்கிறீர்கள். உங்களுக்கு எதிராக யாரும் எதையும் செய்துவிட முடியாது. எந்தப் பில்லி சூனியமும், எந்த மந்திரமும், எந்த சாபமும், எந்தப் பொறாமையும் கர்த்தருடைய கண்காணிப்பைக் கடந்து வந்து, உங்களுக்கு எதையும் செய்ய முடியாது. யாராவது உங்களுக்குத் தீமை செய்துவிட்டது போலத் தோன்றினா லும், அது தீமையின் தோற்றத்தில் வந்த நன்மை என்பதை விரைவில் உணர்வீர்கள்.

ஒருவேளை ஆகாரைப் போல ஒரு வனாந்திரம் போன்ற ஒரு சூழ்நிலை வந்து விடுமோ, என நினைக்கிறீர்களோ? அப்படி வந்தாலும் அந்த வனாந்திரத்தின் நடுவில், உங்களுக்காகக் கர்த்தர் ஒரு அதிசயமான ஆசீர்வாத நீரூற்றை, ஆயத்த மாக்கி வைத்திருப்பார். ஒரு வேளை, இஸ்ரவேல் மக்கள் காண நேர்ந்த மாரா போன்ற ஒரு கசப்பு நேரிட்டால், என்ன செய்வது என்று சிந்திக்கின்றீர்களோ? அப்படி ஒரு சூழ்நிலை வந்தால், அந்தக் கசப்பை மதுரமாக மாற்றுவதற்கான ஒரு அற்புத மரத்தை தேவன் நிச்சயம் பார்த்து வைத்திருப்பார்.

நாளைய தினம் எப்படியிருக்கும் என்ற ஜோசியம் தேவனுடைய பிள்ளைகளுக்குத் தேவையில்லை. அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகப் பிரசன்னத்தில் நீங்கள் இருந்திட மட்டும் விழிப்பாயிருங்கள். கர்த்தர் உங்களோடிருப்பதில் உறுதியாயிருங்கள். கர்த்தாவே, என் மேய்ப்பரே, இதோ என்னை ஆடாக உம்மிடம் அர்ப்பணிக்கிறேன். என்னை நீர் நடத்திச் செல்லும். ஆசீர்வதியும் என்று சொல்லிவிட்டு, புது நம்பிக்கையோடு வாழ ஆரம்பியுங்கள்.

சிந்தனைக்கு...

இறைவனைக் குறித்த நினைவுகள் உள்ளத்தில் இருந்தால்,
உலகத்தை குறித்தக் கவலைகள் உன்னை வருத்துவதில்லை.

டிசம்பர் 16

மாற்றும் தன்மை

எபேசியர் 3:1–21

உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்...
எபேசியர் 3:16

சர்க்கரை பல்வேறு வடிவங்களில் வருகின்றன. சர்க்கரை தூளாக இருந்தாலும் சரி, கட்டிகளாக பலவிதமான வடிவங்களில் இருந்தாலும் சரி, அவற்றின் முக்கியக் குணம் அது எதனோடு கலக்கப்படுகிறதோ, அதனை இனிக்கச் செய்ய வேண்டும். சர்க்கரையின் வடிவங்கள் முக்கியம் அல்ல. அதனுடைய இனிக்கச் செய்யும் குணம்தான் முக்கியம். கிறிஸ்தவ சபைகள் வேறு வேறு பிரிவுகளில் இருக்கலாம். கிறிஸ்தவக்கோட்பாடுகளை விவரிக்கின்ற விதங்களிலும், வியாக்கியானம் செய்கின்ற விதங்களிலும் வித்தியாசம் இருக்கலாம். ஆனால், கிறிஸ்தவம் என்றால் ஒருவருடைய வாழ்க்கையில், தேவனுக்கு ஏற்றவிதமான மாறுதல்களை ஏற்படுத்தும் தன்மைகளை உடையதாக இருக்க வேண்டும்.

மனமாற்றத்தையும், குணமாற்றத்தையும் சுபாவமாற்றத்தையும் ஏற்படுத்தும் தன்மையைக் கொண்டிராத சபைகள் எவ்வளவு பிரபலமாயிருந்தாலும், எவ்வளவு கவர்ச்சியாயிருந்தாலும், அவை பிரயோஜனமற்றவை. மனித வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தும் வல்லமையும், குணமும் இல்லாத கிறிஸ்தவ உபதேசங்களும், வியாக்கியானங்களும் எவ்வளவு அறிவுப்பூர்வமாயிருந்தாலும் பயனற்றவை. கிறிஸ்து மனிதனை பிரகாசிக்கச் செய்கின்றவர். கிறிஸ்துவின் போதனைகள் மனிதனை மாற்றும் தன்மை உடையவை.

நீங்கள் செல்லுகின்ற சபை எவ்வளவு பழமையானதும், பெரியதும், அழகான ஆராதனை முறைகளைக் கொண்டது என்பது முக்கியமல்ல. அந்த திருச்சபையின் செயல்பாடு உங்களுடைய வாழ்க்கையை கிறிஸ்துவுக்கேற்றதாக எந்த அளவு குணத்திலும், செயலிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதே முக்கியம். உங்கள் பாஸ்டர் எவ்வளவு சிறப்பாக வேத விளக்கம் தருவார்? என்பது முக்கியமல்ல. அவை எந்த அளவிற்கு உங்களை உங்களுக்குள் மாறுவதற்குத் தூண்டுகின்றது என்பதே முக்கியம். நீங்கள் கேட்கும் உபதேசமும், போதனையும் உங்களுக்கு மிகச் சிறப்பாகத் தோன்றலாம்.

ஆனால், நீங்கள் அன்பு, தாழ்மை, பரிசுத்தம், உண்மை, நேர்மை, இரக்கம் ஆகிய பண்புகளை எந்த அளவிற்கு வளர்த்திட அவை உதவியாயிருக்கின்றது என்பதே மிக முக்கியமானவை. வாழ்க்கையில் கிறிஸ்துவின் சாயலுக்கேற்ற விதமாய், நமக்குள் மாற்றங்களை ஏற்படுத்தும் மிகப்பிரதானமான ஆவிக்குரிய தன்மைகள் சபைகளிலும், போதனைகளிலும் உள்ளனவா என்பதே முக்கியம்.

சிந்தனைக்கு...

நீ வாழ்கின்ற வாழ்க்கை இறைவனைப் பிரதிபலிக்காவிடில்,
நீ செய்கின்ற வழிபாடு இறைவனுக்கு ஏற்றதல்ல.

டிசம்பர் 17

அதிகாரம் அவர் கையில்

தானியேல் 6:22

சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு...
தானியேல் 6:16–28

தேவன் தம்மை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்களுக்கு ஆதரவாகவும், அவர்களை எதிரிகளினால் வருகின்ற மோசங்களிலிருந்து விலக்கிக் காக்கவும், ஆயத்தமாயிருக்கிறார் என்பது உண்மை. அதே வேளையில், சில நேரங்களில் அவர் பிறரால் நாம் தாழ்ந்துபோக நேரிடுவதை அனுமதிக்கின்றார். ஒரு குறிப்பிட்ட எல்லை வரைக்கும், நம்மை எதிர்ப்பவர்களின் எண்ணங்கள் நிறைவேறுவதற்கு விட்டுக்கொடுக்கின்றார். தேவனை விசுவாசிக்கின்ற எனக்கு ஏன் தேவன் இங்கே உதவி செய்யாமல் அமைதியாயிருக்கின்றார் என்று அங்கலாய்க்கும் நேரங்கள் வரலாம்.

சிலையை வணங்க மறுத்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோருக்கு எதிராக, ராஜாவின் கோபத்தைத் தூண்டுவதில் பாபிலோன் அரண்மனையில் இருந்த சிலர் வெற்றி பெற்றனர். அவர்களை எரிகின்ற அக்கினிச் சூளையில் விழ வைக்கும் அவர்களின் தீய நோக்கம் வெற்றி பெற்றது. ஆனால், அந்தத் தீயினால் அவர்கள் அழிய வேண்டுமா, வேண்டாமா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் தேவன் கையிலேயே இருந்தது. அக்கினியின் நடுவில் அவர்கள் எந்தச் சேதமும் அடையாமல் நின்று, எதிரிகளை வெட்கம் அடையச் செய்தனர்.

தானியேலை எப்படியாவது சிங்கக் கெபிக்குள் போட வைக்க வேண்டும், என்ற அவனுடைய விரோதிகளின் எண்ணம் ஈடேறவே செய்தது. அங்கே தேவன் அவர்களின் தீய முயற்சிகளுக்கு எதிராக எதையும் செய்யாமல், அவர்கள் விரும்பியதை நிறைவேற்ற அனுமதித்தார். ஆனால், அதே வேளையில் அந்தச் சிங்கங்களின் பசிக்கு இரையாகி அவன் அழிய வேண்டுமா, வேண்டாமா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் தேவன் கையிலேயே இருந்தது. அங்கே தானியேல் எச்சேதமும் அடையாமல் வெளியே வந்து, எல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்தான்.

உங்களை எதிர்க்கும் மனநிலையில் இருப்பவர்கள், சில பிரச்சினைகளில் உங்களை தள்ளிவிட்டிருக்கலாம். சில நஷ்டங்கள் உங்களுக்கு வரும்படி செய்திருக் கலாம். அவர்களின் பொல்லாத மனம் வாஞ்சித்தபடி, சில காரியங்கள் உங்களுக்கு எதிராக நிகழும்படி செய்வதில் இலக்கை எட்டியிருக்கலாம். ஆனால் சோர்ந்து போகாதிருங்கள். இவ்விதமான சூழ்நிலைகள் மூலமாக உங்கள் வாழ்வு பாதிக்கப்பட வேண்டுமா, வேண்டமா என்பதை முடிவு செய்யும் அதிகாரம், தேவன் கையிலேயே உள்ளது. நீங்கள் உண்மையாகத் தேவனுடைய வழிகளில் நடக்கின்றவர் களாயின், இவைகளின் முடிவுகள் உங்களுக்குச் சாதக மாகவே மாறும்.

சிந்தனைக்கு...

தேவனுக்கு முன்பாகக் கோழையைப் போல விழுந்துவிட்டால்
மனிதர்களுக்கு முன்பாக வீரனைப் போல நிற்க வைப்பார்.

டிசம்பர் 18

சோதனை வரும்போது

11 இராஜா 6:8–19

கர்த்தாவே இவன் கண்களைத் திறந்தருளும்.
11 இராஜா 6:17

நாம் சந்திக்க நேரிடும் சோதனைகளிலும், போராட்டங்களிலும் தேவன் நமக்குத் துணையாக நின்று செயல்படுவார். இந்த நம்பிக்கை ஒருவருக்கு எப்படிக் கிடைக்கும்? ஜெபம் செய்வதாலா? இல்லை. பக்தியாக பல காரியங்களைச் செய்வதாலா? இல்லை. வாக்குறுதிகளை வாசித்தறிந்திருப்பதாலா? இல்லை. நான் தேவ சித்தம் செய்கிறேன், நான் தேவ வழியில் நடக்கின்றேன், என்ற விதமாக யார் கூற இயலுமோ, அந்த மனிதனுக்கு மேற்கண்ட நம்பிக்கை இருக்கும். ஏனென்றால், தேவ சித்தம் செய்கின்ற மனிதனும், தேவனுடைய வழிகளில் நடக்கின்ற மனிதனும், தன்னோடு தேவன் இருப்பதை தன்னுடைய ஆவியில் உணர முடியும்.

அத்தகைய மனிதனால் தன்னுடைய சோதனை வேளையில், தேவன் நிச்சயமாகப் போதுமானவராக இருப்பார் என்ற நம்பிக்கையைப் பெற முடியும். தமக்கு நேரிடப்போகும் சோதனைகளின் நடுவில், தம்மோடிருக்கும் சீடர்கள் ஓடிப் போய்விடுவார்கள் என்பது இயேசுவுக்குத் தெரியும். ஆனால் அந்த வேளையிலும், பிதாவாகிய தேவன் தம்மோடிருப்பார் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. (யோவான் 16:32) ஏனென்றால், அவர் தேவசித்தம் செய்வதில் மிகவும் சரியாயிருந்தார். எனவே, நம்பிக்கையும் வலிமையாயிருந்தது.

சீரிய இராணுவம் எலிசா தீர்க்கனுக்கு எதிராக வந்தபோது, அவனுடைய ஊழியக்காரன் ஆடிப்போனான். ஆனால், எலிசாவோ பயமடையவோ, பதட்டமடையவோ இல்லை. ஏனென்றால், தேவ சித்தம் செய்து, தேவ வழியில் நடந்த அவனுக்கு ஒரு நல்ல நம்பிக்கை இருந்தது. தனக்கு ஒரு பெரிய அச்சுறுத்தல் ஏற்படுமாயின், அதனைச் சந்திக்கத் தேவன் ஏதாவது செய்யாதிருக்கமாட்டார் என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது. நாளைய தினம் நாம் எதனைச் சந்திக்க நேரிடும் என்று இன்று கூற இயலாது. ஆனால், இன்று நாம் தேவனுக்குப் பிரியமானதைச் செய்து வாழ்கின்றவர்களாயிருந்தால், நாளைக்கு ஒன்று நேரிட்டால், அதனைச் சந்திக்க எது தேவையோ அதனை தேவன் நிச்சயம் செய்வார்.

சோதனையான ஒரு சூழல் ஏற்பட்டால், அதனைக் கடந்து போக ஒரு வழியை அவர் வைத்திருப்பார். யோர்தான் வந்தபோதும், எரிகோ வந்த போதும், அதனைக் கடப்பதற்குத் தேவன் ஒரு வழியை ஆயத்தமாக வைத்திருந்தார். சோதனைகள் வருகின்ற போது தப்பிச்செல்ல ஒரு வழியும் இருக்கும். எந்தச் சூழ்நிலைக்கு எதனைத் தந்தால் ஒரு சூழ்நிலையைக் கடக்க இயலுமோ, அதனைத் தேவன் தருவார். (1 கொரி 10:13)

சிந்தனைக்கு...

சோதனைகள் உன்னை உனக்குச் சரியாகக் காண்பிக்கும் கண்ணாடி,
கண்டு கொள்ளாமல் போகாதே.

டிசம்பர் 19

அழைப்பும் அவமதிப்பும்

மத்தேயு 22:1–14

நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் எப்படி வந்தாய்?
மத்தேயு 22:12

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறிய ராஜா வீட்டுத் திருமண உவமை, ஒரு புறம் மகிழ்ச்சியான செய்தியைத் தரும்போது, மறுபுறம் துக்கமான ஒரு செய்தியையும் தருகின்றது. அங்கே ராஜாவால் விரும்பி அழைக்கப்பட்ட ஒரு விருந்தாளி விரைவில் விருந்து சாலைக்கு வெளியே தள்ளப்படுகிறான். மகிழ்ச்சியான விருந்திற்காக ஆவலோடு வந்தவன், கடுமையான தண்டனையை அடைகிறான். தயவான சிந்தையோடு, தாராளப் பண்போடும் விருந்திற்கு ஒருவனை அழைத்த ராஜா, அவனை வெளியே தள்ளி வேதனைப்படுத்தியது ஏன்?

அவனிடம் ஒரு குறைவை ராஜா கண்டான். அது சாதாரணமாக எடுத்துக் கொள்ள இயலாத ஒரு குறைவு. அவன் தகுதியற்ற நிலையிலிருந்தும்கூட தகுதி மிக்க ஒரு விருந்திற்கு அழைக்கப்பட்டான். ஆனால், விருந்து வேளையில் தகுதியாகக் காணப்படத்தக்க விதத்தில், ராஜா அளித்த கலியாண வஸ்திரத்தைக் கேட்டு வாங்கி அணிந்திட அஜாக்கிறதையாயிருந்தான். தகுதி பெற வாய்ப்பிருந்தும், அந்தத் தகுதிக்கான உடையை அணியக் கவலையற்றுப்போன அவனை, ராஜாவால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

நம்மில் அநேகர் ஆலயம் வருவதும், ஆராதனை செய்வதும், ஆலய சம்பந்த மான அலுவல்களில் தங்களை ஈடுபடுத்துவதும், ஆசீர்வாதமான விளைவுகளைத் தரும் என்றும் நம்புகின்றனர். ஆனால், இவைகளை ஒரு பரிசுத்தப் பின்னணியோடு நாம் அணுகாவிட்டால், அதனால் உண்மையில் நமக்கு ஆசீர்வாதம் அல்ல. தேவ கோபமே விளைவாக வரும். ஏனென்றால், தேவனுக்காக நாம் என்ன செய்கிறோம் என்பதைவிட, தேவ சமுகத்துக்குத் தேவையான ஆவிக்குரிய தகுதிகளோடு செய்கின்றோமா என்பதே முக்கியம்.

ஆம், தேவன் பாவத்தால் பழுதுபட்டு தேவாசீர்வாதங்களுக்குத் தகுதியற்றுப் போன நம்மையும் நேசித்து, அவருடைய அன்பு, இரக்கம், தயவு, சமாதானம், சந்தோஷம், நித்திய வாழ்வின் நம்பிக்கை ஆகிய தெய்வீக விருந்தின் மகிழ்ச்சியினை அனுபவிக்க அழைக்கின்றார். ஆனால், அவைகளை நாம் அனுபவிக்க வேண்டுமானால், தேவன் நம்மைத் தகுதிப்படுத்தும் விதமாகத் தருகின்ற பரிசுத்தம், நீதி ஆகிய வஸ்திரங்களை அணிந்திட நாம் கவனமாயிருக்கவேண்டும். தேவனுடைய நன்மைகளை மிகுதியாக அனுபவிக்கும்படி அழைக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள், அவருக்கு முன் பரிசுத்தமாயிருக்க விழித்திராததால், அழிவையே விளைவாகக் கண்டார்கள்.

சிந்தனைக்கு...

உலகத்தைவிட்டு நீங்கள் ஓடாதீர்கள்,
உங்களுக்குள்ளிருந்து உலகத்தை ஓட்டுங்கள்.

டிசம்பர் 20

மறைந்திருக்கும் சுயம்

மாற்கு 4:1–20

கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்...
மாற்கு 4:17

சிலர் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கின்றவர்கள் மட்டுமல்ல. அந்த வார்த்தைகள் அவர்களிடம் சில நல்ல விளைவுகளை ஏற்படுத்துகிறது. தாங்கள் கேட்ட நல்ல தேவ வார்த்தைகளின்படி சில நல்ல குணங்களையும், சில நல்ல ஆவிக்குரிய பண்புகளையும் வெளிப்படுத்துவார்கள். ஆயினும், அவை போதுமான அளவு இருப்பதில்லை. அவர்களின் ஆவிக்குரிய அனுபவம் மேலோட்டமானது. மேல் பகுதியில் மட்டும் நல்லவைகள் இருக்கும். சற்றுத் தோண்ட ஆரம்பித்தால் ஏமாற்றம் காத்திருக்கும். வார்த்தைகளாகிய விதைகள் முளைத்த போதிலும், அதனுடைய வேர்கள் ஆழமாகச் செல்ல இயலாதபடி, பாறைகள் அடிப்பகுதியில் மறைந்திருக்கும்.

இவர்கள் தங்களை அடிப்பகுதியில் எந்த மாற்றத்திற்கும் அனுமதியாமல், ஒரு குறிப்பிட்ட குறைந்த எல்லையைத் தங்களின் ஆவிக்குரிய வாழ்விற்குக் குறித்திருக்கிறார்கள். அவர்கள் அன்பாக, தாழ்மையாக, தயவாக, பொறுமையாக, உண்மையாக இருப்பதை நீங்கள் காண முடியும். ஆனால் சற்று ஆழமாகப் பார்க்க ஆரம்பித்தால் ஏமாற்றம் வரும். அவர்களின் அடித்தள இருதய நிலைமை வெளிப்படும் தருணங்களில், நீங்கள் அதிர்ச்சி அடைவீர்கள். ஏனென்றால், அவர்களின் ஜென்ம இயல்பு என்னும் பாறை சில பக்தி சாயலான காரியங்களால் மறைக்கப் பட்டுள்ளதேயன்றி, மாற்றப்படவில்லை.

தங்கள் ஜென்ம சுபாவ பாவ இயற்கையின் அடையாளத்தை அவர்கள் இன்னும் அழிக்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்த விதமாக நீங்கள் செயல்பட இயலாமல் போகும் போது அவர்கள் சுயத்தின் வடிவம் வெளியே தெரியும். அவர்களின் கருத்தை நீங்கள் ஏற்காத போதும், அவர்கள் வார்த்தையை நீங்கள் கேட்காத போதும், அவர்களின் உணர்வுகளை நீங்கள் சீண்டும் போதும், அங்கே அந்த சுயம் என்ற பாறை வெளியே தெரியும்.

பாறையின் மேல் தேங்கி நிற்கும் மண்ணில் வளரும் செடிபோல, அவர்களின் ஆவிக்குரிய நிலமை இருக்கும். ஆகையால்தான் இயேசு, அவரைப் பின்பற்றுகின்ற எவரும் சுயத்தை வெறுக்க வேண்டும் என்றார். சிலருடைய வாழ்க்கையில் தேவ வார்த்தைகளும், வசனங்களும் அதிகமாக ஏற்கப்பட்டுள்ளன. ஆயினும், அந்த நல்ல வார்த்தைகளாகிய விதைகள் முளைக்கும் போது, வேர்கள் ஆழமாகச் செல்ல வழியில்லாமல், சுயம் பாறையாகத் தடுப்பதால் பலனின்றிப் போகிறது.

சிந்தனைக்கு...

இறைவனுக்குக் கீழ்படிய நீ கற்றுக் கொள். பாவத்தைக் கீழ்ப்படுத்தும் பெலத்தை அதினால் பெற்றுக் கொள்.

டிசம்பர் 21

நினைக்கப்படுதல்

11 தீமோத்தேயு 1:1–14

உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை...

11 தீமோத்தேயு 1:4

ஒரு பிரபல சினிமா நடிகர், ஒரு சிறந்த பாடகர், ஒரு பெரிய அரசியல்வாதி, ஒரு சாதனைமிக்க விளையாட்டு வீரர், ஒரு பெரிய செல்வந்தர் ஆகியோர் அநேகரால் நினைக்கப்படுவார்கள். ஆனால், இவர்களைக் குறித்த நினைவுகளால் ஒருவருக்கு என்ன கிடைக்கிறது? என்பதே முக்கியம். ஒருவருடைய பிரபலத்தின் விளைவாக அவர் பலரால் நினைக்கப்படுவது அல்ல பெரிய விஷயம். அவ்விதம் நினைக்கப்படும் போது, அந்த நினைவுகள் இன்னொருவருக்கு எப்படிப்பட்ட நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்பதே முக்கியம். அவற்றால் எதனைக் கற்றுக் கொள்ளமுடியும், எதனை ஆக்கப்பூர்வமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே முக்கியமானது.

ஒருவரைக் குறித்த நினைவுகள் இன்னொரு இருதயத்திற்கு நல்லதோர் வாழ்க்கைக்கான தூண்டுகோலாகவும், நல்லதோர் செயல்பாட்டிற்கான உந்து விசையுமாயிருக்க வேண்டும். தீமோத்தேயுவை நினைத்த போது பவுலின் நினைவுக்கு வந்தது வெறும் தோற்றமோ, திறமையான செயல்பாடுகளோ அல்ல. அவனுடைய மாயமற்ற விசுவாசம்தான் நினைவிற்கு வந்தது. பிலிப்பியருக்கு எழுதும் போது அவனுடைய உத்தமக் குணத்தைத்தான் அவர்களுக்கு அப்போஸ்தலன் நினைவூட்டினான்.

இந்நாட்களில் பிரபலமாயிருக்கும் சில கிறிஸ்தவப் பாஸ்டர்களையோ, நற்செய்தியாளர்களையோ நினைக்க நேர்ந்தால் நலமானதொன்றையும் நினைக்க வாய்ப்புக் கிடைப்பதில்லை. அவர்களின் பந்தா தோற்றம், மாய்மாலப் பேச்சுகள், தந்திரமான செயல்பாடுகள், திறமைகள் ஆகியவைதான் நினைவிற்கு வரும். அவர்களிடம் இயேசு கூறியது போல, என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று கூறத்தக்கதாக இராது.

ஒரு மனிதன் பலர் நினைக்கத்தக்க விதமாக தன்னைப் பிரபலமாக்கிக் கொள்ள இயலும். ஆனால் நல்ல குணங்கள், நல்ல பண்புகள், நல்ல முன்மாதிரி நடத்தைகள், நல்ல விசுவாச நிலைப்பாடுகள், நல்ல அன்பு, தாழ்மை ஆகிய வற்றிற்காக அவர் நினைக்கப்பட வாய்ப்பில்லையேல் அவரைக் குறித்த நினைவு பயனற்றது. அவரால் யாருக்கும் உண்மையான பலன்கள் இல்லை. அழகான தோற்றங்களைக் குறித்த நினைவு ஒருவரை விசேஷமாக எண்ண வைக்கும். ஆனால் அழகான ஒரு வாழ்க்கை முறையைக் குறித்த நினைவுகள் அவ் விதமானதோர் அழகான வாழ்க்கையைப் பலர் பின்பற்றத் தூண்டுகோல்களாகும்.

சிந்தனைக்கு...

இன்னொருவரை மாதிரியாகக் கொள்வதை விட
இன்னொருவருக்கு மாதிரியாயிருக்க முயற்சி செய்.

டிசம்பர் 22

காத்துக் கொள்ளுங்கள்

பிலிப்பியர் 4:1–9

அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.
பிலிப்பியர் 4:8

நீங்கள் ஒரு மணிநேரம் பரிசுத்தம் சம்பந்தமாக நல்ல தேவ வார்த்தைகளைக் கேட்டுவிட்டு, அடுத்து 10 நிமிடம் டி.வி.யில் ஒரு சினிமாவோ, சீரியலோ பார்க்க நேரிட்டால், ஒரு மணி நேரம் பரிசுத்த வார்த்தைகள் ஏற்படுத்திய உணர்வுகள் யாவும் ஓடிப்போகும். ஆனால், அரை மணிநேரம் டி.வி.யில் சினிமா பார்த்துவிட்டு அல்லது பேஸ்புக் அக்கவுண்டை திறந்து நேரத்தை செலவழித்து விட்டு, தேவ வார்த்தையைக் கேட்கச் செல்லுங்கள். அடுத்து சில மணி நேரங்கள் நீங்கள் டி.வி.யில் பார்த்த சினிமாவும், பேஸ்புக் சமாச்சாரங்களும்தான் உங்களைச் சுற்றிக் கொண்டிருக்கும்.

டி.வி.பார்த்து முடித்துவிட்டாலும், பேஸ்புக் பார்த்து முடித்துவிட்டாலும், இண்டர்நெட் தேடல்களை முடித்துவிட்டாலும், அவை ஏற்படுத்துகின்ற எதிர்மறையான தாக்கங்களிலிருந்து வெளியேற நீண்ட நேரங்கள் ஆகும். ஆம். நல்லவை ஏற்படுத்திய நல்ல உணர்வுகளையும், உந்துதல்களையும் நாம் விரைவில் இழந்து விடமுடியும். ஆனால் தவறானவைகள் ஏற்படுத்துகின்ற தவறான உணர்வுகளை வெளியே தள்ள மிகுதியான நேரங்கள் தேவைப்படும்.

எந்த ஒரு ஏற்பாடும் செய்யாமலே நிலத்தில் ஆகாத செடிகளும், களைகளும் தானாக அதிவேகமாக முளைத்து வருகின்றன. ஆனால் எவ்வளவோ சிரமப்பட்டாலும் நல்ல விதைகளை விதைத்து பலன்களைப் பெறுவது கடினமாயிருக்கின்றது. டிவி பார்த்துவிட்டு, இண்டர்நெட் பார்த்துவிட்டு, வாட்ஸ் ஆப் பார்த்து விட்டு, ஜெபநேரத்திற்கோ, வேத வாசிப்பு நேரத்திற்கோ, சென்றால் அங்கே மனநிலை நல்ல விஷயங்களுக்குள் ஆழமாகச் செல்லும் உணர்வும், தெளிவும் உடைய தாகயிராது.

எனவே, ஆவிக்குரிய உணர்வுகளை இழக்காமலிருக்க, போதுமான அளவிற்கு இன்றைய நவீன தகவல் தொடர்பு சாதனங்களின் தாக்கங்களுக்கு விலகியிருக்க எச்சரிக்கையாயிருக்க வேண்டும். நல்ல விதைகள் முளைத்து வளரும் முன்பே, ஆகாயத்துப் பறவைகள் அவற்றை அள்ளிக் கொண்டு செல்ல வருவது போலவே, இன்றைய நவீனத் தகவல் தொடர்பு சாதனங்கள் தேவ சிந்தனைகளையும், உணர்வுகளையும் கொள்ளையடித்துச் சென்று விடும். மனித இருதயம் எளிதில் கறைபிடிக்கும் தன்மையுடையதாகவும், எளிதில் கறை அகலாத தன்மை உடையவையாகவும் இருப்பதால், உயர்ந்த விஷயங்களோடு இருதயத்தை இணைத்து வைக்க அதிகக் கவனமாயிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

சுதந்திரம் என்ற பெயரில் மனிதன் வரம்புகளைக் கடக்கும் போது,
மறுபடியும் அவன் அடிமையாகிவிடுகிறான்.

டிசம்பர் 23

ஜெபமும் உதவியும்

11 கொரிந்தியர் 9:1–15

வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான்.
11 கொரிந்தியர் 9:9

குறிப்பிட்ட ஒரு குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையில் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டது. அதற்கு அடிப்படைக் காரணம் கணவனுக்கு நல்லவேலை இல்லை. போதுமான பொருளாதாரத்தை ஈட்ட இயலாத ஒரு பலவீனம்தான், கணவன் மனைவிக்கிடையில் பிரச்சினைக்கு வழி வகுத்தது. அந்தக் குடும்பத்தினர் பங்கு பெறும் சபையின் பாஸ்டர், ஜெபக்குழுத் தலைவர்களையெல்லாம் கூப்பிட்டு, அந்தக் குடும்பத்தின் சமாதானத்திற்காக ஜெபிக்கச் சொன்னார். ஆனால், அந்தப் பாஸ்டர் கொஞ்சம் அக்கறை எடுத்தால், தன்னுடைய சபையில் உள்ள வலிமை யான சிலர் மூலமாக, அந்தக் குடும்பத்துத் தலைவருக்கு நல்ல ஒரு வேலையைப் பெற்றுக் கொடுக்க இயலும்.

மனிதனால் கூடாதவைகளுக்காக நாம் தேவனிடம் மன்றாடி ஜெபிக்க வேண்டும். அதே வேளையில், சில விஷயங்கள் நம்மால் எளிதாகக் கூடும். ஒரு லட்சம் ரூபாய் நம்முடைய பையில் இருக்கும் போது, ஆயிரம் ரூபாய் தேவை யுடன் வந்திருக்கிற ஒருவருக்கு, அதைக் கொடுப்பது நம்மால் கூடாத காரியமல்ல. ஆனால், அதற்காகத் தேவனிடமிருந்து அற்புதத்தை எதிர்பார்த்து காத்திருப்பது சரியானதல்ல. பிறருக்காக நாம் ஜெபிக்கும் போது தேவன் குறுக்கிட்டு, இந்த சிறு விஷயத்தை நீயே அவருக்குச் செய்யலாமே என்று சொன்னால் எப்படியிருக்கும்!

சில நேரங்களில் நாம் பாரத்தோடு யாருக்காகச் ஜெபிக்கின்றோமோ, அவருக்குத் தேவையான ஒரு உதவியை தேவன் நம் மூலமாகவும் வழங்க விரும் பலாம். எப்பொழுதும் அவர் தேவ தூதர்களைத்தான் அனுப்புவார் என்று கூற இயலாது. மற்றவர்களின் கஷ்டத்தை நன்கு புரிந்து கொள்ள இயன்ற நம்மையே, அவர் தூதனாகப் பயன்படுத்த முடியும்.

ஏழை ஒருவன் கிறிஸ்தவப் பக்தியாளர் ஒருவரிடம், ஒரு சிறு தொகையை கடனாகக் கேட்டார். நல்ல வசதியுள்ள அவர் காகங்களைக் கொண்டு எலியாவைப் போஷித்த தேவன் உன்னையும் போஷிப்பார் என்று ஆறுதல் கூறினானாம். அதற்கு அந்த ஏழை, தேவன் உங்களைப் போன்றவர்களைக் கொண்டு ஏன் எதையும் செய்ய முடியவில்லை. இன்னும் அவர் காகத்தைதான் அனுப்ப வேண்டி யிருக்கிறதோ என்றாராம். இருப்பது அனைத்தையும் பிறருக்கு உதவியாக கொடுக்க முடியாது. ஆனால், நம்முடைய திராணிக்கு ஏற்றவிதமாக ஒரு சிறு பகுதியாவது செய்யலாமே.

சிந்தனைக்கு...

உன்னுடைய நிறைவு இன்னொருவரின் குறைவுக்கு
உதவாவிட்டால் உன்னுடைய நிறைவால் நீ நிறைவு காணமாட்டாய்.

டிசம்பர் 24

பரிசுத்தக் கொண்டாட்டம்

சங்கீதம் 97:1–12

பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்.
சங்கீதம் 97:12

பெரும்பாலும் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பண்டிகைக் கொண்டாட்டம் என்றால் என்னவென்பது தெரியும். ஆனால், பரிசுத்தக் கொண்டாட்டம் என்றால் என்ன என்பது வெகு சிலருக்கே தெரியும். பண்டிகைக் கொண்டாட்டம் என்பது உணவு, உடை, பாடல், நடனம் பரிசுத்தப் பொழுதுபோக்குகள், ஆரவாரம் போன்ற வற்றோடு சம்பந்தப்பட்டவை. இவை ஒரு சில தினங்கள் இருந்துவிட்டுப் போய் விடும். இவ்வித கொண்டாட்டத்திற்கும் சந்தோஷத்திற்கும் ஒருவருக்கு எந்த விதமான ஆன்மிக அனுபவங்களும் தேவையில்லை. கொண்டாடி மகிழும் ஆர்வம் இருந்தால் போதும்.

பரிசுத்தக் கொண்டாட்டம் என்பது, ஒரு மனிதனுக்குள் கர்த்தர் செயல்படு வதின் விளைவாக, அவனுக்குள்ளிருந்து சந்தோஷம் நீரூற்றுகள் போல எழும்பு வதாகும். இந்த கொண்டாட்டத்தின் பின்னணியில் இருப்பது தேவனுடைய ஆளுகையே. இந்த கொண்டாட்டத்திற்கு குறிப்பிட்ட நேரங்களோ, சூழ்நிலைகளோ தேவையில்லை. கர்த்தருக்குரிய காரியங்களோடு ஒரு மனிதன் தன்னையும் தன்னுடைய ஆத்துமாவையும் இணைத்துக்கொள்ளும் போது, இந்த பரிசுத்தக் கொண்டாட்டத்தை அவன் உணருவான்.

ஏன் இதற்குப் பரிசுத்தக் கொண்டாட்டம் என்று பேர் வைக்கப்பட்டது என்றால், இது ஒரு பரிசுத்தவானுடைய இருதயத்தில் மட்டுமே அனுபவிக்க இயன்ற கொண் டாட்டம். இந்த கொண்டாட்டத்தில் பரிசுத்தத்தோடு தொடர்பில்லாத எதுவும் இடம் பெற முடியாது. கர்த்தருடைய வார்த்தைகளைத் தனக்குள் பெறுகிறவன், பரிசுத்த கொண் டாட்டத்தை உணருவான். தேவனுடைய ஐக்கியத்தை தனக்குள் அடை யாளம் காண்கிறவன், இந்தக் கொண்டாட்டத்தை அனுபவிப்பான். தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதற்கு தூண்டப்பட்டு, அதனைச் செய்கிறவன் தனக்குள் ஒரு விசேஷ கொண்டாட்டம் நடப்பதை அறிவான்.

கர்த்தர் நம்முடைய செயல்களின் பின்னால் இருப்பதை உணரும் போதும், கர்த்தர் தம்மை, இதோ உன் நடுவில் இருக்கிறேன் என்று காண்பிக்கும் போதும் இந்த கொண்டாட்டம் உண்டு. கர்த்தருடைய வழியில் கர்த்தருக்கேற்ற தரி சனத்தோடு எதை செய்தாலும், அங்கே பரிசுத்தக் கொண்டாட்டம் உண்டு. இந்த கொண் டாட்டத்தின் விளைவு இன்னும் இன்னும் பரிசுத்த வாஞ்சை. இந்த கொண்டாட்டத்தின் விளைவு இன்னும் இன்னும் சுபாவங்கள் பிரகாசித்தல்.

சிந்தனைக்கு...

தனக்குள் இயேசுவைக் காணாதவனின் வாழ்வில்,
பிறர் இயேசுவின் மகிமையைக் காண முடியாது.

டிசம்பர் 25

ஏன் கொண்டாடுகிறோம்?

லூக்கா 2:1–20

எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை ...
லூக்கா 2:10

கிறிஸ்தவர் ஒருவர் கிறிஸ்துமஸ் தினத்தன்று நிறையப் பேருக்கு ஏராளம் பரிசுகளைக் கொடுப்பார். அநேகரை அழைத்து சிறப்பான விருந்து கொடுப்பார். ஒரு நாள் பிறமத நண்பர் ஒருவர் அவரிடம் நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதற்காக இப்படியெல்லாம் செய்கின்றீர்களா அல்லது வேறெது காரணம் உள்ளதா என்று கேட்டார். அதற்கு அவர், இது எங்க தாத்தா காலத்திலிருந்தே கிறிஸ்துமஸ் தோறும் செய்கிறோம் என்றாராம்.

ஆம், இவர் பலருக்குப் பரிசளிப்பதற்கு இதுவரை எது காரணம் என்பதை அறியவில்லை. இவர் பலருக்கு விருந்து வைத்து சந்தோஷப்படுத்துவதற்கான உண்மைக் காரணத்தை இதுவரை கண்டுபிடிக்கவில்லை. பல கிறிஸ்தவர்கள் தாங்கள் கொண்டாடும் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கான உண்மை காரணத்தை அறியவில்லை. பல கிறிஸ்தவர்கள் தாங்கள் ஏன் கிறிஸ்துமஸ் வாழ்த்துத் தெரிவிக் கின்றோம்? ஏன் கிறிஸ்துமஸ் கேக் கொடுக்கின்றோம்? என்பதற்கான காரணங் களை அறியவில்லை. அவர்களுக்குத் தெரிந்த ஒரே ஒரு காரணம், கிறிஸ்துமஸ் கிறிஸ்தவர்கள் கொண்டாடும் பண்டிகை என்பது மட்டுமே.

ஆனால், தேவன் மனுக்குலத்திற்குக் கொடுத்த ஒரு மாபெரும் பரிசைக் குறித்துப் பேசுவதே கிறிஸ்து பிறப்புப் பண்டிகை. தேவன் நம்மை பாவத்திலிருந்து விடுவித்து பரிசுத்தமான தேவனுடைய பிள்ளைகளாக மாற்றுவதற்காக தந்த தெய்வீக பரிசே இயேசு கிறிஸ்து. இந்த பரிசை தங்களுக்கென்று பெற்றுக்கொண்ட வர்கள் தேவ சாயல் உடைய தேவ பிள்ளைகளாக மாறுவார்கள். அவர்கள் தேவனை பிரதிபலிக்கும் சாட்சியாக மாறுவார்கள். அவர்கள் தேவ சமாதானத்தையும் தேவ சந்தோஷத்தையும் நித்திய வாழ்வையும் பெறுவார்கள். இவ்விதமாக இவற்றை ஒருவர் பெற்றுக் கொண்டதினால் சந்தோஷமடைந்து பண்டிகை கொண்டாடினால் அவர்தான் காரணமறிந்து கிறிஸ்துமஸ் கொண்டாடுகிறார்.

இயேசு கிறிஸ்துவாகிய நித்திய மகிமை நிறைந்த பரிசைப் பெற்றுக் கொண் டதின் விளைவான சந்தோஷம் முக்கியமானது. அந்த சந்தோஷத்தின் பிரதிபலிப் பாக கிறிஸ்துமஸ் கொண்டாடினால் அது அர்த்தமுள்ளது. அந்த சந்தோஷத் தினால் பிறருக்கு பரிசு கொடுத்தும் விருந்து வைத்தும் கொண்டாடினால், அது அர்த்த முள்ளது. அநேகர் தேவன் தந்த பரிசாக கிறிஸ்துமஸ் பண்டிகையை எண்ணுகின் றார்களேயன்றி கிறிஸ்துவாகிய இரட்சகரை பரிசாகப் பெற்றுப் பயன்படுத்தவில்லை.

சிந்தனைக்கு...

உயர்ந்த கருத்துக்களை மனிதன் காதலிக்கிறான்,
கரம் பிடிக்கச் சொன்னாலோ நைசாக நழுவி விடுகிறான்.

டிசம்பர் 26

நன்மைக்குத் தீமை

1 பேதுரு 3:1–17

பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மை செய்து...
1 பேதுரு 3:11

உண்மையான நன்மை என்பது ஒரு நல்ல சுமுகமான சூழலில் செய்யப்படுவதல்ல. எதிர்மாறான நல்லதல்லாத சூழல்களிலும், நாம் செய்யும் நன்மைதான் உண்மையான நன்மை. எரேமியா தீர்க்கனும், எலியா தீர்க்கனும் வல்லவர்களாக வாழ்ந்து கொண்டு, நல்லதைச் செய்தார்கள். ஆனால், அவர் களின் வாழ்க்கைக் களம் சுமுகமாயிருக்கவில்லை. அவர்கள் பலவிதமான எதிர்ப்பு களையும், ஏளனங்களையும், தொல்லைகளையும், அநீதிகளையும் தாங்கிக் கொண்டுதான் அவ்விதம் செயல்பட்டார்கள். தீமைகளைச் சகித்துக்கொண்டு தான் நல்லவைகளை விதைக்க முடிந்தது.

சில நேரங்களில் நல்லதைப் பேசுகின்ற, நல்லதைச் செய்கின்ற நமக்கு, ஏன் நல்லதல்லாததான விளைவுகள் ஏற்படுகின்றது, என்று நாம் புலம்ப நேரிடு கின்றது. உண்மையான நல்லதைச் செய்கின்றோம் என்பதற்கு, நல்லதல்லாத சூழல்களும் ஒரு நல்ல அடையாளமாயிருக்கின்றன. கெட்டவன் கூட தனக்கு நல்லது செய்தால், பதிலாக நன்மை செய்ய முடியும். ஆனால் நல்லவர்கள் மட்டுமே கெட்டதை ஏற்றுக் கொண்டு, நல்லதைச் செய்யும் ஆற்றல் உடையவராயிருப்பார்கள்.

இயேசு நல்லவராயிருந்ததால் சிலுவையில் தொங்குகின்ற வேளையிலும், பகைவர்களின் நன்மைக்காக விண்ணப்பித்தார். சில நேரங்களில் நாம் செய்யும் நல்லவைகள் மற்றவர்களால் பாராட்டப்படாமல் கடுமையாக விமர்சிக்கப்படவும், எதிர்க்கப்படவும் செய்கின்றன. இதனுடைய காரணம் அவர்களால் நல்லதை அடை யாளம் காண முடியவில்லை என்பதாகும். சிறு பிள்ளைகளைக் குளிப்பாட்டும் போதும், மருந்து சாப்பிட வைக்கும் போதும், படிக்க வைக்கும் போதும் பெற்றோர் படாதபாடு படுகின்றனர். பிள்ளைகள் அவற்றை விரும்பாமல் எதிர்த்து நிற்கின்றன. ஆயினும், பெற்றோர் அவற்றிற்காக வருந்தாமல், தொடர்ந்து நன்மை செய்கின்றனர்.

நல்லதை நல்லவர்களல்லாதவர்கள் எதிர்ப்பது இயல்பான விஷயம். அதற்காக நாம் நல்லவர்களாயிருப்பதும், நன்மைகளைச் செய்வதும் அவசிய மில்லை என்று எண்ணினால், அது தீமைக்கு அடிபணிவதற்கு அடையாளமாகும். நல்லதைப் பிறர் எப்படிப் பார்க்கின்றார்கள் என்பது முக்கியமல்ல. நாம் அவற்றை எப்படிப் பார்க்கின்றோம் என்பதே முக்கியமானது. நல்லவர்களாயிருப்பதும், நல்ல வைகளைச் செய்வதும் தேவனைப் பிரியப்படுத்தும் விஷயங்கள். அவற்றை விட்டுவிடாதிருப்போம்.

சிந்தனைக்கு...

மனிதர்களிடம் நல்ல பெயர் வாங்க விரும்பு. ஆயினும் அது நிலைத்திட முதலில் இறைவனிடம் நல்ல பெயர் வாங்கு.

டிசம்பர் 27

சோதனைக் காற்றுகள்

மத்தேயு 8:23-27

கடலில் பெருங்காற்று உண்டாயிற்று....

மத்தேயு 8:24

சிலர் தங்களின் வாழ்க்கையில் துன்பங்கள் வரும்போது, அவை ஏதோ தாவீதுக்கும், யோசேப்புக்கும் வந்தது போன்ற சோதனைகள் என எண்ணி விடுகின்றனர். ஆனால், இவ்விதக் கணிப்புகள் எல்லா வேளைகளிலும் சரியாக இருப்பதில்லை. யோனா பயணம் செய்த கப்பல் பெருங்காற்றினால் தாக்கப்பட்டு, மூழ்கிப் போகுமோ என அஞ்சுகின்ற நிலை ஏற்பட்டது. இந்த காற்று யோனாவின் கீழ்ப்படியாமையின் விளைவாகவும், தேவசித்தம் ஏற்காமல், சுய சித்தம் செய்யத் துணிந்ததின் விளை வாகவும் ஏற்பட்டது.

அதே வேளையில் இயேசுவும், அவருடைய சீடர்களும் சென்ற படகு காற்று களாலும், பேரலைகளாலும் தாக்கப்பட்டு கவிழ்ந்துவிடுமோ என அஞ்சத்தக்க நிலைமை ஏற்பட்டது. ஆனால் இந்த காற்றும், கடற்கொந்தளிப்பும் யோனாவின் கப்பலுக்கு எதிராக வந்தது போல வரவில்லை. இது இயேசுவின் சீடர்களின் விசுவாசம் வலுப்படுவதற்கும், அவர்கள் தங்களோடிருக்கும் இயேசுவின் வல்ல மையைச் சரியாய் அறிந்து வைப்பதற்காகவும், இயேசுவோடு பயணம் செய்தால் எந்தப்புயல் வந்தாலும், அவரால் அடக்கி அமைதி தரமுடியும் என்பதைத் தெரிந்து கெள்வதற்கும், ஏதுவாகவே வந்தது.

எனவே, எல்லா எதிர்காற்றுகளுக்கும், வாழ்க்கைத் துன்பங்களுக்கும் ஒரே விதமான அர்த்தத்தைக் கொடுக்கக்கூடாது. யோபுவின் துன்பங்களுக்கு அவனுடைய நண்பர்கள் அவனுடைய தவறுகளே காரணம் என்றனர். ஆனால், அவர்களின் நிதானிப்பு தவறாகயிருந்தது. ஆம், சில சோதனைக் காற்றுகள், நம்முடைய வாழ்க்கைப் பயணம் சரியான தேவ சித்தத்தின் பாதையில் செல்லுகிறதா, என்பதைக் கண்டு உணர்வதற்கு ஏதுவாக வருகிறது. அங்கே நாம் நம்மைச் சீர்செய்து கொள்ள முன்வரவேண்டும்.

சில துன்பக் காற்றுகள், நாம் விசுவாச நிலைகளில் கொண்டிருக்கின்ற பலவீனங்களை அறிந் துணர்வதற்கு ஏதுவாக வருகிறது. அங்கே நாம் பலப் படுவதற்குப் போதிய ஆயத் தங்களைச் செய்ய வேண்டும். சில துன்பங்கள் நம்மோடு இயேசுவும், இயேசுவோடு நாமும் இணைந்திருக்கும் போதும் வரும். அது நம் மோடிருக்கும் கர்த்தர் எத்தகைய வாழ்க்கைப் புயல்களுக்கு நடுவிலும் நம்மை அழிந்து போகவிடாமல், நம்மைக் காத்து கரை சேர்க்க வல்லவர், என்பதை நாம் உறுதிபடுத்திக் கொள்வதற்கு வசதியாகவே வருகின்றது.

சிந்தனைக்கு...

போராட்டங்களை அதிகமாகச் சந்திப்பவனே, பிறருடைய வெற்றிகளுக்கு அதிகத் தகவல்களைத் தருகிறான்.

டிசம்பர் 28

சரியான பார்வை

லூக்கா 16:1–31

மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது....
லூக்கா 16:15

மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள்? அவர்கள் நம்முடைய செயல்களை எப்படி எப்படிப் பார்க்கின்றார்கள்? என்றெல்லாம் நாம் யோசித்துக் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் விரும்பியபடி நம்மைக் குறித்துச் சிந்திக்கலாம். அவர்களுடைய மனதின் தன்மைக்கேற்ப நம்முடைய செயல்களை அவர்கள் பார்க்கலாம். அவர்கள் விரும்பியபடி பார்க்கவும், சிந்திக் கவும், அளவிடவும் அவர்களுக்கு உரிமை உள்ளது. இப்படித்தான் என்னைக் குறித்து நினைக்க வேண்டும். இப்படித்தான் என்னுடைய செயல்களை அளவிட வேண்டும் என்று யாரையும் நாம் கட்டாயப்படுத்த முடியாது.

ஏனென்றால், மனிதர்கள் பலவிதம். அவர்களின் மனநிலைகள் பலவிதம். அவர்களின் மனநிலையும், கருத்துக்களும், அபிப்பிராயங்களும் நேரத்திற்கு நேரம், இடத்திற்கு இடம்மாறிக்கொண்டேயிருக்கும். எனவே யாருடைய சிந்தைக் கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும் நம்மை உருவாக்க முடியாது. தேவன் ஒருவரே எதையும் சரியாக, எப்போதும் பார்க்க முடியும். அவர் ஒருவரே எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் ஒன்றைச் சரியாகவும், நியாயமாகவும் பார்க்க முடியும்.

எனவே, என்னைப் பற்றித் தேவன் என்ன நினைப்பார்? என் செயல்களை அவர் எப்படி அளவிடுவார் என்று சிந்திப்பதே அவசியம். தேவனுடைய பார்வையில் சரியாயிருக்கும் என்று நம்பப்படுகிறவைகளை துணிந்து செய்ய வேண்டும். தேவனுடைய கண்களுக்கு முன் செவ்வையாய் இருக்குமாயின், அவற்றை அவர்கள் எப்படி விமர்சித்தாலும், விடாமல் தொடர வேண்டும். உலகமெல்லாம் சரி என்று சொன்னாலும், கர்த்தர் அப்படிச் சொல்லாவிட்டால் அது தவறானதே.

நம்முடைய நல்ல கருத்தை அவர்களின் அப்போதைய மனநிலைக்கேற்ப விரும்பவோ, வெறுக்கவோ செய்யலாம். ஆனால், நாம் அவற்றை வலிமையாக விரும்ப வேண்டும். நம்முடைய நல்ல செயல்களை மற்றவர்கள் நேசிக்கவோ, அலட்சியம் செய்யவோ கூடும். ஆனால் அவற்றை உறுதியாக நேசிக்க வேண்டும். ஏனென்றால், தேவனுடைய பார்வையில் எது சரி, எது நல்லது என்று பார்த்தவை களை நாம்தான் எல்லோரைவிட அதிகமாக விரும்பவும், விடாப்பிடியாகச் சரி என்று சாதிக் கவும் வேண்டும். ஆனால், ஒரு முறைக்கு பலமுறை, எதையும் தேவ சமுகத்தில் இது சரிதானா என்று பார்த்து, சிந்தித்து, நிதானிக்கும் பழக்கம் நமக்கு வேண்டும்.

சிந்தனைக்கு...

தலையாக இருக்கிறவர்களையே ஜனங்கள் மதிக்கிறார்கள்.
தாழ்மையாக இருப்பவர்களையே இறைவன் மதிக்கிறார்.

டிசம்பர் 29

வெற்றியும் தோல்வியும்

சங்கீதம் 119:49-72

நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது.
சங்கீதம் 119:71

சிலருடைய தோல்விகள் அவர்களின் வாழ்க்கையை அழகற்றதாக்க வில்லை. சிலருடைய வெற்றிகள் அவர்களின் வாழ்க்கைக்கு எந்த அழகையும் சேர்க்கவில்லை. நினைத்தபடி வாழ்க்கையை அனுபவிக்கும் வாய்ப்புப் பெற்றிருந்த சாலொமோன் இராஜாவின் வாழ்க்கை, விரும்பத்தக்க அழகுடையதாகவில்லை. திரும்பத் திரும்ப தோல்விகளைக் கண்ட தாவீதின் வாழ்க்கை, வெறுக்கும் விதமாக அழகிழந்துப் போகவில்லை.

தோல்விகள் சிலரை, மிகச் சிறப்பாகச் செதுக்கி அழகேற்றி விடுகிறது. வெற்றிகள் சிலரின் நல்ல அழகான பக்கங்களைக் கறைபடிந்தவைகளாக மாற்றி விடுகின்றன. தோல்வி மேல் தோல்வி கண்ட யோபு, அவர் என்னைச் சோதித்த பின்பு பொன்னாக விளங்குவேன் என்றான். யோபு 23:10 தோல்விகளினால் செதுக்கப்பட்டு சிறப்பான தோற்றம் பெற்றவர்களும் உண்டு. வெற்றிகளினால் சீரிழந்து, சீர் குலைந்து போனவர் களும் உண்டு.

யாரைத் தோல்விகள் அழகாக்குகின்றது? யாரை வெற்றிகள் வீணாக்கு கின்றது? தேவனை மையமாகக் கொண்டு, தேவனைச் சார்ந்து வாழப் பழகிக் கொண்டவர்களும், தோல்விகளைக் காண நேரிடும் வேளைகள் உண்டு. ஆனால் அந்த தோல்விகளைத் தேவன் நன்மைக்கேதுவாக மாற்றிவிடுகிறார். அவர்களின் தோல்விகளைக்கொண்டு அவர்களை குணத்திலும், பண்பிலும், நல்ல மனநிலை யிலும், விசுவாசத்திலும், தாழ்மையிலும் தேவன் வெற்றிமிக்கவர்களாக்கி விடுகின்றார். எனவேதான் சங்கீதம் 119-ஐ எழுதிய தேவ மனிதன் நான் உபத்திரவப் பட்டது நல்லது. அதனுடைய விளைவாக தேவனுடைய பிரமாணங்களைக் கற்றுக் கொண்டேன் என்றான்.

தேவனை மையங்கொண்டு வாழாதவர்களும், தேவனுடைய வழிகளில் நடப் பதை மகிழ்ச்சிக்குரிய காரியங்களாக உணர இயலாதவர்களும், வெற்றிகளின் நடுவில் விவேகங்களை இழந்து போகிறார்கள். தங்களின் மனவிருப்பங்களுக்கும், ஆசைகளுக்கும் கிடைத்த வெற்றிகளினால், அவர்கள் சரியான வழிகளை அசட்டை செய்யவும், சரியான குணங்களை விட்டு விலகவும் தூண்டப்படுகின்றார்கள். வெற்றி களைக்கொண்டு தேவனை மகிமைப்படுத்தி வாழ அவர்கள் அறியாத படியினால், தங்களின் மனவிருப்பங்களை முதலிடத்தில் வைத்து, தங்களைத் தாங்களே பின்னுக்குக் கொண்டு போய்விடுகின்றார்கள்.

சிந்தனைக்கு...

கசப்பான மருந்து உடலைச் சீர் செய்கிறது.
கசப்பான கஷ்டங்கள் வாழ்க்கையைச் சீர் செய்கிறது.

டிசம்பர் 30

உறவா? நன்மையா?

ரோமர் 8:32-39

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?
ரோமர் 8:36

உறவினரோ அல்லது நண்பரோ நமது இல்லத்திற்கு வருகின்ற வேளையில், நமக்காகப் பல பொருட்களைக் கொண்டு வரலாம். அவைகளைப் பெற்றுக் கொண்டு, அவைகளை அனுபவிப்பதிலேயே முழுக் கவனத்தையும் நாம் செலுத்தி, அவர்களோடு அதிகம் பேசாமலும், பலகாரியங்களை பகிர்ந்து கொள்ளாமலும், அன்பாக விசாரியாமலுமிருந்தால் அது எப்படிப்பட்ட ஒரு அனுபவமாக இருக்கும்? இதனை யாருமே விரும்பமாட்டார்கள். நாம் ஒருவரால் கிடைக்கும் நன்மை யான வைகளில் மட்டும் கவனம் செலுத்தி அவருடைய அன்பு, உறவு, ஐக்கியம் போன்ற வற்றில் கவனம் செலுத்தாமல் போனால். அது நலமாயிராது.

தேவன் தம்முடைய அன்பின் மூலம் நம்மை மகிழ்விக்க விரும்புகின்றார். அவருடைய ஐக்கியத்தின் மூலம் நம்மைக் குதூகலப்படுத்த விரும்புகிறார். தம் முடைய வார்த்தைகள் மூலம் நம்மை வளப்படுத்த விரும்புகின்றார். ஆனால், நாமோ அவருடன் நெருங்கிப் பழகுவதின் வாயிலாக நமக்கு வருவதற்கு ஆயத்த மாயிருக்கும் தெய்வீக சந்தோஷ அனுபவங்களையும், நம்பிக்கையின் நிறைவு களையும், அன்பின் பரிமாற்றங்களையும், ஆத்தும திருப்தி நிலைகளையும், அடை வதற்குப் போதிய ஆர்வம் காட்டுவதில்லை. அதற்குப் பதிலாக, சரீர சுகம், பிரச்சினை களிலிருந்து விடுதலை, பணம் பொருள் சம்பந்தமான நிறைவுகள், போன்ற வற்றைப் பெறுவதிலேயே அதிக வாஞ்சையாயிருக்கிறோம். எனவேதான் ஆவிக் குரிய வாழ்க்கை அநேகருக்கு சோர்வையும், சலிப்பையும், கொண்டு வருகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பணியில், தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயல்பட்டவன். ஆனால், அதற்குப் பதிலாக தேவனிடமிருந்து அவன் பெரிய வீடு, ஏராளம் பணம், நல்ல சௌகரியமான சூழ்நிலை என எதையும் பெறவில்லை. ஆனாலும், கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவுகிறது என்றும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார் என்றும், சவால் விடுகிற அளவிற்கு இயேசுவோடு அவன் அதிக ஈர்ப்புடைய வனாயிருந்தான்.

காரணம் என்ன? அவன் இயேசுவின் உறவையும், ஐக்கியத்தையும், அன்பையும் தனிப்பட்ட வாழ்வில் அதிகமாக அனுபவித்து, அவை மூலமாக ஒரு மேலான சந்தோஷத்தின் நிறைவைக் கண்டவன். எனவேதான், அவன் அந்த அளவிற்குப் பலவித உபத்திரவங்கள் மத்தியிலும், இயேசுவுக்காக மிக வாஞ்சை மிக்கவனாயிருந்தான்.

சிந்தனைக்கு...

பொருள் ஒரு மடங்கு மனிதனிடம் பெருகினால்,
ஆசைகள் பன்மடங்கு பெருகும் என்பதே உண்மை.

டிசம்பர் 31

ஆண்டின் கடைசிநாளில்...

எரேமியா 33:6–15

நான் அவர்களுக்கு செய்யும் நன்மையெல்லாம்.
எரேமியா 33:9

ஆண்டின் கடைசி நாளைக் காணும் போது, அநேகர் வரப்போகிற புதிய ஆண்டில் கர்த்தர் தங்களுக்குச் செய்யப்போகின்ற நன்மைகளைக் குறித்த வாக்குத் தத்தத்தைப் பெற விரும்புகின்றனர். புதிய ஆண்டில் ஆசீர்வாதமானதோர் வாக்குத் தத்தத்தை ஜனங்களுக்கு கொடுத்து அதனுடைய அடிப்படையில்தான் கர்த்தர் செயல்படப்போவதாக அநேகர் நம்புகின்றனர். எனவே, ஆண்டின் இறுதி நாள் புதிய வாக்குத்தத்தத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் நாளாக மாறிவிடுகிறது.

ஆனால், இப்படியெல்லாம் ஆண்டின் முதல்நாள் தேவன் வாக்குதத்தம் தருகிறார் என்பது இடையில் புகுந்த கிறிஸ்தவ போலி பாரம்பரியம்தானேயன்றி, வேத சத்தியம் சார்ந்தது அல்ல. புதிய ஆண்டில் புதிதாக ஏதாவது ஒன்று ஓடி வரப் போகிறது என்ற கற்பனையெல்லாம் வீணானதே. தேவன் ஆண்டுகளின் அடிப் படையில் செயல்படுகிறவர் அல்ல. அவர் தம்முடைய வார்த்தைகளின் அடிப் படையில் செயல்படுகிறவர்.

ஆனால், வரப்போகிற நாட்களில் நாம் ஆச்சரியமான ஆசீர்வாதங்களைக் காணமுடியும். அதற்காக நாம் தேட வேண்டியது வாக்குதத்த வசனம் அல்ல. தேவன் ஆசீர்வாதம் தொடர்பாக என்ன நியமத்தை வைத்திருக்கின்றாரோ அது நிறைவேறுவதற்கேதுவானவைகளையே தேட வேண்டும். ஆசீர்வாதம் நன்மை உயர்வு எல்லாமே கிறிஸ்துவிடமே உள்ளது. அந்த கிறிஸ்துவின் ஐக்கியத்தில் நாம் இருந்தால் வரப்போகும் நாட்களில் நாம் ஆசீர்வாத உயர்வுகளைக் காண்போம். இன்று அவருடைய ஐக்கியத்தில் வாழ்கிறோமோ என்பது தொடர்பாகச் சிந்திப்போம். கிறிஸ்துவுக்குள் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றோம் என்று வேதம் சொல்கிறது. தேவ ஐக்கியத்துடன் வாழ்வதே நாம் ஆசிர்வாதங்களைக் காணப்போகின்றோம் என்பதின் வாக்குத்தத்தமாக உள்ளது.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்றால், தேவனுடைய நன்மைகளைச் சுதந்தரிக்கும் உரிமை பெற்றவர்கள் ஆகும். இப்போது நாம் அன்னியர்கள் போல நின்று வாக்குத்தத்தம் தேடாமல், பிள்ளைகள் போல நின்று வரப்போகிற ஆண் டிற்கு தேவன் போதுமானவர் என்று நம்புவோம். நாம் தேவனால் மறுபடியும் பிறப்பிக்கப்பட்ட பிள்ளைகள் என்ற நம்பிக்கை பெற்றிருக்கின்றோமா? இவற்றை இந்த நாளில் சிந்தித்து ஆயத்தமாவோம். வரப்போகிற ஆண்டில் நலமான வைகளை நாம் காண்போம்.

சிந்தனைக்கு...

தேவ வாக்குத்தத்தத்தை நம்பி அல்ல.
தேவ உறவை சார்ந்து புதிய ஆண்டிற்குள் செல்வோம்.

சாம்சன் பால்

இதுவரையிலும் மிகச்சிறந்த சுமார் அறுபது புத்தகங்களை வெளியிட்டு பல்லாயிரங்களுக்கு பயனுள்ள ஊழியாராக விளங்கும் சாம்சன் பால் சத்தியத்தின் அடிப்படைகளை மிகச்சரியாக புரிந்து கொண்டு போதிக்கின்றவர். கடந்த 26 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் தேவனுடைய தெளிவான நடத்துதலோடு இவர் எழுதி வெளியிட்ட தினசரி தியானநூல்கள் பல்லாயிரங்களால் விரும்பி வாசிக்கப்பட்டுள்ளன. அனுதின வாழ்க்கை சூழ்நிலைகளை தேவதுணையோடு சந்திக்க உதவுகின்ற இவருடைய தினசரி தியானநூல்கள் தனித்துவம் வாய்ந்ததாகவும் நடைமுறை வாழ்க்கைக்கு உதவுகிறதாகவும் உள்ளது. பல்வேறு திருச்சபைகளுக்கு சென்று பிரசங்கித்து வருகின்ற இவர் யூ.டியூப், டி.வி போன்ற சமுக ஊடகங்கள் வழியாகவும் ஆயிரக்கணக்கானோருக்கு தினமும் பேசுகின்றார். மாதந்தோறும் **ஜீவநீரோடை** என்ற மாத இதழையும் வெளியிட்டு வருகின்றார்.

இந்த நாளிலும்

என்னோடிருந்து..

தினசரி தியான நூல்

வாழ்க்கை என்னும் நெடும் பயணத்தில் விதவிதமான சூழ்நிலைகளை நாம் காண நேரிடுவதுண்டு. எல்லா சூழ்நிலைகளிலும் நம்முடைய மனதுக்கு ஆதரவு தரும் சிலரை நம்மோடு நாம் பார்ப்பது நிச்சயமற்ற காரியம். நலமான நாட்களிலும் நலமற்ற நாட்களிலும் நம்மோடிருந்து நம்மை முன்னோக்கி நடத்தி செல்ல இயன்றவர் கர்த்தர் மட்டுமே. அவரை எந்த சூழ்நிலையிலும் நம்மோடிருந்து நம்மை நடத்தி செல்லுகின்றவராக நாம் பார்க்க முடியும். அந்த நம்பிக்கையை நமக்குள் நிலைப்படுத்தி நம்மை உற்சாகப்படுத்துவது தேவ வார்த்தைகளே. அந்த தேவ வார்த்தைகளின் குவியல்தான் **இந்த நாளிலும் என்னோடிருந்து** என்ற இந்த புதிய தினசரி தியான நூல். ஒவ்வொரு நாளுக்காகவும் தரப்பட்டுள்ள சிந்தனைகள் இந்த நாளிலும் கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்ற நம்பிக்கையை நமக்கு தருவதோடு அதற்கேற்றவிதமாக நாம் சரியாக செயல்படவும் நம்மை வழிநடத்தும்.

சிறந்நவைகளில் சிறந்தவை

A DAILY DEVOTIONAL
FOR YOUR SPIRITUAL GROWTH

DAILY DEVOTIONAL
ஜீவ நீரோடை